உ

கணபதி துணை.

சங்கமருவிய எட்டுத்தொகை

ஆறவதாகிய

கலித்தொகை

(பாலைக்கலி, குறிஞ்சிக்கலி.)

மூலமும்

மதுரையாசிரியர்

பாரத்துவாசி

நச்சினார்க்கினியருரையும்.

இவை

இடையாற்று மங்கலம்

வைத்தீச்சுவரையரவர்கள் குமாரரும்

சென்னை,

பிரஸிடென்ஸிகாலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய

அனந்தராமையரால்,

நன்கு பரிசோதித்து,

தாம் புதிதாக எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புடன்

சென்னை,

நோபில் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றன.

1925

ரிஜிஸ்டர்ட் காபிரைட்.

கலித்தொகை விலை

அறிவிப்பு.

இது முன்பு நான் தெரிவித்திருந்தபடி ௪௯ பவுண்டு மொத்த லோயல் க்ரௌன் காகிதத்திலும் சில நண்பர்கள் விரும்பியபடி ௨0 பவுண்டு பெதர்வெய்ட்டுக் காகிதத்திலும் பதிப்பிக்கப் பெற்று வருகிறது. அவற்றுள்,

	௪௯ பவுண்டு		௨0 பவுண்டு	
	ரூ.	அ.	ரூ.	அ.
இம்முதற் சஞ்சிகையின் விலை	ச	௧௨	ரு	0
(மற்றவைகள் இதனை யடுத்து வெளிவரும்.)				
முழுப்புத்தகத்தின் விலை.				
முன் குறித்திருந்த அளவில் அடங்காது காற் பங்கு விரியுமென்று தோற்றுவதால்	௧௨	அ	௧ரூ	0
௧ரூ-ம் வருடம் பிப்ரவரிமாதம் முடிவுக்குள் பணம் அனுப்புபவர்களுக்கு	௧0	0	௧0	அ
(முன் பணம் அனுப்பின் அவர்களுக்கு உடனே ரசீது அனுப்பப்படும்.)				
முன்னமே பணங்கொடுத்தவர்களுக்கு	அ	0	அ	அ

தபாற் கூலி வேறு.

முன்பணங் கொடுத்த அன்பர்களை, காலதாமத மாவதற்குப் பொறுத்துக்கொள்ளவேண்டுகிறேன்.

16-நாகப்பையர் தெரு,
திருவல்லிக்கேணிப் போஸ்டு
சென்னை. (29-12-24.)

இங்ஙனம்:
இ. வை. அனந்தராமையன்.

கணபதி துணை.

முகவுரை.

சீரார் கலித்தொகைக்குச் செவ்வன் குறிப்பெழுதி
நீரார் கலிசூழ் நிலத்தவர்க்குப்—பேரார்வ
முற்றளிக்க வேண்டுளமே *யோர்மருப்பன் முண்முதலைப்
பற்றளிக்கு மக்கற் பகம்.

கலித்தொகை யென்பது, சங்கச்செய்யுட்களென்று தமிழ்மக்களால் நன்குமதித்துக் கொண்டாடப்பெறும் கடைச்சங்ககாலத்துப் பனுவல்களுள் ஒரு பிரிவாகிய எட்டுத்தொகையில் ஆறுவதென்பர்.

"நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறு நூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் †போற்றுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை"

என்னும் வெண்பாவின் வைப்பு முறை இதற்குக் காரணமாகும்.

இதனை மேற்கணக்கினுள் ஒன்றென்பர் பன்னிரு பாட்டியலுடையார்; இசைப்பாட்டாகிய செந்துறை மார்க்கத்தது என்பர் நச்சினார்க்கினியர்.

இது சொற்சுவை பொருட்சுவைகளில் மிகச் சிறந்தது.

"கற்றறிந்தார் போற்றுங் கலி"—என்றும்

‡"திருத்தகு மாமுனிசிங் தாமணி கம்பன்
விருத்தக் கவிவளமும் வேண்டேம்—திருக்குறளோ

---

* ஓர் மருப்பனென்றது, திருவல்லிக்கேணிப் பெரிய தெருவில் எழுந்தருளியிருக்கும் கற்பக விநாயக மூர்த்தியை.

(பி - ம்.) † எத்துங் கலியே யகம், கூறுங் கலியோடு, சொல்லுங் கலியேயி.

‡ முகவுரையில் இக்குறியிடப்பெற்ற வெண்பாக்கள், சில எட்டுப்பிரதிகளின் மூன் உள்ளன. இவை வித்தியாபானு சென்தமிழென்னும் பத்திரிகைகளிலும் சிவவேறுபாட்டோடு மூன்பு வெளிவந்துள்ளன. இவ்வெண்பாவொன்றும் சீவகசிந்தாமணியினுரையில் "திருத்தக்க மாமுனிசிக் தாமணி கம்பர், விருத்தக் கவித்திறமும் வேண்டே - முருத்தக்க, கொங்குவேண் மாக் கதையைக் கூறேங் குறளணுகே, மெங்கெழிலென் ஞாயி றெமக்கு" என பிக்க வேறுபாட்டோடு காணப்படுகிறது.

கொங்குவேண் மாக்கதையோ கொள்ளேம் நனியார்வேம்
பொங்குகலி யின்பப் பொருள்"—என்றும்

அறிஞர்கள் பாராட்டுவோரானது இச்சிறப்புப்பற்றியன்றே!

இது, முதலிற் கடவுள் வாழ்த்தையும், பின்பு பாலை முதலிய ஐந்திணைப் பெயர்களாலமைந்த ஐந்து பகுதிகளையு முடையது.

இவற்றுள், முதலிலுள்ளது கடவுள் வாழ்த்துச் செய்யு ளொன்று. அது மதுரையாசிரியர் நல்வந்துவனாரால் இயற்றப் பெற்றது. பின்புள்ள ஐந்துபகுதிகளுள்:

முதலாவதாகிய பாலைக்கலி ஈரு. செய்யுட்களை யுடையது. இதனை இயற்றியருளியவர் சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ னென்பார்.

இரண்டாவதாகிய குறிஞ்சிக்கலி உகூ. செய்யுட்களையுடையது. இதனை இயற்றியருளியவர் கபிலனார்.

மூன்றாவதாகிய மருதக்கலி ஈரு. செய்யுட்களை யுடையது. இதனை இயற்றியருளியவர் மதுரை மருதனிளநாகனார்.

நான்காவதாகிய முல்லைக்கலி கள. செய்யுட்களை யுடையது. இதனை இயற்றியருளியவர் சோழ னல்லுருத்திர னென்பார்.

ஐந்தாவதாகிய நெய்தற்கலி ஈஈ. செய்யுட்களை யுடையது. இதனை இயற்றியருளியவர் கடவுள் வாழ்த்துச் செய்யுளை இயற்றிய நல்வந்துவனாரே.*

இவர்கள் வரலாறுகளும் இதன் உரையாசிரியர் வரலாறும் முழுப்புத்தகத்துடன் பின்னர் வெளிவரும்.

இது தொல்காப்பிய முதலிய நூல்களின் அகப்பொருட் பகுதிக்கு இலக்கியமாக அமைந்துள்ளது. இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க் கினியர் முதலிய தொல்காப்பிய உரையாசிரியர்களாலும், இறையனா

* மேற்கூறிய கடவுள்வாழ்த்தும் பாலை முதலிய ஐந்து திணைகளும் இவ்வளவு இவ்வளவு செய்யுட்களையுடையன என்பது, "இறைவாழ்த்தொன் றேழைந்து பாலோ டேழொன், றிறைகுறிஞ்சி யின்மருத மேழைந்[து]-துறை மூன்றே, யீரெட்டொன் றுசெய்த லெண்ணுன்கொன் றைங்கலியாச், சேரென் றே வுவம்ப தே" என விந்தியாபானு பத்திரிகையில் வெளிவந்திருக்கும் வெண்பாவிலும் குறிக்கப்பெற்றுள்ளது.

ரகப்பொருள் ஞரையாசிரியராலும்; பரிமேலழகராலும், நச்சினார்க்கினியராலும், இலக்கணவிளக்க வுரைகாரராலும், அகப்பொருட் பகுதிக்கும், இவர்களாலும், சேனாவரையராலும், கல்லாடராலும், சிலப்பதிகாரம் நேமிநாதம் நன்னூல் யாப்பருங்கலவிருத்தி யாப்பருங் கலக் காரிகை வீரசோழியம் மாறனலங்காரம் ஆகிய இவற்றினுரையா சிரியர்களாலும், பிரயோக விவேக நூலாராலும், மயிலேறும் பெருமாள் பிள்ளையாலும், சொக்கப்ப நாவலராலும், பிறராலும் சொற்பொரு ளாராய்ச்சிகளுக்கும் யாப்புக்கும் தக்க முரைகளில் பற்பல விடங் களில் மேற்கோளாகக் காட்டப்பெற்ற சிறப்பு வாய்ந்துள்ளது. அவற்றை அறிந்துகோடற்கு இந்நூலின் பலபக்கத்துமுள்ள அடிக் குறிப்புக்கள் உதவி செய்வனவாம்.

இக்கலித்தொகையில் ஒவ்வொருதிணையும் முதற்பொருள், கருப் பொருள், உரிப்பொருள் கொண்டு புனைந்துரைக்கப்பெற்றிருக்கும் அழகு தமிழறிஞர்களுக்கு மிக்க இன்பத்தைத்தருவதாம். அன்றியும், இதன் மூலத்திணையிலுள்ள கலிப்பாக்கள் அசுரமணத்தின் ஒரு பகுதியாகிய எறிகோடற் செய்தியையும் குடிகளுக்குத் தம் அரசன்மாட்டிருந்த அன்பினிலையையும் அறிந்துகோடற்குச் சிறந்த கருவியாதும்.

இது பாவின் பெயரால் தொகுக்கப்பெற்ற நூலுக்கு, தண்டி யலங்காரவுரையிலும் (சூ. ச) இலக்கணவிளக்கவுரையிலும் (சூ.சூ உரி) மேற்கோளாகக் காட்டப்பெற்றிருக்கிறது. இப்பாவின் இலக்கணம், 'அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூல்' என்று தொல்காப்பியம் புறத்திணையியல் ஈந-ஆம் சூத்திரவுரையில் நச்சி னார்க்கினியர் எழுதியிருப்பதால் இவ்விருநூலிலும் கூறப்பெற்றுள்ள தென்று அறியப்படுமாயினும் முன்னதிற் சில சூத்திரங்களேயன்றி மற்றவை இறந்தமையின், பின்னதாகிய தொல்காப்பிய நூல்கொண்டே அறியத்தக்கதாயிருக்கிறது. அதிற் பெரும்பாலன இந்நூல் உஈ-ஆம் பக்கத்திலுள்ள உரையில் வந்துள்ளன.

இதிலுள்ள செய்யுட்கள் கஙிo. இறையனா ரகப்பொரு ளுரையிலும், தொல்காப்பிய வுரைகளிலும், இந்நூலுரையிலும் இத் தொகை இவ்வளவு தொகை யுடையதென்றேகூறப்பெற்றிருக்கிறது. இந்த கஙிo செய்யுட்களும் கலியின் வகைகளே. இவற்றுள், ஒத்தா ழிசைக்கலி சுக; கொச்சகம் சுகூ; கொச்சக வொருபோகு க;

கலிவெண்பாட்டு ஈச; உறழ்கலி நெ என்று, இக்கலித்தொகையின் ஒவ்வொரு பாடலின் உரையிறுதியிலு மூள்ள குறிப்பால் அறியப் படுகிறது. இவ்வகையின் கணக்கு இதற்கு மாறுகவும் வேறு சில நூலுரைகளிற் காணப்படும்.

இது சிருங்கார ரசமாகிய இன்பச்சுவையைத் தலைமையாகக் கொண்டதொரு தொகைநிலைச்செய்யுள். அஃதாவது ஒத்த அன் புடையரான தலைவனும் தலைவியுமாகிய இருவரும் தங்களுள் ஒருவர் பாலொருவர் அன்புசெய்த இயல்பைப் பண்டைநூல் வழக்கிற்கு அமையக் கூறுவது. தொல்லாசிரியர்கருத்து இக்கலிப்பா இச்செய்தி கூறுதற்கே உரித்தென்பதும் துன்பச்செய்தி கூறுதற்கு உரித்தன் றென்பதுமாம்; இவை:—

"இருவயி னெஞ்சு மொவ்வா வியலினுங்
தெரியிழை மகளிரொடு மைந்தரிடை வருஉங்
கலப்பே யாயினும் புலப்பே யாயினு
மைந்நிணை மரபி னறிவுவரத் தோன்றிப்
பொலிவொடு புணர்ந்த பொருட்டிற முடையது
கலியெனப் படுஉங் காட்சித் தாகும்"—என்றும்
"கலை யல்குலிற் கையற வுரையார்"—என்றும்

முறையே *அகத்தியனுரும் பன்னிருபாட்டியலுடையாரும் கூறுதலால் அறியலாகும். ஆதலால் இத்தொகையில் அகப்பொருட்செய்திகள் மிக அழகுறப் பாராட்டப்பட்டிருக்குமென்பது கூறாமலே விளங்கும்.

அன்றியும், இஃது உவமை முதலியனவும் பிறசெய்திகளும் கூறு முகத்தால், அந்தணர், அரசர், அமைச்சர், வணிகர், வேளாளர்களும் பிறருமாகிய ஆடவரும் மகளிரும், இளமையிலும்முதுமையிலும்அறிந் தொழுகவேண்டிய பற்பல நீதிகளைக் கற்பித்து, தன்னைப் படித்தவரை நன்னெறிச் செலுத்துந்தன்மை பெரும்பான்மையது. இதில் அறம்பொருள் முதலியவற்றின் சிறப்புக்களும், நல்லவர் தீயவர் பண்புகளும், விலங்கு, பறவை, மரம், செடி, கொடிகளினியல்புகளும், பல நூற் செய்திகளும், கால்த்தின்தன்மையும் கூறப்பெற்றிருக்கின்றன. அன்றியும் இதுதமிழ் நாட்டின் பண்டைக்கால ஒழுக்க வழக்கங்களையும், அக்காலத்து நிகழ்ச்சிகள் பலவற்றையும் அறிதற்கும் உய்த்துணர்தற்கும் பெருந் துணையாக உள்ளது.

* தொல். செய். சூ. கஉக. "ஒத்தாழிசைக்கலி" இளம். மேற்கோள்.

சில தொகைநூல்செய்யுட்களின் னிறுதியிற் கூறப்பெற்றிருத்தல் போல, இதனிறுதியில் இதணைத்தொகுத்தாரிவர், தொகுப்பித்தாரிவர் என்ற குறிப்பு இன்றேனும்,

‡"நாடும் பொருள்சான்ற நல்வர் துவஞ்சான்
சூடுபிறைச் சொக்கன் றுணைப்புலவோர்—*தேடுவார்
கூட்டுணவே வாழ்த்தோடு கொங்காங் கலியினையே
†கூட்டினஞ் ஞாலத்தோர்க் கு"

என்பதனால், ஆசிரியர் நல்வந்துவனர் கடவுள் வாழ்த்தையும் பாடிச் சேர்த்து இதணைத் தொகுத்தாரென்று தெரிகின்றது. முற்கூறியபடி பெருங்கடுங்கோ முதலியவர்கள் பாலைத்திணை முதலியவற்றைப் பாடினராயின் நல்வந்துவனர் தொகுத்தாரென்று இங்கே கூறுவதிற் சிறப்பென்னை? சிறப்புறப் பொருந்துமாறு யாது? எனின், இவர் அவர்களும் தாமும் பாடிய பலதிணைக்குமுரிய கலிப்பாக்களில் ஒவ்வொருவர் பாடல்களையே ஒவ்வொரு திணைக்கு எடுத்துக்கொண்டு அத்திணைக்கண் அமைக்கத்தக்கவற்றையெல்லாம் அவரவர் பாடலிலிருந்தே தணுகி ஆராய்ந்து சேர்த்தமைத்து ஐந்திணையையும் தொகுத்தார் என்னும் அருமைபற்றிப் போலுமென்க.

இங்ஙனம் தொகுத்ததில் ஐந்திணையும் விரவிக் கோக்கப்பெற்ற நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு போலாது, விரவாது கோக்கப் பெற்ற ஐங்குறுநூறு, அகப்பொருள் பற்றிய நீழ்க்கணக்கு நூல்கள் இலக்கணநூல்கள், இவற்றுள் ஒன்றிலேனும் ‖ முதலிடம்பெறுத பாலைத்திணையை இவர் முதலில் நிறுவியதற்குக் காரணம், யாவரும் இத்திணையை முதலில் வைக்காமையால், இது முதலில் வருமோ வாராதோவென்று ஐயுற்றுமயங்கி வாராதென்றுதிரியவுணர்வார்க்கு அத்திரிபுணர்ச்சியை நீக்கல் கருதிப்போலும்; அன்றி, பாலை நானிலப் பொதுவாதலின், பொதுவை முற்கூறிச் சிறப்பைப் பிற்கூறுவதும் மரபென்பதுபற்றி எனினுமாம்; வேறு பொருந்துவன உளவேனும் கொள்க. முதலில் இடம்பெறுது குறையுற்ற இத்திணை முதலில் இடம்பெற்றதற்கு முதல், இவருடைய கல்வி யறிவாற்றலே யாம். வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு வழக்குக் கிழக்கு முண்டோ!

(பி - மீ.) * தேடுபோர்ந்து கூட்டு, தேடிப்போந்து, கூட்டு; தேடுவோர் கூட்டு.
(பி - மீ.) † ஊட்டினஞ் ஞாலத்தவர்க்கு.
‖ இந்நூல் கஉ-ஆவது பக்கம் பார்க்க.

இவர் தொகுத்துக் கோத்தமுறை முற்கூறிய முறையேயென்பது, நச்சினார்க்கினியர்† இத்நூலுரையில் எழுதியிருக்கும் வாக்கியத்தாலும்,

‡"போக்கெல்லாம் பாலை புணர்த்த னறுங்குறிஞ்சி
‖யாக்கமனி யூட லணிமருத—நோக்கொன்றி
யில்லிருத்தன் முல்லை யிரங்கிய÷போக் கோர்நெய்தல்
புல்லுங் ×கலிமுறை கோப்பு"

என்னும் வெண்பாவாலும் அறியப்படுகின்றது.

இங்ஙனம் தொகுத்தாரிவரென்பதை யநித்துத் தொகுப்பித்தாரின்னவரென்பது கூறப்படாமையால் இவர் இதைப் பிறர் வேண்டாத் தொகுக்காது தாமாகவேதொகுத்திருக்கலாமென்றுதோற்றுகிறது.

சில தொகைகள் தொகுத்தவருடைய பாடலில்லாதனவாயும் ஒன்றிரண்டே யுடையனவாயும் இராநிற்க, இத்தொகை தொகுத்தவருடைய பாடல் ஈசு. உடையதாய்ச் சிறந்து விளங்குகின்றது.

இந்நூல் முழுவதுக்கும் பேருரையாளராகிய நச்சினார்க்கினியரால் உள்ளுறைப்பொருள் முதலிய நயங்களும் மெய்ப்பாடும் பயனும் பாவகையும் விளங்கச் சிறந்த உரை எழுதப்பெற்றிருப்பதனால் இது பலரும் பொருளறிந்து இன்புறுதற்குத் தக்கதாயிருக்கின்றது.

இத்தொகை, காலப்போட்டித்ததனால் ஏனைத்தொகைகள் அடைந்த சில சிதைவுகளை மூலம் உரை இரண்டினும் ஒரு சிறிதும் அண்டையாது, இன்னும் பல சுவடிகள் வடிவாய்க் காணும்படி யிருப்பதற்குக் காரணம்; 'இது குறையுறாது நின்று நிலவவேண்டும்' என்னும் இறைவன் திருவுளமாம்; தமிழ்மக்கள் செய்த கவப்பேறுமாம். இந்நிலைமையால் இது கற்றறிந்தார் போற்றுங் கலியாயுள்ளது.

இதனை மேற்கூறிய உரையுடன் ஸ்ரீமான் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், கஅஅள - ம் வருடத்திற் பதிப்பித்தார்கள். அதில் இது "நல்லந்துவனார் கலித்தொகை"என்று குறிக்கப்பெற்றிருந்தாலும்

† இந்நூல் கஉ-ஆவது பக்கம் பார்க்க.

(பி - ம்.) ‖ "ஆக்கஞ்சே ரூட லணிமருதம்-நோக்குங்கா, லில்லிருத்தன் முல்லை யிரங்க னறுநெய்தல், சொல் விரிந்த நூலின் நெறை" என்பது சாற்கவிராச சம்பி அகப்பொருள்விளக்க இறுதியில் உள்ளது. ஆக்கமணி யூடலமர்மருதம்.

(பி - ம்.) ÷ போக்கோ நெய்தல்.

(பி - ம்.) × கலித்தொகை கோப்பு.

தொகை யென்பதற்குத் தொகுக்கப்பட்டதென்பது பொருளாதலாலும், எட்டுத்தொகையுள் இஃதொழிந்த மற்றவைகள்யாவும் பல புலவர்களாலேயேயாக்கப்பெற்றிருப்பதாலும், இதுவும் மேற்கூறியபடி ஐந்து புலவர்களாலேயே யாக்கப்பெற்று, பின்பு அவர்களுள் ஒருவராகிய நல்வழுதுவனாலே தொகுக்கப்பட்டதென்று கொள்ளுதலே தகுதியாம். இதனை,

‡ "பெருங்கடுங்கோன் பாலை ||கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம்—மருஞ்சோழ
னல்லுத் திரன்முல்லை —நல்வழுதி நெய்தல்
கல்விவலார் கண்ட கலி"

என்ற வெண்பா வலியுறுத்தும்

இதனைத் தொகுத்தவரது இயற்பெயர் "அந்துவன்" என்பது இவர் கல்வி கேள்வியில் வல்லுநரான பிறகு, நக்கீரனும் நப்பூதனும் நத்தத்தனும் என்றாற்போல, இவர் பெயருக்கு முதலில் 'ந' என்னும் சிறப்புப் பொருளை யுணர்த்தும் இடைச்சொல்லையும் ஈற்றில் உயர்வு குறித்துவரும் 'ஆர்' என்னும் இடைச்சொல்லையும் சேர்த்து, அப் பெயர்ச்சொல்லை இவற்றின் இடைச்சொல்லாக்கி "நல்வழுதுவனார்" என வழங்கப்பெற்றுவருகின்றது. அது காலவேறுபாட்டில் பல எடுகளில் லகர வகரங்களின்மேற் றுறைவிளங்க எழுதப்பெறுமையால் வகரத்தை லகர மெனமயங்கி "நல்லழுதுவனார்" என்ற பதிப்பிக்கப்பெற்று அவ்வாறே வழங்கலாயிற்றென்றாகிறதோற்றுகின்றன. 'நற்கீரன்' என்று சிலகாலத்துக்குமுன் வழங்கிய பெயரை உண்மையறிந்தபிறகு உலகம் 'நக்கீரன்' என்று வழங்குவதுபோல இதனையும் இனி நல்வழுதுவனென்று வழங்குமென்பது என்கருத்து. நல்லுருத்திரன் என்பதுபோல நல்லழுதுவனெனக் கொள்ளின் ஒருவாறு பொருள்படுமேனும் அஃது இத்தொடர்க்குச் சிறப்புடையதாகாது. இது நிற்க.

நான், மேற்கூறப்பட்ட ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் பதிப்பித்த கலித்தொகையை ஊன்றிப் படிக்குங்காலத்தில், பலவிடத்து மூலமும் உரையும் செய்திகளும் பொருந்தாமைகண்டு, பல்வேறு வழிகளில் மிக முயன்று அவற்றின் உண்மைகளை யறிந்து அமைத்துக்கொண்டேன். அவற்றுட் சிற்சில பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையரவர்களுடன் நான் வேறு நூலாராய்ச்சி செய்யுங்காலத்தில், அவர்களிடம் சொல்லும்படிநேர்ந்தன. அவற்றைக் கேட்டபொழுது, அவர்கள், 'இவ்வரிய விஷயங்கள் விளங்கும்படி குறிப்புக்களெழுதி நீங்கள் இந்நூலைப் பதிப்பிக்கவேண்டும்'

(பி - ம்.) ‡ குறிஞ்சி கபிலன் — நல்லந்துவனெய்தல்.

என்று சொன்னார்கள். பின்பு சென்னைப் பிரஸிடென்ஸிகாலேஜ் ஸம்ஸ்கிருதம், கம்பரமாயணம் வைலாலஜி இவற்றின் புரொபெஸரும் வெர்ணகுலர் ஸூபரின்டென்டென்டுமாகிய பிரஹ்மஶ்ரீ **எஸ். குப்பு ஸ்வாமி சாஸ்திரிகளவர்கள்** எம். ஏ., ஐ. இ. எஸ், 'உங்களுக்கு அவகாசங்கிடைக்கும்போது பழைய தமிழ் நூல்களை ஆராய்ச்சிசெய்து லோகோபகாரமாகப் பதிப்பிக்கவேண்டும்' என்று சொன்னார்கள். பின்பு வேறு சில அன்பர்களும், 'கலித்தொகை கிடைக்கவில்லை; அதனை நீங்கள் திருத்தமாகவும் விளக்கமாகவும் பதிப்பிக்கவேண்டும்' என்று என்னைத் தூண்டிவந்தார்கள். அதனால் இத்தொகையைப் பற்றி நான் குறித்திருந்த குறிப்புக்களை ஒன்றுசேர்க்க வேண்டுமென்ற எண்ணமுண்டாயிற்று. அவ்வெண்ணத்தால் நான் முன்பு பல நூல்களைப் படித்தபோது இதில் எனக்குள்ள ஈடுபாட்டினால் அவற்றில் இக்கலிப்பா மேற்கோளாவது, இதன் சொற்றொடர்வது, இதற்கொத்தபொருளாவது கண்டவிடத்து எழுதிவைத்திருந்த குறிப்புக்கள் யாவற்றையும் எடுத்துச் சேர்த்துவந்தேன். அவ்வாறு செய்கையில் மறதி அயர்ச்சிமுதலியவற்றால் சில விடுபட்டன. அவை போக எஞ்சியவற்றைத் தொகுத்தெழுதி மூலம் அல்லது உரையில் ஆங்காங்கு அடிக்குறிப்பாக அடைத்து இதனை ஒருவாறு பதிப்பிக்கலானேன்.

இப்பதிப்பிலுள்ள விசேடம்.

க. பல ஏட்டிச்சுவடிகளோடு ஒப்பிட்டதனாலும் வேறு நூல்களை ஆராய்ச்சிசெய்ததனாலும், ஐயரற்றவிடத்து அறிவால்நெடிதுசூழ்ந்து துணிந்ததனாலும் ஏறலுமம் உரையும் பல திருந்தமடைந்திருத்தல்.

உ. உரையாசிரியர் பாடல்களைப் பகுத்துக்கொண்டு உரையெழுதியிருக்கும் இடங்களில் அவ்வுரைகளுக்கு முன் அவற்றுக்கு மூலமான பாடற்பகுதிகளை மீட்டும் பதிப்பித்திருத்தல்.

ங. பிரதி பேதங்களுள் சிறந்தவற்றைப் பாடமாகக் கொண்டு மற்றவற்றையும், பலவும் சிறந்தனவென்ற தோற்றின் ஒன்றைப் பாடமாகக்கொண்டுமற்றவற்றையும் பிரதிபேதமென்று பக்கத்தினிறுதியிற் குறித்துக் காட்டியிருத்தல்.

ச. இப்பாட்டு, அல்லது இப்பகுதி, இன்ன நூலில் இன்ன பகுதியில் இன்னுரையில் இன்ன செய்திக்கு மேற்கோளென்பதையும், அங்கே குறிப்புவேறுபட்டிருந்தால் அவ்விவரத்தையும், பிறர் கருத்தை மறுப்பதாகத் தோன்றின் அதனையும், முன்பின் முரணுவதாகத் தோன்றின் அதனையும் ஆங்காங்குஎண்களிட்டுக்குறித்திருத்தல்.

நி. பண்டைக்காலத்து இலக்கியங்களிலும் பிற்காலத்து இலக்கியங்களிலும், சொல்லினும், பொருளினும், சொற்பொருளினும், இதற் கொத்த பகுதிகளையும் இதிலிருந்து கிளைத்த பகுதிகளையும், பல சமயத்தவர்க்கும் தமிழின்கண் அன்பு மிகுமாறு பல மதநூற் பாடல் களிலுமிருந்து எடுத்து ஒப்புநோக்கும்படி பாட்டு அல்லது உரையில் எண்களிட்டு அவ்வப்பக்கத்தின் அடியில்அவ்வெண்களைக் கொடுத்துச் சேர்த்திருத்தல்.

கூ. விளக்கவும் சேர்க்கவும் வேண்டியவை விடுபட்ட இடங்களில் மேற்கோள்களின்முன், பின் அவை குறிப்பதற்குக் கருவியாக அ, ஆ, முதலிய எழுத்து வரிசைகளை அமைத்திருத்தல்.

எ. உள்ளவற்றிற் பொருந்தா வென்று தோற்றியவற்றை [] இருதலைப் பகரத்துள்ளும், பொருந்துமென்று தோற்றியவற்றை () நகவளைவினுள்ளும் இசைத்திருத்தல்.

அ. உரையாசிரியர் கூறிய பொருளன்றி வேறு பொருளும் இயையுமாயின் அதனையும் ஆங்காங்கு எண்களிட்டுக்குறித்திருத்தல்.

கூ. நூலாசிரியர் உரையாசிரியர் வரலாறுகளும் அரும்பத முதலியவற்றின் அகராதியும் எழுதிச் சேர்த்தல் முதலியவையாம்.

இந்நூலை நாளிது ககூஉச-ஆம் வருடம் டிசம்பர் மாத முடிவுக்குள் முழுதும் பதிப்பித்து வெளியிடக்கருதி முயன்றுவந்தும் பல இடை யூறுகளால் அவ்வாறுசெய்ய இயலவில்லை. என் நண்பர்கள், இப்போது முழுப்புத்தகமும் கிடைக்குமென்று எதிர்பார்க்கும் தமிழபிமானி கட்குச் சிலபாகமாவது கிடைக்கும்படி அச்சானமட்டில்வெளியிடுவது நன்றென்ற வற்புறுத்தினமையால், இப்போது நிறைவேறியிருக்கும் கடவுள்வாழ்த்து முதலாகக் குறிஞ்சிக்கலி இறுதியாகவுள்ள பகுதிகளை முதற்சம்புடமாக வெளியிடலானேன். பிழைதிருத்தமும் அரும்பத முதலியவற்றின் அகராதியும் பிறவும் புத்தகமுடிந்தபின் வெளிவரும். இதுவும் நிற்க.

இக்கலித்தோகையைப் பதிப்பிக்க என் அகத்தே துணிவைத் தந்தது, புறத்தின் ஓரடியாகிய, "பெரிதே யுலகம் பேணுநர் பலரே" என்பது.

நற்றிணையிற்றொகுத்தமிழறிவுடையரான செல்வர்கள், இதிற்பதிப்பித் திருக்கும் குறிப்புக்களை ஒருவன் சேர்த்ததற்கும் பலபிரதிகளோடு கண் ணோன்றி ஒப்புநோக்குதற்கும், எவ்வளவுகாலம் உழந்திருக்க வேண்டு மென்பதை மனத்தால் நோக்கி, இதன் விலையைக் குறுந்தோகையாக மதித்து, தத்தம் தகுதிக்கேற்ப இதனில் ஐந்து பத்துப்பிரதிகளைப்

பெறத்துணிந்து, ஐங்குறுநூறும் பதிற்றுப்பத்துமாகிய ரூபாய்களை முன் பணமாக வுதவி, இதனைக்கைக்கொண்டு பரிபாடல் (பரிபு + ஆடல் = பரிந்தாளுதல்) செய்வதைத் தமதுகடமைகளுள் ஒன்றென்றுகொள்வ ராயின், அஃது இக்கலித்தொகை முழுதும் விரைவில் வெளிவருவ தற்குப் பெரிதும் உதவிசெய்வதாகும். இதுபோலவே இன்னும் சில நூல்களை வெளியிடுதற்கு ஊக்கத்தை அளிப்பதுமாகும்.

முற்கூறிய பிரஹ்மஶ்ரீ மஹாமஹோபாத்தியாயர் உ. வே. சாமிநா தையரவர்கள் முதலில் இதனைப் பதிப்பித்தற்குச் செலவு செய்து கொள்ளும்படி தாமே ரூ. கஙo வலிந்தளித்து, கலித்தொகை அச்சுப் பிரதியொன்றும், ஒப்புநோக்கிக்கோடற்குத் துணையாக ஏட்டுப் பிரதிகள் இரண்டும், அவ்வப்போது நான் பார்த்துக்கொள்ளுதற்கு, இதுகாறும் அச்சிடப்பெறுதனவும் அச்சிடப்பெற்றிருந்தும் கிடைத் தற்கு அரியனவுமாகிய புத்தகங்கள்சிலவும் தந்துதவி, சந்தித்தகாலங் களில் எதுவரை நடந்திருக்கிறது என்று வினவியும் அச்சிட்டுவரும் பகுதிபைப்பார்த்தபோது,'இக்குறிப்புக்களோநோக்க இவை நெடுங்கால மாகச் சேர்த்து வைத்திருந்தவை என்று தோற்றுகிறது' என்று சொல்லியும் இன்புறுத்திவந்தார்கள். தமிழினருமையையறிந்து இன் புறுபவர்களும் பல பண்டைத் தமிழ்நூல்களை ஆராய்ந்து பலவகைக் குறிப்புக்களுடன் அரும்பத முதலியவற்றின் அகராதியும் புதிதாக எழுதிச் சேர்த்து அச்சிட்டு இறவாதிருத்திக் தமிழ்நாட்டிற்குப் பேருதவிபுரிந்து புகழ் பொருள் பெற்றிருப்பவர்களுமாகிய அவர்கள் இவ்வாறுதவிசெய்து எனக்கு ஊக்கத்தை யுண்டாக்கியதற்காக அவர்கட்கு என் நன்றியறிதலோடு வந்தனத்தையும் மனநிறைவாகச் சேர்ப்பிக்கிறேன். அவர்கள் அளித்த ரூபாய்த் தொகையானது இத் தொகையிலுள்ள செய்யுளொவ்வொன்றையும் தாம் பாராட்டுவதற்கு அறிகுறியாகவும் தோற்றுகிறது

ஏடுகள் தேடிவைக்கத்தக்க தமிழபிமானிகளிடம் கேட்பதுபோல மேனிராணிக் கலாசாலைத்தமிழ்ப்பண்டிதர் ஶ்ரீமான் கா. நமச்சிவாய முதலியாரவர்களிடத்தும், கொழும்பு யூனிவர்ஸிடிகாலேஜ் லெக்சரர் ஶ்ரீமான் எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை எம். ஏ., எல். டி. அவர்க ளிடத்தும் நான் கலித்தொகையைப் பதிப்பிக்கக் கருதியிருப்பதைத் தெரிவித்து அவ்வேட்டுச் சுவடிகள் உங்களிடமிருந்தாலும் உங்கள் அன்பர்களிட மிருந்தாலும் சில மாதங்வரை என் பார்வைக்கு உதவவேண்டுமென்று கேட்டபொழுது இந்நான்காறும் என்னுல் ஒருபயனையும் அடையாத அவர்கள் தாங்கள் வேறு ஏட்டுப் பிரதிக ளோடு ஒப்பிட்டுப் பிரதிபேதங்கள் குறித்துவைத்திருந்த அச்சுப்

புத்தகங்களை நிறைமனத்தோடு நான் பார்த்துக்கோடற்கு உதவி, இக கலித்தொகை திருத்தமாக வெளிவரவேண்டுமென்பதே தங்கள் கருத் தென்று தங்கள் தமிழபிமானத்தைக்காட்டி நான் அச்சிடத் தொடங் குவதில் தங்களுக்கு மகிழ்ச்சியென்றுகூறி எனக்குஊக்கமளித்தார்கள். இதற்காக அவர்கள்பால் மிக்க நன்றியறிவுடையேன். அன்றியும் அவர்களுள் முதலியார் அவர்கள் தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரையில் அச்சிடப்பெறாத பகுதியை இப்போது நான் விரும்பியதற்குச் சிறிதும் தடையின்றி உவந்து கொடுத்திருப்பது பேருதவியாக இருக்கிறது. காலத்தாற்செய்த உதவி பெரிதன்றோ!

இதனைப் பதிப்பித்தலில் ஊக்கம் குன்றுவாறு என்னைத் தூண்டி வருஞ் சில தமிழபிமானிகளின் அன்புடைமையை நினைக்குந்தோறும் மிக்க மகிழ்ச்சி உண்டாகிறது.

நான், இந்நூல் முழுதுக்கும் தெளிவாக விளங்கக் கூடிய உ 000 குறிப்புக்களையே சேர்க்க முன்பு எண்ணியிருந்தும் பின்பு ஆராய்ச்சி யாளர்க்கு ஒருவாறு தொடர்புடையவற்றையும் சேர்ப்பது உதவியா மென நினைந்து உய்த்துணரத்தக்க குறிப்புக்களையும் சேர்த்திருக்கிறேன். அதனால் இப்பகுதியின்கண்ணே குறிப்புக்கள் நாலாயிரத்துக்கு மேலாயின. அவற்றுட் சிலவற்றைத் தவிர ஆகரம் குறிக்கப்பெறவில்லை; சுடுமானால் பின்பு குறிக்கப்பெறும்

இப்பதிப்பில் எனது பிறதி அயர்ச்சி அறியாமை முதலிய வற்றாலும், எனக்கு வேண்டியகாலத்து இதுகாறும் அச்சிடப்படாத நூல்கள் சில கிடைக்காமையாலும், ஐயுற்றவற்றைத் தெளிவிக்கத்தக்க புலமையுடையாரை நான் பெறாமையாலும், சில பிழைகள் நேர்ந் திருக்கக்கூடும். அவற்றைப் பொறுத்தருளவும், எனக்கு அறிவிக்கவும் அறிஞர்களை வேண்டுகிறேன்.

உள்ளமே யுன்ற னுழப்பை யுணரவல்லீர்
வெள்ளமே யில்லை மீகச்சிலரே - கள்ளமே
அன்னீர் புரியா ரகமகிழ்ச்சி காட்டுவ ரென்
றின்னமை நீங்கி யிரு.

'இந்நூல் விரைவில் இனிது நிறைவேற அருள்செய்யவேண்டும்' என்று தமிழ்த் தெய்வத்தை வணங்குகிறேன்.

திருவேட்டீசுவரன்பேட்டை
ரக்தாக்ஷி வருஷம்
மார்கழிமீ தம் கதிஇ

இங்ஙனம்:
இ. வை. அனந்தராமையன்.

கணபதி துணை.

இப்பகுதியில் எடுத்துக்காட்டப்பெற்றிருக்கும் நூற்பெயர் முதலியவற்றின் அகராதி.

(முதற்குறிப்பால் இடம்நோக்கி உயிர்த்துணர்க.)

அகநானூறு
கடவுள் வாழ்த்து.
அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ்.
சிற்றிற்பருவம்.
அம்பிகாபதிகோவை.
அரிச்சந்திரபுராணம்.
நகரச்சிறப்பு.
மயானகாண்டம்.
விவாககாண்டம்.
அறநெறிச்சாரம்
ஆசிரியமாலை.
*ஆப்பனூர்ப்புராணம்
இடவபுரச்சருக்கம்.
இரகுவம்சம்.
அரசியற்படலம்.
இரத்தினச்சுருக்கம்.
இராமாயணம் (உத்தரராமாயணம்)
அசுவமேதயாகப்படலம்.
சீதை வனம்புகுபடலம்.
திக்குவிசயப்படலம்.
வதையெடுத்தபடலம
இரும்பல்காஞ்சி.
இலக்கணவிளக்கம். (இ - வி.)
இலக்கணவிளக்கவுரை.
இலக்கணவிளக்கவுரைகாரர்
இலிங்கபுராணம் [யாயம்.
கவவருடத்தினடை வுரைத்தவத்தி

கவவருடத்தினெல்லை யுரைத்தவத்தியாயம்
இறையனாரகப்பொருளுரை.
இனியதுகாற்பது.
உத்தரகோசமங்கைப்புராணம்.
தீர்த்தசிறப்புரைத்தவத்தியாயம்.
நளசக்கரவர்த்தி கலிமோசனமான வத்தியாயம்.
பார்ப்பதி தவம்புரிந்தவத்தியாயம்.
எலாதி.
ஐங்குறுநூறு.
கடவுள்வாழ்த்து.
ஐந்திணைஐம்பது.
ஐந்திணையெழுபது. [தூது
கசஞி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடு
கலிகம் (திரிகடுகம்)
கந்தபுராணம்
அசமுகிப்படலம்
அசுரர் தோற்றுபடலம்
இந்திரன் கயிலைசெல்படலம்
இந்திரனருசனைப்படலம்.
இரண்டாநாட் சூரபன்மன் யுத்தப்
இரணியன்யுத்தப்படலம். [படலம்
காசிபனுபதேசப்படலம்.
காமதகனப்படலம்.
குமாரபுரிப்படலம.
தாரகன்வதைப்படலம்.
திருக்கல்யாணப்படலம்.

* இக்குறியிடப்பெற்றவை முன் 'திரு' என்பது சேர்ந்தும் வரும்.

திருநகரப்படலம்.
திருநாட்டுப்படலம்.
திருவிளையாட்டுப்படலம்.
தூணைவர்வருபடலம்.
நகர்புகுபடலம். (யுத்தகாண்டம்)
மாயைப்படலம்.
மார்க்கண்டேயப்படலம். [படலம்.
மூதஞுட் பாஞுகோபன் யுத்தப்
மேருப்படலம்.
மோனநீங்குபடலம்.
வள்ளியம்மை திருமணப்படலம்.
வில்வலன் வாதாவிவதைப்படலம்.

கந்தரந்தாதி.

கம்பரந்தாதி.

கம்பராமாயணம்.

அகத்தியப்படலம்.
அகலிகைப்படலம்.
அங்கதன்றூதுப்படலம்.
அதிகாயன்வதைப்படலம்.
அயோத்தியாகாண்டம்.
அரியற்படலம்.
ஆற்றுப்படலம்.
இரணியன்வதைப்படலம.
இராவணவதைப்படலம்.
இலங்கைகாண்படலம்.
இலங்கைகேள்விப்படலம்.
உண்டாட்டுப்படலம்.
ஊர்தேடுபடலம்.
கடல்காண் படலம்.
கரன்வதைப்படலம்.
களியாட்டுப்படலம்.
காட்சிப்படலம்.
கார்காலப்படலம்.
கார்முகப்படலம்.
கிங்கரர்வதைப்படலம்.
கிட்கிந்தைப்படலம்.
கும்பகருணப்படலம்.
குலமுறை கிளத்துபடலம்
கையடைப்படலம்.
கோலங்காண்படலம்.
சம்புமாலிவதைப்படலம்.
சித்திரகூடப்படலம்.
சூர்ப்பநகைப்படலம்.
தாடகைவதைப்படலம்.
திருவவதாரப்படலம்.
நகரப்படலம்.
நாகபாசப்படலம்.
நாட்டுப்படலம்.
நிகும்பலைப்படலம்.
நீர்விளையாட்டுப்படலம்.
பள்ளியடைப்படலம்.
பாயிரம்.
பாலகாண்டம்.
பிலநீங்குபடலம்.
பூக்கொய்படலம்.
மந்தரைசூழ்ச்சிப்படலம்.
மந்திரப்படலம்.
மாயாசனகப்படலம்.
மிதிலைக்காட்சிப்படலம்.
மீட்சிப்படலம்.
முதற்போர்ப்படலம்.
மூலபலவதைப்படலம்.
வருணனை வழிவேண்டுபடலம்.
வரைக்காட்சிப்படலம்.
வனம்புகுபடலம்.
வீடைகொடித்தபடலம்.
வீடணனடைக்கலப்படலம்.
வேள்விப்படலம்.

கல்லாடம்.

கலிங்கத்துப்பரணி.

கழித்தொகை.

கனகநூல்.

காசிகண்டம்.

கங்காள கேதாவதை.
கடோற்காதித்தன் கதையும் கரு
டசேன்கதையும்
கற்பிலக்கணங்கூறியது.
காசிப்படலங்கண்டது.
காசியின்சிறப்பு.
கேதாரவிலிங்கத்தின்கதை.
சாம்பாதித்தன்கதை.
தேவர்கள் பிரமலோகமடைந்தது.
தேவிதக்கன்வேள்விச்சாலையடைத்
விஷ்ணுகாசியையடைந்தது. [தது.

காஞ்சிப்புராணம்.

அந்தகேசப்படலம்
கடவுள்வாழ்த்து
கழுவாய்ப்படலம்
தக்கீசப்படலம்

திருக்கண்புதைத்தபடலம்
திருநகரப்படலம்
திருநாட்டுப்படலம்
திருமணப்படலம்
*நகரேற்றுப்படலம்
மாசாத்தன் தளிப்படலம்
கார்நாற்பது
குசேலோ பாக்கியானம்
மேல்கடலடைந்தவத்தியாயம்
குலோத்துங்க சோழன்கோவை
*குறள்
பரிமேலழகருரை
குறிஞ்சிப்பாட்டு
குறுந்தொகை
கூர்மபுராணம்
இராமன்வனம்புகுந்தது
இராமனவதரித்தது
பார்வதிதோற்றமுரைத்தது
*கூவப்புராணம்
நைமிசாரண்யசருக்கம்
கைந்நிலை
பாலை.
கொன்றைவேந்தன்.
கோடீச்சரம்பிகாவை [கோவையார்.)
*கோவையாருரை (திருவிற்றம்பலக்
சாகுந்தலம்.
சிலப்பதிகாரம்.
அடியார்க்குநல்லார்.
அரும்பதவுரைகாரர்.
பதிகம்
சிவஞானபாடியம்.
இலக்கணவியல்.
சிறபஞ்சமூலம்
சிறுபாணாற்றுப்படை
சோழிக்கோவை.
சோழித்தலபுராணம்.
சந்திரன்பூசித்தலவத்தியாயம்.
சேடனுங்கேதுவும் பூசித்தவத்தி
பிரமபுரமானவத்தியாயம். [யாயம்.
புறவமானவத்தியாயம்.
சோளாந்திப்புராணம்.
கண்ணப்பர்சருக்கம்.
சிவகசிந்தாமணி.
சீறுப்புராணம். [மைத்தது.
தசைக்கட்டியைப்பெண்ணுருவ
நாட்டுப்படலம்.
நறுவுவுத்துக்காண்டம்
சூளாமணி.
கல்யாணசருக்கம்.
சீயவகைச்சருக்கம்.
சுயம்வரசருக்கம்.
துறவுசருக்கம்.
நாட்டுசசருக்கம.
மந்திரசாலேசசருக்கம்.
முத்திசசருக்கம்:
சேதுபுராணம்.
கந்தமாதனசிறப்பு.
ஞாஞவிர்த்தம்.
தக்கயாகப்பரணியுரை
தகடூர் யாத்திரை.
தஞ்சைவாணன்கோவை.
தண்டியலங்காரம்.
தண்டகைப்புராணம்.
களவுப்படலம்.
திருநகரப்படலம்.
திருநாட்டுப்படலம்.
தமிழ்நெடுநிளைக்கவுரை.
தனிப்பாடற்றிரட்டு
தினைமாலைநூற்றைம்பது.
திருக்குழுக்குன்றப்புராணம்.
நாராயணசருகம்.
திருநெல்வேர்ப்பள்ளுத்தமிழ்.
திருப்பாசூர்ப்புராணம்.
மாயாபுரிப்படலம்.
திருமந்திரம்.
அந்தணரொழுக்கம்.
திருமுல்லைவாயிலந்தாதி.
திருவங்கத்தந்தாதி.
திருவாசகம்.
அடைக்கலப்பத்து.
திருப்பொற்சுண்ணம்.
திருவெம்பாவை
திருவாரூர்க்கோவை [டற்புராணம்
திருவாலவாயுடையார் திருவிளையா

திருவாவடுதுறைக்கோவை.
திருவானைக்காப்புராணம். [படலம்.
அகிலாண்டநாயகியாராதனைப்
ஆரஞ்சாத்துபடலம்.
கவுதமப்படலம்.
கோச்செங்கணார் வழிபடுபடலம்.
சம்புமுனிதவம்புரிபடலம்.
திருநாட்டுச்சிறப்பு.
நீலவிண்டுவீச்சரப்படலம்.
திருவிசைப்பா.
திருவாரூர்த்திருவிசைப்பா.
திருவிடைக்கழிமுருகர்பிள்ளைத்தமிழ்.
சிற்றிற்பருவம்.
திருவிளையாடற்புராணம். [படலம்.
இந்திரன்முடிமேல்வளையெறிந்த
சமணரைக்கழுவேற்றியபடலம்.
சுந்தரப்பேரம்பெய்தபடலம்.
தடாதகைப்பிராட்டியார் திருவவ
தாரப்படலம். [லம்.
தருமிக்குப் பொற்கிழியளித்தபட
தலவிசேடம்.
திருநாட்டுப்படலம்.
திருமணப்படலம். [படலம்.
பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்த
பன்றிக்குட்டிகளைமந்திரிகளாக்கிய
மாணிக்கம்விற்றபடலம். [படலம்.
மாபாதகந்தீர்த்தபடலம்.
வளையல்விற்றபடலம்.
வேல்வளைசெண்டு (உக்கிரகுமார
னுக்கு) கொடுத்தபடலம்.
திருவேங்கடத்தந்தாதி.
தேம்பாவணி.
மகவருள்படலம்.
தேவாரம்.
திருவங்கமாலை.
தொல்காப்பியம்.
அகத்திணையியல்.
இடைச்சொல்லியல் (இடையியல்)
இளம்பூரணர்
இளம்பூரணருரை.
உயிர்மயக்கியல்.
உரிச்சொல்லியல் (உரியியல்.)
உவமவியல் (உவமையியல்.)
எச்சவியல்.
கல்லாடர்.
கல்லாடருரை.
களவியல்.
கற்பியல்.
கிளவியாக்கம்.
குற்றியலுகரப்புணரியல்.
சிறப்புப்பாயிரம்.
சூத்திரம்.
செய்யுளியல்.
சேனவரையர்.
சேனவரையருரை.
தெய்வச்சிலையார்.
தெய்வச்சிலையாருரை.
தொகைமரபு.
தொல்காப்பிய மேற்கோள்.
நச்சினார்க்கினியர்.
நச்சினார்க்கினியருரை.
நூன்மரபு.
பாயிரம்.
புணரியல்.
புள்ளிமயக்கியல்.
புறத்திணையியல்.
பெயரியல்.
பேராசிரியர்.
பேராசிரியருரை.
பொருளியல்.
மரபியல்.
மெய்ப்பாட்டியல்.
மொழிமரபு.
விளிமரபு.
வினையியல்.
வேறுரைகாரர்.
வேற்றுமைமயங்கியல்.
வேற்றுமையியல்.
தொன்னூல்விளக்கம்.
நரிவிருத்தம்.
நல்வழி.
நளவெண்பா.
கலிதொடர்காண்டம்.
கலிநீங்குகாண்டம்.
சுயம்வரகாண்டம்.
நற்றிணை.
நன்னூல்.
இடைச்சொல்லியல் (இடையியல்)

இராமாநுசகவிராயர்.
இராமாநுசகவிராயர்கொண்டிகை.
உரிச்சொல்லியல் (உரியியல்.)
சிறப்புப்பாயிரம்.
பதவியல்.
பாயிரம்.
பெயரியல்.
பொதுவியல்.
மயிலைநாதர்.
மயிலைநாதருரை.
மெய்யீற்றுப்புணரியல்.
விருத்தியுரை.
விருத்தியுரைகாரர்.
வினையியல்.
நாலடியார்.
நாலாயிரதிவ்வியப்பிரபந்தம்.
சிறியதிருமடல்.
திருவாய்மொழி.
திருவிருத்தம்.
நாசசியார்திருமொழி.
பெரியதிருமடல்.
பெரியதிருமொழி.
நாற்கவிராசநம்பி யகப்பொருள்விளக்க நான்மணிக்கடிகை. [கவுரை.
நியாயப்பிரகாசம்.
நீதிநெறிவிளக்கம்
நீலகேசி.
தருமவுரைசசருக்கம்.
நெடுநெல்வாடை.
நேமிநாதவுரை.
சொல்லதிகாரம்.
கைடதம்.
அண்ணத்தைத்தூதுவிட்டபடலம்.
இளவேனிற்படலம்.
கான்புகுபடலம்.
சுயம்வரப்படலம்.
சூதாடுபடலம்.
தேவியைக்கண்ணுற்றபடலம்.
நகரன்றாதுப்படலம்.
நாட்டுப்படலம்.
பிரிவுறுபடலம்.
புனல்விளையாட்டுப்படலம்.
போர்புரிபடலம்.
மணம்புரிபடலம்.
பட்டினப்பாலை.
பதிற்றுப்பத்து.
பதிற்றுப்பத்துரைகாரர்:
பதினெராந்திருமுறை.
பொன்வண்ணத்தந்தாதி.
பரிபாடல்.
பழமொழி.
பாகவதம். (கo) ஆம்கந்தம்.
அக்குரூரன்வந்தவுத்தியாயம்.
அக்குரூரனையத்தினபுரத்துவிடுத்த வுத்தியாயம்.
அரிவின்மேலாடியவுத்தியாயம்.
உத்தவனைக்கோகுலத்தில்விடுத்த வுத்தியாயம். [வுத்தியாயம்,
உருக்குமிணி மணந்தநிறமுரைத்த கஞ்சனைக்கொன்றவுத்தியாயம்.
கோவியர்துகில்கவர்ந்தவுத்தியாயம்
கோவியரைமணந்தவுத்தியாயம்,
சததன்னுவாவைக் கொன்றவுத்தி யாயம்.
சாம்பன்மணம்புரியத்தியாயம்.
சிசுபாலனைக்கொன்றவுத்தியாயம்.
பத்திரையைமணம்புரியத்தியாயம்
புனல்விளையாட்டத்தியாயம்,
மதுரைகண்டவுத்தியாயம். [யாயம்.
மலர்வண்சிறுர்கன்று கவர்ந்தவுத்தி
வேய்ங்குழலிசைத்தவுத்தியாயம்,
பாரதம். (பெருந்தேவனார்)
பிரபுலிங்கலீலை.
மாயைபபூசைகதி.
பிரமோத்தரகண்டம். [வுத்தியாயம்,
உமாமகேசுவரபூசாபல முரைத்த வுமாமகேசுவரபூசைமகிமையுரைத் தவுத்தியாயம். [தியாயம்.
உருத்திராக்க மகிமையுரைத்தவுத்
சிவதானமகிமையுரைத்த வுத்தியா யம் [யம்.
சிவயோகிமகிமையுரைத்த வுத்தியா
சீமந்தினிபாவனைபெற்ற வுத்தியா யம்.
சோமவாரவிரதமான்மியவுத்தியா யம. [யாயம்.
பத்திராயுவின் கதையுரைத்தவுத்தி
பிரதோஷபூசைமகிமையுத்தியாயம்

பிரயோகவிவேகவுரை.
காரகப்படலம்.
திங்கப்படலம்.
புலவராற்றுப்படை.
புறத்திரட்டு.
தானைமறம்,
புறநானூறு
புறநானூற்றுரையாசிரியர்.
புறப்பொருள்வெண்பாமாலை,
கரந்தைப்படலம்
கைக்கிளைப்படலம்.
கொளு.
தும்பைப்படலம்.
பாடாண்படலம்.
பெருந்திணைப்படலம்.
இருபாற்பெருந்திணை,
வஞ்சிப்படலம்.
வாகைப்படலம்.
வெட்சிப்படலம்.
பூவாளூர்ப்புராணம்.
இந்திரனருச்சனைச்சருக்கம்.
இராதியருச்சனைச்சருக்கம்.
பெரியபுராணம்.
எறிபத்தநாயனார்புராணம்.
கணணப்பநாயனார்புராணம்.
திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணம்
திருஞானசுக்கரசுவாமிகள் புராணம்
திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார்
பெருங்கதை. [புராணம்.
பெருந்திரட்டு.
பெரும்பாணாற்றுப்படை.
பெரும்பொருள்விளக்கம்.
பேரூர்ப்புராணம்.
காமதேனுவழிபடுபடலம்
குழகன்குளப்புசுவற்றபடலம்.
கௌரிதவம்புரிபடலம்.
மருதவரைப்படலம்.
முசுகுந்தன் முகமபெறுபடலம்.
பொருநராற்றுப்படை.
மச்சபுராணம். [தியாயம்.
ரபியாகையிற்பலசொரூபகதனவத்
மணிமேகலை.
மதுரைக்காஞ்சி.
மலைபடுகடாம்.
மறைசையந்தாதி.
மாறன்கோவை.
மாறனலங்காரம்.
மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழ்.
காப்புப்பருவம்.
முத்தொள்ளாயிரம்.
முதுமொழிக்காஞ்சி.
* முருகாற்றுப்படை
முல்லைப்பாட்டு
மூதுரை.
மேருமந்தர புராணம் [யம்
வசிராயுதனுத்தரம்புக்க வத்தியா
மேற்கோள்.
மோகவதைப்பரணி.
யாப்பருங்கலக்காரிகை (யா. கா)
ஒழிபியல்
செய்யுளியல்
யாப்பருங்கலவிருத்தி (யா. வி)
வளையாபதி
வாயுசங்கிதை [யாயம்
சிவாஜக் கிரகவியல்புரைத்த வத்தி
பார்ப்பதிதிருமணமும் வீரபத்தி
ராவதாரமுமுரைத்தவத்தியாயம்
விநாயகபுராணம்
அங்காரக னுஜ்ஜிவித்தபடலம்
அரசியற்கைபடலம் [படலம்.
சிந்தாமணிவிநாயகர் திருவவதாரப்
சோமகாந்தன் வனம்புகுபடலம்.
சோமகாந்தன்றீவினைப்படலம்.
திரிபுரதகனப்படலம்.
திருநகரப்படலம்.
திருநாட்டுப்படலம்.
தூர்வை தூலையேற்றபடலம்.
நைமிசப்படலம். [படலம்.
பிந்திய மயூரேசர் திருவவதாரப்
மகோற்கடர் திருவவதாரப்படலம்.
மயூரேசர் திருவவதாரப்படலம்.
வன்னிமகத்துவப்படலம்.

வில்லிபுத்தூராழ்வார்பாரதம்.
அருச்சனன் தவநிலைச்சருக்கம்.
அருசுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம்.
இருட்டிணன் தூதுச்சருக்கம்.
குருகுலச்சருக்கம்.
சம்பவச்சருக்கம்.
சிறப்புப்பாயிரம்.
சூதுபோர்ச்சருக்கம்
திரௌபதி மாலையிட்டசருக்கம்.
நிரைமீட்சிச்சருக்கம்.
பத்தாம்போர்ச்சருக்கம்.
பதின்மூன்றும்போர்ச்சருக்கம்.
பதினாறும்போர்ச்சருக்கம்.
பதினான்காம்போர்ச்சருக்கம்.
பதினெட்டாம்போர்ச்சருக்கம்.
பதினேழாம்போர்ச்சருக்கம்.
பதினைராம்போர்ச்சருக்கம்.
பன்னிரண்டாம்போர்ச்சருக்கம்.
வசந்தகாலச்சருக்கம்.
வாரணவதச்சருக்கம்.
வேத்திரகீயச்சருக்கம்.
வீரசோழியவுரை
யாப்புப்படலம்.
* வெங்கைக்கோவை.
வெற்றிவேற்கை. [தேவர்.)
வேதாரண்ணியபுராணம் (அகோர
பிரமதீர்த்தச்சருக்கம்.
ஸ்ரீமத் ராமாயணம். (வால்மீகி)
சுந்தரகாண்டம்.

ஆக நூல்கள் கசஞ; இன்னும் சில.

பாலைக்கலி, குறிஞ்சிக்கலிகளின் செய்யுள் முதற்குறிப்பகராதி

செய்யுள்	பக்கம்.	செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்.
அகவின்பாடு	உஉஅ	கடும்புனல்கால்	ககூள	பாடின்றிப்பசந்த	ஙஙூ
அணிமுகமதி	ஙஅச	கதிர்விரிகனை	உசுசு	பாடுகெம்வாவாழி	உஙஅ
அணைமருளின்	ஙஅக	கயமலருண்கண்	ஙஙக	பான்மருண்மரு	ஙஙக
அரிதாய வறன்	சுஅ	காமர்கடும்புனல்	உகஙி	மடியிலான்செல்வம்	ஙங0
அரிமாணிடித்தன்ன	ஙஙூ	கொடியவுங்கோ	ஙஉச	மறையா மறல்	சஉ
அருந்தவமாற்றி	ஙசூஉ	கொடுமிடலஞ்	ஙஙஙி	மறங்கொளிரும்	உசஅ
அரும்பொருள்	ஙஙஅ	கொவ்வைதாக்கி	உஙசு	மன் றுயிர்மேறுற	ஙஅச
அறனின்றி	உச	சுடர்த்தொடீஇ	ஙஙக	மீன்வெளிரவி	ஙஉங
ஆமிழியணிபூலை	உஙஙி	சுணங்கணவன	ஙசூஉ	முறஞ்செவி மறை	ஙஙஉ
ஆறறியந்தணர்	ங	கெருமிகுசின	அஉ	வயக்குறு	ஙஙச
இடுமுணைமேலை	எங	செவ்வியதீவிய	ஙஙஉ	வலிமுன்பின்	உங
இமையவில்	உ0எ	தேனெய்ந்நிழ்	ஙஙசு	வறனுறலறியாத	ஙஙங
இலங்கொளி	ஙஉள	தீருந்திழாய்கே	ஙஙங	வறியவனிளமை	சுஉ
ஈதலிற்குறை	ஙசஅ	தொடங்கற்கட்	ஙஙூ	வாங்குகோனெல்	ஙஙஉ
உண்கடன்வழி	ஙஉஉ	தொல்லெழில்	ஙதிள	வாருறவணரம்	ஙதிஉ
ஊர்க்கானிவந்த	ஙஙசா	நடுவிகந்தொரீஇ	திஙி	விடியல்வெங்	உளங
எஃகிடைதொட்ட	ஙள0	நெஞ்சுநடுக்குற	ஙஙஉ	வீயகம் புலம்ப	உளஅ
எல்லாவிஃதொ	ஙசுங	நோக்குங்கா	ஙஅங	வீறுசான் ஞால	ஙளள
எறித்தருகதிர்	திங	படைபண்ணிப்	ஙஙதி	வேங்கைதொலை	உதிள
ஏயிஃதொத்த	ஙஉங	பல்வளம்பகர்	ஙஙதி	வேயெனத்திரண்	ஙசள
ஒருகுழை	ஙசஙி	பாஅலஞ்செவி	ஙசு	வேனிலுழுத்த	சதி
ஒன்று, இரப்பான்	உஅசு	பாடல்சால்	ஙதிங	ஆக செய்யுள்	சுதி

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

எட்டுத் தொகையுள்

ஆறவதாகிய

கலித்தொகை

மூலமும்,

நச்சினார்க்கினியருரையும்.

கடவுள் வாழ்த்து.

(1) (க) ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுர நீறெடுத்துக்
கூறுமற் றுறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறுப்போர் மணிமிடற் றெண்கையாய்க் கேளினி;

நி. படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி யாடுங்காற் கோடிய ரகலல்குற்
கொடியுடை நகுப்பினுள் கொண்டசீர் தருவாளோ;

அ. மண்டமர் பலகடந்து மதுகையா னீறணிந்து
பண்டரங்க மாடுங்காற் பணியெழி லணிமென்றோள்
வண்டரற்றுங் கூந்தலாள் வளர்தாக்குத் தருவாளோ

க. இச்செய்யுள், கலிப்பாவான் வாழ்த்துவந்தது; (தொல். செய். சூ. கசகூ. நச்) மூன்றடியாற் சுரிதகம் வந்தது; (தொல் செய். சூ. கஙக 'போக்கியல்' இளம்) தாவு தாழிசை தனிச்சொல் சுரிதகமென்னும் நான் குறுப்புடையதும் கொச்சகவொருபோகு; (தொல். செய். சூ. கசகூ. பே. நச்) என்பவற்றிற்கு மேற்கோள்.

கக. கொலையுழுவைத் தோலைசைஇக் கொன்றைத்தார் சுவற்புரளத்
தலையங்கை கொண்டுநீ காபால மாடுங்கான்
முலையணிந்த முறுவலாண் முற்பாணி தருவாளோ
எனவாங்கு;

கஙி. பாணியுந் தூக்குஞ் சீரு மொன்றிவை
மாணிழை யிரிவை காப்ப
வாணமில் பொருளெமக் கமர்ந்தனை யாடி..

என்பது. "வாழ்த் தியல் வகையே * நாற் பாக்கு முரித்தே" (க) என்றதின்கண் வகையென்றதனாற் கொண்ட (உ) அறுமுறைவாழ்த்தன்றித் (ஙி) தனக்குப் பயன்படும்படி முன்னிலையாகக் கடவுளை வாழ்த்துதலிற் கடவுள்வாழ்த்து எனப் பெயர் பெற்றது.

இதன் பொருள்.

(ச) ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரந் தீமடுத்துக்

க. தோல். செய். சூ. கoக.

உ. அறுமுறை வாழ்த்து:—முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரசரும் மழையும் நாடுமென்பவற்றை வாழ்த்துதல்.

ஙி. உலகிற்குப் பயன்படும்படியாகவும் படர்க்கையாகவும் கடவுளை வாழ்த்துதலுமுண்டு.

ச. (அ) "ஆறறிமுனிவரன்" கந்த. அசுரர் தோற்று. கஙி. (ஆ) "ஆறறி முனிவன்" பிரமோத். உமாமகேசுவர பூசாபல. உள. (இ) "ஆறறி முனிவிர்காள்" வாயுசங். சிவாலுக்கிய. க. (ஈ) "ஆறறி முனிவர்க்கெல்லா மருமறை தெரித்தபின்னர்" † என்பவை ஈண்டு ஒப்புநோக்கற் பாலன. (உ) "வகையறிமுனிவிர்" விநாயக. கைமிச. உஙி என்பதும் கருதத்தக்கது.

(ஊ) "ஆறறி...கூளி" என்னும் பகுதி வருக்கவெதுகைக்கு மேற்கோள். தோல். செய். சூ. அக 'ஆயிரு' இளம். மதுரைத் தமிழ்ச் சங்கப்.

---

† இவ்விடத்தும் பிறவிடத்தும் குறிக்கப்படாத ஆகாரமும் ஆங்காங்கு இடமின்மை முதலிய காரணங்களாற் சேர்க்காது விடுபவையும் பின்பு இடைவிடுபட்டவை யென்னும் தலைப்புப்பெயரிட்டு இயன்ற அளவு விளக்கப்பெறும்.

(பிரதிபேதம்) * நாற்பாற்கும்.

(க) கூருமற் குறித்ததன்மேற்செல்லுங் கடுங்கூளி
மாரூப்போர் ÷ மணிமிடற் (உ) றெண்ணையாய் கேளினி

என்பது: ஆறங்கத்தையும் அறியும் அந்தணர்க்கு (ங) அரியவாகிய வேதங்கள் பலவற்றையும் அருளிச்செய்து, (ச)பகையென்று தெளிகின்ற (ஞ) கங்கையின் வேகத்தைச் சடையில் ஒரு கூற்றிலே அடக்கி, மூப்புரத்திலே தீயைச்செலுத்தி, வாக்காற் கூறப்படாமல் மனத்தாற் குறித்த அப்பொருட்கும் எட்டாமல் நிற்கும், கடிதாகிய கூளியினது முதுகிடாத போரினையும் நீலமணிபோலுந் திருமிடற்றினையும் எட்டுக்கையினையும உடையாய், இங்ஙனங கட்புலனுய் நின்று இப்பொழுது யான் கூறுகின்றதொன்றைக் கேள்; என்றவாறு.

பகர்ந்து கரந்து மடித்து என்னுஞ் செய்தெனெச்சங்கள் (ஃ) செல்லு

பதிப்பில் ஓரடி குறைந்தும் வேறொரு கையெழுத்துப் பிரதியில் ஓரடி மிகுந்து மூள்ளது.

க. (அ) கூற்றெச்சம் குறிப்பெசசமெனவும் (ஆ) "கூறியிட்டிடாமற் குறிப் பினுலுரைப்ப" எனவும் கூறுதலும் குறித்தலும் இணைந்து வருதல் காண்க.

(இ)"கூருமற் குறித்ததன் மேற்செல்லும்"என்னும்பகுதி மல்லீறுவினை யெச்சமாய் வந்ததற்கு மேற்கோள். இதனைச் சிலர் அல்லீறென்றும் கொள்வர். தொல். வினை. சூ. ஙஉ. சே; ஙநி. பே; ஙக. நச்; நன். வினை சூ. உச. மயிலை. விருத்தி. இரா. இ - லி. சூ. உசசு.

உ. "எண்டோள் வீசிநின் ருடும் பிரான்றனை" தே. திருவங்கமாலை.

ங. அருங்கேடன் (குறள் ஒ கo) என்புழிப்போல அருமை இன்மைப் பொருளில் வந்ததாகக் கொள்ளின் அருமறை யென்பதற்கு இந்நிலவுலகத்திலில்லாத வேதங்கள் என்று பொருள்கொள்ளுதலுமாம். 'எஞ்சிய பொருள்களே யேழுற நாடித், திங்கள்போலத் திசைவிளக்கும்மே' என முருகற்குக் கூறியிருத்தலுங் காண்க.

ச. கங்கை சினந்துவந்தமைபற்றித் தேறுரென்பதற்குப் பகையென்று தெளிகின்ற கங்கையென்று பொருள் கூறினர் போலும்.

ஞ. கங்கையைச் சடையில் ஒருகூற்றிலே அடக்கியதை. "உந்தியம்புயத் துதித்தவ னுறைதரு முலகு, மிந்நிராதிய ருலகமு நடுக்குறவிரைந்து, வந்துதோன்றினள் வாகநி மலமகள் கொழுநன், சிந்திடாதொரு சடையினிற் கரந்தனன்சேர" என்பதனுல் உணர்க. கம்ப. அகலிகை. ஙஞ.

ஃ. "காலெநெற்றியி னகிலமுஞ்சுடி கனலி குறைபட விறைவர்தம், மேலை நெற்றி விழிக்கவந்து பணிந்து நின்றணன் வீரனே" என்னுந் தாழிசை (பிரதிபேதம்) ÷ மணிமிடற்ற வெண்கையாய் கேளினி.

மென்னும் பெயரெச்சத்தோடு முடிந்து, * அஃது எண்ணையாய் என்னுங் (க) குறிப்புப் பெயரோடு முடிந்தது.

இது திருமேனிகொண்டு நின்றாயினும் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டா யென்றது.

அவ்வேதாந்தனைக் கொண்டே ஆறங்கங்களையும் (உ) அறிய வல்லாரென் பது தோன்ற ஆறறியந்தணர் என்றார். (ங) அந்தத்தை அணைவுவார். அந்தணர்: என்றது, வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பாரென்ற வாறு.

ஆறு என்னும் வரையறைப் பண்புப்பெயர் அப்பண்பினையுடைய ‡ அங்கத்தை உணர்த்திநின்ற ஆகுபெயர். அது "·கிளந்தவல்ல" (ச) என்பத னுட் கூறினும்.

யுரையில் செல்லுமென்னும் பெயரெச்சம் கூளி யென்னும் பெயரைக் கொண்டு முடிந்ததென்று கருதும்படி "கூருமற் . . . கேளினி" என்பதை மேற்கோள் காட்டுவர். நக்கயாகப்பரணி யுரையாசிரியர். நச்சி. தாழிசை. ஙஅ ○.

க. குறிப்புப் பெயரென்பதற்குக் குறிபபு வினையாலணையும் பெயரெனப் பொருள் கொள்ளலாமாயினும் எண்ணையாயென்பது வினையா லணை யும் பெயராகாமலே பெயரடியாகப்பிறந்த பெயராமாதலால். இஃது உறுப்புப் பெயரென்று இருக்கவேண்டியதுபோலும்; உறுப்புப்பெயர் - [கையென்னுமீ] சினையடியாகப்பிறந்த பெயர்.

உ. 'உரைகோளாளர்க்குரைப்பது நூலில' என்பது இங்கேகருதத்தக்கது.

ங. அந்தணனென்பதற்கு மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகு பவரென்று பொருளெழுதாது இங்கெழுதியிருக்கும் பொருளும் இதற் கிணங்க மது சாசை-ல் வேதாந்தத்தை எக்காலமும் பார்ப்பாரென எழுதியிருக்கும் பொருளும் "அந்தணமைபூண்ட வருமறையந்தத்துச். சிந்தைசெயந்தணர்"[திருமந். அந்தணபொழுக்கம்] என்பதிற் பிற்பகுதி யின் அரியபொருளே வெளிப்படுத்தல் கருதிப்போலும். அழகிய தட் பஞ்சினையுடையாரென எதுப் பெயரம் என்பர்; பரிமேலழகர். குறள். ஙஅ ○.

ச. (அ) தொல். வேற்-மய. சூ ஙஅ. இச்சூத்திரவுரையில் ஆறறியந்தணரென் பதனை மேற்கோள்காட்டி இக்குறிப்பை எழுதியிருத்தலுமன்றி, (ஆ) சீத் தாமணியிலும் உளகூ நூற்றிலாமண்டபமென்பதற்கு நூறடியுலாவு தலையுடையமண்டபமென்று பொருளும் எண்ணுப்பெயர்எண்ணுடைப் பொருண்மேல் ஆகுபெயராய் நின்றதென்று இலக்கணமுமெழுதி இப் பகுதியையே மேற்கோள்காட்டினர். இவ்வுரையாசிரியர்; கல்லாட

(பிரதிபேதம்) அது, † ஆறங்கத்தை யுணர்த்திநின்ற.

(க) ஆறுஅங்கமாவன:—உலகியற் சொல்லே ஒழித்து வைதிகச சொல்லே ஆராயும் நிருத்தமும், அவ்விரண்டையும் உடனராய்ந்த * ஜந்திரத்தொடக்கத்து வியாகரணமும், போதாயனீயம் பாரத்துவாசம் ÷பரமார்த்தம் பரமாதத்திரையம் முதலிய கற்பங்களும், நாராயணீயம் வராகம் முதலிய கணிதமும், எழுத்தா ராய்ச்சியாகிய பிரமமும். செய்யுளிலக்கணமாகிய சந்தமுமாம.

(உ) மறையாவன ‡தைத்திரியமும் (ங) பவுழியமுந் தலவகாரமுஞ் சாம

வுரையாசிரியரும் (இ) "இறுதியிற்சலியாதிருத்தலானு, மறுமைத்துத்வ மிருமையாலும், பெண்ணிடங்கலந்த புண்ணியனுகியும்" என்புழி அறுமையென்று பதம்பிரித்து அதற்கு ஆறென்று பொருள் கூறி இம்மது அங்கத்தையுணர்த்தலின் வரையறைக் குணப் பண்புடைப் பொருண்மே னின்றவாகு பெயரென்று இலக்கணமெழுதி அதற்கும் கல். கங கஅ-கங; (ஈ) "நாற்படை" என்பதற்கு நான்கு குணத்தினை யுடைய படையெனினுமாமென்று பின்னுரையெழுதி அதற்கும் கல். ஙங கூ. இப்பகுதியையே மேற்கோள் காட்டினர்.

க. (அ) அங்கம்—அவயவம்; வேதாங்கத்தைக் குறிப்பாக அவகமென்றார். (ஆ) நிருத்த முதலிய ஆறும் வேதபுருடற்கு இன்ன இன்ன அங்கமென் பதனை. கற்பவகை சந்தங்கா லெண்ணகண, டெற்றெனநிருத்தஞ்செவி சிகைகழுக, குற்ற வியாகரண முகம்பெற்றுச, சார்ப்பூரேருன்ரு வா ணவேதக்கு'என மணி. உஎ.ஆம் காதையிற்காணப்படும் கஂஂ-கஂங ஆம் அடிகளால் உணர்க. (இ) தொல் புறத்திணை உஂஆம் சூத்திரை வுரையில் இவ்வுரைகாரரே இவ்வாறங்கங்களையும் இடையாய ஆத்துவகையுள் ஒன்றென்று கூறி விளக்குமிடத்து, கற்பப் பெயர்களுள் பரமார்த் தம் பரமாத்திரைய மென்னும் பெயர்களின்றி ஆபத்தம்பம் ஆத்தி ரைய மென்னும் பெயர்கள் காணப்படுகின்றன. (ஈ) இவ்வாறங்கங் களின் பெயர்களும் மந்திரஞ் சந்தோபிதை நிருத்தஞ் சேதாதிட நிகண்டு வியாகரணமெனச சில வேறுபட்டும் சில இடத்திற் காணப்படுகின் றன.

உ. இங்கே மறையென்றது உபநிடத்தை யென்று சிலா கூறுவர். அவை விளங்கவில்லை. தலவகாரமென்னுஞ் சொல்லுக்குப் பிரதியாகச சந் தோகமென்னும் பெயரமைந்து "சந்தோகா பௌழியா யைத்திரியா சாமவேதியனே" என ஒருமுறை நாலாயிர. பெரிய திருமொழி எ: எ: உ. இலும் காணப்படுகின்றது.

ங. பவுழியமென்பது, இருக்குவேதத்தையுணர்த்தும் ஒருவடமொழியின் மரூஉவென்ப.

பிரதிபேதம்: ஜந்திரியதொடக்கத்து, ÷பரபாதம். ‡இருக்கும் பௌடியமும்.

வேதமுமாம். (க) இனி வேதவியாதர் * வரையறைப்படுத்திய காலத்து ஒது கின்ற நான்கு வேதமுமாம்.

இனியென்றது, "இனிநினைந் திரக்க மாகின்று" (உ) என்றாற்போல இப்பொழுது என்னும் பொருள் தந்தது.

இது தரவு.

நி. படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடிகொட்டி யாடுங்கூற் கோடிய ரகலல்குற்
கொடிபுரை நுசுப்பினுள் கொண்டசீர் தருவாளோ

என்பது: நின்கையில் ஒலிக்கின்ற (ங) பறை பலவாச்சியங்களையும் ஒலியா நிற்கக் ÷ கட்புலனுப்ப (ச) பல வடிவுகளையும் மீண்டு நின்னிடத்தே ஓடுக்கிக்

க. தொல். பாயிரத்து நான்மறை யென்பதற்குப் பொருள் கூறுமிடத்து "நான்கு கூறுமாய் மறைந்த பொருளை முடைமையால் 'நான்மறை' என்றார்; அவை: தைத்திரியமும் பௌடியமும் தலவகாரமும் சாம வேதமுமாம். இனி, இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமுமென் பாருமுளர்; அது பொருந்தாது; இவர் இந்நூல் செய்த பின்னர் வேதவியாதர் * சில்வாழ்நாட் சிற்றறிவினேம் ருணர்தற்கு நான்கு கூறு கச் செய்தாராகலின்" என இவ்வுரைகாரரே எழுதி யிருத்தலால் இங்கு மறையைக் குறித்தெழுதப் பெற்றிருக்கும் பின் வாக்கியம் பிறரால் இடைச் செருகப் பெற்றதோவென ஐயுறும்படி இருக்கிறது. (பிரதிபேதம்) * சின்னாட்பல்பிணிச் சிற்றறிவினேர்.

உ. புறம். உசந.

இங்கே பறையென்றது தமருகத்தை. கொடிகொட்டியைக் கூறு மிடத்து, 'பரிதரு செங்கையிற் படுபறையார்ப்பவும்' என சில. உஅ: சுஅ இலும் பறை கூறப்பெற்றிருத்தலை ஒப்பு நோக்குக.

ச. (அ) 'பல வடிவங்களையும் மீண்டு நின்னிடத்தேயொடுக்கிக்கொண்டு' என்றது, உலகம் இறைவன்பாலிருந்து தோன்றி அவன்பாலே யொடு ங்குமென்னும் வழக்குப்பற்றி. (ஆ) "நிலமேனி வாலிழைபாகத், தொ ருவ னிருதாண்முற்கீழ், மூவகை யுலகு முகிழ்த்தன முறையே" ஐங். கடவுள். (இ) "மண்மிடற் றந்தணன், ருவி ருணிழ றவிர்ந்தனரு லகே" அகம். கடவுள். (ஈ) "போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்ற மீரம் பொற்பாதம் . . .போற்றியெல் லாவுயிர்க்கு மீரு மிணையடிகள்" திருவாசகம். திருவெம். உ0. (உ) 'நாதனுருத்திர ஞதியினித்திரு ஞாலம்விரித்ததுவும். பிரமோத்தர. சிவயோகிமகிமை. உ. (ஊ) "அருள் சிவத்தினின் றெழவெழுந்தகிலமு மதுபின், மருவி யொன் றுறக் கரந்தலு மடியுமாபோல" திருவாலங்காப். கவுதமப். உஉ. (எ) 'அயனகி னின்று படைத்தமுதல்வன்' கலி. கஉகூ:க-உ. உரை. என்பன காண்க.

(பிரதிபேதம்) * வரையறைப்படுத்தி இக்காலத்து, ÷ கட்புலனுப்ப பலவடிவு.

கொண்டு, கொடிதாகிய கொட்டியென்னுங் (க) கூத்தை நீ ஆடுகின்ற காலத்து, பக்கம் உயர்ந்த அகன்ற அல்குலினையுடைய கொடியையொத்த இடையினையுடையாளோ தாளமுடிந்துவிடுங் காலத்தினைத் தன்னிடத்தே கொண்ட சீரைத் தருவாள்? ஆண்டுப் பிறரில்லையே; என்றவாறு.

* கொடுங்கொட்டி, கொடுகொட்டி என விகாரமாயிற்று. கொடுங்கொட்டியென்றார் (உ) எல்லாவற்றையும் அழித்துநின்று ஆடுதலின்.

க. வீரர் தம் வெற்றிக்காலத்துக் களித்து ஆடுதல் மரபாதலான் வெற்றிக்கு ஆடல் ஆடு எனப்பெயரும் வழங்கும். இவ்வாறு ஆடுதல் மரபென்பதனை. (அ) "கோடியர் முழவின் முன்ன ராடல், வல்லா னல்லன் வாழ்கவவன் கண்ணி,...மடம்மம்பெருமையி னுடன்றுமேல்வந்த,வேந்து மெய்ம் மறந்த வாழ்ச்சி, வீந்துகு போர்க்களத் தாடுங் கோவே" பதிற். நிகூ. (ஆ) "ஆளுகு களத்து வாள்பல வீசி, யொன்னு மன்னரு மாடினர்" பாரதம். (இ) "வென்றுடு துணங்கை" பதிற். எஎ (ஈ) "நீர்த்திரையரங்கத்து நிகர்த்து முன்னின்ற, சூர்த்திறங் கடந்தோனுடிய துடியும்" சீல. சு: நிo-நிக. (உ) "ஆடலமர்ந்தா னமர்வெய்யோன்" பு-வெ. தும்பை. கநி. (ஊ) "அடையா, ராளமர் வென்றி யடுகளத்துத், தோள்பெயராக், காய்ந்தடு துப்பிற் கழன்மறவ ராடினூர், வேந்தோடு" பு-வெ. தும்பை. உக (எ) "ஆளுங் குரிசி லுவகைக் களவென்னுங், கேளன்றிக் கொன்றுரே கேளாகி - வாள்வீசி யாடினூர்" தொல். புறத். சூ. கள. நச். மேற். (ஏ) "சூடிய பொன்முடியும் பூணு மொளி துளங்க, வாடிய கூத்தரின்வேந் தாடினுன் - வீடிக், குறையாடல் கண்டுவந்து கொற்றப்போர் வாய்த்த, விறையாட வாடாதார் யார்" தொல். புறத். சூ. உக. நச். மேற் (ஐ) "வயிரவன் மனத்தான்றன் னோப் பொருதுவண் சூலத்தேந்தி, வயிரவன் களிப்புமிக்கு வாகையி னடனஞ் செய்தான்." காஞ்சி. அந்த கேச - உக. என்பவைகளும் விளக்கும். இம்மரபாற் சிவபெருமான் ஆடிய மூன்றுடல்கள் இங்கே கூறப் பெற்றுள்ளன. (ஒ) "கொடுகொட்டி பாண்டரங்கங் காபால மெனு மிறைவன் கூத்து மூன்றும்" என்பதும் ஈண்டறிதற் பாலது. இவற்றுள் (ஒ) கொடுகொட்டியும் பாண்டரங்கமும் பதினோராடலினுட்பட்டவையென்று சிலப்பதிகாரத்தால் (சு: கச உரை சு: நகசுசு) தெரிகின்றது. அதில் கொடுகொட்டி யாவையுமொழித்தகாலத் திருக்கூத்தெனப்படாது மூவெயி லழித்தகாலத் திருக்கூத்தெனப்பட்டிருத்தல் சமய நூன்மலிவுபோலும். (ஓ) இவ்விரண்டும் "வடவனத் தொருநாள்" என்னுங் கல்லாடத்துங் கூறப்பட்டிருக்கின்றன.

உ. பலவென்பதற்கு எல்லாமென்று பொருள்கூறுதலே "பலர் புகழ் ஞாயிறு" (புறந. உ.) "பலர் புகழ்புலவர்" (பு-வெ. கொளு உசுக) என்பவற்றுக் கெழுதியிருக்கும் உரையும் வற்புறுத்தும்.

(பிரதிபேதம்) *"கொடுகு கொட்டி" (என ஒருபிரதியில் ஊகிக்கும்படி மேலே ஒட்டி எழுதப்பட்டுளது; இது பிறர்தெனப மருஉ மரபறிவார்.)

*, "கொட்டி யாடற் றோற்ற மொட்டிய, வுமையவ ளொருபாலாக ‡வொருபா, லிமையா நாட்டத் திறைவ னுகி, யமையா வுட்கும் வியப்பும் விழைவும், பொலிவும்.....பொருந்த கோக்கிய, தொக்க ∴ அவுண ரின்னுயி ரிழப்ப, வக்களம் பொலிய வாடின னென்ப, மற்றதன், ÷ விருத்தங்காத்தற் பொருளொடு கூடிப், பொருத்த வருஉம் || பொருந்திய பாட, நிருத்தகுமபிற் றெய்வத் துதிப்பே." இதனுன் உணர்க.

அ. (க) மண்டமர் பலகடந்து மதுகையா னீறணிந்து
(உ) பண்டரங்க மாடுங்காற் பணையெழி [] லணைமென்றோள்
வண்டாற்றுங் கூந்தலான் வளர்தாக்குத் தாவாமை!

என்பது: மிக்குச்செல்கின்ற போர்களிற்(கூ)பலவாகிய**மூப்புரங்களேவென்று அந்த வலியாலே அவர்கள் வெந்தவிந்தநீற்றை அணிகையினாலே பாண்டரங்கமென்னும் பெயர்பெற்ற கூத்தை நீ ஆடுகின்ற காலத்து (சு) மூங்கிலினது ‡‡ அழகையுடைய அணைபோன் மெல்லியவாகிய தோள்களையுடைய (ஙு)வண்டுகள் ஒலிக்குங் கூந்தலையுடையாளோ (), காளத்தினிடை நிகழுங்காலத்தினையுடைய தாக்கைத் தருவாள்? ஆண்டுப் பிறரில்லையே; என்றவாறு.

க. (அ) "மண்டமர் கடந்தநின்" ழருது. உளஉ. (ஆ) "மண்டமர் கடந்த வேன் மன்னர் மன்னனே" (இ) "மண்டமர் கடந்தவே னளன்", (ஈ)"மண்டமர் கடந்த வொள்வேன் மன்னவற்கு" நைடதம். நளன் மூது. கo, கூஅ; போர்புரி. ஙு.

உ. (அ) "பாண்டரங்கம தியற்றுவான்" கந்த. இ ண்டாநாட் சூர. உகூஉ. (ஆ)"பண்டரங்க மாடுங்காற் பணையெழி லணைமென்றோள்" என்னும் பகுதி சுட்டளையடிக்கு மேற்கோள். தொல். செய். சூ. உகூ. பே. நச்.

கூ. புரம் மூன்றுதலிற் பலவாகிய மூப்புரங்கள் என்றார்; "மற்றுமெம் பிரான்பல் வேறு வகையினுற் புரங்கள் செற்றல், சற்றல வெழுபா லுலகுமெனச் சாற்றுநூல்கள்" (திருப்பாதூர். மாயாபுரி எ) என்றும் புராணமுண்டாகலின், மூப்புரங்களேபலவிருந்தன வென்றலுமாம்.

சு. "அளவே வடிவொப்ப தன்றியே மற்றை, யிளவேய் நிறத்தானு மேய்க்குங்—துளவேய், கலக்குமரியேறுகைப்பாள் காரவுணர் வீரக். தொலைக்குமரி யேறுகைப்பாடோள்" என்பது ஈண்டுக் கருதத்தக்கது.

ஙு. மகளிர் கூந்தலில் வண்டொலிப்பதாகக் கூறல் கவிமரபு; ஞானப் பூங்கோதை முதலிய பெயரான் உமையாள் கூந்தற்கு இயற்கை மணங்கூறி இயைப்பாரு முளர்; முன் பின் மரபுநோக்கின் அது பொருந்தாமை விளங்கும்.

(பிரதிபேதம்) * கொட்டியாடிய தோற்றம், கொட்டியாடற் கேற்றம், ‡ ஒருபாலிற் கிளையாட்டத்து, ∴ அவுணரினல்லுயிர், ÷ விருத்திகாத்தல், || பொருந்தியவாடல், [] இணை மென்றோள், **மூப்புரங்களேவென்ற அர்கைவலியாலே அவர்கள் வெந்திட வீழ்ந்தநீற்றை, ‡‡ அழகையுடைத்தாகிய அணைபோன்ற மெல்லிய, () அதனிடை.

(க) பாண்டரங்கம், பண்டரங்கமென விகாரமாயிற்று.

"ஏறமர் கடவுண் மூவெயி லெய்வழிக், கூறுகூறுகக் கொடியொடும் படையொடும், வேறுவே றுருவின் விண்மிசைப் * பீரந்தன, ரவ்வழி யொளி யொடு முருவொடுந் தோன்றித், தேர்மு னின்று திசைதலை பனிப்பச், சுவை யுங் குறி-பு மொழிவில தோன்றி, யவையவை யவ்வழி யாடின ரூடை, மைந் தரு மகளிருந் † தந்திலே யழிய, மெய்ப்படு சுவையொடு கைப்படை மறப்பக், கடிய காலக் காற்றென வேற்றவன், படிநிலை திரியாப் பாண்டரங் கம்மே" இதனுள் உணர்க.

கக. (உ) கொலையுழுவைத்தோலசைஇக்கொன்றைத்தார்சுவற்புரளத்
தலையங்கை கொண்டு நீ காபால மாடுங்கான்
முலையணிந்த (ங) முறுவலாண் முற்பாணி தருவாளோ

என்பது: கொலைத்தொழிலை யுடைய புலியைக் கொன்று அதன்றோலை உடுத்துக், கொன்றைப்பூவாற் செய்த மாலை தோளிலே அசைய (ச) அயன் றலையை அகங்கையிலே ஏந்துகையினாலே காபாலமென்று பெயர்பெற்ற கூத்தை நீ ஆடுங்காலத்து, முல்லையையொத்த எயிற்றினையுடையாளோ ஒரு தாளத்தின் முதலெடுக்குங் காலத்தினையுடைய பாணியைத் தருவாள்? ஆண்டுப் ‡ பிறரில்லையே; என்றவாறு.

முல்லை, முலையெனவிகாரமாயிற்று. அணி, உவமவுருபு. ஓகார மூன்றும் எதிர்மறை.

ஒருதானத்திற்குப் பாணி தூக்குச் சீரென்னும் மூன்றும் உளவேனும் || ஒவ் வொன்று ஒவ்வோராடற்கு மிகுதிவகையாற் சிறந்தலைபற்றி ஒரோவொன் றையே கூறினர். தாழிசைகளிற் சீர் தூக்குப் பாணியென நின்றனவேனும், அவை நிகழும் அடைவுபற்றிச் சுரிதகத்துப் பாணியுந் தூக்குஞ்சீருமென அடைவு கூறினர்.

இவை மூன்றும், தாழிசை.

எனவாங்கு

என்பது: என்று சொல்லும்படியாக; என்றவாறு.
ஆங்கு, அசை; அவர் கூத்தாடுகின்ற காலங்களே யெனினுமாம்.
இது தனிச்சொல்.

க. "பண்டங்கன் வந்து பலிதா வென்ரூண்" பொன்னவீனைத். ஈஉ. என்பதனுல், இச்சொல் பண்டங்கமெனச் சிதைந்தும் வரும்போலும்.

உ. 'புலித்தோலே யரைக்கசைத்து, மின்னுர் செஞ்சடைமேன் மிளிர் கொன்றை யணிந்தவனே" தே.

ங. முறுவல் - சிரிப்பு; பல்லுக்கு ஆகுபெயர். தூறன். ககஉ.

ச. "அயன்றலைகொண்டு செண்டாடல்பாடி" என்பது ஈண்டு ஆராயத் தக்கது.

பிரதிபேதம் * பாத்தனரவ்வழி, பரந்தனவவ்வழி. † தந்திலேயொழிய, ‡ (தாழிசைமூன்ற னிறுதியுரையிலும்) பிறரில்லையே யென்க, || ஒருவோராடன் மிகுதி.

கரு. (க) பாணியுந் தூக்குஞ் சீரு மென்றிவை
மாணிழை யரிவை கற்ப
(உ) வாணமில் பொருளெமக் கமர்ந்தனை யாடி

என்பது: அழித்தற்றொழிலே நிகழ்த்துகின்ற காலங்களிலே, பாணியுந் தூக்குஞ் சீருமென்று சொல்லப்பட்ட இவையிற்றை மாட்சிமைப்பட்ட அணியினையுடைய (ங) உமாதேவி (ச) காப்ப ஆடிக், காத்தற்றொழிலே நிகழ்த்துகின்ற இக்காலத்தே ஒரு வடிவைக்கொண்டு, நேயமில்லாத பொருளாகிய * எமக்குப் பொருந்தினாய், இதற்குக் காரணங் கூறுவாயாக; என்றவாறு.

இது சரிதகம்.

இப்பாட்டுப் பலமெய்ப்பாடுகளுந் தோற்றுவித்து நின்றதேனும். அவை உரைப்பிற் பெருகு மாதலின், மூடிந்த பொருளாற் பிறந்த மெய்ப்பாடே கூறுதும்; அது தன்கட் டோன்றிய ஆக்கம்பற்றிய மருட்கையாம்.

இது நான்கு உறுப்பான் வந்ததேனும், தேவபாணியான் வருதலின், மூதனிலை யொத்தாழிசை † யாகாது. "ஏனையொன்றே, தேவர்ப் ‡பராஅ முன்னிலைக் கண்ணே" (நு) என்பதனால், தேவர்ப் பராயிற்றேனும் வண்ணகமு

க. (அ) "சிருடை நன்மொழி நீரொடு சிதறி" (பொருந. உசை.) என்பதன் விசேடவுரையில் 'சிரெனவே பாணியுந்தூக்கு மூளவாயின' என நச்சினார்க் கினியரும் (ஆ) "உமையவ ளொருதிறனுக வோங்கிய, விமையவளுடிய கொடுகொட்டியாடலும்" (சிலப். சு: சூஉ-ங.) என்புழி, உமையவ ளொருதிறனுக வென்பதற்கு 'உமையவ ளொருகூற்றினளாய் நின்று பாணி தூக்குச் சிரென்னுந் தாளங்களைச்செலுத்த' என அடியார்க்கு நல்லாரும் இவ்வடியை உட்கொண்டு எழுதியிருப்பவை ஈண்டறிதற்பாலன.

உ. 'ஆணமில் பொருளெமக் கமர்ந்தனை யாடி' என்பது அகப்பாட்டு வண்ணத்திற்கு மேற்கோள். தொல். செய். சூ உசை. பேர். நச்.

ங. (அ) உமாதேவி சிவபெருமானுடலிற் காணுறுரு வென்பது பெருவழக்கு; அன்றியும் (ஆ) அதனருமைகளை அறிந்து மகிழ்ந்து பாடுகிருரென்றுங்கூறுப. இவற்றொடு அவ்வாடலுக்கிசையத் (இ) தாள மொத்து கிருரென்றுங் கூறுவதை "கடையுகந்தன்னி லெல்லா வுலகமுங் கடவுட் டீயா, னடலெசெய் தமலை தாள மறைதர நடிக்கு மீசன்" என்பதனாலும் அறிக.

ச. 'காப்ப' என்றது ஒத்துதலாற் காப்ப என்றபடி 'திதத் தத்தத் தித்தத் திதி தாதை' (கந்தரநு. திசை.) என்பதற்கு, 'திதத் தத்தத் தித்த' என்னுந் தாளமானங்களைத் திருநடனத்தாற் காக்கின்ற (சகப்பன்) பரமசிவனுமென உரை எழுதியிருத்தலுங் காண்க.

ஞ. தொல். செய். சூ. கஉஅ.

(பிரதிபேதம்) *எம்மிடத்தேபொருந்தினாய். †ஆகாது. என்னை? 'வினையொன்றே' ‡பராஅய, பராவுதன் முன்னிலை.

மாகாது; எண்ணுஞ்சின்னரும்பிழத்தலின். ஆகலின், * இஃது எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றிய (க) கொச்சகவொருபோகாயிற்று.

சீர்வகைக் கலிக்கு, "விராய தளையு மொருஉநிலை யின்றே." (உ) என்பதனால் தளைவிரவிவரப்பெறும் என்றலின், செல்லுமென நேரீற்றியற்சீர் வந்தது; "கலித்தளை யடிவுயி னேரீற் றியற்சீர், நிலைக்குரித் தன்றே தெரியுமோர்க்கே." (ங) என்ற விதி † கட்டளைக்கலிக்காம். ‡ (க)

கடவுள் வாழ்த்து முற்றிற்று.

முதலாவது பாலை.

"நடுவ ணைந்திணை நவ்வண தொழியப், படுதிரை வையம் பாத்திய பண்பே." (சு) என்றும், "மாயோன் மேய காடுறை யுலகமும், || சேயோன் மேய மைவரை யுலகமும், வேந்தன் மேய தீம்புன லுலகமும், வருணன் மேய பெருமண லுலகமு, முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச், சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே." (ஞ) என்றும், நிலம் நான்கேயாகக் கூறலிற் பாலைக்கு நிலமின்றெனின், அற்றன்று; "புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல், ஊடல் இவற்றின் நிமித்த மென்றிவை, தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே."(சூ)என நால்வகை ÷ நிலத்திற்குங் கொண்ட உரிப்பொருட்கிடையே பிரிதலும் உரிப்பொருளாக ஆசிரியர் கொண்டார்; அப்பிரிவு நான்கு நிலத்திடையும் பொதுவாய் மயங்கிவருமென்று கருதி. ஆதலான் ஈண்டுப் பாலைத் திணையையும் திணையாக ஆசிரியர் ∴ நல்லந்துவனார் கோத்தாரென்று கூறுக.

க. கடவுள் வாழ்த்து முத்தமிழ்க்கும் பொதுவென்றும், இயற்றமிழில் வருங்காற் கொச்சக வொருபோகாய் வருமென்றும் கூறுவர், அடியார்க்கு நல்லார். சிலப். சு: ஈடு.

உ, ங. தொல். செய். சூ. ௬௯, உஎடு.

ச, ஞ, சு. தொல். அகத். சூ. உ, ஞ, ௬ச.

(பிரதிபேதம்) * இது எண்ணிடை. † கட்டளைக்கலிக்காதலின். ‡ மதுரையாசிரியர் நல்லந்துவனாரியற்றிய கடவுள் வாழ்த்து முதலும். || செய்யோன். ÷ நிலத்துங்கொண்ட ∴ நல்லந்துவனார் கோத்தார்.

ஆயின், "கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய், முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப" (க) என்றலிற் கைக்கிளையும் பெருந்திணையுங் கோத்தல்வேண்டுமெனின், அஃது "உரிப்பொருளல்லன மயங்கவும் பெறுமே" (உ)என்பதனால், அவை உரிப்பொருளன்மையின் நால்வகை நிலத்தினும் மயங்கிவரப் பெறுமென்றார். ஆகலின் இத்தொகைக் கண்ணும் அவை மயங்கிவரக் * கோத்தாரென்று கூறி விடுக்க. அவை விரவிய பாட்டுகள் வந்துழி அவற்றைக் காட்டுதும்.

இனி, "சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" (ங) என்றவழிச் சொல்லாத முறையாற் சொல்லவும்படுமென்று † பொருள்கொண்டு அது பற்றிப் பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்தலெனவுங் கோத்தார். (ச)‡ ஐங்குறுநூற்றினும் பிறவற்றினும் வேறுபடக் கோத்தவாறுங் காண்க.

க, உ, ங. தொல். அகத். சூ. க, கங, ஙி.

ச. ஐங்குறுநூறு	மரு	நெய்	குறிஞ்	பா	முல்
ஐந்திணையெம்பது	முல்	குறிஞ்	மரு	பா	நெய்
ஐந்திணை யெழுபது	குறிஞ்	முல்	பா	மரு	நெய்
திணைமாலைநூற்றைம்பது	குறிஞ்	நெய்	பா	முல்	மரு
திணைமொழி யைம்பது	குறிஞ்	பா	முல்	மரு	நெய்
கைந்நிலை	குறிஞ்	பா	முல்	மரு	நெய்
மதுரைக்காஞ்சி	மரு	முல்	குறிஞ்	பா	நெய்
பதிற்றுப்பத்து ஈ0	நெய்	பா	மரு	குறிஞ்	முல்
பெருங்கதை	மரு	முல்	குறிஞ்	பா	...
தொல்காப்பியம்	முல்	குறிஞ்	மரு	நெய்	..
இறையனாரகப்பொருள்	குறிஞ்	நெய்	பா	முல்	மரு
நாற்கவிராயநம்பியகப்பொருள்	குறிஞ்	பா	முல்	மரு	நெய்
வீரசோழியம்	முல்	குறிஞ்	மரு	பா	நெய்
மாறனகப்பொருள்	குறிஞ்	பா	முல்	மரு	நெய்
இலக்கணவிளக்கம்	குறிஞ	பா	முல்	மரு	நெய்

கம்பர் முதலியோர் குறிஞ்சியை முதலாகக் கொள்வர்.

(பிரதிபேதம்) * கோத்தார் அவை வரையப் பாட்டுக்களை வந்துழி அவற்றுட்காட்டுதும். † பொருளை கொண்டமை பற்றி. ‡ ஐங்குறுநூற்றின் வேறுபடக் கோத்தவாறு காண்க.

கணபதிதுணை.

கலித்தொகை.

முதலாவது பாலைக்கலி.

(உ.) தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
வடங்காதார் மிடல்சாய வமரர்வந் திரத்தலின்
மடங்கல்போற் சினஇ மாயஞ்செ யவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலு

நி. முடன்றக்கான் முகம்போல வொண்கதிர் தெறுதலிற்
சீறருங் கணிச்சியோன் சினவலி னல்வெயி
லேறுபெற்றதிர் வனபோல் வரைபிளந் தியங்குர
ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை
மறப்பருங் காத லிவளீண் டொழிய
விறப்பத் துணிந்தனிர் கேண்மின்மற் றைஇய;

கக. தொலைவாகி யிரந்தோர்க்கொன் றீயாமை யிழிவென
மலையிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ,
நிலையிய கற்பிணை நீப்பின் வாழாதாண்
முலையாகம் பிரியாமை பொருளாயி னல்லதை ;

கஎ. இல்லென விரந்தோர்க்கொன் றீயாமை யிழிவெனக்
கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
தொல்லியல் வழாஅமைத் துணையெனப் புணர்ந்தவள்
புல்லாகம் பிரியாமை பொருளாயி னல்லதை;

கஅ. இடனின்றி யிரந்தோர்க்கொன் றீயாமை யிழிவெனக்
கடனிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
வடமீன்போற் றெழுதேத்த வயங்கிய கற்பிணை
டடமென்றோள் பிரியாமை பொருளாயி னல்லதை ;

எனவிவள்;

உச. புன்கண்கொண் டிணையவும் பொருள்வயி னகற
லன்பன் றென்றியான் கூற வன்புற்றுக்
காழ்வரை நில்லாக் கடுங்களிற் றிருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்குத் தாழ்புநின்
றெல்கவின் றிலேத லஞ்சியென்
சொல்வரைத் தங்கினர் காத லோரே.

இஃது "ஒன்றுத் தமரினும்" என்னுஞ் சூத்திரத்து "நாளது சின்மையு மிளமைய தருமையுந், தானாண் பக்கழுந் ததுகிய தமைதியு, மின்மைய திழிவு முடைமைய துயர்ச்சியு, மன்பின தகலமு மகற்சிய தருமையு, மோன்றப் பொருள்வயி னூக்கிய பாலினும்" (க) * என்பதனுன், இன்மையது இழிவு கூறி இல்வாழ்க்கைநெறி ஆற்றுதற்குப் பொருள்வயிற் பிரிவேனென்ற தலைமகற்குத், தலைமகளது இயல்பு கூறி, இப்பெற்றி யானைப் பிரியாமையே பொருளாவதெனச் சொல்லிச் செலவழுந்து வித்தமை தோழி தலைமகட்கு வந்து சொல்லியது.

இதன் பொருள்.

(உ) தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
(ங) வடங்காதார் மிடல்சாய (சு) வமரர்வந் திரத்தலின்
மடங்கல்டோற் சினேஇ மாயஞ்செ யவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணுன் மூவெயிலு

க. தொல். அகத். சூ. சக.

உ. "மூந்தி வந்துல கீன்ற முதற்பெய, ரந்தணன் படைவாங்கி" கம்ப. இராவணவதை கக உ.
"தொடங்கற்கட் ..... மற்றைஇய" இது மைவரையுலகத்துப் பாலோடுத்தது; தொல். அகத். சூ. கங. நச்.

ங. "அடங்காதார் மிடல்சாய வமரர்வந் திரத்தலின்" என்பது இணையெதுகைக்கு மேற்கோள். தொல். செய். சூ. கூங. நச்.

சு. வெபிராண்தேவர்வேண்டத் திரிபுரம் எரித்தமை: (அ) "ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண்கொளீஇ,யொருகணை கொண்டு மூவெயி லுடற்றிப், பெருவிற லமரர்க்கு வென்றி தந்த, கறைமிடற் றண்ணல்" புறம். கூடி. (ஆ) "திரிபுர மெரியத் தேவர் வேண்ட, வெரிமுகப் பேரம் பேவுல் கேட்ப, வுமையவ ளொருதிற ஞக வோங்கிய, விமையவ ளுடிய கொடுகொட்டி யாடலும்" சீல உ: சஅ-சஙு. என்பவற்றுலுமறியலாகும்.

(பிரதிபேதம்) * என்பதனுன்.

முடன்றக்கான் (க) முகம்போல் வொண்கதிர் தெறுதலிற்
(உ) சீறருங் கணிச்சியோன் (ங) சினவலி னஞ்வெயி
லேறுபெற்றுதிர் வனபோல் வரைபிளந் தியங்குங
ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை
(ச) மறப்பருங் * காதலி னீவளீண் டொழிய
(ஞ) விறப்பத் துணிந்தனிர் கேண்மின்மற் † றைஇய

எ - து:' இறைவன் உலகுகளைப் படைக்கக் கருதிய இடத்தே, அப்படைத்தற் றொழிலைச் செய்தற்குரியனுய்த்தோன்றிய முதியவனுகிய அயன் முதலாகத் தேவர் வந்து ‡ தம்மெல்லைகொள்ளாத அவுணருடைய வலியைக் || கெடுத் தற்கு இரக்கையினுலே, (சு) கூற்றினைப்போலச் சினந்து வஞ்சனையைச் செய் கின்ற அவுணரை, வஞ்சியாது எதிர்நின்று அடுகின்ற வலியுடனே, மூன்று கண்ணையுடைய இறைவன் மூன்றெயிலையும் கோபிக்க, அவன்முகம் தெறு மாறுபோல; ஒள்ளியஞாயிறு சுடுகையினுலே, வரைபிளந்து பிறராற் சீறுதற்

க. "குழலினுயிற் றெழிலிகள்தெள்ளுந், திருமுகமருங்கிற் செருமீக்கூரி" பெருங். (க) இடை: ச-டி. எனவும், "ஊழியிற்சினவும், பருதிமண்டில மெனப் பொலி முகத்தினன்" கம்ப. வருணனைவழி. கடி. எனவும் சினக் குறிப்பையுடைய உதயனன் முகத்திற்கும் இராமன்முகத் திற்கும் ஞாயிற்றை உவமைகூறியிருத்தல் இங்கே அறிதற்பாலது.

உ. "சீறருங் .. ..ஆரிடை" என்பது, குறிஞ்சி முறைமை திரிந்து பாலை யாதலுக்கு மேற்கோள். சிலப். (கக) சு0-சுஎ

ங. கோபித்தலுக்குச் சினத்தலென்னும் பெயரன்றியும் சினவலென்றும் பெயருண்மையை, "சினவ லோம்புமின்" எனவருதலாலுமறிக.

ச. "மறப்பருங்காதலிவ ளீண்டொழிய, விறப்பத்துணிந்தனிர் கேண்மின் மற்றைஇய' என்பது முன்னிலே சுட்டியவொருமைக்கிளவி ஆறறுப் படையல்லாதவழியும் பலரில்வழியும் போற்றுமற் பன்மையொடு கூறப்படுதற்கு மேற்கோள். தொல். எச்ச. சூ. சுங. "முன்னிலை' தெய்வ.

ஞ. "இறப்பத் துணிந்தனிர் கேண்மின் மறறைஇய" என்பது பால் வழு வமைதிக்கு மேற்கோள். தொல். எச்ச. சூ. சுஞ நச்; நேமி. சொல். எ0. இ - வி சூ. ங00.

சு. (அ) "கூற்றுவெருண்டு வரினு மாற்றுமாற்றலையே" (ஆ) "கால னனைய கடுஞ்சின முன்ப" பதிற். கச; ஙக. (இ) "கூற்றுத்தீயே மாற்றருஞ் சிற்றம்" "புறம். ஙசு. (ஈ) "காலன் இளர்ந்தாலும் போல்வார்" பு-வெ. கரந்தை. உ. (உ) "மாற்றருஞ் சிற்றத்திற்

(பிரதிபேதம்) * காதலினை, † ஐய, ‡ இரக்கையினுலே தம்மேலை, || கெடுத்தற்குச் னெத்துக் கூற்றனைப்போலும் வஞ்சனையை,

கரிய (க) மழுவையுடையோன் கைக்கையிலுலே அந்த முப்புரம் அழித்தலைப் பெற்று உதிர்வனபோல, போவார்க்கு வழியில்லையாக வீழ்ந்து குறுக் கிட்டுக் கிடந்த வெம்மை விளங்குந் தொலையாத வழியிடையே. நின்னை மறத்தலரிதாகிய வேட்கையையுடைய இவன் இவ்விடத்தே இறந்துபடும்படி யாக, ஐயனே! பொருள்வயிற் பிரியத் துணிந்தீர்; அங்ஙனந் துணிந்த நீர் யான் கூறுகின்றதனைக் கேட்பீராக; எ - று.

கண், காலத்தின்கண்வந்தது. கணிச்சியோன், சுட்டுப்பெயராய் நின்றது. அமரர் இரக்கையிலுலே மூக்கணன் மூவெயிலையும் உடல (உ) அவன்முகந் தெறுமாறுபோல, கதிர்தெறுகையிலுலே வரைபிளந்து, அவன்சினக்கையி லுலே அவ் வெயில் எறுபெற்று உதிர்வனபோல உதிர்ந்து,விலங்கிய ஆரிடை யென்க.

(கூ) கேண்மின் ஐய என்றது, ஒருமைப்பன்மை மயக்கம்.

(எ) கதிர் தெறுதலின் மலேவெம்பிய சுரம் என்றதனுன், (ஞ) நுவ்வுநிலைத் தினைக்குரிய நண்பகலும் வேனிலும் குறிஞ்சியைச் சார்ந்து தோன்றினமை கூறினுர். "சுரமென மொழிதலும் வரைநிலே யின்றே" (கூ) என்பதனுல், வழி யருமை கூறினுர். இவ்விதிகள் மேல்வருவனவற்றிற்குங் கொள்க.

இது கரவு.

கூற்றுவனே" கனநூல். கடி. (ஊ) "தென் புலத்தவன் போற் செய்த சிற்றமும்" திருக்கழுக்குன்ற. காராயண. கஉ.

(எ) 'மடங்கல்போற் சினஇ' என்பதற்கு, 'சிங்கம்போலச் சினந்து' என்றலுமாம்; புறம். எக. உரை பார்க்க.

க. (அ) கணிசசி, மழுவின்வேருன படைக்கலமுமாம்; "கையது கணிச்சியொடு மழுவே மூவாய், வேலுமுண்டத் தோலாதோற்கே" அகம் கடவுள் எனவருதல் காண்க. (ஆ) "எறிதரு கணிச்சிச் செங்கையீசன்" கந்த. காமதகன. அஅ.

உ. சிவபெருமான் சினந்து (அ) திரிபுரத்தைத் தெய்வக்கணையால் எரித் தாரென்பது பயின்ற பெருவழக்கு; அன்றியும் (ஆ) சிரித்தெரித்தா ரென்பதும் பெருவழக்கே; (இ) விழித்தெரித்தா ரென்றுங் கூறுப. இவற்றுல் முகத்திற்குத்தெறுதல் கூறினுர். இம்மூன்றிற்கும் வட மொழிதென்மொழி இரண்டினும் ஆதாரமுண்டு.

ஈ. (அ) "இறத்திரா லேயமற் றிவணிலேமை கேட்டிமின்" கலி. உடு. (ஆ) "வரையிடை வாரண்மினேய" தினேமொழியைம் இ. (இ) "ஐயா விளம்பழமே யென்கின்றீர்" சீவக. கடுடு.

ச. இதற்கேற்ற சொற்றொடர், எட்டாவது கலியில் உள்ளது.

தி. தோல். அகத். சூ. கூ. கூ. தொல். பொருளியல் சூ. உஉ.

௪௪. (க) தொலைவாகி யிரந்தோர்க்கொன் றீயாமை * யிழிவென
மலையிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
நிலையிய கற்பினு ணீநீப்பின் வாழாதாண்
முலையாகம் பிரியாமை பொருளாயி னல்லதை

எ - து: முன்பு உண்டானபொருள்களெல்லாம் கொடுத்துத்தொலைந்து. பின்பு இல்லையாய், வந்து இரந்தவர்களுக்குச் சிறிதுங் கொடாதிருத்தல் இழிவாமென்று கூறி, மலையைக் கடந்துபோய்த் தேடுதலைக் கருதின (உ) பொருள் நன்கு மதிக்கும் பொருளாயினும், யான் வருந்துணையும் ஆற்றியிருவென்று ஆற்றுவித்த கூற்றிலே நிலைபெற்ற கற்பினையை முன்பு உடையவள் நீ நீப்பின் இளமைச்செவ்வி முதிர்வுழியே உயிர் வாழாதாளாயினுள்; இனி அவளுடைய, நிரம்பிய முயக்கத்தை விரும்புகின்ற முலையினையுடைய மார்பைப் பிரியாதிருத்தல் நின் மனத்திற்குப் பொருளாயிருக்குமாயின், அதுவே பொருளாவதல்லது பிரிகின்றது பொருளாகுமோ? எ - று.

தொலைவு, முன்பு உண்டாய்ப் பின்பு † இல்லையாதலாம்.

௪௫. (ங) இல்லென விரந்தோர்க்கொன் றீயாமை யிழிவெனக்
கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ

க. 'ஈதா கொடுவென' என்னுஞ் சூத்திரவுரையில் இவ்வுரையாசிரியர், "இவைமூன்றும் (ஈ, தா, கொடு என்பவை) இல்லென இரப்போர்க்கும் இடனின்றி இரப்போர்க்கும் தொலைவாகி இரப்போர்க்கும் உரியவென்று உணர்க"என இத்தாழிசை முதலடிகளிலுள்ளசொற்களை அமைத்திருத்தல் ஈண்டு அறிதற்பாலது. தொல். எச்ச. சூ. ௴அ.

உ. கலி. ௪௪. இன் ௧௦. ஆம் அடிக்குறிப்பில் ஈண்டைக்கு இயைவன ஒப்புநோக்குக.

ங. (அ)"இல்லெனமறுக்குஞ் சிறுமையுமிலனே" (ஆ)"ஈயெனவீரத்தலிழிந்தன் றதனெதி,நீயேனென்ற லதனினு மிழிந்தன்று"புறம்.௨௰௧;உ௦௪. (இ) "அன்னவை பிறவு, மடம்பட வந்த தோழிக் கண்ணும்" என் புழி, கற்பின்கட் டோழிகூற்று நிகழ்ந்ததற்கு "இல்லென.....பொருளாகுமோ" என்பதனை மேற்கோள் காட்டி, "தோழி இங்ஙிகரண கூறிய வழித் தலைவன்கூற்று நிகழும்; இவ்வழிக் கூறுங் கூற்றுக் காமமாகத் தோன்றாது பொருளாகத் தோன்றும்; காமத்திற்கு மாறுகக் கூறவேண்டுதலின்" என்பர். இளம். தொல். கற். சூ. ஓ. (ஈ) தலைவன், தலைவிமுன்னர்த் தன்னைப் புகழுங்கூற்றிற்கு "இல்லென வீரந்தோர்க்கொன்றீயாமை யிழிவு" என்பதை மேற்கோள் காட்டி, "இவ்வாறு கூறவே, அவன் 'யான் செய்யேன்' எனத் தன்னைப் புகழ்ந்த வாறும்" என விளக்குவர், இளம். இதனைப் பின்பற்றுவர், நச். தொல். கற். சூ. ௨௦. (உ) "ஈதலாவது இல்லென விரந்தோர்க்குக் கொடுத்தல்" தொல். புறத். சூ. ௧௯. இளம்.

(பிரதிபேதம்) * இனிவு, (இச்செய்யுளின் மூலமுரை முழுவதினும்), † இல்லியாதல்.

தொல்லியல் * வழா அணைத் தூவெனப் புணர்ந்தவள்
புல்லாகம் பிரியாளை பொருளாயி னல்லதை

எ - து: எக்காலமும், எமக்குப் பொருளில்லையென்று கூறி வந்து இரந்தவர்களுக்குச் சிறிதுங் கொடாதிருத்தல் இழிவுமென்று கூறி, மலையைக் கடந்துபோய்த் தேடுதலைக் கருதின பொருள் நன்கு மதிக்கும் பொருளாயி னும், நமக்குப் (க) பழைய உழுவலன்பு வழுவாமை வருமென்ற கூற்றை உட் கொண்டதனாலே நீ பிரியாயென்றே கூடினவளுடைய, தான் புல்லுதலையே விரும்பின இளமைச் செவ்வியையுடைய மார்பைப் பிரியாதிருத்தல் நின் மன த்திற்குப் பொருளாயிருக்குமாயின். அதுவே பொருளாவதல்லது பிரிகின்றது பொருளாகுமோ? எ - று.

கசு (உ) இடனின்றி யிரந்தோர்க்கொன் றீயாமை யீழிவெனக்
கூடினிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
(ங) வடாஅதி னேபோற் றெழுகேத்த வயங்கிய கற்பிற்
படமென்றோள் பிரியாமை பொருளாயி னல்லதை

எ - து: தம்முடைய இல்வாழ்க்கைக்கு வேண்டும் பொருளில்லையென்று கூறி வந்து இரந்தவர்க்குச் சிறிதுங் கொடாதிருத்தல் இழிவாமென்று கூறி,

க. (அ)"நினக்கிவன் மகனுத்தோன்றிய தாஉ மனக்கினி யாற்குநீ மகளாய தாஉம், பண்டும் பண்டும் பல்பிறப் புளவாற், கண்ட பிறவியே யல்ல காரிகை" மணி. உக: உசு-ஙஉ. (ஆ) "கிழவன் கிழத்தியெனவே பல பிறப்பினும் ஒருவாக்குஒருவர் உரிமையெய்திற்று" தொல். களவியல். சூ உ. நச. (இ) "இருவரும் எதிர்ப்பட்ட ஞான்று தொடங்கி உழுவலன்பால் உரிமை செய் தொழுகலிற் கிழவனுங் கிழத்தியு மென்றார்" தொல். கற். சூ. க. நச. என்பன காண்க.

உ. இடனென்பது செல்வமென்னும் பொருளில்வருதற்கு "இடனின்றி யிரந்தோர்க்கு" என்பது மேற்கோள்; குறள். கூஅ. பரி.
(அ)"பிரிவாற்றுமை யென்பது, களவிற் பிரிவாற்றுதல் வேண்டுமாறு போலக் கற்பினுட் பிரிவாற்றுதல் வேண்டப்படாது; என்னை? புறத்தார்க்குப் புலனுகாமை மறைத்தல் கற்பிற்கு வேண்டுவதன் றுகலின்" என்று கூறி, "இடனின்றி ...மென்றோள் பிரியாமை பொருளாயினல்லதை" என்பதனை மேற்கோள்காட்டி, "இனைய கற்பினுளைப் பிரியாமை பொருளாயினன்றி நும்மால் தரப்படும் பொருண் பொருளாகுமோ என்றதன் கருத்தாவது, பிரிவாற்றுமையின் இவள் இறந்துபடுவள், பின்னை அப்பொருள்கொண்டு ஆற்றும் இல்லறம் யாண்டையதெனத் தலைமகள் பிரிவாற்றுமை கூறியவாறுமிற்று" என்பர் பேர். தொல். மெய்ப். சூ. உச. (ஆ) இதனை யே பின்பற்றிச் சுருக்கி எழுதுவர் இ-வி. உரைகாரர் இ-வி. சூ. நிஅ.

ங. அருந்ததி, (அ) அனசூயையின்றிருமகள்; (ஆ) வசிட்டமுனிவரின் பத்தினி; (இ) வானிடத்தே வடதிசைக்கண் திருவிட்சத்திரத்தி

(பிரதிபேதம்) * வழாமை.

காட்டைக் கடந்துபோய்த் தேடுதலைக் கருதின பொருள் என்று மதிக்கும்

னருகிலுள்ள எழுமுனிவர் குழுவினிடையே கொழுவெனும் பெயரினை ஒரு சிறுவிண்மீன் வடிவமாகத் தோற்றுபவள்; (ஈ) கலக்கமற்ற தெய்வக் கற்புடையவள்; (உ) வாழ்நாளந்தவர்க்குத் தோன்று தொளிப்பவள்; (ஊ) வதுவைக்காலத்துக் கணவரால் மகளிர்க்குக் காட்டப்படுபவள்; (எ) அம்மகளிரால் அக்காலத்துத் தம் வாழ் நாளை அறிதற்கு நோக்கப்படுபவள்; (ஏ) கற்புடைமகளிரால் அந்திக் காலத்துத் தொழப்படுபவள்; (ஐ) தன்னைத் தரிசித்தோர்க்கு மாசு நீக்குபவள்; (ஒ) புகழ்மிக்கவள்; (ஓ) க: வடமீனவள், உ: வட மீன், ஊ: வடக்குமீன், ச: உத்தரமீன், ஙி: தெய்வம், சு: அணங்கு, எ: கடவுள், அ: கடவுண்மீன், க: நெறமீன், கo: அந்திமீன், கக: செம்மீன், கஉ: சாலினி, கஙி: சாலி, மூதலிய பெயருடையவள்; (ஔ) கற்பிற் சிறந்தார்க்கு எடுத்துக்காட்டாகக் கூறப்படுபவள்; (ஃ) க்: "பெருநல் வானத்து வடவயின் விளங்குஞ், சிறுமீன் புரையுங் கற்பி னறுந்தல், வானக்கை மகடூஉ" பெரும்பா ணாறு ஙo௨-ச. உ: "அருந்ததி யனைய கற்பிற் ....புதல்வன்றாயே" ஐங். சசஉ. ஙி: "வடமீன் புரையுங் கற்பின் மடமொழி யரிவை" புறம். கஉ௨. ஞ: "அருந்ததிக் கற்பினுர் தோளும்" கடுகம். க. ஙி: "பொருந்திய வுலகினுட் புகழ்கண் கூடிய, வருந்ததி யகற்றிய வாசில் கற்பினுய்" சு: "அருந்ததிக் கற்பி னுவே யடிபணிந் தவுணுங் கண்டானன்" எ: "தொழுதகு தெய்வ மன்னுள்" சீவக. ஙி௨எ; கஎ௨கo; ககக௨. அ: "தீதிலா வடமீனின் றிறமினி டிறமென்னும்" "வடமீன் கற்பின் மனையுறைமகளிர்" சீல. (க) உஎ; (ஙி) உ௨க. கo: "கடவுண்மீன் கற்புமாதர்" கo: "வடபுலத்து வயங்கு மருந்ததிக், கடவுட் கற்பினர்" காசி. தேவர்கள் பிரமலோகம். உஅ; கற்பிலக்கணம் ஙo. கக: "வடபுலத்தினி னேக்குநர் மாசற விளங்குஞ், கடவுண் மீனினுந் தொழுதகு கற்பினர்க் கரசாங், கொடிமருங்குலே" நைடதம். தேவி யைக்கண்ணுற்ற உஙி. கஉ: "தொழத்தகு வடமீனென்ன, நடையறி புலவரேத்தி நவிறம யந்தியென்பாள்" பிரமோ. சோமவார விரத சப. கஙி: "கற்பா லந்திவா யருந்ததி" கச: "கற்பிலு லந்திமீ னனையவள்" கஙி: "வடமீனிகர் கற்பினுளே" ககு: விண்ணிலங் கருகித் தோன்று மேதகு வடமீனன்றி, மண்ணிலங் குயிரை செவல்லை மடந்தையர் யாரு மில்லாப், பண்ணிலங் கடந்த மென்சொற் பாவையை" வில்லி. சம்பவ. உஙி. வாரணவத. உஅ, நிரௌபதி. ககு, சூது. உo௨. கஅ: "மறுவி லாவட மீன்புரை கற்பினுள்" திருவிளை. மாணிக். சு. என்பவை காண்டி அறிதற்பாலன. பிறவும் விரிப்பிற் பெருகும்.

பொருளாயினும்,(க)*அருந்ததிபோலே(உ)எல்லாருந்தொழுது வாழ்த்தும்படி விளங்கிய கற்பினையை முன்புடையவளுடைய, காமச் செவ்வியாற் பெருமையையுடையவாய, மேல்லியவாகிய தோள்களைப் பிரியாதிருத்தல் நின் மனத்திற்குப் பொருளாயிருக்குமாயின், அதுவே பொருளாவதல்லது பிரிகின்றது பொருளாகுமோ? எ - று.

பிரியாமை யென்றது பின்பு பிரிகின்றதனைத் தோற்றுவித்து நின்றது. கற்பு, கற்பினையாதல் (ஊ) கற்பியலான் உணர்க.

(சு) பழியொடு வருவன செய்யலாகாதெனத் தோழி விலக்கலின் அசை வென்னும் மெய்ப்பாடு தோன்றிற்று.

இவை மூன்றும், தாழிசை.

உஙூ எனவிவள்

க. அருந்ததியென்பது, அருந்துதியென்றும் தமிழில் வழங்குமென்பதை, செம்மீனென்பதற்கு அருந்துதியென்று (பதிற். ஙக.) உரை எழுதப் பெற்றிருத்தலாலும் "சூளையருந்துதி.....யென்றெண்ணி" கம்பரா. ஙச.) "கற்பினல, மருந்துதியானம் புவிக்களித்தார்" (திருமுரு. அடி.) எனச் சிவஞானமுனிவரும், "அருந்துதிக்குக் கற்பணியா ருருந்துதிக்குக் கற்பணியார்" திருவாரூக்கா. கோச் செங்கணார் சு.) எனக் கச்சியப்பமுனிவரும் மாற்றவெண்ணுதபடி அமைத்திருத்தலாலும் அறிக.

உ. கற்புடைமகளிரை எல்லாருந்தொழுதேத்தல்: (அ) "உரைசால் பத்தினிக்குயர்ந்தோ ரேத்தலும்" - 'புகழமைந்த கற்புடை மகளே மக்களே யன்றிப் தேவரு முனிவரு முலாயினோர் சென்றேத்துதல் இயல்பாகலும்' சிலப். பதிகம். ஙசு. அடியார். (ஆ) "தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுவாளைத், தெய்வந் தொழுதகைமை திண்ணிதால்" சில. உஙூ. இறைவெண்பா. (இ)"நாடு மூரு நனிபுகழ்ந் தேத்தலும்,... பாடு சான் மிகு பத்தினிக் காவதே" வளையாபதி. (ஈ) "படியேழுந் தலைமேற் கொண்ட கற்பினாள்" கம்ப. கடல்காண். எ. (உ)"தொழுதகு கற்பினாளே" நைடத.மணம்புரி சுo. என்பவை முதலியவற்றுல் அறியலாகும். (ஊ) "அருந்ததியும் வந்தனெ யஞ்சொலிள வஞ்சி" என்பதும் ஈண்டறிதற்பாலது.

ஙூ. கற்பியல் முதற் சூத்திரத்து, 'கற்பியல் - கற்பினது இயலெனவிரிக்க. இயல், இலக்கணம்.....அது கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும் அவனே இன்னவாறே வழிபடுக வெனவும் இருமுதுகுரவர் கற்பித்தலானும் அந்தணர் நிறத்துஞ் சான்றோர் தேவத்தும் ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலை மகன் கறபித்தலானுங் கற்பாயிற்று' என எழுதிய பகுதி ஈண்டறிதற்பாலது.

சு. (அ) "கழியாக் காஞ்சிரையுஞ் சான்றோர், பழியொடு வரூஉ மிண்பம் வெஃகார்" அகம். ஙகஉ. (ஆ) "பாவமு மேனைப் பழியும் படவருவ, சாவினுஞ் சான்றவர் செய்கலார்" நாலடி. உஙஙி.

(பிரதிபேதம்) * அருந்தி.

புன்கண்கொண் டினையவும் பொருள்வயி னகற
லன்பன் றென்றியான் கூற வன்புற்றுக்
(க) காழ்வரை நில்லாக் கடுங் (உ) களிற் றெருத்தல்

க. யானையை அடக்கி நல்வழியில் நடத்துதற்கும் வேண்டுவன செய்து அதனைப் பாதுகாத்தற்கும் மேலே பாகரிருப்பதுபோலக் கீழே பரிக் கோற்காரரு முண்டென்பது, (அ)"கீழுமேலுங் காப்போர்நீத்த, வறுந்தலைப் பெருங்களிறு போலத், தமியன்வந்தோன்" நற். கஅஉ. (ஆ)"னெஞ்சிறந்து, கோலோர்க் கொன்று மேலோர் வீசி ..உழிதரும் கடாஅ யானையும்" மது. ஈஅ0-அஈ. (இ) "எதிர் பரிக்காரரோட" (ஈ) "பரிக்காரர் தாமு, மீதங்கு கடாவுவாரும்"(உ)"தாடத்திற் பரிக்கா ரர்த்தலைபிடறி" பெரிய. எறிபத்த கஉ; சக. திருஞாவுக்கரசு. ககo. (ஊ)"நெடுவேயும் பாகுஞ்சுளிந்துவரு கடகளிற்றுச் சுவேதவாகனன்" (எ)"பாகுபரிக்கோல் யாவுந்தூரத்தே, காணினு நின்று கொதிப்பது... அவ்வேழம்"(ஏ)"வேயொடுபோகடர் கம்பரிகளமதாசலம்" வில்லி.வசந்த ககஎ.பதினைஞ்சும். கo. பதினேழாம். சுசு.(ஐ)"காழோர் கடுங்களிறு கவளங் கைப்ப"மது. சுடுஅ-கூ.(ஒ)"காழிற்குத்திக் கதிர்த்தவரலேப்பக், கையிடை வைத்தது மெய்யிடைத் திமிரு,முளியுடைக் கவளம்போல"நற். ஈகo (ஓ) "வெலற்கருங் குஞ்சரம் வேட்டம் பட்டெனத், தலைத்தலை யவர் கதற் தவிர்ப்ப" சீவக. சக. என்பவற்றுள் விளங்கும். இப்பரிக்கோல்: குத்துக்கோல், தாறு, கவைமுட்கருவி, கழை, வேய் முதலிய பெயர் களால் வழங்கப்படும். 'களிறுகவைவயிற் காழ்வரைநிற்கில கழிவு' பாகவ (கo) மதுரை சு. என்பது இங்கு ஒப்புநோக்கற்பாலது.

உ. (அ) "வயக்களிற் றெருத்தல்" (ஆ) "பெருங்களிற் றெருத்தலின்" அகம். எஅ; ஈoஅ. (இ) "இருங்களிற் றெருத்தல்" புறம். ககo. (ஈ) "வன்களிற் றெருத்தல் யாவும்" கந்த. தாரக. சச.

(உ) வேழக்குரித்தே விதந்துகளிறென்றல் என்புழி 'விதந்தென்ற விதப் பினுற் களிறென்பது சாதிப்பெயர் போலவும் நிற்குமென்பது; அஃ தாவது யானையென்னும் சாதிப்பெயரினைக் களிறென்னும் பெயர் வந்து [சிற] (குறி)ப்பித்தாற் "[கடுங்]களிற் றெருத்தல்" என்றும் ஆகுமென்பது; என்று(தோல். மர. சூ. ஈச) பேராசிரியரும் (ஊ)களிற் றெருத்தல் என்புழி, களிறென்பது எருமையினெருத்தல் முதலாயின வற்றை நீக்குதலாற் பொருள் வேறுபாடெமையின் ஒரு பொருட் பன்மொழியாகாது;பண்புத்தொகையு மடங்குமென்று (நன். பொது. சூ.சஎ.) மயிலைநாதரும் கூறுவர்.

(க) யாழ்வரைத் தங்கி யாங்குத் தாழ்புரின்
றெல்கவின் றெறுவுத லஞ்சியென்
செல்வரைத் தங்கினர் காத லோரே

எ - து: என்று யான் நினக்குக் கூறும்படியாக, இவள் பொலிவழி வினைத் தன்னிடத்தே கொண்டு வருந்தவும், நீ பொருள் தேடப்பிரிகின்றது உனக்கு அன்பு அல்லவென்று யான் சொல்ல, அச்சொல்வரைத் தங்காத காதலோர், பின்னர் நினது இயற்கைநலந் தொலைதலைக் கூற, அச்சொற்கு அஞ்சி, பரிக்கோலாற் குத்தவுந் தன்னெறியில் நில்லாத செலவுகடியகளிற் றெருத்தல் மெல்லிய யாழோசையின் எல்லையிலே தங்கினாற்போல, அன் புற்றுத் தாழ்ந்து, குற்றேவன் மகளாகிய என் கூற்றின் எல்லையிலே தங்கிப் போகாதொழிந்தார்காண்; எ - று.

• தோழி தான் செலவுழுங்குவித்தமை கூறலின். கூறவென்பதனைத் தொலைதலோடுங் கூட்டுக.

தங்கினர் என்பதனுல் தங்காமையும் வந்தது.

க. யானை யாழோசையி னெல்லையிலே தங்குமென்பதனை (அ) "அணி யிழை மகளிரும் யானையும் வணக்கு, மணியொலி வீணை" (க) கூறி: கஅ-கஅக. (ஆ) "வார்கவுள்யானை வணக்குதற்கியைந்த, வீணைவிச்சையொடு விழுச்சுடிப் பிறவரித்து" (உ) சூ. ககச-ஙி. என்னும் பெருங்கதையும் அந்நூல் (சு) கூ. யாழ்பெறற்றில் (இ) அருஞ் சுகன் செய்தியிலுள்ள வீணைவரலாற்றைக்கூறும் ஙசு-கஅஎ. ஆம் அடி களும் (ஈ) "மகரயாழ் வல்லமைந்த னெருவனைக் கண்டமத்தப், புகர் முகக் களிற்றின் மன்னன் முனிவின வணங்கி" மேரு. அ. வசிராயுத னுத்தரம் புக்க. ஙக. (உ) "ஐம்புலவேழத்தின் வெந்தொழி லவியக், கருங்ண் வீணை காமுறக் கழீஇ" ஞானமிர்தம். சு: (ஊ) "ஆடகத் தியன் மேனிலை மிசையணங்கு கனையார், நாடகத்தனி யாழிசைக் குவந்துறும் வான, நாடகத்து வெண்களிற்றினை களினமென் மலர்ப்பூக், பாடகத்தடி நடையினுற் பருவர லுழப்பார்" காஞ்சிப். திரு ஙகரப். அ. (எ) "கிலவுவெண்கரி வணக்கிய நிகரில் யாழ்முழவி, மலரு மின்னிசை யெழுப்புவர் மேனிலமகளிர்" தணிகை. திருஙகரப். கஉஙி. ன்பனைவரையும். (ஏ) "இசையினி லிவடருந்தோற்றும் யானையால் வேதுமென்னி, னிசைவதொன்றன்று கண்டீர்" சீவக. எசஅ என்ப தன் யிசேடவுரையில் 'யானைநாதத்திற் றேற்றுதலின் அதற்கு வணக்குத வியல்பு' என்று நச். எழுதியிருத்தலும் வற்புறுத்தும். (ஐ) யாழென்பது வீணைக்கும். வேறோரிசைக்கருவிக்கும் பெயராம்.

தங்கிளைற் போலவென்னும் தொழிலுவமத்திற்கு [அன்பன்றென்றதும் தொல்கவின் றொலைதலென்றதும்?].....பொருளாயினவாறு காண்க.

யாழ் தோழியும் அவள் கூறியது யாழிசையுமாகக் கொள்க.

எனவிவள், தனிச்சொல். எஞ்சியது சுரிதகம்.

இச்சுரிதகத்தாற் றலைவற்கு உண்டாகிய அருளென்னும் மெய்ப்பாட்டால், தலைவிக்குப் புணர்வென்னும் உவகை பிறந்தது.

செலவுழுங்கலின் முல்லையாமெனின், ஆகாது; "செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே, வன்புறை குறித்த தவிர்ச்சி யாகும்" (க) என்றாகலின். இவ்விதி மேற் செலவுழுங்குவனவற்றிற் செல்லாங் கொள்க.

"ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே, கொச்சக முறழொடு கலி * நால்வகைத்தே." (உ) "அவற்றுள், ஒத்தா ழிசைக்கலி யிருவகைத் தாகும்." (ங) "இடைநிலைப் பாட்டித் தாவுபோக் கடையென, † நடைநலின் றொழுகு மொன்றென மொழிப." (ச) "தரவே தானு நாலடி யிழிபா, யாறிரண் டீர் பென்றறையவும் படுமே." (ஞ) "இடைநிலைப் பாட்டே, தரவகப் பட்ட மரபின வென்ப." (சு) "அடைநிலைக்கிளவி தாழிசைப் பின்னர், நடைநலின் றொழுகுமா ங்கென் கிளவி" (எ) "போக்கியல் வகையே வைப்பெனப் படுமே." (அ) "தரவிய லொத்து மதனகப் படுமே, புரைதீ ரிறுதி நிலையுரைத் தன்றே." (கூ) என்று அக நிலையாகியகட்டளை ‡யொத்தாழிசைக்குக்கூறிய இலக்கணம் சீர்வகை ‖யொத் தாழிசைக்கும் ஒத்தலில் இவ்விலக்கணங்கொண்டு இத்தொகையில் ஒத்தா ழிசை செய்தாரென் றுணர்க.

அவற்றுள், இது மிகத்துள்ளிவந்த பத்தடித்தரவும், "ஒத்தாழிசையு மண்டில யாப்புங், குட்டமு நேரடிக் கொட்டின வென்ப." (கo) என்பதனால் ஒத்தாழ்த்த ஓசைபெற்றுத், தரவகப்பட்ட ÷மரபினவாய் "ஒத்து மூன்றாகு மொத்தா ழிசையே" (கக) என்பதனான் ஒத்துமூன்றாய்வந்த தாழிசையும், நடை நலின்றொழுகு மென்றதனால் "எனவிவள்" என்று பொருள் பெற்றுவந்த அடைநிலைக் கிளவியும், இடைநிலைப்பாட்டின் பொருண்முடிவு காட்டித் தர விற் சுருங்கிவந்த சுரிதகமும் பெற்றுத், தரவினுந் தாழிசையினும் நேரீற் றியற்சீரும் பெற்றுத், தரவின்கண் ஏறுபெற்றுநிரை நேர்புநேர்நிரையாகிய வஞ்சியுரிச்சீரும் பெற்றுவந்த முதனிலையொத்தாழிசைக் கலிப்பா.

* "எழுசீ ரிறுதி யாசிரியங் கலியே." (கஉ) என்பதனால் ஈற்றடி நாற் சீரும் அயலடி முச்சீருமாக எழுசீரான் இற்றது சுரிதகம். இவ்விதி மேல்வரு வனவற்றிற்கும் கொள்க. (க)

க. தொல். கற். சூ. சக. உ-கூ. தொல். செய். சூ. கஉo-கஉள.
கo, கக, கஉ. தொல். செய். சூ. ககடி, ககஉ, எசு.

(பிரதிபேதம்) * "கால்வகைத்தே" † "நடைபயின்றொழுகு" ‡ "ஒத்தாழிசைகட்கு" ‖ ஒத்தாழிசைகட்கு, ÷ மரபினனவாய்,

(ஈ) (க) அறனின்றி யய றாற்று மம்பலே நாணியும்
வறனீந்தி நீசெல்லு நீளிடை நிணப்பவு
மிறைநில்லா வினையோட விதழ்சோர்பு பனிமல்கப்
பொறைநில்லா நோயோடு புல்லென்ற நுதலிவள்
விறனல னிழப்பவும் விணவேட்டாய் கேளினி;
உடையிவ ளுயிர்வாழா ணீநீப்பி னெனப்பல
விடைகொண்டியா மிரப்பவு மெமகொள்ளா யாயினே
கடையிய வாற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
யடையொடு வாடிய வணிமலர் தகைப்பன;
வல்லீநீ துறப்பாயேல் வகைவாடு மிவளென
வொல்லாங்கியா மிரப்பவு மூணார்ந்தீயா யாயினே
செல்லுநீ ளாற்றிடைச் சேர்ந்தெழுந்த மரம்வாடப்
புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன;
பிணிபுநீ விடல்சூழிற் பிறழ்தரு மிவளெனப்
பணிபுவந் திரப்பவும் பலசூழ்வா யாயினே
தூணிபுநீ செலக்கண்ட வாற்றிடை யம்மரத்
தணிசெல வாழிய வந்தளிர் தகைப்பன;
எனவாங்கு;
யாநிற் கூறவு மெமகொள்ளா யாயினே
யானு திவள்போ லருள்வந் தவைகாட்டி
மேனின்று மெய்கூறுங் கேளிர்போ னீசெல்லுங்
கானந் தகைப்ப செலவு.

இது தலைமகனுற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, தலைமகட்கு அஃது உரைத்து, அவளது ஆற்றுமையின்வகை தலைமகற்கு உணர்த்தவும், பின்னும் பிரிவின்மேற்சென்ற உள்ளத்தனுயினனே, நீர்செல்லுங்கானமே நும்மை இடிக்குங் கேளிர்போல விலக்குமென, அவன் செலவழுங்குதும் வகை அவள் கூறியது.

க. (அ) "பிரியுங்காலை யெதிர்நின்று சாற்றிய மரபுடை யெதிரும்" என்புழி, கற்பினுள் தலைமகன் சேயிடைப் பிரியுங்காலத்துத் தோழி கூற்று அவன்மாட்டும் தலைமகள்மாட்டும் ஆமென்று கூறித் தலைமகன் மாட்டு ஆனதற்கும், தொல். கற். சூ. கூ. (ஆ) சுரிதகம் வெண்பாவியலான் இற்றதற்கும் தொல். செய். சூ. எஉ. இச்செய்யுளை மேற்கோள் காட்டினர்; இளம்.

தோழிகூற்று

அறனின்றி * யயனாற்று மம்பலை காணியும்
(க) வறனீக்கி நீசெல்லு நீளிடை நினைப்பவு
மிறைநில்லா வளையோட விதழ்சோர்பு பனிமல்கப்
(உ) பொறைநில்லா நோயோடு புல்லென்ற நுதலிவள்
(ங) விறனல் † னிழப்பவும் வினைவேட்டாய் ‡ கேளினி

எ - து: யான் நின்பிரிவை உணர்த்துகையிலுலே முன்கையிற் பிடித்த வாய் வளைகழலக், கண்ணீர் இமையினின்று முன்னர்ப் || பெருகி வீழ்ந்து, பின்னர் இமை நிறையும்படி நிற்க, பொறுக்கும் அளவில் நில்லாக் காமநோ யாலே பொலிவழிந்த நுதலினையுடைய இவள் பின்பு அயலிலுள்ளார் தந் (சு) நெஞ்சில் அறமின்றுய் (ஞ) வெளியாகக்கூறும் (சு) அம்பலைக் கூசுத லானும், நீ அரிதாகக் கடந்துசெல்லும் நீண்டவழியில் வற்கடமான காலத்தை நினைக்கையினுலும், தனது வெற்றியையுடைய நலத்தை இழவாகிற்கும், வினைமேற்சேறலே விரும்பினவனே, இப்பொழுது யான் கூறுகின்றதனைக் கேள்; எ - று.

இது தரவு.

சு உடையிவ ளுயிர்வாழா ணீநீப்பி ணெனப்பல
(எ) விடைகொண்டியா மிரப்பவு மெமகொள்ளா யாயினீ

க. (அ) செய்தெனெச்சம் நிகழ்காலத்திற்குமுரித்தா யுவருதற்கு "வறனீக்கி நீ செல்லு நீளிடை நினைப்பவும்" என்பதை மேற்கோள் காட்டினர்; நச். தொல். வினை. சூ. ஊ. (ஆ) இதனை, துணைவினை ஒருகாலத்தெய்தி யதற்கு மேற்கோள் காட்டினர்; பிரயோக விவேக நூலார். திங். தி. (இ) இருள் பருகி யென்பதற்கு இருளே விழுங்கா நின்றென்று பொருளும் செய்தெனெச்சம் நிகழ்காலம் உணர்த்திற்றென்று இலக் கணமும் எழுதி யிருத்தல் பெரும்பா. க. இங்கே அறிதற்பாலது.

உ. பொறைநில்லா நோய்கூரப் புல்லென்ற நுதலிவள், என்பது (நன் உரிச். சூ. கஞ்.) மயிலைநாதருரையிற் காணப்படுகின்றது.

ங. விறனல னிழத்தல் கலி. கஉ. கரு. "விறன்மேனி" தஞ்சீ. உ-ங.

ச. "அறஞ்சொல்லு நெஞ்சத்தா ணண்மை புறஞ்சொல்லும், புன்மையாற் காணப்படும்" குறள். கஅஞ்.

ஞ. தூற்றல் - வெளிப்படையாகச் சொல்லுதல்; "பிறர்பிறர் சொல்லாந் தூற்றி" நீதிநெறி. உ0.

சு. 'அம்பலு மலருங்களவு' இறை. சூ. உஉ. என்பதனுரை ஈண்டு நோக்கத் தாலது.

எ. "உடையோர்போல வீடையின்று குறுகி" புறம். செ. "நம்பன் சிறிதே பிடைதந்திது கேட்க" கீதக. ககஎடு என்பவற்றைநோக்கின், இங்கு இடையென்பதற்குச் சமயமென்று பொருள்கொள்ளலுமாம்.

(பிரதிபேதம்) * அயற்சாற்று மம்பலர், † னிளர்ப்பவும், ‡ கேளினி, || பெருக வீழ்ந்து.

கடைஇய வாற்றிடை நீர்ந்தவ றுஞ்சுனை
(க) யடையொடு வாடிய வணிமலர் தகைப்பன

ஏ - து: நின்போக்கைத் தடுத்தல்கொண்டு, நின்னை உயிராகவுடைய இவள் நீ பிரிவையாயின் உயிர்கொண்டிராளென்று பலவற்றைக் கூறியாங்கள் இரந்துகொள்ளவும், எம்முடைய வார்த்தைகளைக் (உ) காரியமென்று கருதாயாயினுய். இனி நின்னைப் போகாமற் றடுப்பன, நின் னெஞ்சைச் செலுத்தின வழியிடத்து, நீர் நீக்கப்பட்ட வறுவிய சுனைகளிடத்து இலை களோடே * கூட வாடிய அழகிய மலர்கள்; எ - று.

என்றதனுன், இவளேயன்றிச் சுற்றத்தாருங் கெடுவரென்றுள்.

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளு, மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும், வந்த நிலத்தின் பயத்த வாகும்" (ங) என்பதனுன் மருதத்துப்பூப் பாலைக்கண் வந்தது.

கo † வல்லோ துறப்பாயேல் வகைவாடு மிவளென
(ச) வொல்லாங்கியா ‡ மிரப்பவு மூணார்ந்தீயா யாயினை
செல்லுநீ யாற்றிடைச் சேர்ந்தெழுந்த || மரம்வாடப்
(ஞ) புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன

க. "அடையென்பது: தாமரை ஆம்பல் நெய்தற்றொடக்கத்து நீர்நிலை யோறிவுயிர்கட்கும் தாம்பூலத்திற்கு முரித்து" (நன். பொது. சூ. ஙஎ.) என்பர் மயிலைநாதர்; சிறுபான்மை வேறு ஓரறிவுயிர்க்கும்வரும்.

உ. காரியம் - செய்யத்தக்கது.

ங. தொல். அகத். சூ. ககூ. (அ) இதில் இச்செய்திக்கே நச்சினுர்க் கினியரும் (ஆ) காமநிலை யுரைத்த லென்பதற்கு நீ பிரியின் இவள் காமமிகுமென்று கூறுத லென்று பொருள்கூறி, (தொல். கற். சூ. ஙஉ. "காமநிலை") அதற்கு இளம் பூரணரும் "உடையிவ ளுயிர் வாழாள் ...அணிமலர் தகைப்பன" என்னும் பகுதியை மேற்கோள் காட்டினர்.

ச. 'ஒல்லாங்கு' என்பதில் ஆங்கென்பதன் பொருளை (அ) "பட்டாங்கு கூறல்" (ஆ) "நின்ருங்கிசைத்தல்" (இ) "வல்லாங்குப்பாடி" (ஈ) "வல்லாங்கு வாழ்தும்" (உ) "வாழ்வாங்கு வாழ்பவன்" (ஊ) "கற்ருங் கெரியோம்பி" என்பவற்ருேடு சேர்த்து ஆராய்க.

ஞ. "புல்லுவிட்டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பனவென்ருற்போல்வன தலைவி கூற்ருய் வருவன உளவாயின் இதன்கண் (தலைவன் எடுத் துக்கொண்ட காரியத்திற்கு 'மூடித்தலாற்ருன் கொல்' என்று அஞ் சும் அச்சத்தின்கண்) அடக்குக" என்பர், நச்; தொல். கற். சூ எ.

(பிரதிபேதம்) * கூடி, † வல்லியிற், ‡ உரைப்பவும், || வாய்வாட.

எ - து: நீ கடுகத் துறப்பையாயின் இவள் (க) வருப்பையுடையுறுப்புக்கள் கெடுமென்று நினக்குப்பொருந்தும் வழியாலே யாங்கள் இரந்துகொள்ளவும், இவள் வருத்தத்தை அறியா யாயினுய். இனி நின்னைப் போகாமற் றடுப்பனு, நீ போம் நீண்டவழியிடத்து, நமக்குப் பற்றுக் கோடென்று சேர்த்து படரப்பட்ட மரம் வாட, அதனைச் சேருதலைக் கைவிட்டு வீழ்ந்து கிடந்த பூங்கொடிகள்; எ - று.

மரந் தலைவியும், கொடி சுற்றமுமாகக் கூறினுள். மரத்தினது நிழலில் நிற்றலின், கொடி மரம் வாடுமளவும் நின்றது.

கச பிணிபுநீ விடல்சூழிற் * பிறழ்தரு மிவளெனப்
பணிபுவந் திரப்பவும் பலசூழ்வா யாயினை
துணிபுநீ செலக்கண்ட வாற்றிடை யம்மரத்
தணிசெல வாடிய வந்தளிர் தகைப்பன

எ - து: நீ சில நாட் பிரிந்துக்கொண்டு பின்னைக் கைவிடுதலைக் கருதுவா யாயின் இவள் இறந்துபடுவளென்று தாழ்ந்து வந்து இரந்து கொள்ளவும், † வினையயிற் செல்லுமாறு பலவற்றையுஞ் சூழ்வாயாயினுய். இனி நின்னைத்தடுப்பன, நீ போதற்கு நெஞ்சாற் றுணிந்து கண்டு வைத்த வழியிடத்தில், முற்கூறிய மரத்தின் அழகு போக, வாடிக்கிடந்த அழகிய ‡ தளிர்கள்; எ - று.

முற்படக் கூறிய நீரும்மலரும் மரமுங்கொடியும் போலப் பற்றுக் கோடாதலன்றி இவளுஞ்சுற்றமும் முதலுஞ்சினையுமாயிருப்பர் || என்றுள்.

இவை மூன்றும். தாழிசை.

இத்தாழிசைகளிற் கூறிய இறைசசிப் பொருள்கள் தினைப்பொருட்கு உபகாரப்பட்டு நின்றவாறு காண்க.

எனவாங்கு

எ - து: என்று; எ - று.

ஆங்கு, அசை.

இது தனிசசொல்.

ககூ யாநிற் கூறவு மெமகொள்ளா யாயினை
யாணு திவர்போ லருள்வந் தவைகாட்டி

க. "ஸமவிபக்தாநக:" என்பதற்கும், 'வகைமாலை' என்பதற்கும் எழுதப் பெற்றுள்ள பொருள்கள் இங்கே அறிதற்பாலன.

* பிரதிபேதம்' பிறழுகும், † வினையிற செல்லுமாறு, ‡ தளிர். || என்றதாயிற்று.

(க) மேனிண்ணு மெய்கூறுங் கேளிர்போ னீசெல்லுங்

(உ) கானந் தகைப்ப செலவு.

எ - து: யாம் நினக்குக் காரியஞ் சொல்லவும், எம்முடைய கூற்றுக் கனே நெஞ்சாற் கொள்ளாயாயினாய். இனி இவளைபபோலே, (ங) கண்டார்க்கு அருள் வருதற்குக் காரணமானவையிற்றை மேன்மேலே காட்டி, உனக்கு (ஈ) மேலாய்நின்று உண்மைகூறிக்கழறுங் கேளிரைப்போல நின்போக்கைத் தவிப்பன நீ செல்லுங் காடு; எ - று.

இது சுரிதகம்.

எம கொள்ளாயாயினையெனத் தலைவற்கு நிகழ்ந்த விடைவு கண்டு தோழிக்கு அச்சம் பிறந்தது. இதனால், தலைவற்கு இழிபு பிறந்தது.

(ரு) தகைப்ப என்றது * அன்சாரியை பெறுது நின்ற அகரவீற்றுப் பல வறிசொல்.

க. தாய்போற்கழறி யென்பதற்கு 'மேல்நின்று மெய்கூறுங்கேளிர்' ஆகிய தாயரைப்போலக் கழறியென்று இங்குள்ள சொற்களோ மூதற்பெய்து மொழிமெழுதி யிருத்தல் வண்டுஅறியத்தக்கது.தொல்.கற்.சூ.ங.உ.சே.

உ. "வேறு பல்லருஞ்சுரம்" ஐங். ங அறி. "கடுமையகாடு" கலி. அ.

ங. அருளென்பதற்கு -'ஒன்றின் துயர்கண்டாற் காணமின்றித் தோன்றும் இரக்கம்' என்று புறநானூற்றுரை யாசிரியரும், 'வருத்தமுற்றூர் மேற்செல்வது' என்று பரிமேலழகரும் எழுதியிருக்கும் விளக்கம் வண்டு அறிதற்பாலன.

ச. கழறுதல் கேளிர்மரபு; (அ) "இடிக்குங கேளிர்" குறுந். இஅ. (ஆ) "நட்டல் மிகுதிக்கண், மேற்சென் றிடித்தற் பொருட்டு" (இ) "இடிப்பாரையில்லாத வேமமராமன்னன், ..கெடும் கறள். எஅசு,சுசஅ. (ஈ) "களிக்கின்றேயை, அடுக்குமீ .டாதென் றுன்ற வேதுவோ டறிவு காட்டி, இடிக்குநரில்லே" .. .என்பனவையும் (உ) "நட்டாரைக் கழறுவார்க்கு, தாம் செம்மையுடைய ராதல் வேண்டுமென்னும்" பரிமேலழகர் கருத்தும். இங்கு அறிதற்பாலன.

ஞ. (அ) "கானந்தகைப்ப செலவு" என்பது அன்பெறுது எதிர்காலத்துப் பகர மூர்ந்துநின்ற அகரவீற்று வினைச்சொல்லுக்கு மேற்கோள்; தொல். இளவி. சூ. க. சே. ங. (ஆ) இதனை, பகர விறுதி அஃறிணைக் கண்ணும் வந்ததென்று சிலர் எடுத்துக் காட்டியது தவறென்று மறுத்து, தாழிசை மூன்றனுள்ளும் தகைப்பன என ஒதியவண்ணம் சுரிதகத்துக் கண்ணும் ஒதின் வண்ணங் கெடுமென்று அதனைக் குறைக்கும் வழிக் குறைத்துத் தகைப்பவென ஒதினுரென்பர் தெய்; தொல். வினவி. சூ. எ. (இ) "பண்மா பரந்த புலம்" என்புழி, 'பரந்தன வென்பது பரந்தவென நின்றது' பதிற். அச: கூ. என, அதன் உரைகாரர் எழுதியிருப்பதும் இங்கே நோக்கத்தக்கது.

(பிரதிபேதம்) * அன்பெறுது.

"தோழியுள் ளூறுத்த வாயில் புகுப்பினு, மாவயி னிகழு மென்ம னூர் புலவர்" (க) என்பதனால், தலைவி செலவுமுகுவித்தற்குப் போக விட்டமையாற் றன்னிடன் னினைவாயில்களும் கூறினமைதோன்ற, யாம் நிற்கூறுவென்றும் எமகொள்ளாயாயினேயென்றும், தாழிசைகளினும், யாமிரப்பவும் எமகொள்ளாயாயினேயென்றும் (உ) யாமுரைப்பவுமென்றும் கூறியவாறு காண்க.

யாணிற் கூற்று மென்றும் பாடம்.

இம்மூ ஐந்தடித்தரவும் நான்கடித்தாழிசையும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவந்த ஒத்தாழிசைக்கலி. (உ)

(அ) வலிமுன்பின் வல்லெண்ம யாக்கைப் புலிநோக்கிற்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர
ரற்றம்மார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாங்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்

(இ) துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொ ளாரிடை
வெள்வேல் வலத்திர் பொருடரல் வேட்கையி
னுள்ளினி ரென்ப தறிந்தன மென்றோழி;

(ஈ) காழ்விரி கலையார மீவரு மிளமுலை
போழ்திடைப் படாஅமன் முயங்கியு மமையுரென்
றூழ்கதப் பணிகுவர் காதலர் மற்றவர்
சூழ்வதை யெவன்கொ லறியே னென்னும்;

(உ) மூள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீஞ்சொற்
கள்ளினு மகிழ்செயு மெனவுரைத்து மமையுரென்
னெள்ளினை திருத்துவர் காதலர் மற்றவ
ரூள்ளுவ தெவன்கொ லறியே னென்னும்;

(ஊ) தண்ணெழின் மாமைச் சுணங்கணி யாகந்தங்
கண்ணெறி தொடித்தென நோக்கியு மமையுரென்
றெண்ணுதன் னீவுவர் காதலர் மற்றவ
ரென்ணுவ தெவன்கொ லறியே னென்னும்;

எனவாங்கு;

(எ) கழிபெரு நல்கலொன் றுடைத்தென வென்றோழி
யூழிவெளி கலங்கிய வெவ்வத்த மொருநாணீர்

க. தொல். கற். சூ. அ. இதனுரையில் இச்செய்தி சிறிதுவேறுபட்டுள்ளது.

உ. இப்பாடம் இரண்டாந் தாழிசையிற் காணப்படுகின்றது. அதன் உரை இரங்கலுமென்பதற்கே பொருந்துகிறது.

பொழுதிடைப் படநீப்பின் வாழ்வாளோ
வொழிகினிப் பெருமகின் பொருட்பிணிச் செலவே.

இது பொருள்வயிற் பிரிவேனென்ற தலைமகற்கு, தோழி, தலைவி செலவுக் தறிப்பு அறிந்தவாறும், அவளது ஆற்றமையும் உணர்த்திச், செலவு ஒழிவாயாகவேனக் கூறியது.

இதன் பொருள்.

(க) வலிமுன்பின் (உ) வல்லென்ற யாக்கைப் (ரு) புலிநோக்கிற்
(சு) சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தைய
(ரு) ரற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாங்
(சூ) கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்

க. "வலிமுன்பின்.....ளென்றோழி" என்பது தாழ்ந்த ஓசைத்தன்றி ஒத்தாழிசைக் கலியுள் தரவு வந்ததற்கு மேற்கோள். தொல். செய். சூ. கஉ0. பே.

உ. (அ) 'வல்லென்ற தென்னெஞ்சம்' (ஆ) 'கல்லினும் வல்லது நெஞ்சு' "தூணிளக் கெரிபு நிலவிழிப் பேழ்வாய்த், தோகைமண் புடைக்குங் காய்புலி"

சு. (அ) சுற்றமை வில்லன் நற். ருஎசு.
(ஆ) "சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தைய, ரற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்" இவை வினையெச்சப் படர்க்கை வினைக்குறிப்பு முற்றென்பர், நச். தொல். எச்சு. சூ. ரூக.
(இ) "சுற்றமைவில்லர் சுரிவளர் பித்தையர்" என்பது கலிப்பாவில் அளவடி சிற்வகையடியாய்ப் பன்னிரெழுத்தான் வந்ததற்குமேற் கோள். தொல். செய். சூ. நிக. நச்.

ரு. அற்றம்பார்த்தல்குதல். மறவர் மாபென்பதை, "பார்வை விருக்கைக் கவிகண் ணேக்கிற், செந்தொடை பிழையா வன்க ணடவர்" (புறம். ரு.) என்பதனாலும், 'வம்பலரை ரூலியச் சேய்மைக்கண்ணே பார்த்திருக்கும் இருப்பினையும் கையாற் கவிக்கப்பட்ட கண்ணைக் குறித்துப் பார்க்கும் பார்வையினையும் செவ்விய தொடை பிழை யாத கறுகண்மையையு முடைய மறவர்' என்னும் அதனுரை யாலும், "கடிகை வெள்ளிலும் கள்ளி வற்றலும் வாடிய வுவ லொடு நீடதர் பப்பி, யுழைவயிற் றிரியாது மூழை வழி ஞெடுங்கிய, வாறலை யிளேயரை யாணமை யெள்ளி" பெருங். (க) இதி: அங-சூ. "மற்றிங்கிவள் செயல்யாவையும் வபலாற்றெடு காணுத்; தெற்றென்றவண் மீள்கின்றுழிச் செவ்வேயெதிர் போந்து, குற்றந்தனக் கிசையுந்திற முடிப்பேனெனக் கொலைசெய், விற்றங்கிய புயவேடரில் வேறோரிடை நின்றான்." கந்த. அசமுகிப். கடி. என்பவைகளாலும் அறிக.

சு. "வழங்குநர் மடிந்த வத்த மிறந்தோர், கைப்பொரு ளில்லை யாயினு மெய்க்கொண், டின்னுயிர் செகாஅர் விட்டதன் றப்பற்கு" "அம்புதொடை யமைதி காண்மார் வம்பலர், கலனில ராயினுங் கொன்றுபுள் ளூட்டுங், கல்லா வினேயா கலித்த கவலே" அகம். கஅசு. ருஎடி. "கொள்ளும், பொருளில ராயினும் பொங்கெனப் பேரந் தெய்யு, மருளின் மறவ ரதர்". சீவகசா. அச.

(க) துள்ளுநர்க் காண்மார் தோடர்ந் (உ) துயிர் வௌவலிற்
(ங) புள்ளும் வழங்காப் (ச) புலம்புகொ ளாரிடை
(ஞ) வெள்வேல் வலத்திர் பொருடரல் வேட்கையி
னுள்ளினி ரென்ப தறிந்தன ளென்றோழி

எ - து: சுற்றுதலமைந்த வில்லினையுமுடையராய்க் கடைகுழன்ற வளர்ந்த மயிரினையும் உடையராய்ப் பிறர்க்குக் குற்றஞ் செய்தலைப் பார்த்திருக்கும் மெய்வலியுடைத்தாகிய வலியினையும் (சு) வற்கென்ற உடம்பினையும் புலிபோலும் பார்வையினையுமுடைய தறுகண்மையையுடைய மறவர், தாம் (எ) வம்பலர் பக்கற் பெறுவதொரு பொருளினையுடைய ரல்லராயினுந் தங்களம்புபட்டுப் பதைப்பாரைக்கண்டு மனமழிவதற்குத் தொடர்ந்து சென்று உயிரைக்கொள்ளுகையினாலே பறவைகளும் பறத்தலைச் செய்யாத வருத்தத்தைக்கொண்ட, தொலையாத வழியை வெள்ளிய வேலை வலக்கையிலே ஏந்திப் பொருளைத் தேடிக்கொண்டு வருதலின் மேலுள்ள விருப்பத்தினாலே நினைந்தீரென்று தனக்கு வெளியாகச்சொல்லுகின்ற நும்முடைய செயலை என் தோழி அறிந்தாள்; எ - று.

க. "அறுமுக வொருவனேர் பெறுமுறை யின்றியு, மிறுமுறைகாணு மியல்பினி னன்றே, யஞ்சுடர் நெடுவே லொன்றுநின் முகத்துச், செங்கடை மழைக்க ணிரண்டா வீத்தது" என்புழி முருகவேள், தனக்குப் பெறுங்கூறு வேறொன்றுமில்லையாகவும் யான் இறந்து படு முறைமையைத் தன்கணணைக் காணவேண்டுங் காரணத்தால் இவ்வாறு செய்தானென்னும் பொருணோக்கிற்கு, 'துள்ளுநர்க்காண் மார்'என்பதை மேற்கோள் காட்டினர், அடியார்க்கு. சீல.உ: சகூ-டுஉ.

உ. (அ) "செங்கோல் வாளிக் கொடுவி லாடவர், வம்பமாக்க ளுயிர்த்திறம் பெயர்த்தென, வெங்கடற் றடைமுதற் படுமுடை தழீஇ, யுறுபகைக் குறுநரி குறுகல் செல்லாது, மாறுபுறக் கொடுக்கு மத்தம்." நற். கசுச. (ஆ) "யாவரும், வழங்குந ரின்மையின் வௌவுநர் மடியச், சுரம்புல் லென்ற வாற்ற" அகம். க: கங-டி.

ங. "புள்ளும் வழங்கா வழி" தஞ்சை. சoஉ.

ச. "புலம்பு வீற்றிருந்த நிலம்பகு வெஞ்சுரம்" அகம். ஙஙடு.

ஞ. (அ) "வெள்வேல்வலத்திர்... ..னுள்ளினிர்" என்பது முன்னிலைப் பன்மை வினைக்குறிப்பு முற்று வினையெச்சக் குறிப்பாயினதற்கு மேற்கோள். நன். வினை. சூ. ஙஉ. மயிலை. வி. இராமா. இ-வி. சூ. உடிo.

(ஆ) "வெள்வேல் வலத்திர்" என்பது வினையெச்ச முன்னிலை வினைக் குறிப்பு முற்றுக்கு மேற்கோள் தொல். எச்ச. சூ. சுக.

சு. வற்கென்றல் - வலிமையுறல்; "வற்கென்ற நெஞ்சம்" பு - வே என்பதனுரை பார்க்க.

எ. "நகையொன்றே நன்பயனுக் கொள்வான்-பயமின்று, மெய்விதிர்ப்புக் காண்பான் கொடியுடைத்துக் கொல்வான்போற், கைவிதிர்த் தஞ்சப் படும்." நீதிநெறி. எங.

இது (க) பாலைநிலத்திற்கு உரிய செய்தி கூறிற்று.
ஆரிடையை உள்ளினி நெஞ்சே.
இது தரவு.

கூ (உ) காழ்வரி கவவுயார மீவரு மினாமுலை
(ங) போழ்தினைப் * படாஅமுன் முயங்கியு மமையாரென்.
றாழ்கதுப் பணிகுவர் காதலர் மற்றவர்
† சூழ்வதை யெவன்கொ லறியே னென்னும்

எ - து: காதலர், முத்துவடங்கள் விரிந்த ‡கலக்கை அகத்திட்கெடுக் கின்ற ஆரம் மீதே கிடந்தசையும் இளைய முலையை ஒருபோதும் இடை யீடுபடாமற் றழுவியும் அதனாலும் வேட்கை தணியாராய், என் இடையை யிட்டத்தாற் சூழ்ந்த மயிரைக் கோலஞ்செய்வர்; பின்னை, அவர் சூழ் கின்ற காரியம் எத்தன்மையதுகொல்? அதனை யான் அறியேனென்று கூறுகிற்கும்; எ - து.

மேற் கலங்களுங் கீழ்ப் பல முத்துவடங்களுமாகிய ஆரம்.

க. ஆறலைத்தலும் சூறைகோடலும்.

உ. (அ) "கழுஉவிளங் காரங் கலைஇய மார்பே" புற. தாழுறு. கக. (ஆ) "காழ்வரிகவவுயார ..லறியேனென்னும்" என்பது ஒத்தாழிசைக் கலியில் தாழிசைதோறும் 'அறியே னென்னும்' என இரண்டு தேமாற்றியற்சீரும் வந்தமைக்கு மேற்கோள். தொல். செய். சூ. கஉ0. பே.

ங (அ) "கழுமிய காதலொடு கவவுக் கைவிடா, தொழுகுங் காலை நிகழ் பொருள் கூறுவேன்" பெருங். (ங) உஉ: க0-கக. (ஆ) "கங்குலும் பகலும் பிரிவில ராகிக் காதல்வெள் ளத்திடை யழுந்திப், பங்கமில் போக நுகருநாள்" இரா. சீதைவனம். கக. (இ) "இடைய ருமலே யெழில் கொண் மைந்தனு, மடமை மாதரு மருவி வைகுகாள்" பிரமோ. பத்திராயுனின். சூள. (ஈ) "மல்லலந் தோணி ஞாலு மழைமதர் நெடுங்க ணூலும், புல்லுவிட் டொழியி லாவி பொன்றிடி மென்ன வெண்ணி, யல்லுநண் பகலும் வின்னா தணிநலம் பருகி யாங்குச், செல்வுழி நிகழ்ந்த வெல்லாஞ் செப்புவான் றொடங்கு கின்றேன்" (உ) "வாம்பரித் தேரி னூறு மாழையொண் கண்ணி னூறு, மேம்பலோ டினிது புல்லி யிடை விடா தொழுகு நாளில்." நைடதம். மணம்புரி. நிச. சூதாடி. க. (ஊ) "தலைவன் சொல்லாதுபிரியுங்கால் போழ்தினைப் படாமல் முயங்கியும் அதன்றலைத் தாழ்கதுப் பணிந்தும் முள்ளெயிற் றமுதங் கள்ளினு மினிழ்செய்யு மெனவுரைத்தும் இவைமுதலிய

(பிரதிபேதம்) * படாமல், † சூழ்வகை. ‡ அகலத்தை.

கஉ. (க) முள்ளுறழ் (உ) முளை (ங) யெயிற் றமிழ்தூறுந் தீஞ்சொற்
(ச) கள்ளினு மகிழ்செயு மெனவுரைத்து முனையாரென்
னெள்ளிழை திருத்துவர் காதலர் மற்றவ
ருள்ளுவ தெவன்கொ லறியே னென்னும்

எ - து: காதலர், முள்ளைமாறுபடுகின்ற முளையினையுடைய(இ)காணன் முளைபோலும் எயிற்றிடத்து விடாமல் ஊறும் அமிழ்துபோலும் இனிய நீரைக் கள்ளினுங்காட்டில் மகிழ்ச்சியைத் தருமென்று கூறியும் வேட்கை தணியாராகி என்னுடைய ஒள்ளிய பூண்கள் புனர்ச்சியால் நிலைகுலைத்த வற்றைப் பழைய நிலைகளிலே கிடக்கும்படி திருத்துவர்; பின்னை, அவர் நினைக்கின்ற காரியம் எத்தன்மையதுகொல்? அதனை யான் அறியே னென்று கூறுகிற்கும்; எ - று.

அக்கள்ளென்று பாடமாயின், *அங்ஙனம் மிகக்களிப்பிக்குங் கள்ளென்க. இருநீரையும் பாடம்.

தலையளிசெய்து தெருட்டிப்பிரிய, அவை பற்றுக்கோடாக ஆற்று தலின் அவன் குணங்கள் வற்புறுத்துவன ஆயின" என இவ்வடியிலுள்ள சொற்பொருள்களை இடையிட்டு உரை நடை யாக அமைத்தனர், ந.ச். தொல். கற். சூ. சஙஉ.

க. (அ) "முத்துக்கூர்த் தன்ன முள்ளெயிற் றமுத, மருந்தே மாந்த வாருயிர் தளிர்ப்ப" மணி. கஅ: எக-உ. (ஆ) "முள்வா யெயிற்றா றமுதம் முனி யாது மாந்தி" சீவக. சகூக. (இ)ஈ "தித்தியாநின்ற..... முள்ளெயிற்றாறுதேன் ..பெருக்கலால்." கம்ப. கிட்கிந்தைப். உக. (ஈ) "முருந்தேய்க்குமுட்போ லெயிற்றினுய்" எலாதி அ. (உ) 'முள் ளெயிறு' சீவக. கoகூக, உளஉ.

(ஊ) "பிரிவஞ்சும் புன்கணுடைத்தாற் புணர்வு" என்பதன் பொருளை விளக்குதற்கு, விசேட வுரையில் "அவ் வச்சத்தினை யுடைத்தாத லாவது, 'முள்ளுறழ் முளையெயிற்... .....ளெள்ளிழைதிருத்தும்' பண்டையிற் சிறப்பால் அவன் பிரிதற் குறிப்புக்காட்டி அச்சஞ் செய்தலுடைமை" என இவ்வடிகளை உரையிடை யிடுவர், பரி. குறள்- கசதஉ.

உ. "முளைநிரை முறுவலார்" "முளைநேர் முறுவலார்" கலி. கஇ, கூஅ. 'முளையெயிறு' சீவக. உoசஉ.

ங. (அ)"ஊறுநீ ரமிழ்தேய்க்கு மெயிற்றாய்" கலி. உo-கக. (ஆ)"கூரெயிற் றமிழ்க மூறுஞ் செவ்வாய்" அகம். ஙஙஇ: உச-இ.

ச. "உண்டது, கள்ளு மன்று களிப்பட் டனனே" புறநா. தானைமறம்.

இ. "இலையரி ஞணற் கிழங்கு மணற் கின்ற, முளையோ ரன்ன மூன் னெயிற்றுத் துவர்வாய்" அகம். உகஉ.

(பிரதிபேதம்) * இல்லை.

கள (கு) நுண்ணெழின் மாமைச் சுணங்கணி யாகந்தங்
(உ) கண்ணெறி தொடுத்தென நோக்கியு மமையாரென்
(ங) ணெண்ணுத னீவுவர் காதலர் * மற்றவ
ரெண்ணுவ தெவன்கொ லறியே னென்னும்

எ - து: காதலர், கூரிய அழகினையும் மாமை நிறத்தினையுமுடைய சுணங்குபரந்த மார்பம் தங்கண்ணெறி எதிராக வைத்துக் கட்டினதென்று யான் கூறும்படி இமையாமற் பார்த்தும் வேட்கை தணியாராய் என்னுடைய ஒள்ளிய நுதலைப் புணர்ச்சியால் அரும்பிய வியரைத் துடைப்பர். பின்னை, அவர் சூழ்கின்ற காரியம் எத்தன்மையதுகொல்? அதனை யான் அறியேனென்று கூறுநிற்கும்; எ - று.

தொடுத்தது, தொடுத்தென விகாரமாயிற்று.

இவை மூன்றும், தாழிசை.

க. "நுண்ணெழின்.....எண்ணுவ தெவன்கொ லறியே னென்னும்" என்பது, (அ) அந்தமில்லாதசிறப்பிஞையை (அந்தமில் சிறப்பென்பது மேன்மேலுஞ் சிறப்புச்செய்தல்) இன்பத்திடத்து உள்ளுறைப் பொருண்மை வருவதற்கும் (தோல். பொருளியல், சூ. சள 'அந்தமில்' இள.) (ஆ) தலைவன்க ணிகழ்ந்த மிக்கதலையளி வஞ்சமென்று தலைவி உட்கொண்டு பிரியுங்கொல்லென நினைத்தற்கு நிமித்தமானதற்கும் (தோல். அகத். சூ. சஉ. நச்.) (இ) தோழிக்குக் கூறியது கொண்டு கூறியதற்கும் (தோல். கற். சூ. சு. நச்.) மேற்கோள். (ஈ) தலைவன் தலைவியைப் பாராட்டுதலாகிய கிழவி பாராட்டென்பது, 'யாம் செய்யக்கருதிய பொருட்கு இவள் இடையூறுவள்கொல்' என்று தலைவன் அஞ்சியதனையும் அவன் அதற்குப் பிரிகின்ற தனையும், தலைவிக்கு அறிவிக்கு மென்பதற்கு இப்பகுதியைமேற்கோள் காட்டி, தலைவன் கழிபெருநல்கலால் தலைவி அவற்றை யுணர்ந்தாளென்றுகூறி அன்பாலன்றிப் பொருள்காரணத்தால் பாராட்டின மையாலும் (தலைவற்கும்) அதனைச் செவ்வனங் கொள்ளாது பிறழக் கோடலாலும் (தலைவிக்கும்) இருவர்க்கும் வழுவாமென்று அமைத்தாரென்பர், நச்; தோல். பொருளியல், சூ. ஈஅ.

உ. (அ) "கண்ணெறி தொடுத்தென நோக்கி" காசீ. தேவி தக்கன் வேள்விச் சாலையடைந்த. கஉ. கூர்ம. பார்வதிதோற்றமுரைத்த. ச. (ஆ) "கண்ணெறி பிணித்தா லென்ன வியப்புறக் களித்து நோக்கும் .....வேலான்" நைடதம். நளன்மு.துப். அஅ.

ங. தலைவி தலைவன்குறிப்புக்கண்டி ஐயப்படுதலாகிய ஐயஞ்செய்தலென்னு மெய்ப்பாட்டிற்கு, "ஒண்ணுத னீவுவர் காதலர் மற்றவ, ரெண்ணுவ தெவன்கொ லறியே னென்னும்" என்பது மேற்கோள். தொல். மெய்ப்பா. சூ. உஉ. 'இன்பத்தை' இளம்.

(பிரதிபேதம்) * மறவர் கண்ணியதெவன்கொலோ.

இத்தாழிசைகளில், தலைவிக்கு ஆராய்ச்சி பிறந்ததனைத் தோழி கூறினாள். "பொழுதுதலைவைத்த" என்னுஞ் (க) சூத்திரத்து நிகழுமென்பதனால், பெருந்திணைக்கேயன்றி ஏனைத்திணைக்கண்ணும் வனப்புமிகுதி கூறப்பெறுமென்றலின், தாழிசைகளில் தலைவி வனப்புமிகுதி கூறினாள்.

எனவாங்கு,

எ - து: என்று அவள் கூறும்படியாக; எ - று.

ஆங்கு, அசை.

இது தனிச்சொல்.

உஉ கழிபெரு நல்கலொன் றுடைத்தென வென்றோழி
யழிவொடு கலங்கிய வெவ்வத்த ளொருநாணீர்
பொழுதிடைப் படநீப்பின் வாழ்வாளோ
(உ) வொழிகினிப் பெருமநின் பொருட்பிணிச் செலவே

எ - து: புணர்ச்சிப்பின்னர் நிகழ்ந்தின மிக்கபெரிய தலையளி ஒரு பிரிவை*யுடைத்தென்று உட்கொண்டு என் தோழி நெஞ்சழிவாலே கலங்கிய வருத்தத்தையுடையள்; இத்தன்மையாள் ஒருநாள் ஒருபொழுது கூட்டம் இடையீடுபட நீர் பிரிவீராயின் உயிர் கொண்டு இருப்பாளோ? இராள். ஆதலால், பெருமா! நின்னுடைய, பொருளிடத்து நெஞ்சு பிணித்தலாற் செல்லுஞ் செலவைத் தவிர்வாயாக; † எ - று.

இதனால், தலைவற்கு இழிவு பிறந்தது.

இது 'நிகழ்ந்ததுரைத்தற் கேதுவுமாகும்'(ங)என்றலால், தலைவன்கண் நிகழ்ந்த ‡வஞ்சந் தலைவிநினைந்து பிரிவனென்று கருதுதற்கு‖நிமித்தமாயிற்று.

"செய்பொருளசசமும் வினைவயிற்பிரிவு, மெய்யுற —வுணர்த்துங்கிழவி பாராட்டே" (ச)என்பதனால், தலைவன் தலைவியைப் பாராட்டியது, அவட்குச் செய்பொருள் அசசமும் வினைவயிற்பிரிவும் உணர்த்தி நின்றவாறு காண்க.

இது சுரிதகம்.

(ஙு)இஃது எட்டடித்தரவும் நான்கடித்தாழிசையும் ∴தனிச்சொல்லுந்தரவின் பாகமாகிய சுரிதகமும் நேரீற்றியற்சீரும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (ங)

க. தொல். பொருளியல். சூ. உ.

உ. (அ)'ஒழிகினிச்செலவே' ஐங். ஙஙo;(ஆ)"ஒழிகினி" தினைமொழிஙஅ.

ங. தொல். அகத். சூ. உங. உரைபார்க்க. ச. தொல். பொருளி சூ. ஙஅ.

இ. தொல். செய். கங-ஆம், சூத்திரவுரையில் இதனை 'இது மிகவுந் துள்ளிவந்த எட்டடித்தரவும் தாழம்பட்ட வோசை பெற்றுந் தரவகப்பட்ட மரபினதாகிய நான்கடித்தாழிசை மூன்றும் ஆங்கென்னும் அசைநிலைத் தனிச்சொல்லும் தரவின் பாகம் பெற்று நான்கடியா யிறுதிநிலை யுரைத்த சுரிதகமும் பெற்று, தரவினும் தாழிசையினும் நேரீற்றியற் சீரும் பெற்றுவந்த ஒத்தாழிசைக்கலி.' என இவ்வுரைகாரரே விரித்தெழுதி யுள்ளார்.

(பிரதிபேதம்) * உடைத்தென்றுகொண்டு. † என்றுனென்க. ‡ வஞ்சனம் ‖ நிமித்தமும்.
+ உணர்தலுள்ளினவி. ∴ பொருள பெறுதலினிச்சொல்லும்.

(இ) (க) பாஅ லஞ்செவிப் பணைத்தாண் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறுதர் பட்ட வாறுமயங் கருஞ்சுர
மிறந்துநீர் செய்யும் பொருளினும் யாதுமக்குச்
நெ சிறந்தன மாத லறிந்தனி ராயி
னீனிரு முந்நீர் வளிகலன் வெளவலி
னுள்ளினைக் கழிந்தோர் போற லல்லதை
கேள்பெருந் தகையோ டெவன்பல மொழிகுவ
நாளுங் கோண்மீன் றகைத்தலுந் தகைமே ;
அ0 கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபிற்
புல்லென்ற களம்போலப் புலம்புகொண் டமைவாளோ
கஉ ஆன்பவர் கலக்குற வலிபெற்ற நாடுபோற்
பாழ்பட்ட முகத்தோடு பைதல்கொண் டமைவாளோ
கசு ஓரா வைகலுட் டாமரைப் பொய்கையு
னீர்நீத்த மலர்போல நீ நீப்பின் வாழ்வாளோ ;
ஏனவாங்கு ;
கஎ பொய்ந்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்
டெங்காளோ நெடுந்தகாய் நீ செல்வ
தங்காள்கொண் டிறக்குமிவ ளரும்பெற லுயிரே.

இது தலைமகன் பொருள்வயிற் பிரிவலெனக் கேட்டதோழி தான் ஆற்றாளாய் நீர் செய்யும் பொருளினும் யாம் உமக்குச் சிறந்தேமென்பது நும் உள்ளத்து உளதெனின் நும்மை நாளும் புள்ளும் விலக்குமெனவும், இவள் பிரிந்திருப்பார் இருக்குமாறு இருப்பாளல்லள், பிரிந்த அன்றே இறந்து படுவளெனவுஞ் சொல்லிச் செலவழுங்குவித்தது.

இதன்பொருள்

(உ) பாஅ லஞ்செவிப் பணைத்தாண் மாநிரை
(நு) மாஅல் யானையொடு மறவர் மயங்கித்

க. தலைவரும் விழுமங் கிலை யெடுத்துரைத்தற்கு, இச்செய்யுள் மேற்கோள். தொல். அகத். சூ. சஉ. 'தலைவரும்' இளம்.

உ. உயிரளபெடைக்கு (அ) "பாஅலஞ்செவி .....மாஅல் யானை.....மயங்கி" என்பது மேற்கோள்; தொல். செய். சூ. கஎ. பே. (ஆ) கலிப்பாவிற் கட்டளையடிக்கண் நேரீற்றியற் சீரிரண்டும் வாராவென விலக்கியதனால் அல்லனவற்றுக்கண் வருமென்பதற்கு 'பாஅ லஞ்செவிப் பணைதாண் மாநிரை' என்பது மேற்கோள். தொல். செய். சூ. உஙி. பே.

ங. (அ) "மாஅல்யானை.....மயங்குருஞ்சுரம்" என்பது கெய்தென்னும் வினையெச்சம் காரணகாரியப்பொருட்டாய்த் தனக்குரியவினைமுதலா

தூறதர் பட்ட வாறுமயங் (க)கீருஞ்சுர
மிறந்துநீர் செய்யும் பொருளினும் (உ) * யாதுமக்குச்
சிறந்தன மாதல றிந்தனி ராயி
(ங) னீனிரு முந்நீர் வளிகலன் வெளவலி
னுள்வினைக் கழிந்தோர் போற லல்லதை

னன்றிப் பிறவினைமுதலான் முடிந்ததற்கு மேற்கோள். தொல் வினை. சூ. ஈச. நச். இ - வி. நூலார், இதனை (ஆ) செய்தென்னும் வினையெச்ச விகுதியாகிய உகரம் கடதறக்களையூர்ந்து இயல்பாய் நிற்றலே யன்றி வேறு சிலவற்றை யூர்ந்து இகரமாய்த் திரிந்தும் நிற்குமென்றுகூறிச் செயவென்னும்அகரவீறு செய்தென்னும் உகர வீறாய்த் திரிந்து நிற்றற்கும், (இ) காரண காரியப்பொருட்டாய் இறந்த கால முணர்த்துஞ்செயவெனெச்சம் செய்தெனெச்சமாய்த் திரிந்து நின்று பிறவினை கொள்ளுதற்கும் (இ - வி. சூ. உசஈ, உசஅ.) மேற்கோள் காட்டினர். (ஈ) "மானதர் மயங்கிய மலைமுதற் சிறுநெறி" நாற். சூ. ககஈ மேற். (உ) "சேந்தெரி பரந்த பாலையிற் புகுந்து சென்னெறி சிறிதுந்தோன்றுமற், காந்தெரி கதிரோனெழுதிசை தெற்கு வடக்குமேற்கெல்லிகா ணுமன், மாந்தரு மாவுந் திசைதடு மாறி" என்பவை ஒப்புநோக்கற்பாலன.

க "அத்த, மிறந்துசெய் பொருளு மின்பந் தருமெனி, னிளமையிற் சிறந்த வுளமையுமில்லை, யிளமை கழிந்த பின்னை வளமை, காமந் தருதலு மின்றே" நற். கஉசு : சு-கo.

உ. (அ) சிறப் பென்பதற்கு இன்றியமையாமை யென்று பொருள் கூறி அதற்கு "யாதுமக்குச் சிறந்தன மாதலறிந்தனி ராயின்" என்பதை (தொல். வேற். சூ. கச. 'அதற்கு வினை')மேற்கோள் காட்டினர். தெய். (ஆ) கலி. சஉ: சு-சூ. அடிகளும் அவற்றின் உரையும் இங்கே கருதற் பாலன.

ங. (அ) "நளியிரு முந்நீர் வளிகலன் வெளவ" மணி. ககூ. கஙூ. (ஆ) "கீந்ததே ஆழ்கலத்தன்ன கலி" நாலடி. கஉ. (இ) "கலங் கவிழ்த் தல்லலுற்றாள்" (ஈ) "மல்லன்மாக் கடலிடைக், கல்லெனக் கலங்கவிழ்த், தல்லலுற் றழுங்கிய, செல்வன்" (உ) "ஆழ்கல மாந்தர் போல வணிகர ழுங்கிற்றன்றே" (ஊ) "பண்ணூர் களிறேபோற் பாயோங் குயர்நாவாய், கண்ணூர் கடன்மண்டிக் காற்றிற் கவிழுங் கான், மண்ணூர் மணிப்பூணெய் மக்க ளுறந்தின்ப, நண்ணூ ரகத்தி ணுங்கா மடியன்றே." சீவக. ஙூஉ; இஎஉ; ககசுஙூ; உஎகூங. (எ) "நாவாய் கவிழ்த்த நாய்கண் போல, வோவா வுவலமொடு" பெருங். (உ) க : சஎ - அ. (ஏ) "கலங்கவிழ்த்த நாய்கண்போற்

(பிரதிபேதம்) * யாமுமக்கு.

கேள்பெருந் தகையோ டெவ்வம்பல மொழிகுவ
நாளுநங் கோண்மீன் றகைத்தலுந் தகைமே

எ - து: தத்தம் பகுதிகளையும் அழகிய செவிகளையும் பெருமையை யுடைத்தாகிய தாள்களையும் மதத்தாலுள்ள மயக்கத்தினையுமுடைய யானைத் திரள்களோடே ஒழிந்த விலங்கின் திரள்களும் மறவரும் மயங்குகையினாலே தாறுகளெல்லாம் வழிப்பட்டுப் பழையவழிகள் மயங்கின அரியகாட்டைக் கடந்து நீர் (க) தேடும்பொருளினுங்காட்டில் யாங்கள் உமக்குச் சிறந்தே மாதலை நீரே அறிந்தீராயின், இனி யாங்கள் நீண்ட பெரிதாகிய கடலிலே காற்று *மரக்கலத்தைச் சிதறஅடித்துவிடுகையினாலே தாம் எடுத்துக்கொண்ட முயற்சி நிமித்தமாக நெஞ்சழிந்தோரைப்போலே நெஞ்சழிந்திருக்கும தல்லது நின்னோடு எங்ஙனம் பலவார்த்தைகளைக் கூறுவோம்? யாம் அங்ஙனம் இருக்கவும் நின்னை நாண்மீனும் மனத்தாற் குறித்துக்கொள்ளப் படும் புள்ளுந் தகைத்தலையுஞ் செய்யும். நெஞ்சகாய்! இன்னும் யாங் கூறுகின்றதனைக்கேள்; எ - று.

மயங்கியென்னுஞ் செய்தெனெச்சம் "அம்மூக்கிளவி" (உ) என்னுஞ் †சூத்திரத்திற் பிறவினை கொள்ளுமெனக் கூறினும். அதனான் உணர்க. தன்மை என்றது (ங) ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங் கெட்டு நின்றது. குறித்துக் கொள்ளப்படுதலிற் கோளென்றது ஆகுபெயர்.

இதனுட் குறிஞ்சிக்குரிய இறைச்சியாற் காட்டின்கொடுமை கூறிச்செல வழுங்குவித்தலின், அது திணைப்பொருட்கு உபகாரப்பட்டு நின்றவாறுணர்க.

இனி '.நாளுநங் கொண்மின் றகைத்தலுந் தகையேமும்" என்றபாடத் திற்கு நாளையும் இன்னாளென்று குறியும், அப்பொழுதும் தகைத்தலை யுஞ் செய்யேமென்க.

போறலல்லதையெனவே, தோழிக்கு இடுக்கண் பிறந்தது.

இது தலை.

கலங்குமென் றுயர்கண்டும்".....(ஐ) "தேவர்.....இரங்கினர் கவற்சி யெய்திப், புணைவிழச் சலதி யாழ்ந்து புலம்புகொண் மாக்க ளேபோல்" (ஒ) "மதலை யிற்றுழி நாய்கர்போற் றுயர்க் கடன் மறிகின்றூர்" (ஓ) "உம்பர்க டாமு முடன்றளர் வுற்றூர் தம்பம தான தடம்புணை தாழ,வம்புதி தன்னி லழுந்திவார்போல்"(ஔ)"அவுணர்க ளுலந்து சிந்தினர், கலர்ம்பகிவுற்றிடக் கடலுற்றூர்கள்போல்." கந்த.மேருப்.கக. மோனீங்கு. உ; இந்திரன் கயிலை. எ. யுத்தகாண்டம், நகர்புகு. நூஉ.

க. பொருள்தேடுதலைப் பொருள் செய்தலென்பது மரபு: (அ) "பொருள் செய்வார்க்கு" கலி. கச: கச. (ஆ)"செய்க பொருளை" குறள். எடுக. (இ) "செய்க பொருள்யாரும்" நீலக. சகஎ.

உ. தொல். வினை. சூ. நஉ. ஙூ. தொல். வினை. சூ. சக. உரைபார்க்க.

(பிரதிபேதம்) * கலத்தை. † சூத்திரத்தால்.

க0. (க) கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபிற்
புல்லென்ற களம்போலப் புலம்புகொண் டமைவாளோ

எ - து: கல்லென்னும் ஓசை உண்டாக அழகுபெற்ற திருவிழா வழிப்படுத்திவிட்ட பிற்றைநாட் பொலிவழிந்த இடம் போலத் தனிமை கொண்டு ஆற்றியிருப்பாளொருத்தியோ?

கஉ (உ) ஆள்பவர் கலக்குற வகலெற்ற நாடுபோற்
பாழ்பட்ட முகத்தோடு பைதல்கொண் டமைவாளோ

க. (அ) "அரு அ யாண ரகன்றலைப் பேரூர்ச், சாறுகழி வழிநாட் சோறு நசை யுறுது, வேறு புல முன்னிய விரகறி பொருந" பொருந. க-ங. (ஆ) "காதல ருழைய ராகப் பெரி துவந்து, சாறுகொ ளுரிச் புகல்வேன், மன்ற.....புல்லென், றலப்பேன் றேழியவ ரகன்ற ஞான்றே" (இ) "விழவுமேம் பட்டவென் னலனே... .....தண்ணந் துறைவனெடு கண்மா றின்றே" குறுந். சக, கஉடு. (ஈ) "முழவொலி முந்நீர் முழுதுடனுண்டார், விழவூரிற் கூத்தேபோல் வீந்தவிதல் கண்டும்" பழமொழி. நகசஙு.

(உ)'ஒத்துமூன் றுகு மொத்தா ழிசையே' என்னும் தேவபாணி விதிச் சூத்திரத்தின் விசேட வுரையின் கண் இவை பொருள் ஒக்குமெனவே முன்னே அகநிலையொத்தாழிசைக்கண்வரும் இடைநிலைப் பாட்டிற் பொருளொவ்வாது வருதலும் சிறுபான்மை யுண்டென்று கூறி, "கல்லெனக் கவின்பெற்ற.....புலம்புகொண் டமைவாளோ" என இடத்தியல் பொருளொழிய இடப்பொருளோடுவமங் கூறினன், "ஓரிராவைகலுட்..... .....நீப்பின் வாழ்வாளோ" என இடப் பொருளொழிய இடத்தியல் பொருளோடு உவமங் கூறின மையின் வேறுபட்டன" என்பர் பே. தொல். செய். சூ. கசஉ. (ஊ) கல்லென்பது ஓசைப்பொருண்மேல் வரு மென்பதற்கு, (நன். இடை.சூ.உ.)மயிலைநாதரும்.(எ)எனவென்னிளவி இசைப்பொருண்மை குறித்து வருமென்பதற்கு, (தொல். இடை. சூ. க0.) தெய்வச்சிலை யாரும் 'கல்லெனக்...படித்தபின்' என்பதை மேற்கோள்காட்டினர்.

உ. (அ)"அலவுற்றுக் குடிகூவவாறின்றிப் பொருள்வெஃகிக்,கொலையஞ்சா வினைவராற் ,கோல்கோடி யவனிழ, லுலகுபோ லுலறிய வுயர்மர வெஞ்சுரம்" கலி. க0. ங-எ. (ஆ) "கொள்பொருள் வெஃகிக்குடியலைக் கும் வேந்தனும்.....மழையருக்குங் கோள்" தீரிகடுகம். ஙo. (இ) "முறையி லரசனுடல்கூர்ந் தன்று" முது. அக. (ஈ) "கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி, வேத்திய லிழந்த வியனிலம் போல, ...தன்மையிற் குன்றி" சில. கக : சுo - சுங. (உ) 'ஆள்பவர் கலக்குறு மயங்கிய நன்னாட்டு' மணி. உசு : கo ச. (ஊ) "பழிபடா மன்னவன் படைத்த நாட்டினூஉங், கழிவதென் காரண மறிஞ கூறென்றான்" கம்ப. தாட. உo. என்பவை ஒப்பு நோக்கற் பாலன.

எ - து: நாட்டை ஆளுகின்ற அரசர் தாம் பின்பு கலக்கமுறும்படி, அவரால் அலைத்தலைப்பெற்றதாடி பாழ்பட்டாற்போல அழகு கெட்ட முகத் தோடே வருத்தத்தைக்கொண்டு ஆற்றியிருப்பாளொருத்தியோ? எ - று.

கச (க) ஒரிரா வைகளுட் டாமரைப் பொய்கையு
ணீர்நீத்த மலர்போல நீ நீப்பின் வாழ்வாளோ

எ - து: ஓர் இராப்பொழுதிடத்துத் தாமரையையுடைய பொய்கையுள் நீரால் நீக்கப்பட்டமலர் அவ்விராக்கால முழுவதும் வாடாமற்கிடந்தாற் போல நீ பிரிவை யாயின் ஓர் இராப் பொழுதும் உயிர் கொண்டு வாழ்வா ளொருத்தியோ? எ - று.

ஓகாரம் மூன்றும், எதிர்மறை.

களமும் நாடும் பூவும், பின்னும் விழவாலும் அரசனாலும் நீராலும் பழைய பொலிவு பெறும். அவைபோலன்றி இவள் நீ நீத்தபொழுதே இறந்துபடுவ * ளென்றதனால், தலைவிக்குக் கையாறு நிகழுமென்றாள்.

இவை மூன்றும், தாழிசை.

எனவாங்கு

எ - து: என்று யாம் நினக்குச சொல்லாநிற்க; எ - று.

ஆங்கு அசை; * அசசுரத்தை யெனினுமாம்.

இது தனிசசொல்.

களபொய்ந்நல்கல் (உ) † புரிந்தனை புறந்தாரல் கைவிட்
டெங்காளோ நெடுந்தகாய் நீ செல்வ
தந்நாள்கொண் டிறக்குமிவ ளரும்பெற லுயிரே

(எ) 'பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்' அரசர் பிரிவுறென்னு மிடத்து, 'பிழைத்தது' என்பதற்கு முன்னர் ஆள்பவர் கலக்குறுத்த அலை பெற்று நெறிமுறைமை தப்பிய அந்நாடு என இவ்வடிப் பொருளை உட்கொண்டு உரையிட்டிருத்தல் ஈண்டறியற் பாலது. தொல். அகத். சூ. உஅ. நச்.

க. உடன்சேறல் செய்கையொ டன்னவை பிறவு மடம்பட வந்த தோழிக்கண்ணும் தலைவன் கூற்று நிகழுமென்று கூறி, "பாலஞ் செலவியென்னும் பாலைக் கலியுள் 'ஒரிராவைகலு..... ...நீநீப்பின் வாழ்வாளோ' எனவும், 'அந்நாள்கொண் டிறக்குமிவ ளரும்பெற லுயிரே' எனவும் உடன் கொண்டு சென்மினெனத் தோழி கூறியது கேட்ட தலைவன் இவளை உடன் கொண்டு போதல் எல்லாவாற்றா னும் முறைமையன் றென்று தோழிக்குக் கூறுவனவும் நெஞ்சிற்குக் கூறுவனவும் பிறவுங் கொள்க" என்பர், நச். தொல். கற். சூ. இ.

உ. (அ) 'வீனை வெஃகி நீ செலின் வீடு மிவளுயிர்' கலி. கo: உக. (ஆ)

(பிரதிபேதம்) * என்றலின், இதனால் † புரிந்தனை.

எ - து: (க) நெடுந்தகாய்! பொய்யே இவளுக்கு அருளுதலை விரும்பிப் பாதுகாத்தலைக் கைவிட்டு நீ நயந்த அச்சுரத்திலே செல்வது † எக்காளிலோ அந்நாள் இவளுடைய பெறுதற்கரிய உயிரைக் கொண்டுபோம்; எ - று.

புறப்படல் கைவிட்டு என்ற பாடத்திற்குக் கைவிட்டுப் புறப்படலென்க.

இதனால், தலைவற்கு இழிவு பிறந்தது.

(உ) தாழிசையிற் கூறிய எனையுவமங்கள் நிணைப்பொருட்கு உவமையாய் நின்றன.

"பிரியுங் காலை யெதிர்நின்று சாற்றிய, மரபுடை யெதிரு மூளப் படப் பிறவும்" (ங) என்றதனால் புரிந்தனவெனை இறப்பும் இறக்குமென எதிரும் மரபிற் பிறழாமல் வந்தவாறுணர்க.

இது சுரிதகம்.

இவ்வாறு ஒன்பதடித்தரவும் இறுமைக்கு எல்லை கூறிய ஈரடித்தாழிசையும் பொருள்பெற்ற தனிச்சொல்லும் ஆசிரியத்திற்கு உரித்தென்ற மூவடிச் சிறுமையான் வந்த சுரிதகமும் பெற்று வந்த ஒத்தாழிசைக்கலி. (ச)

"நின்னின், நிமைப்புவரைவாழாண் மடவோள்" கலி. உக : கஉ-ங. என்பவையும் (இ) "செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின், வல்வரவு வாழ்வார்க்குரை" என்னும் குறளும் 'தலைமகளை யொழித்து எனக்கென்ருள், தானவளென்னும் வேற்றுமையின்மையின். அக்கால மெல்லா மாற்றியிருந்து அவ்வரவு காண வல்லளல்லள், பிரிந்த பொழுதே இறந்து படுமென்பதாம்' என்னும் அதன்விசேட வுரையும் இங்கே கருதற் பாலன. தூறல். ககடுக. பரி.

க. நெடுந்தகை யென்பதற்கு, பெரிய மேம்பாட்டாளனென்றும் பெரிய நிலையையுடையவனென்றும் அளத்தற்கரிய தன்மையையுடையவனென்றும் புறப்பொருள் வெண்பாமாலை யுரையாசிரியர் பொருள்கூறுவர்.

உ. "உள்ளுறை யுவம மேனை யுவமமெனத், தள்ளா தாகுந் நிணையுணர் வகையே" என்னுஞ் சூத்திரத் துரைக்கண், "இனி, தள்ளாதென்ற தனுனே 'பாதலஞ்செலி' என்னும் பாலைக்கலியுள் தாழிசை மூன்றும் ஏனை யுவமமாய் நின்று கருப்பொருளோடு கூடிச் சிறப்பி யாது தானே நிணைப்பொருள் தோற்றுவித்து நிற்பனபோல் வனவும்.....அமைக்க" என்பர், கச். தோல். அகத். சூ. சகஉ,ச்.

ங. தோல். கற். சூ. கூ. நச்சினார்க்கினியருரையில், "பொய்ந்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட், டெந்நாளோ நெடுந்தகாய் நீ செல்வு, தந்நாள்கொண் டிறக்குமிவ ளரும்பெற னுயிரே" என்று மேற் கோளோடு இக்குறிப்பும் உள்ளது.

(பிரதிபேதம்) * விரும்பினையாய்ப். † எக்காளிலே.

(சு) (க) மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் (உ) செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்த
முண்ணீர் வறப்பப் புலர்வாடு நாணிற்குத்
(ரு) தண்ணீர் பெறூஉத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்ரு
(ரூ)லென்னீ ரறியா தீர் போல விவை*கூறி
னின்னீர வல்ல நெடுந்தகா யெம்மையு
மன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு

க. (அ) தலைவரும் விழுமமென்னுஞ் சூத்திரத்து, போக்கற்கண்ணு மென்றிருப்பதனைப் பேர்த்தற் கண்ணு மெனப்பாடங்கொண்டு பெயரென்பது கூறுதற் கண்ணுமெனப் பொருள் கூறி அதற்கும், (ஆ) ஒரு பொருணுதலிய வென்னுஞ் சூத்திரத்து, கலிவெண்பாட்டு அல்லது வெண் கலிப்பாட்டு வெண்டளையான் வந்து ஈற்றடி முச்சீரான் இறு மென்பதற்கும் (தொல். அகத் சூ. ஈஉ; செய். சூ. கசசு.) இளம் பூரணரும், (இ) தலைவி கற்பினுட் பிரிவாற்றாது எம்மையும் உடன் கொண்டு சென்மினென்பதற்கு (தொல். அகத் சூ. சடு.) நச்சினார்க் கினியரும், ௧(ஈ) கலிவெண் பாட்டுப் பதினேரடியான் ஒரு பொருணுதலி வந்ததற்கு (தொல். செய். சூ. கடுஉ.) பே; நச். இருவரும் இச் செய்யுளே மேற்கோள் காட்டினர். (உ) சிலப். பதிக முகவுரையில் நீரின்மை நிலையே பாலை நிலத்திற்குச் சிறப்பு என்பதற்கும், (ஊ) சிலப். கக: எள 'வரிமாற்றிரங்கிய கரிபுறக் கிடக்கையும்' என்பதன் இரண்டா முரையில், திரங்கிய வென்பதற்கு விலங்கு சுவைத்தலால் திரங்கிய வென்றுமா மென்பதற்கும் 'மரையா மரல்கவர' என்ற பகுதியை மேற்கோள் காட்டினர். அடியார்க்கு நல்லார்.
(எ) மரை மரல் தின்னுதல் "வரிமரற்பாவை மரையேறு கறிக்கும்" (ஏ) மரை ஆவெனப்படுதல்: "அண்ணன் மரையா" பதிற். உகூ. (ஐ) "கன்றுடை மரையா" புறம். உகஎ.

உ. "பலரு மெய்த வாளிமெய் படப்படப் பனித்துநாப், புலர நொந்து கங்கை மைந்தனீதயமும் புழுங்கினன்" வில்லி. பத்தாம். கஉ.

ரு. "ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி, பன்மைக் காகு மிடனுமா ருண்டே" என்பது பன்மை சுட்டிய பெயர்ச்சொல் ஒருமைக்குப் பொருந்தி நிற்கு மிடமுமுண்டென்னும் பொருளே அருத்தா பத்தி யாற்றந்த தென்று கூறி, (அ) "என்னீரறியாதீர் போல விவை கூறின்"

(பிரதிபேதம்) * கூறல்,

கo (க) துன்பந் துணையாக நாடி னதுவல்ல
இன்பமு மூண்டோ வெமக்கு.

இது தலைவன் செலவுக்குறிப்பறிந்து நீர் செல்லுங் கடுஞ்சுரத்துத் துன்பத்திற்குத் துணையாக எம்மையும் உடன்கொண்டு செல்மினெனத் தலைவி கூறியது.

இதன்பொருள்

காடு, தற்றத்தையுடைய மறவர்தம்முடைய மூட்டுவாயை யுடைய அம்புகள், மலைவளர்ந்து போதற்கரிய காட்டிடத்து அரிய வழியைப் போவார்மேலே அழுந்துகையினாலே, உடலஞ்சுருங்கி உள்ளுண்டாகிய நீர் வற்றுகையினாலே உலர்ச்சியாலே வாடுகின்ற நாவிற்கு, மரையா மரலைத் தின்னும்படியாக மாரி வறக்கையினாலே தண்ணீர் பெறுத மனத் தமோற்றத்தையுடைய வருத்தத்தை அவருடைய கண்ணீர் வீழ்த்து அந் நாவினை நனைத்துப் போக்குங் கடுமையை யுடையவென்று நீர் உடன் சேறலை மறுத்துக் கூறினால், யான் உயிர்தாங்கியிருத்தலாற்றாது இறந்து படுதலை அறியாதிருந்தீர்போல உடன்சேறலை மறுத்த இம்மொழிகளைக் கூறுதலாற் பெற்றதென்? நெடுந்தகாய்! இக்கூற்று நினக்கு உரிய நன்றுடைய நீர்மைகளை உடைய அல்ல! இனி நீ எம்மிடத்து அன்பு நீங்கப் பிரி தலைக் கருதாதே அவ்வாற்றிடைத் துன்பத்திற்கு எம்மையுந் துணையாகக் கொண்டு நும்மொடு போதலை ஆராயின் அதுவல்லது எமக்கு வேறோர் இன்பமும் உண்டோ? எ - று.

இதனால், தலைவிக்குக் கைம்மிகலும் தலைவற்கு இடுக்கணும் பிறந்தன.

என ஒருவனைப் பன்மையாற கூறிப் பின்னர் "நின்னீரல்ல நெடுந்தகாய்" என அவனை ஒருமையாற் கூறுவன போல்வனவும் இதனைத் தொல்க வென்பர், நச்; தொல். எச்ச. சூ. கூடு. (ஆ)முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி ஆற்றுப்படை யல்லாத வழியும் பலரில் வழியும் பன்மையொடு மயங்கி வருமென்பதற்கு (தொல். எச்ச. சூ. கூக. 'முன்னிலை') இதனை மேற்கோள் காட்டுவர் தெய். (இ) உயர்வு சிறப்புக்களுள் (ஒன்றின்) 'பால் வழுவமைதி யென அமைப்பர் இ - வி. நூலார்; இ - வி. சூ. கூoo. (ஈ) "எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணையுந், தேரான் பிறனில் புகல்" என்னும் (கசஉ) குறளின் விசேடவுரையில் இதனை உயர்த்தற்கட் பன்மை யொருமை மயங்கி வருதற்கு மேற்கோள் காட்டுவர்; பரிமே. பேராசிரியரும் "நின் மொழி யென்று உம்மையே யென்றது 'என்னீரறியாதீர்... நெடுந்தகாய்' என்பது போல ஈண்டும் பன்மையு மொருமையு மயங்கி நின்றன" என்பர்; கோவையாருரை. கஉடி.

க. "துன்பத்திற்கி யாமே துணையாவார் நாமுடைய, நெஞ்சந் துணையல் வழி" குறள். கஉகூ.

"பெற்றமுமெருமையு மரையுமாவே"(க)என்றதனுள் மரையாவென்றார்.

இதன்கண்ணே, இவள் தன்(உ)பெண்டன்மையாற் கூறத்தகாதது கூறக் கேட்ட யாம், உலக வொழுக்கத்தை அறிந்து, இவளே உடன்கொண்டு செல்வே மாயின், இவள் தண்ணீர் பெருத அருந்துயரம் நமக்கு மிக்க வருத்தத்தைத் தருமாகலின், இவடன்னே உடன்கொண்டு சேறல் எவ்வாற்றானும் தகாதென் றும்,யாம் அன்புபெருகுமாறு சூழ்ந்த காரியத்தினே இவள் அன்பு*அருகும்படி சூழ்ந்தேமாகக்கருதி † இதற்குமாறு கூறினளென்றும் உட்கொண்டு, இனி இவளே ஆற்றுவித்துப் பிரிவேமெனச் செலவமுங்கினமை தோன்ற நிற்றலின் வேறுமொரு பொருள் தோன்றி நின்றது.

இஃது "ஒருபொருணுதலிய வெள்ளடி யியலாற், றிரிவின்றி ‡ வருவது கலி வெண் பாட்டே" (ங) என்பதனுற் பாட்டிற் பொருளோடே வேறும் ஒருபொருள் தோன்றி நின்று பதினேரடியான் வந்த கட்டளைக்கலி வெண் பாட்டு. வேறும் ஒரு பொருள் || தோன்ற நிற்றல் எனைப் பாக்கட்குஞ் சிறி தளவேனும் பொருளாற் செய்யுள் வேறுபட்டவரும் விதியின்மையின் ஆண்டு ÷ அவற்றாராய்ச்சியின்றுயிற்று. இது வெண்பாவாய் வருதலிற் குறித்த பொருளே மறையாது செப்பிக் கூறவேண்டும். இது குறித்த பொருளை மறைத்து வந்தமையானும் தனக்கு உரிய வெண்டளையான் வந்தமையானுங் கலிவெண்பாட்டாயிற்று. "நெடுவெண் பாட்டே மூன்றா லடித்தே, குறு வெண் ∴பாட்டி னளவெழு சீரே."(ச) எனவே,(ரு) நெடுவெண்பாப் பன்னீரடி யின்இகவாவென்றலின் இதற்குப் பன்னீரடி பெருமையென்று கொண்டார். []இக்கலித்தொகையின் இவ்விலக்கணம் பெற்றுவரும் பாட்டு எட்டுள. அவை வந்தவழிக்கூறுதும். பன்னீ டியின் இகந்துவருங் கலிவெண்பாட்டுக்களுக்கும் அவை வந்துழி அவற்றவற்றிலக்கணங் கூறுதும்.

தலைவி உடன் கொண்டுபோவெனக் கூறுதல் "ம-புநீலை திரியா மாட் டிய" என்னும் (சு) அகத்திணையியற் சூத்திரத்து அமைத்தாம்.

இதனைத் தோழி கூற்றாக்கிக் கூறின், காடு கடுமையவென்று உடன் சேறலை மறுத்துக் கூறினுந் தலைவி இறந்துபடும், அவள் இறந்துபடுதலை அறியாதிருந்தீர்போல இவை கூறலென்னென்க. (ங)

க. தொல். மர. சூ. கூ. இச்சூத்திரவுரையில் மடையென்பது ஆவென்னும் பெயர் பெற்றுவருதற்கு 'மரையா மரல்கவ மாரி வறப்ப' என்பதை மேற்கோள் காட்டினர். பே; நச்.

உ. கலி. கஅ-ஆம் செய்யுளின் உரை யிறுதிபார்க்க.

ஊ. தொல். செய். சூ. கஙிசு. பார்க்க. சு. தொல். செய். சூ. கஙிஅ.

ஙி. 'மூன்றான்கடியின் இ[ற](க)ந்துவருதலான், நெடுவெண்பாட்டாகாது கலிவெண்பாட் டாத லுணர்க' என்பது சீல. கூ. உரையிறுதி.

ச. தொல். அகத். சூ. சஙி.

(பிரதிபேதம்) * அறும்படி, † இறக்குபாறு, ‡ நடப்பது, || தோன்ற, ÷ அவை ஆரா ய்ச்சி, ∴ பாட்டிற்களவு. [] இத்தொகையின்.

(எ) (க)வேனி லுழந்த வறிதுயங் கோங்கலிறு
வானீங்கு வைப்பின் வழங்காத்தேர் நீர்த்தவா அங்
கானங் கடத்தி லெனக்கேட்பின் யாஞென்
றுசாவுகோ வைய சிறிது ;

ஙி நீயே, செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழநின்
கைபுனை வல்வின் ஞாணுளர் தீயே
இவட்கே, செய்வுறு மண்டில மையாப் பதுபோன்
மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே ;

சு நீயே, விளைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே
இவட்கே, சுணைமா னீலங் காரெதிர் பவைபோ
லினைநோக் குண்கண் ணீர்நில் லாவே ;

கஙி நீயே, புலம்பி லுள்ளமொடு பொருள்வயிற் செலீஇய
வலம்படு திகிரி வாய்மீ வுதியே
இவட்கே, அலங்கிதழ்க் கோடல் வீயுகு பவைபோ
லிலங்கே செல்வலோ யிறையூ ரும்மே ;

கள எனநின் ;
சென்னவை யரவத்து மினையவ ணீநீப்பிற்
றண்ணலங் கடைகொளப் பிதலின் மற்றிவ
ணின்னுயிர் தருதலு மாற்றுமோ
முன்னிய தேஎத்து மூயன்றுசெய் பொருளே.

இது, பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகற்கு நீர் பிரிகின்றீரென்று யாங்கூறத் தலைவி கேட்பின் அவட்கு அக்காலத்து நிகழ்வனவற்றை நும்மோடு ஆராயிவதுடையேன் ; நீர் செயியும்போருள் இவளுயிரையுந் தருகிற்குமோ எனச் செலவழுங்கக் கூறியது.

இஃது "உடன்சேறல் செயிகையோ டுன்னலை பிறவு - மிடம் பட வந்த தோழி கண்ணும்" (உ) என்பதனுட் செயிகை கூறுகின்றது.

க. தேர்நிலை யுரைத்த லென்பதற்கு ஆராய்ச்சி நிலையாற் கூறுதலென்று பொருள் கூறி, அதற்கு (தொல். கற். சூ. நஉ. 'காமநிலை') இச்செய்யுளை மேற்கோள் காட்டுவர், இளம்பூரணர். பேராசிரியர். தொல். செய். கஙிஙி-ம் சூத்திரவுரையில் "வேனிலுழந்த வறிதுயங் கோங்கலி றென்னும்பாட்டு, தரவும்போக்கும் பாட்டிடை மிடைந்து ஐஞ்சீரடுக்கி வந்தது, இதனுள் தரவடி நான்கும் வெண்பாவாயினும் அச்செய்யுள முழுவதும் வெண்பா வண்ணமயிற் கொச்சகமாயிற்று." என்பர்.

உ. தொல். கற். சூ. இ. நச். இதனுரையில் 'செய்கைகளாவன : ஆலவன் கைபுனை வல்வில் ஞாணுளர்ந்த வழி இவள் மையில் வாண்முகம் பசப்

(க்) வேனி லுழந்த வறிதுயங் கோய்களிறு
வானீங்கு வூலப்பின் (உ)வழங்காத்தேர் நீர்க்கவா அங்
கானங் கடத்தி ரெனக்கேட்பின் (ங) யாஞென்
றுசாவுகோ வைய சிறிது

எ - து: முதுவேனிற் காலத்தாலே வருந்தின உடல் சிறிதாக வருந்தும் ஒய்ந்த களிறுகள் (சு)மழைநீங்குதற்குக்காரணமான கொடுமையையுடைய ஊர்களிலே தண்ணீருண்டற்கு (ஞ)ஊரப்படாத பேய்த்தேரைத் தண்ணீரென்று அவாவுங் காட்டை நீர் போவீரென்று யான் கூறுதலைக் கேட்பின் நீர் செல்லுங்காலத்து அவட்கு நிகழ்வதொன்றை யான் சிறிது நும்மொடு உசாவுவேனே? எ - று.

இதனால், தலைவற்குச சூழ்ச்சிபிறந்தது.

இது தரவு.

ஞ (சு)நீயே, செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழநின்
கைபுனை வல்வின் * ஞாணுளர் தீயே

பூர்தலும் அவன் புனைமாண் மரீஇய அம்பு தெரிந்தவழி இவள் இனைநோக்குண்கண் நீர்நில்லாமையும் பிறவுமாம்' என இவ்வடிகள் உரை நடையாக அமைக்கப் பெற்றுள்ளன.

க. (அ)"யாஞே, நீர்மருங்கறியாது தேர்மருங்கோடி,யறுநீரம்பியி னெறிமுத லுணங்கு, மூள்ளுநர்ப் பனிக்கு மூக்கருங் கடத்திடை." அகம். உசு. (ஆ) 'வேனிலுழந்த வறிதுயங்கோய்களிறு' என்பது ஒய்தல் நுணுக்க மாகிய குறிப்புணர்த்து மென்பதற்கு (தொல். உரி. சூ. நச. சே; உசு. தெய்; ஈஉ. நச. இ - வி. சூ. உஅக. நன். உரி. சூ. கஅ. இரா.) மேற்.

உ. "வெண்ட ரங்கமென வீசுபேயிரத மிஞ்சு கானநெறி" வில்லி.

ஈ. உசாவென்பது சூழ்ச்சி யென்னும் பொருளில் வருதற்கு "யாஞென் றுசாவுகோ வைய சிறிது" என்பது மேற்கோள். தொல். உரி. சூ.இசு. 'உயாவே' தெய்.

சு. மழை நீங்குதற்குக் காரணமான கொடுமையென்றது (அ)மறவர் செய்யும் தகாக்கொலை முதலியவற்றை. (ஆ) பாண்டியன் கோவலனைக் கொன்றதனால் அவனுடு பன்னிராண்டு வற்கட முற்றதென்னும் செய்தியும் (இ) 'விண்பொயதனால் மழை விழாதொழியினும்' தே. என்பதும். ஈண்டுக் கருதத் தக்கன.

ஞ. "உருவில் பேஎ யூராத் தேரொடு" அகம். கூஎ.

கூ. யாழவென்பது முன்னிலை யசைச்சொல்லாய் வருதற்கு 'நீயே, செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழநின்.....ஞாணுளர்தீயே' என்பது மேற்கோள். நன். இடை. சூ. உஅ. மயிலை. வி. இரா. இ - வி. சூ. உஎசு.

(பிரதிபேதம்) * ஞாணுர்தீயே,

எ - து: ஐயனே, நீ *செய்கின்ற †காரியத்திடத்தே செல்லுதலே மனத்தான் நிகழ்த்துகையினாலே நின்னுடைய கையாலே எழுதி வழித்த வலிதாகிய வில்லினாலே தடவாநின்றாய்; எ - று.

யாழ், அசை.

உளர்தியென்னும் முன்னிலைவினை, விகாரத்தால் நீண்டது.

இவட்கே,(க)செய்வுறு (உ)†மண்டில (ங) மையாப் பதுபோன்
(ச) மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே

எ - து: இக்காலத்து இவளுக்கு மறுவறச்செய்தலுறுகின்றதொரு மதியிடத்தே மேகம் பரக்கின்ற தன்மைபோல மறுவில்லாத ஒளியையுடைய முகத்தே பசப்புப் பரவாநிற்கும்; எ - று.

செய்வுறு மண்டிலம், இல்பொருளுவமை.

க. (அ) "செய்வுறு ஈன்கலம்" (ஆ) "செய்வுறு பாவைக்கு" புறம். சு, உசாங: (இ) "செய்வுறு திவவின்" முருகு. கசo.

உ. "பனி கொண் மா மதி போற் பசப் பூரயான், தனிய னாவது தக்கதுவோ" சீவக. கஙிகo. என வருதலும் ஈண்டிக் கருதத்தக்கது.

ங. (அ) மையாத்த லென்பதற்கு மயங்கல் என்று (குறள். ககஉ.) பரிமேலழகர் பொருள் செய்திருக்கின்றனர். இச்சொல்லுக்கு மேகம்பரத்த லென்று இங்கே பொருள் செய்திருத்தலே நோக்கின் இது மை பாப்பது, மை பரப்பது என இருக்கவேண்டுமென்றுதோற்றுகிறது. அவ்வாறே ஒருபிரதியில் பேதமும் உள்ளது. ஆனாலும்(ஆ)"காண்மை யாத்த வெண்முகத்தை" (இ) "திருவுருத் தேசு நோக்கிச் செங்கதி ரொளிமையாக்கு, மொருபுடை" (ஈ) "மீனொளி மையாப்ப" (உ) "பரிதிமுன்னர் வெண்கதிரென மையாக்கும், பேறிருங் கிரணக்கற்றை" (ஊ) "வெய்யவற் கொளிமையாந்து, வேறுபட் டிருந்தசெந்தீ" என்னுமிடங்களிலும் மற்றும் பல விடங்களிலும் கச்சியப்ப முனிவர் இச்சொல்லை மழுங்குதலென்ற பொருளிற் பிரயோகித்திருத்தலாலும் இங்கு அப்பொருள்கொள்ளினும் ஒருவாறு பொருந்துமாதலாலும் மையாத்தலென்றே கொள்ளப்பட்டது.

ச. (அ) வாண்முகம் பசப்பூர்தல் கலி. கoo: கஅ. (ஆ) பசப்பு நிற வேறுபாட்டை யுணர்த்துதற்கு, 'மையில் வாண்முகம் பசப்பூரும்மே' என்பதும். (தொல். உரி. சூ. கக. சே. சூ. கo. ச்ச். இ - வி. சூ. உகo) (இ) இல்லென்கிளவி இன்மை செப்பு மிடத்து ஐகார ஆகாரங்களைப் பெறுது இயற்கையாய் வருதற்கு 'மையில் வாண்முகம்' என்பதும் தொல்.புள்ளி.சூ.எஎ.ஙச்.(ஈ)வாளென்பது ஒளியையுணர்த்துதற்கு, 'வாண்முகம்' என்பதும் தொல்.உரி. சூ.எக. சே. மேற்கோள்.

(பிரதிபேதம்) * செல்கின்ற, † மண்டலமைபாப்பதுபோல்,

கூ (க)நீயே, வினைமாண் (உ)காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் ழீஇய வம்பு தெரிதியே

எ - து: நீ தொழின் மாட்சிமைப்பட்ட * கைச்சரட்டை இறுகக்கட்டி நீ மருவிப்போர்ந்த புனைதன் மாட்சிமைப்பட்ட (கூ) அம்புகளைத் தெரியா நின்றாய்; எ - து.

" இவட்கே, சுனைமா (ச)ணீலங் காரெதிர் பன்வபோ
வினைநோக் குண்கண் ணீர்நில் லாவே

எ - து: இக்காலத்து இவளுக்குச் சுனையிடத்து மாட்சிமைப்பட்ட நீலம் மழையை எதிர்கொள்ளுமவை நீர் சொரியுமாறுபோல வருந்தும் பார்வையினையுடைய மையுண்கண் நீர்நில்லாவாய் வீழாநிற்கும்; எ - து.

கண், நீர் வீழுமென இடத்து நிகழ்பொருளின் றொழில் இடத்துமேல் நின்றது.

இனைநோக்கும் பாடம்.

க. (அ) "நீயே, வினைமாண்.....ணீர் நில்லாவே" என்னும் பகுதி கொச்சகக்கலியுள் இடைநிலைப் பாட்டுத் தாழிசை யின்றி வந்ததற்கும் (தொல். செய். சூ. கஉ0. பே.) (ஆ)"நீயே, வினைமாண்...தெரிதியே" என்னும் பகுதி சீர்மழுதுங் கூனுகிவருதல் அளவடிக்குரிய தென்புழிக் கலிப்பாவிற் கூன் வந்ததற்கும் (தொல். செய். சூ. சஎ. 'சீர்கூனுதல்'இள.) (இ)கொச்சகத்தில் தாழிசை தாழும் பட்ட வோசை யின்றி வந்ததற்கும். (தொல். செய். சூ. கஉ0. நச்.) மேற்கோள்.

உ. (அ) "வம்புகளை வறியாச் சுற்றமொ டம்புதெரிந்து" (ஆ) "விரற் றலைப் புட்டில் வீக்கி வெஞ்சிலை கணையோ டேந்தி" சீவக. உஉ0உ. (இ) "மூன்கைக், கார்விற் செறிநா ணெறிகைச்செறி கட்டி கட்டி" பேரிய. கண்ணப்ப. சு0. (ஈ) "கோதை தங்கு கரத்தில் வில்" (உ) "விரற்புனை கோதைவல் வில்லின் வல்லவர்" வில்லி. பதின் மூன்றும். உசு, உதிச. என்பவை ஈண்டறியற் பாலன.

கூ. அம்புகளை ஆராய்ந்து கைக்கொள்ளுதலை அம்புதெரித லென்றார்; இவ்வழக்கை, 'தெரிகணை நோக்கி' (கலி. கூசு: உஉ;) என்பதன் குறிப்பிற் காண்க.

ச. (அ) "கனை பெய னீலம்போற் கண்பனி கலுழ்பவால்" கலி. சஅ: கடி. (ஆ) "தண் கயம் பயந்த வண்காற் குவளை, மாரி மாமலர் பெயற் கேற் றன்ன, நீரொடு நிறைந்த பேரமர் மழைக்கண், பனிவா ரெவ்வம்" அகம். சுகடி.

(பிரதிபேதம்) * கைச்சாட்டை (என்று படித்தலுமாம்).

கஈ நீயே, * புலம்பி னுள்ளொரொடு பொருள்வயிற் † செலீஇய
வலம்படு திகிரி வாய்நீ வுதியே

எ - து: நீ பிரிகின்றேமென்கின்ற தனிமையில்லாத நெஞ்சத்தோடே பொருளைத் தேடற்குப்போக வெற்றியுண்டாகின்ற சக்கரத்தினது வாயைத் தகள்போகத் தடையாகின்றாய்; எ - று.

இவட்கே, அலங்கிதழ்க் (கு) கோடல் வீயுகு பவைபோ
லிலங்கே ரெல்வளை யிறையூ ரும்மே

எ - து: இக்காலத்து இவளுக்கு அசைகின்ற இதழினையுடைய கோடற்பூ ஊழ்த்து விழுகின்றவைபோல விளங்கும் அழகினையுடைய ஒளிபொருந்தின வளை இறையினின்றுங் கழலாகிற்கும்; எ - று.

இவை மூன்றும், தாழிசை.

கஎ எனநின்,

சென்னவை யரவத்து மீனெய வணீப்பிற்
றன்னலங் கடைகொளப் படுதலின் மற்றிவ
(உ) ளின்னுயிர் தருதலு மாற்றுமோ
மூன்னிய தேஎத்து மூயன்றுசெய் பொருளே

எ - து: நீ செல்கின்றது எமக்குக் குற்றத்தைச் ‡ செய்யுகின்றுடைய ஆசாரத்தும் இத்தன்மையளானவள், தன்னுடைய நலம் நீ நீங்குவையாயின் இறந்து படுங் காலத்தாலே கைக்கொள்ளப்படுகையினாலே நின்னை ஒன்றுவினவுகின்றேன்; நீ கருதின தேயத்துச்சென்று முயன்று தேடும் பொருள் இன்பந்தருதலேயன்றி இவள் இனிய ||உயிரையும் தருதலைச் செய்யுமோ?எ-று.

என அசை.

இதனால், தலைவற்கு அசைவு பிறந்தது.

எனநின், தனிச்சொல்; எஞ்சியது, சுரிதகம்.

க. கோடல்—வெண்காந்தள்; இது வளைக்கு உவமையாதல் (அ) "ஊழுறு கோடல்போ லெல்வளை யுகுபவால்" (ஆ) "ஊழுற்ற கோடல்வீ, யிதழ்சோருங் குலைபோல விறைநீவு வளையாட்கு" கலி: சஅ, கஉக. இதற்கு வளை உவமையாதல்: (இ) "வளையுடைந் தன்ன வள்ளிதழ்க் காந்தள்" மலை.நிகக. (ஈ) "உடைவளைகடுப்ப மலர்ந்தகாந்தள்" புறம்.கo.

உ. (அ) ஒது வதற்கண்ண லேபிரிந் தாலொண் மயிலையென்பு, மாது படைத்தினர் போலோதி வாரும் .....நீது படக்கொடி யாவிசெல் லூலுந் திருப்புகைக்கே" (ஆ) "சிறந்திடு கல்விகள் வேண்டுவ யாவையுந் தேர்ந்துபின்னை, நிறந்தமின் னுரென்பை யன்னுர்க ளாக வியற்றுதற் கோர், நிறந்தரு விஞ்சையுங் கற்றறி காணவுன் செல்வியையே" என ஒதற்பிரிவின்கண் இக்கருத்தி அமைக்கப் பெற்றிருத்தல் காண்க.

(பிரதிபேதம்) * புலம்பியனுளை, † செலீஇயர், ‡ செய்ய, || உயிரைத் தருதலையும்.

"தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து, மைஞ்சீ ரடுக்கியு மாறுமெய் பெற்றும், வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்" (க) * என்பதனுள் கூறுகி, நீயே இவட்கே என்னுஞ் சொற்கள் இடைநிலைப்பாட்டோடு கூடி ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பாட்டாயினும் அத்தரவு வெண்பாவாய், ஒழிந்தன வெண்பா அன்மையிற் கொச்சகமாயிற்று. (கூ)

(அ) நடுவிகந் தொரீஇ நயனில்லான் விணவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலி
னுறலுறு கமழ்கடாஅத் தொல்கிய வெழில்வேழம்
நு வறனுழு நாஞ்சில்போன் மருப்பூன்றி நிலஞ்சேர
விறன்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரஞ்
சொல்லா திறப்பத் துணிந்தனிர்க் கொருபொருள்
சொல்லுவ துடையேன் கேண்மின்மற் றறைஇய ;
கூ வீழுநர்க் கிறைச்சியாய் விரல்கவர் பிசைக்குங்கோ
லேழுநதம் பயன்கெட விடைநின்ற நரம்பறாஉம்
யாழினுங் நிலையில்லாப் பொருளையு நச்சுபவோ ;
கஉ 'மரீஇத்தாங் கொண்டாரைக் கொண்டக்காற் போலாது
பிரியுங்காற் பிறரெள்ளப் பீடின்றிப் புறமாறுந்
திருவினுங் நிலையில்லாப் பொருளையு நச்சுபவோ ;
கந புரைதவப் பயனெக்கார் தம்மாக்க முயல்வாரை
வரைவின்றிச் செறும்பொழுதிற் கண்ணோடா துயிர்வெளவு
மரைசினுங் நிலையில்லாப் பொருளையு நச்சுபவோ ;
' எனவாங்கு;
கஙூ நச்சல் கூடாது பெருமை விச்செல
வொழிதல் வேண்டுவல் சூழிற் பழியின்று
மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பித்
தன்னகர் விழைபக் கூடி
னின்னுறல் வியன்மார்ப வதுமனும் பொருளே.

இது சோல்லாது பிரியலுற்ற தலைவன் குறிப்பறிந்து தோழி பொருளது நிலையாமை கூறி † அவளோடு கூடிச் செல்கின்ற இல்வாழ்க்கைச் செலவே பொருளென அவன் செலவழுங்கக் கூறியது.

இதன் பொருள்.

க. தொல். செய். சூ. கஙுஙி.
(பிரதிபேதம்) * என்பதனுளி. † இவளொடு.

(அ) (க) நடுவிகந் தொரீஇ (உ) நயனில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலி
னுற்ளூறு (ங) கமழ் *கடாஅத் தொல்கிய வெழில்வேழம்
வறனுழு (ச) நாஞ்சில்போன் மருப்பூன்றி நிலஞ்சேர
(டு) விறன்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரஞ்
சொல்லா திறப்பத் துணிந்தனிர்க் கொருபொருள்
சொல்லுவ துடையேன் (சு) கேண்மின்மற் றறிய

ஏ - து: நடுவுநிலையைக்கைவிட்டு நீங்கி அருளில்லாத அமைச்சன் தன் †மனத்திற்கிடந்த காரியத்தை மனத்தினின் றும் தோற்றுவிக்க, அது கேட்டுக் கொடுந்தொழிலைச சூழ்ந்த அரசனது கொடுங்கோல் சுடுமாறுபோலப் பகலோன் கடுகிக் காய்கின்ற கிரணங்களைச் செலுத்திச்(ஏ)சினத்தாற்சுடுகையி

க. (அ) "அலவுற்றுக் குடிகூவ வாறின்றிப் பொருள் வெஃகிக், கொலை யஞ்சா வினைவராற் கோல்கோடி யவணிழ, லுலகுபோ லுலறிய வுயர்ம வெஞ்சுரம்" கலி. கo: இ-எ. (ஆ) "செம்மையி னிகந் தொரீஇ" கலி. கச. (இ) "அறனிலை திரியா வன்பி னவையத்துத், திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து, மெலிகோல் செய்தே ளுகை" புறம். எக. (ஈ) "முறைதெரிந்து செல்வர்க்கு நல்கூர்ந் தவர்க்கு, மிறைதிரியா னேரொக்கல் வேண்டும்." பழமொழி. உoசு. (உ) "உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமையுடக்கமி லுள்ளத்த ளுகி - நடக்கையி, லுளுளிய னல்லான்மேல் வைத்தல் குரங்கின் கைக். கொள்ளி கொடுத்து விடல்." பழமொழி. உoo.

உ. (அ) "பேதையோன் வினை வாங்க" கலி. உஎ. (ஆ) "வினைவாங்கி" திருவிளை. பன்றிக்குட்டிகளை. கஙூ.

ங. யானை மதம் கமழுமென்பதனை. கலி. உக:உ; 'கமழ் கடாஅத்து' என்பதன் குறிப்பாலுணர்க.

ச. (அ) "பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சில்" பெரும்பாண். ககக. (ஆ) "யானைத், தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து, நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள" புறம். ககங: (இ) "வெள்ளரி வெண் ணுஞ் சிலான் ஞால முழுவனபோ, லெல்லாக் களிறு நிலஞ் சேர்ந்த" களவழி. சo. (ஈ) "அலப்படை யினைய தூங்குவாய் நெடுங்கை யலைசெவி வாரணம்" விநாயக. திருநகர. உக.

ஞ. விறன்மலை: கலி. உo, சச, சஙி, திஙூ. திணைமொழி. உ, எ.

சு. 'ஐய' என்பது பன்மைவினை பெற்றுவருதலை ககu-ம் பக்கம் ஙூ-வது குறிப்பிற் காண்க.

எ. சினமென்பதற்கு வெம்மையென்று பொருள்விளக்குவர் புறநானூற் றுரைகாரர்.

(பிரதிபேதம்) * கடாத்து. † மனநிற்.

னலே (க) முன்பு வண்கேளுறுதலெய்துடைத்தாய் ஊறுகின்ற கமழும் மதத்தினை யுடைத்தாய் இப்பொழுது கெட்ட அழகையுடைய * யானை ஈரமற்ற நிலத்தை உழுகின்ற கலப்பைகள்போலக் கொம்புகளை ஊன்றிக் கையை நிமிர்த்து நிலத்தே இடவாநிற்க வெற்றியை யுடைய மலைகள் வெம்புதலைச் செய்த போதற்றொழில் அரிய வெய்யகாட்டை, எங்களுக்குச் சொல்லாதே போகத்துணிந்த நுமக்கு ஒரு காரியத்தினைக் கூறுந் தண்மையையுடையேன். அதனைக்கேட்பீராக; எ - று.

இதனால், தோழிக்குச் சூழ்ச்சி பிறந்தது.

வாங்க என்றது "வீருத்திவாங்க" என்றது போல் நின்றது; உறல் (உ) வாயிடத்தே வந்து உறுதலுமாம்.

பொருள், ஆகுபெயர்; மற்று அசை.

இது தரவு.

சு. வீழுநர்க் கிறைச்சியாய் (ங) விரல்கவர் பிசைக்குங்கோ
லேழுந்தம் பயன்கெட விடைநின்ற நரம்பறாஉம்
பாழினுந் † நிலையில்லாப் பொருளையு நச்சுபவோ

ஏ - து: ஐயனே, விரும்புவார்க்கு நேயமாய் விரலாலே வாசிக்கப்பட்டு ஒலிக்கும் நரம்பு எழும் தம்முடைய பயன் இன்றும்படி (சு) தானக்கோலின் அகப்பட்டு இடைநின்ற (ரு) நரம்பு அற்றுப்போம் யாழினுங் காட்டில் நிலைபேறில்லாத பொருளையும் அறிவுடையோர்கள் நச்சுவர்களோ? நச்சார் காண்; எ - று.

க. 'வென்றிக்களிறு' (சீவக. கசை.) என்பதன் உரைநோக்குக.

உ. (அ) "வரி ஞிமி ரூர்க்கும் வாய்புகு கடாஅத்துப், பொறிறுதற் பொலிந்த வயக்களிற்றெருத்தல்" அகம். எஅ. (ஆ) "வரிஞிமிரூர்க்கும் வாய்புகு கடாஅத், தண்ணல் யானை" புறம். கூங. (இ) "வரி வண் டார்க்கும் வாய்புகு கடாஅத்த, வண்ணல் யானை" தொல். மேற்.

ங. "விரல் கவர்த்தழந்த கவர்வி னல்யாழ்" நற். ஙஙடு: "விரல் கவர் பேரியாழ்" பதிற். இள: அ கவர்தல்–அகப்படுத்தல்; பதிற். அசை. உரை.

சு. (அ) தானக்கோல், "தண்மக ளொருத்தியைத் தானயாழ் கற்கென" பெருங். (க) ஙடு: இ. (ஆ) "இருந்தெரிளிப்பசந் தொடிக்கரங் கோல்பொரச் சிவப்ப" பாகவதம், (கo) மதுரைகண்ட. கஇ.

ரு. "தக்க நரம்பிலா காத யாழும்..... .....போன்ற வீமெனிலாத சேனை" வில்லி. பதினொராம். இ.

(பிரதிபேதம்) * யானைகள், † நிலையிலா (தாழிசைமூன்றிலும்).

கூ. (க)மரீஇத்தாங் கொண்டாரைக் கொண்டக்காற் போலாது
பிரியுங்காற் பிறரெள்ளப் பீடின்றிப் புறமாறுந்
திருவினுங் நிலையில்லாப் பொருளேயு நச்சுபவோ

எ - து: தாம் மருவி மனத்தாற் கொண்டவர்களைத் தம்மனங்கொண்ட காலம்போலாகாமற் பிரியுமிடத்துப் பிறர் இகழும்படி அவர்க்கொரு வலியின்றாக அவர்கள் * அப்புறமாக மனமாறுந் திருமகளினுங் காட்டில் நிலைபேறில்லாதபொருளேயும் அறிவுடையோர்கள் நச்சுவர்களோ? நச்சார்காண்;எ-று.

தாம், பன்மை யொருமை மயக்கம். தானும் பாடம்.

கொண்டக்காலென்னும் [பெயரெச்சத்திற்] (வினையெச்சத்திற்) கால் ஈண்டுக் காலங்காட்டிற்று. கொண்டக்காற்போலாதென்றது தான்வருதற்கு முன்பு அவர் நின்ற † நிலையையுங் கெடுத்துப்போமென்னும் ‡ நிலைவிற்று.

க. (அ)"பிறந்த குலமாயும் பேராண்மை மாயும், சிறந்தகல்வியு மாயும் .....இன்மை தழுவப்பட் டார்க்கு" (ஆ) "பிறக்கலான்..... இரப்பாரை யெள்ளாமகன்" நாலடி. உஅடி, கூஅ. (இ) "எளிய ரிவரென் றிகழ்ந்துரையா ராகி, யொளிபட வாழ்த னிலிது" இனியது. கூ. (ஈ) "இல்லாரை யெல்லாரு மெள்ளுவர்" குறள். ஈஎடுஉ. (உ) "துளியுண் பறவைபோற் செவ்வனேர்ப் பாரு, மெளியாரை யெள்ளாதா ரில்" பழ, உஅள. (ஊ) "எளியாரை, யெள்ளானீத் துண்பானே லேதமின் மண்ணுண்டி, கொள்வான்" ஏலாதி. சஎ. (எ) "பரப்புநீர் வையமுற்றுந் தேரினு மில்லை, யிரப்பாரை யெள்ளா மகன்" நகரோயாத்திரை. (ஏ) "எள்ளன் மின்னில ரென்றெண்ணி யாரையும்" வளையாபதி. (ஐ) "திருமக ணிலைமையுஞ் செல்வர் கேட்டிரேன், மருவிய மனிதரை யிகந்து மற்றவள், பொருவறு புகழினர்ப் புணிய காழறு, மொருவர்கண் ணுறவில ளுணர்ந்து கொண்மினே" சூளா. முத்தி. கச. (ஒ) "இல்லோரை யற்ப மிகழ்ோம்" அரிச்சந்தி. மயான. உசு. (ஓ) "அருந்திரவியங் காக்கைக் கேதனத்தா டருமோ திரு வன்றியிலே" திருவாங்கத். கூசு. (ஔ) "இருங்கடற் புலி யிடத்தினில் லாமையெல் லாருமெள் ளுவரென்னு, மொருங் குணர்ந்தமுன் னோருரைத் திட்டஃ துண்மை யென்றுளங் கொண்ணீ" தகேலோ. மேல்கடலடைந்த. கசுச. என்பவைகளும், (ஃ) "இழவு நின்னே ரென்னுது பொருடான், பழவினை மருங்கிற் பெயர்பு பெயர் புறையும்" (கலி. உச: கo-கக) என்பதன் குறிப்பில் இவ்விடத்திற்குப் பொருந்துவனவும் ஈங்கு நோக்கத்தக்கன.

(பிரதிபேதம்) *புறமாக, † நிலைமையும், ‡ நிலையிற்று.

கநி. புரைதவப் பயனெக்கார் தம்மாக்க முயல்வாரை
வரைவின்றிச்(க)செறும்*பொழுதிற் கண்ணேடா துயிர்வெளவு
† மரைசினுங் நிலேயில்லாப் பொருளேயு நச்சுபவோ

எ - து: தமக்கு உயர்சமி மிகும்படியாகத் (உ) தாம் பெறும் பயனைப் பாராதே அரசராக்கத்தை ‡ முயன்றபோதும் அமைசசரைக் கோபிக்கும் பொழுது நங்காரியத்தினே முயன்றவனென்று ஒருவரைவின்றிப் (ங) பழமை யையும்பாராதே பொருண்முதலியனவன்றி உயிரைக்கொள்ளும் அரைசினுங் காட்டில் நிலேபேறில்லாத பொருளேயும் அறிவுடையோர்கள் நச்சுவார்களோ? நச்சார்காண் ; எ - று.

(சு) || அத்தன்மையானுயிரைவெளவியஅரசனும்அன்றேகெடுவனென்றார். இவை மூன்றும், தாழிசை.

க. (அ) "உரைசெல வுயர்ந்தோங்கிச. சேர்ந்தாரை யொருநிலேயே, வரை நில்லா விழுமமுறீஇ நடுக்குரைத்துத் தெறன்மாலே, யரசு" கலி. கசசு:க-ங. (ஆ)"பொறிசெறித்த மாண்பினாய்ப் பொருந்தலர்சசெற் றிருநிதியஞ். செறிதருமா நீட்டியரு வினேவாங்கு செயலி னரு. முறுபிழையட் சிறிதியற்றி னெறுத்திடுவர் வயவேந்தர்" நைடதம். அன்னத்தைத் தூது. கஙசு. (இ) "தொழுந் தகை யமைசசரைச சூளிந்து நோகருரு, மொழிந்தன னிடியொடு முகிலுஞ் சிந்துவே" கம்ப. அதிகாயன். க.

உ. (அ) "பால்வரு முறுதி யாவுந் பலேவர்க்குப் பயக்கு நீரார்" கம்ப. அயோத்தி. மந்தி . அ. (ஆ) "இண்ணுயி ரழியும் போழ்து மிறைவனுக் குறுதியல்லான். முன்னிய முகமன்மாட்டா முற்றிய வறிவினுரை" தேவா. தூதவு. உக.(இ)"ஆளு மரசன் பாலன்பு மவனுக் காவதறியறிவு, நாளு மவற்றைக் கலங்காம னன்று முடிக்கு முளத்துணிவு, சூளும் வினேக்குத் தன்காத்தின் மொய்த்த பொருளின் விழையாத, கோளுமுடையான் புரிவினேயிற் குற்ற முரு துணமேயாம்" "முறைவழிப் பிறழ்தல் செல்லா முதுக்குறை யமைசசர் தம்மைச, சிறையிடைப் படுத்து" விநாயக. அரசியற்கை அக; வன்னி. கசு.

ங. "பழமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார், கிழமை பிறிதொன் றுங கொள்ளார் வெகுளின்மன், காதன்மை யுண்டே யிறைமாண் டார்க் கேதிலரு, மார்வலரு மில்லே யவர்க்கு" நீதிநெறி. சவ.

ச. (அ) :"தீயவை செய்தார் கெடுத னிழறன்னே, வீயா தடியுறைந்தற்று" (ஆ) "பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு, பிற்பகற் ருமே வரும்" தூறன். உஙஅ, நகக. (இ)"முற்பகற் செய்யிற் பிற்பகல் வீளேயும்" கோன்றை. (ஈ)·'முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு, பிற்பகற் காணுருஉம் பெற்றியகாண்" சீல. உக : ங - ச. (உ) "முற்பகல்

(பிரதிபேதம்) * பொழுது, † அரசினும், ‡ முயனறும். || அத்தன்பையானு அரசனும் உயிரை யெனவிய அனறே.

எனவாங்கு

எ - து: என்று யான்சொல்லாநிற்க; எ - று. ஆங்கு, அசை.

இது தனிச்சொல்.

ககூ நச்சல் கூடாது பெரும விச்செல
வொழிதல் வேண்டுவல் சூழிற் பழியின்று
(க) மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பித்
* தன்னகர் விழையக் கூடி
னின்னுறல் வியன்மார்ப வதுமனும் பொருளே

எ - து: பெருமா! பொருளே நச்சுதல் நினக்குப்†பொருந்தாதால்; ஆராயிற் பழியின்றாக இச்செலவை நீ தவிர்தலே யான்விரும்புவேன்; அரசன் காக்க வருகின்ற விருந்தினரைப் பாதுகாத்துத் தன்மனைவி விரும்பும்படி அவளுடன் கூடியிருக்கில் இனிய முயக்கத்தை யுடைத்தாகிய அகற்சியை யுடைய மார்பனே நிலைபெறும் பொருள் அதுகாண்; எ - று.

நகர், ஆகுபெயர்.

இதனுள், தலைவற்குக் கருதுதல்பிறந்தது; தோழிக்குச் சூழ்ச்சிபிறந்தது.

இது 'பழியின்று' எனத் (உ) தாழிசைப் பொருள்களைக்கொண்டு பின்பு 'மன்னவன் புறந்தர வருவிருந்து . . . .பொருளே' எனப் போக்கியற் பொருளையுங்கொண்டு இற்ற சுரிதகமும் ஏனை உறுப்புக்களும் பெற்ற ஒத் தாழிசைக்கலி. "தரவிய லொத்தும்" என்னுஞ் சூத்திரத்துப் புரைதீர் என்பதனைப் போக்கியற் பொருளுங் கொண்டு ‡ புரைபடாது வந்தது. (எ)

செய்வினை பிற்பக லுறுநரின்" பெருங். (க) நிகழ · உருக. (ஊ) "அற்பக லுகருமீ னவரை நுங்குமான், முற்பக லோர்பழி முடிக்கின் மற்றது, பிற்பக றமக்குறும் பெற்றியென்னவே" கூநீத். இரண்டாநாட் நகுதி.

க. "வாழி யாதன் வாழி யவினி, நெற்பல பொலிக" என்னு மூலமும், 'காவற் பொருட்டு அரசன் வாழ்க; விருந்தாற்றுதற்பொருட்டு நெற் பல பொலிக' என்னும் பழையவுரை விளக்கமும் (ஐங். க.) இங்கே ஒப்பு நோக்கத் தக்கன.

உ. (அ) சுரிதகம் தாழிசையின் பொருண் முடிபைத் தன்பாற் பெற்று நிற்றற்கு (நச்சுபவோ என்பன தாழிசைகளிலுள்ளன) 'நச்சல் கூடாது பெரும விச்செல, வொழிதல் வேண்டுவல்' என்பதையும் போக்கியற் பொருள் வந்தால் அவ்விரண்டையும் புரைபடாமற் பொருந்தச் செய்வதென்பதற்கு 'தன்னகர் விழையக் கூடின்' என்பதையும் (தொல். செய். சூ. கஙஎ.) மேற்கோள் காட்டுவர், பேராசிரியர். (ஆ) "புரைதீ ரென்றதனுல், தாழிசைப் பொருளேயன்றி அவற்றோடு போக்கியற் பொருளுங்கொண்டு புனை[ட](ர)படாது வருவனவுங் கொள்க. அது 'அரசிலை நிலையில்லாப் பொருளையு நச்சுபவோ' என முடித்தலின் 'நச்சல்கூடாது பெரும விச்செல, வொழிதல் வேண்டுவல்

(பிரதிபேதம்) * கன்னகர், † பொருந்தாது, ‡ புனைபடாது.

(கூ) (க) எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ
லுறித்தாழ்ந்த ரகமு முரைசான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேரோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொலோடை யந்தணீர்

நி. வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறண்மக ளெருவணுங்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்னு நிருவரைக் காணிரோ பெரும

கூ. காணே மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
*மாணிழை மடவர லுயிர்நீர் போறிர் ;

கஉ. பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யு
நிணையுங்கா னும்மக ணுமக்குமாங் கணையளே ;

கநி. சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கா னும்மக ணுமக்குமாங் கணையளே ;

கஅ ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யரழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யுஞ்
சூழுங்கா னும்மக ணுமக்குமாங் கணையளே ;
எனவாங்கு ;

உஉ. இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தாணை வழிபடூஇச் சென்றன
ளறன்கலி பிரியா வாறுமற் றதுவே.

இஃது உடன்போய தலைவியின் சென்ற செவிலி இடைச்சுரத்து முக்கோற்பகவனைக்கண்டு இவ்வகைப்பட்டாரை யாண்டுக்காணிரோவென

சூழிற் பழியின்று' எனத்தாழிசைப் பொருளைக்கொண்டு பின்பு 'மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பி, நன்னகர் விழையக் கூடி, னின்னுறல் வியன்மார்ப வதுமனும் பொருளே' எனப் போக்கியற் பொருளையும் கொண்டிற்றது" என்பர், நச்; தொல். செய். சூ. கஉஎ.

க. 'எறித்தரு ..மற்றதுவே' என்பது, செவிலிவரவின்கட் கூறியதற்கும். தொல். அகத். சூ. சஅ. நச. இடைச சுரத்துப் புலம்புஞ் செவிலியை எதிர் வருவார் கண்டு தெருட்டியதற்கும் இறை. சூ. உங்; மேற்கோள்.

வினவியாட்த, அவளைக் கண்டு அஃதறமெனவே கருதிப் * போந்தேம், நீரும் அவர்நிறத்து † எவ்வம்பட வேண்டாவென ‡ஏதந்துக்காட்டி அவர் தெருட்டியது.

இதன் பொருள்.

(க) எறித்தரு கதிர்தாங்கி யேந்திய (உ) குடைநீழ
(ங) லுறித்தாழ்ந்த கரகமு (ச) முரைசான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
(ஞ) குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்

க. "எறித்தரு கதிர்தாங்கி.....காணிரோ பெரும" என்னும்பகுதி சுரத்திடை விளுதற்கு மேற்கோள். தோல். அகத். சூ. சுo. இளம்.

உ. (அ) 'வினிகுடை தண்டே குண்டிகை' (அந்தணப்பூத வருணனை) சீலப். உஉ: ஙக. (ஆ) "குடையார் நிழலுறி சேர்கர கத்தொடு குன்றிடத்து, நடையான் மெலிந்து வருகின்ற வந்தணிர் ஞால மெல்லா, முடையா ளெளிவே லுயிர்தன்றென் கூடலொண் டீந்த மிழ்போ, விடையாள் விடலைபின் சென்றன ளோவிவ் விருஞ் சுரத்தே" இறை. சூ. உங. மேற்கோள். (இ) "ஆதபத்திரங் குண்டிகை யொருகையி னணைத்துப், போதமுற்றிய தண்டொரு கையினிற் பொலிய, மாதவப்பய னுருவுகொண் டெதிர்வருமாபோ, னீதிவித்தக னடைந்தமை நோக்கின னெடியோன்" கம்ப. மீட்சி. கஅக. (ஈ) "உறித்தாழ் கரகமு மூன்றுமுக் கோலு முடித்த செவ்வா, னெறித் தாலனைய விருந்துவ ராடையு மிந்திரவி, மறித்தா லனைய குடையுங் கொண்டேவரு வீரொருவ, னெறித்தாழ் குழல்வல்லி முன்செல்லு மோவிர் நெடுஞ்சுரத்தே" அம்பிகா. சoo. (உ) "ஒரு வெண் குடை யிரு நீழன்முக் கோல்கொண் டொழுக்கத்தினு, லருவெங் களரியைத் தாறுசெல் வீரரு வீரெழுபார், மருவெண் டிசைபுகழ் வாணன்றென் மாறையென் வஞ்சியன்னுள், பொருவெஞ் சுடரிலை வேலொரு காளைபின் போயினளே" தஞ்சை. ஙசக.

ங. (அ) "உறித்தாழ் கரகம்" சீலப். ஙo, சுச, கo. (ஆ) "மூறுக்குறி தூங்கு, குண்டிகைத்தடங் கையராய்" திருவிளை. சமணரைக் கழு. கஅ.

ச. "கற்றேய்த் தூடித்த படிவப் பார்ப்பான், முக்கோ லகைநிலை கடுப்ப" முல்லை. ஙஎ-அ. "நான்மறை நெறிமுக், கோலு மேந்திய குடைகளுங் குண்டிகைக் கரமும்". "இன்ன கொண்டெளிருடிகள் யாவரு மெய்தி" அரிச்சந்தி. விவாக. ஙூ-ச.

ஞ. "குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்" என்பது மாலை இயல் பெண்ணும் பொருளில் வருதற்கு மேற்கோள். தோல். உரி. சூ. கஙூ. 'மாலை' தெய்.

(பிரதிபேதம்) * போந்தேம், † அலலம். ‡ ஏதுக்காட்டி.

வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறண்மக ளொருவனுந்
தம்மூளே புணர்ந்த * தாமறி புணர்ச்சிய
ரன்ஞ ரிருவரைக் காணிரோ பெரும

கூ (க) காணே மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவர † ரூயிர்நீர் போறிர்

எ - து: பெருமா! அந்தணீர்! உறியிலே தங்கின கமண்டலத்தையும் அரி அயன் அரனென்னும் மூவரும் ஒருவரென்று சொல்லுதல் தன்னிடத்தே அமைந்த (உ) மூக்கோலையும் முறைமைபடத் தோளிலே வைத்து எறித்தலைச் செய்கின்ற(ங) ஞாயிற்றின் கதிர்களைத் தாங்குகையினாலே எடுக்கப்பட்ட குடைநிழலிலே, வெவ்விய காட்டிடத்தே போதலை இயல்பாகவுடைய ஒழுக்கத்தினை யுடையீராதலான் உண்மை வினவுகின்றேன்; இக்காட்டிடத்து என்னுடைய மகளொருத்தியும் வேறொருத்தி மகனொருவனும் பிறரறியா மற் றங்களிலே கூடின தாங்கள் இப்பொழுது பிறர் அறிந்த கூட்டத்தினை யுடையராயினர்; அத்தன்மையார் இருவரைக் காணுதிருந்தீரோ? இக்காட்டிடைக் காணு திருந்தேமல்லேம்; கண்டு அஃதறமென்றே கருதிப் போந்தேம், ஆண்மக்கட்குக் கூறும் அழகினையுடைய தலைவனோடே இவ்வரிய சுரத்தைப் போகக்கருதிப் போந்த மாட்சிமைப்பட்ட அணியினையுடைய மடப்பத்தை யுடையாளுக்குத் தாயாந்தன்மையை உடையீர் ‡ போல இருந்தீர்; எ - று.

அரியயனரனென்னும் மூவரையும் ஒருவனுகவல்லது || வெவ்வேறுகினையாத நெஞ்சத்தாலே ஐம்பொறியும் நுமக்கு ஏவல் செய்தலை இயல்பாகவுடைய கோட்பாட்டையும் ÷ நுமக்குரிய, ஒழுக்கத்தையுமுடைய அந்தணீரென்க. குறிப்பு, ஆகுபெயர்.

க. 'அறியே மல்லே மறிந்தன மாதோ' ஐங். உசஂ.

உ. (அ) நியாயப்பிரகாசம். முதற் பரிச்சேதம் அசு-அஎ. எண்களின் தலைப்பில் எகதண்டி வேதாந்திகளென்றும் திரிதண்டி வேதாந்திகளென்றும் இருவகையார் கூறப்படுகின்றனர். (ஆ) பேராசிரியர், ஒரு கோலுடையார் இருவருளர்; அவர் துறவறத்து நின்ருராதலின் உலகியலின் ஆராயப் படாரென்றும், மூக்கோலுடையாரிருவருட் பிச்சை கொள்வானும் பிரண்டிருந்து தனதுண்பானும் உலகியலின் நீங்காமையின் அவரே கூறப்படுவரென்றும் விளக்குவர்; தொல். மர. சூ. எஂ.

ங. (அ) "அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்" அற. சாங (ஆ) "வெயின்மறைக் கொண்ட வுருகெழு சிறப்பின் மாலை வெண்குடை"

(பிரதிபேதம்) * தாமார், † தாயினீர், ‡ போலே, || வேருக, ÷ உமக்கு.

பெருமாவென்னுள் அவாகள் ஆரியனுகிய பெரியோனே. அந்தணர் அவன் மாணுக்கர். அவர்களைப் பெருமா அந்தணீரென விளித்தாள்; பெயர்கள் ஒருவனே ஒருவன் ஆற்றப்படுத்த செய்யுளின்மையின் (க) முன்னிலை சுட்டிய ஒருமைக்கிளவி பன்மையொடு முடிந்ததல்லாமையுணர்க.

காணிரோ? குறுகுகின்றது. கண்டே மென்னுமற் காணேமல்லெங் கண்டனமென்றதனுல், அங்ஙனம் போகின்றவரை அறிந்து விலக்கல் அற மன்றென்று * பெயர்ந்தேமென்னுராகக் கொள்க. போறிரென்னுர், (உ) தேடி வருவாள் செவிலியென்பது உணர்ந்து.

இது தரவு.

கூ (ங) பலவறு நறுஞ் (ச) சாந்தம் படுப்பவர்க் † கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யு
நினையுங்கா னும்மக ணுமக்குமாங் கனையளே

புறம்.சுo.என்பவைகளும்.(இ)"நின்விண்பொரு வியன்குடை, வெயின் மறைக் கொண்டன்றே வன்றே வருந்திய, குடிமறைப்பதுவே" எனச் சிறப்பித்திருப்பதும்(புறம். ஙடு.) பிறவும் ஈண்டு அறிதற்பாலன.

க. முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி ஆற்றுப்படையல்லாத வழியும் பலரில் வழியும் பன்மையொடு போற்றுமற் கூறப்படும் என்பதற்கு 'சூறிப்பேவல்.....காணீரோ பெரும' என்பது (தொல். எச்ச. சூ. சுஙூ. 'முன்னிலை') தெய்வச்சிலையார் காட்டிய மேற்கோள்.

உ. "செவிலிபின் றேடிச் சேறலென் றுங்கு" நாற்கவி. சூ. கஅங.

ஊ. "பலவுறு முத்து" என்பதற்கு, 'பலவிலையுற்ற முத்தென்றுமாம்' என, (பொருந. உஅ.) உரை. எழுதியிருத்தல் ஈண்டு அறியத் தக்கது.

ச. (அ) "கடவரை காதலனேடு கடந்த கயனெடுங்கட், படவர வல்குலும் பாவைக் கிரங்கன்மின்...மலய மென்னுங், கடவரைதானே யணிக்தறி யாதுதண் சந்தனமே." இறை. சூ. உங. மேற்கோள். (ஆ) "சுரும் பிவர் சந்துந் தொகுகடன் முத்தும்வெண் சங்குமெங்கும், விரும் பினர் பாற்சென்று மெய்க்கணி யாம்.....கரும்பனமென் மொழி யாருமந் நீர்மையர் காணுநர்க்கே" திருச்சீற். உசஅ. (இ) "தரளம், வவ்வினரிடத்து மவ்வழியான,.....பொதியப் பொருப்பு நெடுமுதுகு வருந்திப், பெற்று வளர்த்த கற்புடை யார, மணியுமா மகிழ்நர் பதியுறை புகுந்தால்.....சென்றுட் குடைந்து, பொன்பதி ஞ்சியுண்பது மடங்கி, முழங்கப் பெருங்குரல் கூவுய்ப், பழங்க ணெய்தியது பேதைமை யறிவே" கல். உக

(ஈ) "பலவுறு.....நினையுங்கா னும்மக ணுமக்குமாங்கனையளே" என்பது சுரத்திடைக் கண்டோர் செவிலியர்க்கு அறனுரைத்தக உலகியல் புரைத்தற்கு மேற்கோள். தொல். செய். சூ. கஙஙி. பே. நச்.

(பிரதிபேதம்) * பேர்ந்தேமாக, † அல்லது, (தாழிசை மூன்றிலும்).

எ - து: நறியனபலவுங்கூடும் நறிய * சந்தனம் தங்கண் மெய்ப்படப் பார்க்குப்பயன்கொடுப்பதல்லது மலையிடத்தேபிறந்தனவாயினும் அச்சந்தனங் கடாம் அம்மலைக்கு என்னபயனைக் கொடுக்கும்? ஆராயுங்காலத்து நும் மூடைய † மகளும் பயன்படும் பருவத்து ‡ நுமக்குப் பயன்படாள்; எ - று.

கரி (க) சீர்கெழு வெண் (உ) முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கா னும்மக னுமக்குமாங் கனையளே

எ - து: தலைமை பொருந்திய வெள்ளிய முத்துக்கள் அணிவார்க்குப் பயன்படுவதல்லது (ங) கடலிடத்தே பிறந்தனவாயினும் அம்முத்தங்கடாம்

க. (அ) "சீர்கெழு ..... கனையளே' என்பது, கொண்டதலைக் கழிந்தூழி இடைச்சுரத்துக் கண்டோர் செவிலியைத் தடுத்ததற்கும் (தோல். அகத். சூ.சூ. நச.) (ஆ) பார்ப்பான் கூற்றுக்கும் (தோல். செய். சூ. கஅசு. பே. நச்.) (இ) மிக்கோர் எதுக் காட்டற்கும். (நாற்கவி. சூ. கஅஅ.) மேற்கோள்.

உ. (அ) " மடவரன் மாதர்க்கு வருந்தா தீமோ, கடல்வயிறு பயந்த நித்திலம், முடையோர்க் காத லுலகியல் வழக்கே".....(ஆ) "வெந்நீ ரருஞ்சுரங் காவாபின் சென்றநும் மெல்லியன்மாட், டிந்நீர்மை யீரிரங் கன்மின்.....,றண்குமரி, முந்நீர் பயந்தா லணிவார் பிறரென்ப முத்தங்களே " (இ) " பெருங்கடன் ஞாலத்துட் பெண்பிறந் தார்தம்பெற் றூர்க்குதவா, நிருங்கடல் போற்றுய ரெய்தன்மி னீன்றன வென்று முந்நீர்க், கருங்கடல் வெண்சங் கணிந் தறியாதண் கதிர் முத்தமே" இறை. சூ. உஉ. மேற்கோள். (ஈ) "வலம்புரி யீன்ற முத்த மண்மிசை யவர்கட் கல்லால், வலம்புரி பயத்தை யெய்தா தனையரே மகளிர்" சீவக. இசுஉ. (உ) "இற்றுங் கேண்மதி முற்றிழை மகளிர், தத்துநீர்ப் பெருங்கடற் சங்குபொறை யுயிர்த்த, நித்திலத்தன்னர் நினைந்தனை காணை" பெருங். (க) சஎ: உஇங-இ. (ஙஉ) "நாகையின்னே, மீனூர் வீழியை யென்னுடி னைவாய்விரி வாரிமுத்தந், ...தாழுகப் பூண்பவர் .....தாங கொள்வரே" தூலோத்துங்க சோழன் கோவை. ஙகஉ. (எ) "வேலைத் தரளமும் .. ..போல நம்மைத் துறந்து மெல்ல, மாலைக் குழலிதனக்குரி யாளை மணந்து சென்றூள்" வெங்கைக். ஙஙங. (ஏ) "மடவா ளொருவ னுடனகன் றூளென்று வாடுகின்றூய்,..... சங்கத் திடையே விளங்கிய முத்தமிழை, யுடனே புனைந்து மறிவிலை யோமொழி யொண்ணுதலே" திருவாரூர்க். ஙகஉ. (ஐ) "கையன் மின்னே, தனையீன் றவளை வீடுத்தணி வாரிடஞ் சார்ந்திடுமுத், தனையீன் றவளில்லி னீயுமுற் றூயில்லை யுன்மகளு, மனையா ளொரு வன்பின் சென்று னுலகியல் பாயிதுவே" கோடீசுரக். ஙஇஉ.

கூ. " பெருங்கடலுட் பல்லிலைய முத்தம்பிறக்கும் " நான்மணி. சு.

(பிரதிபேதம்) * சந்தனமாங்கண்மெய், † மகன், ‡ நமக்கும்.

அக்கடலுக்கு என்ன பயனைக் கொடுக்கும்? ஆராயுங்காலத்து நும்மூடைய மகளும் பயன் படும் பருவத்து நுமக்குப் பயன்படாள்; எ - று.

கஅ ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யுஞ்
சூழுங்கா னும்மக னுமக்குமாங் கனையளே

எ - து: எழுந்ரம்பாற் கூட்டிய இனிய ஓசைகள் பாடுவார்க்குப் பயன் கொடுத்தலல்லது யாழிடத்தே பிறிந்தனவாயினும் அவ்வோசைகடாம் அந்த யாழுக்கு என்னபயனைக் கொடுக்கும்? ஆராயுங் காலத்து நும்மூடைய மகளும் பயன்படும் (க) பருவத்து நுமக்குப் பயன்படாள்; எ - று.

இவை மூன்றும், தாழிசை.

எனவாங்கு, அசை.

இது தனிச்சொல்.

உஉ இறந்த கற்பினுட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை * வழிபடீஇச் சென்றன
ளாறந்தலை பிரியா வாறுமற் றதுவே

எ - து: ஆதலான் மிக்க கற்பினை யடையாளுக்கு வருத்தமுறுதே கொள்ளுமின். (உ) இருமுது குரவரிலுஞ் சிறந்த கணவனை வழிபட்டு அவன் பின்னே போனாள். இம்மையில் இங்ஙனங் கற்புப் பூண்டு நிகழ்த்தும் (ங) இவ்வில்லறமே அறங்களிற் றலையான அறம்; மறுமையில் இவ்விருவரும் நீங்கா மற் சுவர்க்கத்திலே செல்லும் வழியும் அவ்வழிபாடே; எ - று.

இது சுரிதகம்.

† படரன்மின் ஒருசொல்; படர்மினென்பதன் மறையாதலின்.

அறத்திடத்து நின்று நீங்காதவாறென்று பொருள்கூறின், தலைப்பிரியாவாறெனப் பகரவொற்றுப் பெறுதல்வேண்டும். "ஐகாரவிறுதிப் பெயர் நிலை மூன்னர், வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே" (ச) என்றலின்.

க. "கொடித்தலுந் துய்த்தலுந் தேற்ற விடுக்குடை, யுள்ளத்தான் பெற்ற பெருஞ் செல்வ - மில்லத், துருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தா, லேதிலான் றுய்க்கப் படும்" நாலடி. உஎச.

உ. (அ) "கொண்டானிற் றுன்னிய கேளிர் பிறரில்லை" நாண்மணி. நிசு. (ஆ) "தங்கணை யகலிற் றெய்வந் தவம் பிறி நிலவென் றெண்ணு, மங்கைமார் சிந்தை போலத் தூயது" கம்ப. வேள்வி.. கசு. (இ) "குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற, புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்" நீதிநெறி. உஎ.

ங. (அ) "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை" குறள். சசு. (ஆ) "இல்லற மல்லது நல்லற மன்று"

ச. தொல். உயிர்மயங்கு. சூ. எஅ.

(பிரதிபேதம்) * வழிபட்டீ, † படாமின் ஒரு சொல்; படுமென்பதன்.

மற்று வினைமாற்றாய் மறுமையை உணர்த்திற்று. ஆறுமென்ற உம்மை தெரிப்பு.

இதனால், செவிலிக்குத் தன்மையென்னும் மெய்ப்பாடு பிறந்தது.

"தூலே கரக முக்கோன் மணியே, யாயுங் காலே யந்தணர்க் குரிய" (க) என்பதனும் கரகமும் முக்கோலுங் கூறினர்.

இது பதினோரடித்தரவும் மூன்றடித் தாழிசையும், அசைநிலையாகிய தனிச்சொல்லுஞ் சிறுமைக்கெல்லை கூற்றமையின் ஆசிரியத்திற்குக் கூறிய மூன்றடிச் * சிறுமை பெற்ற சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (அ)

(கo) வறியவ னிளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணு மிகந்துசெய் திசைகெட்டா னிறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலி
நி னலவுற்றுக் குடிகூவ வாறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவராற் கோல்கோடி யவனிழ
லுலகுபோ லுலறிய வுயர்மர வெஞ்சுரம் ;
அ இடைகொண்டு பொருள்வயி னிறத்திநீ யெனக்கேட்பி
லுடைபுநெஞ் சுகவாங்கே யொளியோடற் பாண்மன்னே
படையமை சேக்கையுட் பாயலி னறியாய்நீ
புடைபெயர்வீ ராயினும் புலம்புகொண் டினைபவள் ;
கஉ முனிவின்றி முயல்பொருட் கிறத்திநீ யெனக்கேட்பிற்
பனியகண் படலொல்லா படர்கூர்கிற் பாண்மன்னே
நனிகொண்ட சாயலா ணயந்துநீ நகையாகத்
துணிசெய்து நீடினுந் துறப்பஞ்சிக் கலுழ்பவள் ;
கசு பொருணெஞ்சிப் பிரிந்துநீ போகுதி யெனக்கேட்பின்
மருணெஞ்க மடிந்தாங்கே மயல்கூர்கிற் பாண்மன்னே
விருணெஞ்க மிடையின்றி யீரத்தி னியன்றநின்
னருணெஞ்க மழியினு மவலங்கொண் டழிபவள் ;

எனவாங்கு ;

க. தொல். மரபு. சூ. எo. இச்சூத்திரத்து ஆயுங்காலே யென்றதனால், குடையும் செருப்பு முதலாயினவும் ஒப்பன அறிந்து கொள்கவென்று கூறி 'எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ, லுறித்தாழ்ந்த கமண்டல முடைசான்ற முக்கோலும்' என்னும் பருவத்தை மேற்கோள் காட்டினார். பே. நச்.

(பிரதிபேதம்) * மெய்யும்.

உக வினைவெஃகி நீசெலின் விடுமிவ ளுயிரெனப்
புனையிழாய் நின்னிலை யாங்கூறப் பையெனூ
நிலவுவே னெடுந்தகை நீளிடைச்
செல்லொழிந் தனனுற் செறிகநின் வளையே.

இது தலைமகனுற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, இவ்வகைப்பட்ட சுரத்தைப் பொருள் காரணமாகப் பிரிகின்றீரெனக் கேட்பின் இவ்வகையாகற்பாலனெனச் சொல்லிச் செலவழுங்குவித்தமை, தலைமகட்குச் சொல்லியது.

இதன்பொருள்.

(க) வறியவ ளிளமைபோல் வாடிய சினையவாய்ச்
(உ) சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி

க. (அ) "பொருளில்லா னிளமைபோற் புல்லென்றூள்" கலி. நஅ: கடி. (ஆ) "நலனு மிளமையு நல்குரவின் கீழ்ச்சாம்" நான்மணி. அஉ. (இ) "பொருளி லொருவற் கிளமையும் போற்று, மருளி லொருவற் கறனுங் - தெருளான், றெரிந்தாழ்ந்த நெஞ்சினன் கல்வியு மூன்றும், பரிந்தாலுஞ் செய்யா பயன்" திரிகடுகம். (ஈ) "பொரு ளுடையான் கண்ணதே போகம்" (உ) "பொருளிலு ளூருமாம் போகம்" சிறுபஞ்ச. ங, ஙடி. (ஊ) "பொறையிலா வறிவு போகப் புணர்விலா விளமை.....போலுஞ், சேயிலாச் செல்வமன்றே" வளையாபதி. (எ) "அழகாக்கலும், பொன்றுஞ் சாகத்தினுய் பொருள் செய்யுமே" (ஏ) "கைப்படு பொருளி லாதான் காமம்போற் காளை மீண்டான்" சீவக. ககூஉ, உஉடுக. (ஐ) "நல்கூர்ந்தா ரின்னலமும், பூத்தலிற் பூவாமை நன்று" நீதிநெறி. சு.

(ஒ) "வறியவ ளிளமைபோல்" என்பது ஒருமைப் பொருள் கூறிற்றேனும் பன்மைப்பொருள் உணர்த்தலின் மெய்ந்நிலை மயக்க மாயிற்று; மெய் - பொருள் என்பர். நச். தொல். எச். சூ. நிஙூ.

உ. (அ) "நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார், கொடுத்துத் தான் றுய்ப்பினு மீண்டுங் காலீண்டும்" (ஆ) "செல்வ முடையாருஞ் செல்வரே தற்சேர்ந்தா, ரல்லல் களைபவெனின்" (இ) "அழன்மண்டி போழ்தி னடைந்தவர்கட் கெல்லா, நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கிப் - பழமரம்போற், பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே, நல்லாண் மகற்குக்கடன்" நாலடி. கூஙூ, கஎ0, உ0உ. (ஈ)"சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான், பெற்றத்தாற் பெற்ற பயன்" (உ)"கொடுத்தலு மின்சொலு மாற்றினடக்கியு, சுற்றத் தாற் சுற்றப்படும்" (ஊ) "பெருங்கொடையான் பேணுன்வெகுளி யவனின், மருங்குடையார் மாநிலத்தில்" (எ)"காக்கை கரவா கரைந்

(க) யார்கண்ணு மிகந்துசெய் தினைகெட்டா னிழுதிபோல்
வேரொடு மரம்வெம்ப விரி (உ) கதிர் தெறுதலி
னலவுற்றுக் (ங) குடிகூவ வாறின்றிப் பொருள் வெஃகிக்

துண்ணுமாக்கழு, மன்னநீ ரார்க்கேயுள" (ஏ) "எதிலாராரத் தமர்பசிப் பர் பேதை. பெருஞ்செல்வ முற்றக்கடை" நாலடி. நிஉசு - எ, அஙஎ. (ஐ) "அல்ல லொருவர்க் கடைந்தக்கான் மற்றவர்க்கு, நல்லதொளக னெனப் படுவார் - நல்ல, வினைமரபின் மற்றதனை நீக்குமதுவே" (ஒ) "சேர்ந்தா ரொருவரைச் சேர்ந்தொழுகப் பட்டவர். தீர்ந்தாராக் கொண்டு தெளியினுந் - தேர்ந்தவர்க்குச், செல்லாமை காணுக்காற் செல்லும்வா யென்னுண்டாம்" (ஓ) "மல்லற் பெருஞ்செல்வ மாண்ட வர் பெற்றக்காற், செல்வுழியு மேமாப்பச் செய்பதாம்" (ஔ) "தமக் குற்றதேயாகத் தாமடைந்தார்க் குற்ற, தெமக்குற்ற தென்றுணரா விட்டக் காலென்னும்" பழ.நிஙு, உகூ, உஅசு, ஙூஅ. (ஃ) "செல்வத் னைப் பெற்றூர் நினங்கடிந்து செல்லியராய்ப், பல்லோயும் வாடாமற் பாத்துண்டு - நல்லவாந், தான மறவாத தன்மையரே லஃதென்பார், வானகத்து வைப்பதோர் வைப்பு" அறநெறி. எசு. (அஅ) "அடைந் தவர்க் கருளாளுகி னதமென்னு மாண்மை யென்னும்" கம்ப. விபீடணை. ககo. (ஆஆ) "செல்வற் கழகு செழுங்கிளை தாங்குதல்" வெற்றி. (இஇ) "சுற்றநல் கூரவாழுந் தோழுறு சிறியர் போல" நைடதம். மணம்புரி. ஙஇ.

க. "தேம்புனலே நீர்க்கடலுஞ் சென்று தரலின்றே" என்பதற்கு, உப்பு நீரையுடைய கடலும் உலகத்தே வந்து இனிய நீரைத்தருதல் ஒரு காலத்து மில்லை; என்றது தீயருணத்தையுடையோர் பிறர்க்கு இனிமை செய்ய அறியா ரென்றவாறு. எனவே கட்டியங்காரன் எக்காலமும் நமக்குத் தீங்கு செய்வனென்றும் இக்குணத்தால் அவ னுக்குக் கேடுவினையு மென்றும் கூறினுன். என்று உரைவிரித்து "யார் கண்ணு .. ..தெறுதலின்" என்பதை மேற்கோள்காட் டினர். இவ்வுரைகாரர். சீவக. அசஅ.

உ (அ)கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி, வேத்திய லிழந்தவிய னிலம்போல, வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன், ரூனலந் திருகத் தன்மையிற் குன்றி, முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப், பாலே யென்ப தோர் படிவங் கொள்ளுங், காலே" சிலப். ககo : சுo - சுஎ.

ங (அ) "நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக், கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு, கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலின் ....மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம்" கலி. அ.

கொலையஞ்சா வினைவராற் கோல் * கோடி யவனிழ
லுலகுபோ லுலறிய வுயர்மர வெஞ்சுரம்

எ - து: பிரமசரியங் காத்தலான் இளமைப் பயன்கொள்ளாது வறிய னெனவன் இளமைச் செவ்வியின்றி இருக்குமாறுபோலத் தளிர்கள் வாடின கொம்புகளே யுடையவாய்க், கொடுத்தற்கு மனஞ் சிறியனெனவனுடைய செல்வம் தன்னைச் † சேர்ந்தவர்களைப் பாதுகாவாதவாறுபோலத் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு நிழலின்றாய், யாவரிடத்தும் உலக ஒழுக்கத்தைக் கடந்து நீங்குசெய்து பின்பு புகழில்லையானவனுடைய முடிவுகாலத்து அவன் கினையேயன்றி அவனுங் கெடுமாறுபோல மரம் கினையேயன்றி வேரோடே நின்றுவெம்பும்படியாக ஞாயிற்றினுடைய பரந்த கதிர்கள் சுடுகையினாலே வருத்தமுற்றுக் குடிமக்கள் கூப்பிடும்படி கொலைத்தொழிலுக்கு அஞ்சா அமைச்சராலே நெறியன்றிப் பொருளை வாங்கிக்கொண்டு செங்கோல்வளைந்த அரசனுடைய குடைநிழலிற் றங்கிய உலகம்போலே உலறின உயர்ந்த ‡ மரங்களையுடைய வெய்ய காட்டை; எ - று.

கினையவாய், நிழலின்றாய், வெம்பவென்க. தெறுகையினாலே உலறிய மரமென்க.

இது தரவு.

அ இடைகொண்டு பொருள்வயி னிறத்திரீ யெனக்கேட்டி
னுடைபுரிஞ் சுகவாங்கே யொளியோடற் பாண்மன்னே
(க) படை || யமை சேக்கையுட் பாயலி னறியாய்நீ
(உ) புடைபெயர்வா யாயினும் புலம்புகொண் டினைபவள்

(அ) "கொண்மூ, மழைகாலுன்றி வளவயல் வினையா..... ..கொடுங் கோல் வேந்தன் காக்குநாடே" ஆசிரிய. (இ) "பகையுடன் கிடந்த நிலைபிரி வழக்கினைப், பொருத்தலும் பிரித்தலும் பொருபகைகாட்டலு, மூட்பகை யமைத்தலு முணர்த்துசொற் பொருத்தலு, மொரு தொழிற் கிருபகை தீராது வளர்த்தலுஞ், செய்யா வலிமச்சுடன் சேரா(?)வரச, னுடகரிந்தன்ன காடு" கல். கூ. (ஈ) "மருளேகொண்டு குடிவருந்தமனுநூல் குன்றிவழக்கழியப், பொருளே வெஃகு மரசரைப் போற் புகுவேம் யாமு நரகென்றார்" விக்கி. பதிஞெராம். போர் சக. (உ) "மூற்றுமிருங் குடிகூவப் பொருள்வவ்வி மூதுக்குறைவி னுளத்த னுகிக், கற்றவரைத் தண்டித்துக் கல்லாத புல்லருரை கனிந்துகேட்குங், கொற்றவனவ் வுலகுதன தடிப்படுத்திக் கொடுங்கோன்மை புரியு நாளில்"... .. ..

க. (அ) 'படையமைசேக்கை' அகம். உஅக: கஉ. (ஆ) சிலப். கங: எ0. (இ) "கிடையும் பூளையும் கிழியும் பஞ்சியும், படையமைத் தியற்றிய மடையணிப்பள்ளியுள்" பெருங். (க) சஙூ: கஅசு - எ.

உ. (அ) "ஒண்டொடி. யுழையமாகவு மினைவோள், பிழையலண்மாதோ
(பிரதிபேதம்) * கோடியவனிழல், † சேர்ந்தவர் தம்மைப், ‡ மரங்களுடைய வெய்யகாட்டிடை, || அமைச்சேக்கை.

எ - து: * பலவும்படித்தல் பொருந்திய படிக்கையிடத்தே துயிலிடத்து நீ அவள் வருத்தம் அறியாயாய் அவள் முயங்கிய கையை விட்டு நீங்குவாயாயினுந் தனிமைகொண்டு வருந்துமவள் கூட்டத்திற்கு இடையே பிரிதலே மனத்தேகொண்டு வேற்றுநாட்டிடத்தே நிலைநில்லாத பொருளினிட்டத்தே நீ போவையென்று யான்கூறக்கேட்பின் நெஞ்சு அழிந்துகெட்டுப்போக மிகவும் ஒளிகெடுவாளோ? இறந்துபடுவாளே; எ - று.

இனிபவள் ஒளியோடற் † பாலோவென்க.

‡ பலபடையாவன: (க)"சிறுபூளைசெம்பஞ்சு வெண்பஞ்சு சேணை, முறுதூவி தாமிவையோ ரைந்து." என்பனவாம்.

‖ ஓடற்பாள் முற்றுவினைத்திரிசொல். அறியாய், வினையெச்ச முற்று ஓகாரம், எதிர்மறை.

கஉ (உ) முனிவின்றி முயல்பொருட் கிறத்திநீ யெனக்கேட்பிற்
பனியகண் படலொல்லா படர்கூர்கிற் பாண்மன்னே
நனிகொண்ட சாயலா ணயந்துநீ (ங) நகையாகத்
துனிசெய்து நீடினுந் துறப்பஞ்சிக் கலுழ்பவள்

எ - து: மிகுதியைக் கொண்ட மென்மையையுடையவள் நீ ஓர் விளையாட்டை விரும்பி விளையாட்டாக ஒரு நீக்கத்தைச்செய்து அதிலே சிறிது

---

1. பிரிது நாமெனினே" அகம். நு. (ஆ) "மடவைகா ணன்னெஞ்சே மாண்பொருண்மாட் டோடப், புடைபெயர் போழ்த்து மாற்றாள் - படர்கூர்ந்து, விம்மி யுயிர்க்கும் விளங்கிழையா ளாற்றுமோ, நம்மிற் பிரிந்த விடத்து" ஐந் - ஐம். ஙகூ. (இ) "தெளித்தபூம் பள்ளியிற் சிறிது நீங்கினு, மளப்பருந் துயரொடு மவல மெய்துவேன்" நைடதம். பிரிவு. கஉ.

க. "சிறுபூளை.....முறுதூவி சேக்கை யோரைந்து" என்பது சீவக. அந.அ. மேற்கோளிற்காணப்படும் பாடபேதம்.

உ. (அ) "முனியாதார் முன்னிய செய்யுந்திரு" நான். சo. (ஆ) "தனியேம்யா மென்றொருவர் தாமடியல் வேண்டா, முனிவில ராகி முயல்க முனியாதார், முன்னிய தெய்தாமை யில்" பழ. ககங. (இ)துஞ்சலென்பது உறக்கம்; அதுவும் உறங்காமை போலாமையின் மெய்ப்பாடாயிற்று; "முனிவின்றி (.....கண்படலொல்லா படர்கூர்கிற் பாண்மன்னே") எனவரும். என்பர் இளம் பூரணர்; தொல். மெய்ப். சூ. கஉ.

ங. "நடுங்குதல் காண்மார் நகை குறித்தனரே" கலி. கங.

(பிரதிபேதம்) * பதம்படித்தல், † பாலனோ, ‡ படையாவன், ‖ ஒளியோடறான்.

பொழுது நீட்டிப்பினும் அத்துணை நீக்கத்துக்கு அஞ்சிக் கலங்குகின்றவள் யாம் இவளைப் பிரிகின்றேமென்னும் வெறுப்பின்றி மூழுன்று தேடும் பொருள் காரணமாக நீ போவையென்று யான் கூறக்கேட்பின் நீரையுடையனவாகிய கண்கள் மிகவும் உறக்கத்தைப் பொருந்தாவாய் நினைவு மிகுவாளோ? இறந்து படுவாளே; எ - று.

கசு பொருண்மைக்கிப் பிரிந்துநீ போகுதி யெனக்கேட்பின்
மருண்மைக்க மடிந்தாங்கே மயல்கூர்கிற் பாண்மன்னே
விருண்மைக்க மிடையின்றீ யீரத்தி னீபன்றநின்
னருண்மைக்க மழியினு மவலங்கொண் டழிபவள்

எ - து: மனத்திற்கு இருளைத் தருகின்ற பார்வை இடையின்றி * அருளிடத்துச் சென்றபார்வை நீங்கினும் வருத்தங்கொண்டு நெஞ்சழிபவள் நீ பொருளை நன்றென்று கருதித் தன்னைப்பிரிந்து அவ்விடத்தே போவை யென்று யான் கூறக் கேட்பின், கண்டார் மருளும் அழகுகெட்டு மிகவும் மயக்கம் மிகுவாளோ? இறந்துபடுவாளே; எ - று.

இவை மூன்றும், தாழிசை.

எனவாங்கு, அசை.

இது தனிச் சொல்.

உக வினைவெஃகி (க) நீசெலின் விடுமிவ ளுயிரெனப்
புனையிழாய் நின்னிலை யான்கூறப் பையென
நிலவுவே னெடுந்தகை நீளிடைச்
செலவொழிந் தனளுறற் செறிகநின் வளையே

எ - து: புனைந்த பூணினையுடையாய்! இவளுடைய உயிர் நீ பொருளைத் தேடுதலே விரும்பிப் போகின், தானும்போமென்று நின் பிரிவாற்றுமையை யான் சொல்ல, புகழ்ச்சி நிலைபெறும் வேலினையுடைய நெடிய தகையினையுடையான் நீண்ட வழியிடத்துப் போக்கைப் பையெனத் தவிர்ந்தனன்; இனி நின் † வளைகள் கழலாதிருப்பனவாக; எ - று.

ஆல், அசை.

இதனால், தலைவிக்குப் புணர்வென்னும் உவகையும் தலைவற்கு இழிவும் தோழிக்கு அச்சமும் பிறந்தன.

இது சுரிதகம்.

இம்மூ ஏழடித்தரவும் நான்கடித்தாழிசையும் அசைநிலையான அடை நிலைக்கிளவியும் நான்கடிச் சுரிதகமும் பெற்று வந்த ஒத்தாழிசைக்கலி. (க)

க. "எங்ஙனமோ நெடுந்தகாய் நீ செல்வு, தங்ஙனம் கொண் டிதற்குமிவ ளரும்பெறலுயிரே" கலி. இ: கஅ - க. "நின்னின், றிணைமப்புனவரை வாழரண் மடவோளே" கலி. உக: கஉ - ங.

(பிரதிபேதம்) * அவனிடத்துச் சென்ற, † வளை கழலாதிருப்பன.

(கக) (க)அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பணைவென்று பேணுரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி ;

சுக. அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்று ரக்காட்டிட்
டிடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடிபூட்டிப் பின்னுண் ணுங்குங் களிறெனவு முரைத்தனரே ;

கஅ. இன்பத்தி னிகந்தொரீஇ யிலேதீர்ந்த வுலகவையாற்
றுன்புறூஉந் தகையவே காடென்று ரக்காட்டு
ளன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே ;

ங. அன்னபிறவு மென்பதனுற் கொள்ளப்படுவனவற்றுள் இன் உவமச் (பிரதிபேதம்) * முனைப்படை † கணைத்தொடை.

(க) பொருள்கொண்டு புண்செயி னல்லதை யன்போ
டருள்புற மாறிய வாரிடை யத்தம்

எ - து: வந்து கூடுதலேயுடைத்தாகிய படையினையுடைய படை யோடே அரசர்கள் வந்து போர் செய்யினும் அழகினையுடைய நிலமரத்தாற் செய்த வலிய வில்லினது முறுக்குதலேயுடைய நாணிலெழுந்த, சிங்கம் இடித்தாற்போன்ற சிறுநாணெலியாலே அவ்வரசரை முதுகுகாண்டலன்றி அம்பை வில்லிலே தொடுத்தலே நாணும், கடிய துடியினது ஆரவாரத்தினை யும், வலியினை யுடைத்தாகிய பார்வையினையுடைய கழுத்துவலிய கலை யினது கொம்புபோலே நேர்போகாமற் றிருகி முறுக்குண்டு தாழ்ந்த தாடி யினையும், வெவ்விதான கடிய சினத்தினையுமுடைய கெடாத மறவர், வழி போவாருடைய பொருளைப் பறித்துக்கொண்டு அவர்க்குப் புண்ணைக் கொடுத்து விடுதலன்றி, அன்போடே அருளும் அவ்விடத்தினின்றும் கை விட்டுப்போன அரிய இடத்தையுடைய காட்டிடத்தே; எ - று.

நாணும் மறவரென்க.

இது தரவு.

அன்றியென்னும் வினையெச்ச வினைக்குறிப்பு அல்லதையெனவி னைக் குறிப்பு மூற்றாய்த் திரிந்தது. (உ) அருள் அன்பிற்குக் காரணமாய் மனத்து நிகழ்வது.

கo புரிபுரீ புறமாறிப் போக்கெண்ணிப் புதிதீண்டிப்
பெருகிய செல்வத்தாற் பெயர்த்தர லொல்வதோ
(ரு) செயலியந் தளிரேய்க்கு மெழினல மந்நலம்
* பயலியா லுணப்பட்டுப் பண்டைநீ ரொழிந்தக்கால்

எ - து: நீ புறப்பொருளை விரும்பி அகப்பொருளைக் கைவிட்டு அதிலே போனதெண்ணி இவளுடைய அழகையுடைய நிறம் அசோகினது அழகை யுடைய தளிரையொக்கும் அத்தன்மைத்தாகிய நிறம் பசலைநிறத்தாலே கைக்கொள்ளப்பட்டுப் பண்டைநீர்மைபோனக்கால் நீ போக்கெண்ணுகையி னலே முன்பு உள்ளதன்றிப் புதிதாகத் திரண்டு பெருத்த செல்வத்தினலே மீட்டல் பொருந்துமோ; எ - று.

நீ புறம் புரிபு மாறியென்க.

சொல்லாய் வந்ததற்கு, "மருப்பிற் றிரிந்து மறிந்து வீழ்தாடி" என்பது மேற்கோள். தொல். உவம. சூ. கக. இளம்.

க. "பொருள் கொண்டு புண்செயி னல்லதை யார்க்கு, மருளிலெயி னர்" சீலப். கஉ. [குறிப்பும் பார்க்க.

உ. 'அருளுடைமை' என்பதன் பொருளும் இந்நூற் பக்கம். உஅ: ரு.

ரு. "செயலியந் தளிரேய்க்கு மெழினலம்" என்பது தத்தமரபிற் றோன்றுமன் பொருளே யென்பதற்கும் (தொல். உவம. சூ. கஎ. இளம்.) பொதுச் சூத்திரத்திற்கூறிய வரய்பாடு உருவுவமத்தினிங்கண் அருகி வருதற்கும் (தொல். உவம. சூ. கசு. பே.) மேற்கோள்.

(பிரதிபேதம்) * பசலியால்.

செல்வமென்றது துறவறத்திற் சேறற்குக் கற்ற கல்வியை. அது (க) வானப்பிரத்தம்.

"உண்டற் குரிய வல்லாப் பொருளே, யுண்டன போலக் கூறலு மரபே." (உ) என்பதனுள் உண்ணப்பட்டென்றார். இதனுட் சொல்லுமுவன்றி, "செய்யாமாபித் ரெழிற்படுத் தடக்கலும்" (ங) அமைத்தார்.

கசு (சு) பொய்யற்ற கேள்வியாற் புரையோரைப் படர்ந்துநீ
மையற்ற படிவத்தான் மறுத்தர லொல்வதோ
திங்கதிர் மதியேய்க்குந் திருமுக மம்முகம்
பாம்புசேர் மதிபோலப் பசப்பூர்ந்து தொலிந்தக்கால்

எ - து: இவளுடைய திருமுகம் இனிய கிரணங்களையுடைய திங்களை யொக்கும்; அந்த முகம் பாம்பு சேர்ந்த திங்களைப்போலப் பசப்புப் பரந்து கெட்டக்கால் மெய்ப்பொருளுணர்ந்தோரை நினைந்து நீசென்று அவரிடத்துக் கற்ற பொய்யற்ற நூற்கேள்விகளாலே முன்பு மனத்திற் றங்கிய மாசற்ற விரதங்களாலே மீட்டல்பொருந்துமோ; எ - று.

க. வானப்பிரத்தமென்பது: மனைவியுடனுவது தனித்தாவது தவஞ் செய்துகொண்டு காட்டில் இருத்தல்.

உ. (தொல். பொருளியல், சூ. கஅ. 'உண்டற்குரிய' இளம்; சூ. ககூ. நச.) இதனுரையில் உண்டற் ரெழிலுக் குரியவல்லாத பொருளை உண்டனவாகக்கூறலு மரபென்பதற்கு, "பசலையா லுணப்பட்டுப் பண்டைநீ ரொழிந்தக்கால்" என்பது மேற்கோள்.

ங. (தொல். பொருளி. சூ. உ.

சு. "பொய்யற்ற கேள்வியாற் .. . .லொல்வதோ" என்பதனை (அ) அந்தணர் முதலிய மூவரும் இல்லறம் நிகழ்த்துகின்ற காலத்தே மேல்வரும் துறவற நிகழ்த்துதற்காக அவ்வறத்தைக் கூறு நூல்களை யுணர்ந்து அதன்பின்னர்த் தத்துவங்களை உணர்ந்து மெய்யுணர வேண்டுதலின் அவர்க்கு ஒதற்பிரிவு சிறந்ததென்று கூறி அதற்கும் (தொல். அகத். சூ. உசு.), (ஆ)ஒதற்குப் பிரிவலெனக் கேட்ட தோழி கூறியதற்கும் (தொல். அகத். சூ. சஎ.), (இ) "அந்தரத் .....வழிகெட வொழுகுதற்கும் (இது முன்புபோலக் குற்றஞ்சான்ற பொருளை வழுவமைத்துக்கொள்ளாது குற்றமென்றே கருதிக் கடிதலாம். மையற்ற படிவமெனத் தலைவன் கூறியதனைத் தோழிகூறியவாறுகாண்க) (தொல். கற்பியல். சூ. ஙி.) மேற்கோள்காட்டினர்; நச.

(ஈ) "பொய்யில் கேள்விப் புலமையினோர்" (உ) "உண்ட பேதைமை மயக்கற வேறுபட் டருவங், கொண்டு மெய்யுணர் பவன்கழல் கூடிய தொப்பப், பண்டை வண்ணமாய் நின்றனள்" கம்பரீ. பாயிரம். சு. அகலிகை. எக.

இல்லறத்தே நின்று முண்ணுள்ள மாசறுத்து வானப்பிரத்தனுமென்றது. இஃது "அந்தரத் தெழுதிய வெழுத்தின் மான, வந்த குற்றம் வழிகெட வொழுகல்" (க) ஆம்.

பாம்பு சேர்வீடமும் பாடம்.

கஅ பின்னிய தொடர்நீவிப் பிறர்நாட்டுப் படர்ந்துநீ
மன்னிய புணர்ச்சியான் மறுத்தா லொல்வதோ
புரியவிழ் நறுநீலம் புரையுண் (உ) கண் கலுழ்பாணத்
திரியுமிழ் நெய்யேபோற் றெண்பனி யுறைக்குங்கால்

எ - து: இவளுடைய முறுக்கு அவிழ்ந்த நறிய நீலத்தையொக்கும் மையுண்கண்கள் அமையாவாய் அழுது, எரிகின்ற திரிகான்ற நெய்போலச் சுடும்படி தெள்ளிதாகிய நீரைத்துளிக்குங்கால் வேற்று நாட்டிடத்தே போய் நின்னைப் பிணித்த ஆசையாகிய சங்கிலியை அறுத்து நீலைபெற்ற தத்துவப் பொருள்களைக் கூடிய கூட்டத்தாலே மீட்டல் பொருந்துமோ; எ - று.

இது (ங) சன்னியாசம் வேண்டுமெனக் கொண்டமை கூறிற்று.

இது தலைவன் ஒதற்பிரிவாற் பெறும்பயன் கூறியவற்றை உணர்ந்த தோழி, அவற்றைக்கூறி அவை எக்காலத்துஞ் செய்யலாம்; இளமைமீட்டல் இவற்றுள் ஒல்லாதென்றாள்.

இவை மூன்றும், தாழிசை.

எனவாங்கு, * ஆங்கசை.

இது தனிச்சொல்.

உங அணையவை பொற்றி † நினையிய னாடிக்காண்
வளமையோ வைகலுஞ் செயலாகு மற்றிவண்
(சு) முளைநிரை முறுவலா ராயத்து ளெடுத்தாய்ந்த
(ரு) ‡ விளைமையுந் தருவதோ விறந்த பின்னே

க. தொல். கற்பி. சூ. நி.

உ. திரிக்குழாய் உருக்கும் நெய் கண்ணீர்த் துளிக்குவமையாதல். "கனல் சேர்ந்த திரிநெய்போன், மைசென்ற மலர்நீல வாட்டடங்கண் புன லுறைப்ப" திருவாலங்காட்டுப். சம்புமுனி தவம்புரி படலம். ஙஞ. "திரிவீழ்நெய்போற், செறிந்துகு கண்ணீர் மார்பிற் செறிதுகள் கழுவா நித்ப" பூவாளூர்ப். இரதியருச்சனை. ஙஙூ. என்பவற்றாலும் அறிய லாகும். திரிக்குழாய் நெய்யுருக்தல்: "சொரிசுரை கவரு நெய்வழி புராலிற், பாண்டில் விளக்குப் பரூஉச்சுட ரழல" பதிற். சுஎ: ஞ-சு. என்புழியும் கூறப்பெற்றுள்ளது.

ங. சன்னியாசமாவது: தன்பொருளினிடத்தும் மனைவிமக்கண் முதலிய சுற்றத்தினிடத்தும் தன்னிடத்துமுள்ள ஆசையை முற்றத்துறத்தல்.

சு. "முளைநிரை முறுவ லொருத்தியொடு" ஐங்குறு. ஙசஙூ.

ஞ. பின்னென்பது வினையெச்சமாக வருங்கால் இறந்த காலச்சொற் பற்றி (பிரதிபேதம்) * அசை, † நினையியலை, ‡ இளமையும்.

எ – து: * என்று யான்சொன்ன அனையவை செய்த நன்மைகளே நினைத்து அவை கெடாமற்பாதுகாத்துப் பின்னர் நீ ஆராய்ந்து தேடுகின்ற வற்றை ஆராய்ந்துபார். அக்கல்வியாலுண்டாம் வளப்பமோ இவ்விடத்தே யிருந்து நாடோறுஞ் செய்துகொள்ளுஞ் செயலாயிருக்கும்; அக்கல்வி, முளையையொத்த நிலையினையுடைய முறுவலையுடையாருடைய நிரைகளுள்ளே உயர்த்தாராய்ந்த இவளுடைய (க) இளமை போனபின்பு அவ்விளமையுந் தருவதோன்றோ? எ – று.

அனையவையென்றது, நிறத்தையும் முகத்தையும் கண்ணையும்.

வளமையோவென்னும் ஓகாரம் இழிவுசிறப்பு; இளமையுமென்னும் உம்மை சிறப்பு; தருவதோவென்னும் ஓகாரம் எதிர்மறை.

"ஓதலுந் தூது மூயர்ந்தோர் மேன" (உ) இதனை யுணர்க.

இது சுரிதகம்.

இதனால், தோழிக்கு இழிவுதோன்றிற்று; தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒன்பதடித் தரவும் நான்கடித் தாழிசையும் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கசு)

(கூ) (ங) பாடின்றிப் பசந்தகண் பைதல பனிமல்க
வாடுபு வனப்போடி வணங்கிறை வளையூர
வாடெழி லழிவஞ்சா தகன்றவர் திறத்தினி
நாடுங்கா னினைப்பதொன் றுடையேன்மன் னதுவுந்தான்;

வருதற்கு "இளமையுந் தருவதோ விறந்த பின்னே" என்பது மேற்கோள்; தொல். வினை. சூ. ஙக. கல்; சூ. நஉ. நச்.

க. (அ) இளமை யென்பது குழவிப் பருவமொழிந்த தாயிய யௌவன மென்னும் பொருளில் வந்தென்பதற்கு நச். 'இளமையுந் தருவதோ' என்பதை (சீவக. கசுடு) மேற்கோள் காட்டியிருப்பதும் (ஆ) இளமை யாவது காமச்செவ்வி நிகழ்வதொருகாலம். (தொல். கிளவி. டுஎ.) என விளக்கியிருப்பதும். ஈண்டு அறிதற்பாலன. (இ) "இறந்தபின் இளமை வாராது" என்பது தொல். வினை. சூ. ஙடு. சே.

உ. தொல். அகத். சூ. உசு.

ங. இச்செய்யுள், நான்கடித்தரவும் நான்கடியான் மூன்றுதாழிசையும் தனிச்சொல்லும் ஐந்தடிச் சுரிதகமும் ஒத்தாழிசைக் கலிப்பாவில் வந்ததற்கும் (தொல். செய். சூ. கஙக. 'போக்கியல்' இளம்; சூ. கஙஎ. பே. நச்.) தலைவியாற்றுமைகண்டுழிப் பிரிந்ததலைவன் மீண்டு வந்தானெனத் தோழி கூறியதற்கும். (தொல். அகத். சூ. சஐ. நச்.) மேற்கோள்.

(பிரதிபேதம்) * அனையவை.

கூ தொன்னலந் தொலைபீங்கியாந் துயருழப்பத் துறந்துள்ளார்
துன்னிநங் காதலர் துறந்தேகு மாரிடைக்
கன்மிசை யுருப்பறக் கனைதுளி சிதறென
வின்னிசை யெழிலியை யிரப்பவு மியைவதோ ;

கூ புனையிழா யீங்குநாம் புலம்புறப் பொருள்வெஃகி
முனையென்னர் காதலர் முன்னிய வாரிடைச்
சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுற வியைவதோ ;

கஎ ஒளியிழா யீங்குநாந் துயர்கூரப் பொருள்வயி
னளியொரீஇக் காதல ரகன்றேகு மாரிடை
முளிமுதன் மூழ்கிய வெம்மைதீர்ந் துறுகென
வளிதருஞ் செல்வனை வாழ்த்தவு மியைவதோ ;

எனவாங்கு;

கஅ செய்பொருட் சிறப்பெண்ணிச் செல்வார்மாட் டினையன
தெய்வத்துத் திறனேக்கித் தெருமர றேமொழி
யறனேடின் வையகத்து வான்றருங் கற்பினு
ணிறனேடிப் பசப்பூர்த லுண்டென
வறனேடி விலங்கின்றவ ராள்வினைத் திறத்தே.

இது தலைமகன் பொருள்வயிற்பிரிந்த இடத்து அவன் போகிய காட்டது கடுமை நினைந்து ஆற்றளாகிய தலைமகள் அவர் பொருட்டாக நாம் இவ்வகைப்பட்ட தெய்வங்களைப் பரவுதல் நங்கற்புக்கு இயைவதோ வேனா, கேட்ட தோழி அவ்வாற்றனே மீண்டனர் நீ கவலவேண்டா வெனக் கூறியது.

இதன் பொருள்.

பாடின்றிப் பசந்தகண் பைதல பணிமல்க
(க) வாடிபு வனப்போடி வணங்கிறை வளையூர
வாடெழி * லழிவஞ்சா (உ) தகன்றவர் திறத்தினி
நாடுங்கா னினைப்பதொன் றுடையேன்மன் னதுவுந்தான்

க. (அ) செய்புவென்னும் வினையெச்சம் நிகழ்காலங் குறித்து வருதற்கு 'வாடிபு வனப்போடி வணங்கிறை வளையூர' என்பது மேற்கோள் தொல். வினை. சூ. கூக. தெய்; கக. நச்; இ - வி. சூ. உசக.
(ஆ) 'வாடிபுவனப்போடி' கலி. கூக.உ: கச.

உ. காலிற்று வினையெச்சம் நிகழ்வும் எதிர்வும் பற்றிவருதற்கு 'அகன்றவர்

(பிரதிபேதம்) * அழிபஞ்சாதகன்றவர்.

எ - து: துயிலின்றிப் பசந்த கண்கள் வருத்தத்தை யுடையவாய் நீர்மல்க நிறம்வாடி அழகு கெடுகையினாலே வளைகள் வணங்கின முன் கையினின்றுங் கழல வெற்றியையுடைய அழகழிவுக்கு அஞ்சாதேபிரிந்தவர் கூற்றில் இப்பொழுது செய்வதாக நினைப்பதொரு காரியமுடையேன்; அத்தாற் பெற்றதென்? அக்காரியந்தானும் ஆராயுங்கால் நங்கற்பிற்குப் பொருந்துவதன்றாய் இராநின்றது; எ - று.

இஃது தரவு.

நி (க) தொன்னலந் தொலீஇங்கியாங் துயருழப்பத் துறந்துள்ளார்
துன்னிநங் காதலர் துறந்தேகு மாரிடைக்
கன்மிசை *யுருப்பறக் கனைதுளி சிதறென
வின்னிசை (உ யெழிலியை யிரப்பவு மியைவதோ

எ.- து: நங்காதலர் யாம் இயற்கை நலமுங் கெட்டு இவ்விடத்தே, யிருந்து வருத்தத்திலே அழுந்தும்படி நம்மைக் கைவிட்டுப் பின்னர் நினையாராய்ப் பொருண்மேல் அன்பு நெருங்கி நம்மேல் அன்பைத்துறந்துபோம் அரியவழியிடத்திற் கல்லின்மேல் உண்டான வெப்பம் நீங்கும்படி செறிந்த துளியைச் சிதறுவாயாக வென்று பராய் இனிய ஓசையை யுடைய (ங) மேகத்திற்கு உரிய ஞாயிற்றை இரத்தல்செய்யவும் † நங்கற்பிற்கு இயைவ தொருகாரியமோ? அல்லவே; எ - று.

திறத்தினி னாடுங்கால்' என்பது மேற்கோள். தொல். வினை. சூ. ங்உ. சே; நச்; தொல். எச்ச. சூ. கக. நச.

க. "தொன்னலந்.....காமுறலியைவதோ" என்பதனைடு "ஞாயிறு காயாது மரநிழற் பட்டு, மலைமுதற் சிறுநெறி மணன்மிகத் தாஅய்த், தண்மழை தலைய வாகுக நன்றீத்துச், சுடர்வாய் நெடுவேற் காளையொடு, மடமாவரிவை போகியசுரனே" தூறு நீ. ங்உஅ. "சூன்முதிர் கொண்மூ மின்னுபு பொழியக், கானங் கடுமை நீங்குக, மானுண் கண்ணீபோகிய நெறியே" நமீழ்நெறி. என்பவை ஒருவாறு ஒப்பு நோக்கற் பாலன. 'தொன்னலம்' கலி. உஎ: கச; எஎ: கங; கo0: உo; கஉச: கக.

உ. எழிலி கனலி வளிதருசெல்வ னென்பன "வீறுமழை வெய்யசுடர் வீசுவளி யென்றிவை தமக்குதவுகைம், மாறு மூளதோ" "பொழி யருள் வலக்கணின்று புரவியே மூடையோன் காற்றுச், சுழிபுனல் மிழுமேகந் தோன்றின" எனச் சேர்த்துக் கூறப்பெறுதல் காண்க.

ங. (அ) "வெய்ய வன்கணுள தாயவன் மறைந்திட வெழு மேகமே" மோகவதைப்பரணி. (ஆ) "பரிதி யுலகமெல்லாம், விருப்பவிர் மேகம் விளைப்பதன்றே" தணிகை. களவு சகஉ. (இ) "தினஞ் செய்வோன்.....பைங்கூழ்கள், கரிந்தன தளிர்ப்ப வெள்ளி வீழுன்ன கணமழை பொழிவது கடுப்ப" நைட. அன்னத்தைத். இ.

(பிரதிபேதம்) * உருப்பிற, † கற்பிற்கு.

கூ (க) புனையிழா யீங்குநாம் புலம்புறப் பொருள்வெஃகி
முனையென்னுள் காதலர் முன்னிய * வாரிடைச்
(உ) சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ

எ - து: புனைந்த பூணினையுடையாய்! காதலர் இவ்விடத்தேயிருந்து நாந் தனிமையுறும்படி பொருளே விரும்பிப் பகைப்புலமென்றீ கருதாராய்ப்போதற்கு†நினைந்த அரியவழியிடத்தில் மரக்கொம்புகள் வாடும்படியாகச் சிறக்கும் நின் (ஈ) சினந் தணிவதாகவென்று பரவிச் செறிந்த கதிரையுடைய ஞாயிற்றை நாம்வேண்டிக்கோடலும் நங்கற்பிற்கு இயைவதொரு காரியமோ? அல்லவே; எ - று.

(சு)நாமென்னும் படர்க்கையுளப்பாயி இடவழுவமைதி; தணிந்தீக, வியங்கோட் டிரிசொல்; விகாரமாய் நின்றது.

கஙூ ஒளியிழா யீங்குநாந் துயர்கூரப் பொருள்வயி
னளியொரீஇக் காதல ரகன்றேகு மாரிடை

க. 'புனையிழாய் .. .. ..காமுற லியைவதோ' என்பது தெய்வம் பராயதற்கு மேற்கோள். தொல். அகத். சூ. சடு. 'எஞ்சியோர்க்கும்' இளம்.

உ. (அ)"பாலைக்கு, 'சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக், கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ' எனவும், 'வளிதரு செல்வினை வாழ்த்தவு மியைவதோ' எனவும் ஞாயிற்றைத் தெய்வமாக்கி அவனிற் றோன்றியமழையினையுங் காற்றினையும் அத்தெய்வப் பகுதியாக்கிக் கூறுபவாலெனின், எல்லாத்தெய்வத்திற்கும் அந்தணர் அவிகொடுக்குங் கால் அவுகி ஆதித்தன்கட் கொடுக்கு மென்பது வேத முடிபாகலின், ஆதித்தன் எல்லா நிலத்திற்கும் பொதுவென மறுக்க. இவ்வாசிரியர் கருப்பொருளாகிய தெய்வத்தினை முதற்பொருளோடுகூட்டிக்கூறியது தெய்வ வழிபாட்டுமரபு இதுவே, ஒழிந்தது மரபன்று என்றற்கு. எனவே அவ்வந்நிலத்தின் தெய்வங்களே பாலைக்குந் தெய்வமாயிற்று" என்பது (தொல். அகத். சூ. இ. நச.) காணப்படுவது. (ஆ) இப்பகுதியைத் தெய்வ மஞ்சலுக்கு மேற்கோள் காட்டித் தெய்வத்திறம் நோக்கித் தெருமந்த தென்பர் (தொல். மெய்ப். சூ. உச.) பேராசிரியர். இ - வி. நூலாரும் தெய்வ மஞ்சலுக்கு மேற்கோள் காட்டுவர். இ - வி. சூ. இஅ.

ஊ. சினம் என்றது வெம்மையை, 'காய்சினந் தவிராது கடலுளர் பெழுதரு, ஞாயிறு' புறம். இக. என்பதன் உரையைப் பார்க்க, 'கதிர் சினந்தணிந்த கையறுமாலை' என்பது தருநீ. ஈஅ.

எ. யாமென்பது படர்க்கை யுளப்பாடென்றும் நாமென்பது முன்னிலை யுளப்பாடென்றும் தொல்காப்பிய வுரையில் கல்லாடர் கூறுதலால் இங்கு மூலம் உரை விசேடவுரை மூன்றிலு முன்ன நாமென்பது யாமென இருக்க வேண்டியது போலும்.

(பிரதிபேதம்) * ஆற்றிடை. † நினைந்தவழி.

மூளிமுதன் மூழ்கிய வெம்மைதீர்ந் தூறுகென
வளிதருஞ் செல்வனை வாழ்த்தவு மினையவதோ

எ - து: ஒளியினையுடைத்தாகிய பூணினையுடையாய்! காதலர் இவ்விடத்தேயிருந்து நாம் வருத்தமிகும்படி நம்மிடத்து அளித்தலை நீங்கிப் பொருளிடத்தே வேட்கை சென்று நம்மை அகன்றுபோம் அரிய வழியிடத்து உலர்ந்த சிறுதூறுகளிலே தங்கி வந்த வெப்பமாறி அவன்மேலே சேர்வாயாக வென்று பரவிக் காற்றைத் தருகின்ற ஞாயிற்றினை வாழ்த்துதலைச்செய்யவும் நமக்கற்பிற்கு இயைவதொரு காரியமோ? அல்லவே; எ - று.

மழையையும் காற்றையுந் தருகின்ற (க) ஞாயிறு பாலைக்குத் தெய்வ மாயினமை "மாயோன் மேய" என்னும் (உ) சூத்திரத்தாலுணர்க.

இவை முன்றும், தாழிசை.

எனவாங்கு

எ - து: என்றுசொல்லி; எ - று.

ஆங்கு அசை.

இது தனிச்சொல்.

கஅ (ங) செய்பொருட் சிறப்பெண்ணிச் * செல்வார்மாட் டினையன
தெய்வத்துத் திறனேக்கித் தெருமர றேமொழி
(ச) வறனெடின் வையகத்து (டு) வான்றருங் கற்பினு
னிறனெடிப் பசப்பூர்த லுண்டென
வறனெடி விலங்கின்றவ ராள்வினைத் திறத்தே

க. (அ)பக்கம் கஉ: உ-ஆம் குறிப்புள்(அ)என்பதன் பின்னுள்ளது இங்கே ஆராய்தற்பாலது. (ஆ) பரிதியுஞ் செல்வனும் திகிரியுஞ் செல்வியும் பாலைக்குத் தெய்வமென்பர், அடியார்க்கு நல்லார். சிலப். ப. கஅ.

உ. தொல். அகத். சூ. டு.

ங. "வினையின் நெருகுதி காலத்தியலும்" என்னுஞ் சூத்திரத்து, 'செய்பொருட்சிறப்பெண்ணி' என்பதைமேற்கோள்காட்டி, 'பொருட்கேற்ற காலத்தை விரிக்க' என்பர் நச்சினார்க்கினியர். தொல். எசச. சூ. கக.

ச. 'வறனே டிலகின்' மணி. கடு: டுங.

டு. (அ) "அருமழை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையளே" கலி. நக: சு. (ஆ) "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை" குறள். டுடு. (இ) "பெண்பால் கொழுநன் வழிச்செலவு மிம்மூன்றும், திங்கண்மும் மாரிக்கும் வித்து." தீரி கடுகம். கஅ. (ஈ) "வான்றருங் கற்பின் மனையுறைமகளிரிற், றான்றனி யோங்கிய தகைமைய ளன்றே" மணி. கடு: எ - அ. (உ) "பொழிமழை தருஉ, மரும்பெறன் மரபிற் பத்தினிப் பெண்டிரும்" மணி. கசு: சக - டுஎ. (ஊ) "மண்டிணி ஞாலத்து மழை

(பிரதிபேதம்) * செல்வர் மாட்டு.

எ - து: தேமொழி! *இத்தன்மையவாகிய மற்றத் தெய்வங்களினுடைய கூறுபாடெலாயும் மனத்தான்வேண்டிக்கொள்ளக்கருதித்தேடுகின்ற(க)பொருளான் உண்டாஞ் சிறப்புக்களை நினைத்துப் போகின்றவரிடத்து மனஞ் சுழலாதே கொள்; வற்கடமான காலத்தாலே வையங்கெட்டதாகில் அவ்வையத்திடத்தே மழையைப் பெய்விக்குங் கற்பினையுடையாளுடைய நிறங் கெட்டுப் பசப்புப் பரத்தலுண்டாமென்று கருதி அவருடைய முயற்சியிடத்தே அறக்கடவுள் விரைந்து சென்று விலக்கிற்று; † இனிவருந்தல்; எ - று.

‡ இது (உ) தங் குலதெய்வமன்றி எல்லார்க்கும் பொதுவாதலிற் கற்பிற்கு இயைவதோவென்றுள். அது "தெய்வமஞ்சல்"(ங)என்பதனுள் உணர்க. இது "செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே, || வன்புறை குறித்த தவிர்ச்சி யாகும்" (சு) என்பதனுல் தலைவன் செலவழுங்கினமை கூறிற்று.

இது சுரிதகம்.

இதனுல், தலைவிக்குப் புணர்வென்னும் உவகையும் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இது "தாவே தாலு நாலடி யிழிபாய்" (ஙு) எனச் சிறுமைக்கு எல்லை கூறிய நான்கடித்தரவிற்கு "இடைநிலைப்பாட்டே, தரவகப்பட்ட மரபினதென்ப" (சூ) என்றதன்கண் — மரபினதென்ற இலேசால் நான்கடியாகிய

வளந் தருஉம், பெண்டி ராயிற் பிறர்நெஞ்சுகாஅர்" (எ)"வான்றருங் கற்பின் மனையறம் பட்டேன்" (ஏ) "ஆங்கவை யொழிகுவை யாயி னுயிழை, யோங்கிரு வானத்து மழையுநின் மொழியத" மணி. உஉ: சுரி - சு, நிருத்; சுஅ - கூ. (ஐ) "வானம் பொய்யாது.....பத்தினிப் பெண்டிருந்த நாடு." சீலப். கரு: கசரி - எ. (ஒ) "மீடி சான் மழை பெய்யெனப் பெய்தலும், ...பாகொன்மிகு பத்தினிக் காவதே." வளையாபதி. (ஓ) "அன்னவர் கற்பினின்றன காலமாரியே" கம்ப. நாட்டரு. ருகூ. (ஔ) "கற்பினார்த மெய்யுரையி னிற்கு, மீண்டையுள தெய்வதமு மாமூகிலும்" கந்த. மார்க்கண். சஎ. (ஃ) "இவளிடம் திங்கண்மும் மாரியும் பெய்திடுமே" வேங்கைக் கோவை. ஈ எசு. (அஅ) "சாரதை யென்பவ, ளினக்கனப்பெய லீட்டுமெய்க் கற்பிஞள்" விநாயக. மகோற்கடர். ஞி. "மாரிக்கு வித்தன்ன மடமாதர் கற்போங்கி மல்கும்" திருவாப்ப. இடவபுர. ச.

க. பொருள். சிறப்புக்குக் காரண மென்பதை இந்நூற்பக்கம் எஉ: க, கூக: உ. குறிப்புக்களால் அறிக.

உ. "திருவாக்குந் தெய்வதையு மெஞ்ஞான்றுந் தேற்றவழிபாடு, செய்வதே பெண்டிர் சிறப்பு" என்பதும் குல தெய்வவழிபாட்டைக் குறிப்பதாம்.

ஙு தொல். மெய்ப். சூ. உச. ச. தொல். கற்பி. சூ. சச.

ஞி. தொல். செய். சூ. கஙூ. சு. தொல். செய். சூ. கஙச.

(பிரதிபேதம்) * இத்தன்மையாகிய பிறதெய்வ, † இனிவருந்தலென்று ஆற்றுவித்தாள, ‡ இது குலதெய்வ, || வன்பொறை குறித்தவிர்ச்சி, ÷ மரபினென்றவிலேசால்.

இடைநிலைப்பாட்டும் பெற்றுத் தனிச்சொல்லும் பெற்றுத் "தரவியலொத்தும்" (க) என்ற உம்மையான் எறியும் வருமென்றலிற் றாவின் மிக்க சுரிதகமும் பெற்று வந்த ஒத்தாழிசைக்கலி. (கடு)

(ஈ எ) (உ) படைபண்ணிப் புனையவும் பாமாண்ட பலவணிப்
புடைபெயர்ந் தொடுங்கவும் புறஞ்சேர வுயிர்ப்பவு
மூடையதை யெவன்கொலென் றூறளந் தவர்வயி
னடைசெல்லாய் நனியேங்கி நடுங்கற்கா ணறுநுதால்;

ஙி தொல்லெழி றொலிவெ டியருழப்பத் துறந்துநீ
வல்வினை வயக்குதல் வலித்திமன் வலிப்பளவை
நீள்கதி ரவிர்மதி நிறைவுபோ னிலையாது
நாளினு நெகிழ்போடு நலனுட னிலையுமோ;

சு ஆற்றலை யடவிவ ளணிவாட வகன்றுநீ
தோற்றஞ்சா றொருபொருண் முயறிமன் முயல்வளவை
நாற்றஞ்சா னளிபொய்கை யடைமுதிர் முகையிற்குக்
கூற்றாழ்போற் குறைபடூஉ வாழ்நாளு நிலையுமோ ;

கஈ வகையெழில் வனப்பெஞ்ச வரைபோக வலித்துநீ
பகையறு பயனினை முயறிமன் முயல்வளவைத்
தகைவண்டு புதிதுண்ணத் தாதவிழ் தண்போதின்
முகைவாய்த்த தடம்போலு மிளமையு நிலையுமோ ;
எனவாங்கு ;

கஅ பொருந்தியான் முன்வேட்ட பொருள்வயி னீணந்தசொற்
றிருந்திய யாக்கையுண் மருத்துவ னூட்டிய
மருந்துபோன் மருந்தாகி மனனுவப்பப்
பெரும்பெயர் மீளி பெயர்ந்தனன் செலவே.

இது பகைவர் திறைதந்த நாடு காத்தற்கு (தலைவன்) பிரிகின்றமை யுணர்ந்து தலைவி வேறுபட்டமை கண்டு தோழி அவனை எதிர்ப்பகடு அவனது ஆற்றலையும் இளமையதருமையுங் கூறிச் செலவழுங்துவித்தமை தலைமகட்குக் கூறியது.

க. தொல். செய். சூ கஈ.எ.

உ. "படைபண்ணிப் புனையவுமென்னும் பாலைக் கலியுள் 'வல்வினை வயக்குதல் வலித்திமன்' என்பதற்கு வலிய போர்செய்து அப்பகைவர் தந்தாட்டை விளக்குதற்கு வலித்தி யெனவும், 'தோற்றஞ்சா றொருபொருள்' என்பதற்குத் தோற்றம் அமைந்த திரண்டபொரு

இதன் பொருள்.

படைபண்ணிப் புனையவும் பாமாண்ட * பலவணைப்
புடைபெயர்ந் தொடுங்கவும் † புறஞ்சேர வுயிர்ப்பவு
முடையதை யெவன்கொலென் றாறளந் தவர்வயி
னடைசெல்லாய் நனியேங்கி நடுங்கற்கா றறுதலால்

எ - து: றறுதலால், படைக்கலங்களைப் புதியவாகப் பண்ணிக் கை செய்யவும் காரியத்தின் நினைவாலே முயங்குதலைத் தவிர்த்து பரத்தன் மாட்சிமைப்பட்ட பலவாகிய அணையிடத்தே கிடக்கவும் அது ‡ பொருது அவன்புறத்தே புல்லுதலாலே யாம் பிரிந்தால் இவள் எங்ஙனம் ஆற்றுவ ளென்று கெட்டுயிர்ப்புக்கொள்ளவும் இவன் மனத்திலுடைய காரியம் எத் தன்மையதுகொலென்று கருதிக் கூட்டத்திற்கு இடையூறு வருமென்று கருதியவர் (?) நினைவிடத்தே நீ ஒழுகுதலைச் செய்யாயாய் மிகவும் எங்கி நடுங்காதேகொள். எ - று.

இது நிகழ்ந்தது நினைத்து வருந்தினுள்.

இது கரவு.

ஈ தொல்லெழி லிழலிவ டியருமுப்பத் துறந்துநீ
வல்லினை வயக்குதல் வலித்திமன் || வலிப்பளவை
நீள்கதி ரவிர் (க) மதி நிறைவுபோ னிலையாது
நாளினு நெகிழ்போடு நலனுட னிலையுமோ

எ - து: இவள் இயற்கை நலம் கெட்டு வருத்தத்தே அழுந்த நீபிரிந்து வலிதாகிய காவலாலே பகைவர் தந்த நாட்டை விளக்குதலை மிகவுந் துணிவை; அங்ஙனந்துணியுமளவில் நீண்ட கதிரினையுடைய விளங்குகின்ற திங்களினிறைவு, பின்னர்ஒழுகத் தேயுமாறுபோலநிலைல்லாமல் நாடோறுந் தன்னிலைகுலைந்து கெடும் அழகு இவளுடன் நிலைபெறுமோ; எ - று.

ளாவன அந்நாடு காத்துப் பெற்ற அறம்பொரு ளின்பமெனவும், 'பகையறு பயனே' என்பதற்குப் பகையறுதற்குக் காரணமாகிய நாடாகிய பயனைத்தரும் வினையெனவும் 'வேட்டபொருள்' என்ப தற்கு அறம்பொரு ளின்பமெனவும் பொருளுரைத்துக் கொள்ளுக." என்பது தொல். அகத். சூ. உஅ. நச்.

க. காளுக்கு நாள் குறையும் பொருளுக்கு மதிதேய்தலை உவமை கூறு தல் (அ) "குணமுதற் றேரன்றி யாரிருண் மதியிற், றேய்வன கெடுக நின் றெவ்வ ராக்கம்" மதுரைக். ககடு - கூ; (ஆ) "வாணூர் மதியம்போல் வைகலுந் தேயுமே, தானே சிறியார் தொடர்பு" நாலடி. கஉடு. (இ)"மதிப்பின்னீர பேதையார் நட்பு" குறள். எஅஉ. (ஈ) "குறைமதிக்கதிரென மாய்கவென் றவமென்றான்" கந்த. மார்க் கண். நிகூ. (உ) "மூறைபோது மாசர் திருக் குறைமதிபோன் முழுது மிறும்" இரகு. அரசியற் கூ.

(பிரதிபேதம்) * பயினை, † புறஞ்சேரா, ‡ பெருது, || வலிப்பனை.

* காளின்: இன், அசை; ஓகாரம் எதிர்மறை.

ஆற்றலே யடவிவ ளணிவாட வகன்றுநீ
தோற்றஞ்சா ரெருகுபொருண் முயறிமன் † முயல்வளவை
நாற்றஞ்சா னளிபொய்கை யடைமுதிர் முகையிற்குக்
‡ கூற்றாழ்போற் குறைபடூஉம் வாழ்நாளு நிலையுமோ

எ - து: இவள் வலியையுடைய காமநோய் அடுகையிலுலே அழகு கெடும்படி நீ பிரிந்து பகைவர் தந்த நாட்டைக் காத்துப் பெறும் விளக்கம் அமைந்த திரளும் பொருள்களைத் தேடுதற்கு மிகவும் முயல்வை; அங்ஙனம் முயலுமளவில் நாற்றம் அமைந்த பெருமையையுடைய பொய்கை இலையை விட்டு முற்றின தாமரைமுகைக்குக் (க) கூற்றமாகிய (உ) அலர்ச்சி அதன் குறைவிற்குக் காரணமாயிறுற்போல இத்துணைக்காலம் இருவென விதித்த காலங் குறைபட்டு வருவதற்குக் காரணமான வாழுகின்ற நாள்களும் இவளுடன் நிலைபெறுமோ; எ - று.

தொகுபொருளாவன, (ங) அறமும் பொருளும் இன்பமுமாம்.

ககஙு வகையெழில் வனப்பெஞ்ச வரைபோக வலித்துநீ
பகையறு பயனீ முயறிமன் || முயல்வளவைத்
தகை (ச) வண்டு புதிதுண்ணுந் தாதவிழ் தண்போதின்
முகைவாய்த்த தடர்போலு மினையையு நிலையுமோ

எ - து: இவள் கூறுபாட்டையுடைய உறுப்பழகுந் தோற்றப்பொலிவுங் கெடும்படி மலையைப்போக நீ துணிந்து பகையறுதற்குக் காரணமான நாடாகிய பயனைத்தரும் காவற்பிரிவை மிகவும் முயல்வை; அங்ஙனம் முயலுமளவில் அழகையுடைய வண்டுகள் தன் புதுமையை நுகரும்படி யாகத் தாதை அலர்ந்த குளிர்ந்த பூ இனிய முகையென்கின்றவை வாய்த்

க. "ஆரழைக்குத் தானீன்ற காய்கூற்றம்" முதுமை.

உ. ஊழ்த்தல் அலர்தலென்னும் பொருளில் வருதலை (அ) "நனைபூழ்த்த செருந்தியும்" (ஆ) "இணரூழ்த்த மரத்தொடும்" (இ) "அரும் பூழ்த்து மரமெல்லா மலர்வேய" (ஈ) "இணரூழ் கொண்ட..... வேங்கை" (உ) "இணரூழ்த்த கமழ்தோட்டமலர்" கலி உசு. ஙூ. ஙங. சச. சுஎ. (ஊ) "காயாவ நுண்ணரும் பூழ்த்த புறவு" கார். அ. (எ) "இணரூழ்த்து நாரு மலரினையர்" குறள். சுடுஒ. என்பவையும் வலியுறுத்தும். இங்கு ஊழென முதனிலைத் தொழிற் பெயராய் நின்றது.

ங. "அறனும் பொருளு மின்பமு மூன்றம்" புறம். உஅ.

ச. (அ) "பல்வரி யினவண்டு புதிதுண்ணும் பருவத்து" (ஆ) "பொய்கைப் பூப் புதிதுண்ட வரிவண்டு" (இ) "புதுவமலர்தேரும் வண்டேபோல்" கலி. உசு: க; எச: க; கூஅ: உ. "வண்டும் புதிதுண்டு" நைடதம். இளவேனிற். ஙி.

(பிரதிபேதம்) * காளினின், † முயல்வினை, ‡ கூறமம்போல்: || முயல்வனை.

தற்குக் காரணமான நீர் நிறைந்த தடம் அந்நீர் நாடோறும் குறையுமாறு போல நாடோறும் குறையும் இளமையும் இவளுடன் நிலைபெறுமோ எ-று.

அளவு, அளவையெனப் பெயர்த் திரிசொல்லாய் நின்றது.

இவை மூன்றும், தாழிசை.

எனவாங்கு, எ - து: அசை.

இது தனிச்சொல்.

கஅ பொருந்தியான் முன்வேட்ட பொருள்வயி னினைந்தசொற்
(க) றிருந்திய யாக்கையுண் மருத்துவ னூட்டிய
மருந்துபோன் மருந்தாகி மனனுவப்பப்
பெரும்பெயர் மீளி பெயர்ந்தனன் செலவே

எ - து: பெரிய புகழையுடைய (உ) மீளி, யான் தன்னைப் பொருந்தித் தான் விரும்பிய அறம்பொரு ளின்பமாகிய பொருளிடத்தே யான் அறன் உண்டாக நினைத்தலுற் பிறந்த சொல், நல்வினையாற் றிருந்திய யாக்கையின் கண்ணே மருத்துவன் நுகர்வித்த மருந்துபோலே நல்ல மருந்தாகி, தன் மனமகிழுகையினாலே போக்கைத் தவிர்ந்தான்; * எ - று.

இதனால், தலைவிக்குப் புணர்வென்னும் உவகையும் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இது முன்னர்ப் பாட்டிற் கூறியகாறே வந்து சுரிதகம் தரவோடொத்து வந்த ஒத்தாழிசைக்கலி. (கசு)

(கஅ) (ங) அரும்பொருள் வேட்கையி னுள்ளாந் துரப்பப்
(ச) பிரிந்துறை சூழாதி யைய விரும்பிநீ

க. "பழவினையானுங் காரணங்களானும் மக்கட்கு வாதம் முதலிய பிணிகள்வரும்; அவற்றுள், பழ வினையான் வருவன அதன் கழிவின்கணல்லது தீராமையின் அவை யொழித்து வேனைக் காரணங்களான் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின்றிறங் கூறுகின்றார்" என்னும் குறள். கூற்றம் அதிகாரத்தின் அவதாரிகை காண்க. அறிதற்பாலது.

உ. மீளியென்பது பருவங்குறித்தும் ஆண்பால்குறித்தும் வரும்பெயராய் நில்லாது ஈண்டுப்பாலைநிலத்தலைவனென்னும் பொருட்டாய் நின்றது.

ங. இச்செய்யுள் தொல். அகத். சூ. சசு. நச்; செய். சூ. கஙிங. பே. நச். இவற்றில் மேற்கோள். இந்நூற் பக்கம் ககஅ: உ. ககக: உ. குறிப்புக்கள் பார்க்க. "அரும்பொரு ணைசைஇப் பிரிந்துறை வல்லி" என்பது (அகம். ககக: கக.) ஒப்புநோக்கற்பாலது.

ச. இகரவீறு முன்னிலை யொருமை எதிர் மறை வினைமுற்றாய் வருதற்கு "பிரிந்துறை சூழாதி" என்பது மேற்கோள். தொல். வினை. சூ. உசு. நச்; இ - வி. சூ. உங்அ.

(பிரதிபேதம்) * என ஆற்றுவித்தான்.

(க) யென்றூ ளெழுதிய தொய்யிலும் யாழ (உ)நின்
மைந்துடை மார்பிற் சுணங்கு நினைத்துக்காண்
நி செஞ்ஞாற் முகப்பப் பொருளுங் கிடவா
தொழிந்தவ ரெல்லாரு முண்ணுதுஞ் செல்லா
(ங) ரிளமையுங் காமமு மோராங்குப் பெற்றூர்
(ச) வளமை விழைதக்க துண்டோ வுளநா
* ளொரோஒகை தம்முட் டழீஇ † யொரோஒகை
கo (ஞ)யொன்றன்கூ றுடை யுடுப்பவரே யாயினு
(சு) மொன்றினூர் வாழ்க்கையே வாழ்க்கை யரிதரோ
சென்ற விளமை கரற்கு.

இஃது "ஒன்றுதந்தமரினும்" என்னும்(எ)சூத்திரத்தில்"நாள்துணீன்மையு மிளமைய தருமையுந், தாளாண் பக்கழந் ததுதியதமைதியு, மீன்மைய திழிவு முடைமைய துயர்ச்சியு, மன்பின தகலழ மகற்சிய தருமையும்" எனக்கூறிய எட்டினையும் தலைவன் கூறக்கேட்ட தோழி, அவற்றை "நிகழ்ந் தது கூறி நிலையலுந் தீணையே" என்னும் (அ) விதியாற் றலைவற்குக் கூறிச் செலவழுங்துவித்தது.

க. "என்றூ ளெழுதிய.....நினைத்துக்காண்" என்பது யாண்டினது ஒப்புக்கு மேற்கோள். தொல். மெய்ப்பாடி. சூ. உடி. பே.

உ. " நின் மைந்துடை மார்பிற் சுணங்கு " என்பது (ஆரும்) வேற்றுமைத் தொகைக்கு மேற்கோளாக வுள்ளது? தொல். எச்ச. சூ. கள. நச்.

ங. "இறந்துசெய் பொருளு மின்பந் தருமெனி, னிளமையிற் சிறந்த வளமையுமில்லை, யிளமை கழிந்த பின்றை வளமை, காமந்தருதலு மின்றே" நற். கஉசு: எ-கo. "இளமையுங் காமமும் யாங்கொளித் தனவோ" மணி. உஉ: கங்க.

ச. " பொருள் செய்ய, மருங்கிற்பாதி தருந்துகில் புனைந்தும், வீளைவய லொடுங்கு முதிர்நெல் லுணவினுந், தம்மில் வீழுநர்க் கின்பமென் றறிந்தும் .. .. ..

இதன் பொருள்.

ஐய! அரிய பெரிருளிடத்துச் செல்கின்ற ஆசையினால் உள்ளம் உளற்று கையினாலே பிரிந்துபோயிருத்தலை நினையாதேகொள், நீ விரும்பித் தலைவி தோளில் எழுதிய தொய்யில் தருகின்ற அழகினையும் இவள் மார்பில் நின்னை வலியாகவுடைய சுணங்கின் அழகையும் கைவிடல் ஒல்லுமாயின் நினைத்துப் பார; நீ நன்கு மதித்த பொருளும், சென்றவர்கள் தத்தம் நிலைமைக்கேற்பக் காலம் நீட்டிப்ப நின்று தேடுவதன்றி இப்பொழுதே முகந்துகொளள ஓரிடத்தே கிடவாது; பொருள் தேடப் போகாதிருந்தவர்க ளெல்லாரும் ஒருவாற்றான் உணணுமையும் ஒழுகார்; இளமையையும் இருதலையுமொத்த காமத்தையுஞ் சேரப்பெற்றவர்கள் செல்வத்தை விரும்பத்தக்கதொரு நன்மை அச்செல்வத்திற்கில்லை; இல்வாழ்க்கையாவது தமக்குக்கற்பித்தனாளெல்லாம் உள்ளில் ஒரொவொரு * கையாலே தம்முள்ளே தழுவிக்கொணடு புறத்தில் ஒரோவொரு † கையாலே ஒன்றன் ‡ கூறுகிய ஆடையை உடுத்திருப் பவரேயாயினும் பிரியாதிருப்பவர்களுடைய வாழ்க்கையே [வாழ்கை], கழிந்த இளமை மீண்டு தருதற்கு || அரிது; எ - று.

பிரிந்திறை சூழாதியைய என்று பாடமாயின் பிரிந்து போவதனால் இவள் இறந்துபடுஞ் செய்கையை நினையாதே கொள்ளென்க.

"தாயத்தி னடையா வீயச் செல்லா, வினைவயிற் றங்கா வீற்றுக் கொளப்படா, வெம்மென வரூஉ நிழமைத் தோற்ற, — மல்ல வாயினும் புல்லுவ வுளவே." (க) இதனால், தோழி தலைவிக்கா ளென்றோளென்றாள். மென்றோளும் பாடம். இவன் மூங்கிதால் சுணங்கு பரத்தலின் நின்னை வலியாக வுடைய சுணங்கென்றாள்.

பொருளுமென்ற வும்மை சிறப்பு; ஈண்ணுது மென்னும் உம்மை ஐயம்; உண்டோவென்னும் ஓகா ம எதிர்மறை; யாழவும் அரோவும் அசை.

(உ) இதனுள், 'உளராள்' என்றது நாளதினமை; சென்ற இளமைத் திற்கு அரிதென்றது இளமையருமை; 'உள்ளக்குறப்ப' என்றது உள்ளம் உளற்று

க. தொல். பொருளி. சூ. உள. இசசூத்திரத்து இளம்பூரணருரையில் எம்மென வரூஉ நிழமைத் தோற்றத்திற்கு மேற்கோளாக "விரும்பிநீ, யென்றோ ளெழுதிய ..... நினைத்துக் காண்" என்ற பகுதியும் அதற்கு 'இதனுள், தலைமகளிடத்தைத் தோழி தன்னையு முளப் படுத்தி எனதெனக் கூறியவாறு காண்க' என்னும். குறிப்பும் உள்ளன. (தொல். பொருளி. சூ. உடு. 'தாயத்தின்'); சூ. உள. நச்.

உ. தலைவன்கண் நிகழ்ந்த கூற்றினைத் தலைவியுந் தோழியும் கூறி நிற்ற லும் பாலைத் திணையாம் என்பதற்கு இச்செய்யுளை மேற்கோள் காட்டி இதிற் சிறிது வேறுபட விசேடவுரையு மெழுதினார் நச்சினார்க்கினியர். தொல். அகத். சூ. சஉ.

(பிரதிபேதம்) * †கைகளாலே, ‡கூற்றுகிய. ||அரிதெனமுடிக்க. "தாயத்தினடையா...வே" + அல்லா.

தலால், தானாண்பக்கம்; 'சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவாது' என்றது (க) தத்தம் நிலைமைக்கு ஏற்பப் பொருள் தேடவேண்டுதலி னதுபாணிக்கு மென்றலின், தகுதியதமைதி. 'ஒரோவகை தம்மூட் டழீஇ யொரோவகை, யொன்றன்கூரடை யுடுப்பவரே யாயினும்' என்றது இன்மையதிழிவு; 'இளமையுங் காமமு மோராங்குப் பெற்றூர், வளமை விழைதக்க துண்டோ' என்றது உடைமைய துயர்ச்சி; 'பிரிந்துறை சூழாதி யைய' என்றது அன்பின தகலம், பிரிதுறைந்து அன்பு பெருக்கவேண்டா, 'ஒன்றினூர் வாழ்க்கையே வாழ்க்கை' என்றலின்; 'தொய்யிலும் யாழ நின் மைந்துடை மார்பிற் சுணங்கு நினைத்துக்காண்' என்பது அகற்சியதருமை.

இதனால், தோழிக்கு நலிதலும் தலைவற்குக் கருதுதலும் பிறந்தன.

இது (உ) பன்னீரடியான் வந்து ஒருபொருணுதலிய கட்டளைக் கலி வெண்பா. இது பெண்டன்மைக்கேலா நுண்பொருளினைத் தலைவனெதிர் நின்று உணர்த்துவாள் செவ்வன்கூறுது, தலைவன்பண்டு கூறியன சிலவற்றை வாங்கிக்கொண்டு கூறுங் கூற்று. நீ மறந்தாயென்பது யாம், உணரக் கூறுகின்றாள் இவளென்பது படநின்றமையின் ஒருபொரு ணுதலிற்றாயிற்று.

க. "தத்த நிலைக்குங் குடிமைக்குந் தப்பாமே, யொத்த கடப்பாட்டிற் றாளூன்றி - யெய்த்து, மறங்கடையிற் செல்லார் பிறன்பொருளும் வெஃகார், புறங்கடைய தாகும் பொருள்" நீதிநெறி. கூடி.

உ. (அ) "அரும்பொருள்.....தரற்கு" என்பது பன்னிரண்டடியான், வந்து பல பொருணுதலி யமைதலிற் கலிவெண்பாட்டாயிற்று. ஒரு பொருள் நுதலிய வெனவே சொல்லப்படும் பொருளின் வேறுகிக் கருதியுண ரப்படும் பொருளுடைய தென்பதூஉம் பெற்றாம். என்னை? இப் பாட்டினுட் பெண்டன்மைக் கேலாத நுண்பொருளினைத் தலைமக னெதிர்நின்று உணர்த்துவாள் செவ்வனஞ் சொல்லாது தலைமகன் பண்டு கூறியன சிலவற்றை வாங்கிக்கொண்டு சொல்லி அவன் மறைத்தா னென்பது உணர்த்துகின்ற பொருண்மை கருதி உணர வைத்தமையின் அவ்வாறுயிற்று. ஒழிந்த பாக்களும் அவ்வாறு ஒரு பொருணுதலுமாயினும் அங்ஙனம் நுதலிய பொருள் பற்றிச் செய்யுள் வேறுபடாமையின் ஆண்டாராய்ச்சி யின்றென்பது; வெண்பாவிற் குறித்த பொருளினை மறைத்துச் சொல்லாது செப்பிக் கூறல்வேண்டு மாகலானும் இஃது அன்னதன்றி ஒரு பொருணுதலித் துள்ளினமை யானுங் கலிவெண்பாட்டெனப் பட்டதென்பது. என்பர் பேராசிரியர். (தொல். செய். சூ. கடுக); (ஆ) நச்சினார்க்கினியர், "அரும்பொருள் .....தரற்கு" என்பது பன்னீரடியான் வந்து ஒரு பொருணுதலிய கட்டளைக் கலிவெண்பா. இதனுட் பெண்டன்மைக்குஏலா நுண் பொருளினைத் தலைவனெதிர்நின் றுணர்த்துவாள் செவ்வன் கூறுது தலைவன் பண்டு கூறின சிலவற்றை வாங்கிக் கொண்டு கூறுங் கூற்று. நீ மறந்தாயென்பது யாம் உணரக் கூறுகின்றாள்

"மரையா மரல்கவர" (க) என்பதனுட் கூறிய உரையில் வேண்வென இதற்குங் கூறிக்கொள்க. (கஎ)

(ஙூ) (உ) செவ்விய தீயிய சொல்லி யவற்றொடு
பைய முயங்கிய வஞ்ஞான் றவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைய
வகனகர் கொள்ளா வலர்தலைத் தந்து
பகன்முனி வெஞ்சர மூள்ள லறிந்தேன்
மகனல்லே மன்ற வினி ;
ஈ செல்லினிச் சென்றுநீ செய்யும் வினைமுற்றி
யன்பற மாறியா மூள்ளத் துறந்தவள்
பண்பு மறிதிரோ வென்று வருவாரை
யென்றிறம் யாதும் வினவல் வினவிற்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றும லாண்டோ
ரவலம் படுதலு முண்டு.

இது பிரிவுணர்த்தப்பட்ட தோழி சேலவு விலக்கவும் , பிரிவின் மேற் சென்ற உள்ளத்தனயினனே நீ பிரியின் இவள் இறந்துபடுமெனச் சொல்லிய வாயிபாட்டான் மறுத்தது.

இதன் பொருள்.

இவளென்பது படர்கின்றமையின் ஒரு பொருணுதலிற்றுயிற்று. அது அகபபொருளே யாமாறும் ஒழிந்தபாக்களும் அவ்வாறு வருமேனும் அங்ஙனம் நுதலிய பொருளா[ன](ற்) செய்யுள் வேறுபடாமையின் ஆண்டு ஆராய்ச்சியின்று ; இது வெண்பாவா[யி](தலி)ற் குறித்த பொருளே மறைத்துக்கூறுது செப்பிக்கூறல் வேண்டும். இஃதன்ன தன்றிப் பொருள் வேறு படுதலானுங் துள்ளி வருதலானுங் கலி வெண்பாட்டாயிற்று." என்பர். தொல். செய். சூ. கஙிங.

க. கலி. சு. பக்கம். சசு. பார்க்க.

உ. இச்செய்யுள் (அ) தலைமகன் பிரிவுணர்ந்த தலைமகன் அவனுடன் கூறியதற்கும், (தொல். அகத். சூ. சஙி. 'எஞ்சியோர்' இளம்) (ஆ) தாழிசையின்றித் தரவு முதலாயின வந்ததற்கும் (இவர் "செவ்விய திவ்விய.....வினிது" என்பது தரவென்றும், "செல்லினிச் .... முண்டு" என்பது சுரிதக மென்றும் தாழிசையும் தனிசசொல்லும் இல்லை யென்றும் கூறுவர்) (தொல். செய். சூ. கசஉ. 'தரவின்றொித்' இளம்) (இ) தரவிணைக் கொச்சகத்திற்கும் (தரவிணை அடுக்குதலிற் தரவிணைக் கொச்சக மெனப்படும்) (தொல். செய். சூ. கஙஙி. பே கச்) மேற்கோள்.

(க) செவ்விய (உ) தீவிய சொல்லி யவற்றொடு
பைய முயங்கிய * வஞ்ஞான் றவையெல்லாம்
பொய்யாதல் யாண்யாங் கறிகோமற் றுறய
வகனகர் கொள்ளா வலர்தலைத் தந்து.
பகன்முனி வெஞ்சுர மூள்ள லறிந்தேன்
மகினல்லை மன்ற வினி

எ - து: ஐய! வஞ்சனை † யிலவாய இனியவாகிய சொற்களைப் பையச் சொல்லி அச்சொற்களாலே தழுவின அக்களவொழுக்கம் நிகழ்ந்த நாளிற் கூறியவையெல்லாம் பொய்யாயிருத்தலை அறிவில்லாத யான் எங்ஙனம் அறிவேன்? அகன்ற மனையி லுள்ளாரால் அடக்க வொண்ணுத அலரை எம்மிடத்தே தந்து ஞாயிறு முனிந்த வெய்தாகிய காட்டைப் போக நினைத்தலை இப்பொழுது அறிந்தேன். நீ அறுதியாக நல்லமகனைதன்மையை யுடையையல்லை; எ - று.

"னெனே பேதைமை நிம்பிரி நல்குர, ‡ வினைதால் வகையுஞ் சிறப் பொடு || பெறுமே" (கூ)என்பதனுற் றன்காதலான் நின்னை உள்ளவாறு அறிந் திலேனெனத் தன் பேதைமையைக் காதலாற் சிறப்பித்தலின் அமைந்தது.

மற்றும் ஓவும் அசை.

க. (அ) "செவ்விய .. ..மற்றைய" என்பதனுள், 'யான் யாங்கறிகோ' என்பது பேதைமை பற்றியும் "அகனகர்.....மன்றவினி" என்பதனுள் தலைவி 'மகனல்லை' என்பது நிம்பிரியாகிய வெறுப்புப் பற்றியும் பிரிவாற்றுமையைச் சிறப்பிக்க வந்தென்பர் இளம்பூரணர்; தொல். பொருளி. சூ. சக. 'னெனே' (ஆ) தன்னுலும் தலைவியாலு மிடையீடு படுதலின்றித் தலைவனுற் கூட்டத்திற் கிடையூறு தோன்றிய வழித்தோழி கூறியதற்கும், (இ) தலைவி கூற்றுப் பேதைமை பற்றி வரினும் காதலைச் சிறப்பித்தலின் அமைந்த தென்பதற்கும் மேற் கோள்காட்டுவர், நச்சினார்க்கினியர்; தொல். கள. சூ. உங. பொருளி சூ. நிக. (ஈ) "செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற் சீரிய கூரிய நீஞ்சொல்" கம்ப. நகரப். க.

உ. (அ) "வடிப்புறு கரம்பிற் றீவிய மொழிந்தே" அகம். கசஉ: உரு. (ஆ) 'தேம்படு னெவியிற தீவிய மிழற்றி" (இ) "திருமாதேவி யொடுந் தீவிய மொழிந்து" (ஈ) "தீவிய மொழியொடு சேறிபற் குறுகி" பெருங். (க) சக; அஎ. (ச) அ: கூரு; (ச) கரு: கநஉ.

கூ. தொல். பொருளி. சூ. நிக.

(பிரதிபேதம்) * அக்கான்று, † இலவாய், ‡ எனகால், || வருமே.

எ செல்லினிச் சென்றுநீ செய்யும் வினைமுற்றி
(க) யன்பறு மாறியா முள்ளத் துறந்தவன்
பண்பு மறிதிரோ வென்று வருவாரை
யென்றிறம் யாதும் வினவல் வினவிற்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை * முற்றுமு லாண்டோ
ரவலம் படுதலு முண்டு

எ - து: இனி, நீ நினைத்த காரியத்தே போய் ஆண்டுச் செய்யுங் காரியத்தை முடித்தபின்னர் இவ்விடத்து †நின்று வருவாரை எம்மை நினைத்து வருந்தும்படியாக அன்பு நீங்கும்படி மனம் வேறுபட்டு யாந் துறக்கப் பட்டவளுடைய செய்தியும் அறிவீரோவென்று என் நிறத்துச் சிறிதும் வினவாதேகொள். வினவுவையாயின் அவர் இறந்துபாடு கூறவுங் கூடும். அது கேட்டால் (உ) ஞாயிறுபோல விளங்குகின்ற நின் தலைமை கெடும்படி யாகக் கெடுதற்காரிய நீ செய்யுங் காரியம் முடியாமல் அவ்விடத்தே ஓர் அவலம் பிறத்தலும் உண்டு; ‡ எ - று.

"வருத்த மிகுதி சுட்டுங் காலையு. முரித்தென மொழிப வாழ்க்கையு ளிரக்கம்" (ங)என்பதற்கு உய்த்துக்கொண்டுணர்த்தலென்னுங் தந்திரவுத்தியால் எனைப் பிரிவான் நிகழும் வருத்த மிகுதியைக் குறித்த இடத்தும் உயிர் வாழ்க்கையுள் இரக்கம் உரித்தென்றதனுன் உயிர்வாழ்க்கையுள் இரக்கங் கூறினுள்.

உம்மை, ஐயம்.

இதனுல், தோழிக்கு அச்சமும் தலைவற்கு அசைவும் பிறந்தன.

கொச்சகம் || வெண்பாவாய் வருதலானுங் தாழிசையோடு தொடராது வருதலானும் இவை தனிவீணைக் கொச்சகம். இரண்டும் ஒருபொருணுதலி இவ்வாறு வரினுங் கொச்சகமேயாம். இது "பாடலே வகையே" என்னும் (சு) சூத்திரவிதியாம். (கஅ)

க. (அ) "அன்பறமாறியா ..படுதலுமுண்டு" என்பது வருத்த மிகுதியைக் குறித்தவழி மனைவாழ்க்கையுள் இரக்க முரித்து என்பதற்கு மேற் கோள். தொல். பொருளி. சூ.கூ.ச. 'வருத்தமிகுதி' இளம்; சூ. கூஉ. நச். (ஆ)"இனவா ரணந்திரி வெஞ்சுரம் போகலிரும் பொருட்கு, நினைவாகி லும்மை விலக்கு மிலேஞ்செல்லு நீள்புனத்து, மனவா ரகலல்குல் வல்லியை நீர்வரு வார்லெரை, வினவா தொழியும் வினவின் முற் றூது வினையுமக்கே" அம்பிகா. நிசாகூ.

உ. "மாகதேச, னெங்கரபதிகளுக்கு மிவியே யென்னவந்தான்"

கூ. தொல். பொருளி. சூ. கூஉ. ச. தொல். செய். சூ. கஞ்சு.

(பிரதிபேதம்) * முற்றுமை, †நின்றும், ‡ எனச்செலவழுங்குவித்தாள், || வெண்பாவாயும்.

(20) பல்வளம் பகர்பூட்டும் பயனிலம் பைதறச்
செல்கதிர் ஞாயிறு செயிர்சினஞ் சொரிதலிற்
றணிவில்வெங் கோடைக்குத் தண்ணயந் தணிகொள்ளும்
பிணிதெற லுயக்கத்த பெருங்களிற் றினந்தாங்கு
மணிதிகழ் விறன்மலை வெம்ப மண்பகத்
துணிகயந் துகள்பட்ட தூங்கழல் வெஞ்சுரம் ;

எ கிளிபுரை கிளவியாய் நின்னடிக் கெளியவோ
தளியுறு பறியாவே காடெனக் கூறுவீர்
வளியினும் வரைநில்லா வாழுநா ணும்மாகத்
தளியென வுடையேன்யா னவலங்கொண் டழிவலோ ;

ஙக ஊறுநீ ரமிழ்தேய்க்கு மெயிற்றுய்நீ யுணல்வேட்பி
னூறுநீ ரிலவென வறனெக்கிக் கூறுவீர்
யாறுநீர் கழிந்தன்ன விளமைதுந் நெஞ்சென்னுங்
தேறுநீ ருடையேன்யான் றெருமக்தீங் கொழிவலோ ;

கநி மாணெழில் வேய்வென்ற தோளாய்நீ வரிற்றுங்கு
மாணிழ லலவாண்டை மரமெனக் கூறுவீர்
நீணிழற் றளிர்போல நிறனுழ்த்த லறிவேனுந்
தாணிழல் கைவிட்டி யான் றவிர்தலைச் சூழ்வலோ ;
எனவாங்கு ;

உ0 அணையரும் வெம்மைய காடெனக் கூறுவீர்
கணைகழி கல்லாத கல்பிறங் காரிடைப்
பணையெருத் தெழிலேற்றின் பின்னர்ப்
பிணையுங் காணிரோ பிரியுமோ வவையே.

இது பிரிவுணர்த்திய தலைவற்குத் தலைவி எம்மையும் உடன்கொண்டு சென்மி னென்றுட்து அவன் கானின் கடுமையுந் தலைவி மென்மையுங் கூறுவது கேட்ட தலைவி நாளது சின்மையும் இளமையதருமையுங் கூறி எம்மையும் உடன்கொண்டு சென்மினென்றது.

இதன் பொருள்.

பல்வளம் பகர்பூட்டும் பயனிலம் பைதறச்
செல்கதிர் ஞாயிறு செயிர்சினஞ் சொரிதலிற்
றணிவில்வெங் கோடைக்குத் தண்ணயந் தணிகொள்ளும்
பிணிதெற லுயக்கத்த பெருங்களிற் றினந்தாங்கு

மணிநிகழ் விறல்மலை வெம்ப (க) மண்பகத்
துணிகயந் துகள்பட்ட தூங்கழல் வெஞ்சுரம்

எ - து: பல உணவுகளையும் விளைத்து கொடுத்து எல்லாரையும் நுகர்விக்கும் பயனையுடைய நிலம் ஈரம் அறும்படி ஞாயிறு குற்றத்தைச்செய்யுஞ் சினத்தோடே தன்னிடத்தினின்றுஞ் செல்கின்ற கதிர்களைச் * சொரிகையிலாலே மாறுதலில்லாத வெய்ய கோடைக்காலத்திற்கு அதனிடத்துள்ள குளிர்ச்சியை விரும்பித் திரட்சிகொள்ளும் பசிப்பிணியாற் சுடுதலையுடைய வருத்தத்தினையுடையவாகிய பெரிய களிற்றினுடைய நிரைகள் தாங்கும் மணிகள் விளங்கும் வெற்றியையுடைய மலை வெம்ப மண்பிளக்கத் தெளிந்த நீர்நிலைகளும் நுகளுண்டான செறிந்த அழலையுடைய வெய்ய காடு; எ - று.

தாங்கும் விளங்கும் மலை; அணிகொள்ளுங் களிற்றினம்
அயத்தணி கொள்ளுமென்று பாடமாயின், நீர்நிலைகளிலே திரட்சி கொள்ளுமென்க.

இது தரவு.

எ (உ) கிளிபுரை கிளவியாய் நின்னடிக் கெளியவோ
தளியுறு பறியாவே காடெனக் கூறுவிர்
வளியினும் வரைநில்லா வாழுநா ணும்மாகத்
(ரு) தளியென வுடையேன்யா னவலங்கொண் டழிவலோ

எ - து: 'கிளியினது மொழியை யொக்கும் மொழியினை யுடையாய்! தாங்கழல் வெஞ்சுரம் † மழைபெய்தலைக் கண்டறியாவாதலால் அக்காடு நின் அடிக்குப் போதற்கு ‡ எளியவாயிருக்குமோ' என்று கூறுகின்றவரே! யான், நும்முடைய ஆகத்திடத்து முயக்கத்தைக் கண்டார் காற்றினுங்காட்டில் ஓர் எல்லையில் அகப்பட்டு நில்லாதவளுடைய வாழ்நாளென்று கூறும்படியாக அதனை (?) வாழ்நாளாக உடையேனுதலால் அவலத்தைக் கொண்டு நெஞ்சழிவேனோ? இறந்துபடுவேனே; எ - று.

கக (சு) ஊறுநீ ரமிழ்தேய்க்கு மெயிற்றுய்நீ யுணல்வேட்டி
னூறுநீ ரிலவென வறனெக்கிக் கூறுவிர்

க. (அ) "புலம்பு வீற்றிருந்த நிலம்பகு வெஞ்சுரம்" அகம். கடவுள்: அ. (ஆ) "வான, நிலம்பக வதிர்ந்த புலம்புறு சேண்டை" தமிழ்நெறி. மேற்கோள் (இ) "நிலம்பக வெம்பிய நீள்சுரம்" வளையாபதி.

உ. "கிளிபுரை கிளவியாய்" கலி. கடவுள்: கஅ.

ரு. "அளியென.....டழிவலோ" என்பது மேற்கதுவாய் மோனைக்கு மேற்கோள். தொல். செய். சூ. கூஉ. நச.

சு. (அ) எய்க்கும் என்பது அருகிப் பயவுவமையில் வந்ததற்கு "ஊறுநீ ரமிழ்தேய்க்கு மெயிற்றுய்" என்பது மேற்கோள். தொல். உவம. சூ. கச. பே. (ஆ) "எயிற்றமிழ் தூறுநீர்" கலி. சு: கடவுள்.

(பிரதிபேதம்) * சொரிகையிலாலே மலைவெம்ப, † மழையைத்தலைக், ‡ போக்கெளிய.

(க) யாறுநீர் கழிந்தன்ன விளமைநுங் நெஞ்சென்னுங்
தேறுநீ ருடையேன்யான் றெருமந்தீங் கொழிவலோ

எ - து: 'தன்னிடத்து ஊறுகின்றநீர் அமிழ்தத்தை ஒத்தற்குக் காரண மாகின்றவயிற்றையுடையாய்! வெஞ்சுரத்துவழி தண்ணீருண்டலே விரும்பின் (உ) நீர்களில்' என்று அறத்தைக் கருதிக் கூறுகின்றவரே! யான் உம் நெஞ்சென்று சொல்லப்படுந் தெளிவுநீர்மையை யாறு நீர் கழிந்தாற்போன்ற இளமையாக உடையேனுதலால் இவ்விடத்தே சுழன்று நெஞ்சழிவேனே? இறந்துபடுவேனே; எ - று.

கழிந்த நீர்போல இளமையும் மீளாதென்பது பொருள்.

கரு (ங) மாணெழில் வேய்வென்ற தோளாய்நீ வரிற்றங்கு
மா(சு)ணிழ * லலவாண்டை மரமெனக் கூறுவீர்
நீணிழற் றளிர்போல நிறனுஞ்சித்த லறிவேனுந்
தாணிழல் கைவிட்டியான் றவிர்தலைச் சூழ்வலோ

எ - து: 'மாட்சிமைப்பட்ட அழகினையுடைய மூங்கிலே வென்ற தோளினையுடையாய்! நீ வெஞ்சுரத்தே வரில் அவ்விடத்தில் மரங்கள் நின் இயல்பை ஆற்றும் மாட்சிமைப்பட்ட நிழலையுடையவல்ல' என்று கூறுகின்ற வரே! நீர் நீங்குதல் என் நலம் நீண்ட நிழலினின்ற தளிர்போலே வெளுத்தலை அறிந்திருப்பேனுதலால் யான் உம்முடைய திருவடியில் அருளைக் கைவிட்டு இங்கே இருத்தலைச் சூழ்வேனே? இறந்துபடுவேனே; எ - று.

வென்ற, உவமவுருபு.

இவை மூன்றும், தாழிசை.

க. ஊஒஂதெ யாஸு வஂஜாதம் யௌவநம் வ்ருதிவதுதெ।
யததீதம் வாநநெநுதீ ஹ்ரொதஸ்ரீவு ஶவாதிவ ॥ எனவான்மீகி முனிவரும் இளமை கழிதற்கு யாற்றுநீர் கழிதலை உவமித்திருத்தல் இங்கே அறிதற்பாலது. ஸ்ரீமத் ராமாயணம். சுந். உ0: கஉ.

உ. "கன்னீர்கள் சுமந்து" திருவிருத்தம். ஙஉ. "கண்ணி னீர்கள் சொரிந்தவை" தீவக. கஙகூ.

ங. (அ) வென்ற வென்பது அருகி மெய் யுவமத்தின்கண் வந்ததற்கு "மாணெழில் வேய்வென்ற தோளாய்நீ வரிற்றங்கும்" என்பது மேற் கோள். தொல். பொ. உவம. சூ. கடி. பே. (ஆ) வேய்வென்ற தோள் னென்பதுதத்தமரபிற்றோன்றுமன்பொருளேயென்பதற்குமேற்கோள். தொல். உவம. சூ. கஎ. இளம். (இ) "வேய்வென்ற தோளான்" கலி. கஙஅ: கஅ-கூ.

சு. "நிழறேய்த் துலறிய மரத்த" "மரநிழலற்ற வியவிற் சுரன்" அகம். க: கக; ஙஙூ: கடி.

(பிரதிபேதம்) * இல.

எண்வாங்கு

எ - து: என்று யான் கூறவும்; எ - று.

ஆங்கு, அசை.

இது தனிச்சொல்.

உ0 அணையரும் வெம்மைய காடெனக் கூறுவீர்
(க) கணைகழி கல்லாத கல்பிறங் காரிடைப்
பணையெருத் தெழி (உ)லேற்றின் பின்னர்ப்
(ங) பிணையுங் காணிரோ பிரியுமோ வவையே

எ - து: அவ்விடத்துக் காடு நீ அணைய அரிய வெம்மையையுடைய வென்று பின்னும் கூறுகின்றவரே! பெருக்கும் கல்லின் நெருக்கத்தால் எய்த அம்பு ஓடாத அரிய வழியிடத்துப் பெருமையையுடைய கழுத்தினையும் அழகையுமுடைய எற்றின்பின் நீங்காமற் றிரியும் பிணையையுங் காணுதிருக்கின்றீரோ? அவை நீர் அறியப் பிரியாவே; ஆதலால், எம்மையும உடன்கொண்டே சென்மின்; எ - று.

இது சுரிதகம்.

இதனுல், தலைவிக்கு இழிவும் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இங்ஙனந் தலைவி கூறுதல் "மறு நிலைதிரியா" என்னும் (ச) சூத்திரத்து அமைத்தது.

இஃது ஆறடித்தவும் நான்கடித்தாழிசையும் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (கக)

க. "கணைகழி...வவையே" என்பது எம்மெய்யாயினும் ஒப்புமை கோடலென்பதற்குமேற்கோள். தொல். மெய்ப். சூ. உஉ. பே. இ-வி சூ. நிஅ0.

உ. (அ) "கலையொழி பிணையிற் கலங்கிமாறி, யன்பிலி ரகறி ராயின்" நற். கூஎ. (ஆ) "குன்றங் கவைஇய, வங்காட்டா ரிடை மடப்பிணை தழீஇத், திரிமருப் பிரலை புல்லருந் துகள" (இ) "மறியுடை மடப்பிணை தழீஇப்புறவில், றிரிமருப் பிரலை பைம்பயி ருகள" அகம். கச: ச-சூ. நகச: இ-சூ. (ஈ) "உருகு மடமான் பிணையோ கெளும்" திணைமொழியைம். உடு. (உ) "மான்வீழி போழ்திற் பிணையின்னுயிர் போவதே போல்" யா - வி. சூ. கடு மேற்கோள். (ஊ) "உங்கள், கண்போற் பிணையுங் கலையுமிங் கேவர்க் கண்டதுண்டோ" அம்பிகா. அடு.

ங. பிணையென்னுஞ்சொல் பொருணோக்கிற் பிரியாது பிணையும் பிற சாதிக்குஞ் செல்லுமாயினும், மரபு நோக்கப் பிணையென்றற்குச் சிறப்புடையன: புல்வாய் கல்வி உழை கவரி யென்பர், பேராசிரியர்; தொல். மரபு. சூ. இஎ:

ச. தொல். அகத். சூ. சஅ.

(உக) (க) * பான்மருண் மருப்பி (உ) னுரல்புரை பாவடி .
யீர்நறுங் (ங) கமழ்கடாஅத் தினம்பிரி யொருத்த
லாறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து
பொருள்வயிற் பிரிதல் வேண்டு மென்னு
ஙு மருளில் சொல்லு நீசொல் லினையே

க. (அ) இச்செய்யுளை, தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொள்ளினு மென்பதற்கு மேற்கோள் காட்டி இது தலைமகனைச் சுட்டிக் கூறிய தென்றும்(தொல். அகத். சூ. சஉ. 'தலைவரும்',)(ஆ) இஃது அடக்கியலின்றி அடிநிமிர்ந் தொழுகிற் றென்றும் (தொல். செய். சூ. கசஉ. 'கரவின்') கூறுவர் இளம் பூரணர். (இ) இது தனிச்சொல்லும் அடக்கியலு மின்றி அடி நிமிர்ந்தொழுகிற்றென்பர். பேராசிரியர்; தொல். செய். சூ. கஙஙி. (ஈ) இஃது 'அவற்றுள்' என ஐஞ்சீரடி வந்து தனிச் சொல்லும் அடக்கியலு மின்றிச் சுரிதகம்பெற்று அடிநிமிர்ந் தோடிற் றென்பர், நச்; தொல். செய். சூ. கஙஙி. (உ) "பாஅன் மருண்மருப் புரல்புரை பாவடி" என்பது "தத்தமரபிற் றோன்றுமன் பொருளே" என்பதற்கும் (தொல். உவம. சூ. கள. 'தத்த' இளம்.), (ஊ) உருவுவமத்தின்கண் மருளென்பது அருகி உவமவுருபாய் வருதற்கும் (தொல். உவம. சூ. ககூ. பே.) மேற்கோள்.

உ. 'உரல்புரைபாவடி' என்பது புரை என்பது மெய்யுவம வாய்பாடாய் வருதலுகும் (தொல். உவம. சூ. கஙி. பே.) வடிவு பற்றிய பண்புவமைக்கும் (இ - வி. சூ. சுசஉ). மேற்கோள்.

ங. யானைமதம் கமழுமென்பதனை (அ) "கடுஞ்சினத்த கமழ் கடாஅத்து .....யானை" மது. சசஎ. (ஆ) "கமழ்கடாத் தொல்கிய மதவேழம்" கலி. அ: ச; (இ) "வரிஞிமிறூர்க்கும் வாய்புகு கடாஅத்துப், பொறி நுதற் பொலிந்த வயக்களிற் றொருத்தல்" அகம். எஅ: ங-ச. (ஈ) "துன்னருந்திறற் கமழ்கடாஅத்து.....பெருங்கையானை" (உ) "மிஞிறூர்க்கு கமழ்கடாஅத்து.....களிறு" புறநா. ஙூ: அ-கக; உஉ: சு-அ. (ஊ) "நீலயானை.....வண்டுபடு பூநாறு கடாஅஞ் செருக்கி" மணி. ககூ: உ0-உஉ. (எ) "யானையின் புயல் கொண் மும்மத மணமகள் கதுப்பென நாறு மாதலால்" (ஏ) "மையல் யானையின் படுமதங் கெடப்பகட் டாசன், செய்த மும்மதம் போற் றிசை திசைதொறுங் கமழ்ந், தெய்வ வாசத்து" சீவக. ககஉஉ, ஆஉசுஙி. (ஐ) யானைமதமு நானமும், வாசப் பொடியொடு காயத்துக் கமழும்" பெருங். (க) சஉ: எஙி - சு. (ஒ) "வீழிமலர்ப்பூ சினையுளுற்றித் திருநெடுமால் பெறுமாழி மீளவாங்கி, வழியொழுகாச் சலந்தரன்மெய்க் குருதிபடி முடைநாற்ற மாறுமாற்றுற், பொழிமதநீர் விரையேற்றி" காஞ்சிப். கடவுள். இ. என்பவற்றுலும் உணர்க.

(பிரதிபேதம்) * பாஅன் மருண்மருப் புரல்.

(க) நன்னர் நறுநுத னயந்தனை நீவி
(உ) நின்னிற் பிரியலெ னஞ்சலோம் பென்னு
நன்னர் மொழியு நீமொழிந் தனையே
அவற்றுள், யாவோ * வாயின மாஅன் மகனை
கo (ங) கிழவ ரின்னே ரென்னுது பொருடான்
பழவினை மருங்கிற் பெயர்புபெயர் புறையு

க. "நன்னர் நறுநுத னயந்தனை நீவி" என்பது வினையெச்ச முன்னிலை யொருமை [வினைக்குறிப்பு] (த்தொரிநிலை) முற்றிற்கு மேறகோள். தொல். எசச. சூ. கூக. நச்.

உ. அஞ்சலோம் பென்னு ரென்பதற்கு, "தமமை யெதிர்ப்பட்டஞான்று நின்னிற் பிரியே னஞ்சலோம் பென்றவர்" எனவும் அஞ்சலென்றவ ரென்பதற்கு, "நின்னிற் பிரியேன் அஞ்சலென்றவர்" எனவும் பரிமேலழகர் இவ்வடியைக் கருத்திற்கொண்டுபொருளெழுதியிருத்தல் இங்கே கருதற்பாலது. குறள். ககசக, ககஙிச.

ங. திரு, கிழவரின்னே ரென்னுது பொதுவாய் நல்வினை யுள்ளாரிடத்தே பெயர்ந்துறைதலை, (அ) "தாமரைப் பொன்மல, ரெல்லையாகும் பொதுப் பெண்ணவள்" சீவக. ககஙிo. (ஆ) "பூவின்மேலிருந்த தெய்வத் தையலும் பொதுமை யுற்றாள்" கம்ப. மாயாசனக. சுஉ. (இ) "திருமக ளிவளென.....பேதை வைகுமே" - "திருவுவமம் வடிவிற்கும் நல்வினை யுடையோ னிடத்து எஞ்ஞான்றும் பொதுவா யிருத்தற்கும்" சீவக. கஅங. விசேடவுரை. என்பவற்றாலும் (ஈ) "சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா, வுறுகாலத் தூற்றுகா வாமிடத்தே யாருஞ், சிறுகாலைப் பட்ட பொறியும்" நாலடி ககo. (உ) "பொறியுந்தொடற் பாலார்கண்ணேதொடும்" பழ. உoஙி. (ஊ) "பெருமுழங்கு திரைவரைக ணீந்திப்பிணி யுறினுந், திருமுயங்க லில்லையெனி னில்லைபொரு ளீட்ட, மொருமுழமுஞ் சேறலில ரேனும்பொரு ளூர்க்கே, வரும்வழி வினையுழந்து வாழ்க தவ மாதோ" (எ) "நற்றவஞ் செய்தலீர ருளவழி நயந்து நாடும், பொற்றதா மரையி னுளின்" (ஏ) "நற்றவம் பரவைஞால நாமுட னிறப்பின்வைய, மற்றமிறவத்திற் கென்றுமையவி யினைத்து மாற்ரு, நிற்றெனை வுணர்ந்து நிற்பிற் றிருமக ளென்று நீங்கார், பற்றெடே நிற்பினென்றுந் திருமகள் பற்றல்செல்லாள்." சீவக. உஙிசெ, உஎஙஅ, உகஅங. (ஐ) "வினையொழிகாலத் திருவின் செல்வீ,யினையே மாகி யாடவர்த் துறப்பேம்" மணி. கஅ: உக-உ. (ஒ) "பழமையிற் பசையாது கிழமையிற் கெழுவாது, தவந்தீர் மருங்கிற் றிருமகள் போலப், பயந்தீர் மருங்கிற் பற்றுவிட்டொரீஇ" பெருங். (க) ஙஇ:

(பிரதிபேதம்) * வாயன.

மன்ன பொருள்வயிற் பிரிவோய் (க) நின்னின்
றிமைப்புவரை வாழாண் மடவோ
ளமைக்கவின் கொண்ட தோளினை மறந்தே.

இது தலைமகனுற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி அவனை நெருங்கிக் கனவுகாலத்தோழக்கம் எடுத்துக்காட்டலாற் றெளிவுபட மொழிந்ததூஉம் பொருளது நிலையின்மையும் அவளது ஆற்றமையுங் கூறிச் செலவு மறுத்தது.

இதன் பொருள்.

பால் தான் மருளும் மருப்பினையும் உரலின் அடியையொக்கும் நிலத்தே பாவும் அடியினையும் ஈராத்தினையுடைய கறியவாகக் கமழும் மதத்தினையுமுடைய இனத்தைப் பிரிந்த யானை வழியைக் காவல்கொண்டு நிற்கும் வேரழிய நிலத்தைப் போய்ப் பொருள் தேடுகின்ற இடத்தே இவளைப் பிரிந்திருத்தலே நெஞ்சு விரும்புமென்று சொல்லும் அருளில்லாத சொல்லையும் நீ சொன்னாய்; எம்மை விரும்பி நன்மையையுடைய நறிய நுதலை நீவி நின்னிடத்தினின்றும் பிரியேன் நீ அஞ்சுதலைத் தவிர்வாயென்று சொல்லும் நன்மையையுடைய சொல்லையும் நீ சொன்னாய்; அவ்விரண்டி னுள் மயக்கத்தினையுடைய மகனே! உண்மையிடத்தன யாவைதான் அறி

கருசு-அ. (ஒ) "மாரியுந்திருவு மகளிர் மனமுங், தக்குழி நில்லாது பட்டிழிப் படும்" பெருங். (க) நூரு: கருசு-எ. (ஒள) "நல்வினைப்பி னல்லா னறுந்தா மரையாளுஞ், செல்லாள் சிறந்தார்பி னுயினும்" அறநெறி. கஉச. (ஃ) "புண்ணிய முலந்தபின்.....எண்ணில ளிகந்திடும் யாவர் தம்மையு, நண்ணிய நண்பில ணங்கை வண்ணமே" சூளா. முத்தி கடு. என்பவற்றாலும். (அஅ) "அகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ். சகடக்கால் போல வரும்" நாலடி. உ. (ஆஆ) "அற்கா வியல்பிற்றுச் செல்வம்" குறள். ஈருசு. (இஇ) "பொருள் போற்றி வழங்குமெறி" - 'போற்றி வழங்குதல்' பேணிக்கொண் டொழுகுதல்: அஃதாவது ஒருவரோடு நட்பில்லாத அதனைத் தம்மோடு நட்புண்டாக்கிக் கொண் டொழுகுதல். குறள். சஎஎ. வினைவுரை (ஈஈ) "திருவினைத் தீராமையார்க்குங்கயிறு" - 'ஒருவர் கண்ணும் நில்லாது நீங்குஞ் செல்வத்தைத் தன்க ணீங்காமற் பிணிக்குங் கயிறும்' 'தீராமையென்றதனால், தீர்தன்மாலைய தென்பது பெற்றும்;' குறள். சஅஉ. வினைவுரை என்பவற்றாலும் அறிக. கலி. அ: ருஉ - ச-ம் அடிக்குறிப்புக்களுள் இவ்விடத்துக்குப் பொருந்து வனவும் இங்கே அறிதற்பாலன.

க. "எந்நாளோ நெடுந்தகாய் நீ செல்வு, தந்நாள் கொண் டிறக்குமிவ ளரும்பெற லுயிரே" (கலி. நெ: கஅ-கூ) என்பதும், இந்நூற்பக்கம் சo: உ - இன் குறிப்பும் ஒப்புநோக்கற்பாலன.

(பிரதிபேதம்) * தலைவன்.

கின்றிலேன்; நீ தேடுகின்ற பொருடான், இத்தன்மையோர் நமக்கு உரியவ ரென்று கருதாதே பிறரிடத்து நின்ற நல்வினையாலே மீண்டு மீண்டு சென்று தங்கும்; நின்னையின்றிக் கண்ணிமைத்தொழில் நிகழுங்காலத்தின் எல்லையும் உயிர் வாழாத மடவோளுடைய அமையினுடைய அழகைத் தன்னிடத்தேகொண்ட தோளிரண்டினையும் மறந்து அத்தன்மைத்தாகிய பொருள் தேடுகின்ற இடத்தே இவளை விட்டுப் பிரிந்திருப்பாய்; எ - று.

அவற்றுளென இரண்டனுள் ஒன்றை வருத்தலின் யாதுவாயதென ஒருமையாற் கூறற்பாலதுவும் (க)"அவ்விரண்டனுட் கூர்ங்கோட்ட * காட்டுவல்" என்றது போலப் பன்மை யொருமை மயங்கிற்று. பிரிவா யென்னும் முன்னிலையே லொருமை முற்று, "ஆயென் கிளவியு மவற்றொடு கொள்ளும்" (உ) என்றதனால் ஒவாய் நின்றது.

"உறுக ணேம்ப றண்ணியல் பாகலி, னுரிய தாகுந் † தோழிக ணுரனே" (ங)என்பதனாற் குற்றேவற்றொழி'பொருடான் பழவினை.....பிரிவோய்' என அறிவுடையாளாகக் கூறினள்.

இதனால், தோழிக்கு அச்சமும் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இஃது அவற்றுளென ஐஞ்சீரடி வந்து தனிச்சொல்லும் அடக்கியலு மின்றிச் சுரிதகம்பெற்று அடிநிமிர்ந்தோடிய கொச்சகம். (உ0)

(உஉ) (ச) உண்கடன் வழிமொழிந் திரக்குங்கான் முகனுந்தாங் கொண்டது கொடுக்குங்கான் முகனும்வே ருகுதல்

க. "அவ்விரண்டனுட் கூர்ங்கோட்ட சுடர்வேல்" என்பதே கிடைத்த கலித்தொகைக் கையெழுத்துப் பிரதிகளி லெல்லாம் உள்ளது. (தொல். எச்ச. சூ. சுடு. நச்) உரையிலும் இவ்வாறே காணப்படுகின்றது. ஆனாலும் இதுதவறென்றும் (தொல். எச்ச. சூ. சுடு. இளம். சூ. சுள. சே.) உரையிலும் காணப்படும் 'அவ்விரண்டனுட் கூர்ங்கோட்ட காட்டுவல்" என்பதே தவறற்ற தென்றும் தோற்றுகின்றன.

உ. தொல். வினை. சூ. கடு.

ங. தொல். பொருளி. சூ. சங. இதனுரையில் (அ) இளம்பூரணர் "கிழவரின்னோர்.....பெயர் புறையும்" என்பது தலைமக[ற்](ட்) குற்றந்தீர்த்தல் தோழியல்பாகலின் அவட்கு அறிவுரியதாகு மென்பதற்கு மேற்கோள்காட்டினர். (ஆ) நச்சினார்க்கினியர் தலைவிக்கு வந்தவருத்தத்தைப்பரிகரித்தல் தோழிகடனாதலின் அவட்கு அறிவுரியதாகுமென்பதற்கு "பொருடான், பழவினை.....பிரிவோய்" என்பதை மேற்கோள் காட்டினர். தொல். பொரு. சூ. சடு

ச. தாழிசை மூன்றடியால் வந்ததற்கு இச்செய்யுள் மேற்கோள். தொல். செய். சூ. கஙக. 'போக்கியல்' இளம்.

(பிரதிபேதம்) * சாடுவல், சுடர்வல், † தோழிதண்ணரனே.

பண்டுமிவ் வுலகத் தியற்கை யஃதின்றும்
புதுவ தன்றே புலனுடை மாந்தர்
தாயுயிர் பெய்த பாவை போல
நலனுடை யார்மொழிக்கட் டாவார்தாந் தந்நலந்
தாதுதேர் பறவையி னருந்திறல் கொடுக்குங்கா
லேதிலார் கூறுவ தெவனோநின் பொருள்வேட்கை ;
நறுமுல்லை நேர்முகை யொப்ப நிரைத்த
செறிமுறை பாராட்டி னுய்மற்றெம் பல்லின்
பறிமுறை பாராட் டினையோ வைய ;
நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன
வைவகை பாராட்டி னுய்மற்றெங் கூந்தற்
செய்வினை பாராட் டினையோ வைய ;
குளனணி தாமரைப் பாசரும் பேய்க்கு
மிளமுலை பாராட்டி னுய்மற்றெம் மார்பிற்
றளர்முலை பாராட் டினையோ வைய ;
எனவாங்கு ;
அடர்பொ னவிரேய்க்கு மவ்வரி வாடச்
சுடர்காய் சுரம்போகு தும்மையா மெங்கட்
படர்கூற நின்றது முண்டோ தொடர்கூரத்
துவ்வாமை வந்தக் கடை.

இது பிரிவுணர்த்தப்பட்ட தோழி அதற்கு உடம்படாது தலைமகனை நேருங்கிக் களவுகாலத்தொழுக்கம் எடுத்துக்காட்டி ஆற்றுவித்து உடம்பட்ட வாயிபாட்டான் மறுத்தது.

இதன் பொருள்.

(க) உண்கடன் வழிமொழிந் திரக்குங்கான் முகனுந்தாங்
கொண்டது கொடுக்குங்கான் முகனும்மே றுதல்

க. (அ)முன்னிலைப் புறமொழியாவது முன்னிலையாக நிற்பாரைக்குறித்துப் பிறரைக் கூறுமாறுபோலக் கூறுதலென்று கூறி அதற்கு "உண் கடன்.....வுலகத் தியற்கை" என்ற பகுதியை மேற்கோள் காட்டி இவ்வுரை தலைமகனை நோக்கியவாறு காண்க வென்பர், இளம்; தொல். கற். சூ. உஉ. 'முன்னிலைப்'. (ஆ)நச்சினார்க்கினியரும் இதற்கே "உண்கடன் வழிமொழிந்து.....பொருள் வேட்கை" என்ற பகுதியை மேற்கோள் காட்டினர். தொல். கற். சூ. உஉ.)

(க) பண்டு * மிவ் வுலகத் தியற்கை யஃதின்றும்
புதுவ தன்றே புலவுடை † மாந்தர்
நு தாயுயிர் பெய்த பாவை போல
. நலனுடை யார்மொழிக்கட் டாவார்தாந் தந்நலந்
தாதுதேர் பறவையி னருந்திறல் கொடுக்குங்கா
லேதிலார் கூறுவ தெவனோநின் பொருள்வேட்கை

எ - து: அறிவுடைய (உ)மாந்தர்! தாம் வாங்கியுண்ணுந் தனிசை வழிபா டாகச் சொல்லி இரந்துவாங்கும்பொழுது முகமலர்ந்திருத்தலும் அங்ஙனம் வாங்கின தனிசை மீண்டு கொடுக்கும்பொழுது முகங் கெட்டிருத்தலும் முன்பும் இவ்வுலகத்துள்ளார் இயல்பு; அஃது இன்றும் புதியதொன்றன்று; அஃது இயல்பாயவாறு என்னெனில், மகளிர் தம்முடைய நலத்தை அவர் களே இரந்துகொண்டு (ங) தாதைத் தேடி உண்ணும் வண்டுபோல நுகர்ந்து அதனை அவர் வேண்டின காலத்து அவர்க்குக் கொடாது கேட்டினைக் கொடாநின்றீர், அங்ஙனங் கேட்டினைக் கொடுக்குமிடத்து எதிலார் கூறுவ தெவனோ? அதுவன்றியும் நன்மைக்குணமுடையார், (ச)சித்திரமெழுதுகின்ற வன் உயிர்ப்புக் கொடுத்த பாவை, தான் அழியுமளவும் அக்குறிப்பு நிற்கு மாறுபோலத், தாங் கூறிய மொழியிடத்து உயிராகிய உண்மைகெடார், நீ அம்மொழியிடத்து நலந்தாவி நினக்கு நிகழ்கின்ற நின். பொருள் வேட்கையிடத்து நினக்கு எதிலாராகிய யான் கூறுகின்ற காரியம் எத் தன்மைத்து? பயன்படாதே; எ - று.

"முன்னிலைப் புறமொழி யெல்லா வாயிற்கும், பின்னிலைத் தோன்று மென்மனார் புலவர்." (ஞ) என்பதனுள் இது முன்னிலைப் புறமொழியாகக் கூறினாள்.

(இ) "கடன்கொண்ட வொண்பொருளைக் கைவிட் டிருப்பா, ரிடங் கொண்டு தம்மினே யென்ற - றெடங்கிப். பகைமேற்கொண் டார் போலக் கொண்டார்வெகுட, னகைமேலு கைப்பாய்விடும்" பழ. கூடச. (ஈ) "தாயினைக் கண்டெனச் சார்ந்துவாங்கிப்பின், பேயினைக் கண்டென வெளித்துப் பேதுறீஇ, யீயவொன் றில்லவர் கடன்க ளேற்றவர், மாயிரு ளனிகொள வழங்கிப் போக்கினள்" காஞ்சிப். (உ) கழுவாய்ப். உடுசு.

க. "புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை" புறம். எசு: உ. "புதுவதன்றே தொன்றியல் வாழ்க்கை" சிலப். கூ:0: கசo. "புதுவது புகுந்ததோ வன்றே" கந்த. மார்க்கண்டேய உஉ0.

உ. மாந்தரென்னுஞ் சொல்லுக்கு ஒருமையின்றென்பர், சிலர்; அஃது ஆண்பாலொருமையில் மாந்தனென்றும் வருகின்றது.

ங. கலி சo; உச-இ ஆம் அடிகளின் குறிப்புப்பார்க்க.

ச. (அ)"சூழ்சிமேலோன், சித்திரம் புணர்த்த பாவை செயலறவிருக்கு மாபோல்" கந்த. மேருப். கச. (ஆ) "துகிலெத் தெழுதுபாவையி னுன்றமை புலத்தினன்" கந்த. குமாரபுரி சுச.

இ. இச்சூத்திரப்பக்கம் கூடுக: க - இன் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) * இவ்வுலகியற்கை, † மாந்தீர்.

முகனும் முகனுமென்னும் உம்மைகளை வேறுகுதலென்பதன் பின்னே கூட்டி எண்ணும்மையாக்குக. பண்டுமென்ற உம்மை எதிரதும் இன்று மென்னும் உம்மை இறந்ததும்தழீஇயின. மாந்திர், அண்மைவிளி (க) ஆர்ந்து அருந்தென விகாரமாயிற்று. இதல்கொடுக்குமிடத்து பொருள்வேட்கையிடத்து என்பன கூறுவதெவனென்பதனோடு முடிந்தன.

இது தாவு.

கூ (உ) நறுமுல்லை நேர்முகை யொப்ப நிரைத்த
(ரு) செறிமுறை பாராட்டி ஞாய்மற்றெம் பல்லின்
(சு) பறிமுறை பாராட் டிணையோ வைய

எ - து: ஐய எம் பல்லினுடைய விழுந்தெழுந்த முறைமையினையுடைய இளமைப்பருவத்தை இதற்குமுன்பு பாராட்டிவிட்டாய், அப்பருவம் ஒழிந்து. நறிய முல்லையினது தன்னிலொத்த முகையையொக்கும்படி நிரைத்த செறிந்த முறைமையாகிய நுகர்ச்சிக்குரிய இளமைப்பருவமெல்லாம் முற்பாராட்டிவிட்டாயோ? அது செய்திலையே; எ - று.

மற்று, வினைமாற்று; ஓகாரம், எதிர்மறை.

பறிமுறை பாராட்டினாய் செறிமுறை பாராட்டினையோவெனப் பாடத்தை (ரு) மாறிப் பொருள்கூறுக. அன்றி அங்ஙனம் பாடமோதலும் ஒன்று.

கஉ நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன
(சூ) வைவகை பாராட்டி ஞாய்மற்றெங் கூந்தற்,
செய்வினை பாராட் டிணையோ வைய

எ - து: ஐய, நீலமணி ஒளிவிட்டாற்போன்ற எங்கூந்தலிற் புழுகு பூசித் தாயர் (எ) ஐந்து வகையாக முடித்த இளமைப் பருவத்தை இதற்கு முன்பு பாராட்டிவிட்டாய், அப்பருவம் ஒழிந்து நீதான் அதனிடத்துச் செய்யும் தொழில்களை முற்றச்செய்து பாராட்டிவிட்டாயோ? அது செய்திலையே; எ - று.

க. ஆர்ந்தென்பது அருந்தெனவருதலைக் குறுக்கும் வழிக் குறுக்கலென்பர் சேனா. தொல். எச்ச. சூ. எ. அகம். கச. பதிற். அக: நி: ஆர்ந்தவென்பது 'அருந்த'என ஐங்குறு. எ0, உக. இலும்வந்துள்ளது. நெடிலைக் குறுக்கிப் பின்னின்ற ரகரமெய்யின்மேல் உகரவுயிரேற்றல் தமிழ்மரபு.

உ. ஒப்பவென்பது மெய்யுவமமாகச் சிறுபான்மை வருதற்கு "நறுமுல்லை நேர்முகை யொப்ப நிரைத்த" என்பது மேற்கோள். தொல். உவம சூ. கஙி. பே.

ங. "செறிநிறை வெண்பலும் பறிமுறை நிரம்பின" குறுந். ஙஙஎ.

ச. "பறிமுறை நேர்ந்த நகையாராய்" கலி. கூங: கக.

ஞ. மாற்றலென்னும் பொருளில் மாறலென்னுஞ் சொல்லே பிறவிடங்களிலும் வந்துள்ளது.

கூ. "ஐம்பா லாய்கவி னேத்தி" தொல்சீ. கஙக.

எ. "நறவியைம்பான் மகளிர்" ஐங். அச.

தலைவன் செய்யும் தொழிலாவன; ஐவகையாக முடியாமல் தான் வேண்டியவர்றே கோலங்கள் செய்துமுடித்தலும் அக் (க) கூந்தலணையிற் றுயிலுதன் முதலியனவுமாம்.

கரு (உ) குளனணி தாமம்ரப் பாசரும் பேய்க்ரு
(ரு) மிளமுலை பாராட்டி ணுய்மற்றெம் மார்பிற்
(ச) றளர்முலை பாராட் டிணேயோ வைய

எ - து: ஐய, குளம் அழகுபெறுதற்குக் காரணமான தாமரையினது பசிய அரும்பையொக்கும் எம்முடைய ஊற்றின்பம் மிகவுமில்லாத இள முலையை இதற்கு முன்பு பாராட்டிவிட்டாய்; அப்பருவம் ஒழிந்து ஊற் றின் பத்தை மிகவுமுடைய நீக்கம் அறியாத வந்தின நிலைமை சிறிதுசாய்ந்த முலையினையுடைய மிக்க இளமைப்பருவமெல்லாம் முற்றப் பாராட்டிவிட்டாயோ? அது செய்திலையே; எ - று.

இவை மூன்றும், தாழிசை.

இத்தாழிசையின் கருத்தான் முற்பட்டவற்றிற்கும் யாங்கூறியதே பொருளென்றுணர்க.

எனவாங்கு, அசை.

இது தனிச்சொல்.

ககூ (டு)அடர்பொ னவிரேய்க்கு மவ்வரி வாடச்
சூடர்க்காய் சுரம்போகு நும்மையா மெங்கட்
படர்கூற நின்றது முண்டோ (சு)தொடர்கூரத்
துவ்வாமை வந்தக் கடை

க. கூந்தலணையிற்றுயிலுதல் கலி கo்ச: அடிக்குறிப்புப்பார்க்க.

உ. (அ) "குளத்துக் கணியென்ப தாமரை" நாண். கக. (ஆ) "குளனணி தாமரை" மணி. கடி: எதி. (இ) "கண்கய மருங்கிற் றுமரைபோல, வண்ணன் மூதூர்க் கணியெனத் தோன்றி" பெருங். (க) ஈசு: ரீக - உo. (ஈ) "பொய்கை தாமரை பூத்தெனப் பொலிந்தன" கம்ப. வருணனைவழி. ஈ உ. (உ) "புண்டரிக மோடுபல பூத்திர ளணிந்து, கண்டவர்க ணெஞ்சுகட வாததொர் வனப்புக், கொண்டு குளிர் தூங்கு தடம்" விநாயக. சோமகாந்தன்வனம் உஉ (ஊ) "அலரணியா நீர் நிலைபோல்... ... ...அடிகளையடியே னீத்திருத்த லழகேயோ" நீருவா ணைக்கா. சம்புமுனிதவ சo.

ங. "இவைபா ராட்டிய பருவமு முளவே" அகம். உசு.

ச. "தளர்முலை பாராட்டி" ஐந் - யெழ சள.

ஞ. "அடர்பொ னவிரேய்க்கு மவ்வரி வாட" என்பது அரியென் பது நிறத்தின்கண் வந்ததற்கு மேற்கோள். தொல். உரி. சூ. எங. 'கூறிய இளவி'தெய். 'அவ்வரிவாட' நற். ஈடுஅ.

ட. "தொடர்கூரத், துவ்வாமை வந்தக்கடை" என்பது வினையெச்சங் களுள், கடையீறு இறந்தகாலம் பற்றிவருதற்கு மேற்கோள் தொல். வினை சூ. ஈஉ. சேனா; சூ. ஈக. கல்; சூ. ஈஉ. நச். நன். வினை. சூ. உச. இரா. இ - வி. சூ. உசஉ. துவ்வாமை யென்னும் மறைக்கு,

எ - து: நும்முடன் இவட்குப் பிணிப்புமிகும்படி கல்வினை * நிகழ்கின்ற காலத்தே நும்மை நுகராமையாகிய தீவினை வந்து புகுந்த இடத்துத், தகடாகிய பொன்னினது விளக்கத்தையொக்கும் அழகிய சுணங்கு கெடும் படி ஞாயிறுகாய்ந்த சுரத்தைப் போகும் நும்மை யாங்கள் எம்மிடத்து வருத்தத்தைச் சொல்லி விலக்க எம்மிடத்து ஒரு கல்வினை நின்றதும் உண் டோ? இல்லையே, யாங் கூறுவதென்? எ - று.

ஓகாரம் எதிர்மறை.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை, யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி, யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ், சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே"என்னும்(க) சூத்திரத்திற் றலைவனும் தலைவியும்(உ)மூப்பு வருவதன்முன் துறப்பாரென்றலின், பல்லு விழும்பருவத்தும் (ங) கூரைவரும் பருவத்தும் இல்லறஞ் செய்திருப்பாரென்றல் பொருந்தாமை யுணர்க.

இது சுரிதகம்.

இதனால், தோழிக்கு இழிவும் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இஃது எட்டடித்தரவும் மூன்றடித்தாழிசையும் தனிச்சொல்லும் கொள் ளுச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. " வெண்பா வியலினும் பண் புற மூடியும்" (ச)என்பதுவிதி. இது மேல்வருவன வற்றிற்குங் கொள்க. (ஊ)

(உஈ) (டு) இலங்கொளி மருப்பிற் கைம்மா வளம்புகர்
புலங்கடி கவணையிற் பூஞ்சினை யுதிர்க்கும்
விலங்குமலை வெம்பிய போக்கரு வெஞ்சுரந்
தனியே யிறப்ப யானெழிந் திருத்த
னகுதக் கன்றிவ் வழுங்க லூர்க்கே

துவ்வுதல் உடம்பாட்டிச் சொல்லென்பதனை "நெடுவான் பேகந், துவ்வுதலல்யான் விழைந்திலேன்" என்பதனானும் உணர்க.

க. தொல். கற்பியல், சூ. நிக.

உ. (அ)" இறந்திலன் செருக்களத் திராமன் றானதா, னறந்தலை நிரம்ப மூப்படைந்த பின்னரு, துறந்தில னென்பதோர் சொல்லுண் டான பின், பிறந்தில னென்பதிற் பிறிதுண் டாகுமோ" கம்ப. அயோத்தி மந்திர உஅ. (ஆ) "வெண்மதி நுதலாய் காமம் வெறுக்குநான் காறு நின்கேள், வண்மலராகத் தோய்ந்து வாழ்தி" பிரமோத்தர உமாமகேசுவர பூசாபலம் சு.

ங. "நரைவரு மென்றெண்ணி நல்லறி வாளர், குழவியிடத்தே துறந்தார் புரைதீரா, மன்னு வினைமை மகிழ்ந்தாரே கோலூன்றி, யின்னுங் கெழுந் திருப்பார்" நாலடி. கக.

ச. தொல். செய். சூ. எஎ.

ஞ. இரண்டடியாற் றழிசை வந்ததற்கு இச்செய்யுள் மேற்கோள். தொல். செய். சூ. கஙக. 'போக்கியல்' இளம்.

(பிரதிபேதம்) * கெழிஞின்ற, கல்குனின்ற.

இனியான்

உண்ணலு முண்ணேன் வாழலும் வாழேன் ;

அ தோணல முண்டு துற்கப் பட்டோர்
வேணீ ருண்ட குடையோ ரன்னர் ;

கஎ நல்குநர் புரிந்து நலனுணப் பட்டோ
ரல்குநர் போகிய வூரோ ரன்னர் ;

கஉ கூடினர் புரிந்து குணனுணப் பட்டோர்
சூடின ரிட்ட பூவோ ரன்னர் ;

எனவாங்கு ;

கரு யாணு நின்னகத் தணியே ஞெகிழ
கொலிவெங் கொள்கையொடு நாயகப் படுப்ப
வலிவர்க் கமர்ந்த மடமான்போல
நின்னுங்கு வருஉமென் னெஞ்சினை
யென்னுங்கு வாரா தோம்பினை கொண்மே.

இது பிரிவுணர்த்தப்பட்டு ஆற்றளாய தலைவி எம்மையும் உடன் கொண்டு சென்மினென்றட்கு உடன்படாது அவன் பிரியலுறத் தனது இறந்துபாடுதோன்றக் கூறியது.

இதன் பொருள்.

இலங்கொளி மருப்பிற் (க)கைம்மா * வுளம்புகர்
புலங்கடி கவணையிற் பூஞ்சினை † யுதிர்க்கும்
மிளிர்ங்குமலை வெம்பிய போக்கரு வெஞ்சுரந்
தனியே யிறப்ப யானெழிற் றிருத்த
‡ னகுதக் கன்றிவ் வழுங்க லூர்க்கே

க. (அ)" குறவ, ருயர்நிலை யிதண மேறிக் கைபுடையூஉ, வகன்மலை யிறும் பிற் றுவன்றிய யானைப், பகனிலை தளர்க்குங் கவணுமிழ் கடுங்கல் " மலை. உருஉ-கூ.(ஆ)" யானைக்,கால்வ லியக்க மொற்றி நடுநாள்; வரை யிடைக் கழுதின் வன்கைக் கானவன், கடுவிசைக் கவணி னெறிந்த சிறுக, லுடுவுறு கணையிற் போகிச் சாரல், வேங்கை வீரியினர் தெறி " அகம். உகஉ: அ - கரு.

(பிரதிபேதம்) * உலம்புகர், † உதிர்க்கு மிலக்கு, ‡ நகுதக்கொன்று, நகுதற்கொன்று.

இனியா

(க) னுண்ணலு முண்ணேன் * வாழலும் வாழேன்

எ - து: விளங்குகின்ற ஒளியினையுடையவாகிய கொம்பினையுடைய யானையை யலைப்பார் அந்நிலத்தினின்றும் அவ்வியானையை ஓட்டுங் கவணையாலே பூக்களையுடைய கொம்பிற் பூக்களை உதிர்க்கும் † விலங்குகின்ற மலைகள் வெம்பியத் போதலரிய் வெய்ய சுரத்தைத் தனித்து நீ போக யான் நின்னைக் கைவிட்டிருத்தல், இந்த இரக்கத்தையுடைய ஊர்க்குச் சிரித்தற்குத்தக்க காரியம்; நீ இங்ஙனம் பிரியுமளவில் யான் உண்டற்கு உரியனவற்றை உண்ணுதலுஞ் செய்யேன், உயிரை வாழ்தலுஞ் செய்யேன்; எ - று.

உண்ணேன் வாழேனென்பன முழுவதுங் காரியவாசகமாயே நிற்குமென்பது, "வினையேசெய்வது" என்னும் (உ) சூத்திரத்தாற் கூறினும். உம்மைகள் எண்ணும்மை; உண்ணலுமுண்ணேனென்பது, (கூ) பகையடநிற்றல்.

இது தலைவி.

க. (அ) "அணியலு மணிந்தன்று" (ஆ) "அரற்றலு மரற்றும்" (இ) "அழுதலு மழுஉம்" (ஈ) "அறிதலு மறிதியோ" (உ) "அறிதலு மறிதிரோ" (ஊ) "அறிதலு மறியார்" (எ) "இயங்கலு மியங்கும்" (ஏ) "உயிர்த்தலு முயிர்த்தனன்" (ஐ) "ஓடலு மோடும்" (ஒ) "சுழலலுஞ் சுழலும்" (ஓ) "தொடலுந் தொட்டான்" (ஔ) "தொழலுந் தொழுதான்" (ஃ) "நகுதலு நகூம்" (அஅ) "நல்கலு நல்குவர்" (ஆஆ) "நீங்கலு நீங்கார்" (இஇ) "நீடலு நீடும்" (ஈஈ) "பயிற்றலும் பயிற்றும்" (உஉ) "புலம்பலும் புலம்பாளோ" (ஊஊ) "மயங்கலு மயங்கும்" (எஎ) "மருட்டலு மருட்டினன்" (ஏஏ) "மாந்துதன் மாந்தி" என்பவை முதலியன உண்ணலுமுண்ணே னென்பதனெடு ஒப்புநோக் கற்பாலன.

உ. தொல். வேற்.மயங். சூ. உகூ. இச்சூத்திரத்தினச்சினஞர்க்கினியருரையில் (அ)" இனி யானுண்ணலு முண்ணேனென்புழி இனியான் சோற்றை யுண்ணுதலையுஞ் செய்யே னெனவும் வாழலும் வாழேனென்புழி இனி யான் உயிரை வாழுதலையுஞ் செய்யேனெனவும்..... உண்ணேன் வாழேனென்பன முழுதுங் காரியவாசகமாயே நின்ற வாறுகாண்க" என்ற குறிப்புக் காணப்படுகிறது. (ஆ) "பாவக மேற் றூனசத்தாம்" என்னும் வெண்பாவி னுரையில் பாவகத்தைப் பாவித்த லென்புழி, பாவித்தல் செய்த லென்னும் பொருட்டாய் நின்றது என்றுகூறி, "உண்ணலுமுண்ணேன் வாழலும் வாழேன்" என்பதனை மேற்கோள் காட்டியவர், சிவஞான முனிவர்; சிவஞான பாடியம் இலக்கணவியல் சூ. கூ. அதிகரணம் உ. வெண்பாகூ. (இ) "உண்ணலு முண்ணேன் வாழலும் வாழேன்" என்பதனை ஒருபொருட் பன்மொழி யென்பர் மயிலைநாதர்; நன். பொது. சூ. ளஎ.

கூ. தொல். மெய்ப் சூ. உஉ. பேராசிரியருரையிலும் "இனியான்..... .....வாழேன்" என்பது பகையட நிற்றற்கு மேற்கோள்.

(பிரதிபேதம்) * வாழ்தலும் வாழேன், † விளங்குகின்ற.

அ (க) தோணல முண்டு துறக்கப் பட்டோர்
(உ) வேணீ ருண்ட குடை (ங)யோ ரன்னர்

எ - து: தோளின் நலத்தை நுகர்ந்து கணவரால் துறக்கப்பட்ட மகளிர் தண்ணீர் வேட்கையாலே கோலித் தண்ணீர் குடிக்கப்பட்ட எச்சிலாற் பயன் படாத (சு)குடையோலையை ஒப்பர், அந்நிலையை ஓர்ந்துபார்; எ - று.

கo கல்குநர் புரிந்து நலனுணப் பட்டோ
(ஙி) ரல்குநர் போகிய வூரோ ரன்னர்

எ - து: மனம் விரும்பி யருளின கணவரால் நலத்தை நுகர்ந்து † விடப்பட்ட மகளிர் குடியிருப்பார் போகிய பாழூரை ஒப்பர், அந்நிலையை ஓர்ந்துபார்; எ - று.

க. (அ)உண்டற்குரிய வல்லாப்பொருளை யுண்டனபோலக் கூறலுமரபென் பதற்கு, "தோணல முண்டு ..... பூவோரன்னர்" என்பதற்றை மேற்கோள் காட்டுவர் நச்சினார்க்கினியர்; தொல். பொருளி. சூ. கக. (ஆ)அளித்தயில் கின்ற வேந்த னென்புழி "அயிறல்-உண்டல்; 'உண் டற்குரிய வல்லாப் பொருளை, யுண்டன போலக் கூறலு மரபே; 'தோணலமுண்டு துறக்கப்பட்டோர்' என்றூர் பிறரும்;" என இதனை மேற்கோள் காட்டுவர் இவ்வுரை யாசிரியர், சீவக. ககஉ. (இ) "தோணலமுண்டு" பரி. கஉ: சசு. (ஈ) "தோணலமுண்டானை" கலி. கசஎ: எ. (உ) "பச்சிள வேய்புரை தோணல முண்டாளுல்" (ஊ) "தோணல மினிதுமாந்தி" பாகவதம். (கo) உத்தவனைக். நகு. பத்திரையை. எ. என்பவையும் (எ) "தோணல முணீஇய" சிலப். உள: உசஅ. என்பதும் இங்கே அறிதற்பாலன.

உ. வேட்கை நீர் - வேணீரென்றதனைப் போலிமொழி யென்பர் மயிலை நாதர்; இலக்கணப் போலியென்பர் இராமாநுசகவிராயர்; நன். மெய். சூ. நகு.

ங. "ஓரன்னன்;" குறுந். ஙகஉ "ஓரன்ன" மது. எoசு. குறுந். கூடு. அகம். ஙஎடு.

சு. "சூடிய பூவும் பருகிய வோலையுந் தோகையரு, நாடிய காலை நிகர்ப்பர்" தணிகை. களவு. ஙஙக. 'பனங்குடை' அகம். கஉக: கஉ. புறம். கஎள: கசு; ஙடுஉ: ங. நாலடி. உசிக.

ஞ. (அ) "அங்குடிச் சிறார், மக்கள் போகிய வணிலாடு முன்றிற், புலப்பில் போலப் புல்லென், றலப்பேன் றேழியவ ரகன்ற ஞான்றே" குறுந். சக. (ஆ) "கால்வேறு தேவரு நலத்தகு சிறப்பிற், பால்வேறு தேவரு மிப்பதிப் படர்ந்து, மன்னன் கரிகால் வளவனீங் கியாநா, ளிந்நகர் போல்வதோ ரியல்பின தாகிப், பொன்னகர் வறிதாப் போதுவர்" மணி. க: ஙஎ-சக. (இ) கம்ப. அயோத்தி. ஆற்று. சஞ.

(பிரதிபேதம்) * அருணி அக்கணவர், † விட்டமகளிர்.

கஉ சூடினர் புரிந்து (க) குணனுணப் பட்டோர்
'சூடின ரிட்ட பூவோ ரன்னர்

எ - து: மனம் விரும்பிக் கூடின கணவராற் றங் குணத்தை நுகர்ந்து விடப்பட்ட மகளிர், முடிப்பார் முடித்துப்போகட்ட பூவை ஒப்பர், அந்நிலையை ஓர்ந்துபார்; எ - று.

இவை "உண்டற் குரிய வல்லாப் *பொருளே" என்னும் (உ)சூத்திரத்தில் உய்த்துக்கொண் டுணர்தலென்பதனைத் கொண்டாம்.

இவை மூன்றும், தாழிசை.
எனவாங்கு, அசை.
இது தனிச் சொல்.

கந யானு நின்னகத் தமையே னுனது
கொலைவெங் கொள்கையொடு † நாயகப் படுப்ப
‡ வலைவர்க் கமர்ந்த மடமான் போல
(ங) நின்னுங்கு வருஉமென் னெஞ்சினை
யென்னுங்கு வாரா தோம்பினை கொண்மே

எ - து: நின்னிடத்து யானும் பயன்படாததன்மையையுடையேன், இனிக் கொலைத் தொழிலிடத்துக் கடிய கோட்பாட்டோடே நாய் அமையா மற் சென்று தனக்கு உரித்தென்று || அகப்படுத்திக்கொள்ள அதற்கு உரித்தா காது வலைவர்க்கு அமர்ந்துவிட்ட மடமான்போலே எனக்கு உரித்தாக யான் அகப்படுப்பவும் என்னுங்கு வாராமல் நின்னுங்குவரும் என் நெஞ்சினைப் போதுகாத்துக் ÷ கொள்; எ - று.

இது சுரிதகம்.

இதனுல், தலைவிக்கு இழிவும் தலைவற்கு அசைவும் பிறந்தன.

நின்னுங்கு என்னுங்கு என்பன நின்னுடைய கையிடத்து என்னுடைய கையிடத்து எனச் சுட்டுப் பொருள்(?) தந்தவாறுணர்க.

இஃது இனியான் எனத் தனிச்சொல்லும் ஓரடியான் ஒன்றும் பெற்று வந்த கொச்சகம்; இது "பாநிலைவகை" என்னும் (ச) சூத்திரவிதி. (௨௨)

க. ஒசையாற் சன மொண்ணிதி யுண்டதே யென்னுமிடத்து உண்ட தென்பதற்குக் கைக்கொண்டதென்று பொருள் கூறி "உணடற் குரியவல்லா ப்பொருளே, யுண்டனபோலக்கூறலுமரபே" என்றதனால் உண்டதென்றார்; 'குணனுணப் பட்டோர்' என்றார்போல "என இப் பகுதியை இவ்வுரை யாசிரியர் மேற்கோள் காட்டினர். சீவக. கக்க.

உ. தொல். பொருளி. சூ. கக. இந்நூற் பக்கம் கஉ: க-குறிப்புப் பார்க்க.

ங. (அ) காவற்பாங்கி னுங்கோர் பக்கமு மென்புழி, காவற் பாங்கினுங் கென்பதற்கு, காவற் பக்கத்தின் கண்ணே யெனப்பொருளும் ஆங் கென்பது இடங்குறித்து நின்றதென விளக்கமு மெழுதி 'நின்னுங்கு வருஉமென் னெஞ்சினை' என்னும் பகுதியை மேற்கோள் காட்டினர். இளம். தொல். அகத். சூ. சக. 'ஒன்றுதமரினும்'. (ஆ) "நின்னுங்கு வருவது போலும்" மணி. கக: சஎ.

ச. தொல். செய். சூ. கஙிசு

(பிரதிபேதம்) * பொருளேயும்" என்னும், † நாயகடுபடுப்ப, ‡ வலைவறமர்ந்த, || அகடுபற்றிக்கொள்ள, ÷ கொள்ளென இறந்தபாடி தோன்றக்கூறினுள்.

(உழ) (க) நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்துந்தா
மஞ்சிய தாங்தே யணங்காகு மென்னுஞ்சொ
லின்றீங் கிளவியாய் வாய்மன்ற (உ) நின்கேள்
புதுவது பண்ணுஞ் பாராட்ட யானு
(ங) மிதுவொன் றுடைத்தென வெண்ணி யதுதேர
மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுட்
(ச)பாயல்கொண் டென்றேட் * கனவுவா ராய்கோற்
(ஞ) றொடிநிரை முன்கையாள் கையா றுகொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ

க. இச்செய்யுள் பிரிதலுற்ற தலைமகன் குறிப்புக் கண்டு தலைமகள் கூறியதற்கும் (தொல். அகத். சூ. சஇ. 'எஞ்சியோர்க்கும்' இளம்.) அந்தணர் பொருண் முடித்தற்காகத் தூதுபற்றிப் பிரிதற்கும் (தொல். அகத் சூ. உசு. நச்.) தலைவன்க ணிகழ்ந்தது தலைவிதோழிக்குக் கூறியதற்கும் (தொல்.அகத்.சூ. சஙூ. நச்.) பிரியக்கருதிய தலைவன் பள்ளி யிடத்துக் கனவிற் கூறுத லாகிய வேற்றுரூட் டகல்வுயின் மீழுமத்துக்கும் (தொல். கற் சூ. இ. நச்.) பதினே ழடியான் வந்தகலி வெண்பாட்டிற்கும் (தொல். செய் சூ. கசூ०. பே.) மேற்கோள்.
" நெஞ்சு நடுக்குற ....மிதுவொன் றுடைத்தென வெண்ணி " என்பது பாராட்டிஞல் தலைமகன் பிரிவு தலைமக ஞணர்ந்ததற்கு மேற்கோள். தொல். பொருளியல் சூ. ஙூ. 'செய்பொருள்' இளம். " நெஞ்சுநடுக்குறக் கேட்டுமெய்வருந்தி " மணி. உசு: ச.

உ. " நின்கேள், புதுவது ....றுடைத்தென வெண்ணி" என்பது தோழிகேட்பத் தலைமகள் கூற்று வந்ததற்கு மேற்கோள். தொல். செய். சூ. கஙூ. பே. நச்.

ங. (அ) அற்றென்பது உறக்கத்தின்கண்வரும் † வாய்ச்சொலவு; அதுவும் எனைச் சொல்லின் வேறுபடுதலின் அரற்றென ஒரு மெய்ப்பா டாயிற்ற ; முன் உறக்கம்வைத்தலாலும் பின் கனவுவைத்தலாலும் இப்பொருள் உரைக்கப்பட்ட தென்று கூறி, "பாயல்கொண்டென் ரேட் கனவுவா ராய்கோற்..... .....செய்பொருண் முற்றுமளவு " என்பதனை அம்மெய்ப்பாட்டிக்கு மேற்கோள் காட்டினர். இளம் பூரணர் ; தொல். மெய்ப். சூ. கஉ.
(ஆ) "காதல் பெருமையிற் கனவினு மற்றும்" என்பது புறம் ககஅ:.

ச. கையாறென்பது காதலர் பிரிந்தால் வருந் தின்பமும் அந்திகான பிறவுமென்று கூறி, "றொடிநிரை ....வல்லுவள் கொல்லோ" என்பதனை அம்மெய்ப் பாட்டிக்கு மேற்கோள் காட்டினர். இளம் பூரணர்; தொல். மெய்ப். சூ. கஉ.

(பிரதிபேதம்) * கனவுவான். † வாய்ச்சோர்வு.

கo (க)னிமெருப் பியானை யிலங்குதேர்க் கோடு
நெடுமலே வெஞ்சுரம் போகி (உ) * நடுநின்று
செய்பொருண் முற்று மளவென்ரு ராய்மிழாய்
தாமிடை கொண்ட ததுவாயிற் றம்மின்றி
யாமுயிர் வாழு மதுகை † யிலேமாயிற்
கரு நெய்யி றுறந்தா ரவரெனத் தம்வயி
னெய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று ‡ சொல்லென் னுயிர்.

இது தலைமகன் தூதிப்புக் கண்டு பிரிவனென ஐயுற்றுச் செல்கின்ற தலைவி அக்காலத்துத் தலைவன் கனவின் அற்றினமைகேட்டுப் பொருள் வயிற் பிரிகின்றனெனத் துணிந்து ஆற்றளாயித் தோழிக்குச் சொல்லியது.

இது "மேலோர் முறைமை நால்வர்க்கு முரித்தே" (ங) என்பதனுல் அந்தணன் அறங் கருதித் தூதிற்பிரிந்து அவ்வரசர் செய்த பூசனே வாங்கிக் கொண்டு வருதற்குப் பிரிகின்றதென்று கொள்க. இது "வேற்று நாட் டகல்வயின் விழுமம்" (ச) கூறுகின்றது.

இதன் பொருள்.

இன்றீங்கிளவியை யுடையாய்! நெஞ்சு நடுக்கமுறும்படி பலகாலுங் கேட்டும் கேட்டவதனை உண்டோ இல்லையோ வென்று ஐயுற்றும் தாம் அஞ்சியிருந்த பொருள் தாங் கேட்டபடியிலே மெய்யாய் வருத்தமாமெனும் பழமொழி, அறுதியாக உண்மை; அஃது எங்ஙனேயென்னில், நின்னுடைய || உறவானவர், பலநாளும் புதியதொன்ருக எண்ணேப் பாராடுகையினுலே யானும் இப்பாராட்டுதல் ஒரு பிரிவையுடைத்தென்று கருதி அப்பிரிவை ஆராயா நிற்க, (நு)ஐந்துவகையாகக் கூட்டின மரமில்லாத வண்மையையுடைய

க. இடுதலென்பது இவ்வாறே குத்துதலென்னும் பொருளில் வருகலே (அ) "எயிறு படையாக வெயிற்கத விடாஅ" என்னும் புறம். ங. மூலமும் அதனுரையும் (ஆ) "இமெருப் பியானேயு நிருது பன்னன் பால்" உத்தரகோச. நளசக்கர. கக. என்பதும் வலியுறுத்தும். (இ) "இமெருப் பியானே யெறிந்த வெற்கே" புறம். ஙoஙo: கூ. பிரதிபேதம்.

உ. "நடுநின்று செய்பொருண் முற்று மளவென்ரூர்" என்றலின் எத்துணேயும் அணித்தாக மீள்வலென்ற தாமென இதனே அந்தணன் சந்துசெய்து பொருளீட்டுதற்குப் பிரியும் தூதிற்பிரிவிற்கு மேற் கோள் காட்டினர், இவ்வுரையாசிரியர்; தொல். கற்பியல் சூ. சகூ.

ங. தொல். அகத். சூ. உகூ. ச. தொல். கற். சூ. இ.

இ. "சிறுபூளே, செம்பஞ்சு, வெண்பஞ்சு, சேணம்,-உறுதுயர் தாமிவை யோ சுமந்து"

(பிரதிபேதம்) * நடுநின்றெஞ், † இலமாயிற், ‡ கொல்லென், || உறவானவன்.

படுக்கையீற் புணர்ந்த புணர்ச்சியிடத்தே என் (க) தோளிலே துயில்கொண்டு களுக்காண்கின்றவர், ஆராய்ந்த கோற்றொழிலையுடைய செறிந்த தொடியணிந்த முன்கையினையுடையாள் கையாறுகொள்ளாளாய்க், குத்துங் கொம்பினையுடைய யானை நீர் வேட்கையிலுலே விளங்குகின்ற பேய்த்தேரின் பொருட்டு ஓடும் நெடுமலையில் வெய்யசுரத்தைப் போய் இரு பெரு வேந்தரையுஞ்சந்துசெய்வித்தற்கு நடுவாகநின்றுசந்துசெய்வித்தபின்னர் யாம் பெறுதற்கு உரியவாய் அவர் எமக்குச்செய்யும் பூசனையாகிய பொருள் அவர் தந்து முடியுமளவும், தனக்கு வரைவினையுடைய இல்லறத்தையுங் காத்துச் செந்தீயையும் பாதுகாக்க வல்லனோவென்று கூறினர்; ஆய்ந்த இழையினையுடையாய்! நங் காதலர் கூட்டத்திற்கு இடையீடாகக் கொண்ட காரியம் பொருள்வயிற் பிரிவாயின், யாம் தம்மைப் பிரிந்து உயிர்வாழும் வலியிலே மாயின், இனி, அவள் மார்பிற் றெய்யிலை நீங்காதவர் இப்பொழுது துறந் தாரென்று நொய்ய* மகளிர் கூறும் பழி தம்மிடத்தே நிற்ப, என்னுயிர் தம்மோடேகூடப் போயிற்றென்று சொல்; * எ - று.

நெஞ்சுநடுக்குறக் கேட்டது இவ்வாலிலே பேயுண்டென்று கேட்டாற் † போல்வது. இன்னிளவி, பின்பு காரியத்தில் இனிய னிளவி; நீங்னிளவி, கேட்டகாலத்தில் இனிய னிளவி.

கனவுவாரென்றது தொடங்கி என்றுரென்ற துணையும் கனவெனும் மெய்ப்பாடு. கையாறு, உயிர்ப்பின்றி வினையொழிந்தயர்தல்; தொய்யிலவரெனக் கூட்டுக.

போயின்றென்ற குற்றுகரம இன்பெற்று ‡ னகரந் திரியாமல் நின்றது; தெளிவுபற்றி இறந்தகாலத்தாற் கூறினுள்.

இதனால், தலைவிக்கு ॥ இழிவும் தோழிக்கு அசசமும் பிறந்தன.

இது சீரும் தளையுஞ் சிதையாமற் பண்ணீரடியின் இகந்து ஒரு பொருணுதலாத சீர்வகைக் கலிவெண்பா. (உங)

(உரு) (உ)வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுண் முதியவன் புணர்ப்பினு
லிலவரென் றுலகேத்து மரசர்க ளகத்தராக்
கைபுனை யரக்கில்லிக் கதழெரி சூழ்ந்தாங்குக்
கலிதிகழ் கடாஅத்த கடுங்களி றகத்தவா
ருளிகழை யுயர்மலை முற்றிய முழங்கழ
லொள்ளுரு வரக்கில்லி வளிமக னுடைத்துத்தன்
னுள்ளத்துக் கிலேகளோ டுயப்போகு வான்போல

க. கலி. கஉசு : கஙி ஆம் அடிக் குறிப்புப் பார்க்க.

உ. இசசெய்யுள் தரவு பன்னிரண்டடியான் வந்ததற்கு மேற்கோள். தொல். செய். சூ. கஙக. 'போக்கியல்' இளம்.

(பிரதிபேதம்) * எனத் தோழிக்குக்கூறினுள. † போல்வன, ‡ இனதாற்றிரியாமல், ॥ இழிவுபிறந்தது; தோழிக்கு அச்சம் பிறந்தது.

வெழுவுறழ் தடக்கையி னினங்காக்கு மெழில்வேழ
கo மழுவஞ்சூழ் புகையழ லதர்பட மிதித்துத்தங்
குழுவொடு புணர்ந்துபோங் குன்றழல் வெஞ்சுர
மிறத்திரா லியமற் றிவணிலைமை கேட்டீமின் ;

கக. மணக்குங்கான் மலரன்ன தகையவாய்ச் சிறிதூ
தணக்குங்காற் கனற்பாலைக் கண்ணெனவு முளவன்றே
சிறப்புச்செய் தூழையராப் புகழ்பேற்றி மற்றவர்
புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்புபோல்;

கள ஈங்குநீ ரளிக்குங்கா லிறைசிறந் தொருநாணீர்
நீங்குங்கா னெஞ்சிழ்பேகும் வளையெனவு முளவன்றே
செல்வத்துட் சேர்ந்தவர் வளனுண்டு மற்றவ
ரொல்கிடத் துலப்பிலா வுணர்விலார் தொடர்புபோல் ;

உக ஒருநாணீ ரளிக்குங்கா லொளிசிறந் தொருநாணீர்
பாராட்டாக் காற்பசக்கு நுதலெனவு முளவன்றே
பொருந்திய கேண்மையின் மறையுணர்ந் தம்மறை
பிரிந்தக்காற் பிறர்க்குரைக்கும் பீடிலார் தொடர்புபோல் ;
எனவாங்கு ;

உசு யாநிற் கூறுவ தெவனுண் டெம்மினு
நீநற் கறிந்தனை நெடுந்தகை வானந்
துளிமாறு பொழுதினிவ் வுலகம் போலுநின்
னளிமாறு பொழுதினிவ் வாயிழை கவினே.

இது பிரிவுணர்த்தப்பட்ட தோழி நீ பிரிந்தாற் பீடிலார் தொடர்பு போல நும்மை அலர் தூற்றுவன இவ்வகைப்பட்டன சிலவுளவெனத் தலைவி ஆற்றமை கூறிச் செலவழுங்குவித்தது.

இதன் பொருள்.

(க)வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுண் முதியவன் புணர்ப்பினு

க. சீர்வகையான் வருங் கலியடி தளை விரவி வருதற்கு "வயக் குறு மண்டிலம் வடமொழிப் பெயர் பெற்ற" என்பது மேற்கோள். தொல். செய். சூ. சுக. நச்.

(க) லவரென் றுலகேத்து மாசர்க ளகத்தராக்
கைபுனை யரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்குக்
(ங) களிதிகழ் கடாஅத்த கடுங்களி றகத்தவா
(உ) முளிகழை யுயர்மலை முற்றிய முழங்கழ
லொள்ளுரு (ஙூ)வரக்கில்லை வளிமக னுடைத்துத்தன்
னுள்ளத்துக் * கிளைகளோ டெப்போகு வான்போல
வெழுவுறழ் தடக்கையி னினங்காக்கு மெழில்வேழ
கூ மழுவஞ்சூழ் புகையழ லதர்பட மிதித்துத்தங்
குழுவொடு புணர்ந்துபோங் குன்றழல் வெஞ்சுர
(ச) மிறத்திரா லியமற் றிவணிலைமை கேட்டீமின்

எ - து: வடமொழிப் பெயர்பெற்ற வயக்குறு மண்டிலம்போலும் முகத்தவனுடையமக்களுள் மூத்ததுரியோதனன் சூட்சியாலே, ஐவரென்று உலகத்தார் புகழுந் தன்மபுத்திரர் முதலியோர் உள்ளேயாகக், கையாலே புனையப்பட்ட அரக்குமாளிகையை விரைந்து நெருப்புசூழ்ந்தாற்போல, களிப்பு விளங்குகின்ற மதத்தவாகிய கடிய களிறுகள் உள்ளேயாக, உலர்ந்த மூங்கிலையுடைய உயர்ந்த மலையைச சூழ்ந்த முழங்குகின்ற அழலைக், கண்ணியத்தை † மாறுபடுகின்ற தடக்கையினையுடைய ‡ தம் இனத்தைக் காக்கும் அழகினையுடைய வேழம், புகையழலையுடைத்தாகிய ஒள்ளிய உருத்தினையுடைய அவ்வரக்கில்லை அந்த வீமசேனன் அழித்துத் தன் உளத்திற்குப் || பொருந்தின சுற்றத்தோடே பிழைக்கப் போகின்றவனைப்போல, அதர்படும்படி மிதித்துத் தம்முடைய திரளோடே கூடிப் போதலைக் காட்டுப் பரப்புச சூழ்ந்த குன்று அழலும் வெய்தாகிய சுரத்தை இறப்பீராயின், ஐயனே! பின்னை இவளுடைய நிலைமையைக் கேட்பீராக; எ - று.

க. (அ) "கூரெரி வளைக்கப்பட்ட, பஞ்சவர் போலநின்ற பகட்டினப் பரிவு தீர்த்தான்." சீவக. கஉஙஎ. (ஆ) "மும்மதக் களிவேழ மூடிய விருளத்துச், செம்மணிக் குகையுள்ளாற் சேவகங் கொண்டொழிந்து, சும்மைகொண் டொளிர்கிரணச் சோதியைத் தழலென்னு, மிம்மென வீம னெப்போ லினத்தொடு மிரிவன வால்" பேரூர். காமதேனு. ஙo.

உ. சீர்வகை மேற்கதுவாய் மோனைக்கு "முளிகழை.....முழங்கழல்" என்பது மேற்கோள். தொல். செய். சூ. கூஉ. நச்.

ஙூ. இச்செய்தி உய்வதற் குய்யயா விடமில்லை யென்பதற்கு "அரக்கில லுட், பொய்யற்ற வைவரும் போயினு ரில்லையே. யுய்வதற்குய்யா விடம்" என உதாரணமாக்கப் பெற்றுள்ளது. பழ. உஅo

ச. தஞ்சை. உஉச விசேடவுரையில் "வாரன்மின் ஒருமை பன்மை மயக்கம்; என்னை? வயக்குறுமண்டில மென்னும் பாலைக்கலியில் 'இறத்திரா லியமற் றிவணிலைமை கேட்டீமின்' என்றனபோலக் கொள்க" என இப்பகுதி மேற்கோளாக வந்துள்ளது; ஆராய்க.

(பிரதிபேதம்) * கிளையோடு † மாறுபடுகின்ற, ‡ தன், || பொருந்தியவன் சுற்றத்தோடே

வடமொழிப்பெயர் பெற்ற வயக்குறு மண்டிலம் போலும் முகத்தல னென்றது, (க)' ஆதித்தரிற் (உ) *பகனென்னும் வடமொழிப்பெயரைப் பெற்ற விளங்குதலுறும் ஆதித்தனைப் போலும் முகத்தையுடையனென்பது. அவன் தான் குருடாயினமையிற் பிறரைக்காணுதவாறுபோல இவனும் பிறரைக் காணுத முகத்தையுடையவனென்றவாறு. என்றது †திருதராஷ்டிரனே. இனி விளக்கமுற்ற (ங) கண்ணுடியின் பெயரை வடசொல்லாகிய பெயராற் பெற்ற முகத்தவன் என்றலுமாம். அது (ச) ‡தர்ப்பணனெனென்னும்பெயரை. அது பிறரைத்தான்காணுதவாறுபோல இவனும் பிறரைக்காணுனென்றதாம். இனி, விளக்கமுற்ற நாடெனநின்ற அச்சொல்லினைத் ||திருதராஷ்டிரனென்னும் வட மொழிப் பெயராலே தமிழ்ச்சொலீருகத் திரித்த ÷ததராயனென்னும் பெயர் பெற்ற, பாண்டுவுக்கு மூத்தவனென்றும் (?) உரைப்ப.

முற்றிய முழங்கழலை இனங்காக்கும் வேழம், புகையழலையுடைய அவ்வரக்கில்லை அவ்வளிமகன் உடைத்துக் கிளைகளோடே போவான்போல் அதர்பட மிதித்துக் குழுவொடு புணர்ந்துபோஞ் சுரமென்க. அழலை மிதித்துப் போமென முடிந்தது. அழுவஞ்சூழ் குன்று அழல்சுரமென்க. இது சுரத்திற்கு அடை.

(கி)ஐய! கேண்மினென்பது, ஒருமைப்பன்மைமயக்கம். ஆயில், ஆலென விகாரமாயிற்று.

இது தரவு.

க. "வழுவில் சிறப்புவாய்ந்த வடசொற் பெயரால் விளங்கு, மழல்வெம் பருதி வதனத் தரசற் கண்டானன்றே" பாக. (கo) அக்குரூரனை. ங.

உ. சிவபெருமானேவலால் தக்கன்வேள்வியை அழிக்கச்சென்ற வீரபத்திர நாயனாரால் ஒறுக்கப்பட்ட தேவர்களில் ஆதித்தர் வகையின்கண் அரியமா பூடா பகனென்னு மூவருள், பகனென்பவன் கண்ணிழந்தா னென்பது புராணகதை; (அ) "பகன்கண் கொண்டார்" தே. (25) "பகன்முமரைக்கண தெடக்கடந் தோன்" கோவையார். கஅச.

ங. மண்டிலம் - கண்ணுடி; "கையகத் தெடுத்துக் காண்போர் முகதலை, மையறு மண்டிலம்போலக் காட்ட" மணி. உஅ: கஙக - எ.

ச. "முகுர வானனனும்" கம்பவ. கஎஇ. "முகமுகு ரம்புரை முதலொடு" வாரணவாசி. கoஉ. "ஆடித் திருமுகமன்னவன்" அருச்சுனன்றவ. கஙஇ. "முகுரானனன்மைந்தனும்" "ஆடிமுகத் தரசினுக்கும்" பதினேட்டாம், கஙச. உஙக. என்னும் பாரதச் செய்யுட்களும் இக்கருத்துப் பற்றி வந்தன.

ஞ. "ஐயகேண்மின்" கலி. உ: கo; பக்கம், கக: ங - குறிப்புப் பார்க்க.

(பிரதிபேதம்)* அனுகனென்னும், †நிரித, †தர்ப்பணனென்னும், ||நிரித, ÷தாயனென்னும்.

கக. மணக்குங்கான் மலரன்ன தகையவாய்ச் *சிறிதுநீர்
(க) தணக்குங்காற் கலுழ்பானாக் கண்ணெனவு முளவன்றே
(உ) சிறப்புச்செய் துழையராப் † புகழ்பேத்தி மற்றவர்
(ங) புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்புபோல்

எ - து: தம்மிடத்தே இருந்தாராக அவர்களுக்குச் சிறப்புக்களைச் செய்து புகழ்ந்துவாழ்த்தி அவர் எழுந்த அளவிலே அவர்க்குள்ள பழிகளைப் பலர்க்குங் கூறும் புறங்கூறுவாருடைய உறவுபோல நீர் கூடியிருக்குங் காலத்துச் செவ்வியைத் தோற்றுவித்து மலரையொத்த தகைமையினையுடைய வாய்ச் சிறிதுபொழுது நீர் பிரியுங்காலத்து நும் பழியைத் தூற்றி அழுத லமையாத கண்ணெனவுஞ் சில பகை உளவன்றே? எ - று.

அப்பகையைப் பேணுங் கண்ணெனவு மென்றது "கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை" (ச) எனப்பட்டும் ‡ பகையாயிருக்குமென்னுங் குறிப்பிற்று.

கஎ. ஈங்குநீ ரளிக்குங்கா லிறைசிறந் தொருநாணீர்
நீங்குங்கா ||னெகிழ்போடும் வளையெனவு முளவன்றே
(ஙி) செல்வத்துட் சேர்ந்தவர் வளனுண்டு மற்றவ
ரொல்கிடத் துலப்பிலா வுணர்விலார் தொடர்புபோல்

க. "தணத்தல்" நீக்கங் குறித்து வருதற்கு "தணக்குங்காற் கலுழ்பானாக் கண்ணெனவு முளவன்றே" என்பது மேற்கோள்; தொல். உரி. சூ. எகூ. 'அன்னபிறவும்' தெய்.

உ. (அ) "நட்டார்ப் புறங்கூறுன் வாழ்த்தனனியினிதே" இனியது. உ0. (ஆ) "முன்னின் றெருவன் முகத்தினும் வாயினும், கன்னின் றுருகக் கலந்துரைத்துப் - பின்னின், றிழித்துரைக்குஞ் சான்றோரை யஞ்சி யே தேவர், விழித்திமையா நின்ற ரிலே" அற. சகூ. (இ) "புறங் கூற்றாளர்" என்பதற்கு "சிறப்புச் செய்துழி யுழைநின்றுபுகழ்ந்து அவர் புறக்கொடையிற் பழிதூற்றுவார்" என இவ்வடிகளின் சொற்பொருளை உட்கொண்டு அடியார்க்கு நல்லார் எழுதியிருத்தல் காண்டு அறியத்தக்கது. சிலப. இ: கஉக.

ங. "தம்பி புறக்கொடைகாத்து நிற்ப" கம்ப. மாயாசனக. உங என் பதனாலும் புறக்கொடை யென்னும் சொல்லின் பொருளை ஆராய்க.

ச. நாண்மணி. இசு.

இ. (அ) "நிறைந்தோர்த் தேரு மெஞ்சமொடு குறைந்தோர்ப், பயனின் மையிற் பார்வலிட் டொளிரூ, நயனின் மாக்கள்" அகம். எக. (ஆ) "காலாடி போழ்தின் கழிகானலுர் வானத்து, மேலாடு மீனிற் பலராவ- ரேலா, விடமொருவ ருற்றக்கா லீர்க்குன்ற நாட, தொடர்புடையே

(பிரதிபேதம்) * நிறைநீ, † புகழ்போற்றி. ‡ பகையாமென்னும், || நெழிபோகும், ÷ ஒல்கத்து நல்லிலா வுணர்விலார்.

ள - து: ஒருவர்க்குச் செல்வமுண்டான இடத்து நீங்காதிருந்து அவருடைய செல்வத்தை நுகர்ந்து பின்னை அவர் (க) மிடித்தகாலத்து அவர்க்கு ஒன்றை உதவுதலில்லாத அறிவில்லாதாருடைய. உறவுபோலே நீர் இவ்விடத்தே கூடியிருந்து அருள்செய்யுங்காலத்து இவட்கு உண்டாகிய அழகைத்

மென்பார் சிலர்" (இ) "இலாஅ அர்க் கில்லே தமர்" (ஈ) "உண்டாய் போழ்தி னுடைந்துழிக் காகம்போற், றெண்டா யிரவர் தொகுபவே—வண்டாய்த், திருதருங் காலத்துத் தீதிலிரோ வென்பா, றொருவரு மிவ்வுலகத்தில்" (உ) "வாழாதார்க் கில்லேத் தமர்" நாலடியார் கசஙு, உஅங, உஅச, உகo. (ஊ) "கெட்டறிப கேளிரா னுய பயன்" நான்மணீ. நு. (எ) "கடையாயார் நட்பேபோற் காஞ்சி நல் லூர, வுடைய வினநல முண்டாய்" திணைமொழியைம். ஙசு. (ஏ) "கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ, பெட்டாங் கவர் பின் செலல்" குறள். கஉகஙு. (ஐ) "முட்டின் றொருவ ருடைய பொழுதின்க, ணட்டிற்றுத் தின்பவ ராயிரவ ராபவே, கட்டலர்தார் மார்ப கலியூழிக் காலத்துக். கெட்டார்க்கு நட்டாரோ வில்" பழ. நிக. (ஒ) "அற்ற குளத்தி லறுநீர்ப பறவைபோ, லுற்றுழித்தீர்வா ருறவல்லர்" முதுமை. (ஓ) "பொருள்கை யுண்டாய்ச் செல்லக் காணிற் போற்றியென் றேற்றெழுவ, ரிருள்கொ டின்பத் தின்மம காணி லென்னேயென்பாருமில்லே." திருவாயிமொழி. (கூ) சः ஙு. (ஔ) "தொழுமக னுயினுந் துற்றுடை யானேப், பழுமரஞ் சூழ்ந்த பறவையிற் சூழ்ப, விழுமிய ரேனும் வெறுக்கை யுலந்தாற், பழுமரம் வீழ்ந்த பறவையிற் போப" வளையாபதி. (ஃ) "நறிதாநல் லமிர் துண்ண நல்கலிற். பிறியாவின் னுயிர் பெற்ற பெற்றிதா, மறியாரோ நமனுர தன்றெனிற், சிறியாரோ வுபகாரஞ் சிந்தியார்" கம்ப. அரசியற். சு. (அஅ) "வார்க்குறு வனைகழற் றம்முன் வாழ்ந்தநாள், சீர்க்குற வாயிடைச் செறுநர் சீறிய, போர்க்குற வன்றியே புகுந்த போதிவ, ஞர்க்குற வாகுவ னருளி னுழியாய்." கம்ப. விபீடண. கசு. (ஆஆ) "உள்ளபோ தினிதுண்டிலாதபோ தவரோ டிறவுவிட் டுறுமிடந் தேடு, மொள்ளிய ரல்லா ருறவுபோல்" இராமா. சீதைவனம் புகு. கஅ. (இஇ) "வாழ்த்தார்க் குறவு வழியினு முளதாந், தாழ்த்தார்க் குற வில்லே தமரினும்" புலவாற். .. .. ..(ஈஈ) "படைப்பதற்கே யரிய பொருள் கொண்டார்க் கல்லாற் பயன்பயவாத், துடைப்பதற்கே யரும்வறுமை யவர்க்கொன் றுண்டோசுற்றமதே" தேம். மகவருள். சுஉ.

க. குறள். கஉகஙு-இன் விசேடவுரையில் "ஒல்கிடத்துலப்பிலா வுணர்வில்லார் தொடர்பாயிற்று நின்றொடர்பென்பதாம்" என இவ்வுரைக்கு மூலமாகிய அடியை அமைத்தெழுதியிருத்தல் வேண்டுமென்பது பாலது.

தா[னு](மு)ம் பெற்று இறையிலேயிறக்குகாட்டி ஒருநான் நீர்பிரியுங்காலத்துத் தோள் மெலிகையிலுலே தா[ன்](ம்) உதவிசெய்யாது கழன்றுபோம் வினையெனவுஞ் சில பகை உளவன்றே? எ - று.

அப்பகையைப்பேணும் வினையெனவுமென்றது (க) சிறந்து அழகுதருமாயினும் பகையாயிற்றென்னுங் குறிப்பிற்று.

உக ஒருநாணீ, ரணிக்குங்கா லொளிசிறந் தொருநர்ணீர்
பாராட்டாக் காற்பசக்கு நுதலெனவு* முளதன்றே
பொருந்திய (உ) கேண்மையின் மறையுணர்ந் தம்மறை
பிரிந்தக்காற் பிறர்க்குரைக்கும் பீடிலார் தொடர்புபோல்

எ - து: இருவர் மனமும் பொருந்திய நட்பாலே அவன்கூறிய மறைப் பொருளே அறிந்து அம்மறைப் பொருளே அவன் நீங்கினும் பிறர்க்கு இருந்து சொல்லும் பெருமை யில்லாதார் உறவுபோலே ஒரு நாள் நீர் அளிசெய்யுங் காலத்தும் அளிக்குத் தானுங் கூடினுற்போன்று ஒளி மிக்கு ஒரு நாள் நீர் அளியாக்காலத்து நும்முடைய குணத்தைப் பிறர்க்கு அறிவித்துப் பசந்து காட்டும் நுதலெனவும் ஒரு பகை உண்டன்றே? எ - று.

அப்பகையைப் பேணும் நுதலெனவுமென்றது, சிறப்புறுப்பாய் அழகு கொடுத்தற்கு உரியது பகையாயிற்றென்னுங் குறிப்பிற்று. மெய்யெல்லாங் கோலஞ்செய்தாலும் நுதற்குத் திலகம் முதலியன நீட்டாக்கால் அவை கோலமாய்த்தோன்றுததன்மை நுதற்கு உளதாகலின், † அது சிறப்புறுப்பாயிற்று.

இவை மூன்றும், தாழிசை.

எனவாங்கு ; எ - து: என்று ; எ - று. ஆங்கு அசை.

இது தனிச்சொல்.

உசு (ங) யாநிற் கூறுவ தெவனுண் டெம்மிலு
நீநற் கறிந்தகே நெடுந்தகை (ச) வானந்

க. "விரும்பிய குழைதொடி மின்செய் கண்டிகை, மருங்கிறச் சுமப்பினும் வினைகைக் கில்லெனி, னரும்பிய முலைபிறர்க் கழகுண் டாகுமோ" திருவிளை. வினையல். உசு.

உ. "நட்டான், மறைகாவா விட்டவன் செல்வுழிச்செல்க" நாலடி உகo.

ங. "யாநிற்கூறவு மெமகொள்ளா யாயினை" கலி. ங: கக.

ச. (அ) "வானத் தளிநோக்கி வாழுமுலகம்" (ஆ) "மழையின்றி மாநிலத் தார்க்கில்லை" நான்மணி. உஅ. சஅ. (இ) "வானெக்கிவாழு முலகெல் லாம்" குறள். நிசஉ. (ஈ) "தளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த, னளியின்மை வாழு முயிர்க்கு" குறள். நிஇச. (உ) "வானெக்கி நிற்குமுலகென்னவும்" கந்த. திருநகரப். சுஉ. என்பவையும், (ஊ) "தூமகேது புவிக்கெனத்தோன்றிய" கம்ப. மந்தரைசூழ்ச்சி. உக. என்பதும் (எ) "விசும்புமெய்யகல" 'என்பதற்கு' மழை யில்லாமைக்கு உற்பாதமாகிய தூமத்தோற்றமின்மையான். ஆகாயவெளி தன்வடிவு

(பிரதிபேதம்) * உளன்றே, † நெற்புறுப்பாயிற்று.

துளிமாறு பொழுதினிவ் வுலகம் போலுநின்
னளிமாறு பொழுதினிவ் வாயிழை கவினே.

எ - து: யாம் நினக்குக் கூறுகின்ற வார்த்தையால் என்னபயன் உண்டு? எம்மிலுங் காட்டில் அப்பகை புண்மையை நீ கன்றுக அறிந்தாய்; அதுவுமன்றி, நெடுந்தகாய்! இந்த ஆராய்ந்த இழையினையுடையாளழகு, நீ அளித்தலே நீங்குஞ் காலத்து இவ்விடத்து வானக் துளிமாறுபொழுது இவ் வுலகங் தெமோறுபோலக் தெடுங்காண்; அதனை உட்கொள்ளாய்; * எ - று.

இது சுரிதகம்.

இதனால், தோழிக்கு இழிவும் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இது பெருமைக்கெல்லை கூறிய பன்னீரடித்தரவும் காண்கடித்தாழிசையும் தனிச்சொல்லும் காண்கடிச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (உ)

(உக) (க) ஒருகுழை யொருவன்போ லிணர்சேர்ந்த மாஅமும்
பருதியஞ் செல்வன்போ னணையூழ்த்த செருந்தியு
மீனேற்றுக் கொடியோன்போன் மிஞிறுரற்குங் காஞ்சியு
மேனைன்போ னிறங்கிளர்பு கஞலிய ஞாழலு

ஙி மானேற்றுக் கொடியோன்போ லெதிரிய விலவமு மாங்குத்
தீதுதீர் சிறப்பி னீவர்க ணிலைபோலப்
போதவிழ் மரத்தோடு பொருகரை கவின்பெற
நோதக வந்தன்று விளவேனின் மேதக ;

கூ பல்வரி யினவண்டு புதிதுண்ணும் பருவத்துக்
தொல்கவின் றொலைந்தவென் றடமென்றோ ளுள்ளுவா
சொல்குபு நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
வெல்புக முலகேத்த விருந்துநாட் டுறைபவர் ;

பண்டையில் அகன்றுற்போலத்தோன்ற என்றவாறு' பதிற். சுகூ-கஞ. என்ற வுரையும் ஈண்டு அறியற்பாலன.

க. பகைமேற்சென்ற அரசன் திறைபெற்ற நாகொத்து அதன்கட் டன் னெறிமுறைமை அடிப்படுத்தப் பிரிந்ததற்கு இச்செய்யுளே மேற் கோள்காட்டி " இதனுள் ஒல்குபுநிழல் சேர்ந்தார்க்கெனவே,முன்னர் ஆள்பவர்கலக்குறுத்த அலைபெற்றுப் பின் தன்னைநிழலாகச் சேர்ந்தா ரென்பதூஉம், அவர்க்குப் பின்னர் உலைவு பிறவாமற் காத்தா னென்பதூஉம், விருந்து நாட்டென்பதனால் திறைபெற்ற புதியநா டென்பதூஉம் பெற்றும்; எனையவற்றிற்கும் இவ்வாறே கூறிக்கொள்க. எஞ்ஞா - புதியநாடு; ஆதின்றிப் பகைவர்பொருளே விரும்பினை நாட் டென்றும் அவரையகன்ற நாட்டென்றும் பொருள்கூறுக. செருவின் மேம்பட்ட என்றது, நாடுகளே. அதனாற்பெற்ற வென்றியெனவே நாடு திறை பெற்றமை கூறிற்று." என்பர் நச். (தொல். அகத். சூ. உஅ.

(பிரதிபேதம்.) * என்னுள்.

கசு திசைதிசை தேஎர்க்குந் திருமருத முன்றுறை
வசைதீர்ந்த வெண்ணலம் வாடுவ தருளுவார்
நசைகொண்டு தங்நீழல் சேர்ந்தாரைத் தாங்கித்தம்
மிசைபரந் துலகேத்த வேதிணைட் டுறைபவர் ;

களஅறல் சாஅய் பொழுதோடெம் மணிநுதல் வேரூர்ந்
திறல்சான்ற பெருவனப் பிழப்பதை யருளுவா
ரூறஞ்சி நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
யாறின்றிப் பொருள்வெஃகி யகன்றநாட் டுறைபவரீ ;

உக எனநீ ;

தெருமரல் வாழி தோழிநங் காதலர்
பொருமுரண் யாஅயர் போர்மலைக் தெழுந்தவர்
செருமேம் பட்ட வென்றியர்
வருமென வந்தன்றவர் வாய்மொழித் தாதே.

இது "மேவிய சிறப்பி னேஞர்" என்னும் (க) சூத்திரத்தில் பகை மேற்சென்ற அரசன் திறைபெற்ற நாடு காத்து அதன்கண் தன்னெறி முறைமை * அடிப்படுத்துவருதற்குப் பிரிவனென்றலின், பிரிவின்கண் தலைவன் இனவேனிற் † காலங்குறித்துப் பிரிய, அக்காலவரவின்கண் தலைவி ஆற்றாளாய் அவர் நமக்கு அருளுங் காலையில் அருளார்காணென்றற்கு, தோழி, அவர்வரவிற்கு இக்காலம் தாதாயன்றே வந்தது? நீ ஆற்றுவாயாக வென வற்புறுத்தியது.

இதன்பொருள்.

(உ) ஓருகுழையொருவனபோலிணர் சேர்ந்த (ங) மராஅமும்

க. தோல். அகத். சூ. உஅ.

உ. ~~(ஒ)~~ "ஒருகுழை யொருவன்போ லிணர்சேர்ந்த மராஅமும்" என்பது முதற்குமுதல் உவமமாய் வந்ததற்கு மேற்கோள். தொல். உவம. சூ. சு. 'முதலுஞ் சினையும்' இளம். (ஆ) "நாஞ்சில் வலவ னிதம் போலப் பூஞ்சினைச். செங்கான் மராஅந் தகைந்தன" கார், கக. (இ) "பாசிலை செறிந்த பசுங்காற் கழையொடு, வால்வீசேர்ந்த மராஅங் கண்டு, நெடியோன் முன்னெடு நின்றனனுமென" மணி. கக: எதி-எ. எனவும் (ஈ) "மராமெனமருளுமேனி வள்ளலோடு" (உ) "வெறித் துணர் மராம்புரை வெள்ளோமேனியான்" பாகவதம், (கo.) அரவின் மேலாடிய. க. சாம்பன்மணம்புரி. சஅ. எனவும் வந்திருத்தல் காண்க. (ஊ) "ஒருகுழை யொருவன்போல்" என்பது இரண்டாம் வேற்றுமை யுருபு, தொக்கவழித் தொகாது நின்ருற்போலப் பொருளுணர்த் தற்கு மேற்கோள்; தொல். எச்ச. சூ. கஎ. நச்.

ங. மராஅம் சுரத்திற்கும்வேனிற்குமுரியதென்பதையும் வெள்ளிய பூக் கூவியுடையதென்பதையும் (அ) "வலஞ்சுரி மராஅத்துச் சுரங்கமழ்

(பிரதிபேதம்.) * அடிப்படுத்தலதகரு † காலத்துப்

(க) பரதியஞ் செல்வன்போ னனையூழ்த்த செருந்தியு
(உ)மீனேற்றுக் கொடியோன்போன் மிளிரூர்க்குங் காஞ்சியு
(ங) மேனேன்போ னிறங்கிளர்பு களுலிய ஞாழலு
மானேற்றுக் கொடியோன்போ லெதிரிய விலவமு *மாங்குத்
திதுதீர் சிறப்பி (ச) னிவர்க னிலைபோலப்

புதவீ" அகம். அங. (ஆ) "வேனற்பூத்த மராஅங் கோதையோடும்" தே. (இ) "கோட்சுரும் பரற்று நாட் சுரத் தமன்ற, நெடுங்கான் மராஅத்துக் குறுஞ்சினைபற்றி, வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு நின்ற, மள்ளன்" ஐங்குறு. ஙஅங. (ஈ) "செங்கான் மராஅத்த வாலிண ரிடையிடு" முருகு. உ0உ. (உ) "கருங்கான் மராஅத்து வைகு சினை வான்பூ" ஐங். ஙஙக. (ஊ) "பரியல்..... .....பொரியரை மராஅத்து வாலிணர்ச் சுரிமலர்" யா. வி. சூ: சச. மேற்கோள். (எ) "சங்கீர்ந்த துகளேபோன், மரவம்பாவை வயிரூரப் பருகி வாடை யதிருடப்ப" சீவக. உசுகo. என்பவை வலியுறுத்தும்.

க. "குழந்தை வெண்மதி மிலைச்சிய குரூஉச்சடைக் குழகா, வீழ்ந்த பல்லினை யெயதுவா னிரவியெற் பிழம்பு. பொழிந்த சேயொளித் தேரொடும் புக்கதே போலும், வழிந்து தேன்கமழ் மலர்த்திர டதைந்த தண் செருந்தி" காஞ்சி. திருக்கண்புதைத்த. கடுக.

"பருதி" கம்ப: திருவபிடேக. உ. வில்லி. திருட்டிணன். அசு,

உ. (அ) "கரைத்துறு தண்பூங் காஞ்சிகள் சாகைக் கரமோச்சி, விரைத்த கரும்பைத் தைவரு தோற்றம் விரிதார்வண், டிரைத்தெழு திண்டோட் கேள்வரொ டேடு மிளையார்மே,னிரைத்தமர் செய்வான் வேள்ளிலை பற்று நிகழ்விற்றால்" (ஆ) "பருப்புழைக்கரக் களிற்றரிப் போர்வையம் பகவ, பொருப்பு மாதுட னுட்டியர் பொலிவினைக் கேளாக், கருப்பு வில்லினு னினிப்பய மின்றெனக் கணைகள், விருப்பி னெய்யவத் திட்டதே வீழ்ந்தது காஞ்சி" காஞ்சி. திருநாட்டு.! ககசு. திருக்கண் புதைத்த. கடுஅ. (இ) "மீனேறுயர்த்த கொடிவேந்தனே" சீவக. சு.

ங. (அ) "சினங்கொள் வாளரா தொடையல்சூழ் செஞ்சடைக் கூத்தா, னனங்க வேளெனுந் தமையனுக் கணியுருத் தருகென், றினங்கொள் வான்றவ மியற்றுவா னவனுடை யிளவன், மனங்கொள் காதலின் வந்தெனத் திகழ்ந்தது ஞாழல்" காஞ்சி. திருக்கண். ககo. (ஆ) "ஏஞ்ஞர்க்கிசைப்பின்" பெருங். (ங.) சுச: உஅடி.

ச. "செங்கதிர் மேனி யான்போ லவிழ்ந்தன செழும்பலாச, மங்குலூர் செல்வன் போல மலர்ந்தன காஞ்சி திங்கட், புங்கவன் போலப் பூத்த பூஞ்சினை மாவுஞ் செங்கை, யங்கதி, ராழி யான்போ லலர்ந்தன விரிந்த காயா" என இதனிழலாய்வரும், செய்யுள் இங்கே ஒப்புநோக்கற் பாலது; நீநவினை. தருமிக்கு. கஉ.

(பிரதிபேதம்.) * ஆங்கத்.

போதணிழ் மரத்தொடு பொருகரை கவின்பெற
நோதக வந்தன்று விளவேனின் மேதக

எ-து: நீர்பொருகின்ற கரையினிற்கும் (க) ஒரு பூங்குழையையுடைய (உ) நம்பி மூத்தபிரானேப்போலப் பூங்கொத்துக்கள் பொருந்தின வெண்கடம்பும் பருதியாகிய அழகிய செல்வனேப்போல அரும்புகள் அலர்ந்த செருந்தியும் சுறவையுடைத்தாகிய கொடியினையுடைய காமனேப்போல மிஞிறுகள் ஆரவாரித்தற்கிடமாகிய காஞ்சியும் (ங) அவன் தம்பி சாமனேப்போல நிறம் வினங்கிப் பூக்கள் நெருங்கின ஞாழலும் இடபத்தினையுடைய கொடியினையுடைய இறைவனேப்போலப் பூக்கள் காலத்தை எதிர்கொண்ட இலவமும், தமக்குக் குற்றந் தீர்ந்த தலைமையினையுடைய ஐவர்களுடைய நிறத்தின்றன்மைபோல, அக்கரையிடத்துப் பூக்கள் விரிந்த பிற மரங்களோடே அழகுபெற, பிரிந்தார்க்கு நோவு பொருந்த, கூடியிருந்தார்க்குப் பெருமைபொருந்த இளவேனில் வந்திற்றது; எ-று.

மீனிலேறு. ஆனிலேறு. மிஞிறுர்க்குங்காஞ்சி, இடத்துநிகழ் பொருளின் நெழில் இடத்தின்மேலே நின்றது. எனேன், ஏனேயோனின் விகாரம். ஆங்கென்றது அக்கரையை. கரை மராமுஞ் செருந்தியும் காஞ்சியும் ஞாழலும் இலவமும் பிறமரங்களோடே கவின்பெறவென இடத்துநிகழ் பொருளின் நெழில் இடத்துமேல் ஏற்றலுமென்று.

இது தரவு.

க. நம்பி மூத்தபிரான் - (கண்ணன் தமையன்) பலராமன்; இவன் ஒரு குழையினனென்பது கலி. கஅஞ 'ஒரு குழையவன்' என்புழி விளக்கப் பெறும்.

உ. பலராமன் 'நம்பிமூத்தபிரான்' என வழங்கப்படுதலே புறம் இசு. வலியொத்தீயே வாலியோனே என்னுமிடத்து வாலியோனென்றது நம்பிமூத்தபிரானே யென்றெழுதிய உரையும், பாகவதத்து, நம்பி மூத்தபிரான் கோகுலமடைந்த வத்தியாயம், நம்பி மூத்தபிரான் தீர்த்த யாத்திரைசெய்த வத்தியாயம் என்ற தலைப்புப்பெயரும் வலியுறுத்தும்.

ங. தாமனுக்குத் தம்பி ஒருவ னுண்டென்பதும் அவன் பெயர் சாமனென்பதும் (அ) "கவர்கணைச் சாமனர் தம்முன் செலவு காண்க" கலி. கூச: ஙூ-ச. (ஆ) "காமனுஞ் சாமனுங்கலக்க காட்சிய", (இ) "காமன்றம்பியிற் காளை கிடந்தபின்" சீவக. சங, கஎகஞ. (ஈ) "அனக்கதேவர், அய்யவு மாங்கொலோ வென்று சொல்லி யுன்னெயு மும்பியை யுந்தொழுதேன்" நாச்சியார் திருமொழி. க. 'தையொரு திங்கள்'. (உ) "காமனுஞ் சாமன்ரூஉ, முனிவர்தம் வடிவங்கொண்ட மூவறையாகுமென்ன" இராமா. அசுவமேத. கசஎ. (ஊ) "காமனுஞ் சாமனு மெனக்கலி னமைந்தார்" பிரமோத்தர. சிமத்தனி. ச. (எ) "சாமனிலுங் காமனிலுந் தயங்குமெய்யோன்" வில்லி. அருச்சுனன் தீர்த்த. உஎ. என்பவற்றுல் அறியலாகும். (ஏ) காமன் சாமனென்ப வர்களின் வரலாறு பிரத்தியும்ந சரிதமென்னும் சைனநூலால் தெரிகின்றதென்பர், உ. வே. சாமிநாதையரவர்கள்; சீவக. சங. விசேடக்.

க பல்வரி யின(க) வண்டு புதிதுண்ணும் பருவத்துத்
தொல்கணின் றெழிலிந்தவென் றடமென்றோ ளுள்ளுவா
(உ)ரொல்குபு நிழல்சேர்ந்தார்க் குலையாது (ங) காத்தோம்பி
(ச) வெல்புக ழுலகேத்த விருந்துநாட் டுறைபவர்

க. வண்டு புதிதுண்ணுதல்: இந்நூற்பக்கம், கஅ: ச - குறிப்புப்பார்க்க.

உ. (அ) "அலந்தயரா நின்றூர், நிழலடைந்தே நின்னையென் றேத்திக் கழலடையச், செற்றங்கொண் டாடிச் சிலைத்தெழுந்தார் வீந்தவியக், கொற்றங்கொண் டெஃகுயர்த்தான் கோ" பு. வெ: வஞ்சி. எ. (ஆ) "களைகணைத் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றூர், வினைவன்னி வெற் றுடம்பு தாங்கார் - தளர் நடையது,தானுடம் பென்று புகழுடம் போம்பு தற்கே,தானுடம் பட்டார்கடாம்" நீதிநெறி. சஅ.(இ)"மறந்தலை மயங்கி வையத் தொருவரை யொருவர் வாட்ட, விறந்தலை யுறுமை நோக்கி யின்னுயிர் போலக் காக்கு, மறந்தலை நின்ற வேந்த ரடிநிழ லன்றி யார்க்குஞ், சிறந்ததொன் றில்லை கண்டாய் திருமணி திகழும் பூணாய்" ஞானமணி. மந்திரசாலை. உஅ. (ஈ) "உடைந்தவர்க் குதவா ஞயி னுள்ள தொன் றீயா ஞயி, னடைந்தவர்க் கருளா ஞயி னறமென்ன மாண்மை யென்னும்" கம்ப. விபீடணன். ககஉ. (உ) "செருவி னெட்டலரைக் கொன்று திறைகொண்டு நாடுகாத்து .....செங்கோல் வளர்ப்பது மாட்சியாமே" (ஊ) "உலகிடை யூறெய்தா, வரிசையிற் காத்து நீதி வழுக்கினர் தம்மை மொத்திக், களிசறப்பொருளுங கோடல் காவலர் தருமம்". விநாயக. அரசியற்கை. சடு, கக.

ங. "ஆர்கலி ஞாலத் தறங்காவ லாற்சிறந்த, பேரருளினர்க்குப் பெறலரி தியாதரோ,வூர்திரைய மாமகர வெள்ளத்து காப்பணும்,போர் மலைந்து வெல்லும் புகழ்" இரும்பல் காஞ்சி.

ச. (அ) " அடுதிறலுயர் புகழ்வேந்தே " மது. கஙஅ. (ஆ) " வெல்புக ழுயர்நிலை " கலி. கஅடு: டுஅ. (இ) "சயப்புகழார் பலர்வாழுந் தடங் குருகூர்"நீநுவாயி. (ங)உ:கக. (ஈ) "அயன்றலை கொண்டுசெண்டாடல் பாடி யருக்க னெயிறு பறித்தல் பாடிக், கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக் காலனைக் காலாலுதைத்தல் பாடி,யினையந்தன முப் புரமெய்தல்பாடி" நீநுவாசக. திருப்பொற். அ. (உ) "திரிபுர மெரித்த வாறுந் தேர்மிசை நின்றவாறுங், கரியினை யுரித்தவாறுங் காமனைக் காய்ந்த வாறும்,.....பரிவினற் பாட" பெரிய. திருநீலகண்டயாழ். இ. (ஊ) "அயன்றலை யறுத்தல் பாடி யரக்கனை யடர்த்தல் பாடிக், கயந்தனை யுரித்தல்.பாடிக் காலனை யுதைத்தல் பாடி, வியன்புர மெரித்தல் பாடி வேள்கெட விழித்தல் பாடிச், சயந்தரும் புகழ்கண் மற்றும் பாடி னன் சால வாழ்த்தி" நீநுவால. இசு: க. (எ) "காலனைச் செருத்த வாறு முப்புரங் காய்ந்தவாறும், போல்வன வுலகந்தோறுப் பூதர்கள்

எ-து. இயற்கை கலங்கெட்ட என்னுடைய பெருமையையுடைய மெல்லிய தோளைப் பலவரியினையுடைய இனமாகிய வண்கேள் புதிதாகிய தேனை நுகரும் இளவேனிற்காலத்தே கூட நினைப்பார், முன்னர் (க) அந்நாடு ஆள்பவர் கலக்கமுறுத்த அலைபெற்று, பின் தன்னை நிழலாக அடைந்த குடிமக்களுக்கு நெஞ்சுவருந்தாதபடி பகைவரைப் பேணிக் காத்து, முன்பு நாடாட்சி பெற்ற பகைவரை வென்ற புகழை உலகத்தார் புகழப் புதுமையையுடைய நாட்டிலே இருக்கின்றவர்; எ-று.

என்றதனால்; (உ) நிறைபெற்றநாட்டைத் திருத்தித் தந் நாடுபோல நெறிமுறைமை நடத்துவித்தலே பொருளென்று இருக்கின்றவர் நம்மை நினையார் காணென்று நிகழ்ந்தது கூறினள். விருந்து நாடெனவே பகைவர் தோற்றுத் திறைகொடுத்தமை தோன்றிற்று.

*உள்ளுவாரெனு முற்றுவினை பெயர்கொண்டுநின்றது. காத்து உறைபவரென்க.

கஉ (ங) திசைதிசை தேனுர்க்குந் (ச) திருமருத முன்றுறை
வசைதீர்ந்த வெண்ணலம் வாடுவதருளுவார்

விருது பாட" காஞ்சி. தக்கீச. சஅ. (எ) " பாடினுர் வெல்புகழைப் பல்புலவர்" (ஐ) "வெல்புகழறைந்தோர்க் கீந்து" பு - வெ. வாகை. க. பாடாண்கொளு. உசு.

க. "மறந்தலே மயங்கு செவ்வேன் மன்னவன் வெய்ய ஞயி, னறந்தலே மயங்கி வைய மரும்பட சூழக்குமன்றே" சூளாமணி.மந்திரசாலே. உடு.

உ. "வென்றுகலந் தரீஇயர் வேண்டுபுலத் திறுத்தவர், வாடா யாணர் நாடு திறை கொடுப்ப" பதிற்று. திங.

ங. (அ)" திசைதிசை .. ..றைபவர்" என்பது காவற்பாங்கின்கண் தலைவன்கூறியதுகேட்ட தலைவி கூறியதற்கும் " (தொல். அகத். சூ. சசா. நச்.) (ஆ) பாட்டுடைத் தலைவன் ஆறுகூறியதற்கும் (தொல். புறத். சூ. நஉ. நச்.) மேற்கோள். இப்பகுதியில் (இ) வேண்டிக்கோடற் பொருண்மைக்கண் அருளுவாராகவென்பது அருளுவார் என ஈறு திரிந்ததுஎன்பர், தெய்; தொல். வினை. சூ. உங."அவற்றுண்முன்னிலை"

"திசைதிசை" கோவையார். கஉஅ. கம்ப. முதற்போர். கஉங, நாக பாச. கஙஇ, இராவணவதை. அஇ. விநாயக. மயூரேசர். கஙஎ.

ச. (அ) "திருமருதமுன்றுறை சேர்புனற்கண்டுய்ப்பார்" (ஆ) "திருமருத நீர்ப்பூந்துறை" (இ) " நீம்புனல்வையைத் திருமருதமுன்றுறையால்" (ஈ) "திருமருத முன்றுறை முற்றங் குறுகி" பரிபாடல். எ: அங, கஎ: ஙஐ, உஉ: சஇ, 'மாஇலம்': எஉ. (உ)"வருபுனல் வையை வார்மண லகன்றுறைத், திருமரு தோங்கிய விரிமலர்க் காவின்"அகம். கங: கூ-கஐ. (ஊ) " வருபுனல் வையை மருதோங்கு முன்றுறை " சீவலப். கச: எஉ.

(பிரதிபேதம்) * உள்ளுவாரெனு முற்றுவினைப்பெயர்.

க) நசைகொண்டு (உ) *தங்கீழல் சேர்ந்தாரைத் தாங்கித்தம்
மிசைபரந துலகேத்த வேதிஞட் டுறைபவர்'

எ-து. குற்றமற்ற என்னலங்கெடுவதற்குத் இசைதோறும் நிசைதோறும் தேனினம் ஆரவாரிக்குந் திருமருதந்துறைமுன்னே அருளுதலைச் செய்வார், நம்மைக் காத்தற்குரியான் இவனென்று நச்சுதல் கொண்டு தம்மை நிழலாக வந்தடைந்த குடிமக்களைத் தமக்குப் பாரமென்று பொறுத்துத் தம் புகழ் உல கெங்கும் பரக்கையினாலே அவ்வுலகத்தார் புகழத் தமக் கியலாகிய நாட்டிலே இருக்கின்றவர்; எ-று.

"யாறுங் குளனுங் காவு மாடிப், பதியிகக்து நகர்தலு முரியவென்ப" (கூ) என்பதனால், திருமருதந்துறையில் அருளுவாரென்றார்.

கள (அ) அறல் † சாயப் பொழுதோடெம் மணிநுதல் வேறுகித்
திறல்சான்ற பெருவனப் பிழப்பதை யருளுவா
நூறஞ்சி நிழல்சேர்ந்தார்க் குலியாது காத்தோம்பி
(டு) யாறின்றிப் பொருள்வெஃகி யகன்றநாட் டுறைபவர்

எ-து. எம்முடைய அழகினையுடைய நுதலும் பசந்து நாமும் ‡ வலிமை யமைந்த பெரிய அழகை இழப்பதற்கு நீரற்று ஒதெல்சுருங்கின இளவேனிற் காலத்தே அருளுதலைச் செய்வார், முன்பு நாடு ஆட்சிபெற்ற அரசர்செய்த வருத்தத்திற்கு அஞ்சி நிழலாக வந்தடைந்தார்க்கு நெஞ்சுவருந்தாதபடி பகை வரைப் பேணிக் காத்து, நெறியன்றி அவ்வரசர் பொருளை விரும்புகையினாலே, அவரை நீங்கின நாட்டிலே இருக்கின்றவர்; எ-று.

இவை மூன்றும், தாழிசை.

க. (அ) "இரந்தது நசைவாட்டாயென்பது கெடாதோதான்" கலி. கoo:கஉ. (ஆ) "நச்சித்தற் சென்றூர் நசைகொல்லா மாண்பினிதே" இனியது. உள. (இ) "நசையவர்க்குக், கூடிவை நீவானைக் கொவ்வைபோற் செவ் வாயாய், நாடுவர் விண்ணோர் நயந்து" ஏலாதி. கூடி.

உ. " அடைந்தார் துயர்கூரா வாற்ற லினிதே " இனியது. நஉ.

ஙு. தொல். கற்பியல். சூ. கo.

சு. " அறல்சாய .....வேறுகி " என்பது மூன்றாவது ஏழாவத னோடு மயங்கிவருதற்கு மேற்கோள்; தொல். வேற்றுமைமயங்கு. சூ. உள. தெய். 'வினையுருபு'

ஞ. " பொருத்த மழியாத பூந்தண்டார் மன்ன, ரருத்தமடிநிழ லாரை— வருத்தாது, கொண்டாரும் போலாதே கோட லதுவன்றோ வண்டுதா துண்டு விடல்" பழ. உசஉ.

(பிரதிபேதம்) * தங்கிழல் † சாயப் பொருளோடெம். ‡ வலியமைந்த.

உக (க) எனீ

தெருமரல் வாழி தோழிநங் காதலர்
பொருமுரண் யானையர் போர்மலைந் தெழுந்தவர்
செருமேம் பட்ட வென்றியர்
வருமென வந்தன்றவர் (உ) வாய்மொழித் தூதே

எ-து. என்றுகூறிமனஞ்சுழலாதேகொள்; அதற்குக்காரணம்யாதெனில், நங் காதலர் பொருகின்ற மாறுபாட்டையுடைய யானையை யுடையவராய்ப் போர்செய்தற்கு மாறுபட்டு எதிர்வந்தவருடைய போரிடத்தே நீ கூறியவாறே மேலானாகவேபெற்ற வெற்றியையுடையர்; ஆகையினாலே, அவருடைய மெய்ம்மொழியாகிய தூது வருவாரென்றுசொல்லி வந்ததுகாண்; இனித் தோழி நீ இனிதுவாழ்வாயாக; *எ-று.

மேம்பட்ட, ஈண்டுப் பெயராய் நின்றது. வரவெனவந்தன்று என்று பாடமாயின், வெற்றியையுடையர்; ஆகையினாலே அவர் மெய்ம்மொழியாகிய தூது வந்தென்று சொல்லி வந்ததென்க.

எனீ, தனிசசொல். எஞ்சியது சுரிதகம்.

இதனால், தலைவிக்குப் புணர்வாகிய உவகை தோன்றிற்று.

இது தரவின்கண் ஐஞ்சீரடிவருதலிற் கொச்சகமாய்க் கலிவெண் பாட்டின் வேறுயிற்று. (உஇ)

உஎ. ஈதலிற் குறைகாட்டா தறனறிந் தொழுகிய
நீதிலான் செல்வம்போற் றீங்கரை மரநந்தப்
பேதுறு மடமொழிப் பிணையெழின் மாமேக்கின்
மாதரார் முறுவல்போன் மணமெலாவன் முகையூழ்ப்பக்

நு காதலர்ப் புணர்ந்தவர் கதுப்புப்போற் கழல்குபு
தாதொடுந் தளிரொடுந் தண்ணற வகைபெறப்
பேதையோன் விணைவாங்கப் பிடிலா வரசனுட்
டேதிலான் படைபோல விறுத்தந்த தினவேனில்;

ஊ நிலம்பூத்த மரமிசை நிமிர்பா லுங் குயிலெள்ள
நலம்பூத்த நிறஞ்சாய நம்மையோ மறந்தைக்க
கலம்பூத்த வணியவர் காரிகை மகிழ்செய்யப்
புலம்பூத்துப் புகழ்பாணக் கூடலு முள்ளார்கொல்;

க. "எனீ.....வாய்மொழித்தூதே" என்பது தூதுவந்தமை தலைவிக்குத் தோழிகூறியதற்கு மேற்கோள். தொல். கற்பி. சூ. கூஉச்.

உ. வாய்மொழித்தூது: "தானறிந்து கூறுந் தலைமகற் றிடையது, கோனறைந்த நீதென்று கூறுமால்" பாரதம்.

(பிரதிபேதம்) * என்றுறுவிதானன.

கஉ கன்மிசை மயிலாலக் கறங்கியூ ரலர்தூற்றத்
தொன்னல நனிசாய நம்மையோ மறந்தைக்க
வொன்னுதார்க் கடந்தடூஉ மூரவுநீர் மாகொண்ற
வென்வேலான் குன்றின்மே லல்லியாட்டும் விருப்பார் கொல்;

களை மையெழின் மலருண்கண் மருவூட்டி மகிழ்கொள்ளப்
பொய்யினும் புரிவுண்ட நம்மை மயோ மறந்தைக்க
தைஇய மகளிர்தம் மாயமோ டமர்ந்தாடும்
வையைவா ருயரெக்கர் நுகர்ச்சியு முள்ளார்கொல்;

எனவாங்கு;

உஉ நோய்மலி நெஞ்சமோ டினைய ரேழி
நாமில்லாப் புலம்பாயி னடுக்கஞ்செய் பொழுதாயிற்
கா மவேள் விழவாயிற் கலங்குவள் பெரிதென
வேமுறு கடுந்திண்டேர் கடவி
நாமமர் காதலர் துணைதந்தார் விரைந்தே.

இது தலைவன் குறித்துப் பிரிந்த இளவேனில் வாவின்கண் எய்மை யோமறக்க, இக்காலத்து இவ்வூரின்கட் டாம் விளையாடும் விளையாட்டும் *மறந்தாரோவெனச் சொல்லி ஆற்றுளாய தலைவிக்கு, தோழி தலைவன் வர வுணர்ந்து கழி யுவகையாற் கூறியது.

இதன் பொருள்

(க) ஈதலிற் குறைகாட்டா தறனறிந் தொழுகிய
தீதிலான் நல்வம்போற் றீங்கரை மராஅந்தப்
பேதுறு மடமொழிப் (உ) பிணையெழின் மானேக்கின்
(ங) மாதரார் மூறுவல்போன் மணமெளவன் முகையூழ்ப்பக்

(ஙி) காதலர்ப் புணர்ந்தவர் கதுப்புப்போற் †கழல்குபு
தாதெரி தளிரொடுந் தண்ணறு நகைபெறப்
(ஙு) பேதையோன் விளைவாங்கப் பீடிலா வரசனுட்
(ஙூ) டேதிலான் படைபோல விறுத்தந்த திளவேனில்

க. (அ) "இவறலும் .....ஏதமிறைக்கு" குறள். சஙூ. (ஆ) "அறத் தாற்றி னீயாத தீகை யன்று" முதுமொழிக். சஅ. (இ) "உள்ளியுள்ள வெல் லாமுவந் தீயுமவ், வள்ளி யோரின் வழங்கினை மேகமே" கம்ப. பால. ஆற்றுப். சு. (ஈ) "வள்ளியோரீதல்வரையா துபோல" கல். ஙஐ.

உ. "பிணையெழின் மானேக்கு" கலி. நெஅ: உ. குறள். கஐஅநி, கஐஅசு.

ங. (அ) "மணமெளவன் முகையன்ன மாவீழ்வார் நிரை வெண்பல்" கலி. கூச: ங. (ஆ) "மெளவல் வான்முகைத், தூஉ நிரைத்தன்ன மாவீழ் வெண்பல்" அகம். உக: க-உ.

சு. வினைவாங்கல்: கலி. அ: க; நைடதம், அன்னத்தைத்தூது. கஐநி; நிருவினை. பன்றிக்குட்டிகளை. கங.

ஞி. ஏதிலர் - பகைவர்; பழ. நிஉ.

(பிரதிபேதம்) * மறந்தாரென, † கழல்புரு.

எ-து: (க)கொடித்தற்றொழிலிடத்துப் பொருட்குறை காட்டாமற் கொடுத்து (உ) இல்லறம் நிகழ்த்தும் முறைமையை அறிந்து நிகழ்த்தியு நீவினையில்லா தவனுடைய செல்வம்மிருமாறுபோல இனிதாகியநீரையுடையஆற்றங்கரையில் மரங்கள் தழைக்க, கேட்டோர் மயக்கம் உறுதற்குக் காரணமான மட மொழியினையும் மான்பினையினது அழகையுடைய நோக்குப்போலு நோக் கினையுமுடைய காதலையுடைய மகளிருடைய எயிறுபோல மணத்தையுடைய மௌவலின் முகை அலர, தண்ணிதாகிய அறுகையையுடைய மணல் கழன்று வீழ்ந்த தாதாலுந்தளிராலுங் காதலரைக் கூடினவருடைய மயிர்போல அழகு பெற, இளவேனிற்காலம், அறிவில்லாத அமைச்சன் காரியத்தைப்புலப்படுத்தப் படைவலி இல்லாத அரசனது நாட்டிலே பகையரசன் படைவந்து விடு மாறுபோலத் தன்குதலைச் செய்தது. எ - று.

ஊழ்ப்பத் தகைபெற இளவேனில் இறுத்தக்ததென்க. காட்டாதென்ப தற்குக் கொடுத்தென்றும் கழல்குபுவென்பதற்கு வீழ்ந்தவென்றும் வினை வருவிக்க.

இது தரவு.

கூ (ஈ) நிலம்பூத்த மரமிசை நிமிர்பாலுங் குயிலெள்ள
நலம்பூத்த நிறஞ்சாய நன்மையோ மறக்கதைக்க

க. தானந்தவமிரண்டுமென்னுங் குறளுரையில் "பெ ரும்பான்மைபற்றித் தானம் இல்லறத்தின்மேலும், தவம் துறவறத்தின் மேலும் நின்றன" என்பர் பரிமேலழகர்; குறள். கக.

உ. "அறந்தலை"கலி.க. "அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை" குறள். சுக.

கூ. (அ) "நிலம்பூத்த.....முள்ளார்கொல்" என்பதனைப் பாட்டுடைத் தலை வன் ஊர்கூறியதற்கு மேற்கோள்காட்டி "இதனுட் கூடலிடத்துத் தலைவியென்பது கூறினார்". என்பர், நச்; தொல். புறத். சூ. கூஉ. (ஆ) "பெயரெச்சங்கொண்முடியு மலுவகைப் பெயர்களுள் கருவி யென்றதனால் மூன்றுவதற்கோதிய காரணமும் எதுவுங்கொள்க. வந்ததுகண்டு வாராது முடித்தலென்பதனால் 'நிலம்பூத்தமரமிசை நிமிர்பாலும்' என்றவழி நிலம்பொலிவுபெற்ற மரமெனப் பொலி தற்கேதுவின்கண் வந்தது" என்பர் தெய். தொல். வினை. சூ. கூஅ. 'அவற்றொடு'. (இ) "நிலம் பூத்தமரம்" என்பதை அகரவீற்றுப் பெய ரெச்சம் காரணத்தின்கண் வந்ததற்கு (தொல். வினை. சூ. கூஎ. நச்.) மேற்கோள் காட்டி, இக்கருத்தை (ஈ) "பெண்மை சுட்டிய வுயர் திணை மருங்கி, னாண்மை திரிந்த பெயர் நிலக்கினவியும்" என்புழி 'சுட் டிய வென்பது நிலம்பூத்தமரமென்பதுபோலும் பெயரெச்சம்' என்றும் (தொல். சொல். இளவி. சூ. ச.) (உ) "தேன்வாயுமிழ்ந்தவ மிர்துண்ட வண்போன்று" என்பதற்கு, தேனை உமிழ்தற்குக் காரணமாகிய அமிர் தத்தை உண்டவனை யொத்து என்று பொருள்கூறி 'உமிழ்ந்தவமிர்து

கலம்பூத்த வணியவர் காரிகை மகிழ்செய்யப்,
புலம்பூத்துப் புகழ்பாணக் கூடலு முள்ளார்கொல்

எ - து: நிலம் பொலிவுபெறுதற்கு ஏதுவாகிய மரத்தின்மேலேயிருந்து காலைக்கண்டே எக்களுத்தஞ்செய்து ஆரவாரிக்குங் குயில்கள் நம்மை இகழும் படியாக, நன்மைபொலிவுபெற்ற நமதுநிறங் கெடும்படியாக, நாம் விரும் பாத நம்மையோமறப்பாராக;(க) நாம்அணிந்த கலன்கள்பொலிவுபெறுதற்குக் காரணமான அழகினையுடைய பரத்தையருடைய அழகு தம் மனத்தை மகிழ்ச்சியைச் செய்கையிலுலே தம் அறிவு பொலிவுபெற்று அவரைப் புகழ்தல் அமையாத கூடலையும் நினையாரோ? நினைக்கில் வருவரன்றே? எ - று.

பெயரெச்சத்திற்குக் காரணம்வருதல் கருவிக்கண் அடங்கும். மறந் தைக்க, வியங்கோட் டிரிசொல்.

கஙு (உ) கன்மிசை மயிலாலக் கறங்கியூ ரலர்தூற்றத்
தொன்னல நனிசாய நம்மையோ மறந்தைக்க
(ஈ) வொன்னுதார்க் (ச) கடந்தடூஉ (டு) முரவுநீர் (ஊ) மாகொன்ற
(எ)வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் நினும்பார்கொல்

நிலம்'பூத்தமரம்போல நின்றது' என்றும் (சீவக. உகு.) வற்புறுத்துவர் இவ்வுரையாசிரியர். (ஊ) நிலம்பூத்த மரமென்புழி ஏதுப்பொருண்மை கருவிக்கண்அடங்குமென்பர், இ-வி. உரையாசிரியர்; இ-வி. சூ. உசஙு.

க. "பூணுக் கழகளிக்கும் பொற்றொடியை" நள. சுயம்வர. கஙிக.

உ. (அ) "கன்மிசை ..நினும்பார்கொல்" இது குறிஞ்சிக்குப் பயின்ற மயில் பாலைக்கண் இளவேனிற்கண் வருதலிற் பொழுதொடு புள்ளு மயங்கிற்று. என்றும் தொல். அகத். சூ. கக; (ஆ) இதனுள் வென் வேலான் குன்றெனமலை கூறினார் என்றும் தொல். புறத். சூ. ஙஉ. கூறுவர்; நச். (இ) இ - வி. நூலார் பாலையில் குறிஞ்சித்திணைக்குரிட மயில் வந்ததென்பர்; இ-வி. சூ. ஙகச:

ஙு. "சொற்களெல்லாம் இந்நூலில் ஓதிய இலக்கணத்தால் முற்றுப் பெற் றிலவாயினும் பலவகைப்பட்ட ஆசிரிய மத விகற்பத்தான் வரும்..... பிறநூன் முடிபினுள் முடியினும் இலக்கணப் பிழைப்பின்று" என்று கூறி, அதற்கு "ஒன்னுதார் . ..குன்றின்மேல்" என்பதனை மேற்கோள் காட்டி வெவ்வேறுகாலப் பெயரெச்சம் அடுக்கி வந்ததென்பர், தெய்; தொல். எச்ச. சூ. கச. 'செய்யுண்'.

ச. கட்டுரைத்தல்: கலி. உ: ச, கo: ஙக, கo: க; பரி. கஙி: சஙி; புறம். அ. ஙி, உஙு: கசு, சo: உ, அo: கூ, ககo: க.

ஞ. "உரவுநீர் மாகொன்ற வேல்" சிலப். உச: சஙி.

ட. முந்து. கo. 'மாமுதறடிந்த' என்பதன் குறிப்புப்பார்க்க.

எ. "வென்வேலான் குன்றில் விளையாட்டி யானகலேன்" சிலப். உக: 'தென்னவன்' பக்கம். இஎ.

எ - து: நஞ்சாயக் கொட்டைகளைப் மலைமேலே மயில் ஆரவாரித்து ஆடும் படியாக, ஊரிலுள்ளார் ஆரவாரித்து அலர் தூற்றும்படியாக, நம்முடைய இயற்கைகலமும் மிகக்கெடும்படியாக, தாம் விரும்பாத நம்மையோ மறப்பா ராக; பகைவரை மாயஞ்செய்துகொல்லாது வென்றுகொல்லும் பரக்குங் கட லிடத்து எய்தாநின்ற மாமரத்தைத் தடிந்த * வென்றிவேலையுடைய முருகன் திருப்பரங்குன்றின்மேற் பரத்தையருடன் விளையாடும் விளையாட்டையும் விரும்பாரோ ? விரும்பில் வருவரன்றே ? எ - று.

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளு, மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும், வந்த நிலத்தின் பயத்த வாகும்." என்ற (க) வீதிபத்திற் குறிஞ்சிக்குப் பயின்ற மயில் பாலைக்கண் இள்வேனிற்காலத்து வருதலிற் பொழுதொடு புள்ளு மயங்கிற்று.

களை மையெழின் மலருண்கண் மருவூட்டி மகிழ்கொள்ளப்
பொய்யினுற் புரிவுண்ட நம்மையோ மறந்தைக்க
†தையிய மகளிர்தம் மாயமோ டமர்ந்தாடும்
வையைவா ருயரெக்கர் நுகர்ச்சியு முள்ளார்கொல்

எ - து, ‡எம்மை மயலாக்கிக் கருமையுடைத்தாகிய அழகினையுடையகீல மலர்போலும் மையுண்கண்ணே மகிழ்ச்சிகொள்ளும்படி ||தம்மோடே மருவுத லூட்டித் +தாம் செய்த பொய்யாலே மனந் தம்மிடத்திலே புரிதலேச்செய்த தாம்விரும்பாத நம்மையோமறப்பாராக; கோலஞ்செய்தலையுடையபரத்தையர் தம்முடைய நிரலோடே மனம் பொருந்தி விளையாடும் வையையாற்றிடத்து நீண்ட உயர்ந்த இடமணலிடத்து நுகர்ச்சியையும் நினையாரோ ? நினைக்கில் வருவரன்றே ? எ - று.

மருவுதலூட்டியென்றார், அக்கண்ணிடத்து நாவாற் செய்யுந் தொழிலே மருவூட்டிச்செய்தவென ஒருசொல் வருவிக்க.

இவை மூன்றும், தாழிசை.

எனவாங்கு

எ - து: என்று கூறி ; எ - று.

ஆங்கு அசை.

இது தனிச்சொல்.

உஉ நோய்மலி நெஞ்சமொ டினைய நோழி
நாமில்லாப் புலம்பாயி னடுக்கஞ்செய் பொழுதாயிற்
(உ) காமவேள் விழவாயிற் கலங்குவள் பெரிதென
வேமுறு கடுந்திண்டேர் கடவி
நாமமர் காதலர் தணைதந்தார் விரைந்தே

க. தொல். அகத். சூ. கக. இந்நூற் பக்கம், கஞக: உ - குறிப்புப் பார்க்க.
உ. காமன் விழவு: கலி. நஅ. கசு, நஇ: கச.

(பிரதிபேதம்) * வெல்வேல், † தையிய, ‡ என்னை, || நன்னேடே, + தான்.

எ - து: நோய்மிக்க நெஞ்சோடே வருந்தாதேகொள்; தோழி! நாம் அமர்த்தகாதலர், தனிமையாயின் நாமில்லாத தனிமையாயிருந்தது; காலமாயிற் பிரிந்தார்க்கு நடுக்கஞ்செய்யும் இளவேனிற்காலமாயிருந்தது; ஊரிலுள்ளார் கொண்டாடும்விழவாயிற் காமவேளுக்குஞ்செய்யும் விழவாயிருந்தது; ஆதலாற் பெரிதுங் கலங்குவனென்று கருதிப் பகைவர் மயக்கமுறுதற்குக் காரணமான (க)கடியு நிண்ணிய தேரை விரைத்து செலுத்தித் தாம் தூணியார்த் தண்மையை நமக்குத் தந்தார்காண்! * எ - று.

இது சுரிதகம்.

இதனுல், தலைவிக்குப் புணர்வாயிய உவகை தோன்றிற்று.

இஃது †எட்டடித்தரவும் நான்கடித்தாழிசையும் தனிச்சொல்லும் ஐயடிச் சுரிதகமும்பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (உக)

உஅ. பாடல்சால் சிறப்பிற் சினையவுஞ் சுணையவு
நாடினர் கொயல்வேண்டா நயந்துதாங் கொடுப்பபோற்
றேடவிழ் கமழ்கண்ணி தையுபு புனைவார்கட்
டோடுறத் தாழ்ந்து துறை துறை கவின்பெறச்
செய்யவ ளணியகலத் தாரமொ டணிகொள்பு
தொய்யகந் தாழ்ந்த கதுப்புப்போற் றுவர்மணல்
வையைவா ரணிரற விடைபோழும் பொழுதிணன்;

அ விரிந்தாஞ் மலராயின் விளித்தாலுங் குயிலாயிற்
பிரிந்துள்ளா ரவராயிற் பேதுறுஉம் பொழுதாயி
னரும்படர வலமோ யாற்றுவ ளென்னுது
வருந்தநோய் மிகுமாயின் வணங்கிறை யளியென்னே;

கஉ புதலவை மலராயிற் பொங்கரின வண்டாயி
னயலதை யலராயி னகன்றுள்ளா ரவராயின்
மதலையி னெஞ்சொடு மதனில ளென்னுது
தகலுரும் பசப்பாயி னுணங்கிறை யளியென்னே;

கசு தோயின வறலாயிற் சுரும்பார்க்குஞ் சினையாயின்
.ாவின தளிராயின் மறந்துள்ளா ரவராயிற்
பூவெழி லிழந்தகண் புலம்புகொண் டமையாது
பாயனெய் மிகுமாயிற் பைந்தொடி யளியென்னே;

எனவாங்கு;

உக ஆயிழா யாங்கன முரையாதி சேயார்க்கு
நாந்தூது மொழிந்தனம் விடல்வேண்டா நம்மினுந்
தாம்பிரிந் துறைத லாற்றலர்
பரிந்தெவன் செய்தி வருகுவர் விரைந்தே.

க. கடுமை - விரைவு.

(பிரதிபேதம்) * என உவகையாற்கூறினள். † எழடித்தரவும்.

இஃது இளவேனில்வரவின்கண் ஆற்றத லிலவி தூதுவிடக்கருதி, தோழி, அவர் பிரிந்திருத்தலை நம்மிறைந் தாம்வல்லாலென்னச் சொல்லி வற்புறுத்தியது.

இதன் பொருள்.

உஅ. பாடல்சால் சிறப்பிற்(க) சினையவுஞ் சுணையவு
நாடினர் கொயல்வேண்டா ரயந்துதாங் கொடுப்பபோற்

க. (அ) அகரவீற்றுப் பலவறி சொல்லுக்கு உண்பவென்பதை உதாரணங் காட்டியவழி "உண்பவென்பது பகரவீற்றுப் பலவறி சொல்லன்றே, அஃறிணைக்காயின வாறென்னை யெனின்:—பகரவிறுதி யாயினன்றே உயர்திணைக்காவது. ஈண்டுக் காட்டப்பட்டது, 'கானந் தகைப்ப செலவு' 'சினையவுஞ் சுணையவு, நாடினர் கொயல் வேண்டா ரயந்து தாங் கொடுப்பபோல்' என நின்றனபோல எதிர்காலத்து வரும் பகரமூர்ந்து நின்ற அகர வீறுதலின், அஃறிணைச் சொல்லே யாமென்பது. செய்யுளாகலின் தகைப்பன கொடுப்பன என்னுஞ் சொற்கள் தகைப்ப கொடுப்ப என விகாரவகையான் அவ்வாறு நின்றனவாகலான், வழக்கு முடிவிற்கு அவைகாட்டல் நிரம்பா தெனின்:—தகைத்தன, தகையா நின்றன; தகைத்த, தகையாநின்ற. எனவும் கொடுத்தன, கொடா நின்றன; கொடுத்த கொடாநின்ற. எனவும் இறந்தகாலத்தும் நிகழ்காலத்தும் அகரவீறு முதனிலைக் கேற்றவாற்றான் அவ்வக் காலத்திற்குரிய எழுத்துப்பெற்று அன் பெற்றும் பெறுது முடியுமாறு போல எதிர்காலத்தும் முதனிலைக் கேற்றவாற்றான் அக்காலத்துக்குரிய எழுத்துப்பெற்று அன்பெற்றும் பெறுதும் முடியும். எதிர்காலத்துக்குரிய எழுத்தாவன: பகரமும் வகரமுமாம். அவற்றுட் பகரம் பெற்று அன்பெற்றும் பெறுதும் முடிவுழி, தகைப்பன. தகைப்ப; கொடுப்பன, கொடுப்ப. எனவும் வகரம் பெற்று அவ்வாறு முடிவுழி, வருவன, வருவ; செல்வன, செல்வ. எனவும் இவ்வாறு முடியுமாகலின், தகைப்ப கொடுப்ப என்பன விகாரமெனப்படா; இயல்பேயா மென்பது. கொடுப்பன யாவை அவைபோல என உவமைகருதாது அவை தம்மையே சுட்டி நிற்றலிற் 'கொடுப்ப என்பது பெயரன்மை யறிக" என்பர், சேனா வரையர்; தோல். இளவி. சூ. க.(ஆ)பகரவிறுதி அஃறிணைக் கண்ணும் வருமென்பதற்கு 'நயந்துதாங் கொடுப்பபோல்' என்பதைச் சிலர் உதாரணங்காட்டியது தவறென்று மறுத்து அது 'விரும்பித் கொடுப் பாரைப் போலென மாற்றோ வுவமைகுறித்து வந்ததென்பர், தெய்வச்சிலையார்; தோல். இளவி. சூ. எ. 'ரஃகான்'. (இ) "மலையவு நிலத்தவுஞ் சினையவுஞ் சுணையவும், வண்ணவண்ணத்த மலராய்பு" குறிஞ்சி. ககஉ-ககச. (ஈ) "மாக்கருங்கண்ணியர் வனைந்த வண்குழற், றேக்கமழ் மலர்ணிதுதை வாடலாற், காக்களின் மரக்களுங் கமழும்

நேடவிழ் கமழ்கண்ணி தையுபு புனைவார்கட்
டோடுறைத் தாழ்ந்து துறைதுறை கவின்பெறச்
(க) செய்பவ ளணியகலத் தாரமொ டணிகொள்பு
தொய்யகந் தாழ்ந்த கதுப்புப்போற் றுவர்மணல்
(உ)வையவா ரவிரற லிடைபோழும் பொழுதினுன்

எ-ரை: சுனையிடத்துப் பூக்களை ஆராய்ந்து பறித்தலும் வேண்டாவாகிப் பாதேல் அமைத்த தலைமையினையுடைய பூக்களைக் கொம்புகள் தாங் கொடுக்க வேண்டுமென்று * விரும்பியுங் கொடுப்பனபோல் இதழ்விரிகின்ற கமழுங் (ங) கண்ணியைக் கட்டிச் சூடும் அம்மகளிரிடத்தே திரட்சியுறத் தாழ்ந்து கொடுத்துத் துறைதொறுந் துறைதொறும் மாங்கள் அழகுபெறும்படி யாறு அறலிடைபோழும் பொழுதினுங்க ணென்க.

கவின்பெற அறல் இடைபோழுமென்றது காரணகாரியமாம்; பெருகியநீர் வற்றினகாலத்து அவைபூத்தலின்.

குறிஞ்சிநிலத்திற் சுனைப் பூக்களைத் தேடிப் பறியாதபடி இக்கரையின் மரங்கள் வேண்டும்பூக்களைக் கொடுத்தனவென்றார்.

சுனையவுமென்னும் உம்மையைக் கொய்யலுமென மாறுக. உம்மை, எதிர்மறை. சினையவுமென்னும் உம்மையை நயந்துமென மாறுக. உம்மை, சிறப்பு.

கல்லிடத்துநீர்நிலைக்குச் சுனையென்னும் பெயரே ஆண்டுக்கூறுதலானும் யாற்றங்கரைக்கண் இன்மையானும் சினை தாழ்ந்து கொடுத்தலன்றிச் சுனை தாழ்ந்து கொடுத்தல் இன்மையானும் இதுவே பொருளாம். தோறுறைதாழ்க்தென்றதற்குத் திரட்சியுறத் தங்கியென்றும், கவின்பெறவென்றதற்குக் கவின் பெறுநிற்கவென்றும் பொருள்கூறின், பெறுநிற்க இடைபோழு மென்றது பிறவினையாதலின் ஆற்றிற்குச் சிறப்புக் கூறிற்றன்றாய் வேறோர் வினையா மாறுமுணர்க.

இருமகளுடைய அழகினையுடைய மார்பிடத்து முத்தாரத்தோடே ஒப்புக்கொண்டு அறலிடை போழுமென்க. சிவந்த தலைக்கோலந் தங்கின மயிர்போற் சிலவிடங்கள் சிவப்பையுடைத்தாகிய மணலையுடைய †வையை, யாற்றில் ஒழுகுகின்ற விளக்கத்தையுடைய அறன்மணலை யாரேனும் டணிகொள்பு. நடுவே பிளந்தோடும் பொழுதினுங்கணென்க.

இது தரவு.

வல்லியிற், பூக்களும் பூஞ்சுனை பூத்த போலுமே" பாகவதம். (८०) புனல் விளையாட்டு. ८८.

८. (அ) "மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை, யணிமுலைத் துயல் வருஉ மாரம் போலச், செல்புன லுழந்த சேய்வரற் காண்யாறு" சீறுபாண். ८-ங. (ஆ) "அலைநீ ராடை மலைமூலை யாகத், தாரப் பேரியாற்று மாரிக் கூந்தற், கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை" சீலப். இ: ८-ங.

உ. "அறல் வாரும் வையை" கலி. ங०: ८८.

ங. மகளிர் கண்ணி சூடுதல்: சீவக. ८८८८, ८ங८ங, ८ங८இ; பெரும். (८) ८உ: ८८உ; ८அ: ८ஏஉ; (உ) ८८: ஏ; ८ஏ: இ०; ८அ: ८; (ங) இ: ८உ; ८: ८८.

(பிரதிபேதம்) * விரும்பிக்கொடுப்பன, † வையை, வையையாற்றில்.

அ (க) விரிந்தாஞ் மலராயின் விளித்தாலுங் குயிலாயிற்
பிரிந்துள்ளா ரவராயிற் பேதுறூஉம் பொழுதாயி
(உ) னரும்பட ரவலநோ யாற்றுவ ளென்னுது
வருந்தநோய் மிகுமாயின் வணங்கிறை யளியென்னே

எ - து: மலர்கள் அலர்ந்து, அமையாவாயின், குயில்கள் தம் பெடையை அழைத்துக் கூவுமாயின், நந்தலைவர் நம்மைப் பிரிந்து நினையாராயின், இள வேனிற்காலம் மயக்கமுறுத்துமாயின், அரிய நினைவையுடைய அவலத்தைச் செய்யுங் காமநோய்க்கு இவள் ஆற்றுவளென்று கருதாது இவள் இறந்துபடுவ ளென்று நீ வருந்தும்படி எனக்குக்காமநோய்மிகுமாயின், வணங்கின இறை யையுடையாய்! நம்மாட்டு அவர்செய்யும் அளி என்னபயன் தரும்? எ - று.

கஉ புதலவை மலராயிற் பொங்கரின வண்டாயி
னயலதை யலராயி னெகன்றுள்ளா ரவராயின்
மதலியி னெஞ்சொடு மதனில ளென்னுது
நுதலூரும் பசப்பாயி னுணங்கிறை யளியென்னே

எ - து: மலர்கள் *சிறுதூற்றினவையாயின், வண்டுகள் சோலையிடத்தன வாயின், அலர் அயலாரிடத்தாயின், நந்தலைவர் நம்மைப் பிரிந்து நினையா ராயின், பசப்பு ஒரு பற்றில்லாத நெஞ்சுடனே காணும் வலியளல்லளென்று கருதாதே நுதலிடத்தே பரக்குமாயின், அசைகின்ற இறைவினையுடையாய்! நம்மாட்டு அவர்செய்யும் அளி என்னபயன் தரும்? எ - று.

கக தோயின வறலாயிற் சுரும்பார்க்குஞ் சினையாயின்
மாவின தளிராயின் மறந்துள்ளா ரவராயிற்
பூவெழி லிழந்தகண் புலம்புகொண் டனையாது
(ஈ) பாயலு மிகுமாயிற் பைந்தொடி யளியென்னே

எ - து. அற்றுவருதலையுடைய நீர் மண்ணிடத்தே செறிந்தனவாயின், தோம்பிற் பூக்களிலே சுரும்பு ஆரவாரிக்குமாயின், தளிர் மாவிடத்தனவாயின், நந்தலைவர் நம்மை மறந்து நினையாராயின், பூவினது அழகை இழந்த கண்கள் உறக்கத்தைக்கொண்டு ஆற்றியிராமற் றனிமையால் உண்டான நோய் மிகு மாயின், பசிய தொடியினையுடையாய்! நம்மாட்டு அவர்செய்யும் அளி என்ன பயன் தரும்? எ - று.

ஓகாரங்கள் எதிர்மறையாதலிற் பயன் தராதென நின்றது.

இவை மூன்றும், தாழிசை.

க. "விரிந்தாஞ் மலராயின் விளித்தாலுங் குயிலாயின்" என்பதற்குப் பிழிப் பியைபுத் தொடைக்கு மேறகோள்; தொல். செய். சூ. கூ. நச்.

உ. "அரும்பட ரவலம்" ஐங்குறு. சூஅடு.

ங. பாயல் - உறக்கம்: கலி. கo: கo, உச: ஏ, நுஎ: கூ, அஎ: ககூ, கநூச: அ, கசடு: உச.

(பிரதிபேதம்.) * றெதுந்திலவை.

எனவாங்கு

எ - து: என்று ; எ - று.

ஆங்கு அசை.

இது தனிச்சொல்.

உக ஆயிழா யாங்கன முரையாதி சேயார்க்கு
நாந்தூது மொழிந்தனம் விடல்வேண்டா நம்மினுந்
தாம்பிரிந் துறைத லாற்றலர்
பரிநதெவன் செய்தி வருகுவர் விரைந்தே

எ-து: ஆராய்ந்த இழையினையுடையாய், அங்ஙனம் பயனின்றாக உரையாதேகொள்; சேய்நாட்டில் உறைகின்றவர்க்கு நம்வருத்தத்தைக் கூறினமாய் நாம் தூதுபோக விடவேண்டா; நம்மினும் தாம் இக்காலத்துப் பிரிந்திருத்தலை ஆற்றாராய் விரைந்து வருகுவர்; ஆதலால் வருந்தி என்னகாரியஞ் செய்கின்றாய் ? *எ - று.

இது சுரிதகம்.

இதனுல், தலைவிக்கு இழிவும், தோழிக்கு அச்சமும் பிறந்தன.

இஃது எழடித்தரவும் நான்கடித்தாழிசையும் †பொருள்பெற்ற தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக் கலிப்பா. (உஎ)

உகூ. (க) தொல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலி
னல்லாந்தா ரலவுற வின்றவள் கிடக்கைபோற்
பல்பய முதலிய பசுமைதீ ரகன்ஞாலம்
புல்லிய புனிறெரீஇப் புதுநல மேர்தர

நு வளையவர் வண்டல்போல் வார்மணல் வடுக்கொள
விளையவ ரைம்பால்போ லெக்கர்போழ்ந் தறல்வார
மாவீன்ற தளிர்மிசை மாயவ டிதலைபோ
லாயிதழ்ப் பன்மல ரையகொங் குறைத்தர
மேதக விளவேனி லீறுத்தந்த பொழுதின்கண்;

கO சேயார்கட் சென்றவென் னெஞ்சினைச் சின்மொழி
நீகூறும் வரைத்தன்றி நிறுப்பெம்மன் னிறைநீவி
வாய்விரிபு பனியேற்ற விரவுப்பன் மலர்தீண்டி
நோய்சேர்ந்த வைகலான் வாடைவந் தலைத்தலுமே;

கச, போழ்துள்ளார் துறந்தாகட் புரிவாடுங் கொள்கையைச்
சூழ்பாங்கே சுடரிழாய் கரப்பென்மற் கைநீவி

க. இச்செய்யுள், பாலையில் வேனிலும் வாடையும் கங்குலும் மாலையும் வந்ததற்கு மேற்கோள்; தொல். அகத். சூ. கஉ. நச்.

(பிரதிபேதம்.)* எனவம்புறுத்தினுள், † தனிச்சொல்லும்.

வீழ்கதிர் விடுத்தபூ விருந்துண்ணு மிருந்தும்பி
யாழ்கொண்ட விமிழிசை யியன்மாலை யல்லத்தருஉம்;

கஅ. தொடிநிலை நெகிழ்த்தார்கட் டோயுமென் ஞெரியிர்
வடுநீங்கு கிளவியாய் வலிப்பென்மன் வலிப்பவு
நெடுநிலாத் திறந்துண்ண நிரையிதழ் வாய்விட்ட
கடிமலர் கமழ்நாற்றங் கந்துல்வந் தலைத்தருஉம்;

எனவாங்கு;

உங. வருந்திணை வதிந்தநின் வளைநீங்கச் சேய்நாட்டுப்
பிரிந்துசெய் பொருட்பிணி பின்னேக்கா தேகிநம்
மருந்துயர் களைஞர் வந்தனர்
திருந்தெயி றிலங்குநின் றேமொழி படர்ந்தே.

இது பருவ வரவின்கண் ஆற்றுத லலிவியைத் தோழி வற்புறுப்ப வன்புறையெதிரழிந்தாட்கு, தோழி அவன்வரவுணர்ந்து கழியுவகையாற் கூறியது.

இதன் பொருள்.

(க) தொல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலின்
னல்லாநதா *ரலவுற வீன்றவள் கிடக்கையோற்
பல்பய முதவிய பசுமைதீ ரகன்ஞாலம்
புல்லிய புனிறுநீ இப் புதுநல மோர்த
(உ)வளையவர் வண்டல்போல் வார்மணல் வடுக்கொள
விளையவ ரைப்பல்போ லெக்கர்போழ்ந் தறல்வார
ரரவீன்ற (ங) தளிர்மிசை மாயவ டிதலீபோ

க. "தொல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலின்" என்பது செய்தெனெச்சக்குறிப்பாகிய அன்றியென்பது வினைமுதல்வினையான் முடிந்ததற்கு மேற்கோள். தொல். வினை. சூ. ஙஉ. கல்; சூ. ஙஙூ. நச்.

உ. வண்டலாடும் இளைய மகளிரை 'வளையவர்' என்றார்; (அ) "இளையள் வளையோ ளென்றுனக் கியாவரும், விளைபொருளுரையார்" மணி. கo: எக-அo. உசு: சுஅ-கூ. என வருதலும் (ஆ) "சில்வளை விறலி" என்னுமிடத்து, "பல்வளையிடுவது பெதும்பைப் பருவத் தாகலின் அஃதன்றிச சில்வளையிடும் பருவத்தாளென அவள் ஆடல் மூதலிய துறைக்குரியளாதல் கூறியவாறு" என்பதும் ஈண்டறிதற் பாலன. பரிபா. இள: கூ.

ங. (அ)," மாவின், நளிரே ரன்ன மேனித் தளிர்ப்புறத், தீர்க்கினருமிய திதலையர்" மது. எoஙூ - அ. (ஆ) "ஈன்றவ டிதலீபோ லீர்பெய்யுக்

(பிரதிபேதம்) * அலமர் வுற.

*லாயிதழ்ப் பன்மல ரையகொங் ருறைத்தர
மேதக விளவேனி லிறுத்தந்த பொழுதின்கண்

எ - து: கருப்பந் தங்கிய காலத்துப் பிறக்கும் வேட்கையாகிய நோய் இளமைக்காலத்து அழகைக் கெடுக்குமளவன்றி மிகவருத்துகையினாலே அதற்கு அலமந்த சுற்றத்தார், பின்னர் அவன் மெய்ந்நோக்காடு கண்டு வருத்த முறும்படி புதல்வனீன்றவள், அப்புதல்வனைக்கொண்டு அக்குடியையெல்லாம் பாதுகாத்துக்கிடந்த கிடக்கைபோல, தன்னிடத்துப் பயிரையுண்டாக்கின உழவர், தனக்கு இடையில் வந்த நோய்க்கு வருந்திய வருத்தம் நீங்கும்படி, தான் ஈன்ற உணவுகளைக்கொண்டு குடிமக்களையெல்லாம் பாதுகாத்த உலகம், அவள் தன்னைப்புல்லிய ஈன்றணுமை நீர்த்து புதுநலம் பெற்றாற் போல, தான் ஈன்ற பசுமை நீர்ந்த புதிய அழகு தோன்ற, வேளியினையுடைய இளையோர் இழைத்த வண்டற்பாவையும் பூவுங் கலந்துகிடந்தாற்போல வார்ந்த மணல் பூக்கள் உதிர்ந்துகிடந்த வடிவைத் தன்னிடத்தே கொள்ள, இளையமகளிருடைய மயிர்போல † இமிலாலே ஊடறுத்தலையுடைய நீர் ஓழுக, மாமை நிறத்தையுடையவள் இதழிபோல மாவீன்ற சிறிது முற்றின தளிரின் மேலே அழகிய இதழை யுடைய பல மலர்களி னுடைய வியக்கத் தக்க தாதுகள் உதிர்தலைச்செய்ய, பெருமை பொருந்த இளவேனிற்காலம் வந்துவிட்ட பொழுதின்கண்ணே; எ - று.

எர்தர - எழுச்சிதர. ஐயென்னும் உரிச்சொல் ஐயவெனப் பெயரெச்சக் குறிப்பாய் நின்றது.

இது தரவு.

கo சேயார்கட் சென்றவென் னெஞ்சினைச் (க) சின்மொழி
நீகூறும் வரைத்தன்றி நிறுப்பென்மன் னிறைநீவி

தளிரொடும்" (இ) "மாயவண் மேனிபோற் றளிரீன வம்மேனித், தாய சுணங்குபோற் றளிர்மிசைத் தாதுக" கலி. ங௨: எ, ஙடு: ங - ஈ. என்பவையும் (ஈ) "பூத்ததைந்த தாழ்சினைத் தளிரன்ன வெழின் மேனி தகைவாட" கலி. சo: ககூ - உo; என்றவிடத்து "பூத்தாழ்ந்த தளிரெனவே சுணங்கும் மாமை நிறமுங் கூறிற்று" என்றெழுதியிருக்குமுரையும் (உ) "வண்ணநுண் சுண்ணமாட்டி வளரிள்ந் திங்களன்ன, வொண்ணுதலொருத்தி மாமை யொழுகுமா மேனி நோக்கும், பண்ணமர் மழலைப் பல்காற் பறவை வீழ்ந் தூழுது மென்பூந், தண்ணறுந் தாது தூற்றுத் தயங்குசெந் தளிரு நோக்கும்" பாகவதம். (கo) கோவியரை. உஅ. என்பதும் ஈண்டுக் கருதற்பாலன.

க. (அ) சின்மொழி கலி. நெ: கக, கஉடு: ககூ, கஙூ: கஙூ; (ஆ) "அமிழ்து பொதி செந்நா வஞ்ச வந்த, வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையை" தஞ்சை. கச. (இ) "கூரெயிறு காப்போழ்த லஞ்சியஞ்சி,

(பிரதிபேதம்.) * ஆயிதட் பன்மலர், † இனமணியே.

வாய்விரிபு (க) பனியேற்ற விரவுப்பன் மலர்தீண்டி
நோய்சேர்ந்த வைகலான் வாடைவந் தலைத்தாஉம்

எ - து: சிலவான சொல்லினையுடையாய்! சேனிடைப் பிரிந்தோரிடத்தே சென்ற என்னெஞ்சினை ஆற்றுவித்துக் கொண்டிருத்தல்வேண்டுமென்று நீ சொல்லும் எல்லைத்தன்றாக மிகவும் ஆற்றி நிறுப்பேன், அதனாற் பெற்றதென்? யான் ஆற்றிநிறுத்தலைக் கைகடக்கும்படியாக வாடைக்காற்று வாய் விரிந்து பனியையேற்றுநின்ற விரவுதலையுடைய பல மலர்களை அலைத்து வந்து பிரிந்தோர்க்கு நோய்செய்தற்குக் காரணமான இளவேனில் நாளின் கண்ணே வருத்தத்தைத் தரும்; எ - று.

நீவெனைத் திரிக்க.

கச. போழ்துள்ளார் துறந்தார்கட் புரிவாடுங்கொள்கையைச்
சூழ்பாங்கே சுடரிழாய் கரப்பென்மற் கைநீவி
வீழ்கதிர் விடுத்தபூ விருந்துண்ணு (உ)மிருந்(ங) தும்பி
(சு)யாழ்கொண்ட விமிழிசை யியன்மாலை யலைத்தாஉம்

எ - து: விளங்குகின்ற இழையினையுடையாய்! இளவேனிற்காலத்தை நினையாராய் நம்மை மறந்தாரிடத்தே மனம்புரிதலால் என்மேனிவாடுங் கோட்பாட்டினைப் பிறர் அறியலாகாதென்று சூழ்ந்து அப்பொழுதே மறைப்பேன், அதனாற் பெற்றதென்? யான் மறைத்ததனைக் கைகடக்கும் படியாக

யுழன்மாலைத் தீங்கிளவி யொன்றிரண்டு தான்மிழற்று மொருநாட் காறும்'' தீவக. காடுகாண். என்பவற்றுல் சின்மொழி யென்பதற்குக் காரணம் விளங்கும். (ஈ) பழமொழி யுரைகாரர் சின்மொழி யென்ப தற்கு மென்மொழியென்று பொருள் கூறுவர்; பழ. உரை.

க. (அ) ''அரும்பனி கலந்த வருளில் வாடை, தனிமை யெள்ளும் பொழுதில்'' ஐங். சரக. (ஆ) ''மெய்கூர்ந்த பனியொடு மேனின்ற வாடையாற், கையாறு கடைக்கூட்டக் கலக்குறூஉம் பொழுது'' கலி. நெய்: சு - எ.

உ. தும்பி கரியநிறமுடையதென்பதனை, இருந்தும்பி - கரியதும்பி; கலி. கூ0:சு, எஅ:உ, கஉகூ: உ, கஉஎ: கூ; காரி. கஞி. என்பதும் ''தகையவர் கைச்செறித்த தாள் போலக் காந்தண், முகையின்மேற் றும்பி யிருக்கும்'' கலி. சகூ அ-கூ.என்னுமிடத்தி, 'தாள்போல' என்பதற்கு, தாட்கூட்டாகிய லீலக்கடைச் செறிபோல என்று விளக்கமெழுதி யிருத்தலும் வற்புறுத்தும்.

ஙு. ''தும்பி வண்டொடு தாவழி யாழ் செய'' தீவக. அநிசை.

சு. பயனிலையுவமைக்குச் சிறுபான்மை கொண்டவென்பதும் வருமென் பதற்கு ''யாழ்கொண்ட விமிழிசை யியன்மாலை யலைத்தாஉம்'' என்பது மேற்கோள் தொல். உவம. சூ. கசு. பே.

வீழ்கின்ற ஞாயிற்றின் கதிர் அலர்த்தினை பூவினது தேனையுண்ணும் கரிய தும்பியினது யாழோசையையொத்த முழங்குகின்ற ஓசை கடக்கும் மாலைக் காலம் வந்து வருத்தத்தைத்தரும்; எ - று.

கொண்ட, உவமவுருபு.

கஅ. தொடிநிலை நெகிழ்த்தார்கட் டோயுமென் ஞருயிர்
வடுநீங்கு கிளவியாய் வல்லிப்பெண்மண் வலிப்பவு
நெடுநிலாத் *திறந்துண்ண நிரையிதழ் வாய்விட்ட
* கடிமலர் கமழ்நாற்றங் கங்குல்வந் தலைத்தருஉம்

எ - து: குற்றம் நீங்குகின்ற வார்த்தையினையுடையாய்! தொடியை நிற்கின்ற நிலையி னின்று நெகிழப் பண்ணினாரிடத்தே நின்று தோயும் என் னுடைய அரிய உயிரை அவரிடத்துச்சென்று செறியாமற் கர்க்கத்துணிவேன், அதனாற் பெற்றதென்? யான் அங்ஙனம் துணியவும் வண்டுகள் *திறந்து உண்ணும்படியாக நிரைத்த இதழ்கள் அலர்ந்த மணத்தினையுடைய மலர்கள் கமழும்நாற்றம் நெடியநிலாவையுடைய இராக்காலத்தேவந்து வருத்தத்தைத் தரும்; எ - று.

இவை மூன்றும், தாழிசை.

எனவாங்கு

எ - து: எனச்சொல்லி; எ - று.

ஆங்கு அசை.

இது தனிச்சொல்.

உக வருந்திஃ வதிந்தநின் வளைநீங்கச் சேய்நாட்டுப்
பிரிந்துசெய் பொருட்பிணி பின்னேக்கா தேகினம்
மருந்துபோர் கூளஞர் வந்தனர்
(க)திருந்தெயி றிலங்குநின் றேமொழி படர்ந்தே

எ - து: வருந்தித் தங்கினைநின் வளைகழலும்படியாகத் தலைவர் பின் பாராதே தூரிய நாட்டிலே பிரிந்திருந்து தேடும் பொருட்பிணியாலே போய்த் திருந்தின எயிறுகள் விளங்குதற்குக் காரணமான நின் தேன்போலும் மொழியை நினைத்து நம் அரிய துயரைக் கூளவாராய் வந்தார்; இனி, நீ வருந்தாதே கொள்; † எ - று.

இது சுரிதகம்.

இதனால், தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இது ‡ "நிலனெருங்கு மயங்குதலின்று" (உ) எனவே காலம் || மயங்கு மென்றலின், வேனிலும் வாடையும் மாலையுங் கங்குலும் ÷வந்தன.

இஃது ஒன்பதடித் தரவும் நான்கடித் தாழிசையும் தனிச்சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (உஅ)

க. முன்னெயி றிலக்கச் செவ்வாய் திறந்து, சில்லென் கிளவி மெல்லென மிழற்றி" பெருங். (ச) இ: கசு - எ.

உ. தொல். அகத். சூ. கஉ. இந்நூற்பக்கம் கலிஎ: க-குறிப்புப்பார்க்க.

(பிழைதிருத்தம்) * அறுத்து, †என ஆற்றுவித்தாள். ‡ நிலமொருங்கு, || மயங்குதலின், ÷வந்தது.

(கூ0.)(க)அருந்தவ மாற்றியார் நுகர்ச்சிபோ லணிகொள
விரிந்தாணச் சினைதொறூஉம் வேண்டுந்தா தமர்ந்தாடிப்
புரிந்தார்க்கும் வண்டொடு புலம்புதீர்ந் தெவ்வாயு
மிருந்தும்பி யிறைகோள வெதிரிய வேணிலான்;

இ துயிலின்றி யாரீந்தத் தொழுவையும் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னே
வெயிலொளி யறியாத விரிமலர்த் தண்காவிற்
குயிலாலும் பொழுதெனக் கூறுந ருளராயின்;

கூ பானுள்யாம் படர்கூரப் பணையெழி லணைமென்றோண்
மானேக்கி னவரோடு மறந்தமைகு வான்மன்னே
வானுச்சிர்க் கூடலு ளரும்பனிழ் நறமுல்லைத்
தேனுர்க்கும் பொழுதெனக் கூறுந ருளராயின்;

கஉ உறலியா மொளிவாட வுயர்ந்தவன் விழவினுள்
விறலிழை யவரோடு விளையாடு வான்மன்னே
பெறலரும் பொழுதோடு பிறங்கிணர்த் துருத்திசூழ்ந்
தறல்வாரும் வையையென் றறையுந ருளராயின்;
எனவாங்கு;

கஅ தணியாநோ யுழந்தாணைத் தகையவ டகைபெற
வணிகினர் நெடுந்திண்டே ரயர்மதி பணிபுநின்
காமர் கழலடி சேரா
நாமஞ்சார் நெவ்வரி னடுங்கினள் பெரிதே.

இது பருவவாவின்கண் ஆற்றுத லலமகள் இறந்தது சீர்த்தித்து நம் மாட்டு அன்பிலாயினும்இக்காலத்துஇவ்வூரின்கட்டண்டோம் விளையாடிய வாறு நினைந்துவருவர் * இக்கால வாவு கொல்லுவார் உளாயினைகீ கேட்ட பாணன் பாகறைக்கட் சென்று தலைவனைக் கண்டு கூறியது.

இதன் பொருள்.

(உ) அருந்தவ மாற்றியார் நுகர்ச்சிபோ லணிகொள
விரிந்தாணச் சினைதொறூஉம் வேண்டுந்தா தமர்ந்தாடிப்

க. இச்செய்யுள் பாலைக்கண் மருதம் நிகழ்ந்ததற்கு மேற்கோள்; தொல். அகத். சூ. கஉ. நச்.

உ. (அ)"தவஞ்செய் மார்க்க டம்மூடம் பிடாஅ,தன்பயமெய்திய வளவை மான... ..வேண்டுவ முகந்துகொண்டு" பொருந. கக - கஉஅ. (ஆ) "வேண்டிய வேண்டியாங் செய்தலாற் செய்தவ, மீண்டு முயலப் படும்" குறள். உகஇ. (இ) "நோற்றார்க்குச, சோற்றுள்ளும் வீழுங்கறி" (பிரதிபேதம்) * இக்காலம் வாவு.

புரிந்தார்க்கும் வண்டொடு புலம்புதீர்ந் தெவ்வாயு
மிருந்(க)தும்பி யிறைகொள வெதிரிய வேனில்லான்

எ - து: செய்தற்கரிய தவங்களைச் செய்தவர்கள் குன்றவுற நிகரும் நகர்ச்சிபோல அழகுகொள்ள அரும்புகள்விரிந்தமையாத(உ)கொம்புகடோறும் தான் விரும்புந் தாதைப் பொருந்தியுண்டு விரும்பி ஆர்க்கும் வண்டோடே கருந்தும்பிகளும் வருத்தந் தீர்ந்து எவ்விடமும் தங்குதல் கொள்ளும்படி மரங்கள் அவற்றை எதிர்கொண்ட இளவேனிற் கண்ணே; எ - று.

இது தரவு.

நி. (ங) துயிலின்றி *யாநீந்தத் தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்†மன்னே

(ச) "முற்பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதார், பிற்பெரிய செல்வம் பெறலாமோ" பழ. கஙிo, ஙகஉ. (உ) "ஒரு முழமுஞ் சேற லில ரேனும்பொரு ளூர்க்கே, வரும்வழி விளையுழந்து வாழ்கதவ மாதோ" (ஊ) "விழுப்பொருள் பரவை ஞால, நோற்பவர்க் குரிய வாகும்" சீவக. உருஙசு, உகூஅசு. (எ) "வேண்டிய வினைத்துக் கொள்ளும் விழுத்தவம் வினைத்து வந்தான்" தூளா. சுயம். ககஙூ. (ஏ) "பெருந்தவ முள்வழி விரும்புபு செல்லும், பொருளும் போகமும் புகழும் போல" டெநங். (உ) அ: கஉசு - எ. (ஐ) "வேண்டின வேண்டினர்க் களிக்கு மெய்த்தவம், பூண்டிளர்" கம்ப. அகத்தியப். அ. (ஒ) "அத்தவம் பிறவியை யகற்றி மேதகு, முத்தியை கல்கியே முதன்மை யாக்குறு, மித்துணை யன்றியே யிம்மை யின்பமு, மும்த்திடு முளங் தனி லுன்னுந் தன்மையே." (ஓ) "உடம்பினை யொறுத்து நோற்பார் .... . வெஃகு நெடும்பொருள் பலவுங் கொள்வர்" கந்த. காசிப ஞபதேச. கசு, உடி. (ஔ) "எவ்வகைப் பொருள்களு மீய வல்லது, செவ்விய தவமதே" கூலந்து. நைமிசா. உசு.

க. "கொங்குதேர் வாழ்க்கை யென்பதும் இளவேனி லாயிற்று; தும்பி கொங்கு தேருங்காலம் அதுவாகலின்" (தொல். அகத். சூ. கஙூ. நச்) என்பது இங்கே அறிதற்பாலது.

உ. "அருடருங் கேள்வி யமையத் தேக்கப், பற்பல வாசான் பாற்குசெல் பயர்போன், மூன்றுவகை யடித்த தேன்றரு கொழுமலர், கொழுதிப் பாடுந் குணச்சுரும் பினங்கள்" கல். கூ: க - சு.

ங. (அ) " துயிலின்றி .. ..குளராயின் " என்பது தலைவன் பரத் தையரோடு பாசறைக்கட்சென்றதற்கும் (நாற்கவி. சூ. அடு; இ-வி. சூ. சஙிஙூ) (ஆ) துயிலின்றி... .. . மன்னே" என்பது தலைவன்பதியிருந்து

(பிரதிபேதம்) * யானீந்த, † கொல்லோ.

(க) வெயிலொளி யறியாத விரிமலர்த் (உ) தண்காவிற்
குயிலாலும் பொழுதெனக் கூறாத ருளராயின்

எ - து: இக்காலம் வெய்யினது ஒளியைக்கண்டறியாத விரிந்த மலரையுடைய குளிர்ந்த பொழிலிலே குயில்கூவுங்காலமென்று அவற்குக் கூறுவார் சிலருளராயின், யாம் துயிலின்றி யாமக்கடலை நீந்தித் தான் மயில்போலும் இயலினையுடைய பரத்தையர் மருவுதலை நுகர்ந்து அவ்வருடனே அழகிய புனலையுடைய மதிக்களையாடி நம்மை மறந்து அவரிடத்தே அமைந்திருப்பன்; அதனும் பெற்றதென்? கூறுவார் இன்றே; எ - று.

நுகர்ந்தமை தலைவிகூறியதற்கும் (தொல். கற்பியல். சூ. சசு. 'யாறும்' இளம்.) (இ) "ஆரூடி வீளையாடி மயிலியலார் மருவண்டி மறந்தமைகு வான் என்றமையின் இது வீளையாட்டுப் பொருளாக உவகை பிறந்தது" என்பதற்கும் (தொல். மெய்ப். சூ. கக. பே; இ-வி. சூ. நிஎ.) (ஈ) "துயிலின்றி யாநீந்த" என்பது வினையெச்சக் குறிப்புக்கும் நன். வினை. சூ. உடு. மயிலை. மேற்கோள்.

க. (அ) "வெயினுழை பறியாக் கருவினுழை பொதும்பர்" பெரும்பாண். உஎசு; (ஆ) மணி. சு: நிஎ (இ) "இருநீங்கு சோலை" கலி. நிo: டு, (ஈ) "கதிர்நுழை கல்லா மம்பயில் கடிமிளை" புறம. உக: (உ) "பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்கிருள்வீளை யுண்ட மருள்படுபூம்பொழில்" தொல். பொருளி. இளம். மேற்கோள். (ஊ) "காய்கதிர் நுழையாக்கடி பொழில்" நமழிநெறி. மேற். (எ) "வெயிற்கெதிர்ந் திடங்கொடா தகங் குளிர்ந்தபைம்பொழில்" தே. (ஏ) "தாங்கிருள்வெய்யோற்கொதுங்கிப், புக்கிருந்தா லண்ணபொழில்" நள. சுயம். உஉ. (ஐ) "வெங்கதிர் நுழையா வீரிபொழில்" இராமா. சீதைனைம்புகு. உஉ (ஒ) "விசும்பு போழ்ந்துலாவு, காய்கதிர் நுழைகலாக் காவிருடல்போல்" நைடதம். காண்புகு. சு. (ஓ) "விரிகதிர்ச்செஞ்ஞா யிற்றின் வெயில்புகாப் பொதும்பர் தோறும்" கீதாசாரி. கண்ணப்ப. சுசு. என்பவையும் (ஔ) "கலிகெழு கூடல், வரைபுறழ் நிண்மதில் வாய்சூழ்ந்த வையைக், கரையணி காவி னகத்து" நெலி. கூஉ: கக-கூ. என்பதும் (ஃ) வையையும்போலும் யாற்றினும் . . .திருமருதத் துறைக் காவேபோலுங் காக்களினும் வீளையாடி உறைபதியைக் கடந்துபோய்நுகர்ச்சியெய்தலும் தலைவற்கும காமக்கிழத்தியர்க்கும்... ...உரிய" (தொல். கற்பியல், சூ. நிo, நச்.) என்பதும் ஈண்டு அறிதற்பாலன.

உ. "அடைகரை மாஅத் தலங்குகினை யொலியத், தளிர்கவினெய்திய தண்ணறும் பொதும்பிற், சேவலொடு கெழீஇய செங்க ணிருங்குயில், புகன்றெதிர் தாலும் பூமலி காலையு, மகன்றேர் மன்றம் மறந்திசி னோரென" நற். ககஅ.

க0. பாணுள்யாம் படர்கூரப் (க) பணையெழி லணைமென்றோள்
மானேக்கி னவரோடு மறந்தமைகு வான்மன்னே
வானச்சீர்க் கூடலு ளரும்பவிழ் நறுமுல்லைத்
தேனுர்க்கும் பொழுதெனத் தெளிக்குந ருளராயின்

எ-து: இக்காலம் அமையாத (உ)புகழையுடைய மதுரையிடத்து அரும்புக ளவிழ்ந்த நறிய முல்லையிலே தேனினம் ஆரவாரிக்குங் காலமென்று அவற்குத் தெளிவிப்பார் சிலருளராயின், * நடுயாமத்தே யாம் வருத்தமிகத் தான் மூங்கிலின் அழகையுடைய அணைபோலும் மெல்லிய தோளையும் மானி னது நோக்கம்போலும் நோக்கினையுமுடையபரத்தையருடனே †கூடி நம்மை மறந்து அவரிடத்தே அமைந்திருப்பன்; அதனைப் பெற்றதென்? கூறுவார் இன்றே; எ - று.

கச. (ரு) உறலியா மொளிவாட (ச)வுயர்ந்தவன் விழவினுள்
விறலிழை யவரோடு விளையாடு வான்மன்னே
பெறலரும் பொழுதோடு பிறங்கிணர்த் துருத்திசூழ்ந்
(ரு) ‡தறல்வாரும் வையையென் றறையுந ருளராயின்

எ - து: இக்காலம் பெறுதற்கரிய இளவேனிற் காலத்துடனே பெருமை யினையுடைய பூங்கொத்துக்களையுடைத்தாகிய யாற்றிடைக்குறையைப் புடை சூழ்ந்து வையை அறலுண்டாம்படி ஒழுகுமென்ற அவற்குச் சொல்லுவார் உளராயின், ||தன்னே டுறுதற்குரிய யாம்ஒளிகெடும்படியாகக் காமனுக்கு எதித்த

க. ''பணையெழி லணைமென்றோள்'' கலி. க கூ.

உ. (அ) ''மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்'' (ஆ) ''மிக்குப்புக ழெய்திய பெரும்பெயர் மதுரை'' மது சஉக, சுகூக. (இ) ''புகழ்பூத்த லல்லது, குன்றுத லுண்டோ மதுரை'' (ஈ) ''புகழ்பூத்த லல்லது, பொய்யாத லுண்டோ மதுரை?'' பரிபாடல்.

ஙு. (அ) ''உறலியாம் . . .ருளராயின்'' என்பது தலைவன்கண் நிகழ்ந்தது தலைவி நினைந்து தோழிக்குக் கூறியதற்கும் தொல். அகத். சூ. சஙு. நச. (ஆ) நிம்பிரிக்கும் (நிம்பிரி - பொருமை தோன்றுங் குறிப்பு; அவரோடும் விளையாடுவா னெனப் பொருமை கூறியும் அவன் ஈண்டையானுக வேண்டுமெனக் காதலைச் சிறப்பித்தலின் அமைந்தது' என்பர். நச;) தொல். பொருளி. சூ. நிக. நச். மேற்கோள்.

ச. ''மல்லிய துருத்திபுண மகிழ்துணைப் புணர்ந்தவர், வில்லவன் விழவி னுள் விளையாடும் பொழுதன்றோ'' கலி. ஙநி: கங - ச.

ஞ. (அ)''அறல்வாரும் . . . . . ருளராயின்'' என்பது அறையென்பது சொல்லுதற்குழிப் பணபின்மேல் வருதற்கு மேற்கோள்; நன். உரி. சூ. கஎ. மயிலை. (ஆ) ''வையைவா ரவிரற விடைபோழும் பொழுதினுன்'' கலி. உஅ: எ.

(பிரதிபேதம்) *இடையாமதனே, † கூடிமகிழ்தரு நம்மை, ‡ அறலாரும், || நம்மை.

திருநான் இக்காலத்து வெற்றியையுடைய இழையினையுடைய பரத்தையருடனே விளையாடுவேன், அதனற் பெற்றதென் ? கூறுவார் இன்றே; எ - று.

"எனனே பேதைமை நிம்பிரி நல்குர, வினைதால் வகையுஞ் சிறப்பொடு வருமே." (க) என்பதனுற் பரத்தையரோடு விளையாடுவானெனப் பொருமை கூறியும் *அவன் ஈண்டையானுகவெனக் காதலிச் சிறப்பித்தலின் அமைந்தது. இவை விளையாட்டிற் பிறந்த உவகையென்னும் மெய்ப்பாடு; இவை தன்கட் டோன்றிய பெயர்பற்றி வரும்.

இவை மூன்றும், தாழிசை.

எனவாங்கு

எ - து: எனச்சொல்லி; எ - று.

ஆங்கு அசை.

இது தனிச்சொல்.

கசு (உ) தணியாநோ யுழந்தாளைத் (கூ) தகையவ டகைபெற
வணிகிளர் நெடுந்திண்டே ரயர்மதி பணிபுகின்
காமர் கழலடி சேரா
நாமஞ்சா நெவ்வரி னடுங்கினள் பெரிதே

எ-து: மீளாத காமநோயிலேவருந்தி அமையாததகைமையையுடையவள் நின்னுடைய விருப்பத்தையுடைய கழலணிந்த அடியைப் பணிந்து சேராத அச்சமமைந்த (சு) பகைவரைப்போலே பெரிதுநடுங்கினள், அவள் அழகைப் பெறும்படி அழகுவிளங்கின நெடிய திண்ணிய தேரைச் செலுத்துவாயாக; †எ - று.

இது சுரிதகம்.

க. தொல். பொருளி. சூ. நக. இந்நூற்பக்கம் கசுஎ: கூ - (ஆ) குறிப்புப் பார்க்க.

உ. அவணிலே யுரைத்த லென்பதற்கு "தணியாநோ... .....பெரிதே" என்பதை மேற்கோள் காட்டி, பாசறைக்கண் தலைவற்குத் தலைவி வருத்தங் கூறியவாறு காண்க என்பர், இளம்பூரணர்; தொல். கற். சூ. உஅ. 'நிலம் பெயர்த்து'.

கூ. "ஒடுங்கீ ரோதி யொண்ணுத லணிகொளக், கொடுங்குழைக் கமர்த்த நோக்கி னையவப், பெருந்தகைக் கமர்ந்த மென்சொற் றிருமுகத்து, மாணிழை யரிவை காரணிய வொருநாட், பூங்க மாளனின் புரவி நெடுந்தேர்" பதிற். அக: உஅ-கூஉ.

சு. "வடதிசை மருங்கின் மன்னர்த முடித்தலைக், கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது, வறிது மீளுமென் வாய்வா ளாகிற், செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப், பகையர சுடுக்காது பயங்கெழு வைப்பிற், குடிகடுக் குறூஉங் கோலே ஞகென" எனச் செங்குட்டுவன் வஞ்சினங் கூறுதலாலும் பகை யரசரை நடுக்குதல் அரசர்க்குரிய தொழிலென்பது விளக்கும். சிலப். உசு: கஉ-அ.

(பிரதிபேதம்) * அவளீண்டையானுக, † எனப் பாணன் பாசறைக்கட் கூறினன்.

"பாசறைப் புலம்பலும்" (க) என்புழித் தூதுகண்டு தலைவன் புலம்புவ ஞதலின், தூதாய்ச்சென்ற பாணன் கூறினான்.

இது "இணைமயங் குறுதலும்" (உ) என்பதனுற் பாலைக்கண் மருதம் நிகழ்ந்தது.

இதனுல், தலைவிக்கு இழிவும் தலைவற்கு அசைவும் *பிறந்தன.

இது † "மரபினது" (ங) என்றதனுன் நான்கடித்தரவிற்கு நான்கடித் தாழிசை வந்து தனிச்சொற்பெற்று நான்கடிச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக் கலிப்பா. (உக)

(ஙக.) (அ)கடும்புனல் கால்பட்டுக் கலுழ்தேறிக் கவின்பெற
நெடுங்கயத் தயலய லயிர்தோன்ற வம்மணல்
வடித்தூர வரிப்பபோ லீங்கைவா டுதிர்புகப்
பிரிந்தவர் நுதல்போலப் பீர்வியக் காதலர்ப்
ஙி புணர்ந்தவர் முகம்போலப் பொய்கையூப் புதிதின
மெய்கூர்ந்த பனியொடு மேனின்ற வாடையாற்
கையாறு கடைகூட்டக் கலக்குறூஉம் பொழுதுமற்
பொய்யேமென் றுயிழாய் புணர்ந்தவ ருரைத்ததை;

கூ மயங்கமர் மாறட்டு மண்வெளவி வருபவர்
தயங்கிய களிற்றின்மேற் றகைகாண விடுவதோ
பயங்கெழு பல்கதிர் பால்போலீம் பொழுதொடு
வயங்கிழை தண்ணென வந்தவிவ் வசைவாடை;

கஙூ தாள்வலம் படவென்று தகைநன்மா மேல்கொண்டு
வாள்வென் றுவருபவர் வனப்பார விடுவதோ
நீள்கழை நிவந்தபூ நிறம்வாடத் தூற்றுபு
தோளதிர் பகஞ்சேரத் துவற்றுமிச் சின்மழை;

கஎ பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர் மிசையவர்
வகைகொண்ட செம்மனும் வனப்பார விடுவதோ

க. தொல். அகத். சூ. சக.

உ. தொல். அகத். சூ. கஉ. இந்நூற்பக்கம், கசுஉ: க - ஆம் குறிப்புப் பார்க்க.

ங. தொல். செய். சூ. கஙச.

ச. இச்செய்யுள் (அ) மண்கோடலும் திறைகோடலும் அரசர்க்கே யுரிய வென்பதற்கும், (தொல். அகத். சூ. உஎ. நச்.) (ஆ) குறிப்பினுற் பாட்டைத் தலைவனைக் கிளவித் தலைவனுகக்கூறியதற்கும் (தொல். புறத். சூ. உஅ. நச்.) மேற்கோள்.

(பிரதிபேதம்) * பிறக்கும், † மரபினவென்றதனுல்.

புகையெனப் புதல்சூழ்ந்து பூவங்கட் பொதிசெய்யா
முகைவெண்பி னுதிபொர முற்றிய கடும்பனி;
எனவாங்கு;

உஉ வாளாதி னையங்கிழாய் வருந்துவ னிவ்வென
நாள்வரை நிறுத்துத்தாஞ் சொல்லிய பொய்பன்றி
மீனிவேற் றுனையர் புகுதந்தார்
நீளுயர் கூட னெடுங்கொடி யெழவே.

இஃது இளவேனிற்காலத்து வருவல், அத்துணையும் ஆற்றியிரு வென்று மண்ணைசையால் வேந்தன் சென்றவழி, முன்பனிக்காலமும் பின்பனிக் காலமும் வந்து வருத்தலின் ஆற்றத தலைவியைத் * தோழி வருவரென வற் புறுப்பவும், வன்புறை எதிரழிந்தவழி, தலைவன் யாங்குறித்த பருவம் வருந் துணையும் ஆற்றியிராளெனப் பின்பனிக்காலத்து வருகின்ற வாவுணர்ந்து தோழி கழியுவகையாற் கூறியது.

இதன் பொருள்.

கடும்புனல் கால்பட்டுக் † கலுழ்தேறிக் கனின்பெற
நெடுங்கயத் தயலய லயிர்தோன்ற வம்மணல்
வடித்தூர வரிப்பபோ லீங்கைவா டுதிர்புகப்
க) பிரிந்தவர் நுதல்போலப் பிர்வியக் காதலர்ப்
நி புணர்ந்தவர் முகம்போலப் (உ) பொய்கைபூப் (ங)புதினின
(ச) மெய்கூர்ந்த பனியொடு மேனின்ற வாடையாற்
கையாறு கடைக்கூட்டக் கலக்கு நாஉம் பொழுதுமற்
பொய்பேயெமன் றுயிழாய் புணர்ந்தவ நுரைத்ததை

எ - து: யாறு கூதிர்க்காலத்து, பெருகுகலிற் கடிதாகிய நீர் வற்றிக் கால்களாக ஓடுதலுண்டாய்க் கலக்கந் தெளிந்து அழகுபெற, நெடிய குளங் களின் அயலேயயலே நுண்மணல்தோன்ற, அம்மணலின் அறல்மறையும்

க. பிரிந்தவர் நுதற்குப் பீர்க்கம்பூ உவமையாகலே இங-ஆம் கலி. கச - நி ஆம் அடிகளின் குறிப்பிற்காண்க.

உ. "பொய்கை பூப்புதினின" என்பது வினைக்குறிப்பு அகர வீறன்றிப் பிறசுட்டின் முடிக்குஞ் சொல்லே விசேடித்து வருதற்கு மேற்கோள்; தொல். வினை. சூ. ஙo. "செய்து செய்பூ" கல்; சூ. நூங. நச்.

ங. புதினின வென்பதற்குப் புதிதாக ஈன எனப் பொருள்கூறி, செய வென்னுந் தெரிநிலை வாய்பாட்டிற்குரிய குறிப்பெச்சம் என்பர், இராமாநுசகவிராயர்; நன். வினை. சூ. உங.

ச. கலி. உக: கஉ-தங.

(பிரதிபேதம்) * வருவனெத்தோழி யறபுறுப்பவும், † கனிழ்.

படி கோலஞ்செய்வனபோல ஈங்கையினது வாடற்பூக் காம்பு கழன்ற அம்மணலிலே வீழ, கணவரைப் பிரிந்த மகளிர் நுதல்போல் (க) முன்பூத்த பீர்க்கம்பூ இப்பொழுது பூவின்றாக, தாம் * காதலித்த தலைவரைக்கூடின மகளிர்முகம்போலப்பொய்கையிற் பூக்குந் தாமரையைப் பொய்கை புதிதாகப் பூக்க, முன்பனிக்காலத்திற்கும் பின்பனிக்காலத்திற்கும் மேலாய்நின்ற இளவேனிற்காலம் ஆயிழாய்! நம்மைக்கூடினவர் தப்பாமல்வருவேமென்றுகூறின காலம், அதனுற்பெற்றதென்? அக்காலம் வருந் துணையும் ஆற்றியிராதபடி முன்பனிக்காலத்து வாடையாலும் மெய் வேறுதற்குக் காரணமான பின்பனியாலும் உண்டாகிய வினை ஒழிந்து அயர்தல் இறந்துபாட்டை நமக்குக் கூட்டுகையிலே நெஞ்சு கலக்கமுறுகின்றது ; யான் எங்ஙனம் ஆற்றுவேன் ; † எ - று.

முன்னர்நின்ற செயவெனெச்சங்கள் மேனின்றவென்னும் பெயரெச்சத்தோடுமுடிந்து, அது பொழுதென்னும்பெயரோடுமுடிந்தது.

கையாறும் ஒரு மெய்ப்பாடென்றுணர்க.

இது தாவு.

கூ (உ)மயங்கமர் மாறட்டு (ரு)மண்வௌவி வருபவர்
(ச) தயங்கிய களிற்றின்மேற் றகைகாண விடுவதோ
பயங்கெழு பல்கதிர் பால்போலும் பொழுதொடு
வயங்கிழை தண்ணென வந்தவிவ் வசைவாடை

எ-து: உலகிற்கு (டு) உணவுகளை விளைத்தற்குக் காரணமாகிய மதியின் கதிர்கள் பாலையொத்து விளங்கும் இராப்பொழுதோடே விளங்குகின்ற அணிகள் குளிரும்படியாக வந்த இந்த அசைதலையுடைய வாடைக்காற்று இரண்டு படையும் தம்முள் மயங்கினபோரிலே மாறுகிய அரசனைக்கொன்று அவன் நாட்டைக்கைக்கொண்டு களிற்றின்மேலே வருமவருடைய வீரத்தாற்

க. "இவாகொடிப் பீர மிரும்புதன் மலரு, மற்றிரம்" (ஐங். சசுசு) என்பது இங்கே அறிதற்பாலது.

உ. (அ) "வேண்டா, நெறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பின்" (ஆ) "படைமயங்காரிடை" புறம். கஎஅ: சு - எ, ருசுரு: கள; (இ) "கழுமிய ஞாட்பினுள்" கலவழி. கக.

ரு. "போயவர் மண்வௌவி வந்தனர்" கலி. கசஅ: உரு.

ச. "தயங்கிய . . . . .விடுவதோ" என்பது தலைவி கூற்றுக்கு மேற்கோள்; தொல். கற். சூ. டு. நச்.

டு. "மண்ணக மினைத்தும் நிறைத்தபல் லுயிர்கட்குங்காயு மழுத மீருதலானும்" என்பது ஈண்டு அறிதற்பாலது. கலி. உரு.

(பிரதிபேதம்) * காதலிதலையரை, † என்ருள

பிறந்த அழகை நாங்கண்டுநகரும்படியாக (க) நம்மூயிரைக்கொள்ளாது விடுவ தொன்றுபிருந்ததோ? அது கொண்டேவிடும்; எ - று.

தயங்குதல் - அசைவு.

பால்போழுமென்று பாடமாயின், பாலே வருத்துமென்க.

இதனுள் வென்ற வீரத்தாற் பிறந்த அழகை நுகர விரும்புதலின் தலைவி யும் அரசவருணேமேயாயிற்று. இது மேல்வருவனவற்றிற்கும் ஒக்கும். இஃது *"எவன்மரபின்" என்னும் (உ) சூத்திரத்தானுணர்க.

நூ (க)தாள்வலம் படவென்று தகைநன்மா மேல்கொண்டு
வாள்வென்று வருபவர் வனப்பார விடுவதோ
நீள்கழை நிவந்தபூ நிறம்வாடத் தூற்றுபு
தோளதிர் பகஞ்சேரத் துவற்றுமிச் சின்மழை

எ-து: நீண்ட கரும்பில் ஒங்கின பூவை நிறங்கெடும்படி காற்றூற் றூற்றித் (ச)தோள்கள் குளிரால் நடுங்கி நம் ஆகத்தைச் சேரும்படி † துவற்றுகின்ற இச்சிலவாகியமழை தமது (ஞ)தாள்களாலே வெற்றியுண்டாம்படிவென்று அழ னேயுடைத்தாகிய நல்ல குதிரையை ஏறி வாளாலே வென்றுவருமவருடைய வீரத்தாற்பிறந்த அழகை நாங் கண்டு நுகரும்படியாக நம்மூயிரைக் கொள்ளாது விடுவதொன்றுபிருந்ததோ? அது கொண்டேவிடும்; எ - று.

இத்தாழிசைகள் இரண்டும் முன்பனிப்பருவம் கழிகின்றன கூறின வாகக் கொள்க.

கள (ஈ)பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர் மிசையவர்
வகைகொண்ட செம்மனும் வனப்பார விடுவதோ

க. "மழைத்தாரை வல்லிருட்கும் வாடைக்கு நாங்கள், பிழைத்தால்வர் தேனென்னும் பேர்" நள. சுயம். கூ.

உ. தொல். அகத். சூ. உ.

ங. (அ) "தாள்வலம்... ....விடுவதோ" என்பது தலைவி கூற்றுக்கு மேற்கோள்; தொல். கற். சூ. கி. (ஆ) "வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த" புறம். உசு: உக.

ச. "நடுங்குசுவ லசைத்தகையள்" முல்லை. கச.

ஞ. தாள் - முயற்சி.

ஃ. (அ)பாலைத்திணையிற் பின்பனிப் பருவம்'வருதற்கு "பகைவென்று..... கடும்பனி" என்பதை மேற்கோள் காட்டி "இது தனித்தோர்க்குப் பின்பனி ஆற்றற்கரிது. இஃதெவர்க்கு மேதமாம் எனவும் இதனு னிறத்து பின்வேனெனவும் கூறிற்று" (தொல். அகத். சூ.கூ.) என்றும் (ஆ) "வாளாணெறிரும் பிரிவினனும்" என்புழி இப்பருவத்தினை மேற்

(பிரதிபேதம்) * எனைமரபின், † தாக்குறின்ற,

(க)புகையெனப் புதல்சூழ்ந்து பூவங்கட் பொதிசெய்யா
முகைவெண்(உ)ப ணுதிபொர முற்றிய கடும்பனி

எ - து: புகையென்னும்படி சிறுதூறுகளைச் சூழ்ந்து பூவாய் அழகிய கள்ளைப் பொதிதலைச் செய்யாத முகைபோலும் வெள்ளிய பல்லின் நுனைகள் தம்மிற்பொரும்படி முதிர்ந்தகடியபனி பகையைவென்றுநிறையைவாங்கின, பாய்ந்து செல்கின்ற திண்ணிய தேர்மிசை வருமவருடைய கூறுபாடு கொண்ட தலைமையினையுடைய வீரத்தாற் பிறந்த அழகை நாங்கண்டு நுகரும் படியாக நம்மூயிரைக் கொளளாது விடுவதொன்றுயிருந்ததோ? அது கொண்டேவிடும்; எ று.

இது "பின்பனி தானு முரித்தென மொழிப" (ங) என்றதனாற் பின்பனி வந்தது.

பரித்திண்டேர் எனவும் பாடம்.

இவை மூன்றும், தாழிசை.

எனவாங்கு

எ - து: என்று; எ - று. ஆங்கு, அசை.

இது தனிச்சொல்.

---

* கோள் காட்டி "இதனுட் பனியெதிர் பருவங் குறிஞ்சியாகலிற் களவிற் பிரிந்தான் வாளாணெதிரும் வென்றி தோழிக்குத் தலைவி கூறியவாறு; இஃது அவன்வயிற் பரத்தைமை கருதாதது." (தொல். களவியல். சூ. கசு.) என்றும் (இ) வேந்தன் உரிப்பெருட் டலைவ னுனதற்கு, "பகைவென்று . . விடுவதோ" என்பதை மேற்கோள் காட்டி "இதனுள்வேந்தன்தலைவனுனவாறும்வகைகொண்டதலைமையி னழகை நுகரவிரும்பினுள் என்றலின், தலைவியும் அவ்வருணத்தா ளாயவாறும் உணர்க"; (தொல். அகத்.சூ. உச.) என்றும் கூறுவர், நச். (ஈ) 'பகைவென்று நிறைகோடற்குப் பிரியுங்கால், அன்புறுகிழவி துன்புற்றிருப்பவளையாது பிரிதலின்று' என்பது (தொல். கள. சூ. ஙo. நச்.) காணப்படுகின்றது.

க. (அ)"நளிர்மலைப் பூங்கொடி தங்கு புகக்கும், பனிவள ராலியும் போன்ம் மணிமாடத், துண்ணின்று தூய வனிரீ ருடன்கலந்து, காறிரிய வார்க்கும் புகை" பரி. கo: கஉஉ-ஙி. (ஆ) "புகையிற் பொங்கி வியல் விசும்புகக்து.பனியூ ழற்கொடி கடுப்பத் தோன்று,மிமயச் செவ்வரை" (இ) "புகைகிற வருவி னற்றிரம்" அகம். உசுஙி: க-ஈ; ஈகஎ: ஈ.

உ. "பன், னுனிபொரு காலம் வர" நீருவெங்கைக். சகஈ.

ஈ. தொல். அகத. சூ. சo.

உஉ வாளாதி வியங்கிழமாய் வருந்துவ னிவளென்
(க)நான்வரை நிறுத்துத்தாஞ் சொல்லிய பொய்யன்றி
(உ)மீனிவேற் றுனையர் புகுதந்தார்
நீளுயர் கூட்ட மெடுங்கொடி யெழவே

எ-து: பயனிலகூறுதேகொள். விளங்கின இழையினையுடையாய்! பொய்யன்றித் (கூ)தாஞ்சொல்லிய காலெல்லைவருதற்குஇன்னுஞ்சிறிதுநாட் செல்லுமென்று தாக்கி அத்துணையும் ஆற்றாது இவள் வருந்துவளென்று கருதிக் (ச)கூற்றுவனையொத்த வேற்படையினையுடையவர் புகழ் வளர்கின்ற உயர்ந்த கடலிலேசெடிய வெற்றிக்கொடிகளேக்கட்டும்படியாகப்புகுந்தார்காண்;*எ-து.

நிறுத்தென்றது, தாக்கியென்னும்பொருட்டு.

"பிழவி நிலையே வினையிடத் துரையார்,†வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்" (ரு) என்பதனால் (சு)உருவுவெளிப்படுதலின் இவளென்றான்.

"நிலனெருங்கு†மயங்குத லின்று"(எ)எனவே காலம் இரண்டும் மயங்குமென்றலின் முன்பனியும் பின்பனியும் மயங்கிற்று.

இது சுரிதகம்.

இதனால், தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது

இஃதெட்டடித்தரவும் நான்கடித்தாழிசையும்கனிச்சொல்லும்நான்கடிச சுரிதகமும் பெற்று வந்த ஒத்தாழிசைக்கலிப்பா. (கூ0)

கூஉ (அ)எஃகிடை தொட்டகாய்க் கனிமற்றை வைப்பல்போன்
மைபற விளங்கிய துவர்ப்பிணை ஞெமரும்

க. இவ்வடி முற்றும் கலி. கூஉ-வது செய்யுளிலும் உக-ஆம் அடியாகவந்துள்ளது. இங்குள்ள இவ்வடியுரையுடன் "அசிர, முந்து வந்தனர் நங்காத லோரே" ஐங். உஉஉ. என்பது ஒப்புநோக்கற்பாலது.

உ. "சூழவன் பதாகை கட்டிதந் தோரணம் பலவு நாட்டி, யேழுயர் மாட மூது ரெங்கணுங் கோடித் தாரே" வில்லி. நிரை. ககஅ.

கூ. தலைவர். தாஞ்சொல்லிய காலெல்லை வருதற்கு முன்பு வருதலுண்டென்பது, ஐங். சஉ-ஆம் பத்தாலுணரப்படும்.

ச. "காலவேல்" சீவக. ககக, உகூஙி. "காலவேலான்" கம்ப. மையடை. கக.

ஞ. தொல். கற். சூ. சஙி.

க. உருவு வெளிப்படுதல். ஐங். சகஅ.

எ. தொல். அகத். சூ. கஉ.

அ. இச்செய்யுள், தனிச்சொல்லும் அடக்கியலுமின்றி அடிநிமிர்ந் தொழுகியதற்கும் (தொல்.செய்.சூ.கஙஞ.பே.) "எண்ணிடையிட்டுச் சின்னஞ் சுன்றிய கொச்சகத்திற்கும் (தொல்.செய்.சூ. கஙஞ. ஈச்.) மேற்கோள்.

(பிரதிபேதம்) * எனஆற்றுவித்தான, † மயங்குதலிலனெனவே.

வைதாக நெறித்தன்ன வறலவிர் நீளம்பா
லணிநகை யிடையிட்ட வீகையங் கண்ணிபோற்
பிணிநெகி ழலர்வேங்கை விரிந்தபூ வெறிகொள

5 துணிநீரோற் றூமதி நாளா லணிபெற
வின்றவ டிதலேபோ லீர்பெய்யுந் தளிரொடு
மானீறவ ரடக்கம்போ லலர்ச்செல்லாச் சிலையொடும்
வல்லவர் யாழ்போல வண்டார்க்கும் புதலொடு
நல்லவர் நுடக்கம்போ னயம்வந்த கொம்பொடு
முணர்ந்தவ ரீகைபோ லிணரூழ்த்த மரத்தொடும்
புணர்ந்தவர் முயக்கம்போற் புரிவுற்ற கொடியொடு
நயந்தார்க்கோ நல்லிள னினைவேனி லெம்போல;

10 பசந்தவர் பைதலெஞ் பகையெனத் தணித்துநம்
மின்னுயிர் செய்யு மருந்தாகிப் பின்னிய
காதல ரெயிறேய்க்குந் தண்ணருவி நறுமுல்லைப்
போதாரக் கொள்ளுங் கமழ்குரற் கென்னுந்
தூது வந்தன்றே தோழி
துயரு நிளியேபோ டயர்ந்தீகம் விருந்தே.

இது காலவரவு கண்டு ஆற்றளாயினவிடத்துத் தோழி காலத்தை நோக்கி அழகிதாகச்செய்தாய் வந்தெனச் சொல்லி, தலைவிக்கு நங் காதலர் வருகின்றானெச் சொல்லிவந்த தூதுகாண் இது, நாம் விருந்தயர்க மெனச் சொல்லியது.

இதன் பொருள்.

(க) (உ)எஃகிடை தொட்டகார்க் கவின்பெற்ற வைப்பால்போன்
மையற விளங்கிய துவர்மண லதுவது
வைதாக நெறித்தன்ன வறலவிர் நீளம்பா
லணிநகை யிடையிட்ட (ங)வீகையங் கண்ணிபோற்
பிணிநெகி ழலர்வேங்கை விரிந்தபூ *வெறிகொள

க. இப்பாட்டின் மூலம், எகெளில் ஒரே தொடர்ச்சியாக உள்ளதேனும், முடிபு கருதித் தரவு இருபகுதியாகவும் சுரிதகம் ஒரு பகுதியாகவும் பதிப்பிக்கலாயிற்று.

உ. (அ) கலி. இடை: க-உ-ஆம் அடிக்குறிப்புப் பார்க்க. (ஆ) "வாளிடைப் படுத்த வயங்கு ரோதி" கலி. ங்க: உங. (இ) "எஃகிடை தொட்ட பூக்குழலே" காஞ்சீப். மாசாத்தன்தளி. அ.

ங. (அ) "ஈகையங் கழற்கால்", (ஆ) "ஈகைக் கண்ணி யிலங்கத் தைஇ" புறம். ஙக: இ, ஙஇங: ங.

(பாடபேதம்) * தெறிகொள.

எ - து: கத்திரிகை இடையிலே தீண்டிய, மேகத்தின் கலிஞைப்பெற்ற, (க)ஐந்துபகுதியையுடைய மயிர்போலப் புலர்ந்த மணல் மேகம் மழைபெய்யா மற் போகையிலுலே விளங்கினவென முற்றுகஅறுத்து மேல்வருகின்ற நீளம் பாலென்றதனை முற்கூறிய ஐம்பாலைச்சுட்டிய சுட்டுப்பெயராகக் கொள்க.

கொய்தாகப் பிடித்துவிட்டாற்போன்ற அறுதிவிளங்கின நீண்ட ஐம்பாலிற் பல ஒளிகளையுடைய அணிகளுக்கிடையே இட்டுவைத்தபொன்னுற்செய்த அழ கியகண்ணிபோலே அந்த மணலிலே பிணிநெகிழ்ந்த பல பூக்களும் வேங்கையி னது விரிந்தபூக்களும் ஒழுங்குகொள்ள மணல் ஐம்பால் போல விளங்கின. அவ்வைம்பாலிற் கிடந்த அணியும்(உ)பொன்மாலையும்போலே அந்தமணலிலே பல நிறத்தையுடைய பூக்களும் வேங்கைப்பூக்களும் ஒழுங்கு கொண்டன வென உணர்க.

சு (h) துணிநீராற் *றூமதி நாளா னணிபெற
(ஞ) வீன்றவ டிதலேபோ லீர்பெய்யுந் தளிரொடு
(டி) மான்றவ ரடக்கற்போ †லலர்ச்செல்லாச் சினையொடும்
வல்லவர் (ஈ) யாழ்போல வண்டார்க்கும் புதலொடு

க. ஐந்து பகுதி:—குழல், அளகம், கொண்டை, பணிச்சை, துஞ்சை.

உ. "எரிமருள் வேங்கை யிருந்த தோகை, பிழையணி மடந்தையிற் றோன்று நாட" ஐங். உகசை.

ஊ. "துணிநீராற் றூய்மதி . . லிளவேனி லெம்போல" என்புழி ஆலும் ஒடுவும் பலவுமெய்கி நல்லை யென்பதோடு முடிந்தன வென்பர், தெய்; தொல். வேற்றுமைமயங்கி. சூ. கஅ. 'உருபுதொடர்ந்து'.

எ. கலி. உசு: எ - அ - ஆம் அடிகளையும் அவற்றின் குறிப்பையும்பார்க்க.

ஏ. (அ) "கற்றறிந்தார் கண்ட தடக்கம்" பழ. உசஞ. (ஆ) "கற்றறிந் தவ ரென வடங்கி" கம்ப. சித்திரகூட. ஈடு. (இ) "அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்" வெற்றி.

ஐ. (அ) "யாழிசை மினவண் டார்ப்ப" முல்லை. அ. (ஆ) "வண்டியா ழாக, வின்பல் லிமிழிசை கேட்டு" (இ) "வரையிழி யருவிப் பாட்டொடு பிசை, முழவுசேர் நாம்ப ளிம்மென வீமிரும், பழவிற னனைத்தலைப் பயமலை நாட" அகம். அஉ: சு - எ; ஙகஅ: ஞ - எ. (உ) "யாழிசை கொண்ட வினவண் டிமிர்ந்தார்ப்ப" கலி. கஙக: கூ. (ஊ) 'வண்டியாழாக'.தீவணமாலை.ககக. (ஙஙு) "யாழின்வண் டார்க்கும் புனலூர" பழமொழி. உஉக. (எ) "அரவ வண்டின மார்த்துடன் யாழ்செயும்" (ஏ) "இளவண் டியாழ்செய" (ஐ) "பல்வண் டியாழ்செய" சீவக. (கஉ) 'மரவம்' (உஈ) ககஉ, (உஎ) ககச. (ஒ) "மழலை வண்டின நல்லியாழ் செய்ய" (ஓ) "பொங்கர் வண்டினம் நல்லியாழ் செய்ய" மணி. ச: ச; கக: ஞஅ. (ஔ) "அரவ வண்டொடு

(பிரதிபேதம்) * ஞாயமதி காளா லணி, † அலர் செல்லா.

(க)நல்லவர் நுடக்கம்போ *னயம்வந்த கொம்பொடு
(உ)முணர்ந்தவ ரீகைபோ ணைரூழ்த்த மரத்தொடும்
(ங)புணர்ந்தவர் †முயக்கம்போற் புரிவுற்ற கோடியொடு
நயந்தார்க்கோ நல்லிம னிளவேனி லெம்போல

எ - து: தெளிந்த நீராலும் தூய மதியையுடைய காளாலும் புதல்வனை ஈன்றவளுடைய துஞ்சிபோலே நெய்ப்பினையுண்டாக்கும் மாந்தளிராலும்

தேனினம் யாழ்செயும்" (ஃ) "பாடல் வண் டியாழ்செயும்" கீவக. ககஈசு, கஉ0எ. (அஅ) "வண்டினங் காலையாழ் செய்யும்" பு-வே. பெருந். கஈ. (ஆஆ) "அரவ வண்டினம் யாழென வார்ப்ப" பெருங். (இ) உ: கஅ.

க. "சேட்டிசைத் தென்கா றள்ளத் தெண்மதுச் சிதறத் தும்பி, நீட்டிசை முரலச்சாயா கின்றபூங் கொம்ப ராட, ஞட்டியப் புலவ ஞட்ட கைமுகம்,வெயர்வை சிந்தப்,பாட்டிசைத் தாடாகின்ற பாவைமார்போன்ற வன்றே." திருவிளை. தருமிக்கு. கசு.

உ. (அ) "செல்வத்துப் பயனே யீதல், துய்ப்பே மெனினே தப்புந பலவே" புறம். கஅசு: எ-அ. (ஆ) "புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி, யின்னினியே செய்க வறவினை-யின்னினியே, நின்ரு னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச், சென்ரு னெனப்படுத லால்" நாலடி. உசு. (இ) "பலதிரண்ட செல்வத்தைப் பார்க்கிற் கனவா, மல ருதிர்ந்தாற் போலிளமை வாடுஞ் - சிலநிகழ்ந்த, மின்னெக்கும் வாழ்நா ளிவைபிற்றை மெய்யென்றிட், டின்னிக் களிப்பா ருளர்" பாரதம். (ஈ) "இளமையும் வனப்பு நில்லா வின்பமு நின்ற வல்ல, வளமையும் வலிது நில்லா வாழ்வுநா ணின்ற வல்ல, களமக ணேச நில்லா கைப் பொருள் கள்வர் கொள்வா, ரளவிலா வறத்தின் மிக்க தியாதுமற் றில்லை யன்றே" நரிவிருத்தம். கச.(உ) "இளமையு நிலையாவா லின்பமு நின்றவல்ல,வளமையு மஃதேயால் வைகலுந் துன்பவெள்ள,முளவெனி னினையாதே செல்கதிக் கென்றுமொன்று, வீளைநில முழுவார்ப்போல் வித்துநீர் செய்துகொண்மின்" வளையாபதி. (ஊ) "இன்னளா ரின்றேயு மாய்வ ரவருடைமை, யன்றே பிறருடைமை யாயிருக்கு - நின்ற, கருமத்த தல்லாத கூற்றின்கீழ் வாழ்வார், தருமந் தலைநிற்ற னன்று" அறநெறி. ககக.

ங. (அ) "அல்லிடை யன்றியே யலர்ந்த மாலதி,வல்லிகடருவெனு மிழ்நர் தங்களைப், புல்லுவ பகலினும் பொருந்து மோவெனை, மூல்லைகண் மலர்ந்தன முறுவல் செய்வபோல்" கந்த. இந்திரனருச்சனை. உங. (ஆ) "இடியினுங்கொடியினு மயங்கி" சீவக. ககக.(இ) "இழையினுங் கொடியினு மிடியினும் பிணங்கி" பெருங்.(க) ஙஉ...

(பிரதிபேதம்) * கயலர்த, † மயக்கம்.

(க) அறிவானமைந்தவர் தங்காரியத்தைமுடித்தற்கு அக்காலம்வருந்துணையும் அடங்கியிருக்குமாறுபோலக் காலம்வருந்துணையும் மலர்தலிற் செல்லாத அரும்புகளையுடைய கொம்புகளாலும் வாசிக்க வல்லவரது யாழோசைபோல வண்டு(உ)ளாரவாரிக்குஞ் சிறுதாறுகளாலும் நல்லமகளிருடைய (ஙூ) கூத்து, கண்டார்க்கு விருப்பஞ்செய்யுமாறுபோல விருப்பம்வந்த கொம்பாலும் நிலையாமையை உணர்ந்தவருடைய கொடைபோலக் கொத்துகள் அலர்த்து எல்லார்க்கும் பயன்படும் மரத்தாலும் அன்பாற் கூடினவருடைய புலவுதலைப் போலப் பிண்ணுதலுற்ற கொடியாலும், பொழில்கள் அழகைப்பெற வெண்க.

கொடியொடும் அணிபெறவெனக் கூட்டுக.

(ச) ஈர், ஈர்க்குமாம்.

இளவேனில் எம்போல நயந்தார்க்கு நல்லேயோவெனமாறி, இள வேனிலே யாங்கள் எம்மை நயந்தார்க்கு நல்லேமாயினும்போல, நீயும் வெறிகொள அணிபெற எப்பொழுதும் வருவையென்று விரும்பியிருந்தார்க்கு மிகவும் நல்லேயோ. நீதான் வந்து அழிதகச் செய்தாயென இளவேனிலை நோக்கித் தோழி கூறினாள். அதனை நோக்கிக் கூறியபின்னர்த் தலைவியை நோக்கி, (கூறுகின்றாள்.)

கச பசந்தவர் பைதலேஞ் பகையெனத் தணித்தாகம்
மின்னுயிர் செய்யு மருந்தாகிப் பின்னிய
காதல ரெயிறேய்க்குந்(டு) தண்ணருவி நறுமுல்லைப்
போதாரக் கொள்ளுங் கமழ்குரற் கெண்ணுங்
(ஙூ) தாது வந்தன்றே தோழி
துயரறு ஞெளியோ டுயர்ந்தீகம் விருந்தே

க. (அ) "காலங் கருதி யிருப்பர் கலங்காது, ஞாலங் கருதுபவர்" (ஆ) "கொக்கொக்க கூம்பும் பருவத்து" குறள். சஅடு, சகo.

உ. வண்டார்த்தல்: கலி. ஙஙூ: டு - ஆம் அடியின் குறிப்புப் பார்க்க.

ஙூ. "வேறிலே கூத்துப்போல மெய்யுளம் கவர்வதென்னூர்" திருவால. க: எ.

ச. (அ) ஈர்க்கு என்பது மாவிலேமேல்வந்ததற்கு "ஈன்றவள்..... .... தளி ரொடும்" என்பது மேற்கோள்; தொல்.' மரபியல். சூ. அ. பே. நச். (ஆ) "ஈர்க்கென்பது: தெங்கு, பனை, மா, வேம்பு, பறப்பனவற்றிற் குரித்து" என்பர், மயிலைநாதர்; நன். பொது. சூ. ஙஎ.

டு. "தண்ணருவி நறுமுல்லை" கலி. ஙடு: கo.

சு. (அ) 'குடிமையாண்மை' என்னுஞ்சூத்திரத்து 'அன்னபிறவும்' என்பதனுள் 'தாதுவந்தது' என்பதனைக்கொள்கவென்றும் தாதென்பது தன்பொருட்குரிய பாலான்முடியாமையின் ஆருபெயரன்றென்றும் குறிப்புமொழியென்றும் கூறுவர், தெய்; தொல். இளவி. சூ. டுடு. (ஆ) "காதலர் தாதொடு வந்த கனவினுக், கியாதுசெய் வேன்கொல் விருந்து" (இ) 'மாலையயர்கம் விருந்து' குறள். கஉகச: கஉசஅ.

எ-து: தோழி; இவ்வீளவேனில் குளிர்ந்த அருவியின் அருகேநின்ற நறிய முல்லையினது மகளிரெயிற்றையொக்கும்பூக்களோடும்முடையகமழ்கின்ற கொத்தாகிய மயிருக்கு நிறையக் கொய்துகொண்மினென்று கூறுதிற்கும்; அதி வேயுமன்றி உலகத்திற் பசந்தவருடைய வருத்தத்தையுடைய காமநோயையுந் தனக்குப் பகையென்று கருதிப் போக்கி விசேடித்து நம்முடைய இனிய உயிரை உண்டாக்கும் மருந்துமாய் நாம் துயரறுதற்குக்காரணமான வார்த்தையோடே நாம் மூயங்கிய காதலருடைய தூதாய் வந்தது; ஆதலால் இனி அக்காலத்திற்கு விருந்தானவற்றை நாஞ்செய்வேமென ஆற்றுவித்தாள்.

பின்னிய காதலர் தூதென மாறுக. பசந்தவர்நோயைத்தணித்து என்பதனாலும் நம் மின்னுயிரைச்செய்யு மருந்தாகி என்பதனாலும் தலைவி காலங் கண்டுவருந்தினமை பெற்றாம்; இளவேனிற்கண்வருவலெனக் கூறிப்பிரிந்தவர் அப்பாரென்பதுபற்றி அவர் வார்த்தையோடே தூதாய் வந்ததென்றாள்.

கொள்ளுமென்னும் உம்மீறு பன்மையுணர்த்தி முன்னிலையாய்நிற்றல் "இர்ஈர் மின்" (க) என்பதனுட்கூறினும்.

இதனால், தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இது தனிச்சொல்லும் அடக்கியலுமின்றிச் சுரிதகம் பெற்று அடிநிமிர்ந்தோடிய கொச்சகக்கலிப்பா. (கூ)

(h.h.)வீறுசான் ஞாலத்து வியலணி காணிய
யாறுகண் விழித்தபோற் கயநந்திக் கவின்பெற
மணிபுரை வயங்கலுட் டுப்பெறிந் தவைபோலப்
பிணிவிடு முருக்கிய முணிகயத் துதிர்ந்துகத்
நி துணிகய நிழனெக்கித் தூதைபுடன் வண்டார்ப்ப
மணிபோல வரும்பூழ்த்து மரமெல்லா மலர்வேயக்
காதலர்ப் புணர்ந்தவர் கவவுக்கை நெகிழாது
தாதவிழ் வேனிலோ வந்தன்று வாராரம்
போதெழி லுண்கண் புலம்ப நீத்தவர்;

கo எரியுரு வுறழ விலவ மலரப்
பொரியுரு வுறழப் புன்குபூ வுதிரப்
புதுமலர்க் கோங்கம் பொன்னெனத் தாதூழ்ப்பத்
தமியார்ப் புறத்தெறிந் தெள்ளி முனியவர்
தார்ப்பது போலும் பொழுதென் னணிநலம்
போர்ப்பது போலும் பசப்பு;

க. தொல். வினை. சூ. உஎ.

அசு நொதுமு, நகுவனபோ னந்நின கொம்பு; நைந்துள்ளி
யுகுவது போலுமென் னெஞ்சு; எள்ளித்
தொகுபுட ணுடுவ போலு மயில்; கையி
லுகுவன போலும் வளை; என்கண்போ
லிகுபறல் வாரும் பருவத்தும் வாரார்
மிகுவது போலுமிந் நோய்;

உஉ நரம்பின் றீங்குர னிறுக்குங் குழல்போ
லிரங்கிசை மிஞிறெழு தும்பிதா தூதத்
தூதவர் விடுதரார் துறப்பார்கொ னெஞ்சக
மிருங்குயி லாலு மரோ;

எனவாங்கு;

உள புரிந்துநீ எள்ளுந் குயிலிய்ப மவரையும் புலவாதி
நீலித மூண்கணைப் நெறிகூந்தல் பிணிவிட
நாள்வரை நிறுத்துத்தாஞ் சொல்லிய பொய்யன்றி
மாலைதாழ் வியன்மார்பா தணைதந்தார்
காலுறழ் கடுந்திண்டேர் 'கடவினர் விரைந்தே

இது பருவவாவின்கண் வன்புறையெதிரழிந்து ஆற்றளாயினளைத் தோழி தலைவனது வரவுணர்ந்து கூறி ஆற்றுவித்தது.

இதன் பொருள்.

வீறுசான் ஞாலத்து வியலணி காணிய
யாறுகண் விழித்தபோற் கயநந்திக் கவின்பெற
(ந)மணிபுரை வயங்கலுட் டுப்பெறிந் தவைபோலப்
பிணிவிடு முருக்கிய முணிகயத் துதிர்த்துகத்

க. (அ) "பளிங்குசொரி வன்ன பாய்சுனை" குறிஞ்சி. நிஎ. (ஆ) "வீரீ பாராய் மெல்லென் பளிங்கினுல் விளங்குகின்ற,மாரணு மருளசெய்த மாளிகை மற்றேர் சோதி, சேர்தலுந் தெரிவ வன்றேற் றெரிநில தெரிந்த காட்சி, நீரினு லியன்ற வென்ன நிழலெழு கின்ற நீர்மை" கம்ப. இலங்கைகாண். சஅ. (இ) "மீன வாவிபோல் வியன்படி கத்தினுல் விளங்குந், தான மீமிசை" கந்த. திருநகர. நூக. (ஈ) "சூழ்ந்த பேரொளி துளும்பிய நிலனீ ரென்னுந், தாழ்ந்த வத்துகி லிடை வயிற் றழீஇயினன் பளிங்கு, போழ்ந்தி யற்றிய நிலனெனப் பூம்புன லிடைப்போய், வீழ்ந்த னன்பெரு வேத்தவை முகிழ்நகை விளைப்ப" பாகவதம். (உ) சிசுபாலனைக்கொன்ற. ககஅ. (ஊ) " மணியிற் றிகழ்

துணிகய (க) நிழனெக்கித் துதைபுடன்(உ)வண்டார்ப்ப
மணிபோல வரும்பூழ்த்து(ங)மரமெல்லா மலர்வேயக்
(ச)காதலர்ப் புணர்ந்தவர் (ஞ)கவவுக்கை நெகிழாது
தாதவிழ் வேனிலோ வந்தன்று வாரார்நம்
போதெழி லுண்கண் புலம்ப நீத்தவர்

எ - து: தான் விளைவித்தலின்(கூ)வேற்றுநாட்டிற்கு இல்லாத வீறமைந்த உலகிடத்து அகற்சியையுடைய அழகைத் தான் காணவேண்டி யாறு கண்களே விழித்துப்பார்த்தன்போலப் பக்கத்தினின்ற குளங்கள் நீர்நிறைந்து பூக்களால் அழகுபெற, * பளிக்குமணியையொக்கும் கண்ணுடிக்குள்ளே பவழம் அழுந்தப்பட்டவை தோன்றினாற்போல அரும்பவிழ்கின்ற(எ) முருக்கினுடைய இதழ்கள் அழகையுடைய குளங்களிலே காம்பினின்றும் கழன்றுவீழ, தெளிந்த குளங்களின் நிழலிலே தம்மையுந் தாம் ஊதும் பூவையுங் கண்டு அவ்விடத்தே நெருங்கி வண்டுகள் சேர ஆரவாரிக்கும்படியாக, கரையினின்ற மரங்களெல்லாம் அரும்புகள் அலர்ந்து பலமணிகளைச் சூடினாற்போலப் பூக்களைச் சூட; எம்மைப்போலாது காதலையுடைய கண்ணவைக்கூடினவருடைய அகத்திடத்திலையுடைய கையை நெகிழாதே தாதையவிழ்க்கும் இளவேனிலோ வந்தது; பூவினது அழகையுடைய மையுண்கண் வருந்த நம்மைக்கைவிட்டவர் வாராராயினர் ; எ - று.

ஓகாரம் பிரிநிலை.

இது தலைவி.

தரு நூல்போல்" குறள். கஉஎங. (ஊ) "பளிங்குபுறத் தெறிந்த பவளப் பாவைபோ, னிளிங்கொடி தோன்றுமால்" மணி. சா: கஉச - ஞி.

க. தும்பி செவியுணர் வெழுந்த நாலுணர் வுடையதென்பதும், வண்டும் தேனீயும் குளவியு முதலாயின அதன் கிளையென்பதும் இங்கே அறியற்பாலன. தொல். மரபு. சூ. ஙக. பேர.

உ. வண்டு ஒலித்தலே ஆர்த்தலென்பதும் மரபு: கலி. ஈ0: ங, ஙஉ: கூ, ஙச: சு, ஙசு: ஙு, கூஉ:*சo, கஅ: கக, கஙக: கூ.

ங. (அ) "கோழிணை ரெதிரிய மரத்த கலினிக், காடணி கொண்ட காண்டகு பொழுதின்" (ஆ) "மரனேமுற்ற காமர்வேணில்" அகம்: சக: அ - கூ, ஙகள: கச.

ச. "காதலம் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமல்" சிலப். த: கூக.

ஞ. "கவவுக்கை ஞெகிழ்ந்தனனுய்" சிலப். (எ) நஉ: ஞி.

கூ. (அ) "பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங் கேட்டா, லாற்ற வினைவது நாடி" (ஆ) "நாடென்ப நாடா வளத்தன நாடல்ல, நாட வளந்தரு நாடு" குறள். எஙஉ, எஙக.

எ. "பொங்கழன் முருக்கி னெண்குரன் மாந்திச். சிதர் சிதர்த் துகுத்த செவ்வி வேனில்" அகம். உஎஎ.

(பிரதிபேதம்) * பளிங்குமணியை.

கo (க)எரியுரு வுறழ விலவ மலரப்
(உ)பொரியுரு வுறழப் புன்குபூ வுதிரப்
புதுமலர்க் (ஙு)கோங்கம் பொன்னெனத் தாதுழ்ப்பத்
தமியார்ப் புறத்தெறிந் தெள்ளி முணியவர்
தார்ப்பது போலும் *பொழுதென் ணணிநலம்
போர்ப்பது போலும் பசப்பு

எ - து: இவ்விளவேனிற்பொழுது நெருப்பினுருவையொப்ப இலவும் பூப்ப, பொரியின் உருவை யொப்பப் புன்குகள் பூஉதிர, புதிய மலர்களை யுடைய கோங்கம் பொன்னென்னும்படி தாதை அலர, நாம் வெறுக்கும்படி வந்து தனித்திருப்பாரை அகத்திடாது புறத்தே தள்ளி இகழ்ந்து இவ்வூர் அலர் தூற்றுங் கொடுமையையொக்கும்; அது கண்டு பசப்பு எனது அழகை யுடைய நலத்தை மறைப்பதுபோல இராநின்றது ; †எ - று.

க. "எரியுருவுறழ .விலவமலர" என்பது (அ) உருவுவமத்தின்கண் உரியவாய்பாடன்றி, பொதுச்சூத்திரத்தான் வருமெனப்பட்ட வாய் பாட்டின் உறழவென்பது அருகிவந்ததற்கும் (தொல். உவம சூ. கசு. ரீப) (ஆ) உருட்டிவண்ணத்திற்கும் (தொல். செய். சூ. உஙூ. பே.) மேற்கோள். (இ) "எரிப்பூ விலவந் தாழ்கழி பன்மலர்" ஐங்குறு. ஙுசுஅ. (ஈ)"இலவ மேறிய கலவ மஞ்ஞை,யெரிபுகு மகளி மே ய்க்கும்" ஐங்குறு. இoஙு. (உ) "இலவத், தழலகைத் தன்ன வலம்புரினை யொண்பூ" அகம். உசஙு. (ஊ) "எரிநிறத் திலவம்" சிலப். (ரு) உகச. (எ)"எரிமலரிலவமும்" மணி. ஙு. ககசு. (ஏ) "ஒள்ளெரி யெழுந்த ஞாழ்படு கொழுமலர், முள்ளரை யிலவத்துள்" (ஐ) "எரிமலரிலவத்து" பெருங். (க) இஙு: கஎஎ; இச: கசஙூ.

உ. (அ) "பொரிப்பூம் புன்கின்" நற். க. (ஆ) ஐங்குறு. ஙுசஎ. (இ) "புன் கின் பூத்தாழ் வெண்மணல்... ..செந்நெல் வான்பொரி சிதறியன்ன" (ஈ) "பொரிப்பூம் புன்கொடி" குறுந். இஙு, ஙுசக. (உ) "பொரியெனப் புன்கலி ழகன்றுறை" அகம். ககசு; இ-க. (ஊ) "புன்கு பொரி மலரும் பூத்தண் பொழில்" தினைமொழி. கச. (எ) "பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கு" சிலப். கஉ: 'செம்பொன்' (ஏ) "புன்கம் பொரி யணைத்தவே" சீவக. ககசக.

ங. "நிலவுடைக் குருவாய்த்து நிற்பனபோற் பூவையெலாங், குலவியகோங் கும்பூத்தாதிற் குளித்தொளிருங் கவின்கண்டான்" காஞ்சி. ககரேற்று. உசo.

(பிரதிபேதம்) * பொழுதெண்ணி, † கோக்குமென்க.

கசு (க)கொந்து, நகுவனபோ னந்தின கொம்பு; *நைந்துள்ளி
(உ)யுகுவது போலுமென் னெஞ்சு; எள்ளித்
தொகுபுட ஞுடிவ போலு மயில்; கையி
லுகுவன போலும் வளை; (ங)என்கண்போ
லிகுபறல் வாரும் பருவத்தும் வாரார்
மிகுவது போலுமிந் நோய்

எ - து: பிரிந்த மகளிரை நகுதற்கு நங்காலம் வருகின்ற தில்லையே யென்றுசொந்திருந்து அதுவந்தபின்னர் நம்வருத்தங்கண்டெரிப்பனபோலக் கொம்புகள் பூ மிக்கன; அதனைக் கண்டு என்னெஞ்சம் வருந்தித் தளிவுரை

க. "கொந்து, நகுவனபோ னந்தின கொம்பு; நைந்துள்ளி, யுகுவது போலுமென் னெஞ்சு; எள்ளித், தொகுபுட ஞுடிவ போலு மயில்; கையி, லுகுவன போலும் வளை. இவை முச்சீரடியான் வந்தனவு நாற்சீரடியான் வந்தனவுமாய் நின்றவாறுணர்தற்கு 'நகுவன', 'உகுவது', 'தொகுபுடன்', 'உகுவன', எனத் தொடைக்குவடி படுத்துக் கூறவே அவற்றின் முன்னின்ற சொற்கள் வழியசை புணர்ந்த சொற்சீரடியாயவாறு காண்க. இவை யிடைநிலைப்பாட்டன்றிக் கொச்சகமாகலின் வரையறையின்றி, 'தொகுபுட ஞுடிவ போலு மயில்' எனநாற்சீரடியானும் வந்தது. இவை மேலெண்ணவும் படும். இவை கலிக்கண் வருங்கால் ஒத்தாழிசையினும் உறழ்கலியினும் முடுகியல் வாராமையும், அவற்றட்சொற்சீரடி வருங்காற் றனிச்சொல்லாயல்லது வாராமையுங் கொள்க." தொல். செய். சூ. கஉஈ. நச்.

உ. "'உகுவதுபோலு மென்னெஞ்சு; எள்ளித்,தொகுபுட ஞுடிவது போலு மயில்' என்பது வழியசை புணர்ந்த சொற்சீரடி; என்னை? எள்ளியென நின்ற சீரின் வழித் தொகுபினவந்த அசை உகுவதுபோலுமென்னும், தொடையொடு பொருந்தி, 'உகுவதுபோலு மென்னெஞ் செள்ளித், தொகுபுடன்' எனப் புணர்ந்துநின்றுழிப் போல்வதோர் சுவையமை செய்து நின்றமையின். கொச்சகம் இடை நிலைப்பாட்டெனப் படாமையின்'(தொகுபுடன்) ஆடிவது போலு மயில்',என நா[லடி](நீச்சீரடி) யாலும் வருவதாயிற்று. வரையறையின்மையின். இங்ஙனம் வந்தமையின் சொற்சீரடி மேல் எண்ணவும் படும். இவை கலிக்கண் வருங்கால் ஒத்தாழிசைக்கண் முடுகியலடிவாராதென்பதூஉம். சொற்சீரடி வருஞான்றுத் தனிச்சொல்லாகியன்றி வாராதென்பதூஉம் உறழ்கலிக்கண்ணும் முடுகியலடி உரித்தன் றென்பதூஉம் கொள்க" தொல். செய். சூ. கஉஈ. பே.

ஈ. "தனியறல் வாரும் பொழுதென வெய்ய, பனியறல் வாருமென் கண்" கலி. ஈக: கச - இ.

(பிரதிபேதம்)* இனைந்துள்ளி:

நினைந்து அழிவதுபோலே இராநிற்கும்; (க) மயில்கள் நம்மை இகழ்ந்து கால மன்றியும் சேரத் திரண்டு ஆடுவனபோலே இராநிற்கும்; நங் கையில் வளைகள் காம் காப்பவும் கழல்வனபோலே இராநிற்கும்; என் கண்போலே அறுநிலை யுடைய நீர் இற்று ஒழுகும் இளவேனிற்காலத்தும் தலைவர் வாரார்; ஆதலால் இக்நோய் இனி இங்நிலையினும் மிகுவதுபோல. இராநிற்கும்; எ - று.

உஉ (உ)நரம்பின் றீங்குர னிறக்குங் குழல்போ
(ஙூ)லிரங்கிசை (ச)மிஞிறெழு (ஞி) றும்பிதா தூதத்
(ஹ)தூதவர் *விடுதரார் துறப்பார்கொ (எ)னைதக
லிருங்குயி லாலு மதோ

எ-து: †நரம்பினது இனிய இசையைத் தானத்திலே நிறுத்தும் வங்கியம் போல, ஒலிக்கும் ஓசையையுடைய (அ)மிஞிறுமேடே தும்பி தாதை ஊதாநிற்க, நமக்கு ‡நோவுதகும்படியாகக் கரிய குயில்கள் கூவாநிற்கும்; இவ்வளவிலும் தலைவர் ஒருதூதாயினும் வரவிடாராய் நம்மைத் துறப்பாரோ துறவாரோ கூரும்; ||எ - று.

க. "களிமயில் குளிர்த் திடக்கால மன்றியும்" நைடதம். கான்புகு. க.

உ. "குழல்வழி நின்ற தியாழே" என்பது இங்கு அறியத்தக்கது.

ங. நச்சினார்க்கினியர் சுரும்பு, வண்டு, தேன், மிஞிறு இந்நான்கையும் தும்பியதுகிளையென்றுகூறி "இங்ஙிசை மிஞிறெழு தும்பிதா தூத" என்பதை அதற்கு மேற்கோள் காட்டுவர்; சீவக. அகஉ. அகங.

ச. "மின்னேர் பசலை மிஞிற்றுக்குரற் சீறியாழ்" புறம். நடஅ: உ.

ஞ. (அ) "தும்பி ... ...திங்குழலாம்பலி னினிய விமிரும்" ஐங். உகஞ. (ஆ) "குழலிசைத் தும்பி" அகம். உசஞ (இ) "இருந்தும்பி யின்குழலூதும் பொழுது" கார். கஞ. (ஈ) "குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட" (உ) "கொம்பர்த்தும்பி குழலிசை காட்ட" மணி. (ச) ங. (கக) நிள. (ஊ) "இருங்கட் டும்பி குழலாக" சீவக. உசுகக. (எ) "சோலைத் தும்பி மென்குழ லாக" கூடல. பூக்கொய். நச. (ஏ) "நறுந்தா தினுங் குழுஞ்சிறைத்தும்பி" தருக்கு. உங்க. (ஐ)* "நறுந்தா தூதுத் தும்பி" அகம். கஅ.

ஙூ. "தூதவர் ... ...அதோ" என்பது அதோ அசையாய் வருதற்கு மேற் கோள்; நன். இடை. சூ. உஉ மயிலை.

எ. 'அதோ' என்பது அசை நிலையாய் வருதற்கு (அ) "நோதக விருங்குயி லாலுமதோ" என்பது தொல். இடை. சூ. நக. சேனா. நச். சூ. நஅ. தெய். நன். இடை. சூ. உஉ. வி. இ; இ-வி. சூ. உஎஎ. மேற்கோள். (ஆ) புறனடை விதியான் நோவுதகவென்பது நோதகவாயிற்றென்பர், அடியார்க்கு நல்லார்; சிலப. (கக) கஎ.

அ. மிஞிறு, தேனீயென்பர், புறநானூற் றுரையாசிரியர்; புறம். உஉ: சூ.

(பிரதிபேதம்) * விடாராய், † நரம்பினினிய, ‡ நோவுதருபடியாக, || என்றுள்.

(க)நம்மை இம்மைப்பிறப்பினுள் துறப்பார்கொல்லென வாளாதே ஐயஞ் செய்தலின், இஃது ஐயஞ்செய்தல்.

அரோ, அசை.

இவை தாயின் விகற்பமாகிய தாழிசை.

எனவாங்கு, *ஆங்கசை.

இது தனிச்சொல்.

உள புரிந்துநீ எள்ளுங் குயிலேயு மவரையும் புலவாதி
நீவித †மூண்கணைய் ‡நெறிகூந்தல் பிணிவிட
(உ) நாள்வரை நிறுத்துத்தாஞ் சொல்லிய பொய்யன்றி
(ங) மாலைதாழ் வியன் மார்பர் துணைதந்தார்
(ச)காலுறழ் கடுந்திண்டேர் கடவினர் விரைந்தே

எ - து: அதுகேட்ட தோழி. என்று, மனம் வேறுபட்டு நீலப்பூப்போலும் மையுணகண்ணினையுடையாய்! நீ நம்மை இகழுங் குயிலையும் தலைவரையும் புலவாதேகொள்; தாம்வரும் நாளெல்லையை நம்நெஞ்சிலே நிறுத்திச்சொல்லிய கூற்றுக்கள் பொய்யல்லவாக மாலை தங்கின அகற்சியையுடைய மார்பினையுடையார் காற்றையொக்குங் கடிய திண்ணிய தேரை விரைந்து செலுத்தி நமது||நெறித்த (ங)கூந்தலைப் பின்னின பின்னல் விடும்படி—நாம் விரைதலை நமக்குத் தந்தார்காண் ×என்றாள்; எ - று.

(சு) நீலம், கடைக்குறைந்தது.

இது சுரிதகம்.

க. "தாதவர் ....அரோ" என்பதை ஐயஞ் செய்தல் என்னும் மெய்ப்பாட்டிற்கு மேற்கோள்காட்டி. (தொல். மெய்ப். சூ. உஉ;) இக்குறிப்பையும் எழுதினர், பேராசிரியர்; (இ - வி. நூலாசிரியரும் (இ - வி. சூ. நிஅ०.) இப்பகுதியை ஐயஞ்செய்தலுக்கு மேற்கோள் காட்டினர்.

உ. இவ்வடி கலி. ஈக-இல், உங-ஆவது அடியாகவும் வந்துள்ளது.

ங. "எழுறு கடுந் திண்டேர் கடவி, நாமமர் காதலர் துணை தந்தார் விரைந்தே" என்பது, கலி. உள: உநி - உசு.

ச. "வளியி னிகன்மிகுந் தேரும்" கலி. நி०: கநி.

ஞ. (அ) "சிறகுறுந் கூளுங் குரலுஞ் சென்று, பெறுகதின் செவ்வி பெருமதன் வந்தா, னறுமலர்க் கூந்த லுளணி பெறுகென" சீல்பி. உள: உகச-சு (ஆ) "தன்னவன் றணந்த காலைப், பூமலும் புனைத லின்றி" சீவக. கநிகஅ.

சு. "நீலுண் டெகிலிகை கடிப்ப"

(பிரதிபேதம்) * அசை, † உண்கண்ணைப். ‡ செறிகூந்தல் || செறிந்தகூந்தலை, ÷ தாம், × எனஆற்றுவித்தாள்.

இதனுல், தலேவிக்குப் புணர்வாகிய உவகை தோன்றிற்று.

இதனுள், முச்சீரடியும் நாற்சீரடியுமாய் நின்றவாறுணர்தற்கு 'நகுவன' 'புகுவது' 'தொகுபுடன்' 'உகுவன' 'இகுபறல்' எனத் தொடைச்சுவை கொடுத்துக்கூறவே, அவற்றிற்கு முன்னின்றன நொந்து என ஒழியணேயாகியும் நைந்துள்ளி, எள்ளி, கையில், என்கண்போலென வழியசை புணர்ந்தும் வந்த சொற்சீரடிகளும் 'தொகுபுடன் ஞெலிவு போலு மயில்' என நாற்சீரடியுமாய் வந்தன.

இது தரவும் தரவின்விகற்பமாகிய தாழிசையும் எனேயுறுப்புக்களும் பெற்று வந்த கொச்சகக் கலிப்பா. தரவின் விகற்பமாகிய தாழிசையையும் தரவின்பாற்படுத்து இதனே இடைநிலேப்பாட்டின்றிவந்த தரவினேக்கொச்சகக் கலிப்பா என்பாரும் உளர்.

"இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கி, னிலேக்குரி மரபி னிற்கவும் பெறுமே" என்னும் (க) சூத்திரத்துள் இரண்டனம் வரும் வெள்ளேக் கொச்சகத்துள் ஆசிரியவடி சிறிதுவருமென்றலின்; 'பொரியுரு வுறழப் புன்குபூ வுதிர' என ஆசிரியவடி வந்தது. (கூஉ)

(hச.) மன்னுயி ரேமுற மலர்ந்நாலம் புரவின்று
பன்னீராற் பாய்புனல் பரந்தாட்டி யிறந்தபிற்
சின்னீரா னெறல்வார †வகல்யாறு கவின்பெற
றுன்னெனின்று தமக்காற்றி முபன்றவ ரிறுதிக்கட்
பின்னெனின்று பெயர்த்தாற்றும் பீடிடை யாளர்போற்
பன்மலர் சினேயுகச் சுரும்பிமிர்ந்து வண்டார்ப்ப
வின்னமி ளிளவேனி லிறுத்தந்த பொழுதினுன்;

அ விரிகாஞ்சித் தாதாடி யிருங்குயில் விளிப்பவும்
பிரிவஞ்சா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவுங்
கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி
யெரிபொத்தி யென்னெஞ்சஞ் சுடுமாயி னெவன்செய்கோ;

கஉ பொறைதளர் கொம்பின்மேற் சிதரின மிறைகொள
நிறைதளரா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவு
முறைதளர்ந்த மன்னவன்கீழ்க் குடிபோலக் கலங்குபு
பொறைதளர்பு பனிவாருங் கண்ணுயி னெவன்செய்கோ;

கக தளையவிழ்பூஞ் சினேச்சுரும் பியாழ்போல விசைப்பவுங்
கொளைதளரா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவுங்
கிளையழிய வாழ்பவ னுக்கம்போற் புல்லென்று
வளையாளு நெகிழ்போடுத் தோளாயி னெவன்செய்கோ;

க. தொல். செய். கஉ

எனவாங்கு;

உக நின்னுண்ணெய் நீயுரைத் தலமர லெல்வாக்
மெண்ணிய நாள்வரை யிறவாது காதலர்
பண்ணிய மாண்பினர் புகுதந்தார்
கண்ணுறு பூசல் கைகளைந் தாங்கே.

இது பகுவங்கண்டே வன்புறையெதிரழிந்து ஆற்றுளாய தலைவிக்குத் தோழி அவன் வரவுணர்ந்து கழியுவகையாற் கூறியது.

இதன் பொருள்.

(க)மன்னுயி ரேமுற மலர் ஞாலம் புரவீன்று
பன்னீராற் (உ)பாய்புனல் பரந்தூட்டி (ங)யிறந்தபிற்
(ச)சின்னீரா னறல்வார †வகல்யாறு கணின்பெற

க. (அ) "சுரந்த காவிரி மரங்கொன் மலிநீர், மன்பதை புரக்கு நன்னுட்டுப் பொருநன்" புறம். சுஅ: கூ-கo;(ஆ)"சரயு வென்பது தாய்முலை யன்ன தில்,வுரவுநீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம்" கம்ப. பால். ஆற்று. கஉ.

உ. (அ) பாய்தலென்பது பரத்தலாகிய குறிப்புணர்த்து மென்பதற்குப் 'பாய்புனல்'.என்பது மேற்கோள்;" தொல்.உரி. சூ.சுஇ. சே;தெய்.(ஆ) பெயரெச்சவீற்றும்மை இடைச்சொல்லென்று கொள்ளப்படுமென்றும் பாயும் புனலென்பது பாய்புனலெனத் தொக்குழி வேற்றுமைப் பொருட்கண் உருபு பெயர்நிற்பத் தொக்கவாறு போல வினை நிற்ப உருபுதொகுதலாற் பாயுமென்பது வினையு முருபுமாகிய இரு நிலைமைத்தென்று கொள்கவென்றும் கூறுவர், தெய்; தொல். இடை. சூ. எ. 'எசசஞ்'.

ங. (அ)"அற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக்கா,றெற்றெனத் தெண்ணீர் படும்" (ஆ) "உறுபுனற் துல கூட்டி யறுமிடத்துங், கல்லூற் றுழியூறு மாறே போல்" நாலடி. கஇரீ; கஅடி. (இ) "பிள்ளை தைவரப் பெருகு பால் சொரிமுலைத் தாய்போன், மள்ளர் வேளிலின் மணற்றிடர் பிசைந்துகை வருட, வெள்ள நீரிரு மருங்குகால் வழிமிதக் தேறிப், பள்ள நீள்வயற் பருமடை யுடைப்பது பாலி" பெரிய. திருக்குறிப்பு. உஉ. (ஈ) "ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமென் னாளுமவ்வா, றாற்றுப் பெருக்கா லுலகூட்டும்" நல்வழி. கூ. (உ) "ஆறு பெருக்கற் றருந்திடர்தான் பட்டாலு, மூறலமை யாதோ வுலகாற்ற" நன்பாடல்.

ச. (அ)"அயிர்வரித்தறல் வார்ந்துமெய்யடியவ ரகம்போற்,செயிர றத்தவத் தெளிந்துசின் னீர்புடை யொழுக" திருவாலங்காப். ஆரஞ்சாத்து கஅ. (ஆ) சின்னீர்: இந்நூற்பக்கம். எஈ ச - ஆம் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) * கால்புனல். † அகன்யாறு.

(க)முன்னொன்று தமக்காற்றி முயன்றவ ரிறுதிக்கட்
(உ)பின்னொன்று பெயர்த்தாற்றும் பீடுடை யாளர்போற்
பன்மலர் சிதையுகச் (ங)சுரும்பிமிர்ந்து வண்டார்ப்ப
(ச)வின்னம ரிளவேனி லிறுத்தந்த *பொழுதினுள்

எ - து: அகன்ற யாறுகள் அகன்ற உலகிடத்துப் பெருமையையுடைய உயிர்களெல்லாம் உயிர்வாழும்படி பலவாகிய நீரோடுகால்களாலே † தம்மிடத்தே வந்து பரக்கும் நீரைத் ‡காம் எங்கும் பரந்து ஊட்டிப் பாதுகாத்தலே யுண்டாக்கி அந்நீர் வற்றியபின்பு சிலவாகிய நீரோடு கால்களாலே அறல் ஒழுக, அவ்வாறுகள் அழகுபெறும்படியாகத் தமக்கு முன்னே ஓர் உதவியைச்செய்து அவ்வுதவியிலே மூழுக்க முயன்றவருடையகேட்டிடத்தே பின்பு ஓர் உதவியை மீண்டு செய்யும் பெருமையையுடைய || தொழிலை ஆளுவாரைப்போலே, சுரும்புகளும் ஒலிக்கப்பட்டு வண்டுகளும் ஆர்க்கும்படியாக, அந்நீரை உண்ட கொம்புகளினின்றும் பலமலர்கள் ஆற்றிலே உகும்படி இனிமை பொருந்தின இளவேனில் வந்துவிட்ட பொழுதின்கண்ணே ; எ - று.

பன்னீர் சின்னீர் ஆகுபெயர். இது "தகுதியும் வழக்கும்"என்னும் (ரு) சூத்திரத்திற் கூறிய மரூஉ. "வல்லெழுத் தியற்கை யுறழத் தோன்றும்" (கூ) என்றதனிற் ரோன்றுமென்றதனால் அகரங் கெட லகரம் னகரமாய் வரு மொழியில் நகரம் " லன வெனவரூஉம் புள்ளி முன்னர்த், தஃ வெனவரிற் றனவா கும்மே" (எ) என்பதனால் னகரமாய்முடிந்தது.

இது தரவு.

க. (அ)"வேனில் வெயிற்குலர்ந்த மெய்வறுமை கண்டிரங்கி,வானின்வளஞ் சுரந்த வண்புயற்குத் - தானுடைய, தாதுமே தக்க மதுவுந் தடஞ்சினை யாற், போதுமீ தேந்தும் பொழில்" இ - வி. சூ. சுஙுசு. மேற்கோள். (ஆ) "நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி, யென்று தருங்கொ லெனவேண்டா-நின்று, தளரா வளர்தெங்கு காளுண்ட நீரைக், கலையாலே தான்றருத லால்" முதுமை. க.

உ. எடுத்தோதப்படாதவுரிசைசொற்களுள் பீடென்பது பெருமை குறித்து வருமென்பதற்கு, "பின்னொன்று பெயர்த் தாற்றும் பீடுடையாளர் போல்" என்பது மேற்கோள்; தொல். உரி. சூ. எக. 'அன்ன' தெய்.

ங. சுரும் பிமிர்தல்: கலி. சுடு: கசு, சுச: கஉ

ச. "இன்னின வேனில்வந்திறுத்ததென்பவே"பிரமோத்.பிரதோஷ. உஉ.

ஞ. தொல். இளவி. சூ. கஎ.

ட. தொல். உயிர்மயங்கு. சூ. கஙு.

எ. தொல். தொகை. சூ. எ.

(பிரதிபேதம்) * பொழுதின்கண், † தண்ணிடத்தே, ‡ தான், || அதொழிலை.

அ விரி(ங)காஞ்சித் தாதாடி யிருங்குயில் (உ)விளிப்பவும்
பிரிவஞ்சா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவுங்
(ஙு)கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி
(ச்)யெரிபொத்தி யென்னெஞ்சஞ் சுரிமீரயி னெவன்செய்கோ

எ - து: அலர்ந்த காஞ்சிப்பூவிற் றுதை அளைந்து கரிய குயில்கள் கூவா நிற்கவும் இக்காலத்தே பிரிந்துறைதற்கு அஞ்சாதவருடைய கொடுமையை யான் மறையாநிற்பேன்; அதனுற் பெற்றதென்? மறைப்பினும் சான்று பொய்த்தவன் வந்து தன்கீழே இருக்கப்பட்ட மரம்போல யான் அழகு கெடும்படி என்னெஞ்சு காமத்தீக்கொளுந்தி என்னைச்சுமையின் யான் அதற்கு என்செய்வேன்? எ - று.

க. (அ) "புன் காஞ்சித் தாதுதன் புரம்புதைய..... .....குயிறழுவ" (ஆ) "குறுத்தாட் குயிற்சேவல் கொழுங்காஞ்சித் தாதாடி" சீவக. சுசஅ, சுருஐ. (இ) "குயிற்குழாங்குடை காஞ்சியின் கோமளத் தாது" காஞ்சி. திருக்கண். உக.

உ. (அ) "விளித்தாலுங குயிலாயின்" (கலி. உஅ: அ) என்பதனையும் (ஆ) "தண்காஞ்சித் தாதாடித் தன்னிறங்கரந்ததனைக், கண்டாலு மடப் பெடை கிளியெனப்போய்க்கையகல, நுண்டேவி யிளஞ்சேவலுக்கோடு விளிபயிற்றித், தன்சிறகாற் பெடைதழுவத் தலைவந்த தினவேனில்" (சீவக. சுசசு) என்பதனையும் நோக்கி விளித்தலென்பதற்கு அழைத்தலென்று பொருள் கூறலுமாம். (இ) "கூடிப் புணர்ந்தீர் பிரியன்மி னீடிப், பிரிந்தீர் புணர்தம்மி னென்பன போல, வரும்பவிழ் பூஞ்சினை தோறு மிருங்குயி, லாலு தகவும் பொழுதிலுன்" கலி. கூஉ: சுக - சுச, என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ங. (அ) "அறிகரி பொய்த்த லான்றோக் கில்லே" நறுந். கசச. (ஆ) "சான்றவர் கையுண்டெ கூறுவர் மெய்" பழ. உசக. (இ) "கொடுங்கரி போ வாஞ்சசாம்" சிறுபஞ்ச. கஐ. (ஈ) "கைக்கரி யன்னவன் பக்கழி கண்டகர், மெய்க்குலம் வேரொடுக் துணித்து வீழ்த்தினை, மைக்கரு மனத்தொரு வஞ்சன் மாண்பிலன், பொய்க்கரி கூறிய கொடுஞ்சொல் போன்றவே" கம்ப. கரன்வதை. கஉச. (உ) "புலக்தெரி பொய்க்கரி புகலும் புன்கணர், குலங்களி னவிந்தனர் குரங்கி னெலென்றா" கம்ப. இங்கரர் வதை. ஙஅ. (ஊ) "மொய்த்த மீன்குல முதலற முருங்கின மொழியிற், பொய்த்த சான்றவன் குலமெனப் பொருகணை யெரிப்ப" கம்ப. வருணனை வழிவேண்டி. உஙி.(எ) "வஞ்சவினை செய்து நெடு மன்றில்வள ணுண்டகரி பொய்க்கு மறமார், நெஞ்சமுடை யோர்கள் குல மொத்தன ரரக்கர்" கம்ப. மூலபல. கசடி.

ச. (அ) "எரிபொத்துதலென்னும்வழக்கை", "பொத்திற்றுத்தீ" கலி. கசடி: ஙஅ. (ஆ) "கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து" புறம்.

"புல்லு மரனு மோரறி வினவே, பிறவு மூனவே யக்கிளைப் பிறப்பே." (க) இதனுட் (உ)பிற அறிவும் உளவென்று கூறினர்; அதனைப் பாவத்திற்கு அஞ்சி மரம் கவின்வாடிற்றென்றார்.

கஉ பொறைதளர் கொம்பின்மேற் (ங)சிதரின மிறைகொள
நிறை(ச) தளரா தவர்தீமை மறைப்பென்மன் *மறைப்பவு
(ஞ)முறைதளர்ந்த மன்னவன்கீழ்க் குடிபோலக் கலங்குபு
பொறைதளர்பு பனிவாருங் கண்ணுயி னெவன்செய்கோ

எ - து: பூவின்பாரத்தாற் றளர்ந்த கொம்பின்மேலே வண்டினுடைய நிரள் தங்குதல்கொள்ளாநிற்கவும் நிறையென்னுங் குணம் தளராதவருடைய கொடுமையை யான் மறையாநிற்பேன்; அதனாற் பெற்றதென் ? மறைப்பினும் நாடானும் முறைமை தளர்ந்த அரசன்கீழ் இருந்த குடிமக்களைப்போலக் கலங்காநின்று கண்கள் பொறுத்தலாற்றுமல் நீர் ஒழுகுமாயின் யான் அதற்கு என்செய்வேன் ; எ - று.

உசஎ: உ. (இ) "கனையெரி பொத்தி" சிலப். கச: கஉஉ ; மணி. உ: சஉ. (ஈ) "புகையழல்பொத்தி, நெஞ்சஞ் சுடுதலின்"சிலப். உங சஅ - கூ. (உ) "முளியெரிபொத்தி" (ஊ) "புகையெரி பொத்தி" (எ) "இகலெரி பொத்தி" மணி. கசு: உசு, கசு: உஎ. உ0: எஅ. (ஏ) 'கனல்பொத்தி' கம்ப. இரணியன். அச. என்பவற்றாலுணர்க.

க. தோல் மரபு. சூ. உஅ. இதற்கு இவ்வுரைகாரர் அங்கெழுதியிருக்கு முரை ஆராய்தற் பாலது.

உ. மரமுயி ரில்லை யென்பார், பிதற்ற லாயிற் பேய்க ளொன்றலாற் பேச லாமோ" சீவக. கசo0எ.

ங. (அ) "சிதர்சிதர்ந் துகுத்த செவ்வியேனில்(ஆ)''மலருண் வேட்கையிற் சிதர்சிதர்ந் துகுப்ப" அகம். உஎஎ: கஅ; ஙகஎ: எ. (இ) "சிதர்தொழிற் றும்பியொடு மதர்வண்டு மருட்ட" பெருங். (க) ஙங: உஅ. என்ப வற்றால், சிதறுதல் அல்லது கிளறுதலாகிய சிதர்தற்றொழில் பற்றி வண்டு சிதரெனப்பட்ட தென்று தெரிகிறது. (ஈ) "தொழிற்று வண்டி மிருங்கோதை" சீவக. கசுஅசு. என்பதன் ஐரையும் நோக்குக.

ச. தளர்தல் குலைதல். கலி. ஈச: கஎ: தப்புதல், சீவக. கசகo.

ஞ. (அ) "மண்குளிர் கொள்ளக் காக்கு மரபொழிந் தடசர் தங்கள், விண் குளிர் கொள்ள வோங்கும் வெண்குடை வெதும்பு மாயிற், கண்குளிர் கொள்ளப் பூக்குங் கடிகயத் தடமும் காவுந், தண்குளிர் கொள்ளு மேனுந் தாண்மிக வெதும்பு மண்றே."(ஆ)"தீவினம் படர்ந்து வேந்தன் செறவதே புரியுமாயிற், போவினம் படர்ந்து வாழும் புகலிட மின்மை யாலே, வேவினம் படர்ந்த சால் வேல்கையை வெருவிப்புல்வாய், மாவினம படர்ந்த தெல்லாம் வையகம் படருமன்றே." தணி. மந்திர.

கசு தலையவிழ்பூஞ் சினைச்(க)சுரும் பியாழ்போல விசைப்பவுங்
கொலைதளரா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவுங்
(உ)கிளையழிய வாழ்பவ னுக்கம்போற் புல்லென்று
வளையாணெ நெகிழ்போடுந் தோளாயி னெவன்செய்கோ

எ - து: முறுக்கு அவிழ்ந்த பூக்களையுடைய சினைபிடத்தே சுரும்பினம் யாழ்போலே ஒலியாநிற்கவும் கொண்டகோட்பாட்டினைக்குலையாதவருடைய தீமையை மறையாநிற்பேன்; அதனாற் பெற்றதென்? மறைப்பினும் சுற்றங் கெடவாழ்பவன் ஆக்கம் பொலிவழியுமாறுபோலப் பொலிவழிந்து தோள்கள் வளைகிடத்தலையாவாய் நெகிழ்ந்து கழலுமாயின் யான் அதற்கு என் செய்வேன்? எ - று.

கண் பனிவாரும், தோள் வளையோடுமெனச் சினைவினை முதன்மேல் நின்றது.

இவை மூன்றும் தாழிசை.

எனவாங்கு

எ - து: என்றுசொல்லி; எ - று.

ஆங்கு, அசை.

இது தனிச்சொல்.

உக நின்னுண்மெணப் நீயுரைத் தலமர லெல்லாநா
மெண்ணிய நாள்வரை யிறவா தகதலர்

உசு - உஎ. (இ) கோல்வளை யரசன் கீழ்வாழ் குடியென நடுங்க மாட்டி" உத்தாகோக. பார்ப்பதி. நடீ. என்பவையும், (ஈ) "ஆள்பவர் கலக்குற வலைபெற்ற நாடுபோல்" கலி. நி: கஉ. என்பதும் (உ) அதன் குறிப்பிலும் (ஊ) இந்நூற்பக்கம். கசநி: உ - ஆம் குறிப்பிலும் (எ) கசசு. க - ஆம் குறிப்பிலும் இவ்விடத்திற்குப் பொருந்துவனவும் இங்கே அறிதற்பாலன.

க. (அ) "வடிநரம் பிசைப்ப போல் .. ..சுரும்பார்ப்ப" கலி. நடீ: நஉ. (ஆ) "சுரும்பு நரம் பெனவார்ப்ப" வளையாபதி.

உ. "தன்னினந் தளர வண்ணந் தாங்குத றரும மென்றே, நன்னகர் பலவும் வாழ நயந்ததன் னிடத்தில் வாழ்வு, மன்னிய செல்வர் தம்பால் வளமிகக் கொடுத்துத் தன்பா, லெல்நகர் வளமுங் காட்டி யிருப்பதற் நகா நாளும்" விநாயக. திருநகர. நஉ. என்பதும் "நிறையவன் செல்வம் போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி" (கலி. கo: உ) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

பண்ணிய மாலினர் புகுதந்தார்
(க)கண்ணுறு பூசல் கைகளைந்தாங்கே

எ - து: கின் †நெஞ்சினேனையை நீகூறிச் சுழலாதேகொள். எடி!நாம் வருவ ரென எண்ணியிருந்தாளெல்லே கடவாமல், கண்உறுகின்றவருத்தத்தைத கை நீக்கினாற்போலக் காதலர் சமைத்த மாலினையுடையராய் வந்தார்காண் ‡எ-று.

இது சுரிதகம்.

இதனால், தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இஃது எழடித்தரவும் நான்கடித்தாழிசையும் தனிச்சொல்லும் நான் கடிச்சுரிதகமும் பெற்று வந்த ஒத்தாழிசைக்கலிப்பா. (நூநு)

(ஈடு.) படியிலான் செல்வம்போன் மரனந்த வச்செல்வம்
படியுண்பார் நுகர்ச்சிபோற் பல்சிகீ மிஞ்சிரர்ப்ப
மாபவண் மேனிபோற் றளிரீன வம்மேனித்
தாய சுணங்குபோற் றளிர்மிசைத் தாதுக
மலர்தாய பொழினண்ணி மணிநீர கயநிற்ப
வலர்தாய துறைநண்ணி யயிர்வரித் தறல்வார
நனியெள்ளுங் குயிலேனுக்கி யிணைபுகு நெஞ்சத்தாற்
றுறந்துள்ளார வரெனத் துணிகொள்ள லெல்லாநீ;

கூ வண்ணவண் டிமிர்ந்தாலு வைவைவா நுயரெக்கர்த்
தண்ணநுனி நறுமுல்லைத் தாதுண்ணும் பொழுதன்றோ
கண்ணிலா நீர்மலைக்கக் கவினாம் விடுத்தக்கா
லெண்ணுதா னமக்கவர் வருதுமென் றுரைத்ததை;

கக மலைய துருத்தியுண் மகிழ்துணைப் புணர்ந்தவர்
வில்லவன் விழவினுள் வீளையாடும் பொழுதன்றோ
வலனுக விணையென்று வணங்காம் விடுத்தக்கா
லொளியிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை;

கச நிலனுவிற் றிரிதரூஉ நீண்டாடக் கூடலார்
புலனுவிற் பிறந்தசொற் பிதிதுண்ணும் பொழுதன்றோ
பலநாடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்காற்
சுடரிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை;

க. (அ) "கண்பனி துடையினித் தோழி நீயே." (ஆ) "கண்ணுறு பொழுதிற் கைபோ லெய்தி, நும்மோர்க்கு நீதுணை யாகலு முளையே" (இ) "பனித்தகண்டுடைத்து" விநாயக. சிந்தாமணி. உ0உ.

(பிரதிபேதம்) * கலந்தாங்கே, † நெஞ்சினேயுகநீ, ‡ என உவகையாற்கூறினாள.

எனவாங்கு;

உக. உள்ளுதொறுடையுநின் னுயவுநோய்க் குயிர்ப்பாகி
யெள்ளறு காதல ரியைதந்தார் புள்ளியற்
காமர் கடுந்திண்டேர்ப் பொருப்பன்
வாய்மை யன்ன வைகலொடு புணர்ந்தே.

இது வற்புறுத்துந் தோழிக்குத் தலைவி இக்காலம் அல்லவோ அவர் வருதுமெனச் சொன்ன காலமென வன்புறையெதிரழிந்தாளை நீ துனி கொள்ளல் அவர் வந்தாரெனத் தலைவன் வாவுணர்ந்து தோழி ஆற்று வித்தது.

இதன் பொருள்.

(க)மடியிலான் செல்வம்போன் மரனந்த வச்செல்வம்
*படியுண்பார் நுகர்ச்சிபோற் பல்சினை மிகுநிழற்ப
(உ)மாயவண் மேனிபோற் றளிரீன வம்மேனித்
தாய சுணங்குபோற் றளிர்மிசைத் தாதுக
(ஈ)மலர்தாய பொழினண்ணி (சு)†மணிநீர கயநிற்ப
வலர்தாய தூறைநண்ணி யயிர்வரித் தறல்வார

க. (அ)சீர்வகையான்வருங்கலியடி தளைவிரவினுங் கடியப்படா வென்ப தற்கு "மடியிலான் செல்வம்போன் மரனந்த வச்செல்வம்" என்பது மேற்கோள். தொல். செய். சூ. சுக. நச். (ஆ) "அசைவி னேன்றூ ணசைவள னேத்தி"(இ) "நின்,நுரள்படு செல்வங் காண்டொறு மருள" புறம். கசஅ. உ. கசுக: கச-ஙு. (ரு) "ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா, வூக்க முடையா னுழை" (உ) "மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான், நூலய தெல்லா மொருங்கு" (ஊ) "முயற்சி திருவினை யாக்கும்" (எ) "மடிபிலான், நுளுளா டாமரையி னுள்" குறள். நுகூ, சுக0,சுகசு, சுகள. (ஏ) "ஊக்க வேந்த னுக்கம்போல, வீக்கங்கொண்டி" பெருங். (ஈ) நி: உ0-உக. (ஐ) "ஆக்கமிங் கொருவரா லனுக வேண்டு மே, லூக்கமுண் டாவரே லுறுவ ரன்னது, நீக்கமில் கொள்கையி னிற்ப ரேயெனின், மேக்குறு பெருந்திரு விசைவின் மேவுமால்" கந்த. .....(ஒ) "முயற்சி, யுலவுறப் புரியா வொருவனுக் கெங்ங னுற்றிடுஞ் செல்வம்" தருசேலோ. மேல்கடல். கசள.

உ. • கலி. உக: எ-அ-ஆம் அடிகளையும் அவற்றின் குறிப்பையும் பார்க்க.

ங. "அணிமலர்ப் பூம்பொழி லதனுள், வண்ண மாச்சுனை மாநீர் மணி தெளித்தனையது" சீவக. கஙுசு.

ச. (அ) "மணிநீரும்" குறள். எசஉ. (ஆ)"மணிதெளித்தனைய நீர்" நைட. புனல். க. (இ) "மணிதெளித் தனைய வான்புனற் படத்தின்" காசி.

(பிரதிபேதம்) * படியுண்பா னுகர்ச்சி, † மணிநீர்க் கயம்,

ணி(க)யெள்ளுங் குயிலேக்கி யினைபுகு நெஞ்சத்தாற்
(உ)றுறந்துள்ளா ரவரெனத் துணிகொள்ள லெல்லாநீ

எ - து: ஏடி, நீ உள்ளம் மடித்திருத்தலில்லாதவன் செல்வம் பெருகு மாறுபோல மாங்கள் பூப் பெருக்க, அங்ஙனம் முயன்றுபெற்ற செல்வத்தைத் தான் வருந்தாமற் படிபெற்று உண்பா ரது நுகர்ச்சிபோல அம்மரங்களிற் பல கொம்புகளிலேதேனையுண்டு மிஞ்றுகள் ஆரவாரிப்ப,கரியநிறத்தையுடைய்வண் மேனிபோலத் தளிரை ஈன, அந்நிறத்திற் பரந்த சுணங்குபோல அந்தத் தளிரின்மேலே தாது வீழ, அந்த மலர்பரந்த சோலையை அணுகிப் பளிங்கு போலும் நீர்களையுடையவாகிய குளங்கள் வற்றாது நிற்ப, பூப்பரந்த துறை களையணுகி நுண்மணலைக் கோலஞ்செய்து அறுதியையுடைய நீர் ஒழுக இவற்றின்மேலே தான் மொழிக்குத் தோற்றிருந்த,பகையாற்பிரிந்திருந்தாரை மிக இகழுங் குயிலைப் பார்த்து வருந்திக் கெடுகின்ற நெஞ்சத்தோடே அவர் நம்மைத் துறந்து இனி நினையாரென்று கருதி வெறுப்புக்கொள்ளாதே ; கொள்; எ - று.

இது தரவு.

விஷ்ணு. கு. (ஈ) " சுடர்மணி தெளித்ததன்ன, மென்புனற்றடம் " உத்தரகோச. களசக்கர. எ. (உ) "எறிக்கும் படிகத் திரடெளித்தா லெனநின் றிலங்கித் தன்பெயரைக், குறிக்குந் தடந்தீம் புனலாடி" (ஊ) "ஈர்ந்தநுண பளிங்கெனத் தெளிந்த, வந்தணீர்" (எ) "மணி தெளித்தனைய மாநீர்த்தக் குளம்" கீகாழி. பிரமபு. உஉ; சந்திரன். எ; சேடனுங். உறு.

க. "எள்ளுங் குயிலேபு மவரையும்புலவாதி" கலி. கூஉ: உஎ.

உ. (அ)"துறந்துள்ளாரவரெனத் துணிகொள்ளலெல்லாநீ" என்பது விளி யேற்கும் என்று எடுத்தோதாத ஈற்றுள் ஆகாரஈறு ஏடி என்ற விளி யேற்று வருதற்கு மேற்கோள். தொல். விளி. சூ. கஉ. நச். (ஆ) "துணிகொள்ள லெல்லாநீ" என்பதனை, "எல்லாள்" என்பது ஈறு கெட்டு "எல்லா" எனநின்று விளியேற்றற்கு மேற்கோள் காட்டினர்; மயிலை. வி. இரா. நன். பெயரியல். சூ. ஙக. (இ) " னகாரவீற் றுயர்பெயர் ஈறழிந்துவிளியேற்குமென்னும்நன்னூற்கருத்தை மாற்றி, காம் செய்த சூத்திரத்தினுரையில் "துறந்துள்ளா ரவரெனத் துணி கொள்ள லெல்லாநீயென ஈறழிந்தும் விளியேற்கும் என்பாரும் உளராலோவெனின், அது படர்க்கைப் பெயராகாது தோழிமுன் னிலைப் பெயராயே தோழீ என்னும் பொருட்டாய் நிற்பதொன்றாக லின் ஈண்டைக்கு ஏலாதென்க" என்பர். இ - வி. நூலாசிரியர். இ - வி. சூ. உகo.

கூ. (க)வண்ணவண் டிமிர்ந்தாஞ வையைவா ருயரெக்கர்த்
(உ)தண்ணருவி நறுமுல்லைத் தாதுண்ணும் போழுதன்றே
கண்ணிலா நீர்மல்கக் கவலிநாம் விடுத்தக்கா
லொண்ணுதா னமக்கவர் வருதுமென் றுரைத்ததை

எ - து: ஒள்ளிய நுதலினையுடையாய்! நாம் நிறுத்தினவளவில் நில்லா வாய்க் கண் நீர்மல்க முயங்கி விடுக்க, அவர் நமக்கு வருவேமென்று உரைத்த காலம், நிறத்தையுடைய வண்டுகள் ஆரவாரித்து, இன்பம் அமையாத வையையாற்றில் ஒழுங்குபட்ட உயர்ந்த இடமெனலிடத்துக் குளிர்ந்த அருவிநீரோலே வளர்ந்த நறிய முல்லைப்பூவிற் நாதையுண்ணும் இவ்விளவேனிற் காலமல்லவோ? எ - று.

விடுத்தக்கால், காலீற்றுவினையெச்சம்.

கங மல்கிய நருத்தியுண் (ங)மகிழ்நுணைப் புணர்ந்தவர்
(ச)வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதன்றே
(டு)வலஞக விடையெற்று வணங்கிநாம் விடுத்தக்கா
லொளியிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை

எ - து: ஒளியிழாய்; நீர் எடுத்துக்கொண்ட காரியம் வெற்றியுண்டாவதாகவென்று கூறித் தொழுது நாம் விடுக்க, அவர் நமக்கு வருவேமென்று உரைத்த காலம், பெருகியகாலத்து நீர் நிறைந்த ஆற்றிடைக்குறையிலே அவர் தம்மை மகிழும் பரத்தையரைக்கூடி, காமனுக்குரிகழ்த்துகின்ற விழாவிடத்தே அவருடனேவிளையாடும் இவ்விளவேனிறகாலமல்லவோ? எ - று.

க. "கமழ்தா நுதும், வண்ணவண் டிமிர்குரல் பண்ணைபோன் றனவே" பரி. கச: நூசு.

உ. "தண்ணருவி நறுமுல்லை" கலி. நூஉ: ககூ.

ங. "உறலியா மொளிவாட வுயர்ந்தவன் விழவினுள், விறலிழை யவரோடு விளையாடு வான்மன்னே" கலி. நூ0: கங-சு.

ச. (அ) 'சிலைவலான்' கலி. கசஙூ: நூசு. (ஆ) "திருமலி கருப்பு வெஞ்சிச் சிலையிலு லுலக மெல்லாம், பொருதுசெ கோன டாத்திப் புகழ் விளையேக வீரன்"

ஞ. (அ)"வலஞக... ...நுரைத்ததை" என்பது காலீற்று வினையெச்சம் பிற வினைகொண்டு முடிந்ததற்கு மேற்கோள்; தொல். வினை. சூ. நூஞ. நச். இ-வி. சூ. உசஎ. (ஆ) "வலஞக .....விடுத்தக்கால்" என்பது காலீறு இறந்த காலம்பற்றி வருதற்கு மேற்கோள்; தொல். வினை. சூ.நூஉ. சே. சூ.ஙக. கல். சூ. நூஉ. நச். இ-வி. சூ. உசக.

கள (க)*நிலனுயிற் றிரிதருஉ நீண்(உ)மாடக் கூடலார்
†புலனுயிற் பிரிந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றே
(ங)பலநாடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்காற்
‡சுடர்நிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை

எ - து: வினங்குகின்ற இழையினையுடையாய்! இறந்து படுவேமோ ஆற்றியிருப்பேமோவென்று பலவற்றையும் ஆராயும் நெஞ்சினையுடைத்தாய் நாம் வருந்தி விடுக்க, அவர் நமக்கு வருவேமென்று உரைத்த காலம், நிலத்தி லுள்ளார் ஈவிலே வழங்கும் நீண்ட மாடங்களையுடைய மதுரையிலுள்ளார் அறிவினையுடைய சான்றோர் நாவிற் பிறந்த கவிகளின் புதுமையைக் கொண் டாடும் இவ்வினவேனிற்காலமல்லவோ? எ - று.

"வேந்துறு தொழிலே யாண்டின தகமே" (சு) என்பதனுன் இது பின் பனியிற் பிரிந்து இளவேனிலுள் வருதல்குறித்தலின் இருதிங்களிடையிட்டது.

இவை மூன்றும், தாழிசை.

எனவாங்கு

எ - து: எனச்சொல்லி, எ - று.

ஆங்கு, அசை,

இது தனிச்சொல்.

உஉ உள்ளுதொ றுடையுநின் னுயவுநோய்க் குயிர்ப்பாகி
||யெள்ளறு காதல ரியைதந்தார் புள்ளியற்

க. "உரைவாய நகர்" என்பதற்கு உரையிடத் தனவாகிய நகர் என்று பொருள்கூறி "நிலனுயிற்றிரிதருஉம்" என்னும் பகுதியை மேற்கோள் காட்டினர், நச; சீவக. உருருஅ.

உ. (அ) "மாடமலி மறுகிற் கூடற் குடவயின்" முருது. எக. (ஆ) "மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்" மது. சஉக. (இ) "நீண்மாடக் கூடல்" பரி. உ0: கo. (ஈ)"மாடமலி மறுகிற் கூட லாங்கண்" அகம். நசசு: உ0; (உ) "மாட மதுரையும்" புறம். நஉ: ஙி. (ஊ) "மாடமதுரை புரந்தனன்" (எ) "மாட மதுரையும்" (ஏ) "மாடமதுரை யகத்துச சென்று" (ஐ) "மாட மதுரை மாநகர் புருகென" சீலப். பதிகம்: உ0, அ: ரூ, கூ: எசு. கஙி: கநஉ. (ஒ) "மதிமலி புரிசை மாடக் கூடற், பதியிசை" பதிற்றுப்.

ஙி. "பலரினான் றினையும் வைத னெஞ்சின்" கலி. கஉசு. ககூ.

சு. தொல். கற்பி.சூ. சஅ. இதனுரையிலும் இக்குறிப்புடன்இச்செய்திக்கே "நிலனுயிற் றிரிதருஉம்" எனனும் இத்தாழிசை மேற்கோள்.

பிரதிபேதம்) * நிலாவில், † புலாவில், ‡சுடர்தலால், || எள்ளுறு.

காமர் கடுந்திண்டேர்ப் (க)பொருப்பன்
(உ)வாய்மை யன்ன வைகலொடு புணர்ந்தே.

எ - து: தம்மை நினைக்கும் பொழுதெல்லாம் நெஞ்சழியும் நினது வலுத் தத்தையுடைய காமநோய்க்கு இனைப்பாறுதலாகிப் பறவையினது பறத்தற் றன்மையையுடைத்தாகிய விருப்பத்தையுடைய கடிய திண்ணிய தேரை யுடைய பொதியின்மலையினையுடைய பாண்டியனுடைய தப்பாத மொழியை யொத்த குறித்த *எல்லைதப்பாத நாளோடே கூடி நம்மை * இகழ்ந்திருத்தல் நீங்கின காதலர் நம்மைக்கூடுதலைத் தந்தார்; †எ-று.

இது சுரிதகம்.

இதனால், தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இஃது எட்டடித்தாவும் நான்கடித்தாழிசையும் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (கூ)

(ஈ கூ.) கொடுமிட ஞ்சிலான் முர்போன் மராத்து
நெடுமிசைச் சூழு மயிலாலுஞ் சீர
வடிநரம் பிசைப்பபோல் வண்டொடு சுரும்பார்ப்பத்
தொடிமகண் முரற்சிபோற் றும்பிவந் நிமிர்தர
நு வியனெழீஇ யவைபோல வெவ்வாயு மிம்மெனக்
கபனணி பொதும்பருட் கடிமலர்த் தேனூத
மலராய்ந்து வயின்வயின் வினிப்பபோன் மரனூழ்ப்ப
விருங்குயி லாலப் பெருந்துறை கணிஞ்பெறக்
குழவி வேனில் விழவெதிர் கொள்ளுஞ்

க. பொருப் பென்னும் பெயர்பொதியின் மலைக்குப் பின்று வருதலை, (அ) "வரைத்தா முருப்பப் பொருப்பிற் பொருந" மது. சூஉ. (ஆ) "திண் டேர்ச் செழியன் பொருப்பிற் கவாஅன்" (இ) "பலர் புகழ்திருவிற் பசும்பூட்பாண்டிய,னணங்குடையுயர்நிலைப்பொருப்பிற்கவான்" அகம். கஙஉ: கச. ஙஙஅ. நி - சு. (ஈ) "வகையமை தண்டாரான் கோ யர் பொருப்பின்மேல்" (உ)"சினையலர் வேம்பின் பொருப்பன்" கலி. நிஉ: கசு, கூஉ: உஎ (ஊ) "பூண்டாழ் மார்பிற் பொருப்பிற் கோமான், பாண்டியன்" (தொல். அகத். சூ. நிச. மேற்கோள்.) (எ) "தென்ன லுயர்பொருப்புந் தெய்வ வடமலையும்" பெரியதிருமடல். சு. (ஏ) "பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து" வில்லி. சிறப்புப். க. என்பவையும் வலியுறுத்தும்.

உ. (அ) "காலே யன்ன சீர் சால் வாய் மொழி" பதிற். உக: ச. (ஆ) "வாய்மை வயங்கிய வைகல்" பரி. உ: நிச. (இ) "வெயிலினு மெய்யன வுரைத்தன் மேயினுள்" கம்ப. காட்சி. ஙூ.

(பிரதிபேதம்) * இகழ்ந்திருக்க நீங்கின, † இனி ஆற்றென்றாள்

கo சீரார் செவ்வியும் வந்தன்று
வாரார் தோழிநங் காத லோரே;

கக பாஅய்ப் பாஅய்ப் பூசந்தன்று துதல்
சாஅய்ச் சாஅய்நெகிழ்ந்தன தோள்;

கச நனியறல் வாரும் பொழுதென வெய்ய
பனியறல் வாருமென் கண்;

கசு மலையிடைப் போயினர் வரணசைஇ நோயொடு
மூலையிடைக் கனலுமென் னெஞ்சு;

கஅ காதலிற் பிரிந்தார் கொல்லோ வறிதோர்
தூதொடு மறந்தார் கொல்லோ நோதகக்
காதலர் காதலுங் காண்பாங் கொல்லோ
துறந்தவ ராண்டாண் டுறைகுவர் கொல்லோ யாவது

நீளிடைப் படுதலு மொல்லும் யாழநின்
வாளிடைப் படுத்த வயங்கி ரோதி
நாளணி சிதைத்தலு முண்டென நயவந்து
கேள்வி யந்தணர் கடவும்
வேள்வி யாளியி னுயிர்க்குமென் னெஞ்சே.

இது காலங்கண்டு ஆற்றத தலைவியது நிலைமைகண்டு, ஆற்றத தோழி, தான் ஆற்றளாய் அவட்குக் கூறியது.

இதன் பொருள்.

(த)கொடுமிட (உ)ஞெகிலான் ரூர்போன் (ந)மராத்து
நெடுமிசைச் சூழு மயிலாலுஞ் சீர

க. (அ) "வீறன்மிகு வலியொலி பொலிபகழ், புழுதியி, னிறனுழு வலை வாய் நாஞ்சி லோனும்" பரி. கங: நஉ - ங. (ஆ) "வலியொத் தீயே வாலியோனே" புறம். இசு: கஉ. (இ) "விறல் வெள்ளையாயவனென் ரூள்" சிலப். கள. 'மாயவ' (ஈ) "புரவல வின்னுநும் பொன்னஞ் சூட்டெயிற், றிருநகர் தென்றலே சேணி லோங்குரு, விரிதிரைக் கடலையில் வீழ்தல் போன்றுமற், றெருருகுழை யவன்வலி யுணர்த்து கின்றதால்" பாகவதம். (கo) சாம்பன் மணம். இச. என்பவைகளும் பலதேவன் பலராமன் என்னும்போர்களும் இங்கே அறிதற்பாலன.

உ. (அ) "வலைஞாஞ்சி லொருகுழை யொருவனே." (ஆ) "வள்ளணி வலை நாஞ்சிலவை" பரி. க: இ, கஇ: இள. (இ) "மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும்" சிலப். கச: கூ.

ங. "மராஅ மயிலின் மயங்குபு தங்குங், குழாஅ மகளிர் குரலை காண்மின்" பெரும். (க) சo: கசஇ-சு.

வடி(க)கரம் பிசைப்பபோல் வண்டொடு சுரும்பார்ப்பத்
(உ)தொடிமகண் முரற்சிபோற் றும்பிவந் திறுத்த
இ வியனெழீஇ யவைபோல வெவ்வாயு மிம்மெனக்
கயணணி பொதும்பருட் கடிமலர்த் தேணுத
மலராய்ந்த வயின்வயின் விளிப்பபோன் மரணுழ்ப்ப
விருங்குயி லாலப் பெருந்துறை கவின்பெறக்
(ங) குழவி வேனில் விழவெதிர் கொள்ளுஞ்
கo சீரார் செவ்வியும் வந்தன்று
வாரார் தோழிநங் காத லோரே *

எ-து:-தோழீ! (சு)காமனுக்கு நிகழ்த்தும் விழவை எதிர்கொள்ளும் இள வேனிற் செவ்வியும், கொடிய வலியினையுடைய கலப்பைப்படையினையுடைய நம்பி மூத்தபிராணுடைய தழாய்மாலைபோல வெண்கடம்பின் உயர்ந்த இடத்தே ஆரவாரிக்கும் மயில்களோடுந் தங்குஞ்சிர்மையுடையவாய் அதிலே வண்டோடே சுரும்புகளும் வடித்த நரம்புகள் ஒலிப்பனபோல ஆரவாரிப்ப, தொடியினையுடைய விறலியர்(டு)கானத்திற்போலே தும்பிகள்வந்து ஒலித்தலை

க. யாழொலி வண்டினொலிக்கு உவமையாதலை, கலி. நஉ: ங-ஆம் அடியாலும் அதன்குறிப்பாலும் சுரும்பினொலிக்கு உவமையாதலை, கலி. நச: கசு-ஆம் அடியாலும் அதன் குறிப்பாலும் உணர்க.

உ. "சுரும்பார்க்குங் குரலினே டிருந்தும்பி யியைய பூத, வொருங்குட னிம்மென விமிர்தலிற் பாடலோ, டரும்பொருண் மரபின்மால் யாழ்கேளாக் கிடந்தான்போற், பெருங்கட றுயில்கொள்ளும் வண்டிமிர் நறுங்கானல்" கலி. கஉங: உ - இ.

ங. (அ) குழவியென்பது ஓரறி வுயிர்க்கன்றியும் பொழுதின்கண்வருதற்கு 'குழவிவேனில்' என்பது மேற்கோள்; தொல். மர. சூ. உச. பே. (ஆ) குழவியென்பது பருவத்திற்கு முரித்தென்பர், மயிலைநாதர்; நன். பொது. சூ. நஎ. மயிலை.

சு. (அ) "ஆஞ விருப்போ' டணியியற்பு காமற்கு, வேனில் விருந்தெதிர் கொண்டு" கலி. கஉ: சுஎ-சுஅ. (ஆ) "வானுயர் சோலை தோறு முருகுகாய் மடுத்த வீழுந், தேனெடு சுரும்பும் வண்டும் புதிதுண்டு தெவிட்டியார்ப்பக், காணமர் குழலி னூர்ந்து கணவர்பாற் புலவிதீர, வேனில் வேட் குலகம் யாவும் விழவயர்ந் திட்ட வன்றே". நைடதம். இள வேனில். இ.

ஞ. எருகளில் தாளத்திற்போலேயென்றும் ஓயுறும்படி உள்ளது. மூரற்கை யென்பதற்குத் தாளமென்ற பொருளும், மலை. நகo-ஆம் அடியிற் காணப்படுகின்றது. முரன்றபாட வெண்பதற்கு ஆளாபஞ்செய்து பாடும்படியென்றும் கீலத. ககஞக. முரன்றுற்கென்பதற்குப் பாடினுற்

(பிரதிபேதம்.) * பாஅய்.....தலை எ - து:

யுண்டாக்க, தேனினம் கயங்கள் சூழ்ந்த இளமரக்காவில் மணத்தையுடைய மலர்களே வாச்சியங்களே எழுப்பின இசைபோல எவ்விடமும் *இம்மென்னும் ஓசை †பிறக்கும்படியீரகச் சத்திக்க, மரங்கள் சூட உரியாரை ஆராய்ந்து நாற்றத் தாலே ‡தம்மிடத்தே தம்மிடத்தே அழைப்பனபோல மலர்கள் அலர, காரிய குயில்கள் கூவ, 'பெரிய கீர்த்துறைகள் பூவால் அழகுபெற வந்தது; இக்காலம் இங்ஙனம் முதிர்ந்த அளவிலும் நங் காதலரோ வாரார்; ||எ - று.

கஉ (க) பாஅய்ப் பாஅய்ப் ÷பசந்தன்று நுதல்
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன தோள்

எ - து: ஆதலால் எனது நுதல் பசப்பொழுகப் பரந்து பரந்து வந்து பின்னர் முழுக்கப்பசந்தே விட்டது; என் தோள்கள் ஒழுக மெலிந்து மெலிந்து வந்து பின்னர் மிகவும் மெலிந்தேவிட்டன; எ - று.

கச (உ)நனியறல் வாரும் பொழுதென வெய்ய
பனியறல் வாருமென் கண்

எ - து: என் கண்கள் இக்காலம் மிகவும் அறலொழுகுமென்று கருதி அதற்கெதிரே வெய்ய சீர் அழுதியுடைத்தாய் ஒழுகாநிற்கும்; எ - று.

கஎ மலையிடைப் போயினர் =வரனநசைஇ நோயொடு
முலையிடைக் கனலுமென் னெஞ்சு

எ-து: என்னெஞ்சு மலையிடத்தே போனவருடைய ×வரத்தை நச்சுகையினாலே தோன்றிய காமத்தீயாலே என்னுடைய முலையெல்லாம் காந்தாநிற்கும்; எ - று.

நசைஇயென்னுஞ் செய்தெனெச்சம் காரணகாரியப் பொருட்டாய்நின்றது. தோன்றியவென வருவிக்க அது நச்சின நோயெனப் பெயரெச்சமாகாது.

கஅ காதலிற் பிரிந்தார் கொல்லோ வறிதேர்
தூதொடு மறந்தார் கொல்லோ நோதகக்
காதலர் காதலுங் காண்பார் கொல்லோ
துறந்தவ (ங)ராண்டாண் டுறைகுவர் கொல்லோ பாவது

தென்னும் கீழக. உஐஙி. பொருள்காணப்படுமாலும் இப்பொருளே சிறந்ததாகத் தோற்றுதலாலும் காணமென்பீறு கொள்ளப்பட்டது.

க. பாய்தல் பரத்தல் என்னும் பொருளில் வருதற்கு "பாஅய்ப் பாஅய்ப் பசந்தன்றுநுதல்" என்பது மேற்கோள்; தக்கி. தாழிசை. ங. 'சத கோடி'

உ. "என் கண்பாலுறல் வாரும் பருவத்தும் வாரார், மிகுவது போலுமிச் சோய்" கலி. ஙஉ: கக - உக.

ங. "ஆண்டாண் டுறைதலு மறிந்த வாறே" முருகு. உச்க.

(பிரதிபேதம்) * நிம்மென்னும். † பிறசூட டியாக மரங்கள, ‡ தன்னிடத்தே தன்னிடத்தே, || ஆதலால் எனதுநுதல்.....பசந்தேவிட்டன, ÷ பசந்தாறு நுதல், = வாய்மையை, × தாரத்தை.

நீளிடைப் படுதலு மொல்லும் யாழநின்
(க)வாளிடைப் படுத்த வயங்கி ரோதி
நாளணி சிதைத்தலு முண்டென நயவந்து
கேள்வி யந்தணர் கடவும்
வேள்வி யாவியி னுயிர்க்குமென் னெஞ்சே

எ-து: காதலர் நம்மிடத்துக் காதலின்று நீங்கினரோ? அன்றிக் காதலுண்டாயிருக்க ஒரு தூதொடு கூறி வரவிடும் வார்த்தையைச் சிறிது மறந்தாரோ? அவர் நம்மிடத்து நிகழ்த்துங் காதலையும் நாம் இறந்துபடாமலிருந்து காண்பேமோ? நம்மை இங்ஙனந் துறந்தவர் அவ்விடங்களிலே அவ்விடங்களிலே இருந்தே விடுவரோ? இவற்றுண் முடியுங் காரியம் எதுதானென்று தலைவி கூற, அதுகேட்டதோழி, (உ)புணர்ந்தவர் சேயிடத்தே பிரிந்திருத்தலும் உலகத்துக்குப் பொருந்தும். அவர் வருவதற்கு முன்பே கதிரிகை இடையிட்ட விளங்குகின்ற நெய்த்த ஒதியினையுடையாய்! என் நெஞ்சு அவர் குறித்தகாள் வந்து நின்னழகைக் கெடுத்தலுமுண்டென்று கருதி நூற்கேள்வியினையுடைய அந்தணர் விருப்பம் வந்து செலுத்தும் யாகத்திடத்துப் புகைபோலே நெட்டியிர்ப்புக்கொள்ளாநிற்கும்; இதுகாண் யானுறுகின்ற வருத்தமெனத் தானும் ஆற்றுளாய்க்கூறி ஆற்றுவித்தாள்; எ - று.

இது தோழி கூற்றிற் (ங) "பிறவும்" என்பதனுட் கொள்க.

இதனால், தோழிக்கும் தலைவிக்கும் சூழ்ச்சி தோன்றிற்று.

இது தாவின்கண்ணே 'செவ்வியும்வந்தன்று'என வழியசை புணர்ந்த சொற்சீரடியும் (ச) 'பாஅய்ப்பாஅய்ப் பசந்தன்று நுதல், சாஅய்ச்சாஅய் நெகிழ்ந்தன தோள்' என முட்டடியின்றிக் குறைவுசீர்த்தாகிய சொற்சீரடியும் வந்து கலிவெண்பாவின் வேறுபட்ட கொச்சகம். (ஙடு)

*பாலைக்கலி முற்றும்.

க. கலி: ஙஉ: க-ங, அடிகளையும் அவற்றின் குறிப்பையும் பார்க்க.

உ. "மகளிர், தோள்சேர்ந்த மாந்தர் துயர்கூர நீத்தலு,நீள்சுரம் போகியார் வல்லவர் தளித்தலு, மூழ்செய் திரவும் பகலும்போல் வேறுகி, வீழ்வார்கட் டோன்றுந் தகுமாற்ற ஞாலத்துள், வாழ்வார்கட் செல்லாம் வரும்." கலி. கசடு: கங - கஎ.

ங. தொல். கற். சூ. கூ.

ச. தொல். செய். கஙடு - ஆம் சூத்திரத்தினுரையில் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் இவ்வாறே கூறியிருக்கின்றனர்.

(பிரதிபேதம்) * பாலை முற்றும், நச்சினார்க்கினியார் கூறிய பாலை நிலத்தினுரை முடிந்தது.

உ

முருகக்கடவுள் துணை.

கலித்தொகை

மூலமும்

நச்சினார்க்கினியருரையும்.

இரண்டாவது குறிஞ்சிக்கலி.

(கூ-வி.) (க)கயமல ருண்கண்ணுய் காணு யொருவன்
வயமா னடித்தேர்வான் போலத் தோடைமாண்ட
(உ)கண்ணியன் வில்லன் வருமென்னே நோக்குபு
முன்னத்திற் காட்டுத லல்லது தானுற்ற

க. (அ) "இருவர்கண் டால்வரு மேதமென் றெண்ணி யெனக்கெதிரே, வருவர்வந் தாலுபசாரம் வாய்திற வார்தஞ்சை வாணன்வெற்பி,லொருவர் நஞ் சார வுழையக லார்தழை யுள்ளதெல்லாந், தருவர்வம் பார் மூலை யாயென்கொ லோசெயத் தக்கதுவே" தஞ்சை. கசள. (ஆ) "கயமல ருண்கண்ணுய் காணுய்நின் னேயர்" சிலப். கஉ: 'கயமலர்'.

உ. (அ) முற்றுத்திரிசொல் வினையெச்சமாய் வருதற்கு "கண்ணியன் வில்லன் வரும்" என்பது மேற்கோள்; தொல். எச்ச. சூ. கூக. சே. (ஆ) இதற்கு, 'கண்ணியனுய்த் தன் வில்லெனத் திவரும்' எனப் பொருளுங் கூறுவர். தெய்; தொல். எச்ச. சூ. நிஅ. 'வினையெஞ்சு'. (இ) "முற்றுச்சொல் திரிந்து எச்சமாமென்னுது எச்சமே முற்றுய்த்திரியுகென்று ஒதிற் பகும்இழுக்கு என்னையெனின், இருதிணை ஐம்பான் மூவிடத்திற்கும் பொதுவாகிய வினை நிகழ்ச்சியன்றே எச்சமாவன? அவை அவ்வாறன்றி முற்றுச்சொற்கு ஒதிய ஈற்றவாய் இருதிணையைம்பான் மூவிடமும் உணர்த்தலின் முற்றுச்சொல்லே எச்சமாய்த் திரிந்தன எனப்படும்; எச்சம் முற்றுய்த் திரிந்தனஎனப்படா; ஆதலான் அவ்வாறு ஒதினுரென்க. அவ்வாறன்றி வினைகோடன் மாத்திரத்தான்

நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னாளும்
பாயல் பெறேஎன் படர்கூர்ந் தவன்வயிற்
சேயேன்மன் யானுள் துயருழப்பே னுயிடைக்
(க)கண்ணின்று கூறுத லாற்ற னவனுயிற்
பெண்ணன் றுரைத்த னமக்காயி னின்னதுஉங்
கo (உ)காணுன் கழிதலு முண்டென் (ங)ரெருநாளென்
றேணெஞ்சிழ் புற்ற துயராற் றுணிதக்தோர்
நாணின்மை செய்தே னறுநுதா லேன
லினக்கிளி யாங்கடிந் தோம்பும் புனத்தய
லூசலூர்ந் தாட வொருஞான்று வந்தாணை

வினையெச்சமெனின், மாரீறும் வினையொடுமுடியும்வேற்றுமையும் பிறவும் வினையெச்சமாவான் செல்லுமாகலானும், அல்லதூஉம் 'கண்ணியன் வில்லன்' எனவரும் வினைக்குறிப் முற்றுய்த்(?)திரிதற்கு எற்பதோர் எச்சமின்மையானும் அஃதுஇலக்கணமன்றென்க. இஃது ஆசிரியர் தொல்காப்பியனுர்க்குங் கருத்தாதல் சேனவரையர ருரையா லுணர்க" இ - வி. சூ. உடுo.

க. (அ)கண்ணென்னும் பொருளாவது கண்ணென்னும்இடைச்சொல்லா லுணர்த்தப்படும் இடப்பொருண்மை என்றுகூறி,"கண்ணின்றுகூறுத லாற்ற னவனுயின்" என்பதை மேற்கோள் காட்டுவர், சேனவரையர்; தொல். வேற். சூ. உக. (ஆ) நச்சினர்க்கினியர் இச்சூத்திரவுரையில் இக்கருத்தை, மறுத்து, இப்பகுதியில் கண்ணென்பதற்கு என் கணின்றென என்னென்பதுதோன்றவெழுவாயாய்நின்றுகண்ணுருபு எற்றதென்று பொருள்கூறுவர். (இ) வேறுரையாசிரியரும் இவ்வாறே கூறுவர். தொல். வேற். சூ. உக. (ஈ) "'கண்ணின்றெருவர், குண னேயுங் கூறற்காரிதால்" நாலடி. நடுநூ. (உ) "கண்ணின்று கண்ணறச் சொல்லினும்" குறள். கஅச.

உ. ஆண்பாலின் வினைமுற்று வினையெச்சமானதற்கு "காணுன் கழிதலு முண்டென் றெருநாள்" என்பது மேற்கோள். நன். வினை. சூ. நஉ. இரா. மயிலை. இ-வி. சூ: உடுo. விருத்தியுரையிலும் இராமாநுசகாண் டிகையிலும் இலக்கணவிளக்கவுரையிலும் இது கூடியும் குறைந்தும் பிழைபட்டு வந்துள்ளது.

ங. தோழி தலைவியுறுப்பினைத் தன்னுறுப்பாகக் கூறப்பெறுமென்னும் வழு வமைதிக்கு "ஒருநாளென், றேணெஞ்சிழ்புற்ற துயராற் றுணிதந்து" என்பது மேற்கோள்; தொல். பொருளியல். சூ. உஎ. ங.

கரு (க)யைய சிறிதென்னை (உ)யுக்கி யெனக்கூறத்
தையா னன்றென் றவணூக்கக் கைகெஞ்சிழ்பு.
(ங)பொய்யாக வீழ்ந்தே னவன்மார்பின் (ச)வாயாச்செத்
(ஞ)தொய்யென வாங்கே யெடுத்தனன் கொண்டான்மேன்
மெய்யறியா தேன்பேர்ற் கிடந்தேன்மன் ஞயிடை
உ0 மெய்யறிந் (ஈ)தேற்றெழுவே ஞயின்மற் றெய்யென
வொண்குழாய் செல்கெனக் கூறி விடும்பண்பி

*வாங்க ணுடைய னவன்.

① இது "நாற்றமுந் தோற்றமு மொழக்கமு முண்டியுஞ், கெய்வினை மறைப்பினுஞ் சேலவினும் பயில்வினும், புணர்ச்சியேதிர்ப்பா டின்னுறுத்து வருஉ,முணர்ச்சியேழினுமுணர்ந்த பின்றை" (எ) தன்னை அவள் மறையாமை

க. (அ) 'ஐயிறிதென்னை யுக்கி' என்பது முன்னிலையிற்றுஇகரம் சிறு பான்மை ககரம்பெற்று வருமென்பதற்கும் (தொல். வினை. சூ. உசு. சே.) (ஆ) ககரம்பெற்ற இகரம் எவல்கண்ணியே நிற்குமென்பதற்கும், (தொல். வினை. சூ. உசு. நச்.) (இ) ககரம் சிறுபான்மை எதிர் காலங்காட்டுமென்பதற்கும். (இ-வி. சூ. சகூ.) (ஈ) இகரம் ககரமூர்ந்து எதிர்காலம் பற்றி எவற்பொருண்மைக்கண்வருமென்பதற்கும்: (இ-வி. சூ. உஙஅ.) மேற்கோள்.

உ. ஊக்குதல் ஆட்டுதல்;(அ)"தாணூக் கினனவ ணூசலை வந்தே" கலி. கஙக: சசு.(ஆ)"மடவோர்க்கியற்றியமாமணியூசல்,கடவணூக்குவதுகண்டுநகை யெய்தியும்" மணி. ககு: எங-எச. (இ) "தழைக்கயிற் ணூசல் விருப்புற் ணூக்கியும்" பெருங். (உ)கச: உஎ. (ஈ) "சோர்பனிமுகத்து மென்கால் சுழலவார் விசிறியூக்க" பூவாணூர். இந்திரனருச்சனை. கச.

ங. (அ)அறக்கழிவுடையனவற்றுள்,தொழிலேவிக்குப் படைத்து மொழித லுக்கு, "பொய்யாக வீழ்ந்தே னவன்மார்பின்" என்பது மேற்கோள்; தொல். பொருளியல். சூ. உச. நச்.

(ஆ) "அலங்கலங் குன்ற மன்ன னணிவரை யகல மூழ்கி, நலங்கெழு கலவைச் சாந்து நானமு மழித லோடு, மிலங்கொளி வயிரப் பைம்பூ ணிளமுலை வடுக்கண் டேங்கிப்,பொலங்கொடி நாணி ஞேடும் பொய்த் துயில் கூர்ந்தா னென்றே" நைடதம். மணம். சஉ.

ச. எடுத்தோதப்படாத உரிச்சொற்களுள் செத்தென்பது குறிப்புணர்த்தி வருதற்கு "வாயாச்செத், தொய்யென வாங்கேயெடுத்தனன்" என்பது மேற்கோள்; தொல். உரி. சூ. எக 'அன்ன' தெய்.

ஞ. "ஒய்யென" பொருந. கஞஉ; முல்லை. அங; அகம். அசு:உக, கசஞ: ஙூ.

சு. 'ஏற்றெழுதல்' கலி. கஉ: அ-ஆம் அடிக்குறிப்புப் பார்க்க.

எ. தொல். களா. சூ. உங.

(பிரதிபேதம்) * இன்கண், கன்கண்,

காணமாக "மேயினும் போயினும் வழிநிலை பிழையாது, பல் வேறு கவர்பொரு ளுட்டத்தான்" (க)தலைமகட்குத் தோழிகூறியது.

இதன் பொருள்.

* கயத்திடத்து நீலமலர்போலும் மையுண்கண்ணினையுடையாய்! யான் கூறுகின்றதனை நின் மனத்தான் ஆராய்ந்துபாராய், தனக்கு ஒப்பில்லாதான் வலியையுடைய யானைமுதலியவற்றின் அடியைத் † தேடிவான்போலே கட்டெண்மாட்சிமைப்பட்ட கண்ணியையுடையனும் வில்லையுடையனும்வரும்; அங்ஙனம் வந்து என்னைப் பார்த்துத் தான் உற்ற நோயை (உ)மிகவும் குறிப்பாலே யான் உணரக் காட்டுவதன்றிக் கூற்றுற் கூறனும்பப் பலகாலும் மீண்டும்போம்; அதுகண்டு அவனையன்றி அவனிடத்து மிகவும் உறவில்லாத யானும் அவன் என்செய்கின்றனென்னும் நினைவுமிக்குத் துயில்பெறேனும் வருத்தத்திலே விழுந்தழுந்துவேன்; அவ்விடத்து அவனுயிற் றன்குறையை நம்மெதிர்நின்று கூறுதலைச் செலுத்தான்; நமக்காயின் கின்வருத்தத்திற்கு யாமும் வருந்தினேமென்று கூறுதல் பெண்டன்மையன்று; இங்ஙனம் நின்ற இதனைச் சிறிது நெஞ்சால் ஆராயானும் இறந்துபடுதலுமுண்டாமென்று கருதி, இடையிலே ஒருநாளிலே என்றோள்கள் மெலிந்து யானுற்ற வருத்தத்தாலே துணியாததொன்றைத் துணிதலைச்செய்து ஒரு நாணமில்லாமையைச் செய்தேன்; அரிவையாதெனின், நறிய நுதலினையுடையாய், நினைப் புனங்களில் இனமாகிய கிளியைத் † விழாமல் ஓட்டி யாம் பாதுகாக்கும் புனத்துக்கு அயலிலிட்ட ஊசலே ஏறி ஆடாநிற்க, ஒருநாள் வந்தவனை ஐயனே, சிறிதுபொழுது என்னை ஊசலாட்டுவாயாகவெனச்சொல்ல, அவனும் அதற்குடம்பட்டுத் தையால், நீ கூறியது நன்றென்று ஊசலாட்டாநிற்க, அவன் மார்பின்கண்ணே கை நெகிழ்ந்து வீழ்ந்தேனாக அவன் கருதும்படி பொய்யுண்டாக வீழ்ந்தேன்; அதனை அவன் உண்மையாகக் ‡ கருதி, விரைய அப்பொழுதேயென்னையெடுத்து அணைத்துக்கொண்டான்; அவ்விடத்தே என்மெய்வருத்தத்தை யான் அறிந்து மயக்கம் நீங்கி எழுந்திருப்பேனுயின், பின்னைப் பிறர் அறிவரென்று கருதி விரைய ஒண்குழாய், நீபோவென்று கூறிவிடுங்குணத்தாலே நம்மேலேஒரு(ங)கண்ணோட்டமுடையனுயிருந்தான்; || அதனுலே அவன்மேலே மெய்ம்மறந்தேன்போலே கிடந்தேன்; இதுகாண்; எ - று.

க. தோல். கள. சூ. உங.

உ. "கண்ணெறி கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்க, ளென்ன பயனுமில" குறள். கசஂஂ.

ங. (அ) "கண்ணென்னும் கண்ணோட்டமில்லாத கண்" (ஆ) "கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம்" குறள். இஎங, இஎஇ. (இ) "கண்ணுக்குப் பூணை மணிப்பூண் கண்ணோட்ட மென்பதெல்லாக் கருணையன்றே" விக்கி. அருச்சுனன்றவ. சஙட.

(பிரதிபேதம்) * கயத்திடத்தின், † வீழாமல், ‡ கருதி அப்பொழுதே விரைய, || அதனுலேமெய்.

மேலென்றது அவன்மார்பிலென்னும் பொருட்டு.(க)''தானுற்ற நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னுளும்'' என்றது தலைவன் இளிவந்தொழுகுதல் * அக்காரணத்தான் யானுந் துயருழப்பே†னென்றலிற் பிறன்கட் டோன்றிய இளிவரல் பொருளாக அவலச்சுவை பிறந்தது.‡ (உ) 'முன்னத்திற் காட்டுத லல்லது' என்றது‖நிறையுடைமையென்னும் ஒப்புமை. 'பெண்ணன் றுரைத்த னமக்காயின்' என்பதும் அது.

இ-ள்.து || "இயல்" (ங) என்றதனுற் பன்னீரடியி னிகந்தும் தையானன் றெனத் தலைவிரவியும் வந்த கலிவெண்பா.

க. (அ) ''தானுற்ற...பன்னுளும்'' எனத் தலைமகன் இளிவந்தொழுகுவது காரணமாக, ''சேயேன் மன்.....ருழப்பேன்'' என்றமையின், இது பிறன்கட் டோன்றிய இளிவரல்பொருளாக அவலச் சுவை பிறந்தது. இது கருணையெனவும் படுமென்றனர் பேராசிரியரும்; தொல். மெய்ப். சூ. ங; (ஆ) இ - வி. நூலாரும் இதனைப் பின்பற்றுவர்; இ-வி. சூ. இஎஅ. (இ) 'இற்ற தென்னுவி' என்னுஞ்செய்யுளின் விசேட வுரையில் 'கண்கள் வெம்பனி யுகுத்த' என்பதற்கு''ஊடல் முழுதுந் தீராமை யின் வெம்பனியாயிற்று .....(தலைமகன்) அடியில் வணங்கிய பின்னும் ஊடல் தீராது அழுதாளென்றல் கற்பிற்குப்பொருந்தாது. 'இளிவே யிழிவே' என்னுஞ் சூத்திரத்தில் அழுகையாவது அவலமும் கருணையு மாதலின், ''கயமலருண கண்ணுய்' என்னுங் கலியில் 'தானுற்ற ..... யானுந்துயருழப்பேன்' என்றவழி, பிறன்கட்டோன்றிய இளிவரல் பொருளாக அவலந் தோன்றிநிற்பால,இதனையும் பிறன்கட்டோன் றிய இளிவரல் பொருளாகப் பிறந்த கருணையென்றுகொள்க; வணங்கு தல்,அவற்கு இளிவரவு; அதனுற் கருணை பிறந்தது. அழுகை ஈண்டுக் கருணை,இதனுன் ஊடறீர்க்கருதினுளாம்" என்பர், நச; சீவக. உ0அ.

உ. ''''கண்ணியன் வில்லன் வருமென்னை நோக்குபு,முன்னத்திற் காட்டுத லல்லது தானுற்ற, நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னுளும். பாயல் பெறேனென் படர்கூர்ந்து' என்புழி முன்னத்திற்காட்டுதலல்லது தானுரையானென்பது தலைமகனிறையுடைமை கூறியவாறு; 'அவன் வயிற், சேயேன்மன் யானுந் துயருழப்பேன்' எனத் தன்னிறையுடை மைகாரணத்தாற் காமக்குறிப்பு †கழ்ந்தவாறு. 'பெண்ணன் றுரைத்த னமக்காயின்' என்பதும் அது. இது தோழிகூற் றன்றேவெனின், அதுவுந் தலைமகள் குறிப்பெனவே படுமென்பது முன்னர்க் கூறினு மென்பது'' தொல். மெய்ப். சூ. உஙு. பே.

ங. • தொல். செய். சூ. கஙுங. இச்சூத்திரத்தினுரையில் நச்சினார்க்கினியர் இச்செய்யுளைப் பன்னீரடியினிகந்தும் தலைவிரவியும்வந்த கலிவெண் பாட்டிற்கு மேற்கோள்காட்டி, இது தையா னன்றென்று எனமெய்யி னும் பொய்யினும் வழிநிலைபிழையாமற் றோழி தலைவிக்குரைத்தது. இதுகேட்டுத் தலைவன் தன்னை யகன்றனென இவள்கருதினுள் போலு மெனத்தலைவி கருதுமாற்றாற் றோழிகூறியவாறும் இதனுனே தலைவி

(பிரதிபேதம்) * காரணத்தால், † ஆதலின், ‡ நிறைவுடைமை, || அயலென்றதனால்.

இதுவும், வேறுபொருள் நுதலுமென்றலின், வேறுமொரு பொருள நுதலுமாறு கூறுதும். "அறக்கழி வுடையன பொருட்பயம் * படவரின் வழக்கென வழங்கலும்† பழித்தன் றென்ப" என்னும்(க)பொருளியற் சூத்திரத் தால் அறக்கழிவுடையனவாக அவன்மார்பில்வீழ்ந்து மெய்யறியாதேன்போற் கிடந்தேனெனக் கூறினள். இது பொருட்பயன் தந்தவாறென்னையெனின் தலைவன் குறையுற்றுநின்றமையை முன்னர் மெய்யாக வழிநிலைபிழையாமற் கூறிப், பின்னர்ப் படைத்துமொழிந்து பொய்யேகூற்றின்றாள்; வழிநிலை பிழைப்பக் கூறினள். அது பொருட்பயன் ‡ தருதற்கென்க. அஃதென்னை? தலைவன் குறை புலப்படுத்தாது வருந்துகின்ற காலத்து அதனைத் தனக்குப் புலப்படுவித்துக்கொண்டே அவனை ஆற்றுவித்தற்பொருட்டு || அறக்கழிவுடை யன கூறித் ,தானுந் தலைவனும் இவ்வாறே செறிந்தமை உணர்த்தலின், மறை புலப்படுத்தும் கருத்தினளாந் தலைவியென்னும் பொருட்பயன் தந்தே நின்ற தாயிற்று. இதனுள் இதுவும் ,"வழக்கென வழங்கலும் பழித்தன்று" ÷ என ஆசிரியரும் அமைத்தார். இங்ஙனம் பொருட்பயன் தருதல்: "நெருந லெல்லை யேனற்றேன்றித், திருமனி யொளிர்வரும்" என்னும்(கூ) அகப்பாட்டில்,"சிறு புறங் கவையின ஞெகி.....கை பிணிவிடா" என்ற பொருளானும் உணர்க.

இதனுல், தலைவிக்கு நாணம் பிறந்தது. (க)

இனிக்காந்தொழுகி உடம்படுக்குமென்பதூஉ மொரு பொருளாயிற்று. இது 'அறக்கழிவுடையன்' (தொல். பொருளி. உச) என்னும் பொரு ளியற் சூத்திரத்தில் வழுவமைத்தவாறுங்காண்க. என்பர்.

க. தொல். பொருளியல். சூ. உச. நச். இதனுரையில் "கயமலருண்கண் ணாய் .. .. அங்கனமுடையனவனென்பதனுள் 'மெய்யறி யா தேன்போற் கிடந்தேன்' என்புழி முன்னர் மெய்கூறி வழிநிலை பிழையாமனின்று பின்னர்ப்பொய்யாக வழிநிலை பிழைத்துக்கூறியது வழுவேனும் இவளுந் தலைவனும் இவ்வாறே செறிந்தமை யுணர்த் தலின் மறைபுலப்படுத்துங் கருத்தினளாந் தலைவியென்பது பயனும்" என்பது காணப்படுகின்றது.

கூ. "நெருந லெல்லை யேனற் றேன்றித், திருமணி யொளிர்வரும் பூணன் வந்து, புரவலன் போலுந் தோற்ற முறழ்கொள, விரவன் மாக்களிற் பணிமொழி பயிற்றிச், சிறுதினைப் படுகிளி கடியிய ரன்மாண், குளிர் கொ டட்டை மதனில புடையாச், சூரா மதளிரி னின்ற நீழற், றியாரை யோவெம் மணங்கியோ யுண்கெனச், சிறுபுறங் கவையின ஞெகி வதற்கொண், டிகுபெயன் மண்ணின் ஞெகிழ்பரு ரூற்றவென், னுள்ளவ னறிதலஞ்சி யுள்ளில், கடிய கூறிக் கைபிணி விடாஅ, வெரூஉமான் பிணையி னெஞ்சீ இ நின்ற. வெண்ணூரத் தகைமையிற் பெயர்த்துப்பிறி தென்வயிற், சொல்ல வல்விற்று மிலனே யல்லாக்,

பிரதிபேதம்: * வரினே, † பழித்தலன்றென்ப, ‡ தருதற்கு அஃதென்னை. || அறக்கழிவுடையன, ÷ என்று.

(உஅ.) இமையவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தண
னுமையமர்ந் துயர்மலை யிருந்தன னுக
வையிரு தலையி னரக்கர் கோமான்
ரெடிப்பொலி தடக்கையிற் ரீழ்புகுத் தம்மலை
நு யெடுக்கல் செல்லா துழப்பவன் போல
வுறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை
நீடிரு விடாகஞ் சிலம்பக் கூய்த்தன்
கோடுபுய்க் கல்லா துழக்கு நாடகேள்;

கo ஆரிடை யென்னுய்நீ யரவஞ்சாய் வந்தக்கா
னீரற்ற புலமேபோற் புல்லென்ரூள் வைகறை
கார்பெற்ற புலமேபோற் கவின்பெறு மக்கவின்
றீராமற் காப்பதோர் திறனுண்டே னுரைத்தைக்காண்;

கச இருளிடை யென்னுய்நீ யிரவஞ்சாய் வந்தக்காற்
பொருளில்லா னிளமைபோற் புல்லென்ரூள் வைகறை
யருள்வல்லா னுக்கம்போ லணிபெறு மவ்வணி
தெருளாமற் காப்பதோர் திறனுண்டேனுரைத்தைக்காண்;

கஅ மறந்திருந்தா ரென்னுய்நீ மலையிடை வந்தக்கா
லறஞ்சாரான் மூப்பேபோ லழிதக்காள் வைகறை
திறஞ்சேர்ந்தா னுக்கம்போற் றிருத்தகு மத்திருப்
புறங்கூற்றுத்தீர்ப்பதோர் பொருளுண்டே னுரைத்தைக்காண் ;
எனவாங்கு;

உங நின்னுறு விழுமங் கூறக் கேட்டு
வருமே தோழி நன்மலை நாடன்
வேங்கை விரிவிட நோக்கி
வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே.

இஃது இரவுக்குறிவந்து நீங்குந் தலைவனைஎதிர்ப்பட்டுத் தோழி தலைவி யது நிலைமைகூறி அவனை வரைவுகடாவ, அவன் வரைய வருகின்றமை தோழி தலைவிக்கு வரைவுமலிந்துகூறியது.

தினந்தீர் களிற்றிற் பெயர்ந்தோ னின்றுக், தோலாவா றில்லை தோழிநாஞ் சென்மோ, சாயிறைப்பணைத் தோட் கிழமை தனக்கே, மாசின் றுதலு மறியா னேசற், றென்குறைப் புறனிலை முயலு, மண்க ணுளனே நகுகம் யாமே.” அகம். நூ.

இதன் பொருள்.

*(3) இமையவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தண
னுமையமர்ந் துயர்மலை யிருந்த னுக

க. (அ) "விராய்நிலை தளையு மொருஉநிலை யிலவே" என்பதற்குப் பிறவாகி விரவிய தளையும் நீக்குதலில்லை; அஃதாவது வெண்டளையு மாசிரியத் தளையும் விரவுதல் என்றுகூறி, " இமையவில் .... கோமான்" என்பதை மேற்கோள் காட்டி "இதில் முந்நூற்ற விருசீரும் வெண்சீர் வெண்டளை, இரண்டாஞ் சீரொடு மூன்றுஞ்சீர் இயற்சீர் வெண்டளை, நாலாஞ்சீரொடு மற்றையடிமுதற்சீர்நிரையொன்றுசிரியத் தளை, அக்கர் கோமான் நேரொன் றுசிரியத்தளை. அஃதேல் நேரீற்றியற்சீர் கலிக்கண் வரப்பெறுதென்ற தென்னை? ஈண்டுக் கோமான் வந்ததாலெனின் அவ்விலக்கணங்கள் அத்தன்மையான் வரும் அடிக்கென்க. சிறுபான்மை வஞ்சித்தளை வருதலுங்கொள்க" என்பர், இளம்பூரணர்; தொல். செய். சூ. நிஎ. 'விராய்நிலை'.

(ஆ) "சிவபெருமான் மேருமலையை வில்லாகக் கொண்டாரென்பது பெருவழக்கு. (க்)"செல்விடைப் பாகன் றிரிபுரஞ் செற்றுழிக்,கல்லுயர் சென்னி யிமயவி லுஞ்சி" (உ) 'மலை வில்லாக - இமயம் வில்லாக' பரி. வாலறிவழில்: எசு - எ; நி: உசை, உரை. (ங) "இமைய வில் வாங்கிய வீசன்" கம்ப. கார்முக. கஉ. (சு) "இமயவிற் குரிசிலெய்தி" கூரீம. இராமனவதரித்த. அக. (ஞ) "இமயவில் வலைய வாங்கித், தவளவெண் முறுவல் கோட்டித் தரியலர் புரமட்டோற்கு" உத்தர கோச. நளசக்கர. ஙசை. (சு) "உமைநடுங்குற மேல்வரு மும்மலை யடர்த்த, விமைய வில்லினன்" விநாயக. பிந்தியமயூரேசர். உகங. (ஏ) "இமயத்,தொல்லைப்பொருப்பு வில்விட் டரண்க டெளாய்வினைத்தும்" (அ) 'இமயவெற்பாற், றெவ்வாறு கடந்த பரன்' சீகாழித்தல. பிரம புர. கஉ. புறவமான. ஙo. என்று தமிழ் நூல்களிற் பயின்றுவருவதை நோக்கின் இமயமென்பதும் மேருவின் ஒரு பெயரோவென்று ஐய முண்டாகிறது. (கூ) 'இமயத்தைக் கூறவேண்டுமிடத்து மேருக் குன்றத் தூருநீர்ச் சரவணத்து' மணி. (கஅ) கூஉ. (கo) "ஐந்தலையுத்தி யரவுநா ணுக, மந்தரவில்லி னந்தணன் விட்ட, தீவாயம்பு" பெருங் (க) சூஉ. ககசு - உக. என்பதையும், (கக) "மந்தர நெடுமலை நடுவின் வாய்ந்தது,சுந்தரவேதிகை மருங்குசூழ்ந்தது, நந்திய ளிசினை நாவன் மாமர, மந்தரத் துடையதிவ் வவனி வட்டமே" (கஉ) 'சந்திரருஞ் சூரியரும் தாரகையு நாண்மீனும், வெந்திறல கோட்களுமா மென வினங்கி விசும்பாரு, மந்தரத்தை வலஞ்சூழ்ந்துவருபவருநிற்பவருஞ், சுந்தரஞ்சேர் மணிமுடியாய் சுடர்பவருஞ் சோதிடரே" தணிகைமணி. மந்திரசாலை. ஙஅக. திவ. உoசு. (நூ) "சந்திரர் சூரியர் கோளவர்

(பிரதிபேதம்) * இமயவில்.

(க)வையிரு தலையி னரக்கர் கோ மான்
*ரெடிப்பொலி தடக்கையிற் கிழ்புகுத் தம்மலை
நி யெடுக்கல் செல்லா தழுப்பவன் போல
(உ) வுறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முத்ற் குத்திய மதயானை

காளவ ரல்லவராய், மந்தர மாமலை தன்னை வலமுறை சூழிவரும்" நீலகேசீ. தருமவுரை. கூஙு. என்பவற்றையும் நோக்கின் மந்தரமென்பதும் மேருவின் பெயரோவென்று ஐயுறவுறுகின்றது. (கசு) "அந்தர முழிதரு திரிபுர மொருநொடி யளவினின், மந்தர வரிசிலை யதனிடை யரவரிவாளியால், வெந்தழிதரவெய்த வீடலையர்" (கரு) "மந்தரம் பொருசிலையா வளைத்துக்கொண்டார்"என்புழி மந்தரம்வில்லென்பது தேவாரத்தும் கூறப்படுகின்றது. (கசு) "மந்தர மேருவில் லாவளைத் தான்" என்புழி மந்தர மேருவென்பதற்கு மந்தரமு மேருவுமென்றே, மந்தரமென்னும் பெயரையுடையமேருவென்றே,மந்தரமலையென்றே பொருள் கொள்ளல்வேண்டும். (கள) "இமயநட் டாவு சுற்றி, யத்தலை யலற முன்னீர் கடைந்தவர்" என்பதன் விசேடவுரையில் "மந்தரத்தின் ரெழிலை இமயத்துக்கு எற்றினர், அது மலையரையனுதலின்; 'இமையவில் வாங்கிய' என்றார் பிறரும்" என(சீவக.கஃஙு.) இவ்வுரையாசிரியரே எழுதியிருத்தலை நோக்கின், இங்கு எழுதியிருக்கும் உரையைவிட்டு மேருவின்ரெழிலை இமயத்துக்குஎற்றினரென்று கொள்ளல் வேண்டும். பெரியார்வாய்க் கேட்டுத் தெளிக.

க. (அ) "இயக்குமிதத்தினை யெதிர்ந்திகலின் முட்டிப்,புயக்கவலி யின்றி மதம் பொங்குவிறல் வேழம், வியக்கவொ ரரக்கன்வளர் வெள்ளிவரை யூன்ற, வுயக்கமுட னேலிடுத லொப்புற முழங்கும்" விநாயக. மயூ. ரேசர். அள.

(ஆ) "ஐயிருதலையினரக்கர்கோமான்" என்பது (இ) சீர்வகையடிக்கண் நேரீற்றியற்சீர் இரண்டும் வருதற்கும், (தொல். செய். சூ.உடு.நச்.) (ஈ) சீர்வகை யடிக்கண் கலியினளவடி பதினேரெழுத்தான் வருதற்கும், (தொல். செய். சூ. இகூ. நச்.) மேற்கோள்.

உ. (அ)நேரீற்றியற்சீர் கட்டளையடியல்லாதகலியடிக்கண்வருமென்பதற்கு, "உறு புலியுருவேய்ப்பப்" பூத்த வேங்கையை என்பது, மேற்கோள்; தொல். செய்.சூ. உடு. பே. (ஆ) "உறுபுலி" நாலடி. கஙுங.
"வேங்கைப் பூவுக்கு வேங்கைப்புலி உவமையாகக் கூறப்படுதலை" (இ) "புலிப்பொறி வேங்கைப் பொன்னிணர்" ஐங். ஙகசு. (ஈ) "வேங்கை வீயுகு துறுகல், லிரும்புலிக் குருளையிற் ரோன்றும்" குறுந். சள.

(பிரதிபேதம்) * தொடிபொலி.

நீடிரு விடரகஞ் சிலம்பக் கூய்த்தன்
(க)கோடு(உ)யர்க் கல்லா தழுக்கு நாடகேள்

எ - து: இமயமலை யிடத்துப் பிறந்த மூங்கிலாகிய வில்லை வலத்த, கங்கையான் ஈரத்தையுடைத்தாகிய சடையினையுடைய இறைவன், இறைவியோடே பொருந்தி,(ங) *உயர்ந்தகயிலைமலையிலே இருந்தாலுக,†அரக்கர்க்கரசனாகிய பத்துத்தலையையுடைய இராவணன் வரையெடுத்தற்குக் கையைக் கீழே ‡ செலுத்தி, தொடிபொலிவுபெற்ற || அத்தடக்கையிலுலே அம்மலையை எடுத்த

(உ) "மெல்லிணர் வேங்கை வியலறைத் தாயின, வழுகை மகளிர்க் குழுவை செப்ப" பரி. கச: கக - உ. (ஊ) "சூறவு ஞண்டிய சுரம்பை புதைய, வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம், புலிசெத்து" அகம். கஉ: க - கக. (எ)"அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை, மாத்தகட் டொள்வீ தாய துறுக, லிரும்புலி வரிப்புறங் கடிக்கும்" புறம். உ0உ: கஅ - உ0. (ஏ) "புலிப்பறழன்ன பூஞ்சினை வேங்கை" தொல். மர. சூ. க0.பே.மேற்கோள்;(ஐ)"கருங்கா லினவேங்கை கான்றபூக் கன்மே, லிருங்கால் வயவேங்கை யேய்க்கும்" தினைமாலை. உசு; (ஒ)"நறமலை வேங்கையின் பூப்பயில் பாறையை நாக நண்ணி, மறமலை வேங்கை யெனநனி யஞ்சும்" கோவையார். கசு. (ஓ) "புலியதள்போர்ப்ப, வெடுத்து நின்றதே போன்றதா லினர்விரி வேங்கை" (ஔ) "புலியுரு மருளப் பூத்த பூந்துணர் வேங்கை யொள்வீ"காஞ்சி. திருக்கண். கடுசு: உடுஉ. என்பவற்றுரல் உணர்க. (ஃ) "வேங்கையஞ் சினையென விறற் புலி முற்றியும்" கலி. சசு: டு. என மாறிவருதலும் காண்க.

க. (அ)"மறமிகுவேழந்தன் மாறுகொண்மைந்திலுற்,புகர்நுதல்புண்செய்த புய்கோடுபோல" கலி. நுங: ங - சு. (ஆ) 'கோடுபுய்க்கலாது நின்ற அக்களிற்றை' சீவக. உஉஎசு. உரை.

உ. 'புய்'என்பது(அ)"புய்த்தெறிக்கரும்பின்" புறம்.உஅ:கஉ;(ஆ)"கோட்டினிற் குத்திக்குடர் புய்த்துறுத்து" மணி. கங: சஎ.(இ)"நெடுங்கையுந் தலையும் புய்யாநொய்தினி னிமிர்ந்து"கம்ப. அதிகாயன்,உஉ. எனச் செயப்படு பொருள்குன்ற வினையாயும் (ஈ) "புய்ந்துகால்போகி" கனா. ஙக.எனச்செயப்படு பொருள்குன்றியவினையாயும்.(உ)"மெய்வதிவேல், புயந்து மேல்வரும் பொருநர்கள் சிரங்களும் புட்டி" (ஊ) "புயக்க லினியின்றி" விநாயக. திரிபுரதகன. கூ0;மயூரேசர், அள.(எ)"புயக்கவுக் குருமையின்" (ஏ) "புக்கவுண ராவிகள் புயக்கு மிறைவாவி" (ஐ) "புக்கபகன்வாள்விழிபுயந்து"பேரூர்.குழகன்குளப்புச.ஙக,மருதவரை கசஅ, கௌரிதவம்.உடு. (ஒ)"புயக்கவொருமைந்தனைப் போவித்தார்" கச்சிஆனந்தருத். உகஉ. என அகரச்சாரியையைபெற்றும் வருதல்காண்க.

ங. "ஊழிதோ றேங்குமவ் வோங்கல்"

(பிரதிபேதம்.) * கயிலை, † பத்துத்தலையையுடைய அரக்கர்களுக்கு இராவணன், ‡ சொருகி, || தடக்கை.

லாற்றூது வருந்துகின்றவனேப்போல, மிகுதியையுடைய புலியினது வடிவை யொப்பப்பூத்த (க)வேங்கைமரத்தைப்புலியெனக்கறுவுதல்கொண்டு, அதன் அடியிலே குத்திய மதத்தையுடைய யானை, நீண்ட பெரிய மூழைஞ்சிடமெல்லாம் ஒலிக்கும்படி கூப்பிட்டுத் தன் கொம்பைவாங்கமாட்டாதே வருந்தும்காடனே! யான் கூறுகின்றதனைக் கேள்; எ - று.

கொடிதாகிய புலியின் உருவையொப்ப வேங்கை *பூத்தென்றதனைக் களவின்கட் பெறுகின்ற இன்பத்தை நீக்குதலிற் கொடியதுபோற் றோன்றிக் கற்பின்கண் இல்லறப் பயனெடுக்கூடிப் பேரின்பத்தைத் தருகின்ற வரைவு கடாய கூற்றாகவும், வேங்கையைப் பகையாகக் கருதி அதனிடமே பொருத ||யானையை அக்கூற்றைத் தான் நுகர்கின்ற இன்பத்திற்குமாறாகக் ‡கருதி அக் கூற்றுடனே மாறுபட்டு வருகின்ற தலைவனாகவும், விடரகஞ் சிலம்பக் கூவுதலை அத்தலைவன் அவ்வொழுக்கத்திற்கு இடையீடுபட்டு வருந்திக் கூறுகின்ற கூற்றாகவும், கோடு புய்க்கல்லாது உழத்தலை அக்கூற்றைப் பகையென்று கொண்ட மனத்தை அவள் கூற்றை நன்றென்று கருதி நீக்கமாட்டாது வருந்துதலாகவும் உள்ளுறையுவமம் ÷கொள்க. உழப்பவன்போலவென்றவனே யுவமம் பின்வருகின்ற வேங்கையைக்குத்திய யானை கோடு புய்க்கல்லாதுழக்கு மென்ற உள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் =கொடுத்து அதுவும் உள்ளுறையுவமம்போலத் திணையுணர்த்தலைத் தள்ளாது நின்றது. இது வினையுவமப்போலி. இஃது “உள்ளுறை யுவம மேனை யுவமமெனத், தள்ளாதாகுந் திணையுணர் வகையே” என்னும் (உ) அகத்திணை யியற் ×சூத்திரத்தினும் “உடனுறை யுவமஞ் **சுட்டுநகை சிறப்பெனக், கெடலருமரபி னுள்ளுறை யெய்தே” என்னும் (ங) பொருளியற் ††சூத்திரத்தினும் யாங் கூறிய உரையான் உணர்ந்துகொள்க. மேலும் இத்தொகையுள், ஏனை யுவமமும் வந்தும் ஏனையுவமம் உள்ளுறையுவமத்திற்குச் சிறப்புக் ‡‡கொடுத்துத் திணையுணர்த்தலைத் தள்ளாது நிற்கும் பாட்டுக்கட்கெல்லாம் இச்சூத்திரங்களே விதியாகக்கொள்க. “நன்மை” என்னுங் (ச) குறுந்தொகையும் அது.

இது தாவு.

க0. ஆரிடை யென்னுய்நீ யுரவுஞ்சாய் வந்தக்கா
(நி)னீரற்ற புலமேபோற் புல்லென்முள் வைகறை

க. யானை, வேங்கைமரத்தைச்சினந்து கெடுத்தலுண்டென்பதை, கலி. சகு, உ - சு. ஆம் அடிக்குறிப்பான் உணர்க.

உ. தொல். அகத். சூ. சசு. ங. தொல். பொருளி. சூ. சஅ.

ச. குறுந்தொகையில் இம்முதலுள்ள பாட்டுக் காணப்படவில்லை.

ஞ. “வெயில் பொரவாட்டமுற்ற மென்றளிர்ப்பசிய வல்லி, புயல்பொழி துவலைமாந்திப் பொங்கெழில் படைக்கு மாபோன், மலிலெருத்

(பிரதிபேதம்) * பூத்தலென்றதனை, † கூடியபேரின்பத், ‡ கருதிய கூற்று, || யானையைக் கூற்றை. ÷ கைக்கொள்க, = கொடுத்தலையும், × சூத்திரத்தானும், ** சுட்டுநகைகை. சுட்டுநகையிறப், †† சூத்திரத்தானும், ‡‡ தொடுத்தனை.

(ஆ) கார்பெற்ற புலமேபோற் கவின்பெறு மக்கவின்
நீராமற் காப்பதோர் திறனுண்டே லுரைத்தைக்காண்

எ-து: நீரற்ற நிலத்திற் பயிர்போல நின் அளிபெறுமற் பொலிவுழிக்தவள் நீ வருவதற் கரிய இடமென்று கருதாயாய் ஆண்டுள்ள பாம்பை அஞ்சாயாய் வர, விடியற்காலத்தே மழையைப் பெற்ற நிலத்திற் பயிர்போல அழகுபெறும்; *இனி அங்ஙனம் பெற்ற அழகு இவளிடவிட்டு நீங்காமல் நிலைபெற்று நிற்கும் படி காப்பதொரு கூறுபாடு உண்டாகில், அதனை எங்களுக்குக் கூறிக்காண்; எ - று.

வந்தக்கால், காலீற்று வினையெச்சம்; உரைத்துக்காணென்பது உரைத்தைக்காணென வினைத்திரிசொல்லாயிற்று.

கச இருளிடை யென்னுயிர் பிரவுஞ்சாய் வந்தக்காற்
(உ) பொருளில்லா னிளமைபோற் புல்லென்றுள் வைகுறை
(ங) யருள்வல்லா னுக்கம்போ லணிபெறு மவ்வணி
தெருளாமற் காப்பதோர் திறனுண்டே லுரைத்தைக்காண்

துறமூமேனி மாயவன் வரவுகேளாக், குயிலென மிழற்று மாது கொழுங்கவி னெய்திஞளே". பாகவதம். (கா) உருக்குமிணி. உஅ.

க. (அ) "கானலஞ் சேர்ப்பனைக் கண்டாய்போலப், புதுவது கவினினே" கலி. கஉஅ: சு - எ. (ஆ) "குருந்த மேறிய கூரரும் பார்முல்லை, பொருந்து கேள்வரைப் புல்லிய.பொன்னனார். மருங்கு போன்றணி மாக்கவின் கொண்டதே." (இ)"நீர்துளும்பு வயிற்றின் னிழன்முகில், பார்துளும்ப முழங்கலிற் பல்கலை, யேர்துளும்ப வெரீஇயிறை வற் றழீஇக்,கார்துளும்புகொம்பிற்கவினெய்தினார்."சீவக.ககஉடி,உசு எஉ. (ஈ)"வானிறைகின்ற கொண்மூவார்துளி தலைஇயபின்றைக்,கானிறை மரனும் பூடும் வல்லியுங் கவின்ருலென்ன" கந்த. இந்திரனருச் சனை. கஉ. (உ)"நீர் பெற்றுயர்ந்த நிறைபுலமோ" நள. கலிநீங்கு. கூ. (ஊ)"காரிற குளிர்த்து குழைத்தசெழுங கானம் பூத்த தெனக்கவினி" வில்லி. பன்னிரண்டாம். அ. என்பவைகளும் (எ) "அணங்கனேயார் நுகர் வேய்தலின்" சீவக. அஎக. என்பதும் 'அணங்கனேயார், கணவ ரிடத்து நுகர்ச்சியால் அவயவங்கள் செவ்விபெறுதலின்' என்னும் அதனுரையும் ஈண்டு ஒப்புநோக்கற்பாலன.

உ. "வறியவனினிளமைபோல் வாடிய சினையவாய்" கலி. கo: க, என்பதும் அதன் அடிக்குறிப்புக்களும் இங்கு ஒப்புநோக்கற் பாலன.

ங. "இரப்பவர்க் கீயக் குறைபடுமென் றெண்ணிக், கரப்பவர் கண்டறியார் கொல்லோ—பரப்பிற், றுறைத்தோணி நின்றுலாத் தூங்குநீர்ச்சேர்ப்ப, விறைத்தோறு மூறுங் கிணறு" பழ. ஙசஅ.

(பிரதிபேதம்) * அங்ஙனம் பெற்ற வழகினைவிட்டு,

எ - து: கைப்பொருளில்லாதான் இளமைபோல நின் அளிபெருமற் பொலிவழிந்தவள் நீ இருளிடத்தில் *இராவென்று கருதாயாய் ஆண்டுவரும் ஏதத்திற்கு அஞ்சாயாய் வர, விடியற்காலத்தே அருளுதலே வல்வவனுக்கு உண்டாய ஆக்கம்போல அழகுபெறும்; அங்ஙனம் பெற்ற அழகு பிறரான் வந்த அழகென்று புறஞ்சொல்லுதலேப் போக்குவதொரு பொருளுண்டாகில் அதனை எங்களுக்குக் கூறிக்காண்; எ - று.

கஅ மறந்திருந்தா ரென்னுயிர்* மேலயிடை வந்தக்கா
(க) லறஞ்சாரான் மூப்பேபோ லழிதக்காள் வைகறை
(உ) திறஞ்சேர்ந்தா னக்கம்போற் றிருத்தகு மத்திருப்
புறங்கூற்றுத் தீர்ப்பதோர் பொருளுண்டே †யுரைத்தைக்காண்

எ - து: தருமநெறியைப் பொருந்தாமல் வறிதே மூப்பினை எய்தியவன் மறுமைச்செல்வத்திற் பொலிவிழந்தாற்போல நின் அளிபெருமற் பொலிவிழந்தவள் கொலைத்தொழிலிற் குறைவின்றித் திருந்திய கானவரென்று கருதாயாய் அம்மலைச்சாரலிலுண்டாகிய வழிக்கண் வந்த இடத்து அவ்வரவினுற்பெற்ற முயக்கின்பத்தாலே விடியற்காலம் கூறுபாடெய்வனுடைய செல்வப்பொலிவுபோல அழகுபெறும்; அங்ஙனம் பெற்ற அழகால் அயலவர் கூறத்தக்க புறங்கூற்றுரையை மாற்றத்தக்கதொருபொருளுண்டாகில் அதனை எங்களுக்குக் கூறிக்காண்; எ - று.

பொருளென்றது ஆகுபெயர்.
இவை மூன்றும், தாழிசை.
எனவாங்கு,
எ - து. என்று; எ - று.
ஆங்கு அசை.
இது தனிச்சொல்.

உங. நின்னுறு விழுமமங் கூறக் கேட்டு
வருமே தோழி நண்மலை நாடன்

க. (அ) "மறுபிறப்பறியாதது மூப்பன்று" முதுமொழிக். நo; (ஆ) "மூத்தாலு, நன்கறியார் தாமூ ரனியுளர்" பழ. ஙகஙக.

உ. (அ) "வருத்தலும் வல்லதரசு" (ஆ) "அறனீனு மின்பமு மீனுங் கிறன்றிந்து, நீதின்றி வந்தபொருள்" (இ) "உறுபொருளு மூல்கு பொருளுந்தன் னெண்ணூர்த், தெறுபொருளும் வேந்தன் பொருள்" குறள். ஙஅஇ, எடுசை, எடுங. (ஈ) "கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிலியம், வெள்ளத்தின் மேலும்பல" நீதிநெறி. உங.

(பிரதிபேதம்) * இரவென்று, †உரைத்துக்காண்.

(க) வேங்கை விரிணிட நோக்கி

*(உ)வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே

எ - து: நின்னுடைய மிகுதலையுடைய வருத்தத்தை யான் கூறக்கேட்டு நல்ல மனங்கூடன், தோழீ! *வேங்கை அலர்கின்ற காலத்தைப் பார்த்துப் பெருத்த இறையினையுடைய பணைத்தோளை †வரைந்துகோடற்கு†வரும்; எ-று.

இது சுரிதகம்.

இதனால், தலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

இஃது 'ஐயிரு தலையினரக்கர் கோமான்' என ஆசிரியத்தினையும் வந்து பதினெழுத்தான் வந்த அடிபெற்ற ஒன்பதடித்தரவும் நான்கடித் தாழிசையுந் தனிச்சொல்லும்‡இயலென்ற இலேசால் தரவின்(ங)உள்ளுறைப் பொருளையுங் கொண்டு நின்ற நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

க. வேங்கை நன்னுளில் மலருமென்பதையும் அந்நாளில் வரைதல் மரபென்பதையும் (அ) "நன்னுள் வேங்கையு மலர்கமா வினியென" (ஆ) "வேங்கை நாளுறுபுதுப்பூ"(இ)"காரரும்பவிழ்ந்த கணிவாய் வேங்கை" நற்.உ0சு:எ.ஙகஙூ:க,ஙஎஙூ:சு.(ஈ)"வேங்கையுமொள்ளிணர் விரிந்தன, நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே" (உ) "நன்னுட் பூத்த நாகிள வேங்கை" (ஊ) "நன்னுள் வேங்கைவீ"(எ)"மன்றவேங்கை மணநாட் பூத்த, மண்ணே ருரும்பின் பொன்வீ" அகம். உ: கசு - எ, அரு: க0, கஙூ: ச, உஙூ:எ - அ (ஏ) "இளவேங்கை நாளுரைப்ப" (ஐ) "நாள்வேங்கை பொன்வியலு நன்மலை நன்னுட்" (ஒ)"நாள்வேங்கை நீழலுள்" திணைமா. கஅ, உ0, ஙக. (ஓ) "கணிநிறவேங்கை" திணை மொழி. கூ. (ஔ) "பன்னுளு நின்ற விடத்துங் கணிவேங்கை, நன்னுளே நாடி மலர்தலால்" பழமொழி. கஉ0. (ஃ0) "கணிவளர் வேங்கை" தே. (அஅ) "கணித்தொழில் புரியும் வேங்கை"..... ..... (ஆஆ) "நன்னுட்பூத்த பொன்னிணர் வேங்கை" (இஇ) "நன்னுள் வேங்கைப் பொன்னேர் புதுமலர்' (ஈஈ) "பிணியவிழ்ந்து நன்னுளாற் பூப்பனவும் வேங்கை" யா - வி. சூ. சுசு, கசு, ஙஎ, மேற்கோள். (உஉ) "கடிநாள் வேங்கையும்"(ஊஊ)"கணிவாய்வேங்கையும்" பெருங். (க) இ0: உசு. (உ) உ0: ஙிக. என்பவற்றுரையுணர்க.

உ. (அ)"வீங்கிறைத்தடைஇய வமைமருள் பணைத்தோள்" பதிற். ஙிச: ஙூ. (ஆ) வீங்கிறைப் பணைத்தோண் மடந்தை. புறம். கூஙிச: கூ.

ஙூ. (அ)"இமயவில்வாங்கியவீர்ஞ்சடையந்தணனென்னுங்குறிஞ்சிப்பாட்டினுள் 'கோடுபுக்கல்லா தழக்கு நாடன்' என்று உள்ளுறை யுவமத்தாற் றலைவியதுவிழுமங்கூறக்கொடூநன்(?)மலைநாடனெனவைத்தமையின் அது தரவியலொத்ததாயிற்று"என்பர்பேர்;தொல்.செய்.சூ.கஙஎ.

(பிரதிபேதம்) * வீங்கிழைப், † வருமென வரைவுமலிந்து கூறினள், ‡ அயலென்றதிலேசால்.

(கூகூ.) (க)காமர் கடும்புனல் கலங்தெம்மோ டாடுவா
டாமரைக் கண்புதைத் தஞ்சித் தளர்ந்ததேனு டொழுகலா
னீணுக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருவினும்
பூணுக முறத்தழீஇப் போதந்தா னகன்கலம்
வருமுலை புணர்ந்தன வென்பதனு லென்றேழி
யருமழை தரல்வேண்டிற் முருகிற்கும் பெருமையளே;

எ அவனுந்தான், ஏன லிதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்
தேனி னிமிரென வேணி யிழைத்திருக்குங்
கானக நுடன் மகன்;

கக சிறுகுடி யிரே சிறுகுடி யிரே
வள்ளிகிழ் வீழா வரைமிசைத் தேன்றுடா
கொல்லை குரல்வாங்கி யினு மலைவாழ்க
ரல்ல புரிந்தொழுக லான்;

கரு காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ்சிலம்பின்
வாங்கமை மென்றோட் குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள்வர்த் தொழுதெழலாற் றன்னையருந்
தாம்பிழையார் தாந்தொடுத்த கோல்;

எனவாங்கு,

உ0 அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
வென்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்;

உஉ அவருந், தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்
தொருபக லெல்லா முருத்தெழுந் தாறி
யிருவர்கட் குற்றமு மில்லையா லென்று
தெருமந்து சாய்த்தார் தலை;

(ஆ)"'இமயவில் ..காடகேள்'என்ற இதன்உள்ளுறையுவமத்தால்தலைவி வீழுமங் கூறி அதனையு முடன்கொண்டு சுரிதகத்து 'நின்னுழை..... கொளற்கே' எனக் கூறுதலான் இயலென்ற இலேசால் தரவின் பொருள் கொண்டிற்ற சுரிதகம் வந்தது" தொல். செய். சூ. கூஎ. .

க. இச்செய்யுள் இன்னதின்னதற்கு மேற்கோளென்பது இதனுரையிறுதிக் குறிப்பிற் காணப்படும்.

உசு தெரியிழாய் நீயுநின் கேளும் புணர
வரையுறை தெய்வ முவப்ப வுவந்து
குரவை தழீஇயா மாடக் குரவையுட்
கொண்டு நிலைபாடிக் காண் ;

கூ0 நல்லாய்,
நன்னு டலிவரு மெல்லி நமர்மலைத்
தந்நாண்டாந் தாங்குவா ரென்னுமென் றனர்கொல்;

கூக புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை மூன்றி
னனவிற் புணர்ச்சி நடக்குமா மன்றே
நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமா மன்றே;

கூஎ விண்டோய்கன் னுடனு நீயும் வதுவையுட்
பண்டறியா தீர்போற் படர்கிற்பீர் மற்கொலோ
பண்டறியா தீர்போற் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போற் கரக்கிற்பென் மற்கொலோ;

சக மைதவழ் வெற்பன் மணவணி காணுமற்
கையாற் புதைபெறாஉங் கண்களுங் கண்களோ;
என்னீமன், நின்கண்ணுற் காண்பென்மன் யான்;
நெய்த லிதழுண்கண், நின்கண்ணு தென்கண் மன;

எனவாங்கு;

சசு நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவினை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக
வேய்புரை மென்றோட் பசலையு மம்பலு
மாயப் புணர்ச்சியு மெல்லா முடனீங்கச்
சேயுயர் வெற்பனும் வந்தனன்
பூவெழி லுண்கணும் பொலிகமா வினியே.

இது "முன்னிலை யறனெனப் பதெலென் றிருவகைப், புரைதீர் கிளவி தாயிடைப்புதப்பினும்" என்னும்(க) விதிபற்றித்(உ) தமர் வரைவுமறுத்

க. தொல். களவியல், சூ. உகூ.

உ. இக்கிளவியின் செய்திவிரிவை, சீவகசிந்தாமணி. கoசக - சுஉ - ம் செய்யுட்களாலுணர்க.

துழித் தோழி தாயர்க்கு அறத்தோடு நிற்ப, அவள் நற்றாய்க்கு அறத்தோடு நிற்ப, அவள் தன்னையர்முதலியோர்க்கு அறத்தோடுநிற்ப, அவரும் ஒருவாற்றான் *உடன்பட்டமை தோழி தலைவிக்குக் கூறி, தானும் அவளும் வரைவு கடிதின் முடிதற்பொருட்டு வரையுறை தெய்வத்தைநிற்குக் தூவையாட அவன் வரையவருகின்றமை தோழி தலைவிக்கு உரைத்தது.

இதன் பொருள்.

(கூகூ.) (க)காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவா
(உ)டாமரைக் கண்புதைத் தஞ்சித் தளர்ந்ததேனே டொழுகலா
னீணுக †நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினும்
(ங)பூணுக முறத்தழீஇப் ‡போதந்தா ||னகனகலம்

க. (அ) "திணிநிலைக் கடம்பின் றிரளரை வகைய, தினையறை மராலியிற் கைபிணி விடேஎ, நுரையுடைக் கலுழிப் பாய்தலி னூரவுத்திரை, யருங்கரை வாழையி னடுங்கப் பெருந்தகை, யஞ்சி லோதி யசையல் யாவது, மஞ்ச லோம்புநின் னணிகல நுகர்கென" தலைஞ். களகூ - கஅக.

(ஆ)"முன்னிலை யறனெனப் படுதலென் றிருவகைப், புரைதீர் வளவி தாயிடைப் புகுப்பினும்"என்புழி,"புனறரு புணர்ச்சியும் பூத்தருபுணர்ச் சியும் களிறுதரு புணர்ச்சியும் போல்வன செவிலிக்குக் கூறி அவள் நற்றாய்க்குக்கூறுதலே நிகழ்த்துவித்தலாம். எனவே அவள்தந்தைக்குந் தன்னையர்க்கும் உணர்த்துதலும் அதனை மீண்டுவந்து தலைவிக்கு உணர்த்துதலும் பெற்றாம். அவ் வறத்தொடுநிலை எழுவகைய எனப் பொருளியலிலும் கூறுப"என்றுகூறி 'காமர்கடும்புனல்.....சாய்த்தார் தலை' என்பதை மேற்கோள்காட்டி, "புனறரு புணர்ச்சியாற் றோழி செவிலிக்கு அறத்தொடு நிற்ப, செவிலி நற்றாய்க்கு அறத்தொடுநிற்ப, அவள் எனையோர்க்கு அறத்தொடு நின்றவாறு காண்க" என்பர். நச். தொல். களவி. சூ. உங. (இ) புனல்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றற்கு,"காமர்.....பெரு மையளே" என்பது மேற்கோள்; இறை. சூ. கடு; நாற்கவி. சூ. களஎ. (ஈ) எதிடு தலைப்பாடு என்பதற்கு யாதானுமோரேதுவை இடையிட்டுக்கொண்டு தலைப்பட்டமை கூறுதல் என்று பொருள்கூறி இப்பகுதியை மேற்கோள்காட்டி, 'இது புனலிடை உதவினனெனத் தலைப்பாடு கூறியது' என்பர். இளம். தொல். களவி. சூ. உங. (உ) கட்டளை யடியல்லாத கலியடிக்கண் ஏகாரற்றியற்சீர் வருதற்கு,"காமர்கடும்புனல் கலந்தெம்மோடாடுவான்" என்பது மேற்கோள். தொல். செய். சூ. உடு. பே.

உ. இவ்வடியை நாற்சீரடியாகக் கொள்ளின் மோனை நயமுறும்.

ங. வேட்கையுரைத்தலென்னும் அறத்தொடு நிலைக்கு,"பூணுக...போதந் தான்" என்பது மேற்கோள். தொல். பொருளி. சூ. கஉ. நச்.

(பிரதிபேதம்) * உடம்பட்டமை, † நறும்பைந்தார், ‡ போந்தந்தான், || அவனகலம்.

வருமுலை புணர்ந்தன வென்பதனு லென்றேழி
(க)யருமழைகரல்வேண்டிற் (உ) றருகிற்கும் (ங)பெருமையளே

எ-து: எம்மோடேகூடி லிருப்பத்தையுடைய(சு)கடிய நீரையாகின்றவள் கால்தளர்ந்து அஞ்சித் தாமரைபோலுங் கண்ணைப் புதைத்து அந்நீரோடே போகையினாலே தனக்குச்சென்ற (ஙி)அருளினாலே நீண்ட சுரபுன்னைப் பூவாற் கட்டின நறிய குளிர்ந்த மாலை அசையும்படி அந்நீரிலே குதித்துப் பூணினை யுடைய இவள் மார்பைத் தன்மார்போடே உறும்படி அணைத்துக்கொண்டு கரையிலே போதவிட்டவனுடைய அகன்ற மார்பை இவளுடைய எழுகின்ற முலைகள் கூடினவென்று பிறர் கூறுகின்ற கூற்றாலே என்னுடைய தோழி நமக்கு அரியமழையைப் பெய்விக்க நாம் விரும்பில் அதனை நமக்குத் தரவல்ல கற்பின் பெருமையளாயினாள்; எ - று.

எ (சு)அவனுந்தான், ஏன விதணத் தகிற்புகை யுண்டியங்கும்
(ஏ)வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்

க. "வான்றருங் கற்பினாள்" கலி. கசு: உ0. என்பதும் அதன் குறிப்புக் களும் "மழைவளந்தரு கற்பினர்" விநாயக. கிருநாட்டுப். எ0. என்பதும் ஈண்டு உணர்தற் பாலன.

உ. கில், ஆற்றலுணர்த்துவதோர் இடைநிலை.

ங. "மாரி, வறப்பிற் றருவாரு மில்லை" (நாலடி. க0ச.) என்றிருப்பவும் அதனருஞ் சிறப்புப்பற்றி 'பெருமையள்' என்றார்.

ச. கடும்புனல் - மிக்கபுனலென்பர், இளம்; தோல். உரி. சூ. அ0.

ஙி. அருள் இன்னதென்பதை இந்நூற்பக்கம் உஅ; ங-ஆம் குறிப்பாலறிக.

கூ. (அ)'இருபாற் குடிப்பொரு ளியல்பின் கண்ணும்' என்புழி 'அவனுந் தான் .. ..உரைத்தாள்யாய்' என்பவற்றை மேற்கோள்காட்டி, 'தோழி தான் கூறிய இருபாற் குடிப்பொருளைக்கூறிச் செவிலி அறத்தொடு நின்றாளெனக் கொண்டெடுத்து மொழிந்தவாறு காண்க' என்பர். நச். தோல். களவி. சூ உச. (ஆ) 'அவனுந்தான்.....நாடன்மகன்' என்பது பிறப்பொப்புமைக்கும் தோல். மெய்ப். சூ. உஙி: பே. (இ) இடை நின்றகொச்சகம் ஈற்றடி குறைந்ததற்கும் தோல். செய். சூ. கஙிஙி. பே. மேற்கோள். (ஈ) கலிப்பாவின் அளவடிக்கண் சீர்கூனுய் வருதற்கு "அவனுந்தான்... .....இயங்கும்' என்பது மேற்கோள். தோல். செய். சூ. சகூ. பே.

எ. (அ) "வானூர்மதியம்" நாலடி. கஉஙி; (ஆ)சீலப். கூ: ஙஎ; (இ) தோல். செய். சூ. கஙிஙூ. பே. மேற். (ஈ) ஊர்தல், போதலென்னும் பொருளில் வருதற்கு "வானூர் மதியம்" என்பது மேற்கோள். சீவக. உஅசு.

(பிரதிபேதம்) * தான்வேண்டின்.

(க)தேணி னிருலென *வேணி யிழைத்திருக்குங்
கானக ணுடன் மகன்

எ - து: இவளேயன்றி அவன்ரூனும் தினைப்புனத்திலிட்ட பரணிடத்து எரிந்த அகிலின் புகையாலுண்ணப்பட்டு ஒளிமழுங்கித் திரியும் மதியம் வானிடத்தேசென்று அம்மலைத்தலையிலேதங்கிற்ரூயின்(உ)அதனை அந்தமலையில் வைத்த தேனினது இரூலென்றுகருதி அதனை அழித்தற்குக்(கூ) கண்ணேணி முதலியன சமைத்திருக்குங் காடு அகன்ற நாட்டையுடையவன்மகன் ; எ - று.

மிக்க ஒளியினையுடைய மதி புகையால் மாசுண்ட தன்மைபற்றித் தங்கையகப்படுத்திப் பயன்கொள்ளக்கருதும் நாடனெனப் புகழ்மிக்க தலைவனும் புனலிடைத் தழுவிப்†போதந்ததனால் சிறிது புகழ்குறைந்தமை பற்றி யாமும் அவன் வரைந்துகொள்ளக் கருதுகின்றேமென உள்ளுறையுவமங் கொள்க.

இதனால், தலைவன்‡நற்குலத்திலும் உயர்ந்தானென்பது தோன்றக்கூறினாள். இது ||பிறப்பொப்புமை கூறிற்று.

கக (ச)÷சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
வள்ளிதழ் வீழா வரைமிசைத் தேன்றுடா

க. கண்ணேணி யிழைத்துத் தேன் கொள்ளுதல் மரபு ; இதனை "கலைகையற்ற காண்பி னெடுவரை, நிலையிய் திட்ட மால்புறெறி யாகப், பெரும்பயன் ரூருத்த தேங்கொள் கொள்ளை, யருங்குறும் பெறிந்த கானவர்" மலைபடு. கஎநி - அ. என்பதனாலுமுணர்க.

உ. (அ)"மதியம் இரூல்போலத் தோன்றுமென்பதனை இரூல் மதிபோலத் தோன்றுமென்னும் பொருளுள்ள கலி. சஉ: உஉ - கூ - ஆம் அடிகளாலும் அவற்றின் குறிப்பாலுமுணர்க. (ஆ) மதியம் - பூரணசந்திரன்; இதனை, (க) "குடமுதற் ரூன்றிய தொன்றுதொழு பிறையின், வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்,குணமுதற் ரூன்றிய வானிருண் மதியிற், றேய்வன கெடுகநின் றெவ்வ ராக்கம்" மது. கசுகூ - சு. (உ) "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்,வரிசை வரிசையா நந்தும்-வரிசையால்,வானோர்மீதியம்போல் வைகலுந் தேயுமே,தானே சிறியார் தொடர்பு" நாலடி, கஉடு. (கூ)"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப், பின்னீர பேதையார் நட்பு" குறள். எஅஉ. எனத் தெளிவுறக் கூறுதலாலும்: (ச) "மதி நிறைவுபோ னிலையாது" கலி. கஎ: எ. என்பதனாலும் அதன் அடியிலுள்ள பிற குறிப்புக்களாலும் உணர்க. இஃது இம்மரபு கடந்தும் வரும்.

கூ. கீண்ணேணி - கணுக்களிலேயே அடிவைத்து ஏறியிறங்கும்படி அமைத்துள்ள மூங்கில்; கண் - கணு.

ச. (அ)"காமர் கடும்புனல்" என்னுங் கொச்சகக்கலியுள்,'சிறுகுடியீரே சிறுகுடியீரே' எனவோரடியாற் கூன்வங்கவாறு காண்க. என்பர், குண

(பிரதிபேதம்) * எண்ணி, † போத்தந்ததனால், ‡ தங்குலத்தினும், || புறம்பொப்புமை, ÷சிறுகுடீரே.

கொல்லே குரல்வாங்கி யீனு மலைவாழ்ந
ரல்ல புரிந்தொழுக லான்

எ - து: சிறுகுடியிலுள்ளீர்! சிறுகுடியிலுள்ளீர்; *இம்மலையில் வாழ்வார் இங்ஙனம் உதவியார்க்குக் கொடுக்க நினையாது நொதுமலர்க்குக் கொடுக்க நினைந்து அமைவல்லாதன வற்றை விரும்பி · ஒழுகுகையினாலே இனி இவ் விடத்து வள்ளியும் கிழங்கு கீழ் (க) விழா; † மலைநிசையில் தேனுந் தொடா; கொல்லையில் தினைகளுங் கதிர்பறிந்து ஈனுவாம்; எ - று.

கறி (உ)காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ்சிலம்பின்
(ரு)வாங்கமை மென்றோட் சுரமகளிர்
தாம்பிழையார்(ரு)‡கேள்வர்த் தொழுதெழலாற்(ரு)||றம்மையருந்
தாம்பிழையார் தாந்தொடுத்த கோல்

எ - து. காந்தட்பூ மணநாறும், பார்த்தவர்கள் கண்ணைத் தன்னிடத்தே வாங்கிக்கொள்ளுங் காரிய மலையிடத்து=வளைந்த மூங்கில்போலும் மெல்லிய தோளையுடைய குறவருடைய மடப்பத்தையுடையமகளிர் தாம் தத்தங் கண வரைத் தப்பாராய் அவரே(சு)தெய்வமென்று(எ)வணங்கி எழுந்திருத்தலாலே

சாகரர்; யா - கா. ஒழிபியல். அ. (ஆ) கூனைத் தனிசொல்லென் பாருமுள ரென்று கூறி, "காமர் கடும்புனலென்னுங் கலியிலுள் 'சிறுகுடியீரே' என ஓரடியாலே தனிசொல்லுந்தது" என்பர். பெருந் தேவனார்; வீர.யாப்பு. கரு.'சிறுகுடியீரே சிறுகுடியீரே' சிலப.உசா:கக.

க. (அ)"விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலே" மலை. கஉஅ. (ஆ) "கிழங்குகீழ் வீழ்ந்து தேன்மேற் றூங்கிச, சிற்சில விதழ்ப் பற்பல விணர்ந்து, தினைகிளி கடியும் பெருநகன் ஞெடன்" நற். ருஉஅ: க-ரு. (இ)··கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்ந் தும்மே" புறம். கoக.

உ. (அ) "சிலம்புடன் கமழு மலைநகு குலைக் காந்தள்" குறுந். உருக. (ஆ) "நறுந்தண்சிலம்பி னூறுகுலைக் காந்தள்" ஐங். உஉசு.

ரு. (அ) "வாங்கமை மென்றோள் வகையின் மகளிர்" பதிற். கஉ. உஉ-ரு. (ஆ) "வாங்கமை மென்றோட் சூரமகளிரோம்" கிணைமொழி. அ. (இ) "வாங்கமைமென்றோணி மடந்தை" நாற். சூ. கருக. மேற்கோள். "கண்ணுஞ்".

சு. "கொழுநற் றொழுதெழுவாள்." திரிள். நிடி.

டு. "கானவர் வார்விற் கணைபிழை யாதகண் ணுர்சிலம்பன்" தினைகை. களவு. ருகஉ.

சு. இந்நூற்பக்கம் சுக. உ- (ஆ, இ) என்பவற்றின் குறிப்புப் பார்க்க.

எ. தொழுதெழல் எழுந்து தொழுவலென்று முன்பின்னுகப் பொருள்படு மென்றும் எழுதல், துயிலெழுதலென்றுமே கூறுவர், பிரயோக விவேக.

(பிரதிபேதம்) * இம்மலைவாழ்வார் † மலையிற்சு மிசையில், ‡ கொள்வர், || தண்ணியரும். = வணாக்த, வளாக்த.

அவர்தம் ஐயன்மார்தாமும் தாம் தொடுத்த அம்புகள் இலக்குத்தப்பா ராயினர் ; எ - று.

என்றது, வினைவின்றேல் வேட்டையாடியும் உணவுணடாக்குதுமென்று கருதில் அதுவுந் தப்புமென்றுளென்றவாறு.

(க) எனைவாங்கு,

எ - து: என்று; எ - று.

ஆங்கு, அசை.

உ0 (உ)அறத்தொடு நினறேனைக் கண்டு திறப்பட
வென்னோயர்க் *குய்த்தூரைத்தாள் யாய்

எ - து: தமர்வரைவுமறுத்துழி அறத்தொடுநின்ற என் †கூற்றைத் தாய் கெஞ்சாற்கண்டு நற்றாய்க்குத் தான் அறத்தொடுநிற்குங் கூற்றிலேயடக்(ங)கூற அதுகேட்டு (சு) அவளும் என்றமையன்மார்க்குவெகுட்சி‡பிறவாமற்செலுத்திக் கூறினாள்; எ - று.

உஉ அவரும், (ஞ)தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்
தொருபக லெல்லா முருத்தெழுந் தாறி

க. நற்றாய தந்தைக்குந் தன்னையர்க்கும் அறத்தொடு நிற்றற்கு "எனவாங்கு . ..யாய்" என்பது மேற்கோள்; தொல். கள. சூ. சூஎ. ந.

உ. "தாயறிவுறுதல் செவிலியொடொக்கும்" என்பதற்கு. 'மகள் களவொழுகத்தில், செவிலிகவலுந் துணைக் கவலுதலல்லது தந்தையையுந் தன்னையன்மாரையும்போல நற்றாய் வெகுடலிலள்' என்று கூறி, 'அறத்தொடு . .யாய்' என்பதைத்தாய்வெகுளாமைக்கும் "அவரும், தெரிக .. தெழுந்து" என்பதை அவர் வெகுண்டமைக்கும் மேற்கோள் காட்டினர், இளம்; தொல். கள. சூ. சூஎ.

ங. "இங்கிவள்போய் மலர்க்காவி னெழில்விசயற் கீடழிந்த வின்ன லெல்லாஞ், சங்கெறியுந் தடம்பொருகைத் துறைவனுக்குச செவிலிய ராந் தாயர் சொன்னார்" வில்லி. அருச்சுனன்நீர்த்த. ஙஙு.

சு. நற்றாய் குறிப்பினன்றி யறத்தொடு நிற்கப்பெறாள். நாந்ம். சூ. களஅ.

ஞ. (அ) நற்றாய் அறத்தொடுநின்றவழி, தந்தையுந் தன்னையரும் முன்னர் நிகழ்ந்த வெகுட்சி நீங்கி உய்த்துக்கொண்டு உணர்வர் என்பதற்கும் தொல். களவி. சூ. சசு. நச. (ஆ) அகத்திணைக்கண் ஊரார்முதலிய அறுவகையோர்கூற்றுகப் பிறர் சொல்லி னல்லது அவர் கூறார் என்பதற்கும் தொல். செய். சூ. ககக. பே. நச. "தெரிகணை .. ...தலை." என்பது மேற்கோள். (இ) "வரிசிலை யிடவயி னேந்திக் கணைதெரிந், தெரியுமிழ் கண்ணினரிவரே" தமிழ்நெறி. மேற்கோள். (ச) "மலை

[பிரதிபேதம்] * உற்றுரைத்தாள், † கூறையென்றுய, ‡ இறவாமல்.

யிருவர்கட் குற்றமு மில்லையா லென்று
தெருமந்து (கூ)சாய்த்தார் தலை

எ - து: அதுகேட்டு அவரும் (உ)ஒரு முகூர்த்தமெல்லாம் நெஞ்சழன்று கண்சிவந்து தெரிந்த அம்புகளையும் பார்த்து வில்லையும் பார்த்து எழுந்து அலமந்து இருவரிடத்துங் குற்றமில்லையாயிருந்ததென்று சினம் ஆறித் தலை சாய்த்திருந்தார்; எ - று.

*இஃது அறத்தொடுநிலை வாய்த்தவாறு கூறியது.

உசு தெரியிழாய் நீயுநின் கேளும் புணர
(ஈ)வரையுறை தெய்வ முவப்ப வுவந்து

முற்றியபுயத் தாயன்னை கூறமற் றென்னையர் வான், சிலைமுற் றிய வெங் கணைதெரிந் தார்கண் சிவந்துறுத்தே" அம்பிகா. நசுக. (உ) "கடுகிய விளையர் கோக்குங் கண்ணிய பொருளுமெண்ணி, யடுசிலை யழலவேந்தி யாருயிர் பருகற் கொத்த, விடுகணை தெரிந்து" சீவக. கoஅசு. (ஊ) "கண்டவக் குமரனும் கடைக்கண் டீயுக, விண்டனை நோக்கித்தன் வில்லை நோக்கினன்" கம்ப. வேள்வி. சஅ. (எ) 'கணை கணை ஆராய்ந்து' எடுத்தலை, 'கணைதெரிதல்' என்பது மரபு. இதனை (க)"கணைதெரிந்து" நள. சுயம். கூசு. கம்ப. நாகபாச. எக. பாகவதம். (கo) மலரவன் சிறார். எ.(உ)"தெரிகணை" கஃப. வருணனைவழி. நஉ. நாகபாச. கசுநூ. நிகும்பலைப். சடு; (ஈ) "தெரிந்த வெங்கணை." கம்ப. இராவணன்வதை.கடு.(ஈ)"தெரிசரங்கள்"(டு)"கூர்சரங்கடெரிந்தனர்" வில்லி. பதினென்காம் போர். சடு, கஉஅ.

க. (அ)"கணைதுயர்க்கவலையாற் கணனென்பான்றலை,தலையிறக் கிட்டவர் தம்மைப் பார்த்திலன்" விநாயக. சிந்தாமணி.ககஎ.(ஆ)"நாணலைப்பத் தலை சாய்த்தார்" பூவாளூர். இந்திரன். சக.

உ. (அ) "செவ்விதின் முகங்கீழிட்டுத்திருந்துரை யாடா மாகி, யிவ்வண மிரண்டுகன்னலிருந்துளங் கலங்கி ஞேர." பிரமோத்தர. உமாமகேசுவரபூசாபலம். நஎ. (ஆ) "முனிவனு மதிதி மாது முகூர்த்தமொன்றவச மெய்தி" விநாயக. மகோற்கடர். எஅடு.

ங. வரையுறை தெய்வமென்றது, (அ) குறிஞ்சிக கிழவனுகிய முருகக் கடவுளை; கலி. சo: கக-ஆம் அடியின் உரையையும் (ஆ) "கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை, யெழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே" - பிரிந்த கேளிர் வந்துபுணர்ந்து பின் நீங்காமைப்பொருட்டு மகளிர் யாழை யெழுவி நின்னைப்பாடுகின்ற பாட்டை விரும்பினேஎ். பரி. கச: உசு - சு. என்பவர்தமையும் (இ) சிலப். உச: "கபிலை" "மலைமகள்" "குறமகள்" என்னும் முதலியுடைய செய்யுட்களையும் நோக்குக. (ஈ)

(பிரதிபேதம்) * தெரியிழாய்.

(க)குரவை தழீஇயா மாடக் குரவையுட்
(உ)கொண்டு நிலைபாடிக் காண்

எ - து: * தெரிந்தஇழையினையுடையாய்; நீயும் நின்கணவனும் கூடும் படியாக†இவ்வரையிலுறைகின்ற தெய்வமும் மனமகிழும்படி யாம் ‡மகிழ்ந்து ‖ குரவையைக் கைகோத்தாடுதற்கு ÷ அக்குரவைக் கூத்திற் கொண்டுநிலைச் செய்யுளை நீபாடிக்காண்; × எ - று.

யாமென்னும் படர்க்கையுளப்பாடு, ஆயத்தை **உளப்படுத்தி நின்றது.

இது நாமக் காலத் துண்டெனத் தோழியேமுறு கடவு ளேத்தியது (ங) ஒருவர் கூற்றினை ஒருவர் கொண்டுகூறுதலிற் கொண்டுநிலையாயிற்று.

ஙஂ நல்லாய்,
நன்னு டலைவரு மெல்லை நமர்மலைத்
தந்நாண்டாந் தாங்குவா ரென்னுறு றனர்கொல்

எ - து: அதுகேட்ட தலைவி, நல்லாய், நம்மை வரைந்துகொள்ளும் நல்ல நாள் நம்மிடத்தே வருமளவில் நஞ் சுற்றத்தார் தம்மலையிடத்து நாணைத் தாங்குவார் தாம் என்ன நல்வினையைச் செய்தார்கொலென்றாள்; எ - று.

சுற்றத்தாரிடை ††வரைதலாற்பிறந்தநாண் தாங்கலரிதென்றாள்.

ஙஙூ (ச)புனவேங்கைத்‡‡தாதுறைக்கும் பொன்னறை முன்றி
னனவிற் புணர்ச்சி நடக்குமா ||| மன்றோ

"விடர்முகை யடுக்கத்து விறல்கெழு சூலிக்கு" தொ.நூ. உகஅ. என்பதனுல் கொற்றவையை யென்றுமாம். (உ) இளம்பூரணர், குறிஞ்சிக்குக் கொற்றவையும் தெய்வமென்பர்.

க. குரவை, இங்கே குன்றக்குரவை.

உ. "கொண்டு நிலைபாடி யாடுங் குரவையை" சிலப். (உசை.)

ங. தொல். கற்பி. சூ. டு. நச். இப்பகுதியுரையில்"'தெரியிழாய்.....காண்' எனத் தான்பராய தெய்வத்தினைத் தோழி கற்புக்காலத்துப் பரவுக் கடன் கொடுத்தற்கு எத்தியவழித் தலைவனு மேத்துதலாம்" என்பது காணப்படுகின்றது.

ச. வெண்கலியுறுப்பு நிலையொத்துப் பாவேறுபடுங் கொச்சகத்து, இடை நின்ற கொச்சகம் ஈற்றடி குறையாது வந்ததற்கு, "புனவேங்கைத் .....கடிது மாமன்றே" என்பது மேற்கோள்; தொல். செய். சூ. கஙுடி. பே.

(பிரதிபேதம்) * என வறத்தொடு நிலையாய்த்தலாறு கூறிப் பின்னர்த் தெரிந்த, † இவ்வரையுறைகின்ற, ‡ மகிழ்ந்து கைகோத்து, ‖ குரவைக்குக் கை. ÷ அக்குரவைக் கூத்திற்குக், × என்றாள், ** உளப்படுத்திற்று, †† வரைவால், ‡‡ தாதுக்கும், ||| என்றே.

(க)நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமா *நன்றே

எ - து: புனத்தினின்று வேங்கைப்பூவிற் பொன்போன்ற தாது உதிரும் பாறையையுடைய முற்றத்தே வெளியிலே உண்டாங் கூட்டமும் ஒப்பில் நடக்குமல்லவோ? அங்ஙனமிற் புணர்ச்சி நடந்ததாக அப்பொழுதே கனவிடத்தே உண்டாய்ப்போதுங் கூட்டத்தைப் போக்கிவிடுவேமல்லவோ? †எ - று.

நனவிலும் புணர்ச்சி கனவிலும் புணர்ச்சியென ஆமென்பனவற்றைக் கூட்டுக, நடக்கலுமென்றது உம்மீற்றுவினையெச்சம்; விரைவுதோன்ற நின்றது.

"வரைவுதலைவரினும்" (உ) என்பதனுல் தலைவி தன்வயினுரிமையும் அவன் வயிற்‡பரத்தையுந் தோன்றக் கூறினுள்.

க. "நனவிற்புணர்ச்சி நடக்கலுமாங்கே" என்பது (அ) "அன்னமாபிற் காலங்கண்ணிய, வென்னகிளவியு மவற்றியல்பினவே" என்பதனுற் கொள்ளப்படும் வினையெச்சங்களுள் உம்மீற்று வினையெச்சத்துக்கு, மேற்கோள். தொல். வினை. சூ. ஈஉ. சே. சூ. ஈடு. தெய். (ஆ) இதனை ஒன்றென முடித்தலாற் கொள்கவென்பர் கல்லாடர்; தொல். வினை. சூ. ஈ0. (இ) "'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய" என்பதனுற் பெறப்படும் என்பர். நச்; தொல். வினை. சூ. ஈக. (ஈ) செய்து செய்பு என்னுஞ் சூத்திரத்து 'இன்ன' என்றதனுல் அடக்கிக் கொள்க வென்பர், மயிலைநாதர்; நன். வினை. சூ. உசு.(உ)வினையெச்சங்களுள் இன்னீறு உமமீறுய்த்திரிந்ததென்பர், இ - வி. மூலாசிரியர்; இ - வி. சூ. உசசு. (ஊ) 'நனவு, போர்க்களத்தையும் அகலத்தையும் உணர்த்துவதுமன்றிச் சாக்கிரவவத்தையையு முணர்த்துமென்பதற்கு மேற்கோள்காட்டுவர், இராமாநுச கவிராயர்; நன். உரி. சூ. கஅ.

(எ)"கனவுதொறு மிவள்காமக் கனிநுகர்வா ளாகவந்தக் கனவிற்கூட்ட, நனவிலுறு புணர்ச்சியிலு மளவிறந்த நன்னலமே கல்குயன்றே." பிரமோத்தர. உமாமகேசுவரபூசாபலம். ககூ.

உ. தொல். களவு. சூ. உ0. இப்பகுதிக்கு நச்சினர்க்கினியர் களவு வெளிப்பட்ட பின்னராயினும் வெளிப்படு முன்னராயினும் வரைந்தெய்துதற் செய்கை தலைவன்கண் நிகழின் 'ஆண்டு முற்காலத்து நிகழ்ந்த ஆற்றுமை பற்றித் தன்வயினுரிமையும் அவன்வயிற் பரத்தைமையும்படத் தலைவி கூற்று நிகழுமென்று கூறி அதற்கு "நன்னுடலைவரு ..... கடிதுமாமன்றே" என்றபகுதியை மேற்கோள் காட்டி 'நாண்தாங்கி ஆற்றுவாரு முளரோ வெனவும் கனவிற் புணர்ச்சி கடிதுமெனவும் இரண்டுங் கூறினுள்' என்பர்.

(பாடபேதம்) * என்றே, † என்று பாடினுள், ‡ பாத்தைமையும்.

கூஎ (அ)விண்டோய்கன் னுடனு நீயும் வதுவையுட்
(உ)பண்டறியா தீர்போற் படர்கிற்பீர் மற்தொலோ
பண்டறியா தீர்போற் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போற் காக்கிற்பென் மற்கொலோ

எ - து: அதுகேட்ட தோழி விசும்பைத் தீண்டுகின்ற மலைநாடனும் நீயும் அக்கிலியாணத்தே பண்டு கண்டறியாதீர்போல மிகவும் நடப்பீரோ? பண்டு கண்டறியாதீர்போல நடந்திருடைய பழைய உறவை யான் கண்டறி யாதேன் போல மிகவும் *மறைப்பேனோ? என்றாள்; எ - று.

ஓகாரங்கள் ஐயம்.

சுக (கூ)மைதவழ் வெற்பன் மணைவணி காணுமற்
கையாற் புகைபெறாஉங் †கண்களுங் கண்கமோ

எ - து: மேகந் தவழும் மலையை யுடையவனுடைய மணைக் கோலங் காணுமற் கையாலே புகைத்தலைப் பெறுகின்ற கண்களுங் கண்களென்று கூறப்படுமோ? ‡எ - று.

சுகூ எனினமன், (சு)நின்கண்ணுற் காண்பென்மன் யான்

எ - து: அதுகேட்ட தலைவியான் நின்கண்ணாலே மிகவுங் காண்பே னென்றாள்; எ - று.

சுசு (ரு)நெய்த லிதழுண்கண், நின்கண்ணு னென்கண் மன

க. "புதுவை போலுநின் வரவுமிவள், வதுவை நாளெனுக்கழுங் காண்கு வல்யானே" கலி. நெஉ: உசு - நி.

உ. நிரைடைச்சொல் நிற்கின்றவிடத்தே மற்றோரிடைச்சொல்லு நிற்றலா கிய பிறிதவண் நிலையலுக்கு 'பண்டறியா..... ..மற்கொலோ'என்பது மேற்கோள். தொல். இடை. சூ. கூ. நச்.

ங. "கரியவனைக் காணுத கண்ணென்ன கண்ணே, கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்னகண்ணே" சிலப். (கஎ) 'பெரியவனை'

ச. (அ)"எம்மெனவரூஉங்கிழமைத்தோற்ற, மல்லாவாயினும்புல்லுவவுள வே"என்புழியுளவென்றதனால்,சிறுபான்மைதலைவி தோழியினுறுப்பைத் தன்னுறுப்பென்று கூறுவனவும் கொள்க வென்றுகூறி அதற்கு (தொல். பொருளி. சூ. உஎ.) நச்சினார்க்கினியரும் (ஆ) கலிப்பாவி னிடையே மூச்சீரடி வந்ததற்கு (தொல். செய். சூ. எ0.) பே. நச். இருவரும்'நின்கண்ணுற் .. ..யான்'என்பதைமேற்கோள்காட்டினார்.

ஞ. 'தோழி தலைவியினுறப்பைத் தன்னுறுப்பென்று கூறுவதாகிய எம் மெனவரூஉங் கிழமைத்தோற்றத்திற்கு 'நெய்தலி தழுண்கண்... .. மன',என்பது மேற்கோள். தொல். பொருளி. சூ. உஎ. நச்.

(பிரதிபேதம்) * மறைப்பேனே ஓகாரங்கள்,†கண்ணுங் கண்ணுமோ, கண்ணுங்கண்ணே, ‡ என்றாள்.

எ - து: அதுகேட்ட தோழி நெய்தலிதழ்போலும் மையுண்கண்ணுகிய நின்கண் மிக என்கண்ணுவதாகவென்றுள்; எ - று.

இதுவும், "தாயத்தி னடையா" என்னும் (க) சூத்திரத்தடக்கினும்.

எனவாங்கு;*

எ-து, என்று காஞ்சொன்ன அக்காலத்தே; எ - று.

சசு (உ)நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத்
(ங)தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக
(ஞ)வேய்புரை மென்றோட் பசலையு மம்பலு
மாயப் புணர்ச்சியு மெல்லா முடனீங்கச்

க. தோல். பொருளியல். சூ. உஎ.

உ. (அ) கலிக்கு உறுப்பாய்வரும் ஆசிரியம் அறுசீரடியும் ஐஞ்சீரடியு முடுகி ஒரு தொடராய் வந்ததற்கு)தோல். செய். சூ. சுஎ. நச்.) "நெறியறி.... . .. ..பொலிகமாவினியே" என்பது மேற்கோள். (ஆ) 'முடுகுவண்ண மென்பது அராகந்தொடுத்த அடியோடு பிற அடிபடத் தொடர்ந்தோடுவது.' என்றுகூறி அதற்கு 'நெறியறி. .. .. ..ம்பலும்' என்பதை மேற்கோள் காட்டுவர், பே; தோல். செய். சூ. உஙஙு. (இ) முடுகுவண்ணமென்பது நாற்சீரடியின் மிக்கோடி அராகத்தோடொக்கு மென்றுகூறி அதற்கு 'நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇ' என்பதனை மேற்கோள் காட்டினர், இளம்; தோல். செய்.சூ.உஉ. 'முடுகு'.(ஈ)இலக்கண விளக்கத்து'முடுகுவண்ணம் நாற்சீரடியின் மிக்கு ஓரடி அராகத்தோடொக்கும்' என்றிருப்பது திருத்த மானதென்று தோற்றுகிறது. இ - வி. சூ. எடுஎ. (உ) களவு வெளிப் படுப்போன் தலைவன் என்பதற்கும் (தோல். கள. சூ. சஅ.) (ஊ) கலியில் அறுசீரடியாகிய கழிநெடிலடி வந்ததற்கும (தோல். செய். சூ. சo)இதனை மேற்கோள்காட்டினர்;நச்.(எ)'நெறியறி செறிகுறிபுரிதிரிபு' என்பது முடுகுவண்ணத்திற்கு மேற்கோள்தோல். செய். சூ: உஙஙு. ந.

ங. (அ)கலிப்பாவின் ஐஞ்சீரடிவந்ததற்கு 'தகைமிகு . ..ரினமாக'என்பது மேற்கோள். தோல். செய். சூ. சுஙு. பே. (ஆ) இதனைக் கலிக்குறுப் பாகிய ஆசிரியத்துள் ஐஞ்சீரடி வந்தென்பர்; நச். தோல். செய். சூ. சுஙு. நச்.

ஞ. (அ) 'வேய்புரை மென்றோள்' என்பது புரையவென்னு முவமச்சொல் மெய்யுவமத்திற்கு வருகற்குமேற்கோள். தோல். உ-வ்ம.சூ. கடி.இளம் 'கடிப்ப'; (ஆ) 'வேய்புரை மென்றோள்.' தூறிஞ்சி. உசஉ.

(பிரதிபேதம்) * ஆங்கசை நெறியறி.

(க)சேயுயர் வெற்பனும் வந்தனன்
*பூவெழி லுண்கணும் பொலிகமா வினியே

எ - து: நூனெறியாலே அறிந்த இருவருங் கூடுவதற்கேதுவாகிய முகூர்த்தம் வேறுபட்டுத் தப்புதலே ஒருகாலத்தும் அறியாத(உ)கணியை முன்னிட்டு, அழகுமிகுகின்ற தொகுத்துக்கூறுதலேயும் வகுத்துக்கூறுதலேயும் அறியுஞ் சான்றவர் தனக்குச் சுற்றமாக, மூங்கிலேயொக்கும் தம்முடைய மெத்தென்ற தோளிற் பசலையும் ஊரிற் கூறும் அம்பலும் பொய்யாகிய †களவிற் கூட்டமு மெல்லாஞ் சேர நீங்கும்படி நீளிதாய் உயர்ந்த மலையினை யுடையவனும் வந்தான், நின்னுடைய பூவினது அழகையுடைய கண்ணும் பொலிவதாக ‡என்றாள் ; எ - று.

'கானகனுடன்மகன்' 'எனவாங்கறத்.....யாய்',எனத்(ஙூ)தோழிகூறிய இருபாற் குடிப்பொருளைச் செவிலி கூறி அறத்தொடு நின்றாளெனத் தோழி கொண்டெடுத்துமொழிந்தவாறு காண்க.

இதனால், தலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

தெய்வமஞ்சலென்பது களவிற்கும் உரித்தாகலிற் ||றங்குலதெய்வமாகிய வரை யுறை தெய்வத்திற்குக் குரவை யாடுதல் தலைவிக்கும் உரித்தாகலிற் கொண்டுநிலைபாடினாள். இஃது அறத்தொடுநிலை ஏழுவகையினுள் (சு) ÷எத்தலும் எளித்தலும்வந்தன.

இது ×தரவின்பின் 'அவனுந்தான்(ஙூ)னைவிதணத்து' என்பது முதலிய கொச்சகங்கள்வெண்பாவாய்,'புனவேங்கை'முதலியனதுள்ளலோசை விராய்த் தளைவகை ஒன்றிக் கொச்சகமாய், ஒழிந்தபாவும் மயங்கி, சுரிதகம் முடிவிலாற் கலிவெண்பாவுறுப்பின் வேறுபட்ட கொச்சகம். "ஆசிரிய மருங்கினும்

க. "சேயுயர்... .....வினியே" என்பது களவுவெளிப்பட்டபின் வரைவு நிகழ்ந்ததற்கு மேற்கோள்; தோல். கள. சூ. சகூ. நச்.

உ. கணிகூறும் நல்லவேளையில் வரைதல் மரபென்பது கலி. கூஉ: கஉ-ச. ஆம் அடிகளின் குறிப்பிற்காணப்படும்.

ஙூ. இந்நூற்பக்கம், உகஅ, சு: (அ) குறிப்புப் பார்க்க.

ச. 'காமர் கடும்புனல்' என்பதனுள் இரண்டு (ஏத்தல், எளித்தல்.) வந்தன என்பர், நச்; தோல். பொருளி. சூ. கஙூ.

ஞ. (அ)"'காமர்.....வினியே' இதனுள் 'எனவிதணத்து' என்பது முதலிய கொச்சகங்கள் வெண்பாவாய்,'புனவேங்கை'முதலியனதுள்ளலோசை விராய்த் தளையொன்றிய கொச்சகமாய், ஒழிந்தபாவுமயங்கி, சுரிதகமும் முடிவிலாதலின் இது கொச்சகமாயிற்று" தோல். செய். சூ. கஞஞ. நச்.(ஆ)"'காமர்.....பெருமையளே' இதுதரவு;இதனுள் இரண்டாமடி ஐஞ்சீரான்வந்தது. 'அவனுந்தான்.....மகன்' இதனுள் முதற்க

(பிரதிபேதம் * போதெழில், † களவிற், ‡ எனவரைவு மலிந்தமை கூறினாள், || தலைமகள்தெய்வம், ÷ எளித்தலும் ஏத்தலும், வந்தது, × தரவும் அவனுந்,

வெண்பா மருங்கினு,மூவகை யடியு முன்னுத லிலவே" (க)என்பதனுள் முன்னுதலில என்றதனால் நாற்சீரும் ஐஞ்சீரும் அறுசீருமாகிய மூன்றடியானும் வரும் முடுகியலோடு விராய்த் தொடர்ந்து ஒன்றாய்க் கலிக்குறுப்பாய் வரும் ஆசிரியமும் வெண்பாவும் உளவென்று கொள்க: என்றலின், 'நெறியறி ....மூந்துறீஇ' என அறுசீரடி முடுகியலும் 'தகைமிகு..... ..மாக' என ஐஞ்சீரடி முடுகியலும் விராய ஆசிரியச்சுரிதகம் வந்தது. "மூச்சீர் மூரற் கையு ணிறையவுரிற்கும்"(உ)என்பதனால், 'நீண்கண்ணுற்காண்பென்மன்யான்' என மூச்சீரடியும் வந்தது. (நு)

(சுO.) அகவினம் பாடுவாந் தோழி யமர்க்க
ணாகைமொழி நல்லவர் நாணு நிலைபோற்

ணின்றது கூன். 'சிறகுடையீரே. ...தொழுகலான்.' இதனுள் முதல் ஆசிரியவடி.'காந்தள்.....கோல்'இவைமூன்றுங் கொச்சகமெனப்படும். 'எனவாங்கு.' தனிச்சொல். 'அறத்தொடு .. . .யாய்' இது வெள்ளைச் சுரிதகம். 'அவருந்... ...காண்.' இவையிரண்டுங் கொச்சகம். 'நல்லாய்.' தனிச்சொல். 'நன்னுட்டலைவரு .. . .தனர்கொல்.' இது பேரெண். 'புனலேங்கை . ..மற்கொலோ.' இவையிரண்டுந் தாழிசை. 'மைதவழ் .. ..கண்ணுகுமோ' இதுபேரெண் 'என்னைமன் ..மன' இதுவுங்கொச்சகம். 'எனவாங்கு' தனிச்சொல். 'நெறியறி ..வினியே' இதுசுரிதகம். இதனுள்முதலடி அறுசீர்முடுகியல். இரண்டாவது ஐஞ்சீர் முடுகியல். இவ்வாறு வருவன கொச்சகக் கலிப்பாவெனப்படும்" தொல். செய். சூ. கசள. இளம். 'தவும் போக்கும்' (இ) "வேட்கைத் தோற்றத் தலைமகனில்லாதவழித் தோழி கூற்றுநிகழும்; அது 'காமர் கடும்புனல்' என்னும் பாட்டினுட்காண்க" தொல். பொருளி சூ. கஙு. இளம். (ஈ)"காமர்கடும்புனல் .... டாடுவாளென்னுங கொச்சகக்கலி யுள்ளும் நேரீற்றியற்சீர் வந்தது" யா - வி. சூ. கஙு. (உ)"காமர் ... .. . டாடுவாளென்னும் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவினுள் வெண் பாவும் ஆசிரியப்பாவும் மயங்கிவந்தன" யா - வி. சூ. நுO; யா - கா. ஒழிபியல், சூ. இ - வி. சூ. எசஙு. (ஊ) "காமர்கடும்புனல் .. .. பொலிகமாவினியே.' இது வெள்ளைபலவும மயங்கி ஆசிரியவடியும் விரவி வந்தமையால் அயன்பாங்கிசைக் கொச்சகக்கலிப்பா; இதன் முதற்கண் நேரீற்றியற்சீர் வந்தவாறு கண்டுகொள்க". யா-வி. சூ. அசு. (எ)"வெண்பாவினேனும்ஆசிரியத்தினேனும்வந்தமயங்கிசைக் கொச்சகக் கலிப்பா 'காமர்கடும்புனல் . ...டாடுவாள்' என்னும் பழம்பாட்டு முதலாயின" யா-கா. செய். கஉ.

க. தொல். செய். சூ. சுள.

உ. தொல். செய். சூ. எO.

(பிரதிபேதம்) ' விராய ஆசிரியச்.

றனைகொண்ட வேனலுட் டாழ்குர லரீஇ
முனைவளர் சாந்துரன் முத்தார் மருப்பின்
வனைசா லுலக்கை வயின்வயி ணேச்சிப்
பனையிணெய் செய்தான் பயமலி யேத்தி
யகவினம் பாடுவா நாம்;

அ ஆய்நுத லணிகூந்த லம்பணைத் தடமென்றோட்
டேனுறு கதுப்பினு யானுமொன் றேத்துகு
வேய்நரல் விடாக நீயொன்று பாடித்தை;

ஈக கொடிச்சியர் கூப்பி வனைதொழு கைபோ
லெடுத்த நறவின் குலையலங் காந்தட்
டொடுத்தமென் சோரத் தயங்குந்தன் னுற்ற
ரிடுக்கண் டவிர்ப்பான் மலி;

கஎ கல்லாக் கடுவன் கனைமலி சுற்றத்து
மெல்லிரன் மந்தி குறைகூறுஞ் செம்மற்றே
தொல்லெழி றேய்ந்தார் தொலையி னவரினு
மல்லற் படுவான் மலி;

கஅ புரிவிரி புதைதுதை பூத்தகைந்த தாழ்சினைத்
தளிரன்ன வெழின்மேனி தகைவாட நோய்செய்தா
னருவரை யடுக்கநா மழித்தொன்று பாடுவாம்;

உஉ விண்டோய் வரைப்பந் தெறிந்த வயாவிடத்
தண்டா முருவி யரமகளி ராடுபவே
பெண்டிர் நலம்வெளவித் தண்சாரற் றுதுண்ணும்
வண்டிற் றுறப்பான் மலி;

உசு ஓடுங்கா வெழில்வேழம் வீழ்பிடிக் குற்ற
கடுஞ்சூல் வயாவிற் கமர்ந்து நெடுஞ்சினைத்
தீங்கட் கரும்பின் கழைவாங்கு முற்றூரி
னீங்கல மென்பான் மலி;

எணகாம்;

உக தன்மலி பாட நயவந்து கேட்டருளி
மெய்ம்மலி யுவகையன் புகுதந்தான் புணர்ந்தாரா
மென்முலை யாகங் கவின்பெறச்
செம்மலை யாகிய மலைகிழ வோனே.

இது தோழியுந் தலைமகளுந் தலைமகனது மலையை வாழ்த்திப் பாடுகின்ற *வள்ளைப்பாட்டில், தோழி இயற்படமொழியத் தலைமகள் இயற்பழித்தமை, தலைமகன் சிறைப்புறமாகக் கேட்டு வரையவருகின்றமை, தோழி தலைமகட்கு உரைத்தது.

இதன் பொருள்.

அகவினம் பாடுவாந் தோழி யமர்க்க
ணகைமொழி (க)நல்லவர் நாணு நிலைபோற்
றகைகொண்ட வேங்ஙலுட் டாழ்குர லுளீஇ
முகைவளர் (உ)சாந்துரன் முத்தார் (ங)மருப்பின்
வகைசா (ச)லுலக்கை வயின்வயி னெஞ்சிப்
(ஞ)பகையினெப் செய்தான் பயமலை யேத்தி
யகவினம் பாடுவா நாம்

எ - து: தோழீ! நங் கருத்திற்கு வேண்டியவாறெல்லாம் அழைத்தே மாய்ப் பாடக்கடவேமெனத் தோழி†கூற, அதுகேட்ட தலைவி அழகுகொண்ட தினைப்புனத்தில்(கூ)‡முகத்திற்குப் பொருந்தின கண்ணினையும் மகிழ்ச்சியைத் தரும் மொழியினையுமுடைய நல்ல மகளிர், நாணி இறைஞ்சும் நிலைபோல முற்றித்தாழ்ந்தகதிரையுருவி அரும்புவளர்ந்த சந்தனமரத்தாற்செய்தவுரலிலே பெய்து,(எ)முத்துநிறைந்த யானைக்கொம்பால் வகுத்த நிறைந்த உலக்கையை

க. (அ) "புன்கதிர் கையுறு முவகையாற் பணியுங் கற்பினோர், மெய்யுறு பரிவென விளைந்து சாய்ந்தவே" கந்த. திருநாட்டு. உO. (ஆ)"கற்பின் மகளிர்போ லொசிந்த தன்றே" திருவிளை. திருநாட்டு. உச. (இ) "மங்கைமையின் மிகநாணு, மாதரைப்போற். . .. .கதிர்முதிர்ந்து வரவரக்கீ ழிறைஞ்சுமால்" காஞ்சிப். திருநாட்டு. கூச.

உ. சந்தனவுரலும் தந்தவுலக்கையும்: "சந்துரற் பெய்து தகைசா லணிமுத்தம், வஞ்சி மகளிர் குறுவே வான்கோட்டால்" சிலப். உக.

ங. மருப்புலக்கை: "வயக்களிற்றுக் கோடுலக்கை" கலி. சக: க - உ, என் பதையும் அதன் குறிப்பையும் பாக்க.

ச. கொடிச்சியர் மலைபாடித் தானியம் குறுதல் மரபு; "மைபடு மால்வரை பாடினள் கொடிச்சி, யைவன வெண்ணெற் குறூஉ நாடனெ" நற். கூளங: ங - ச.

ஞ. ஊடற்கண் ணின்றியும் தலைவனைக் கொடியனென்றற்கு, "பகையினெப் செய்தான்" என்பது மேற்கோள். தொல். பொருளியல், சூ. கக. நச்.

கூ. "அமருணகண" (கலி. ககங. உ) என்பதன் உரை பார்க்க.

எ. முத்து யானைக்கொம்பிலும் பிறக்குமென்பது மரபாதலால் அதனை 'முத்தார் மருப்பு' என்றார்: இது மரபென்பதை (அ) "பெருங்

(பிரதிபேதம்) * வெள்ளைப்பாட்டில், † கூறினாள். அது, ‡ அகத்திற்குப்.

எண்ணிடத்தும் நின்னிடத்தும் உயர்த்திக்குரு நின்று(க)மருந்தில்லாதநோயைச் செய்தவனுடைய பயன்தருகின்ற மலையை வாழ்த்தி •காம் நங் கருத்திற்கு வேண்டியவாறெல்லாம் அழைத்துப் பாடக்கடவேமென்று *உடம்பட்டாள்; எ - று.

† அகவுதல், அகவல்போல நின்றது. தோழி கூற்றினைத் தலைவி விசேடித்துக்கூறினாள்; இரட்டிப்பன்று.

மணம் நாறுகின்ற சந்தனத்தாற் செய்த உரலென்றதனாற்பயன் வரைந்து கோடற்பொருட்டுத்தலைவி இயற்பழித்ததாகவும்,புலாலுற்றத்தையும் முத்தையு முடைய மருப்பாற்செய்த உலக்கையென்றதனாற் பயன் வரைந்துகோடற் பயனின்றிப் புகழ்ச்சிமாத்திரையேயாகத் தோழி இயற்பட்டுமொழிந்ததாகவும், இறைச்சியிடத்தே பொருள்பிறந்தவாறு காண்க. இஃது "இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே, திறத்தியன் மருங்கிற் றெரியு மோர்க்கே" என்னும்(உ)பொருளியற்சூத்திரத்தானுணர்க. புலால்நாறும்மருப்பென்றதனால் வரைந்துகோடல் பயவாமையின் இறைச்சியாயிற்று. நோய்செய்தான் மலையா யிருக்கவுந் தினைவிளைத்துப் பயன்தருகின்ற அதிசயத்தை யேத்தியெனவே தலைவி இயற்பழித்தாளாயிற்று.

அ ஆய்நுதல் மணிகூந்த (ஈ)லம்பணைத் தடமென்றோட்
டேனுறு கதுப்பினு யானுமொன் றேத்துகு
(சு)வேய்நரல் விடரக நீயொன்று (டு)பாடித்தை

களிற்று, முத்துடை வான்கோடு" "முருகு. கூ0ச - டு. (ஆ) "யானை, முத்தார் மருப்பின் " குறிஞ்சி. கூடு - கூசு. (இ) " யானை, முத்துடை மருப்பின்" மலை. டுகஎ - அ. (ஈ) "முத்துடைமருப்பின் மழகளிறு" பதிற்று. கூஉ: கூ.(உ) "யானை வெண்கோடு கொண்டு, நீதிகழ் சிலம்பி னன்பொன் னகழ்வோன், கண்பொரு திமைக்குங் கிண்மணி கிளர்ப்ப, வைந்நுதி வான்மருப் பொடிய வுக்க, தெண்ணீர் ாலி கடுக்கு முதீக மொடு" அகம். உஅஉ: கூ - எ. (ஊ) "தந்திவாக மருப்பிப்பி..... முத்த மீனு மிருபதுமே"

க. "காம நோய்க்கோ ருமருந் தில்லை யன்றே" தூவா. கல்யாண. கசுடு.

உ. தோல். பொருளி. சூ. கூசு.

ங. அம்பணைத் தடமென்றோள். கலி. கச: க.

சு. "•வேய்நரல் விடரக நீயொன்று பாடித்தை" என்பது இத்தை யென்னும் இடைச்சொல்,முன்னிலை யசையாய் வருதற்கு மேற்கோள். நன். இடை. சூ. உக. மயிலை. வி. இரா. இ - வி. சூ. உஎசு.

டு. "செய்யித்தை சிவலிலைப் பதிட்டை சித்தையை, வையித்தை யச்சிவன் மாட்டு நீர்மலர், பெய்யித்தை பேணுமிப் பூசைப் பேற்றினும், கொய்

[பிரதிபேதம்] * உடம்பட்டுக் கூறினாள். † அகவு அகவுதல்.

எ - து: அழகியநுதலினையும், அழகுபெறுத்துகின்ற குழலினையும், அழகிய மூங்கில்போலும் பெருமையினையுடைய மெல்லிய தோளினையுமுடைய பூமணம் காறுங்கதுப்பினையுடையாய்! மூங்கில் ஒலிக்கின்ற முழைஞ்சையுடைய மலையை முன்புபேநலன்றி நீ இயற்பட ஒன்று பாடு, பின்னர் யானும் இயற்பட ஒன்று பாடுவேனெனத் தோழி *கூறினாள்; எ - று.

பாடிக்கை, முன்னிலைவினைத்திரிசொல்; எத்துகு, தனித்தன்மை முற்று.

கலவி இயற்படப் பாடாமையின், மேல் தோழி பாடுகின்றாள்.

கக கொடிச்சியர் கூப்பிய வரைதொழு கைபோ
(க)லெடுத்த நறவின் †குலையலங் காந்தட்
டொடுத்தகேன் சோரத் தயங்குந்கன் னுற்ற
ரிடுக்கண் டவிர்ப்பான் மலை

எ-து: தன்னைச்சேர்ந்தாருடைய வருத்தத்தைப்போக்குவானுடையமலை, கையிரண்டையுங் குவித்துக் கொடிச்சியர் தங்குறைதீர முருகன் உறையும் மலையைத் தொழுகின்ற கைகள்போல,உயர்ந்த நறவினையுடைய கொத்துக்கள் அசையுங்காந்தளிடத்து வைத்த தேன் ஒழுகும்படியாக, அக்காந்தள் அசையாநிற்கும்; எ - று.

மலை காந்தள் அசையுமென இடத்துநிகழ்பொருளின்மேழில் இடத்திற்கு எறிநின்றது.

இதனால், தெய்வத்தைத் தொழுங் கருத்தில்லாத காந்தளும் தெய்வத்தைத்தொழுவதுபோல நில்லாநின்றது. நீயும்வரைந்துகோடற்குக் குலதெய்வமாகிய முருகனைத் தொழுவாயாகவென இயற்படமொழிந்தாள். காந்தளிற் றேன் பயன்படாமற் சொரிகின்றாற்போல.நீயும் தெய்வத்தைத் தொழாவிடின் நின்னலனும் பயன்படாமற் கழியுமென இஃது உள்ளுறையுவமமாயிற்று.

யித்தை நினைத்தொடர் கொலையை யென்றனர்" கிருவாளைக்காப். நீலவிண்டு. கரு.

க. (அ)சாரியைகளைக்கூறுஞ் சூத்திரத்து,'பிறவும்' என்பதனால்மற்றும் சில சாரியைகளைக் கொண்டபின், "எடுத்த நறவின் குலையலங் காந்த ளென்புழி அலமென்பதோர்சாரியையும் உண்டாலெனின், அதனை அலங்கு காந்தளென்பதன் விகாரமென்ப" என இளம்பூரணரும் "வினைத்தொகை; சாரியை அன்று" என நச்சினார்க்கினியரும் (தொல். புண.சூ.கள.)கூறுதலால் இதுவே பழம்பாடமென்பது புலனாகின்றது. (ஆ) "அகலிலைக் காந்த ளலங்குலைப் பாய்ந்து, பறவை யிழைத்த பல்கணிறு அற்ற நறுவடை நெடுவரை" நற். கஅகி: அ - கo. (இ) "அலங்கு குலைக் காந்தள்" நற்.நகிக:உ.துறுநி.உகக.(ஈ)"பூந்தண்சாரற் பொங்கு குலை யெடுத்த, காந்தட்கொழுமுகை" பெருங். (உ) கஉ: கூஎ - அ.

(பிரதிபேதம்) * கூறத் தகலவி.....பாடுகின்றாள். பாடிக்கை. † குலையலங்குகாந்தள்.

கரி (அ)கல்லாக் கடுவன் கணமலி சுற்றத்து
(உ)மெல்லிரன் மந்தி குறைகூறுஞ் (ஈ)செம்மற்றே
தொல்லெழி றேய்ந்தார் தொலையி னவரினு
மல்லற் *படுவான் மலை

எ - து: தான்கூடின மகளிருடைய இயற்கைநலங் கெடின் அவரினும் வருத்தமுறுகின்றவன்து மலை, கடுவன் களவொழுக்கம் ஒழிந்து வரைந்து கொள்ளும் நிலைமையைக் கற்றுத் திரட்சிமிக்க சுற்றத்திடத்தே சென்று மகட் பேசுவார்போல மெல்லிய விரலையுடைய மந்தியை எனக்குத் †தரவேண்டு மென்று தன்குறையைச் சொல்லும் தலைமையினையுடைத்து ; ‡எ - று.

நம் தெய்வவழிபாட்டாற் களவொழுக்கம் ஒழிந்து நம்மைவரைந்து கொள்ளத் துணிந்து நஞ்சுற்றத்தாரிடத்தே சென்று தன் குறைகூறுவ னென்று உள்ளுறையுவமங்கொள்க.

கசு புரிவிரி புதைதுதை பூக்தைதந்த தாழ்சினைத்
தளிரன்ன வெழின்மேனி தகைவாட நோய்செய்தா
னருவரை ||யடுக்கமா மழித்தென்று பாடுவாம்

எ - து: முறுக்குவிரிந்த கொம்புமறைந்த நெருங்கின பூத் தாழ்ந்த சினை யிற் தைதைந்த தளிரையொத்த அழகையுடைய மேனி அழகுகெடும்படி நமக்கு நோயைச்செய்தவனுடைய ÷ ஏறுதற்கரிய உச்சிமலைகளையுடைய பக்கமலைகளை நாம் இனிப்பாடுங்கால் இயற்படமொழிதலை அழித்து இயற்பழித்தலாகிய ஒன்றைப் பாடுவேம் ; × எ - று.

க. (அ)"கருவிரன் மந்தி, யருவிடர் வீழ்த்ததன் கல்லாப் பார்ப்பிற்கு." மலைபடு. நகக - உ. (ஆ) "கருவிரன் மந்திக் கல்லா வன்பறழ்" (இ) "மந்திக் கணவன் கல்லாக் கடுவன்" (ஈ) "கல்லா மந்தி கடுவனே டுகளும்"(உ) "கருவி ரன் மந்திக் கல்லா வன்பார்ப்பு" ஐங்குறு. உஎஉ, உஎச, ரஎள, உஅ0. (ஊ) "கல்லாக் கடுவன்" அகம். நடுஉ: உ. எனஇச்சாதிக்குக் கல்லாமை அடையாகக் கூறப்படுதலும் காண்க.

உ. (அ)"பண்பிலுகிய சினைமுதற்கிளவி" என்புழி, வேற்றுமைப் பொருள் பற்றிவருங்கால் உறுப்பின் கிழமை யல்லாத தற்கிழமை பயிலாது வருங் குறிப்புவினை முற்றும் உரையிற் கோடலென்பதனைக் கொள்ளப் படும்; சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தலென்பதனைக் கொள்ளிலுமமையுமென்று கூறி 'மெல்லிரன்.....செம்மற்றே' என்பதனை மேற்கோள்காட்டுவர். சே.(ஆ)இதுபிறிதின் கிழமையாகிய உண்டமைப்பொருள்படநின்றது. என்பர், நச்; தொல். வினை. சூ. உஉ.

ஊ. றகர வுகரம் குறிப்பு வினை முற்றுய்வருதற்கு, "செம்மற்று" என்பது மேற்கோள். தொல். வினை. சூ. உஉ. கல்.

(பாடபேதம்) * படுப்பான், † தரவேணுமென்று, ‡ எனத்தோழி யியற்பட மொழிக்தாள், || அடுக்கலும், ÷ பெறுதற்கு, × என்னுள் தலைவி.

(க) பூத்தாழ்ந்தளிரெனவே சுணங்கும் மாமைநிறமுங் கூறிற்றும்.

உஉ விண்டோய் வரைப்(உ)பந் தெறிந்த *வ்யாவிடத்
தண்டா (ங)முருவி யரமகளி ராடுபவே
(ச)பெண்டிர் நலம்வௌவித் தண்சாரற் றூதுண்ணும்
வண்டிற் றுறப்பான்மலை

க. "மாவீன்ற தளிரியிசை மாயவ டிதலேபோ, லாயிதழ்ப் பன்மலரைய கொங்குறைத்தர"(கலி.உக: எ-அ.)என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. (அ)பசப்புறு பருவர லென்னும் குறள். ககக - ஆம் அதிகாரத்தின் அவதாரிகையில் "அது பசப்புற்ற பருவரலென விரியும்; அஃதாவது பசப்புறுதலாலுய வருத்தம்; இதனை, 'பர்தெறித்தவயா' என்பதுபோலக் கொள்க"என இத்தொடரை மேற்கோள்காட்டுவர் பரிமேலழகர். (ஆ) "வளங்கெழு திருநகர்ப் பந்துசிறி தெறியினும்,.....உயங்கின் றன்னையென் மெய்யென் றசைஇ, மயங்குவியர் பொறித்த நுதலள்" அகம். கஎ: க-ச.

ங. (அ) "அருவி நுகரும் வானர மகளிர்" மலை. உகச. (ஆ) "அமர நாடியர் துன்னியா டிடங்களும்" கம்ப. பிலநீங்கு. அ.

ச. (அ)"பெண்டிர் நலம்.. ..மலை" என்பதனை, புலன்பொருளாகப் பிறந்த உவகை யென்னு மெய்ப்பாட்டிற்கு, மேற்கோள்காட்டி, 'இஃது அறிவுபொருளாக உவகைபிறந்தது என்னை? மூகைப்பதம் பார்க்கும் வண்டுபோலத் தலைவியரை நுகைப்பதம் பார்க்கும் அறிவுடைமை காமத்திற் கேதுவாதலின்' என்பர் பே; (ஆ) இ - வி. நூலாரும் இவ்வாறே கூறுவர். (இ) "தாதுண் வேட்கையிற் போதுதெரிந் தூதா, வண்டோ ரன்னவ்வன் ணண்டாக் காட்சி"(ஈ)"நீயே பெருநல நகையே யவனே, நெடுநீர்ப் பெய்கை நடுநா ளெய்திக், கண்கமழ் புதுமல ரூதும், வண்டென மொழிப மகனெனை னுரே" (உ) "மகிழ்நன் மாண்குணம் வண்டுகொண் டனகொல், வண்டின் மாண்குண மகிழ்நன் கொண் டான் கொல்"(ஊ)"புதுவ மலர்தேரும் வண்டேபோல் யாழ, வதுவை வீழவணி .. .. ..வந்தமை கைப்படுத்தேன்" (எ) "வேனிற் பருவத் தெதிர்மல ரேற்றூதுங், கூனிவண் டன்னன் குளிர்வய னல் லூரன், மாண்மழை நல்லா ரிளநல முண்டவர், மேனியொழிய விடும்." (ஏ)"வண்டோ ரனையர் ஆடவர் பூவோ ரனையர்மகளிரென்பது;என்னை? வண்டுகள் தாதுதுமிடத்து நன்மலரே னுதுவேம் அல்லீர்தது னுதே மென்னு, எல்லாமலரும் னுதும். இனி. புவாயின 'சால எம்மையே னுதாது எல்லாப்பூவையும் னுதினீர்' என்பு புலவாவன்றே, அது போலத் தலைமகனும் எல்லாப் பெண்பால்களையும் தலைப்பெய்தற் (பிரதிபேதம்) * வியர்.

எ-து: பெண்டிருடைய நலத்தை நுகர்ந்து,தண்ணிய மலைச்சாரலிடத்துத் தாதை உண்ணும் வண்டு அப்பூவைத் துறக்குமாறுபோல, அவரைத்

றன்மையாகவுடையான்; அவர்தன்மைபறிவேம் போம்பொழுது புறந்தொழுதும் வரும்பொழுது எதிர்தொழுதும் எற்றுக்கொண்டு வழிபடுதலல்லது மலைத்தற் கண்ணேமல்லம்" (ஐ) "கழுநீர் மலரிவள் யானதன் கண் மருவிப்பிரியாக், கொழுநீர் நறப்பரு கும்பெரு நீர்மை யளிகுலமே" (ஒ) "மணிவண் டொன்றே கலம்பருக மலர்ந்த செந்தா மரைத்தடம்போ, லணிவேன் மன்ன னலம்பருக வலர்ந்த வம்பார் மழைக்கண்ணூர்" (ஓ)"முழுநீர்ப் பொய்கையுட் பொழுதொடு விரிந்த, செழுமலர்த் தாமரைச் செவ்விப் பைந்தாது, வைகலுதா வந்தக் கடைத்து, மெவ்வுந் தீராது நெய்தற் கவாவும், வண்டே யனையர் மாந்தரென்பது, பண்டே யுரைத்த பழமொழி" (ஔ) "வண்டாமரை பூத்தன வொத்தனர் வந்து சென்றே, னுண்டாடிய தேன்கலை யொத்தன சோங்கன் மைந்தர்" (஽) "கன்னிய ரனப்பி லாரைக் கடிமணஞ் செய்து கூடித், துன்னுபன்மலர்த்தே னுண்ணுஞ் சுரும்பென வின்பந் துய்த்தான்" (அஅ) "பூவே யனையர் புரிகுழற் பாவையர் பூவில்வரு, மாவே யனையர் வரிகழற் காளையர் வாணெடுங் கண், ணேவே யனைய விலங்கிழை யாய்நின் றிறங்களென்னே, நீவே யனைய நினைவுளைத் தோளி னிறம்பசந்தே" (ஆஆ) "வுண்டுபூ மலர்ந்துழி மதுவை யுண்பதிற்,றெரிண்டைவா யவணலம் பருகுநாள்" (இஇ) "நிரையிதழ்ப் பூங்கொம் பன்னார், மகிழ்தரு மின்பத் தேறன் மாந்தினன் மண்வன் டன்னான்" (ஈஈ) "மணமலரின் வண்டு நிகர் வன்கணர்." (உஉ) "முத்தவீர் முறுவலு முலையுங் காண்டொறும், பித்தின ஞெய்மதுப் பிலிற்றித் தாதுகுக், தொத்தலர் மலர்தொறுந் துன்னும் வண்டுபோன்,மெய்த்தசீர்ப் பிறர்மனை விழைந்து மேவுநாள்" (ஊஊ) "மாவி யீன்ற மண்மே கலைவல்லிப், போதவிழ் செவ்வி பொருந்துதல் விரும்பிய, வுதய குமரனு முலகாள் வண்டின், சிதையா வுள்ளஞ் செவ்விதி னருந்த" (எஎ) "அரிதுபெறு சிறப்பிற் குருகுகரு வுயிர்ப்ப, வொருதனி யோங்கிய, திருமணிக் காஞ்சிப், பாடல்சால் சிறப்பிற் பாதத் தோங்கிய, நாடகம் விரும்ப நன்னலங் கவினிக், காமர் செவ்விக் கடிமல ரவிழ்ந்த, துதைய குமரனை மொருவண் டுணீஇய, விரைவொடு வந்தேன்." (ஏஏ) "துண்டா துண்டு வறும்பூத் துறக்கு, மென்சிறை வண்டின மானஃ" (ஐஐ) "நயனின் மாக்கள் போல வண்டினஞ், சுனைப்பூ நீத்துச் சினைப்பூப் படர." (ஒஒ)"தண்சே றடைஇய கணைக்கா னெய்த, லுண்டா துண்டு வண்டினந் துறப்ப" (ஓஓ) "நறுந்தா துண்டு நயனில் காலை, வறும்பூத் துறக்கும் வண்டு" (ஔஔ) "செம்பொறி வண்டவற் றயலே, நாட்டினம்படியார் நகைமுகம் பருகு நல்லவர் போன்மலர்பருகு,மோட்டின

துறக்கின்றவன் மலையாயிருந்தேயும், விண்ணைத்தீண்டும் மலையிடத்தே தெய்வ மகளிர் பந்தடித்த இளைப்புப் போகத் தண்ணிய தாழ்ந்த அருவியிலே*ஆடுவர் எ - று.

இது தகாத தொன்றெனத் தலைவி இயற்பழித்தாள்.

உசு ஓடுங்கா வெழில்வேழம் (க)வீழ்பிடிக் குற்ற
(உ) கடுஞ்சூல் வயாவிற் கமர்ந்து நெடுஞ்சினைத்
(ங) தீங்கட் கரும்பின் கழைவாங்கு முற்றூரி
னீங்கல னென்பான் மலை

எ - து: தன்னைச்சேர்ந்தாரிடத்துநின்றும் நீங்கேமென்றிருப்பானுடைய மலை, மடிந்திராத அழகையுடைய யானை தான்விரும்பின பிடிக்கு உண்டான முற்பட்ட சூலான் உண்டான வயாநோய்க்கு மனம்பொருந்தி இனிய கண்ணிடத்தே தோன்றின நெடிய கிளைகளையுடைய கருப்பங்கோலைமுறியாநிற்கும்;† எ - று.

இது தோழி இயற்படமொழிந்தது. நம்மை முயன்று வரைந்துகொண்டு (சு)நம் வயாவிற்குத் தன்மனம் பொருந்தி நாம் ‡விரும்புமவற்றைத் தந்து மனக்குறைதீர்ப்பானென உள்ளுறையுவமங் கொள்க.

மூல்லை" (ஃஃ) "கயமா மலரெனுங் கன்னியை வண்டெனுங் காளை பல்புள். ளியமாமணம்புண ரீர்ந்துறை நாடர்." என முழுதும் ஒரு புடையும் ஒத்துப் பலவாறுக வருபவை ஈண்டு அறிதற் பாலன.

க. (அ) "வீழ்பிடி யளிக்கு, மையல் யானையின்" கலி. நிசு: காங - சு. (ஆ) "வீழ்பிடி" கலி. நிங: உ; அகம். நுருக: கO, ங்கூ: உ.

உ. கடுஞ்சூல். பெரும்பாண். ஙகஙி; ஐங். நுOகூ, ஙஅசு, கலி. ககO: கசு.

ங. (அ) கழையென்பது கோலென்னும் பொருளில் வருதற்கு, "தீங்கட் கரும்பின் கழைவாங்கும்" என்பது மேற்கோள்; சிவக. கOசுசு.

(ஆ) "தீங்கழைக் கரும்பே" மலை. ககங.(ஜ)"கழைக்கரும்பின்" புறம். கஙஎ: சு. (ஈ) "மூரிக் கழைக்கரும்பு" தூளா. நாடு. உஙி. (உ) "கழைக் கரும்பு கண்ணுடைக்குந் தேறல்வழிந் தொழுகுவயற் காசி" காசி. சாம்பாதித்தன் கதை; கக. (ஊ) "கழைக்கரும்பு கண்ணுடைத்த சாறடிதீஞ் சுவைவியயம்" (எ) "கழைக்கரும் புடுத்த கவிழ்த்தலைச் செந்நெற் கழனி" உத்தரகோச. தீர்த்தச சிறப்பு. உO; நளசக்கர. ஙசு.

சு. மகளிர் வயாவுற்றகாலத்து, அவர் விரும்புமவற்றைத் தந்து அவர் மனக்குறை தீர்த்தல் மரபென்பதை; வாசவதத்தைக் முதலியவர் உற்ற வயாவை உதயணன் இயக்கன் கூறியவண்ணம் பத்திராவதியின்

(பிரதிபேதம்) * ஆடுவரிது தகாததொன்றென வியற்பழித்தாள் † என இயற்படமொழிந்தாள இதுதோழி, ‡ விரும்புவன வறைதை.

எனநாம்

கூக தன்மலை பாட நயவந்து கேட்டருளி
(ந)மெய்ம்மலி யுவகையன் புகுதந்தான் புணர்ந்தாரா
மென்முலை யாகங் கவின்பெறச்
செம்மலை யாகிய (உ)மலைகிழ வோனே

எ - ன்: என்று நாம-தன்னுடையமலையைப்பாட மலைகிழவோன் விருப்பம் வந்து கேட்டு மெய்நிறைந்த உவகையனாய் அருளிக் கனவிற்புணர்ச்சியாதலின் முயங்கியமையாத மெல்லிய முலையினையுடைய ஆகம் அழகுபெறும்படி நீ தலைமையையுடையையாகவேண்டி வரைவொடு *புகுந்தான் ; எ - று.

நமக்குப் பேரின்பத்தைத் தருகின்ற இக்களவொழுக்கம் இவட்குத் துன்பத்தைச செய்தலின் இங்ஙனம் இயற்பழித்தாளென உட்கொண்டுவரைவொடு புகுந்தானுதலின் தலைவி இயற்பழித்தலே வரைவிற்குக் காரணமாயிற்று.

"உயர்மொழிக் குரிய வுறழுங கிளவி, யையக் கிளவி † யாமேவிற் குரித்தே" (ங)என்பதனால் தோழி உறழ்ந்துகூறினாள்.

உதவியால் தீர்த்தன னென்பதனால் அறிக. பெருங். (ஙி) க. வயாக் கேட்டது - சு. வயாநோய் தீர்ந்தது. வயா - கருவுற்ற மகளிர்க்கு அக்காலத்துளதாகும் வேட்கைப் பெருக்கம்; மசக்கையென வழங்கும்.

க. (அ) "மனையயிற் புகுதரு, மெய்ம்மலி யுவகையன்" அகம். உஎஉ: கக-கஉ. (ஆ)"நுமக்கே. மெய்ம்மலி யுவகை யாகின்று" நற். சஙூ: சு-எ. (இ) 'மெய்ம்மலிந் தாளு வுவகையே மாயினேம்" அகம். உசுஉ:கஉ-ஙூ. (ஈ) "மெய்ம்மலி யுவகை செய்யும்" புறம். சஙு: கூ. மெய் மலி உவகை - உடம்ப பூரித்தற்குக் காரணமாகிய மகிழ்ச்சி.

உ. (அ) "ஆவோ வாகும் பெயருமா ருளவே, யாயிட னறிதல் செய்யீ ருள்மோ" (தொல். பெயரி. சூ. சக) என்பதன் விசேடவுரையில், "ஆன் ஆள், ஆர், ஆய் என்னுமீற்றவாகிய பெயரல்லது, சேமான், மலையமான் என்னுந்தொடக்கத்தன அவ்வாறு திரியாமையின், ஆயிட னறிதலென்றார். உழாஅன், கிழாஅன் என்பனவோவெனின்;— அவை அன்னீற்றுப்பெயர் ஒருமொழிப் புணர்ச்சியான் அவ்வாறு நின்றனவென்பது. ஆனீருயவழி, உழவோன், கிழவோன் எனத் திரியுமாறறிக. என்று சேனாவரையர் எழுதியிருத்தலும, (ஆ)"கிழவன் 'மலைகிழவோனே' என அகரம் ஓகாரமாகி ஈறோரிடத்து வருதலும் .. .... கொள்க" என்று (நன். பொது.சூ. உ) இராமாநுச கவிராயர் எழுதியிருத்தலும் இங்கே அறிதற்பாலன.

கூ. தொல். பொருளி. சூ. சச.

(பிரதிபேதம்) * புகுந்தான்காணென வரைவுமலிந்தமைகூறினாள், † ஆமேற்குரித்தே.

இதனால், தலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

இது தரவும் கொச்சகங்களும் கொச்சக *வெண்பாக்களும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று வந்த கொச்சகக்கலி. (சு)

சுகூ.) பாடுகம் வாவாழி தோழி வயக்களிற்றுக்
கோடுலக்கை யாகநற் சேம்பி னிலைசுளகா
வாடுகமை நெல்லி யறையுரலுட் பெய்திருவாம்
பாடுகம் வாவாழி தோழிநற் சோழிபா டற்று;

நி இடியுமிழ் பிரங்கிய விரவுபெய னடுநாட்
கொடிவிடு பிருளிய மின்னுச்செய் விளக்கத்துப்
பிடியொடு மேயுஞ் செய்புன் யாணை
யடியொதுங் கியக்கங் கேட்ட கானவ
னெடுவரை யாசினிப் பணைவை யேறிக்

கஐ கடுவிசைக் கவணையிற் கல்லை விடுதலி
னிறுவரை வேங்கையி னெள்ளீ சிதறி
யாசினி மென்பழ மளிந்தவை யுதிராத்
தேன்செ யிறுஅ றுளைபடப் போகி

*நறுவடி மாவின் பைந்துணர் நுழக்கிக்

கூ குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப்
பலவின் பழத்துட் டங்கு மலைகெழு வெற்பனை
பாடுகம் வாவாழி தோழிநற் சோழிபா டற்று;

கஅ இலங்கு மருவித் திலங்கு மருவித்தே
வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணன் பொய்த்தான் மலை,

உக பொய்த்தற் குரியனே பொய்தகற் குரியனே
வஞ்சலோம் பென்றுரைப் பொய்த்தற் குரியனே
குன்றக னன்னுடன் வாய்மையிற் பொய்தோன்றிற்
றிங்களுட் டீத்தோன்றி யற்று;

உஎ இளமழை யாடு மிளமழை யாடு
மிளமழை வைகலு மாடுமென் முன்கை
வளைநெகிழ வாராதோன் குன்று;

உஅ வாரா தமைவானே வாரா தமைவானே
வாரா தமைதுவா னல்லன் மலைநாட

(பிரதிபேதம் * வெண்பாக்களும் சுரிதகமும்.

னீரத்து னின்னவை தோன்றி னிழற்கயத்து
ணீருட் குவளைவெங் கற்று;

கூ உ மணிபோலத் தோன்று மணிபோலத் தோன்று
மண்ணு மணிபோலத் தோன்றுமென் மேனியைத்
தின்னென் றுறந்தான் மலை;

கூ நி துறக்குவ னல்லன் றுறக்குவ னல்லன்
நெடார்வரை வெற்பன் றுறக்குவ னல்லன்
நெடார்பு னினையவை தோன்றின் விசும்பிற்
சுடரு னிருடோன்றி யற்று;

எனவாங்கு;

சா0 நன்று கின்றுற் நேழிநம் வள்ளாயு
னொன்றிநாம் பாட மறைனின்று கேட்டருளி
மென்நேட் கிழவனும் வந்தன னுந்தையு
மன்றல் வேங்கைக்கீ ழிருந்து
மணநயந் தனனம் மலைகிழ வோற்கே.

இஃது இருவரும் இவ்வகையாற் பாடிய வள்ளைப்பாட்டுத் தலைவன் சிறைப்புறமாகக் கேட்டு, வரைவுவேண்டி விடத், தந்தையும் வரைவுடம் பட்டமை தோழி தலைவிக்கு உரைத்தது.

இதன் பொருள்.

(க)பாடுகம் வாவாழி தோழி (உ)வயக்களிற்றுக்
கோடுலக்கை யாகநற் சேம்பி னிலைசுளகா
வாடுகழை *நெல்லி யறையுரலாட் பெய்திநவாம்
பாடுகம் வாவாழி தோழிநந் நேழிபா டற்று

க. (அ) 'பாடுகம் வாவாழி தோழி' என்பது தன்மைப் பன்மை வினை முற்றில் அம்மீறு வருங்கால் ககரம் எதிர்கால முணர்த்தி வருதற்கும் தொல். வினை. சூ. நி. நச். (ஆ) ககரம் சிறுபான்மை எதிர்காலம் காட்டிவருதற்கும் இ-வி.சூ. சகூ. நன். பத. சூ. கஎ; இரா. மேற்கோள். (இ) "பாடுகம் வாவாழி தோழியாம்" சிலப். (உசி),

உ. (அ) "கொல்யானைக் கோட்டால் வெதிர்நெற் குறுவாகாம், வள்ளை யகவுவம் வா" கலி. சஉ: எ - அ. (ஆ) "வஞ்சி மகளிர் குறுவரே வான் கோட்டால்" சிலப். உகூ. (இ) "யானை வெண்மருப் புலக்கை யறை யுரல்" சீவக. கநிசுஉ. (ஈ) "எனற்குறவ ரிருங்குடிச் சீறூர், மானமர் (பிரதிபேதம்) * நெல்லை.

எ - து: தோழீ! வாழ்வாயாக, நாம்பாடுவேமாக வா; எங்ஙனம் பாடுவே மென்னின், வாழ்வாயாக தோழி! இருவரும் அசைகின்ற மூங்கிலினது செல்லப் பாறையாகிய உரலிலே பெய்து, வலியினையுடைய யானைக்கொம்பு உலக்கையாகக் குற்று, நல்ல சேம்பினது இலை சுளகாகப் புடைத்துப் பாடுவோமாக; எ - று.

வாவென முன்கூறியதனைப் பின்னர் விசேடித்துக் கூறினாள். இதில், நற்றோழியென நின்ற சொல்லை மலைகெழு வெற்பனைப்பாடகம் வாவென மேல்வருகின்ற உறுப்போடுங் கூட்டுக.

செய்தெனைச்சங்கள் எதிர்காலத்துப்பிறந்த செயவெனைச்சங்களாம்.

உயர்ந்த மூங்கிலின் நெல்லுத் தானே உதிர்ந்ததனை எடுத்துக்கொண்டு உரலிற்பெய்தென்றதனால் உயர்ந்த தலைவனைத் தெய்வந் தானே கொண்டு வருதலின் †அவனை நம்வயத்தனுக்கினேமென்றும், வள்ளைப்பாட்டிற்கு எது வாகிய கோடு உலக்கையாக என்றதனாற் கோடு நெல்லைப் பயன்படுத்தினாற் போல‡நம் வரைவுகடாவலால் இத்தலைவனை இல்லறப்பயனை எய்துவிக்கின் றேமென்றும், சேம்பிலை புடைத்தற் றொழிலை முற்றமுடித்து (க) அரிசியை ஆக்காததன்மைபோல இக்களவொழுக்கத்தால் அவன் வரைந்துகோடலை முற்றமுடியாதிருக்கின்றமென்றும் இறைச்சி பொருட்புறத்தாய் நின்ற வாறு காண்க.

நோக்கின் மகளிரொடு மரீஇ,வெங்கண்மறவர் வில்லின்வீழ்த்த, பைங் கண் வேழத்துப் பணைமருப் புலக்கையி,னறையுரனிறைய வைவனப் பாசவ, லிசையொடு தன்னிய ரியல்புகழ்ந் திடிக்கு, மம்மனை வள்ளை யின்னிசைகேட்டும்" பெருங். (உ) கச: சசு - நூஉ. (உ)"பைம் பொ னறைமேற் . . . வான்கேழ் மருப்போசனி, யம்பொன் மலைநிலம்ப வம்மனை வள்ளையுடன், கம்பஞ்செய்யானைக் கரியவனைப் பாடினார்" சூளா. சுயம். கoசு. (ஊ)"பிளிக்குரல் வேய்நெற் படுத்திபக் கோடுபற்றிச் செழுந்தேன், றுளிக்குமென் கூந்தலர் வள்ளைபி னெச்சு மை சூழ்நிலம்பா" தணிகைப். களவுப்படலம். கூஉo.

(எ)வயவென்னு முரிசசொல் வலியென்னும்பொருளில்வருதற்கு'வயக் களிறு' என்பது மேற்கோள். தொல். உரி. சூ. நிச. 'வயவலி' தெய்.

க. சேனாவரையர், 'இளவியாக்கம்' என்பதன் பொருளை விளக்குமிடத்து "வழுக்களைந்து சொற்களை யாக்கிக்கொண்டமையான், இவ்வோத்துக் இளவியாக்கமாயிற்று. ஆக்கம் - அமைத்துக்கோடல், நொய்யும் நுறுங் குங்களைந்து அரிசியமைத்தாரை அரிசியாக்கினு மென்பவாகலின்" என்று எழுதியிருத்தல் இங்கே அறிதற்பாலது.

(பிரதிபேதம்) ' பாடவென்னின், † அவனை வயத்த, ‡ நாமும் வரைவு கடாவுதலிற்றன்னை.

நி (க)இடியுமிழ் பிரங்கிய *விரவு(உ)பெய னெடுநாட்
கொடிவிடு பிருளிய மின்னுச்செய் விளக்கத்துப்
பிடியொடு கூடியுஞ் †செய்புன் யாணை
யடியொ துங் கியக்கங் கேட்ட கானவ,
னெடுவரை யாசினிப் பணைவை யேறிக்
கo கடுவிசைக் (ச)கவணினிற் கல்லை விடுதரி

க. (அ) "முர சிடியுமிழ் தழங்கென முழங்க" சீவக. உகூஉ, (ஆ) 'இடி யுமிழ் முரசம்" அகம். கூடுசு: உ; சீவக. உகoo.

உ. 'இருள்கிழிப் பதுபோன் மின்னி வானக், துளிதலைக் கொண்ட நளி பெய னெடுநாள்." அகம். எஉ: க - உ.

ங. யாணை, இரவிற் புனமேய வருகலும் அதனைக்கானவர் கவண்கல்லால் விலக்குதலு முண்டென்பதை, (அ) "இரவின் மேயன் மரூஉம் யாணைக், கால்வ லியக்க மொற்றி நடுநாள், வரையிடைக் கழுதின் வன் கைக் கானவன், கடுவிசைக் கவணி னெறிந்த சிறுகல் லுடுவுற கணைபிற் போகிச் சாரல், வேங்கை விரியிணர் சிதறிக் தேன்சிதையுஉப், பல வின் பழத்துட் டங்கு, மலைகெழு நாடன்" அகம். உகஉ: அ - கடு. (ஆ)"காம்பின், விளைகழையுடைந்த கவண்விசைக் கடியிடிக், கனைகுட ரமயத்து வழங்கல் செல்லா, திரவுப்புன மேய்ந்த வரவுச் சின வேழம்" அகம். நoக: கஉ - கடு; (இ) "கணமழைபொழிந்த காண்மடி யிரவிற், றினைமே யாண யினனிரிந் தோடத், கல்லுயர் கழுதிற் சேணெ னெறிந்த, வல்வாய்க் கவணின் கடிவெடி யொல்லென ...மலையடன் வெரூஉ மாக்கல் வெற்பின்" அகம். நகஉ: கஉ - அ. என்பவையும் வலியுறுத்தும். இவற்றுள், முன்னது இங்கு ஒப்புநோக்கற்பாலது.

ச. கவண்கல் வேங்கைமலர் முதலிய வற்றைச் சிதைத்தென்பதுபோல அக்கல்லினிலையில் அம்பினையும் பழங்களையும் வைத்து. (அ) "வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி, பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி தறியி, புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக், கேழற் பன்றி வீழ வயல, தாழற் புற்றத் துடும்பிற் செற்றும், வல்வில் வேட்டம்" புறம். கநஉ: க - சு. (ஆ) "உலையுருவக் கனலுமிழ்கட் டாடகைதன் னுரமுருவி, மலையுருவி மரமுருவி மண்ணுருவிற் றெருவாளி" (இ) "தாதையைத் தம்முனைத் தம்பி யைத்தனிக், காதலிப் பெயரினை மருகனைக்களத், தூதையி னெருகணை யுருவ மாண்டனர்" கம்ப. குலமுறை. உசு. அதிகாய. ககள. (ஈ) 'தெங்கம் பழங்கமு கின்குலை சாடிக் கதலிசெற்றுக், கொங்கம் பழனத் தொளிர்குளிர் நாட்டினை" திருக்கோவையார். கoo. (உ) "காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகினெற்றிப், பூமாண்ட தீந்தேன் றெருடைகீறி கருக்கைபோழ்ந்து,

(பிரதிபேதம்) * விரவும்பெயல், விரவுப்பெயல், † புன்செய்பாணை.

(க) னிறவரை *வேங்கையி னெள்ளீ சிதறி
(உ) யாகினி மென்பழ †மளிந்தவை யுதிராத்
தேன்செ யிருஅ றுளைபடப் போகி
(ங) நறவடி மாவின் கூபத்துணை குழக்கிக்
(ச) கூலையடை வாழைக் கொழுமடல் கிழியாப்
பலவின் ‡பழத்துட் டங்கு மலைகெழு வெற்பனைப்
பாடுகம் வாவாழி தோழிநற் சூழிபா டற்று

எ - து: நறுஞ்சூழீ! இடிபடுதலுற்று நெருப்பையுமிழ்ந்து ஒலிக்கும் எங்குங்கலந்த பெயலாலே இருண்ட நடுநாளிலே ஒழுங்குவிட்டு மின்னுண் டாக்கின ஒளியிலே பிடியுடனே வந்து புன்செய்யிலே மேயும் யானைகளி னுடைய அடிகள் நடக்கின்ற நடையின் ஓசையைக் கேட்ட கானவன் உயர்ந்த மலையில் ஆனிப்பலாவின்மேல் இட்ட பரணிலே ஏறிக் கடிய விசையினை யுடைய(ஈ)கவணையிற் கல்லை எறிகையினாலே அக்கல்லு முறிந்தவரையிடத்தி னின்ற வேங்கையினது ஒள்ளிய பூக்களைச் சிதறி, ஆனிப்பலாவினது பெரு சென்ற பழம் ஒருகிழ்ந்தவற்றை உதிர்த்து, தேனினம் வைத்த இருளைத்

தேமாங் கனி சிதறி வாழைப் பழக்கள்சிந்து,மேமாங் கருமென் றிணை யாற்றிலை போய துண்டே" சீவக. சூக. (ஊ) "காழை முப் புடைக் காய் வீழ்ந்து காற்றினால் சீழுகு செற்று, வீழ்சுளை வருக்கை போழ்ந்து வெம்புலி யடிய பைங்காய்க், கோழரை யரம்பை சாய்க்குங் குடக நாடு" நைடதம். சுயம்வர. கருகூ. (எ) "ஓங்கிருந் தாழை நெற்றி யொண்பழன் வருக்கை போழ்ந்து,தீங்கரும் பெருத்திற் சூழ்ந்த தேத்திரல் சிதைய வீழும்,வீங்குநீர் மருத வேலி மிதிலை" பாகவதம். (கo) சகதன்னுவாவைக் கொன்ற. ரo.(ஏ)"பாளைவாய்க் கமுகி னெற்றிப் பபெழ முதிர விண்டு. நீள்கழைக் கரும்பி னெற்றி செய்ம்முதிர் தொடையல் கிறி" சீவக. ககசுஅ. என அவற்றுக்குத்தகப் புனைந் துரைத் திருப்பவை இங்கே ஒப்புநோக்கற்பாலன.

க. "இறுவரை புரையுமா றிருகரை யேமத்து" (பரி. எ: சo.) என்புழி இறுவரை யென்பதற் கெழுதப்பெற்றுள்ளவுரையும் "இறுவரை வீழ" பு - வே. தும்பை. உo-என்னு மூலமும் நோக்குக.

உ. "குருவி யோப்புதங் கவண்கலாற் குலைந்திரு லினத்தோ,டிருவ வாகினி யுக்தன" தணிகை. காட்டு. சச.

ங. "நறுவடி மாஅத்து" நற். உசஙு; ஐங்குறு. சுக,உகங;"மாலி, னறுவடி" கலி. அச: க - உ.

ச. கவணென்பது கவணையென ஐகாரச்சாரியை பெற்றுவந்தது; இஃது இக்காலத்து. கவண்டையென வழங்குகின்றது.

(பிரதிபேதம்) * வேங்கை யொளி,† அழித்தவை, ‡ பழத்திற்றும்,

தூவையுண்டாம்படி உருவி, நறிய வடிவையுடைய மாவினது பசிய கொத்துக்களை உழக்கி, குலை புடைத்தாகிய வாழையினுடைய கொழுவிய மடலைக் கிழித்து, பலாவினது பழத்துக்குள்ளே தங்குஞ் சிறிய மேலைகள் பொருந்தின பெரிய மலையினையுடையவனைப் பாடுவேமாக வா; *எ - று.

'பலவின் பழத்துட் .....தோழி' என்றது (க) உறுபெயர்கேட்டலென்னும் மெய்ப்பாடு, முன்புபிறந்தது.

இயக்கங்கேட்ட கானவன் கல்கையிடுதலைத் தலைவன் மின்வழக்காட்டவந்து தலைவியோடு புணர்ந்த நிலைமை அலர் கூறக்கேட்ட செவிலி தன் மனையிடத்தே வெளியாக இருந்து கடுஞ்சொற் சொல்லி இற்செறித்தலாகவும், அக்கல்லு வேங்கையினது செவ்விப்பூவைச் சிதறினதன்மை தலைவன் இன்பம் நுகர்கின்ற மனவெழுச்சியைக் கெடுத்ததாகவும், ஆசினிப்பழத்தைப் பயன்படாமல் உதிர்த்ததன்மை அவன் நுகர்கின்ற இன்பத்தைக் கெடுத்தாகவும், அஃது இரலிற் றேனைப் பயன்படாமை உகுத்ததன்மை தலைவி நலம் தலைவற்குப் பயன்படாமற் கெட்டதாகவும், அது மாவின் குலையைச் சிதறுவித்ததன்மை ஆயவெள்ளந் தலைவியோடு கூடி விளையாடாமல் நீங்கினதாகவும், அது வாழைமடலைக் கிழித்ததன்மை தோழியை வருத்தினதாகவும், அது பலவின்பழத்துட் டங்கினதன்மை அக்கடுஞ்சொல் தலைவி நெஞ்சத்தைத் தங்கினதாகவும் உள்ளுறையுவமங்கொள்க.

கஅ (உ)இலங்கு மருவித் திலங்கு மருளித்தீ
(ரு)வானி னிலங்கு மருவித்தீ தானுற்ற
(ச்)சூன்பேணு மொய்த்தான் மலை

க. இம்மெய்ப்பாட்டிற்கே "பலவின்பழத்துட்டங்கு மலைகெழுவெற்பனைப் பாடுகம் வா" என்பது மேற்; தொல். மெய்ப்.சூ.உ. பே.இ-வி.சூ.நிஅ.

உ. (அ) "வரைதல்வேண்டித்தோழிசெப்பிப,புரைதீர்கிளவியுள்ளியவெதிரும்" என்பதனுரையில் "இலங்கும் . ... . மலை'எனத் தோழி இயற்பழித்த வாய்பாட்டான் வரைவு கடாவ, அதனை உடம்பட்டுப் பழித்தற்கு உடம்படாதாள் 'பொய்த்தற் குரியனே .. ..த்தோன்றியற்று' எனத் தலைவி இயற்படமொழிந்துஎதிர்மறுத்தவாறுகாண்க" என்றும் (தொல். கள. சூ. கசு.) (ஆ) "ஒன்மீற வேமீற வென்றிரு பால்வயின்" என்னுஞ் சூத்திரவுரையில் 'இலங்குமருவித்து ... மலை' என்பதை மேற்கோள் காட்டி, 'பொய்த்தவன்மலையும் இலங்கும்அருவித்து எனவியக்தகூறி, தமது மலைக்கு நன்றி இயல்பு என்றலிற் குறிஞ்சியுள்ளும் மலைவேறுபிற்ற" என்றும் (தொல். களவியல். சூ. உ.) கூறுவர், ரசு;(இ) இ - வி. சூ. சஅஎ. (ஈ) "இலங்கு வெள்ளருவியொடு" மது. உகூக.

ங. "வானிலங் கருவிய வரையும்" ஞாளா. நாட்டு. சு.

ச. "மாலை யருவியு மோங்குவ வொண்டொடியா, யழுங்குவ தேமக் காக்கிப்பொய்ச் சூளுற்ற வண்ணல் வெற்பே." தணிகை. களவு. சஎஉ.

பிரதிபேதம் * என்னுள்.

எ - து: நற்றோழீ! நீ வாழ்வாயாக; தோழீ! தான் சூளுற்ற சூளுற வினைப் பாதுகாவானுய்ப்(க)பொய்த்தவனுடைய மலையாயிருந்தும் வீழ்தலுற்று விளங்கும் அருவியையுடைத்து, விளங்கும் அருவியையுடைத்து, மழைபெய்தலால் விளங்கும் அருவியையுடைத்து; எ - று.

இஃது என்னவியப்போவெனப் பொருட்புறத்தே இறைச்சி தோன்றிற்று.

இஃது "இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" (உ) என்பதனைக் கொள்க. இருகால் அருவித்தென்றது அருவிப்பன்மை *நோக்கிற்று.

இது மெய்யைப் பொய்யாகக்கோடலிற் (ங) பொய்யாக்கோடலென்னும் மெய்ப்பாடு. அவைதாம் மழைபெய்து வந்த அருவியென்று அதனைப் பின்னர் †விசேடித்தாள். அதுகேட்ட தோழி.

உக (டு) பொய்த்தற் குரியனே பொய்த்தற் குரியனே
(ரு) வஞ்சலோம் பெண்ணுரைப் பொய்த்தற் குரியனே

க. "விண்பொயத ஞண்மழை விழாதொழியி னும்" தேவாரம்.

உ. "இறைச்சிதானே பொருட்புறத்ததுவே" என்புழி 'இலங்கும்..... மலை' என்பதை மேற்கோள்காட்டி, "சூளைப்பொய்த்தானென்பதே கூறவேண்டும்பொருள்; அதன் புறத்தே, இங்ஙனம்பொய்த்தான் மலையகத்து நீர் திகழ்வான் (?) என இறைச்சிப்பொருள் தோன்றியவாறு காண்க" என்பர், நச்; தொல். பொருளியல். சூ. ஈடு. இ - னி. சூ. நிஅ. உரையிலும் இவ்வாறே உள்ளது.

ங. இம்மெய்ப்பாட்டிற்கே, "வானினிலங்கு.....மலை" என்பதனை மேற்கோள் காட்டினர், பேராசிரியரும்; தொல். மெய்ப். சூ. உஉ.

ச (அ) "தும்மோன்னேர்மாட்டுமின்ன, பொய்யொடு மிடைந்தவைதான்றின், மெய்யாண் டளிதாவில் வுலகத் தானே" அகம். உஅசு: கடி - எ.
(ஆ) "மருளிற் பிணைந்து பொய்ச் சூளுறு வார்கொல்லை வேலன்ன, பிருளிற் பிணைந்த விருவினை மாற்றியெல் லாங்கழிப்பி, யருளிற் பிணைந்தவ ராங்கிரு ளோடு மணைத்தெறப்பாம், பொருளிற்பிணைந்தகம் வாய்மையிற் பொய்ம்மை புகுந்திடினே" தனிமை. களவு. ஈஎஅ.

ஞ. (அ) "அஞ்சலோம் பெண்ணு, நன்னர் மொழியு நீமொழிந் தனையே" கலி. உக: எ-அ. (ஆ) "அஞ்சலோம் பெண்டதன் பயனன்றே." கலி. கஈஉ: கூ. (இ) "அஞ்சலோம் பெண்ணுர்" குறள். கசசூ. (ஈ) "அஞ்சலோம் பெண்டு நலனுண்டு நல்காதான்" சிலப் (உச) (உ) "அஞ்சலோம்பெண் டனிக்கு, வஞ்ச மற்றவர் வாரார்" தொல். செய். சூ. கஞ்சு. பே. மேற்கோள்.

*நிகழ்காலம் நோக்கி, † விசேடித்தானை பொய்த்தற்கு.

குன்றக னன்னுடன் வாய்மையிற் பொய்தோன்றிற்
நிங்கருட் டீத்தோன்றி யற்று

எ - து: *தன் சூளுறவினைப் பொய்யாக்குதற்கு உரியனே? பொய்யாக்குதற்கு உரியனே? †நீ அஞ்சுதலைப் பரிகரியென்று தான் சொல்லப்பட்ட மகளிரைப் பாதுகாவாது விடுதற்கு உரியனே? மலையகன்ற நன்னுட்டையுடையவன் கூறிய மெய்யிலே பொய்தோன்றுமாயின், இங்களிடத்தே நீத்தோன்றின தன்மைத்து; அங்ஙனங் கூறுதேகொள்; ‡எ - று.

தேற்றுதற்கு இருகாற் ||கூறிப் பின்விசேடித்துக் கூறினாள்.

உரு (உ)இளமழை யாடு மிளமழை யாடு
மிளமழை லைகலு மாடுமென் முன்கை
வளைநெகிழ வாராதோன் குன்று

எ - து: ÷என் முன்கையில் வளை கழலும்படியாக என்னிடத்து வாராத வன் மலையாயிருந்தும் இளமழை உலாவாகின்றும் ; இளமழை உலாவாகின்றும்; அது தான் ஒருகாலத்து உலாவுதலன்றி நாடோறும் உலாவா ×நிற்கும்; எ-று.

கருத்தங்கி வந்து சூன்முதிர்ந்தற்கு மலையில் (ரு) **மேய்கின்ற மழையென்பது தோன்ற இளமழை††யென்றாள்.

இஃதென்ன வியப்போவெனப்பொருட்புறத்தே இறைச்சி‡‡தோன்றிற்று; இது தலைவிகூற்றது. மேல், தோழி கூறுகின்றாள்.

க. "நகைக்கதிர்மதியம்வெய்தா நடுங்கச்சுட்டிதலுண்டே." சீவக.உகருரு.

உ. (அ)"மந்திக்காதலன்முறிமேய்கடுவன்,றண்கமழ்நறைக்கொடிகொண்டு வியலறைப், பொங்க ளிளமழைபுடைக்குநாட" ஐங். உசசு: என்பதும் (ஆ)"மேற்கருக்கொண்டு முற்றிப் பயன்படுவதாய இளமுகிலே மந்தி நறைக்கொடி கொண்டு புடைக்கும் காட' என்னும் அதன்பழையுரையும் (இ) "ஆடியு ளிளமழை சூடித் தோன்றும், பழந்தூங்கு விடரகத்து" அகம். உஎக: கரு - சு. என்பதும் (ஈ)"கலங்கு தெண்டிரை மேய்ந்து கணமழை .....விலங்கல் சேர்ந்து" என்பதும் (உ) 'கணமழை .....திரையைப் பருகிச் சூன்முகிரு மளவும் மலையைச்சேர்ந்து' என்னுமதனுரையும் (ஊ) "மாமலை தழுவிய மஞ்சு போலவும்" என்பதும். சீவக. ரூஉ கoo. (எ) "மஞ்சுதவழ்வெற்பு." ஈநீடத. பிறிவு. கரு. என்பதும் 'சூன்முகிரு மளமழைபாடும்' என்பதன் பொருளை வலியுறுத்தும்.

ரு. மேகம்மலையில்மேய்தல். திருவிளை. இந்திரன் முடிமேல். சூக.

(பிழைதிருத்தம்)*அதுகேட்டதோழிதன், †விசேடித்துநீ, ‡என்றாள்.||கூறினாள்.÷அதுகேட்ட தலைவி'ன், ×நிற்குமிதன்ன வியப்போவென, **பெய்கின்ற, ††என்றாள் வாராதமை, ‡‡தோன்றிற்று, கருத்தங்கி.

உஅ (க)வாரா தமைவாளே வாரா தமைவாளே
வாரா *தழைகுவா னல்லன் மலைநாட
(உ)னீரத்து ளின்னவை தோன்றி னிழற்†கயத்து
(ங)னீருட் குவளைவெற் றற்று

எ - து: ‡நின்னிடத்து வாராதே ஆற்றியிருப்பானே? வாராதே ஆற்றியிருப்பானே? இருக்குமதுவுமன்றி அம்மலைநாடனுடைய அருளிடத்தே இத்தன்மையவாகிய கொடியவை தோன்றுமாயின் நிழலையுடைய குளத்துள் நீரினின்ற குவளை வெற்ற தன்மைத்து; நீ இங்ஙனங் கூறுதேகொள்; எ - று.

நீருட் குவளை வெற்றற்றென்றது மருட்கையுவமம். நிழற்கயத்துள் வேவன இன்மையின் அற்புதமாயிற்று.இஃது உலகநடையிறந்ததோர் உவமை கூறி அதனோடு தலைவன் ஈரத்தினை ஒப்பித்தலிற் பெருமைபற்றி ||வந்தது. இனி அதுகேட்டதலைவி கூறுகின்றாள்.

ஈஉ (ச) மணிபோலத் தோன்று மணிபோலத் தோன்று
மண்ணு மணிபோலத் தோன்றுமென் மேனியைத்
தண்ணந் துறைத்தான் மலை

எ - து: ×என்மேனியைச் சேராதே துறைத்தவனுடைய மலையாயிருந்தும் நீலமணிபோலத் தோன்றும்; நீலமணிபோலத் தோன்றும்; கழுவாத நீலமணி போலத் தோன்றும்; எ - று.

க. "வாராதமைவாளே .....வெற்றற்று" என்பது உவமப்போலி ஒற்தலுள் கூடாப்பொருளோ வெனித்தற்கு மேற்கோள்; தொல். உவம. சூ. உச. 'உவம' இளம்.

உ. "ஈரத்து.....வெற்றற்று" என்பதனை மருட்கையுவமத்திற்கு மேற்கோள்காட்டி "நிழற்கயத்திற் குவளைவேவனவின்மையின் இஃது அற்புதமாயிற்று" என்பர், பேராசிரியரும்; தொல். உவம. சூ. ஈஈ.

ஈ. பெருமைபற்றி ஒப்புமை கொள்ளப்படு மூவகைக்கு 'நீருட் .....வெற்றற்று'என்பதைமேற்கோள்காட்டி உலகநடையிறந்ததோருவமை கூறி அதனோடு தலைமகன்ஈரத்தினை ஒப்பித்தமையின் இது பெருமை பற்றிய தாயிற்று என்பர், பேராசிரியரும்; தொல். உவம. சூ. ஈஈ.

ச. (அ) மலை மணிபோலத்தோன்றல்: "மணிமலை" சிறுபாண். க. (ஆ) "மண்ணுறு மணியிற் றோன்றுந். தண்ணறுந் துறைக டோலாங்கிய மலையே." நற்றிணை: சூ - எ. (இ) "மணிநிறமால்வரை." (ஈ) "மணிநெடுங் குன்றே."(உ) "மணிநிறங் கொண்ட மாமலைவெற்பின்" ஐங். உஅ,உஅ,உஉ,உச.(ஊ)"மணித்தலை மலை" திருவிளை.மாணிக்.நாச.

(பிரதிபேதம்) * அமைகுவன், † கயத்துருட், ‡ அதுகேட்டதோழி நின்னிடத்து, × அதுகேட்ட நீலவி என், மேனியை.

இஃதென்ன வியப்போவெனப் பொருட்புறத்தே இறைச்சி தோன்றிற்று. கொண்டலெப்பத்தான் உலராது மழைபெய்து நிறம்பெறுதலின் மணிபோலத்தோன்றுமென்றுள்.

கூறு (க) துறக்குவ னல்லன் றுறக்குவ னல்லன்
றொடர்வரை வெற்பன் றுறக்குவ னல்லன்
றொடர்பு விலையாவை தோன்றின் விசும்பிற்
கூடரு ளிருடோன்றி யற்று

எ - து: † நம்மைக் கைவிடுவான் அல்லன்; கைவிடுவான் அல்லன்; (உ) ஒன்றோடொன்று தொடர்ந்திறுமலைகளையுடைய(கூ) வெற்பையுடையான் கைவிடுவான் அல்லன்; அவனோடு கொண்ட உறவின்கண்ணே இத்தன்மைய வாகிய கொடியவை தோன்றுமாயின் ஆகாயத்திற் றிரியும் ஞாயிற்றுள்ளே இருள்தோன்றிய தன்மைத்து: நீ அங்ஙனம் கூறுதே‡கொள்ளெனத் தோழி கூறினாள்; எ - று.

இது மருட்கையுவமம்.

எனவாங்கு, ||அசை.

சO நன் (ச) றி னின்றூற் றோழிநம் வள்ளெயு
(ஞ) மொன்றிநாம் பாட மறைநின்று கேட்டருளி

க. (அ) "துறக்குவனல்லன். ..... .இருடோன்றியற்று" என்பதை இசைநிறைக்கு. மேற்கோள் காட்டி 'இதனுள் முந்துற்றசொற் பொருளுணர்த்திற்று; ஏனைய இசைநிறைக்கண் வந்தன; இசை நிறையாவது பாட்டுக் குறித்துவரும்' என்றும், (தொல். எச்ச சூ. உகு. 'இசை') (ஆ) "பெயரெஞ்சு இளவி பெயரொடு மூடிமே" என்பதற்கு, 'பெயரை எச்சமாக வுடையசொல் அப்பெயரொடு பொருள்முடிவுபெறும்'என்று பொருள்கூறி "துறக்குவனல்லன்.....தோன்றின்" என்பதை அதற்கு மேற்கோள்காட்டி 'இதனுள், அவன்றொடர்பெனவேண்டுதலின் அவனென்னும் பெயர் எஞ்சி நின்றது' என்றும் (தொல். எச்ச. சூ. கூஎ. பெயரெஞ்சு') கூறுவர்; தெய்வச்சிலையார்.

உ. "ஒருவரைபோ லெங்கும் பலவரையுஞ் சூழ்ந்த, வருவரை யுள்ளதாஞ் சீறூர்" திணைமாலை. கஉ.

க (அ) "சான்றவர் கேண்மை சிதைவின்று யூன்றி, வலியாகிப் பின்னும் பயக்கு மெலிவில், கயந்திகழ் சோலை மலைகாடன் கேண்மை, நயந்திகழு மென்னுமென் னெஞ்சு" ஐந் - எழு. இ. (ஆ) "செய்த குறியும் பொய் யாயின வாயிழையா, யைதுகொ லாண்மூர் தொடர்பு." திணைமொழி. சக.

ச. 'ஆகின்று" ஐங்குறு. கஎ, கஉஉ, சOஞ:பரி.அ:கO,உகு; புறம். உசஉ:க.

ஞ. "என்றியாம் பாட மறைநின்று கேட்டனன்" குலோ. சஉ: உஅ.

(பிரதிபேதம்) * வெற்பன்றானலருது, †அறுகேட்ட நோழி கல்லைச், ‡ கொள்ளென்னுள், ||ஆங்கு அசை,

மென்(க)ணோட் கிழவனும் வந்தன னுந்தையு
மன்றல் வேங்கைக் கீழிருந்து
மணைநயந் தனனம் மலைகிழ வோற்கே

எ - து: தோழி! நம் வள்ளைப்பாட்டிடத்தே நாம் பொருந்திப்பாட நம் மென்மேனோட்டு உரிமையையுடையவனும் மறைந்துநின்றுகேட்டு அருள்பண்ணு வரைவுவேண்டி வந்தனன்; உன்னுடைய தந்தை மணந்தையுடைய வேங்கைக் கீழே இருந்து அம்மலைகிழவோனுக்கு மணஞ்செய்துகொடுக்க விரும்பிக்கூறினன்; ஆதலால், நமக்குநன்மை(உ) புண்டாகாநின்றது. இஃது ஈருந்தாதிகொள்; *எ-று.

இதனால், தலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது. இதன் இடைப் பாட்டுக்கள் "வரைதல் வேண்டித் தோழி செப்பிய. புரை தீர்கிளவி புல்லிய வெதிரும்" (ங)என்பதனுள் இயற்பழிக்க இயற்றட மொழிந்தனள்.

இது கரவும் †ஓஞ்சீரடி † வந்த கொச்சகமும் கொச்சகவெண்பாக்களும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று †வந்த, கலிவெண்பாவின் வேறுபட்ட கொச்சகக் கலி. (ரு)

(உ) மறங்கொ ளிருப் புலித் தொன்முரண் டொலைத்த
மறஞ்செவி வாரண முன்குரு கருந்திக்
கறங்குவெள் ளருவி யோலிற் றஞ்சம்
பிறங்கிருஞ் சோலை நன்மலை நாடன்
மறந்தான் மறக்கினி யெல்லா நமக்குச்
சிறந்தன நாநற் கறிந்தன மாயி னவன்றிறங்
கொல்யானைக் கோட்டால் வெதிர்கெற் றுறுவாரம்
வள்ளை யகவுவம் வா, இருளோ நம்
வள்ளை யகவுவம் வா;

கo காணிய வாவாழி தோழி வரைத்தாம்பு
வாணிறங் கொண்ட வருவித்தெ நம்மருளா
நாணிலி நாட்டி மலை;

க. (அ) "சாயிறைப் பணைத்தோட் கிழமை தனக்கே, மாசின் றுதலு மறியான்" அகம். கூஉ: கச-கக. (ஆ) "ஒலியுள ஞாண், கிழமை யுடைய னென் றோட்கு" தீணமொழியைம்பது. கூக.

உ. ஆகின்றென்பதை இறந்த காலமாகவும் கொள்வர், புறநானூற்றுரை காரர்; புறம். க: எ, கூ; கசஅ: எ.

ங தொல். கள. சூ. கசு. இத்தூற்பக்கம், உசஙூ: உ-ம் குறிப்பு (அ) பார்க்க.

பிரதிபேதம் * என வரைவுமலிதலை கூறினான், † வந்த கொச்சகவெண்பாக்களும்.
†வந்தவை,

கசு ஆர்வுற்றூர் நெஞ்ச மழிய விடுவானே
வோர்வுற் றுருநிற மொல்காத நேர்கோ
லறம்புரி நெஞ்சத் தவன்;

கசு தண்ணறுங் கோங்க மலர்ந்த வரையெல்லாம்
பொன்னணி யாயினபோற் றோன்றுமே நம்மருளாக்
கொன்னளை யிட்டு மலை;

கசு கூருநோ யேய்ப்ப விடுவானே தன்மலை
நீரினுஞ் சாய லுடைய னயந்தோர்க்குத்
தேரியும் வண்கை யவன்;

உஉ வரைமிசை மேற்றோடுத்த நெய்க்க ணிரும்பன்
மழைதுமை திங்கள்போற் றோன்று மிழைநெகிழ
வெவ்வ முறீஇயினான் குன்று;

உடு எஞ்சா தெல்லா கொடுமை துவலாதி
யஞ்சுவ தஞ்சா வறனிலி யல்லனென்
னெஞ்சம் பிணிக்கொண் டவன்;

உஅ என்றியாம் பாட மறைநின்று கேட்டனன்
றுழிருங் கூந்தலென் றோழியைக் கைகவியாச்
சாயலின் மார்பன் சிறுபுறஞ் சார்தர
ஞாயிற்று முன்ன நிருள்போல மாய்ந்ததென்
னுயிழை மேனிப் பசப்பு.

இது முன்பு பெற்றவழிமலிந்ததனைப் பின்பு பிரிந்தவழிக் கலங்கிக் கூறியது. என்னை? தலைவன் அருமைசெயிதயர்த்தவழித் தோழி தலைவியை ஆற்றுவித்தற்பொருட்டுத் தலைவனை இயற்பழிப்பத் தலைவி இயற்பட மொழிந்ததனைச் சிறைப்புறமாகக் கேட்டுத் தலைவன் முன்னொருகால்வந்து சிறுபுறஞ் சாரத் தான் ஆற்றினமை தறித்துப் பின்னொருகால் அவ்வாறு பாட அவன் சிறுபுறஞ்சாராமையிற் கலங்கி நெஞ்சோடு கூறியதாகலின்.

இதன் பொருள்.

(க)மறங்கொ ளிரும்புலிக் தொன்முரண் டொலைத்த
(உ)முறஞ்செவி வாரண முன்சூள கருந்திக்

க. (அ)"மறப்புலி" பதிற். சை: எ; புறம். கூ: ஈ; சிலக. எஇஉ-(ஆ) "மறங்கொ ளிரும்புலி" சிலப். கஉ: உ.

உ. (அ) "முறஞ்செவி யாணை" புறம். ஈடுக: கசு. (ஆ) "முறஞ்செவி வாரணம்" சிலப். கo: உசஎ. (இ) "முறஞ்செவி யாணையும்" மணி.

*கறங்குவெள் (க)ளருவி †யொலியிற் றுஞ்சும்
(உ)பிறங்கிருஞ்சோலை (ங)நன்மலை நாடன்
(ரு) மறந்தான் மறக்கினி யெல்லா(ச)நமக்குச்
‡சிறந்தன நாநற் கறிந்தன மாயி (ஞ்)னவன்றிறங்
(ஈ)கொல்யானைக் கோட்டால்(எ)வெதிர்நெற் ||குறுவாநாம்
வள்ளை யகவுவம் வா, இகுளைநாம்
வள்ளை யகவுவம் வா

ககூ : கஉக. (ஈ) "சுளகு வார்செவித் தூங்குகைக் குஞ்சரம்" சீவக. களஎஅ. (உ) "முறஞ்செவி வாரண முகத்துத் தம்பிரான்" விநாயக. தூர்வைதுலை. உஉ.

க. அருவி யொலியில் விலங்கு துயிலுமென்பதை (அ) "வேட்டம் படரு மூடங்குளைமான் புனிற்றுக் குருளை விழிதுயில, மோட்டு முதுநீர்ப் பஃறலைய வருவிதூங்கு முகிறவழ்பொற்,கோட்டில்" (ஆ) "கறங்குகுர லுளையிரிமான் சிறுகுருளை கவிழ்ந்தலைய வருவியோலி, னுறங்குமுயர் பொலங்குமிமி யிமயம்" காசீ. காசியின். எ; கேதார. சு.

உ. "நிவந்தோங்கிய சோலை, மலைகெழு நாடன்" தூறுந். உஅக.

ங. (அ) "நன்மலை நாடன்" (ஆ) "நன்மலை நன்னாட" கலி. ஙஅ : உசு, சகூ. கூ.

ச. (அ) "யாமுமக்குச்,சிறந்தன மாத லறிந்தனி ராயின்" (ஆ)"சிறந்தானை வழிபடீஇ" கலி. நி: ச-நி, கூ: உங; என்பவையும் அவற்றின் குறிப்பும் ஈண்டு அறிதற்பாலன.

ஞ. (அ) "தினைகுறு மகளி ரிசைபடு வள்ளையும்" மலைபடு. ஙசஉ. (ஆ) "இன்னிசைக் கோதையர், வள்ளை பாடுவர் மன்னவன் வண்மையே" அரிசந்திர. நகரச்சிறப்பு. எ.

ஈ. (அ) "வயக்களிற்றுக், கோடுலக்கை யாக.....வாகெழை நெல்லை யறையுரலுட் பெய்திருவாம், பாடுகம்" கலி. சக: க - ச என்பதும் அதன் குறிப்பும ஈண்டு அறிதற்பாலன. (ஆ) "கொல்யானை" கலி. இசு: ஙஉ, கஙச: ங; கஙச. ங-இல், கொல்யானை என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

எ. வெதிரினெல்லும் வேயின் முத்தும் கூறுதல் மரபு: (அ) "வேயுட் பிறந்த வாய்கதிர் முத்தம், வெதிரிற் பிறந்த பொரியவி ழருநெல்" பெருங். (க) இக: கக-கஉ. (ஆ)"வேய்கண் ணுடைந்து முத்துதிரவும், வெதிர்கண் ணுடைந்து நெல்லுதிரவும்" யா - வி. சூ. கூஞ். மேற்கோள், 'நலஞ்செல' எனவும் (இ) "நெற்கொ ணெடுவெதிர்க் கணைத்த

(பிரதிபேதம்) * கறங்கும், † ஒலில், ‡ நெற்றமை, || குறுவாரும்.

எ-து: மறத்தைத் தன்னிடத்தேகொண்டபெரிதாகிய (க) புலியினது பழைய மாறுபாட்டைக்கெடுத்த முறம்போலுஞ் செவியையுடைய (உ) யானை தனக்கு முன் நின்ற (ங) குளகைத் தின்று ஒலிக்கின்ற வெள்ளிய அருவிநீரைப் பருகி அஃது ஒலுறுத்துதலாற்றுயில்கொள்ளும் பெருக்கின்ற கரிய சோலையினையுடைய நல்ல மலைநாட்டையுடையவன் நாம் வருந்த நம்மை மறந்தான், இனி அவன் மறப்பாளனை; (சு) * இகுளையே! ஆராய்ந்து பார்க்கின் நாம் நமக்கு அவன் சிறந்தபடியை மீளவும் அறிந்தேம், இனிக் கொன்றயானையின் கொம்பாலே மூங்கினெல்லைக் (ரு) குறுதற்கு நாம் அவன்செய்த கொடுமையின் கூற்றை வள்ளைப்பாட்டாகப் பாடுவேமாகவாவெனத் தோழிஇயற்பழிக்க, அதுகேட்ட தலைவி தான் இயற்படமொழிவாளாகக்கருதி ஏடீ! நீ கூறியவாறன்றி அவன் திறத்தை நாம் (சூ) வள்ளைப்பாட்டாகப் பாடுவேமாகவாவென்றாள்; எ - று.

யானை" தொல். சீ. ங, (ஈ) "நெல்லுடை நெடுவெதிர்" (உ) "புல்லிலை வெதிர நெல்லிளை காடே" அகம். கஅ: சு. ஙகள: கக. (ஊ) "சிறியிலை வெதிரி னெல்லிளை யும்மே" புறம். கo: ச. (எ) "நெற்பட்ட கண்ணே வெதிர்சாம்" நான்மணி. ச. எனவும் வருதல் காண்க. சிற்சில விடத்து அருகி மாறியும் வரும்.

க. (அ) "கொடுங்கே ழிரும்புற நடுங்கக் குத்திப், புலிவிளை யாடிய புலவு நாறு வேழத்தின், றலைமருப்பு" (ஆ) "இரும்புலி தொலைத்த பெருங்கை யானை" நற். ங: ச - சு, ஙடுஙஃ: க; (இ) "சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித், தொன்முரண் கொல்லுந் துன்னருஞ் சோலை" குறுந். அஅ; (ஈ) "இரும்புலி தொலைத்த பெருங்கை வேழத்து" (உ) "வேங்கை, யடுமுரண் டொலைத்த நெடுநல் யானை" அகம். உ.எஉ: க, ஙoஎ: சு - எ.

உ. யானை, புலியைக்கொன்று மலைப்பக்கத்தி லுறங்குதல்: "கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு, நெடுவரை மருங்கிற் றுஞ்சும் யானை" கலி. சக: க - உ.

ங. குளகென்பது இலையுணும்விலங்குணவென்பர்; அது யானையின் உணவாகிய தழைக்கே (அ) "இன்குளகு" (முல்லை. ங.ங.) (ஆ) "குளகமர்ந் துண்ட" (கலி. சங:உo.) (இ) "உண்குளகு மறுத்த" (அகம். ங.கஉ:ங) (ஈ) 'நாகம் ....அதிமதுரத்தின்குளகைக் கையிலேகொண்டால்' (சிவக. எடுo. உரை) எனப் பெரும்பாலும் வருகிறது.

ச. கலி. கoங: ஙக. "இகுளை" என்பதன் குறிப்பைப் பார்க்க.

ஞ. இவ்வுரையை நோக்க 'குறுவான்' என்றபாடஞ் சிறந்ததாயினும் 'சூறவாம், வினையெச்சமுற்று' என்ற விசேடக்குறிப்பால் குறுவா மென்று பாடங்கொள்ளப்பட்டது.

சு. வள்ளை - உலக்கைப்பாட்டு; உரற்பாட்டென்றுங் கூறப்படும்.

(பிரதிபேதம்) * இனையோய் ஆராய்ந்து.

*மறக்க,வியங்கோள். மறந்தான்மறக்கவென்றது அருளைச்செய்தயர்த்தலே. இருளே ஆயின் என்பனவற்றை முன்னே மாறிக்கூட்டுக. எல்லாவெண் பற்களைப் பின்னேகூட்டுக.

"முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச்சொ, †னிலைக்குரி மரபி னிருவீற்று மூரித்தே" (க) என்பதனுன் (உ) எல்லாவென்னுள். குறுவாம், வினையெச்சமுற்று.

நாடனென்றதனுல் நாமும் அயலார் கூறும் பழைய அலரைக் கெடுத்துத் தன் மனத்து உளவாகிய துகரும்பொருள்களே துகர்ந்து தானுஞ் சுற்றமும் புகழ்ந்துகூறத் தன்னில்லின்கண் நாம் இருக்கும் நிலைமையை நிகழ்த்தாது நாம்வருந்த நம்மை மறந்தானென்று உள்ளுறையுவமங்கொள்க. "கிழவோட் குவம மீரிடத் துரித்தே" என்னும் (ங) உவமவியற் சூத்திரத்துச் சிறபாண்மை குறிஞ்சிமுதலிய வற்றிற்கும் ‡உவமப்போலிகொள்க என்றலிற் குறிஞ்சியில் உவமப்போலிகொண்டார். "தோழியுஞ் செவிலியும் பொருந்துவழி நோக்கிக், கூறுதற் குரியர் கொள்வழி யான" (ச) என்பதனுல், தோழி || உவமப்போலி கூறினுள். இதுபயவுவமப்போலி. இந்நிலத்து முன்உள்ளுறைகூறியவற்றிற்கும் பின்னர்உள்ளுறை கூறுகின்றவற்றிற்கும் இதுவே விதியாகக் கொள்க.

கo (ரு)காணிய வாவாழி தோழி வரைத்தாழ்பு
(சு)வாணிறங் கொண்ட வருவித்தே நம்மருளா
நாணிலி நாட்டு மலை

க. தொல். பெருளி. சூ. உசு.

உ. எல்லாவென்பது ஏடியென்னும் பொருளில் 'எலாஅ' என்றும் 'எலா' என்றும் வருகின்றது.

ங. தொல். உவம. சூ. உக.

ச. (அ)"காணிய வாவாழிதோழி"என்பது செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம் வினைமுதல் வினைகொண்டு முடிந்ததற்கு மேற்கோள்; நன். வினை. சூ. உடு. வி. இரா. இ - வி. சூ. உசஎ. (ஆ) "காணியவா வாழியதோழி" என ஒருமேற்கோள் நன். வினை. சூ. உடு. மயிலை நாதர் உரையிற் காணப்படுகிறது

ரு. (அ) "வாள்வனப்புற்ற அருவி .... குன்றே." ஐங்குறு. ஙகஉ. (ஆ) "வாள்லிலங் கருவி தாஅய் நாளை" அகம். உஎஅ எ. (இ) "வாள்வெள் ளருவி வரைமிசை யிழியவுங், கோள்வலுமுலை விடாரிடை யியம்பவும்" (தொல். செய். சூ. உஉஅ. 'இயைபுவண்ணம்' இளம். மேற்.) (ஈ) "வாளருவித்,தடமலை மேலுங்கள் சீறூர் நெருவென்பர்" அம்பிகா. அஎ.

(பிறதிபேதம்) * மறக்கு,†நிலைக்குரிய மரபி ‡வுவமப் பொலிவுகொளக,|| உவமப்பொலிவு.

இரண்டாவது குறிஞ்சி கூ. உடுக

எ - து: வாழ்வாயாக தோழி ! கம்மை அருளாத கொடுமைக்கு (க) நாணுதிருக்கின்றவனுடைய *நாட்டின் மலையாயிருந்தும் பக்கமலையிலே தாழ்ந்து ஒளியையுடைய நிறத்தைக் கொண்ட அருவியை யுடைத்தா யிராகின்றது, இதற்குக் காரணத்தை நம்மனத்தான் ஆராய்தற்கு வாவெனத் தோழி இயற்பழித்தாள்; எ - று.

கஉ (உ) ஆர்வுற்றுர் நெஞ்ச மழிய விடுவாரே
வேர்க்கும் பெருந்திற மொல்காத நேர்கோ
(ங) லறம்புரி நெஞ்சத் தவன்

எ-து: ஒருகூற்றிற்சாயாத†நேர்மிற்குங்(சு)துலாக்கோல்போலஓர்தலுற்று அறத்தையே விரும்பின நெஞ்சத்தையுடையவன் தன்னுன்(ஞ்)துகரப்பட்டார் நெஞ்சத்தை அழியும்படி விடுவனே? விடான் காணெனத் தலைவி இயற்பட மொழிந்தாள். எ - று.

க. நாண்,மகளிர்க்கன்றியும் ஆடவராகிய நன்மக்களுக்கு முரித்தென்பதனை (அ) "வடுப்பரியு, நாணுடையான் கட்டே தெளிவு" (ஆ) "கருமத்தா ஞணுத ஞணுத் திருநுத, னல்லவர் நாணுப் பிற" (இ) "நாணெனூடு நல்லாண்மை பண்டுடையேன்" குறள். நிoஉ, கoஉக, ககஙஉ. (ஈ) "நாணிலான் சால்பு ..... நாடி னகை" சீறுபஞ்ச. கஉ. என்பவற் றாலும் அறியலாம்.

உ. "உயர்மொழிக் குரிய வுறழுங் கிளவி" என்புழி, "மறங்கொளிரும் புலி யென்னுங் *குறிஞ்சிக்கலியுள் 'ஆர்வுற்றுர் .. ..நெஞ்சத்தவன்' எனத் தலைவிகூறலும், 'தண்ணறுங் கோங்க .. .. ..ஞட்டுமலை' எனத் தோழி உறழ்ந்துகூறியவாறு காண்க. இதுவும் தலைவி கூற் றிற்கு மாறுதலின் வழுவாய்ச் சிறைப்புறமாகக் கேட்டு வரைதல் பய ஞதலின் அமைந்தது" என்பர், நச. தொல். பொருளி. சூ. சச.

ங. "அறங்கிடந்த நெஞ்சும்" நள. சுயம்வ. சள.

ச. (அ)"துலாக்கோ லியல்பே தூக்குங் காலை, மிகினுங் குறையினு நில்லா தாகலு, மையந் தீர்த்தலு நடுவு நிலைமையோ, டெய்தக் கூறுப வியல் புணர்ந்தோரே"(ஆ)"துலாநா வன்ன சமநிலை" (இ)·'செம்பொற்றுலைத் தாலமன்ன தனிநிலை" கம்ப. மந்தை. கசு.(ஈ) '·ஐயந்தீரப் பொருளை யுணர்த்தலு, மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே" நன்.

ஞ. 'ஆர்வு' என்பது அனுபவித்த லென்னும் பொருளில் வருதற்கு, "ஆர் வுற்ற, விட்டகல் கில்லாத் வேட்கையும்" என்பதும் சான்றுபகரும்; தீரிகடுகும். சுடு. ஆர்வமுறலென்பது ஆர்வுறலென வருதலுமுண்டு.

(பிரதிபேதம்) * காட்டுமலை, †கோற்கும்.

கசூ தண்ணறுங்(ஈ) கோங்க மலர்ந்த வரையெல்லாம்
பொன்னணி யானைபோற் றோன்றுமே நம்மருளாக்
(உ)கொன்னுள்ள ளுட்டு மலை

எ - து: நம்மை அருளீ இல்லறப்பயனே ஆளாமற் பயனின்மையை ஆளுகின்றவன் நாட்டு மலையாயிருந்தும் தண்ணியநறிய *கோங்கம் பூத்த பக்க மலையெல்லாம் பொன்னுற் செய்த பல ஆரமணிந்த யானைகள் போலச் சிறந்து தோன்றும்; இதற்குக் காரணமென்னெனத் தோழி இயற்பழித்தாள். எ - று.

அருளாவென்பது, செய்யாவென்னு மெச்சம்.

ககூ கூருகிரோ யேய்ப்ப விடுவாளே தன்மலை
(ஈ)நீரினுஞ் சாய லுடைய னயந்தோர்க்குத்
(ஐ)தேரீயும் வண்கை யவன்

எ - து: தன்கொடையை விரும்பி வந்தோர்க்குத் தேரைக் கொடுக்கும் வளவிய கையையுடையவன் நம்மாட்டுத் தன்மலையின்நீரினும் †மென்மையை யுடையவனுதலால் வாயாமல் நமக்கு மிகுகின்ற நோய்நம்மைப் பொருந்த விடுவனே? ‡விடான்; வரைவெனனத் தலைவி இயற்படமொழிந்தாள்; எ - று.

உஉ (ஞ)வரைமிசை மேற்றொடுத்த நெய்க்க ணிறுஅன்
மழைதுழை திங்கள்போற் றோன்று மிழைநெகிழ
வெவ்வ முறீஇயினன் குன்று

க. "மந்தா மென்னு மத்த யானை, நீல நெடுவரை நெற்றித் தாகிய, கோலக் கோங்கின் கொழுமலர் கடுப்புறு, சூறைக் கடவுளி பாறப் பறந்தெனப், பட்ட மடுத்த கொட்டையொடு பாறவும்" பெருங். (கூ) உஎ: எக - ஞி.

உ. "அச்சம் பயமிலி காலம் பெருமையென், றப்பா னுன்கே கொன்னேச் சொல்லே" தொல். இடை. சூ. கூ.

ஙூ. (அ) "புதுநிறை வந்த புனலஞ் சாயல் .....நன்னற்படர்ந்த கொள்கை யொடு" மலை. சுக-சு. (ஆ) "வானிநீரினுந், தீந்தண்சாயலன்" பதிற். அசு: கஉ-ஙூ; (இ) "மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரு நீரினு மினிய சாயற், பாரி" புறம். கo஫: சு - அ.

சு. (அ) "தேர்வீசு கவிகை, யோம்பா வள்ளல்" மலை ஙூகூ - சoo. (ஆ) "தேர்வீ சிருக்கை" (இ) "தேர்வீ சிருக்கை நெடியோன்" புறம். சுகூ: கஅ, ககசு: சூ.

ஞி. (அ) "வன லிதணத் தகிற்புகையுண்டியங்கும், வானூர்மதியம்வையுசேரி னவ்வரைத், தேனி னிருலென வேணி யிழைத்திருக்கும், கானக நாடன் மகன்" கலி. ஙூ: எ - கo. (ஆ) "பாய்கலிற் கிழிந்து,

(பிரதிபேதம்) *கோங்கு. †மென்மையுடையன், ‡ விடானெனத்.

எ - து: பூணெகிழ்ந்து விழும்படி நம்மை வருத்தமுறுத்திஞேன் குன்ற யிருந்தும் பக்கமலைகளின்மேலே வைத்த தேனை இடத்தேயுடைய இருள் மழையிலே தழைகின்ற மதியைப்போலத் தோன்றுகிற்கும், இதற்குக்காரணம் என்னெனத் தோழி இயற்பழித்தாள் ; எ - று.

இது தேன் பயன்படுதல்கூறினுள். இதன்கண் தோழி இயற்பழித்தன எல்லாம் பொருட்புறத்திறைச்சி தோன்றியவாறு காண்க.

உடு எஞ்சா தெல்லா கொடுமை நுவலாதி
(க)யஞ்சுவ தஞ்சா வறனிலி யல்லனென்
னெஞ்சம் *பிணிக்கொண் டவன்

எ - து: இங்ஙனந் தோழி இயற்பழித்ததற்குப் பொருளாய், ஏடி! ஒழியாமல் அவன் கொடுமையைக் கூறுதேகொள், என்னெஞ்சத்தைத் தன்னன்பாற் பிணித்தல்கொண்டவன் பிறரஞ்சுங்கொடுந்தொழிற்கு அஞ்சாத அறனில்லாதவன் அல்லனெனத் தலைவி இயற்படமொழிந்தாள் ; எ - று.

உஅ (உ)என்றியாம் பாட மறைநின்று கேட்டனன்
றுழிருங் கூந்தலென் றுழியைக் கைகவியாச்

பொதிக்க ணிறுஅற் பூம்புறம் புதைஇ, மதிக்கண் மறைந்த மாசுண மான, மணிவரை மருங்கி னணிபெற வொழுகி" பெருங். (க) நூ; நூசு-நூஎ. (இ) "முகிறவழ்பொற்,கோட்டிற் றுறுத்த விருலுமொளிர் குளிர்மா மதியு மினிதுணர்வான், காட்டு கென்னக் குறமகளிர் தத்தங் கணவர்க் கைதொழுவார்" காசிகண்டம். காசியின்சிறப். எ. (ஈ) "விழுமணிக் கோட்டு நெற்றி யிருளினை விளங்கு வெள்ளை, முழுமதி யென்று வான முள்ளெயிற் றரவங்காக்கு, மழைதவழ் சுவேத மென்னு மால்வரை"(உ) "கலைநிறை மதியி னேறு கழைவள ரிருலைவானத், தலை முலை மாத ரொப்பு நோக்கருங் கயிலை வெற்பு" இலிங்க. நவவருடத்தினைடைவு. கூ; நவவருடத்தினெல்லை. நூக. (ஊ) "புடைகலந்த தேனினங்கள் பகன்மதியை யிருலென்னப் பருந்து' மொய்க்குங், குடுமி வரை" பிரமோத்தர. சிவதான. கஉ.

க. (அ)"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ,தஞ்ச லறிவார்தொழில்" குறள். சஉஅ. (ஆ) "அஞ்சுவதஞ்சி.....வாழு மியல்புடை யார" நாலடி. எசு. இவைகளும்(இ)தறுகண் என்பதற்கு 'அஞ்சத்தக்கவை களை அஞ்சாதவன்' என எழுதியிருக்கும் உரையும் நன். வி. சூ. நகூ. இங்கே அறிதற்பாலன.

உ. (அ) "ஒன்றிநாம் பாட மறைநின்று கேட்டருளி" கலி. சக: சக; (ஆ) "என்றியாம் பாட மறைநின்று கேட்டருளி" சிலப். (உசு)

(பிரதிபேதம்) * பிணிகொண்டவன்.

(க)சாயலின் மார்பன் சிறுபுறஞ் சார்தர
(உ)ஞாயிற்றுர் முன்ன ரிருள்போல மாய்ந்தெதன்
ஞயிழை மேனிப் பசப்பு

எ - து: *என்று தன்னெஞ்சுடனே முன்மொழிந்து பின்பு யாங்கள்பாட மறைந்துநின்று கேட்டனனாய் மென்மையால் இனிய மார்பினையுடையான் தாழ்ந்த கரிய கூந்தலையுடைய என்றோழியை எனக்கு அவள் வரவுகூறுமாற் கையைக் கவித்து என், சிறிய புறத்தைச் சேர என்னுடைய ஆராய்ந்த இழையினையுடைய மேனியிற் பசப்பு ஞாயிற்றுமுன்னர் நின்ற இருள்போலக் கெட்டதென்று யாம்† அவ்வாறுபாடவும், அவன் (ங)சிறுபுறஞ்சாராமையின் நம் மேனியிற்(சு)பசப்பு மாயாமல் நின்றதெனப் பிரிந்தவழிக் கலங்கினாள்; எ - று.

இது "சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொள் ளியற்கை, புல்லிய இளமி யெச்ச மாகும்" (ஞ)என்பதனுக் கூற்றெச்சமாம்.

இதனால், உயிர்ப்பென்னும் மெய்ப்பாடு தலைவிக்குத் தோன்றிற்று.

இஃது ஐஞ்சீரடியுஞ்சொற்சீரடியும் வந்த தரவுவந்து எனைய வெண்பாவாய் வந்த கலிவெண்பா. (சு)

க. (அ)"இன்சாயன்மார்பன்" (ஆ) "சாயலின் மார்பு" கலி. சுஞ.: ஞ, கூசு: ஙஅ.

உ. (அ)"ஞாயிற்றுமுன்னரிருள்போல மாய்ந்தெதன், ஞயிழையுற்றதுயர்" (ஆ)"ஆயிழை மடவர லவல மகலப், பாயிருட் பரப்பினைப் பகல் கலாந்ததுபோல... .. ..வந்தனர்" (இ) "இருளு முண்டோ ஞாயிறு சினவின்" (ஈ) "பொங்கு பாணுமுன் னிருளென முடிந்தது" (உ) "அங்கண்மா ஞாலமுண் டமரு மாரிருள், பொங்குபே ரொளிவர விளிந்து போனபோல்" (ஊ) "ஆயிரங் கிரணத் தலர்கதிர் முன்னம், பாயிருள் கெடுமெனப் பகர்பழ மொழியும்" (எ) "ஊழுறு வறுமை பரிதிவான வன்முன்னுள்ளிருட் பிழம்பென வொழியும்"(ஏ)"வெங்காரிருள் பாணு விளங்க வொதுங்கு மாபோல்" (ஐ) "ஞினை முழுது மாயும் வயங்கொளியோன்மிண்ணுங்கனகவுதயவரைமேவிருள்வீந் திடுவதுபோல்" (ஒ) "பாவம்..... .....சுடர்துறக்கு மிருள்போலப் பெயர்ந்த தன்றே" (ஓ)"தவனே தயத்தி லிருளென்னச் சாய்ந்தான்"(ஔ)"இரவி பொற்கதிர் தெறுதலி னிரிதரு மிருளெ னத்திசை திசைதொறு முதுகிட" (ஃ) "சாப மொல்லெவெஞ் சுடர்மு னள்ளிரு ளெனவகன்றதே"(அஅ) "இருளே, யருணனுண்டென" (ஆஆ) "பொங்குகாரிரு ளிரவிகண் டெனப் புலர்ந்தாங்கு"

ங. சிறுபுறம் - புறக்கழுத்து.

ச. பசப்பு - தலைவனைப் பிரிந்திருக்கு மகளிர்க்குப் பிரிவாற்றுமையான் வருவதொரு நிறவேறுபாடு.

ஞ. தொல். செய். சூ. உ0சு.

(பிரதிபேதம்) * முன்மொழிந்து தன்னெஞ்சுடனே யென்றுமுன்பு யாங்கள், † இவ்வாறு,

(சி.) வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்
தேக்கு மருப்பி னினவண் டிமிர்பூதஞ்
சாந்த மரத்தி னியன்ற வுலக்கையா
லேவன வெண்ணெ லறையுரலுட் பெய்திருவா
மையனை யேத்துவாம் போல வணிபெற்ற
மைபடு சென்னிப் பயமலி நாடனைத்
தையலாய் பாடுவா நாம்;

அ தகையவர் கைச்செறித்த தாள்போலக் காந்தண்
முகையின்மேற் றும்பி யிருக்கும் பகையெனிற்
கூற்றம் வரினுந் தொலையான்றன் னட்டார்க்குத்
தோற்றலி நாணுதோன் குன்று;

கஉ வெருள்புட னேக்கி வியலறை யூக
மிருடீங் கிறுவரை யூர்பிழி பாடும்
வருடைமான் குழவிய வளமலி நாடனைத்
தெருளத் தெரியிழாய் நீயொன்று பாடித்தை;

கசு நுண்பொறி மான்செவி போல வெதிர்முளைக்
கண்பொதி பாளை கழன்றுகும் பண்பிற்றே
மாறுகொண் டாற்று ரெனினும் பிறாகுற்றங்
கூறுத றேற்றுதோன் குன்று;

உ0 புணர்நிலை வளகின் சூளகமர்ந் துண்ட
புணர்மருப் பெழில்கொண்ட வரைபுரை செலவின்
வயங்கெழில் யானைப் பயமலி நாடனை
மணநாறு கதுப்பினாய்மறுதலொன்று பாடித்தை;

உசு கடுங்க ணுழுவை யடிபோல வாழைக்
கொடுங்காய் குலைதொறூஉந் தூங்கு மிடும்பையா
லின்மை யுரைத்தார்க் கதுநிறைக்க லாற்றுக்கா
றன்மெய் துறப்பான் மலை;

எனவாங்கு;

உகூ கூடி யவர்திறம் பாடவெண் ணேழிக்கு
வாடிய மென்றோளும் வீங்கின
வாடமை வெற்ப னளிதகக்காற் போன்றே.

இது வனாவுநீட ஆற்றாயினவிடத்துத் தோழி தானுந் தலைவியும் வள்ளைப்பாடலுள் *முருகனைப் பாடுவார்போல இருவர்க்கும் ஏற்பத் தலை வனைப்பாடத் தலைவி ஆற்றினமை *தோழி தன்னுள்ளே கூறுவாளாயித் தலைவன் சிறைப்புறமாகக் கூறியது.

இதன் பொருள்.

(க)வேங்கை தொலைத்த வெறிபொறி (உ)வாரணத்
தேந்து மருப்பி னினவண் டிமிர்பூதுஞ்
சாந்த மரத்தி னியன்ற வுலக்கையா
(கூ)லினை வெண்ணெ (ச)ுமறையுரலுட் †பெய்திருவா
மையனை யேத்துவாம் போல வணிபெற்ற
(டு)மைபடு சென்னிப் (சூ)பயமலை நாடனைத்
தையலாய் பாடுவா நாம்

க. யானைவேங்கைப்புலியைத் தொலைத்தலுண்டென்பதை, இந்நூற்பக்கம் உரிக: க - ஆம் குறிப்பாலுணர்க.

உ. (அ) "யானை வெண்மருப் புலக்கை யறையுர லிவன மிடித்த" சீவக. கடுசுஉ. (ஆ) யானைக்கோம்பை உலக்கையாகக் கொள்ளுதல் இந்நூற் பக்கம் உருசு: உ - ஆம் குறிப்பாலும் உணரப்படும்.

கூ. ஐவனம், குறிஞ்சி நிலத்துக்கு உரியதென்றும் இது தினையைப் போலவே குறிஞ்சிநில மாக்களால் பயிர் செய்யப்படுவதென்றும் அருவி நீரால் விளைக்கப்படுவதென்றும், குறிஞ்சி நிலமகளிரால் வினை வின்கண் காக்கப்படுவதென்றும் பண்டை நூல்களிற் கூறப்பெற் றுள்ளது. "தேனுகு மடையை மாற்றிச செந்தினைக் குறவர் மூங்கி, வானநீ ராறுபாய்ச்சி யைவனம் வளர்ப்பர் மாதோ" என்று (கம்ப. வரைக்காட்சி. நசு.) கம்பர் புனைந்துரைத்தனர். இதனோடு தினையும் கலந்து விதைக்கப்படுமென்பது புறம்.* கடுகூ - ஆம செய்யுளுரையால் தெரிகிறது. "மைபடு மால்வரை பாடினள்கொடிச்சி, யைவன வெண் ணெல் குறூஉ நாடனெம்மி" என ஐவனவெண்ணெல் ஒன்றென்றெண் ணும்படி கூறும் நற்றிணை. ஐவனமும் வெண்ணெல்லும் வெவ்வே றென்னும், மலைபடு கடாத்தினுரை.

ச. "அறை யுரல்" கலி. சக: கூ. சீவக. கடுசுஉ. பேருங். (உ) கச: டுo; தூணா. சுயம். கoசு.

டு. (அ)"மைபடு மால்வரை" நற். நுஎசு: கூ.(ஆ)"மைபடு சிலம்பின்" குறுந். நுஎக, பரி. கசு: உ. (இ) "மைபடு குடுமிய குலவரை" பரி. கடு: கூ-கo.

சூ. (அ)"பயமலை நாடன்" குறுந். கசநு; (ஆ) "பாடிமி முருவிப் பயமலை" மணி. கஎ: டுo.

(பிரதிபேதம்) * தன்னுள்ளே, † பெய்திருவேம், பெய்திருவம்.

எ - து: தையலாய்! நாம் இருவேமும் ஐவனமாகிய வெண்ணெல்லைப் பாறையாகிய உரலிலே சொரிந்து, புலியைக் கொன்ற *மதத்தான் மயங்கின புகரையுடைய யானையினது தலை யேந்தின கொம்பாலும் இனமான வண்டுகள் ஒலித்துத் தாதை ஊதுஞ் சந்தனமரத்திலுலும் பண்ணின உலக்கைகளாலே குற்று, முருகனைப் புகழ்வேம்போலே அழகுபெற்ற மேகம் உண்டாகின்ற தலைமையினையுடைய பயனையுடைத்தாகிய மலைநாட்டையுடையானைப் †பாடுவேம்; எ - று.

பாடுவாமென்னும் பொருளே பயப்பச் ‡செய்தலின் இறைச்சியிற் பிறந்த பொருள்காண்க. இஃது "இறைச்சியிற் பிறக்கும் பொருளு ..... மோர்க்கே" (க)என்பதனுற் கொள்க. இஃது இரண்டு உலக்கையாலும் பயன்கொண்டாற்போல அவன் பெயர்பாடுதலாற் பயன் கொள்ளாமையில் உள்ளுறையுவமமன்மை உணர்க.

அ (உ)தகையவர் கைச்செறித்த தாள்போலக் காந்தண்
முகையின்மேற் றும்பி யிருக்கும் பகையெனிற்

க. தொல். பொருளி.சூ.நஉ. இசசூத்திரத்தினுரையில் இவ்வுரையாசிரியர், இறைசசியிற் பிறக்கும்பொருளுக்கு "வேங்கை .. .. . பாடுவா நாம்" என்பதனை மேற்கோள்காட்டி 'இதனுட் புலவுநாறியும் பூநாறியுந் தீதும் நன்றுமாகிய இறைசசியாகிய உலக்கைகளாற் றலைவனைப்பாடும் பாட்டோடே கலந்து கூறத்தகாத தெய்வத்தையும் பாடுவாமென்னும் பொருள் பயப்பச்செய்த இறைச்சியிற் பொருளே பயந்தவாறும் இரண்டுலக்கையானும் பயன்கொண்டாற் [போல் அவை அன்பே] (போல ஐயன்பேர்) பாடுதலாற் பயன் கொள்ளாமையின் உள்ளுறை யுவம மன்மையுங் காண்க' என்று எழுதியிருக்கிறார்.

உ. (அ)"மரகதமணித் தாள்செறிந்த மணிக்காந்தண மெல்விரல்கள், பயிர் வண்டின் கிளைபோலப் பன்னரம்பின் மிசைப்படர" என (சிலப். எ: கo - கக.) இவ்வுவமை ஒருவாறுக மாறிவந்திருத்தல் இங்கு ஒப்பு நோக்கற்பாலது.(ஆ) இவ்வுணர்கலத்துக்குள்ள தாள், தாழ், தாட்கூட்டு, தாள்செறியென்னும் பெயர்களை நோக்கின், இது முதலிற் காலணியின் பெயராயிருந்து பின்பு கைவிரலணிக்கும் வழங்கியிருக்குமென்று தோற்றுகிறது. (இ) "வாள்புரை விழியாயுன் மலரடி யணமானத், தாள்புரை தளிர்வைகுந்தகைஞிமிறிவைகாணுய்" என்று (கம்ப. வனம். கஎ.) கம்பர் கூறியிருத்தலும் நோக்கத்தக்கது. இது கைவிரலணிக்கும் நெடுநாட்குமுன்னே வழங்கப்பெற்றதென்பது, (ஈ) "கொடுங்குழை

(பிரதிபேதம்) * புகரை † பாடுவேமென்னுள். வெறியாரணம் - மதத்தானமயங்கின யாரணம். பாடுவாமென்னும் ‡ செயதல் இறைச்சியிற.

(க)கூற்றம் வரினுங் தொலையான்றன் (உ)னட்டார்க்குத்
தோற்றலே ரூணேதோன் குன்று

எ-து: பகையென்றுகூறிற் கூற்றுவன்எதிர்வரினுங் கெடாஞய்த் தன்னை உறவுகொண்டார்க்குத்தோற்றலோரூணதவனுடைய மலை,(ங) தும்பி அழகினை

பெய்த செ[ழு]ஞ்செவிப் பேதை, சிறுதாழ்செறித்த மெல்விரல்சேப்ப, வாளெயிர்ந்தடி வல்லிதின் வதைஇப், புகையுண் டமர்த்த கண்ணள்" நற். கஉ0: ங - சு. (உ) "மரகதத் தாள்செறி, காந்தண் மெல்விரல் கரப்ப வுணர்த்து" சிலப். (சு) கஎ - அ. என்பவற்றாலும் விளங்கும்.

க. (அ) "கூற்றுவெகுண்டு வரினு மாற்றுமாற் றலையே" பதிற். கச: க0. (ஆ) "கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு, மாற்றலதுவே படை" தூது. எசுடு. (இ) "அருகலை நமனுமாற்றான்" சீவக. ககஎச. (ஈ)"கூற்றுவன் றன்னொடிவ் வுலகங் கூடிவந், தேற்றன வென்னி னும் வெல்ல வேற்றுளை, மாற்றவன்தம்பி" (உ)"கூற்றையுங் கட்பொறி குறுகக் காண்பமே, னூற்றுறுகுருதியோ டெயிருமுண்பரால்" கம்ப. விபீடணனடை. சுஅ. இலங்கை கேள்விப். உஉ. (ஊ) "மாமறலிநேர் வரினுந், தோற்க லாதவர் மூவருந் தம்மூயிர் தோற்றார்" வில்லி. பதினுன்காம்போர். ககஅ.

உ. (அ)"நட்டார்க்குத்தோற்றலே நாணுதோன்"என்பதனை 'அதற்கு விளை யுடைமையின்' என்னும் நான்காம் வேற்றுமையை முடிக்கவரும் பொருள்வேறுபாட்டிற் சூத்திரத்து அப்பொருட்கிளவியும் அதன்பால' என்பதற்கு மேற்கோள் காட்டினர், நச்சினர்க்கினியரும் வேறொரு வரும்; (ஆ) சேனாவரையர் 'நட்டார்க்குத் தோற்கும்' என இதனை உரைநடையாக எடுத்துக் காட்டினர்; தொல். வேற்றுமை. சூ. கடு. (இ)"ஆதியென்றதனானே... ....'நட்டார்க்குத் தோற்றலே நாணு தோன்' என்பனபோல இதற்கு இதுவென்பது படவருவன பிறவுங் கொள்க" என்பர், இ - வி. உமையாசியர்; இ - வி. சூ. உ0க. (ஈ) "வன்பிற்றளராஞர் நட்டார்க்கு மடங்கித் தோற்ற லுண்டே" விநாயக. அரியற்கை. கசசு.

ங. தும்பி கரு நிறமுடைத்தாதல்பற்றி "நீலக்கடைச்செறி" என்றார். இந்நூற்பக்கம் கசு0: உ - ஆங்குறிப்பும் "மணிநிறத்தும்பி" கலி. சசு: உ. என்பதும் அதன் குறிப்பும் "மணிச்சிறைத் தும்பி" தூது. நகஉ. என்பதும் "தும்பி, யரியினம் கடுக்குஞ் சுரிவண ரைம்பால்" என்று (அகம். உஉங. கக - உ) கருங்கூந்தற்குத் தும்பி உவமையாக்கப் பெற்றிருத்தலும் "நிறங்கருகித் தும்பி பாய்த்துகைத்தனவே" (சீவக. கஉஉஅ) என்புழி 'இயல்பாகக் கருகினவேனும் இவ்வருத்தத்திற்குக் கருகியென்றார்' என்றெழுதியிருக்கும்விசேடவுரையும் இங்கே அறிதற் பாலன.

யுடைய(க) மகளிர் கையிலிட்ட தாட்கூட்டாகிய லேக்கடைச்செறிபோலக்(உ) காந்தளினது முகையின்மேலே அஃது அலருங்காலம் பார்த்திருக்கும்; எ-று.

என்பதனால், நஞ்சுற்றத்தார் மனநெகிழ்ந்து வரைவிற்கு உடம்படுங் காலம் பார்த்திருக்கின்றனென்றவாறாக உள்ளுறையுவமம் கொள்க. இது பயவுவமப்போலி. போலவென்னும் ஏனையுவமம் இதற்குச் சிறப்புக்கொடுத்து

க. மகளிர்கைக்குக் காந்தள் உவமையாகக் கூறப்படுதலே கலி. நிகூ. ஈ - ஊ - ஆம் அடிக்குறிப்பிற்காண்க; கையென்றது விரலையெனின் (அ) "நெடுவரையிழைஇய காந்தண்மெல்விரல்" (ஆ) "செழுங்குலைக் காந்தள் கைவிரற்பூப்பவும்" (இ) "விரலே..... .. ..காந்தளங் கொழுமுகை போன்றன" (ஈ) "காந்தண் முகைபுரை விரலின்" (உ) "காந்தண் முகிழ்விரலாற் கண்ணீர் துடை தொடாள்"(ஊ)"காந்தளஞ் செம்முகைகை, விரலென்றுகொல் செறித்தார்"(எ) "காந்தண் மெண் முகையின் முகிழ்விரல் குவித்து" என்பன ஒப்புநோக்குக.

உ. (அ) "அகலிலைக்காந்த ளலங்குகுலைப்பாய்ந்து, பறவையிழைத்த பல்கணிரு அற், றேனுடை நெடுவரை" நற். கஅடு: , அ - கo. (ஆ) "காந்த, ணைநுந்தா தூதுங் குறுஞ்சிறைத் தும்பி" குறுந். உஈக. (இ) "நாறு குலைக் காந்தட், கொங்குண் வண்டின்" ஐங். உஉசு. (ஈ) "காந்த,ளணி மலர் நறுந்தா தூதுந் தும்பி"(உ) "காந்தட், கொழுமடற் புதுப்பூவூதுந் தும்பி" அகம். கoஅ: கடு - சு, கஈஅ: கஉ-அ. (ஊ) "கல்லோங் குயர் வரைமேற்காந்தண்மலராக்காற்,செல்லாவாள்செம்பொறி வண்டினம்" நாலடி. உஅஈ. (எ) "குலையுடைக் காந்த ளினவண் டிமிரும், வரையக நாடனும்" ஐந்திணையெழு. ஈ.(ஏ)"நானிறச் சுரும்பும் வண்டு நன்மணி யணியிற் சாரற்,றேனுக மலர்ந்து சாய்ந்த சேயிதழ்க் காந்தட் செம்பூ" கம்ப. கார்கால. உசு. (ஐ) "பொன்மணி வண்டெழீஇந்த காந்தளம் போது போல" திருவிளை. திருமணப். கடுக. எனக் காந்தளில் வண்டு மொய்ப்பதாகக் கூறுதல் காண்க. (ஒ) "சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்" முருகு. சஈ. என்பதன் அமைதி 'தான் விரும்புதலின்' எனப் பெய்துரைத்த அதனுரையால் அறியலாகும். (ஓ) "நெருப் பவிர்ந்தனைய காந்த ணிரைநிரை மலர்ந்து நிற்பச், சுருப்பின நெருப் பென் றெண்ணித் தூரத்தே யகலுங்காட்சி,பருப்பதச் சிலேக்கைகாதன் பயந்தவன் மூடிக்க ணேற, விருப்பன வென்று மூசா தினையொழிந் தகல்வ,போன்ற" என்பதும் அதுவே. (ஔ)"மலர்ந்த காந்தண் மாரு தூதிய, கடும்பறைத் தும்பி சூர்நசைத் தாஅய்ப், பறைபண் ணழியும் பாடுசா னெடுவரை" என்பதும் இங்கே அறிதற்பாலது.

(பிரதிபேதம்) * பாத்திருக்கின்றனென்றவாக

நின்றது. (க) தொலையாமையுங் (உ) தோற்றலை நாணுமையும் முருகனுக்கு*உள வாகல் புராணங்களான் உணர்க.

கஉ †வெருள்புட னேக்கி வியலறை யூக
மிருணீங் கிறுவரை யூர்பிழி பாடும்
(ங)வருடைமான் குழவிய வளமலை நாடனைத்
தெருளத் தெரிபிழை நீபொன்று பாடித்தை

எ - து: தெரிந்த இழையினையுடையாய் அகற்சியையுடைய பாறையி லிருந்த கருங்குரங்கைச் சேரவெருண்டுபார்த்து இருள்செறிந்த பக்க மலையிலே ஏறி இறங்கி ஆடும் வருடைமானின் குழவிகளையுடையனவாகிய வளப்பத்தையுடைய மலைநாடனை விளங்க நீயொன்று பாடுவாயென்றாள்; எ - று.

(சு) பாடித்தை: முன்னிலை வினைத்திரிசொல்; வருடைமான்குழவி தன் இள மையான் வெருளத்தகாத யூகத்தை வெருண்டாற் போல ‡நீயும் நஞ் சுற்றத் தார் வரைவிற்குடம்படாரோவெனக்கருதிச் சுற்றத்தாரை வெருளாகின்றாய்; அது தகாதெனக் கூறினாளென உள்ளுறையுவமங்கொள்க. இது வினையுவமப் போலி. "தவலருஞ்॥ சிறப்பினத் தன்மை நாடின், வினையினும் பயத்தினு

க (அ) "ஓங்குவிறற் சேஎ, யாரா வுடம்பினீ யமர்ந்துவிளை யாடிய, போரால் வறுங்கைக்குப் புறந்தர னுடைய.....திருந்துகோன் ஞமன்றன் மெய்யிற் பிரிவித், திருங்கண் வெள்யாட் டெழின்மறி கொடுத்தோன்" பரி. நி: நிசை - சுஉ என்பதனாலும் (ஆ) "இவ்வா றமர் பொருமெல்லையி லீசன் மைந்தன்.....ஐவாளியினுற் சமனுற்ற லடக்கி னனுல்" கந்த. திருவிளை. நிசு. என்பதனாலும் தொலையாமை விளங்கும்.

உ. இது குறிக்குஞ்செய்தி, தந்தையாரை வலம்வந்து தமையனார் முன்பு பழம்பெற இவர் உலகுசூழ்ந்து பின்புவந்தனரென்பதோ; வள்ளிநாயகி யாரால் மாலைகொண்டு இவர் கைபிணிக்கப் பெற்றனரென்பதோ, உடன்பயின்ற மழுவா ணெடியோன் குரூஉப்பெயர்க் குன்று துளைக்க இவர் ஆற்றியிருந்தனரென்பதோ, வேறியாதோ, புராணம் வல்லார் வாய்க்கேட்டுணர்க.

ங. (அ) குழவியென்னும் இளமைப்பெயர் வருடைக்கும் வருமென்பதற்கு "வருடைமான்குழவிய வளமலைநாடனை" என்பதுமேற்கோள்; தொல். மரபு: சூ. கஅ. நச். சீவக. நாநிநி-ஆம் செய்யுளின் உரையுமீபார்க்க. (ஆ) குழவியென்பது வருடைக்குமுரிய மரபுப்பெயரென்பர் மயிலை நாதர். நன். பொது. சூ. நஎ. (இ) கலி. நிஐ: உக-உ. பார்க்க. (ஈ) வருடையின் செய்தியை கலி. நிஐ: சு-ஆம் அடிக் குறிப்பிற் காண்க.

சு. பாடித்தை கலி. சஐ: கஐ.

(பிரதிபேதம்) * உனதாகல், † வெருள்புடைகோக்கி, ‡ நஞ்சுற்றத்தார், || றெரிப்பிற்றன்மை.

மூறுப்பினு முருவினும், பிறப்பினும் வருஉக் *திறத்த வென்ப" என்னும் (க) உவமவியற் சூத்திரத்தில் 'திறத்த'என்றதனால் தலைவன் நாட்டிலுள்ளன கூறித் தலைவிக்கேற்ற உவமைதோன்றச செய்தலுங் கொள்கவென்றார்.

கசு துணர்பொறி (உ)மான்செவி போல (ஈ)வெதிர்முளைக்
கண்பொதி பாளை கழன்றுகும் பண்பிற்றே
(சு)மாறுகொள் ளாற்ற ரெனினும் பிறர்குற்றங்
கூறுத றேற்றாதோன் குன்று

எ - து: செல்வமுதலியவற்றாலே மாறுகொண்டு அவற்றைப் †பொறாதிருப்பரென்று பலரும் கூறினும் பிறர் குற்றத்தைக் ‡கூறுதலே அறியாதவன் குன்று துணிந்திய பொறியையுடைய மானினுடைய செவியைப்போல மூங்கின் முளையினது கண்ணைப்பொதிந்த பாளை கழன்றுவீழும் பண்பினை யுடைத்தெனத் தலைவிகூறினாள்; எ - து.

இதனால் அவன் வரையாமையின் நம்மேனியிற் ரோன்றிய வருத்தமும் நீங்கி நம் மேனியும் இனிப் பொலிவுபெறுமெனக் கூறினாளாக உள்ளுறை யுவமங்கொள்க. இஃதுஉருவுவமப்போலி.குற்றங்கூறுதல்தேற்றாதானெனவே நாஞ்செய்த தீங்குகளையுங் காணுனென்றாள். முருகனும் திருமேனிகொண்டு திரிதலின் அவற்கும் குற்றங்கூறுமை || ஏற்றினாள். மேல் தோழிகூறுகின்றாள்.

உ0 புணர்நிலை (ரு)வளகின் குளகமர்ந் துண்ட
(சு)புணர்மருப் பெழில்கொண்ட வரைபுரை செலவின்
வயங்கெழில் யானைப் பயமலை நாட
(எ)மணநாறு கதுப்பினுய் மறுத்தொன்று பாடித்தை

க. தொல். உவம. சூ. உடு.

உ. "விழிக்கு டைந்தமான் செவிகண்மெல் லியனல்லார் தடிந்தவ், வழிக்க ளுற்றியாங் குயர்பணை கண்பொதி பாளை, கழிக்கும்" தணிகை. திரு நாட்டுப். ஈஎ.

ஈ. "எழாநெற், பைங்கழை பொதிகளைந் தன்ன வினர்ப்பின், வளையில் வறுங்கை" புறம். உடுஈ: ஈ - டு.

சு. "மாறுகொண் டோரா மனத்தின ளாகி" மணி. உஈ: கசஈ.

டு. "இளகு காழகிற் சந்தனப் பொதும்பரெவ் விடனும், வளகு மேய்ந்து சேவகங்கொளு மாமத மொழுக்கும்" தணிகை. திருநாட்டு. ஈஊ.

ரு. "புணர்மருப் பியானை" சீவக. கசுஉ. "யானைப் புணர்மருப்பு" சீவக. உ0அக, உகஉக.

எ. "அரிவை கூந்தலி, னறியவு முளவோ" குறுந். உ.

(பிரதிபேதம்) * திறத்தியல், †பெருதிருப்பர், ‡ கூறுதலறியாதவன், || ஏற்றினுள் புணர்நிலை.

எ - து: பிடியோடு கூடிய நிலைமையினை*யுடைய வளைகொண்ணும்புதலினது தழையை மணம்பொருந்தித் †தின்ற, இணைந்த கொம்புகள் அழகுகொண்ட வரை கடந்ததனையொக்குஞ் செலவினால் விளங்குகின்ற அழகினையுடைத்தாகிய யானைகளையுடைய பகுனையுடைய மலைநாடனை மணம் நாறும் மயிரினையுடையாய்; முன் இயற்பட மொழிந்ததனை மறுத்து இனி இயற்பழித்து ஒன்று ‡பாடுவாயாக; எ - று.

நிலைமையையுடைய யானை, தின்ற யானை, அழகினையுடைத்தாகிய யானையென்க.

மருப்பெழில்கொண்டவரை, இல்பொருளுவமை.

இதனால் (க) விலங்குகளுந் தமக்கு வேண்டுவனவற்றை நுகர்ந்து வருத்த ||மின்றி ஒழுகுதற்போல நாமும் நமக்கு வேண்டுவனவற்றை நுகர்ந்து இல் லறத்தையும் நிகழ்த்தி வருத்தமின்றி ஒழுகுமாறு வரைந்துகொள்வனென்ற வாறாக உள்ளுறையுவமம் கொள்க. இது பயவுவமப்போலி. மறுத்தொன்று பாடித்தை ÷என்றதன் பயன் இவள் களவொழுக்கம் நாடாமல் வரைந்து கோடலே நாடுதிலுளெனத் தலைவன்உட்கொண்டு கடிதின்வரைதலாம். = அது கேட்ட தலைவி கூறுகின்றாள்.

உச (உ)கடுங்க (ங)ணுழுவை யடிபோல வாழைக்
கொடுங்காய் குலைதொ றாஉந் தூங்கு மிடும்பையா
(ச)ன்மை ×யுரைத்தார்க் கதுநிறைக்க லாற்றுக்காற்
றன்மெய் துறப்பான் மலை

க. (அ) "கோழிலை வாழைக் கோண்மகு பெருங்குலை, யூழுறு தீங்கனி யுண்ணுநர்த் தடுத்த, சாரற் பலவின் சுளையொ டேற்பவு, பாறை நெடுஞ் சுனை விளைந்த தேறல், லறியா துண்ட கடுவ னையலது,கறிவளர் சாந்த மேறல் சொல்லாது, நறுவீ யடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்குங், குறியா வின்ப மெளிதி னின்மலைப், பல்வேறு விலங்கு மெய்து நாட, குறித்த வின்ப நினக்கெவ னரிய" அகம். உ:க - கo. (ஆ) "எழுங்குலை வாழையி னின்கனி தின்றிள மந்தியந்தண், செழுங்குலை வாழை நிழ லிற் றுயில்சிலம்பா" கோவையார்: உடுo.

உ. "கடுங்கணிரும்புலி" கலி: சுடு: உங - ச.

ங. (அ)"வெம்புலி யடிய பைங்காய்க்,கோழையரம்பை"நைடதம். சுயம். கஙிகூ. (ஆ) "கதலிப் புலியடிக் குலை" சீறு. காட்டு. ஙஅ.

ச. "ஈத லிரந்தார்க்கொன் றுற்றது வாழ்தலிற், சாதலுங் கூடுமாமற்று" கலி. சுக: கங-உ. என்பதும் அதன் குறிப்பும் இங்கே ஒப்புநோக்கற் பாலன.

(பிரதிபேதம்)* உடையயானைவளகென், † தின்றயானை இனைக், ‡ பாடுவாயென்னுள் தோழி மருப், || இன்றியேழுதினும், ÷ என்றதனற்பயன், = கடுங்கணுழுவை, × உரைத்தார்க்கு.

எ - து: மிடியாலே பொருளின்மையைச் சொன்னார்க்கு அப்பொருளை [அவர்க்கு] நிறைத்தலாற்றுதபொழுது தன்மெய்யைத் துறக்குமவன்மேல் தறு கண்மையையுடைய புலியின் அடியைப்போல வாழையினது வளைந்தகாய் குலைகடோறும் தூங்கும்; * எ - று.

புலியடிபோல வாழைக்குலை தூங்குமென்றதனால் நம்மைவரையாமையிற கொடியன்போற் றோன்றினான், அவன் இனி வரைந்துகொண்டு நமக்கு இனியனாவனென உள்ளுறையுவமங்கொள்க. இது வினையுவமப்போலி.

இனி முருகற்கு எற்றுங்காற் பிறவித் தமொற்றத்தான் வீடு பெறுத லின்மையை உரைத்தார்க்கு அவ்வீடு பெறுந்தன்மையைத் தான் நிறைவித்தலே அவர்கள்கொள்ளமாட்டாதகாலத்துத் தன்றிருமேனியைக்கைவிட்டு அவர்கள் மனத்தே தங்குகின்றவனெனக் கூறுக. "ஒருநீ யாகத் †தோன்ற விழுமிய பெறலரும்பரிசினல்கும்"என்றார்(க)முருகாற்றுபடையில்,(உ) "தன்னேயுன்னி யென்னே, யாகிய போழ்தே யானவ ளாயினேன்" என்பதனாலும் உணர்க.

எனவாங்கு

* எ - து: என்று; எ - று.

ஆங்கு, அசை.

உக கூடி யவர்திறம் பாடவென் றோழிக்கு
வாடிய மென்றோளும் வீங்கின
வாடமை வெற்ப னளித்தக்காற் போன்றே

எ - து: யானுந் தலைவியுங் கூடித் தலைவன் நிறத்தையும் முருகன் நிறத்தையும் பாடினேமாக, என்னுடைய தோழிக்கு அசைகின்ற மூங்கிலே யுடைத்தாகிய வெற்பையுடையவன் அளித்தபொழுது போன்று முன் அளியா மையான் மெலிந்த மெல்லிய தோள்களும் சிறந்தன ; எ - று.

எனத் தன்னுள்ளே கூறுவாளாய்க் தலைவன் சிறைப்புறமாகக் கூறினாள்; அவன் கடிதாக வரைதற்கு.

இதனால், தலைவற்குச் சூழ்ச்சிபிறந்தது.

இப்பாட்டு முழுதும் முருகற்குப் பயன்படாது தலைவற்குப் பயன்பட்டு நின்றவாறு உணர்க.

இது கொச்சகங்களும் விரவி வந்தமையிற் கலிவெண்பாவின் வேறுபட்டு வந்த கொச்சகம். (எ)

க. முருகு. உகசை-இ. அங்கு இப்பகுதியின் இறுதிச்சொல் கல்குமதியென்று கொள்ளப்பட்டு அதற்கு ஏற்ப இலக்கணக்குறிப்பும் எழுதப்பெற் றிருக்கிறது.

உ. 'தன்னேயுன்னி..... ...யானவளாயினேன்' என்னும்இச்சொற்றொடர் திருமுருகாற்றுப்படை. ககக - ஈ-ஆம் அடிகளினுரையில்மேற்கோளாக வந்துள்ளது.

(பிரதிபேதம்) * எனத்தலைவிகூறினாள்புலியடி, †தோன்றி.

(சச.) கதிர்விரி கணைசுடர்க் கவின்கொண்ட நனஞ்சார
லெதிரெதி ரோங்கிய மால்வரை யடுக்கத்
தகிரிசை யருவிதன் னஞ்சிண மிசைவீழ
முதிரிண ரூழ்கொண்ட முழவுத்தா ளெரிவேங்கை
வரிநுத லெழில்வேழம் பூநீர்மேற் சொரிதரப்
புரிஞெகிழ் தாமரை மலரங்கண் விறெய்திக்
திருநயந் திருந்தன்ன தேங்கமழ் விறல்வெற்ப;

அ தன்னெவ்வங் கூரினு நீசெய்த வருளின்மை
யென்னையு மறைத்தாளென்,றோழி யதுகேட்டு
நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூற ருணை;

கக கூருநோய் சிறப்பவு நீசெய்த வருளின்மை
சேரியு மறைத்தாளென் றோழி யதுகேட்டாங்
கோருநீ நிலையலை யெனக்கூற ருணை;

கசு நோயட வருந்தியு நீசெய்த வருளின்மை
யாயமு மறைத்தாளென் றோழி யதுகேட்டு
மாயநின் பண்பின்மை பிறர்கூற ருணை;

எனவாங்கு;

கஅ இணையன தீமை நிணைவனள் காத்தாங்
கணையரும் பண்பிணி னின்றீமை கரத்தவ
ளருந்துய ராரஞர் தீர்க்கு
மருந்தாகிச் செல்கம் பெருமநாம் விரைந்தே.

இது வரையாது வந்தொழுதந் தலைவனை, தோழி, தலைவியது கற்பு *மிதுதியும் இவ்வொழுகீகம் அலராகின்றமையும் அவளது ஆற்றமையுங் கூறி வரைவுகடாயது.

இதன்பொருள்.

(க)கதிர்விரி கணைசுடர்க் கவின்கொண்ட (உ)நனஞ்சார
லெதிரெதி ரோங்கிய மால்வரை யடுக்கத்

க. கணைசுடர், கலி. கஉ0: அகம். சஎ: கூ.

உ. "நனஞ்சாரல்" கலி. சஙி: கூ. ஙஉ: கூ.

(பிரதிபேதம்) * மிகுதியு மலராகின்றமையும்.

கதிரிசை யருவித்தன் னஞ்சிணை மிசைவீழ
(க)முதிரிணை சூழ்கொண்ட (உ)முழவுத்தா (ங)ளெரிவேங்கை
(ச)வரிதுத லெழில்வேழம் பூநீர்மேற் சொரிதரப்
புரிகெழிழ் (ஞ)தாமரை மலரங்கண் விரிதெய்த்
திருநயந் திருந்தன்ன தேங்கமழ் (ஙு)விறல்வெற்ப

எ-து: எதிரே எதிரேஒங்கிய பெருமையையுடைய மலையினது அகற்சியை யுடையசாரலில் (எ) இளஞாயிற்றினுடைய விரிகின்ற செந்திரணங்களி னுடைய அழகைத ன்னிடத்தேகொண்ட மாணிக்கப்பாறையிலே நிற்கப் பட்டு முழங்குகின்ற உரையையுடையவராய் இரண்டுமலையினின்றும் வீழ்கின்ற

க. (அ) "முதிரிணர்" (ஆ) "முதிர்கோங்கின் முகை" கலி. நிகு: உ, உங. (இ) "முதிர்மலர்" பெருங். (ச) நி: சஅ.

உ. (அ) "முழாவரைப்போந்தை" (ஆ) "முழா அரைப் போந்தை" (புறம். அநி: எ. ஙஎநி: ச.) (இ) வேம்பின் முரசை முழுமுதல்' (பதிற். நி-ம் பதிகஙு-ச) என மரத்தினடிக்கு முழவு உவமிக்கப்படுதல்காண்க.

ங. (அ) "எரியகைத தன்ன வீதலை யிணர, வேங்கையம் படுசினை" நற்: ஙஎக. ங - ச; (ஆ) "எரியருள் வேங்கை" ஐங். உகூ; (இ) "எரி பிணர்வேங்கை" பரி. ககூ: எஎ; (ஈ) "எரிவேங்கை" கலி. சநி: கஎ; (உ) "எரிமருடோன்றல வொண்பூ வேங்கை" (பி - ம்) அகம். உகஅ: உ0 - உக.

ச. "நான்மருப்பின் மதயானை நறியபைந்தாமரை மடந்தையைத், தேன் மதர்ப்பத தீவாய்த்தாங்கு" என்புழி 'நான் மருப்பென்பது யானை பிரண்டினை யுணர்த்திற்று' என்று விடயமும் 'இரண்டானை பக்கத்தே நின்று சேரச்சொரிய நடுவே தாமரைப்பூவிலே யிருந்த திருமகளைத திளைத்தாற்போலே' என்று பொருளும் கூறி "வரிதுத லெழில்வேழம் .திருநயந் திருந்தன்ன" என்பதை மேற்கோள் காட்டினர், ஙச. சீவக. உநிகூநி. (ஆ) "நிரைத்த யானை முகத்துவரி கடுப்ப" நற். கஎசு: நி, (இ) "களிறு தன், வரிதுதல் வைத்த வலதேம்பு தடக்கை" அகம் ஙூசகு: ககூ - உ. (ஈ) "களிற்று முகவரியின்" புறம். ககக: உ.

ஞ. "பெருமலர்ப் பரிந்த திருமக ளம்மல,ரருங்கவினெய்தச சென்று சேர்ந்தாங், கருங்கலத் தொண்மனை பொலியப், பெருந்தகைத தோளி பெயர்ந்தனை சென்மே" தமிழ்நெறி. மேற.

ஙு. "விறல்வெற்பு" இந்நூற்பகரம் நிக - நி - ஆங குறிப்பும கலி. நிஙு: உ. 'விறன்மலை' என்பதன் குறிப்பும் ஈண்டு ஒப்புநோக்கற்பாலன.

எ. (அ) "வீறு பஞ்சின்றி யமுதநெய் மாட்டிய விளக்கே, சீறு வெகுளிர் செறிந்தன பேர்கல திரியா, மாறின் மண்டில நிரப்பிய மாணிக்க மணக்கற். பாறை மற்றிரு பரிதியிற் பொலிவுடை பாராய்" என்பது

அருவி தனது அழகியகொம்புகளின்மேலேவீழ்தலாலேமுதிர்ந்தகொத்துக்கள் அலர்தல்கொண்ட முழவுபோலும் தாளினையுடைய நெருப்புப்போலும் வேங்கை, புகரினையுடையமத்தகத்தினையும் அழகினையுமுடைய (க) யானைகள் பூவொடு கூடிய நீரை மேலே சொரியாநிற்க எக்காலமும் முறுக்கு நெகிழ்ந்த தாமரைமலரினது அழகையுடைய(உ)அல்லியிலே(ங)வீறுபெற்றுத் திருமகள் விரும்பியிருந்தாலொத்த தேனுறும் வெற்றியினையுடைய வெற்பனே; எ - று.

சுடரின் கவினைக்கொண்ட அடுக்கமெனவே மாணிக்கப்பாறை யென்னும் பொருள் தந்தது. எதிர் எதிர் ஓங்கிய வரைகளைத் தலைவன் சுற்றத்தாருந் தலைவி சுற்றத்தாருமாகவும், அவற்றிடையடுக்கத்தைத் தலைவன் மனையாகவும், இரண்டருவியும் வீழ்கின்றதனை இருவகைச்சுற்றத்தாருஞ் செய்கின்ற சிறப்புக்களாவும், இணர் ஊழ்கொண்டதனைப் புதல்வர்ப் பயத்தலாகவும், வேங்கையைத் தலைவியாகவும் உள்ளுறையுவமங்கொள்க. இது பயவுவமப்போலி. இதனுள் கூறியது நின் நாட்டில் உறைகின்ற வேங்கை சிறப்பெய்தினுற் போலத்தலைவியும் நின்னில்லின்கண்வந்துசிறப்பெய்துமாறு கடிதின்வரைந்து கொள்கவென்றதாயிற்று. வரிநுதலெழின் முதலாகத் திருநயந்திருந்த(ன்ன) வென்ற வினையுவமம் *முற்கூறிய உள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப் பொருட்குச்சிறப்புக்கொடுத்தாலும்உள்ளுறையுவமம்போலத் திணையுணர்தலைத் தள்ளாது நின்றது. இதற்கு (ச)விதி முற்கூறினும்.

(கம்ப. சித்திர. கடு) இதனோடு ஒப்புநோக்கற்பாலது. (ஆ) "மஞ்சளாவிய மாணிக்கப் பாறையின் மறைவ, செஞ்செ வேநெடு மரகதப் பாறையிற் றெரிவ, விஞ்சை நாடியர் கொழுநரோ டினர் விமலப், பஞ்ச ளாவிய சேறடிச் சுவடுகள் பாராய்" என்றும் (கம்ப. சித்திர. உ0) 'மாணிக்கப்பாறையிடத்து' என்றும் (கலி. சடு. உரை) பிறவிடத்தும மாணிக்கப்பாறை கூறப்படுதலும் காண்க.

க. (அ) "கள்ளவிழ் கமழ்கோதைக் காவலன் றிருமகளே, வெள்ளிரு மதயானை விழுமணிக் குடமேற்றித், தெள்ளாறன் மண்ணுங்கீ ராட்டினர் தேமலர்மே, லொள்ளிழை யவளொத்தா ளருவுநுண ணுசுப்பின்னுள்" (சீவக. உசுகூ.) (ஆ) "தைய லாளையொர் தாரணி தோளினு,னெய்கொ ளோதியி னீர்முகந் தெற்றினுன், செய்ய தீமலைச் செல்வியைத் தீம் புனல், கையி னூட்டுங் களிற்றை சென்னமே" (கம்ப. நீர்வினை. உடு.) (இ) "நடுவே திருவும் இரண்டுபுறத்தும் இரண்டுசெங்கழுநீர்ப்பூவும் இரண்டு பிடியுமாக வகுத்த உத்தரக்கற்கவி" (நேமி. அக - டு. விசேட வுரை) என்பனவைகளும் இத்தூற்பக்கம் உசுஎ: சூ. (அ) குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

உ. (அ) "அல்லிசே ணைங்கிற்கு" (ஆ) "அல்லியுட் பாலையன்னுள்" சீவக. கசுஉ, கடுஅடு; (இ) "அல்லி யங்கமலே" கூர்ம. இராமனை. கஅசு.

ங. வீறு - வேறொன்றற்குமில்லாத அழகு.

சு. இந்நூல் உகக - ஆம் பக்கம் பார்க்க.

(பிரதிபேதம்) * முதற்கூறிய.

அ (க)தன்னெவ்வங் கூரினு நீசெய்த வருளின்மை
யென்னையு மறைத்தா ளென் றோழி யதுகேட்டு
நின்கூ யான் பிறர்முன்னர்ப் பழிகூற நீணுணி

க. "தன்னெவ்வங் ....பழிகூற நீணுணி" என்றபகுதியை, (அ)'காதன் மிகுதியுளப்படப்பிறவும்'என்புழி,பிறவுமென்பதனால் தலைமகள்தன்னை ய[ழி](றி)க்தமை (தோழி) கூறுதலும் தலைவன் மாட்டுவரும் இடையூறஞ்சுதலுங்கொள்கவென்றுகூறித் தலைமகள்தன்னைய[ழி](றி)க்கதற்கு, இளம்பூரணரும்,(ஆ)'எண்ணரும்பன்னகை கண்ணியவகையினும்'என் புழி, பலநகைகுறித்த பகுதி என்னைமறைத்த லெவனுமியரென்றலும் அறியாள் போறலும் குறியா[ள்] கூறலும் படைத்துமொழி கிளவியும் குறிப்பு வேறுகொளலும் பிறவுமாமென்றுகூறிப் பழிகூறுவேனென்று தலைவி குறியாததொன்றைத் தோழி கூறினதற்கு நச்சினார்க்கினியரும் தொல். கள. சூ. உங. (இ) தலைமகளறிவு தலைமகற்கு அறிவுறுத்தற்கு நாற்கவிராசநம்பியும்; நாற்கவி. சூ. கசுசு. மேற்கோள் காட்டினர். (ஈ)"ஊரல ரெடுத்தரற்ற வுள்ளாய்நீ துறக்கலிற், கூருந்தன் னெவ்வ நோ யென்னையு மறைத்தாண்மன்" கலி. கஉச : டு - சு. (உ) "தானும் யானுமென் றிருவே றிலமேம், யானு மறியாக் கரப்பினுண், மானுண் கண்ணி வரையர் மகளே" தமிழ்நெறி. மேற். (ஊ)"கன்னிய ருற்றநோய் கண்ண னுர்க்குமஃ, தின்னதென் றுரையலர் நாணின்" சீவக. கoஉஅ. (எ) "மெல்லிய லொருத்திதான் விரும்புஞ் சேடியைப், புல்லிய கையினள்போதி தூதெனச, சொல்லுவா னுறவுற நாணுஞ் சொல்லல, லெல்லையில் பொழுதெலா மிருந்துவிம்மினுள்" கம்ப. உண்டாட்டு. சசு. (ஏ)'தாமுறு காமத் தன்மை தாங்களே யுரைப்ப தென்ப,தாமென லாவதன்றுலருங்குல மகளிர்க்கம்மா"கம்ப. சூர்ப்ப. சநு. (ஐ) "தையனல்லாள்பழி சாற்றவல்யா, னென நாணி நின்பழி தான்மறைத் தாளன்ப வென்னையுமே" தஞ்சை. உஙடு. (ஒ) "நிறற்கே புலியன்ன கோழிக் குலோத்துங்க சென்னிவெற்பி, லுறற் கேதஞ் சொல்லி யுனைப்பழித் தேன்சுழித் தோடுபொன்னி, யுறற்கே வல்லி யுற்குள நாண் யனைமுதலாம்,பிறர்க்கே யொளிப்பதொளித்தா ளெனக்கும் பெருந்தகையே" தூலோத்துங்க. உஎக. (ஓ) "தெரிவை யர்க்குளங் கூசு மாசைநோய் கூறுகிற்பதென், றெம்மனோர்களுஞ் சொல்வர்" வில்லி..வேத்திர. டி. (ஔ) "முத்தே நிகர்த்த் குறுநகை யாளை முதுக்குறைசோ, நித்தேன்றன் ஞண் மறைத்தா ளெனையுஞ் செதலத்தி, லெத்தேவ ரும்புக ழாழ்வார் குருகை யிறையவ நான், பொய்த்தேனு முன்னைப் பழித்தாலுஞ் சற்றும் பொறுக்கிலளே" மாறன்கோவை. உசுசு. (ஃ) "தற்பழி யாகநின் றன்பழி நாணித் தலைவறைக்,கற்பழி யாது மடமாதெனையுங்காதனளே"திருவேங்கை.

ச-து: என்னுடைய தோழி தன்னுடைய வருத்தமுறுதிற்கவும் நீ செய்த அருளில்லாமையை சின்னேயும் உட்பட மறைத்தாள்; அவள் இங்ஙனம் மறைத்தது அவ்வருளின்மையைக் கேட்டு யான் நின்னேப் பிறர்முன்னே பழி கூறுதலேத் தான் நாணிக்காண்; எ - று.

யான் பழிகூறுவேனென்று தான் நாணியெனத் தலேவி குறியாததொன்றைக் கூறினமையின் *இது (க)குறியா கூறலாம்.

உம்மை, சிறப்பு.

கக. கூருநோய் †சிறப்பவு நீசெய்த வருளின்மை
சேரியு மறைத்தாளென் ரோழி யதுகேட்டாங்
கோருநீ ‡நிலேயலே யெனக்கூற ருணி

எ - து: என்னுடைய தோழி மிகுகின்ற காமநோய் சிறவாநிற்கவும் நீ செய்த அருளில்லாமையைச் சேரியிலுள்ளாரும் அறியாதபடி மறைத்தாள்; அவள் இங்ஙனம் மறைத்தது அவ்வருளின்மையைக் ||கேட்குமப்பொழுதே நீ நிலேபே றுடையையல்லேயென்று யான் பிறர்க்குக் கூறுதலேத் தான் நாணிக்காண்; எ - று.

உம்மை, சிறப்பு. (உ)ஓரும், அசை.

கச நோயட வருந்தியு நீசெய்த வருளின்மை
யாயமு மறைத்தாளென் ரோழி யதுகேட்டு
மாயநின் பண்பின்மை பிறர்கூற ருணி

உங்ச. (அஅ) "வெற்பா வுன் பழியை யன்னே, பண்ணேமின் னுரென வேயறி யாவகை பார்த்தெனேயும், பண்ணேயுந் தேமொழி நாணு மறைத்தனள் பாங்குறவே" திருவாவடுதுறைக். உருசை. (ஆஆ) "நண்பாமுழு முத்தமூலே, யுழியேறு பீருங் கழலும் வளேயு மூணர்ந் துனக்குப், பழியேறு மென்று மறைத்தா ளெனேயும் பசுங்கொடியே" சீகாழி. உஅக. என்பவைகள் இத்தாழிசைக் கருத்தையும் (இஇ) "தன்னேயுந் தோளேயுந் தோளினில் லாவரிச் சங்கை யுங்கண்,டின்னே யிங் கோது முறுபழி நாண் யுளங்கிடந்த, தன்னேயுஞ் சேரியு மாயத் துளாரு மயலுமன்றி. யென்னேயுங் கூடவெற் பாமறைத் தாளென் னிளங்கொடியே" அம்பிகா. உசுசு. என்பது தாழிசை மூன்றன் கருத்தையும் ஒத்திருத்தல் காண்க.

க. இத்தூற்பக்கம். உசுக: க - ஆம் குறிப்பில் (ஆ) பார்க்க.

உ. ஓரும் என்பதைப் புறனடையால் அசையெனக் கொண்டார், நச; தொல். இடை. சூ. சஅ.

(பிரதிபேதம்) * அதுகுறியாள் கூறலாம், குறியாது கூறலாம். † வ்ப்பவும், ‡ நிலேயில், || கேட்டு அப்பொழுதே.

எ - து: என்னுடைய தோழி காமநோய் வருத்துகையினாலே வருந்தியும் நீசெய்த அருளில்லாமையை ஆயத்தையும் மறைத்தான்; அவள் இங்ஙனம் மறைத்தது அவ்வரு ளின்மையைக் கேட்டு மாயத்வுத வல்ல நினது பண் பில்லாமையைப் பிறர்கூறுதலைத் தான் நாணிக்காண் ; எ - று.

ஆயத்திற்கும் வருத்தம் புலப்படாமை மறைத்தாளென்ற உம்மை, சிறப் பும்மை.

*கானவாங்கு, அசை.

கஅ இனையன தீமை நினைவனள் காத்தாங்
கனையரும் பண்பினு னின்றீமை காத்தவ
ளருந்துய ராரஞர் தீர்க்கு
மருந்தாகிச் செல்கம் பெருமநாம் விரைந்தே

எ-து: நினது தீமையான் உண்டாகிய அருந்துயரத்தை அத்தன்மைத் தாகிய அரிய நற்குணத்தினாலே நீ பின்னர்க் காத்தாற்போல இத்தன்மையன வாகிய தீமைகளைப் பிறரறியாதபடி நினைத்தாளாய்க் காத்தவளுடைய ஆ ராஞரைத்தீர்க்கும் மருந்தாகிப் பெருமா ! நாம்விரைந்துசெல்வேம் ; †எ - று.

தீமையாயின: இட்டுப் பிரிவும் அருமை செய்தயர்த்தலுமாம்.

இதனால், தலைவற்கு ‡விரைவுபிறந்தது.

இஃது ஏழடித்தாவும் மூன்றடித்தாழிசையும் தனிச்சொல்லும் நான் கடிச்சுரிதகமும் பெற்றவொத்தாழிசைக்கலிப்பா. (அ)

(கூடு) விடியல்வெங் கதிர்காயும் வேயம லகலறைக்
கடிசுனைக் கலினிய காந்தளங் குலையினை
யருமணி யவிருத்தி யரவுநீ ருணல்செத்துப்
பெருமலை மிளிர்ப்பன்ன காற்றுடைக் கனைபெய
லுருமுக்கண் ணுறுதலி னுயர்குர லொலியோடி
நறுவிய நனஞ்சாரற் சிலம்பலிற் கதுமெனச்
சிறுகுடி துயிலெழுஉஞ் சேணுயர் விறல்வெற்ப ;

அ கால்பொர நுடங்கல கறங்கிசை யருவினின்
மால்வரை மலிசுனை மலரேய்க்கு மென்பதோ
புல்லாராப் புணர்ச்சியாற் புலம்பிய வென்றோழி
பல்லிதழ் மலருண்கண் பசப்பநீ சிதைத்ததை;

கூ புகர்முகக் களிறெறுழ் புலிபொரு துழக்குநின்
னகன்மலை யடுக்கத்த வமைமேய்க்கு மென்பதோ

(பிரதிபேதம்) * ஆங்கண்ணை, இனையன தீமை,† என வரைவு கடாவினாள். ‡ இவ்வரவு.

கடையெனக் கலுழுநோய் கைம்மிக வெண்ணேழி
தலையின திரண்டதோ டகைவாடச் சிதைத்ததை ;

கசு சுடர்நற வுறுநீண்ட சுரும்பிமி ரடுக்கத்த
விடர்வரை யெரிவேங்கை யிணரேய்க்கு மென்பதோ
யாமத்துங் துயிலல ளலமரு மென்னேழி
காமரு நல்லெழில் கவின்வாடச் சிதைத்ததை;

எனவாங்கு;

உக தன்னீமை பலகூறிக் கழறவி னென்னேழி
மறையிற்றுன் மருவுற மணந்தநட் பருகலாற்
பிறைபுரை நுதலவர்ப் பேணிநம்
முறைவரைந் தனரவ ருவக்கு நாளே.

இது வரைவிடையாற்றுதலேவிக்குத் தோழி தான் தலேவனே நெருங்கி வரைவுகடாவ அதுகேட்ட தலேவன் வரைவுமுயற்சியான் வருதல் இடையீட்டதூஉந் தமர்வரைவெதிர்ந்ததூஉங் கூறி அவளே ஆற்றுவித்தது.

இதன் பொருள்.

(சஙூ) (ரு) விடியல்வெங் கதிர்காயும் வேயம லகலறைக்
கடிசுனைக் கவினிய (உ)காந்தளங் குலேயினே

க. விடியலென்பது நாள்வெயிற் காலேயென்னும் பொருளில் வருதற்கு, "விடியல்வெங் கதிர்காயும் வேயம லகலறை" என்பது மேற்கோள். தொல். அகத். சூ அ. நச். இ – வி. சூ. நஅடி.

உ. காந்தட் குலேயும் அரவும் ஒத்திருத்தல்: (அ) "பாம்புபை யவிந்தது போலக் கூம்பிக், கொண்டலிற் றுலேந்த வொண்செங் காந்தள்" (ஆ) "காந்த, ணறுந்தா தூதுங் குறுஞ்சிறைத் தும்பி, பாம்புமிழ் மணியிற் றுேன்றும்" குறுந். கஅடி, உகூ. (இ) "திருமணி யுமிழ்ந்த நாகங் காந்தட், கொழுமடற் புதுப்பூ வூதுந் தும்பி, நன்னிற மருளு மருவிடர்" அகம். கஉஅ: கள – ககூ. (ஈ) "அணர்த்தெழு பாம்பின் றலேபோற் புணர்க்கோடல், பூங்குலே யீன்ற புறவு" கார். ககூ. (உ) "பூங்கோட லோடி-யுருமுற்ற, வைந்தலே நாகம்புரையும்" தினேமாலே. கoள. (ஊ) "ஓங்கு விறவரைமேற் காந்தள் கடிகவினப், பாம்பென வோடி யுருமிடிப்பக் கண்டிரங்கும்" (எ) "கோடலங் கூர்முகை கோளரா நேர்கருத" தினேமொழி. ங, உகூ. (ஏ) "மலர்க்காந்தளங் குறி பையரா விரியும்" (ஐ) "பைவாய் நாகங் கோடலீனும்" (ஒ) "கோட லரவீனும்" (ஓ) "பையரவம் விரிகாந்தள்" தேவாரம்.

யருமணி யவிரருத்தி(க)யரவுரி ருணல்செத்துப்
(உ)பெருமலை மிளிர்ப்பன்ன காற்றுடைக்(ங)கணைபெய
லருமுழக்கண் ணுறுதலி னுயர்(ச)குர லொலியோடி
கழுவிய (ஜ)கனஞ்சாரற் சிலம்பவிற் கதுமெனச்
சிறுகுடி துயிலெழுஉஞ் சேணுயர் (ரு)விறல்வெற்ப

(ஏன)"வாளெயிற்றரவம்போல வான்றலை தோன்றவார்த்த,தாளுடைக் கோட நம்மிற் றழீஇயின காத றங்க, மீளல வாகி மன்ன வீழுவன வுணர்வு வீர்த, கோள ரெண்ணப் பின்னி யவற்றெறிந் குழைத்து சாய்ந்த" கம்ப. கார்காலப். உஎ. (ஃ) "மூன்வாளெயிற் றரவம்மென முகிழ்விண்டன காந்தள்" பரக. கo. வேங்குழல். கூ. (அஅ) "அரா நிவர் நிவர்ந்தெனக், களிதரு கோடல்பா சரும்பு காண்றவே" காஞ்சி. கழுவாய். கசசு.

க. உருமேறு காத்தலை அரவாகக் கருதலுண்டென்பது இந்நூற்பக்கம் உஎஉ: க-ஆம் குறிப்பில் (ஊ) மேற்கோளால் அறியலாகும்; "செயலை, யோங்குகினைத் தொடுத்த ஆசல் பாம்பென, முழுமுதற் றுமிய வுருமெறிந் தன்றே" எனவும் (அகம். 'சுஅ: நி - எ.) வருதலால் இஃது அரவென்று கருகியதனை எறியு மியல்பிற்றப் போலும்.

உ. (அ)"காலொடு வந்த கமஞ்சூன் மாமழை,..... .மிழயமுள் துளக்கும் பண்பினை"(குறுந். கஅ)என்பதும்(ஆ)"காம்புடை வீடாகஞ் சிலம்பப் பாம்புடன், றோங்குவரை மிளிர வாட்டி வீங்குசெலற், கடுங்குர லேறெறி கனைதுளி தலைஇப், பெயலாளுதே வானம்" (இ) "ஈர்ங்குர லுருமி னுர்கலி நல்லேறு, பாம்புகவி னழிக்கு மோங்குவரைமொத்தி" (ஈ) "மாமழை... ....ஓங்குவரை மிளிர வரட்டிப் பாம்பெறிபு" (நற். நிக: உ - நி, ககஎ: கூ - கo, ஙூள: க-ஙூ;)(உ)"அஞ்சுவரு மரபின் வெஞ்சினப் புயலே,றணங்குடை யரவி னருந்தலை துமிய, நின்றுகாண் பன்ன நீண்மலை மிளிரக், குன்றுதூ வெறியு மரவம் போல" (ஊ) "கோடிறு, புருமெறி மலையி னிருநிலஞ் சேர" (புறம். உகக: க - ச, ஙூளங .....;) (எ) "உருமெறிந் தெங்கும், பெருமலை;னுவெறிந் தற்றே" (கஉ. சு) என்பனவுகளும் இங்கே அறிதற்பாலன.

ங. "கீணேபெயல்" ஐங். சoஇ; கலி. சகஃ கஅ,சுஅ:கஇ,கo: உஉ,கஙூ:கச; நீணேமொழி. உஅ.

ச. "இடித்து முழங்கியதோர் பேரசனியோர் கேட்பர்" நாலடி. கoo.

ஞ. "கனஞ்சாரல்" கலி. சஅ: க.

ரு. இந்நூற்பக்கம் உஙள: ரு - ஆம் குறிப்புப் பார்க்க.

எ-து: விடியற்காலத்து விரும்பிய (க) ஞாயிற்றைக் கெடுக்கும் மூங்கில் நெருங்கின அகன்ற(உ)மாணிக்கப்பாறையிடத்து மணத்தையுடைய (ங) சுனையிடத்தே அழகுபெற்று வளர்ந்த காந்தளினது அழகிய சூலையினைப் பெறுதற் கரிய(ச)மணி விளங்குகின்ற பொறியினையுடைய(ஞ)பாம்பு நீரை உண்டலாகக் கருதி, பெரிய மலைகளைக் கீழ்மேலாக்குமாறுபோலே இருக்கின்ற காற்றினை

க. (அ) ஞாயிற்றைக்கெடுக்கும் மாணிக்கமென்பதனைக் இருள்பருகுமணி யென்பதற்கு "உதயகிரியிற் சிந்தூர அருவி வீழ்ந்த சிந்தூராகரத்திற் பதினாறு சதுர்யுகம் சிவப்பேறின முழுமாணிக்கம் இருளைக்கெடுக்கு மென இவ்வுரையாசிரியர் (தீவக. ககக.) எழுதியிருக்கும் விளக்கமும் (ஆ) "ஐவனங் காவலர் பெய்தீ நக்கி, ஞெளிதிகழ் திருந்து மணி நளியிருளகற்றும், வன்புல நாடன்" (புறம். கஎஉ: சு - அ.) என்பதும் ஒப்பிடற் பாலன.

உ. "மாணிக்கப்பாறை" கலி. சச.

ங. "அரவுடன் றவைபோல விரிந்த குலை .. ..சுனைகழிந்து தூங்குவன" பரி. உ0: ஙங - க0க.

ச. "நாகப்பாம்பின் றலையில் மணியுண்டென்பது (அ)"பாம்புமணி யுமிழ" (ஆ) பாம்புமிழ் மணியிற் ரோன்றும்" (இ) "பெருமலை வயின்வயின் விலங்கு மருமணி, யரவழங்கும் " (ஈ) " நாம நல்லராக் கதிர்பட வுமிழ்ந்த, மேய்மணி" (உ) "பாம்பின், றிருமணி விளக்கில்" (ஊ) "அரவுமிழ் திருமணி" (எ) "மேய்மணி யிழந்த பாம்பின்" (ஏ) "அர வுமிழ் மணியில்" (ஐ) "எழ்மணியங் கெழணியுத்திக், கட்கேள்விக் கவை நாவி, னிறனுற்ற வரா அப்போலும்" (ஒ) "அருமணி யிழந்த நாகம் போன்றதும்" (ஓ) "நன்மணி யிழந்த நாகம் போன்று" (ஔ) "பைபருகு மணியுமிழ்ந்து பணநாக மிரைதேரும்"(ஃ0)"மணியுமிழ்ந்து மாமலைமேன் மேய்வனவு நாகம்"(அஅ) "இழந்தமணி புற்றரவெதிர்ந்த தெனலாலுள்" (ஆஆ) "அரவின்வெஞ் சீற்றிகை கொண்ட வவிர்மணி" (இஇ) "அரவுமிழ்ந்த செம் மணிக்கணம்" என்பவற்றாலும் இந்நூற் பக்கம் உஎஉ: உ-ஆங் குறிப்பில் (ஆ, இ) இப்பக்கம் ஙி-ஆங் குறிப்பில் (இ, ஈஈ, எஎ) என்பவற்றின் மேற்கோள்களாலும் அறியலாகும்.

ஞ. உருமேறு பரம்பை எறியுமென்பது மரபு: (அ) "நாகத், தணங்குடை யருந்தலை யுடலி வலனேர், பார்கலி நல்லேறு திரிதருங், கார்செய் மாலை வருஉம் போழ்தே"(ஆ)"கேழ்கிள ருத்தி யரவத்தலை பனிப்பப், பயிமழை யுருமி னுரற்றுகுரல்" (இ)"பெயன்கான் மயங்கிய பொழுது கழி பானாட், டிருமணி யரவுத்தோர்ந் தழல, வுருமுச்சிவந் தெறியு மோங்குவரை யாறே" நற். ஙஉ: அ-கக, கஉக: எ-அ, உடுடு: கூ - கக; (ஈ) "நெடுவரை மருங்கிற் பாம்புபட விடிக்குங், கடுவிசை யுருமின் கழறுகுரலினீ இச், காலொடு வந்த கமஞ்சூன் மாமழை" (உ) "பொறி

யுடைத்தாகிய செறிந்த மழையில் உருமேறு இடித்தலால் எழுந்த உயர்ந்த ஓசையாகிய ஓசை பரந்து *நறிய பூக்களையுடைய சாரலிலே ஒலிக்கையினாலே விரையச் சிறுகுடியினுள்ளார் உறக்கமுண்ணும் மிக உயர்ந்த வெற்றியினையுடைய வெற்பனே; எ-று.

மாணிக்கப்பாறை தலைவி உறைகின்ற மனையாகவும், சுனையிடத்துக் காந்தள் சுற்றத்தார் பேண அழகுபெற்ற தலைவியாகவும், மணத்தைத்தரும் அக்காந்தள் பாம்புபோற் சூன்றியது மேல் இல்லறத்தைத் தருகின்ற களவொழுக்கம் பிறர்க்குத்தீங்குபோற் சூன்றியதாகவும், உருமேறு இடித்தலால் எழுந்த ஓசை குறவர் சாரலெல்லாஞ் சிலம்பியது அங்ஙனந் தீதாகக் கருதின அயலார்கூற்றைக் கேட்டதாய் கழறியகூற்றுப் பரந்ததாகவும், சிறுகுடி துயிலெழுந்தது காவன் மிகுதியாற் றலைவியுந் தானுங் களவு இடையீடுபெட்டு வருந்தித் துயிலின்றியிருந்த தன்மையாகவும் உள்ளுறையுவமங்கொள்க. இது வினையுவமப்போலி.

வரி, வெஞ்சின வரவின் பைந்தலை துமிய, நரையுரு மூரறு மலையிருணடுநாள்" (ஊ) "பாம்பின் பையுடை யிருந்தலை துமிக்கு மேம்நெறுடு" (எ) "கடிதிடி யுருமிற் பாம்பு பையவிந், திடியொடு மயங்கி யினிதுவீழ்ந் தன்றே" தூறுந். கநிஅ, ககo, உசஅ, நகக. (ஏ) "மழை தவழும் பெருங்குன்றத்துச், செயிருடைய வரவெறிந்து, கடுஞ்சினத்த மிடறபுக்கும், பெருஞ்சினப்புய லேறனையை" பதிற். நிக: உநி - அ. (ஐ) "உருமுச் சிவந் தெறிந்த வுரனழி பாம்பின்" (ஒ) "பாம்பின், பைபட விடிக்குங் கடுங்குர லேற்றெறுடு" அகம். கூஉ: கக, நஉந: கo - கக. (ஓ) "கடுவெரவுங் கையிற்ற வரவுத்தலை பனிப்ப, விடியென முழங்கும்"(ஔ)"நஞ்சுடை வாலெயிற் றைந்தலை சுமந்த, வேக வெந்திற லுகம் புக்கென, விசும்புதீப் பிறப்பத் திருகிப் பசுங் கொடிப், பெருமலை விடரகத் துருமெறிந் தாங்கு" (ஃ) "இளைய தாயினுங் கிளையரா வெறிய,மருகரை யுருமின்"(அஅ)"அரவெறி யுருமின் முரசெழுந் தியம்ப" (ஆஆ) "அரவெறி யுருமி னுரறுபு சிலைப்ப" புறம். கள: நஅ-கூ, நஎ: க-ச, நிஅ:சு-எ, கஉசு: கக, நசுசு:ந.(இஇ)"விரிநிற நாகம் விடருளதேனு;முருமின்கடுஞ்சினஞ்சேண்டிமுட்கும்"நாலடி. கசுச. (ஈஈ) "ஏறே, டருமணி நாக மனுங்கச் செருமன்னர், சேனை போற் செல்லு மழை" காரி. உo. (உஉ) "நிரைகதிர் நீளெஃக நீட்டி வுயவர், வரைபுரை யானைக்கை நூற - வரைமே, லுருமெறி பாம்பிற் புரளும்"(ஊஉஉ)"யானை புண்கூர்ந், துருமெறி பாம்பிற் புரளும்" கள. கந, நஅ. (எஎ) "அதிர்குர லேறே டிலைகடன் மாந்தி, மூதிர்மணி நாக மனுங்க முழங்கிக், கதிர்மறை மாலை கனைபெய ருழ" தினை மொழி. உஅ. (ஏஏ) "இடியே றுண்ட நாகம் போலக், கொடியோர் சாயற் கொழுங்கவின் வாட' பெருங். (உ) கo: ககஉ - கூ.

(பிரதிபேதம்) காறிய,

அ (க)கால்பொர *துடங்கல கறங்கிசை யருவி(உ)நின்
மால்வரை பலிச்சின மலரேய்க்கு மென்பதோ
(ங)புல்லாராப் புணர்ச்சியோற் புலம்பிய வெண்ணேழி
(ஙு)பல்லிதழ் மலருண்(ஙூ)கண் பசப்பநீ சிதைத்ததை

எ - து: முயங்குதலணையாத கூட்டம்பெருமையால் வருந்தின என் னேழியுடைய பல இதழையுடைய மலர்போலும் உண்கண்கள் பசக்கும்படி நீ செய்தது காற்றடிக்கவுந் தன் பெருமையால் (சு) அசையாவாய் நின்ற ஒலிக்கின்ற ஓசையினையுடைய அருவியினையுடைய நினதுபெருமையையுடைய வரையில் நீர்நிறைந்த சுனையின் மலரையொக்குமென்னும் பொருமையோ? †அதுவன்றேல் அருளின்மையன்றே? எ - று.

கூ புகர்முகக் (எ)களிறெடு புலிபொரு துழக்கு(ஏ)நின்
னகன்(கூ)மலை யடுக்கதத வமைமையக்கு மென்பதோ

க. (அ)"கால்பொர.....நீசிதைத்ததை" என்னும் பகுதியை,இதுபாடாண் டிணைப்பகுதியாகியசுட்டியொருவர்பெயர்கொள்ளாக்கைக்கிளையன்றே யென விலகுவி, தலைவன் அன்பின்மை மெய்யாயின் அஃதாம்; இஃது அவ்வாறின்றி வரைவுகடாதல் காரணமாகஅன்பிலனென்று இல்லது கூறினமையின் ஒருதலையன் பாகாதென்று விளக்கினர், பேராசிரியர்; (ஙூ)நச்சினார்க்கினியரும் இதையே தழுவினர்; தொல். செய். சூ.கசுஅ.

உ. "கூடற் குடவயின்..... .. கண்போன் மலர்ந்த காமர் சுனை மலர்" முருகு. எக - எஙி.

ங. "புனைர்ச்சியுட் புல்லாரா மாத்திரை" கலி. கசஉ க.

ச. "பல்லித ழுண்கண் பசத்தல்" ஐங். கஎ஠.

ஙி. கண் பசத்தல் ஐங். உக, ஙச, ஙசு, ஙஎ, சஙி, கசுக, உசஉ, உசக, சஎஎ, ஙி஠; கலி. எஎ: கஉ, அஉ: உ஠.

சு. தொல். எச்ச.சூ. சுஎ-இல்"சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்" என்பதன் விசேடவுரையில், "கால்பொர நுடங்கிலிற் கறங்கிசை யருவி யெண்புழி, நுடங்குதலையுடைய அருவியென நிற்குமாறு உணர்க. இவைபோல்வன நிசை வேற்றுமையான் வேறபடினவும் உணர்ந்துகொள்க" என இவ்வுரையிற் காணப்படுவது இங்கே அறிதற்பாலது.

எ. மலையில் யானையும் புலியும் பொருமென்பதை கலி. சஅ: சு-எ - ஆம் அடிகளாலும் அவற்றின் குறிப்பாலும் உணர்க.

அ. (அ)"தோளும் .. ..நின்டோர்ச் செழியன் பொருப்பிற் கவாஅ, னல்லெழி னெடுமலய் புரையுந், தொல்கவின் றொலிந்தன" அகம் கஙஎ: கஉ-சு.(ஆ) புண்ணிய நெடுவரை... .. ..கழை" சிலப். ங: சுஎ.

கூ. (அ)"பன்மலை யடுக்கத்துக் குயரிக் கோடும்"சிலப். கச: கஙு-உ஠. (ஆ) "ஓங்குமலையடுக்கம் பாய்ந்து"

பிரதிபேதம்) * அடங்கரா, அடங்கலர்,† அதுவன்றே யருளின்.

கடையெனக் *கழுமுநோய் கைம்மிக வென்றோழி
(க)தடையின திரண்டதோ டகைவாடச் சிதைத்ததை

எ - து: உயிர்போம் பருவமென்று கூறும்படியாகக் கலங்குதற்கு ஏது வாகிய காமநோயைக் கடக்கும்படியாக என் தோழியுடைய பெருத்த னவாகிய திரண்டதோள்களே அழகுவாடும்படி நீ கெடுத்தது புகரையுடைத்தாகிய முகத்தையுடைய களிற்றையே புலி †பொருது திகைத்துத் திரியும் நின் னுடைய அகன்ற மலையில் அடுக்கத்தனவாகிய மூங்கிலையொக்குமென்னும் பொருமையோ ? அதுவன்றேல் அருளின்மையன்றே ? எ-று.

கசு (உ)சுடருற வுறநீண்ட சுரும்பிமி ரடுக்கத்த
விடர்வரை (ங)யெரிவேங்கை யினரேய்க்கு மென்பதோ
(ச)யாமத்துந் ‡துயிலல ளலமரு மென்றோழி
(ஞ)காமரு நல்லெழில் கவின்வாடச் சிதைத்ததை

எ - து: நடுயாமத்துந் துயில் கொள்ளுத லிலளாய் மனந் தடுமாறும் என் தோழியுடைய விருப்பம் மருவிய நல்ல ||எழுச்சியழகு வாடும்படியாக நீ கெடுத்தது ஞாயிற்றைத் தீண்டும்படியாக மிகநீண்ட சுரும்புகள் ஒலிக்கின்ற (சு)முழைஞ்சுகளையுடைய மலையினது பக்கமலையிடத்தனவாகிய எரிபோலும் வேங்கையினது பூங்கொத்தை யொக்குமென்னும் பொருமையோ? × அது வன்றேல் அருளின்மையன்றே ? எ-று.

க. (அ)"வீங்கிறைத் தடைஇய வமைமருள் பணைத்தோள்" பதிற். நிசை: ங. (ஆ)"தடைஇய மென்றோளாய்" கலி. கூங: ஙி. (இ)"தடைஇய" அகம். ஙஉங: அ.

உ. "வெங்க திர்க்கட வுள்வியன் றேர்வரைத், தங்கு சந்தனக் கோட்டிடைப் பட்டென" சீவக. கசுஎ.

ங. இந்நூற்பக்கம் உசுஎ: ங - ஆம் குறிப்புப் பார்க்க.

ச. (அ) "யாமம் - இடையிரவு; நாற். சு. கஉ: (ஆ)"ஊர் துஞ்சியாமமும்" குறுந். ஙஉ. (இ)"யாம நடுநாட் டெயில்கொண் டொளிர்த்த,காமகோயின்" (ஈ)·"பலர்த்துயிற்றும் யாமநீதுஞ்சலேமன்" கலி. கஉஉ: உச-உ; கசசு: ஙசு-எ. (உ) "நீய வனமுந் துயின்று திசைதுயின்று, பேயுந் துயின்ற தாற் போ் யாம - நீயுமினிக், கண்மேற் றுயில்கை கடன்" நன. கலி இதாடர். கூச.

ஞ. (அ) "காமனும் விழையுங காமர் காரிகைக், கலையுணர் மகளிர்" (ஆ) "கண்டுகண் ணுறோக் காமர்காரிகை,வண்டொரைம்பால் வாசவதத்தை" பெருங். (க) சஅங - ச, உங-ஞ.

சு. முழைஞ்சு - குகை.

(பிரதிபேதம்) * கழீஇ,†பொருதுகைத்து, ‡ துயிலிலள், || எழிச்சி, × அன்றே.

*காமரு, விகாரம்; மருவும், ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங் கெட்டு மகரம் சந்தியாற் கெட்டது.

†எனவாங்கு

எ-து, என்று; எ-று. ஆங்கு, அசை.

உக (க)தன்மீமை பலகூறிக் கழறலி னென்றோழி .
மறையிற்றான் மருவுற மணந்தநட் பருகலாற்
பிறைபுரை நுதலவர்ப் பேணினம்
முறைவரைந் தனரவ ருவக்கு நாளே

எ-து: †தன் பொல்லாங்குகள் பலவற்றையுஞ் சொல்லி யான் (உ) கழறுகையினாலே அவர் என் கூற்றினை ||இஃதுண்மையென்று தெளிந்து களவொழுக்கத்திலே தாம் நம்மோடுமருவுதலுறுகையினாலே கூடினவுறவு பின்னர் வரைவுமுயற்சியான் × (ங)அருகுகையினாலே, பிறையொத்த நுதலினை யுடையாய்! இக்களவொழுக்கத்தில் வேட்கைமீயகி நாம்அவரைப் பேணி அவரிடத்தே தங்குதலேஅவர் விரும்பின நாளிலே நஞ்சுற்றத்தாரும் அவர்க்கே கொடுப்பதாக அறுதியிட்டுவிட்டார்; இதுகாண் நமக்குண்டாகிய நன்மை; =எ - று.

தன், தான். அவனென்பது ஒருமைப்பன்மை மயக்கம். ÷ உறைதல் உறையென விகாரமாயிற்று.

இதனால். தலைவிக்குச செல்வமாகிய உவகை பிறந்தது.

இஃது எழடித்தரவும் தான்கடித்**தாழிசையும் தனிச்சொல்லும் நான்கடிசசுரிதகமும் பெற்றுவந்த ஒத்தாழிசைக்கலி. (கூ)

(சசு.) வியகம் புலம்ப வேட்டம் போகிய
மாஅ லஞ்சிறை மணிநிறத் தும்பி
வாயிழி கடாத்த வான்மருப் பொருத்தலோ
டாய்பொறி யுழுவை தாக்கிய பொழுதின்
நி வேங்கையஞ் சினையென விறற்புலி முற்றியும்
பூம்பொறி யாணைப் புகர்முகங் குறுகியும்

க. "நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக் கண், மேற்சென் றிடித்தற் பொருட்டு" குறள். எஅச.

உ. கழறுகை - இடித்துச் சொல்லுகை.

ங. அருகுகை - அருமையாதல்.

(பிரதிபேதம்) * காமா, † எனவாங்கு, ஆங்கசை. † என்று தன்பொல்லாங்கு, || இது வண்மை, × அருகையினாலே, = என ஆற்றுவித்தான். ÷உறைதல் விகாரம்; ** தாழிசைகளும்.

வலிமிகு வெகுளியான் வாளுற்ற மன்னரை
நயனுடி நட்பாக்கும் வினைவர்போன் மறிதரு•
மயமிழி யருவிய வணிமலை நண்ணுட;

கo ஏறிரங் கிருளிடை யிரவினிற் பதம்பெறுஅன்
மாறினெ னெனக்கூறி மனங்கொள்ளுந் தானென்ப
கூடுதல் வேட்கையாற் குறிபார்த்துக் குரனெச்சிப்
பாடோர்க்குஞ் செவியோடு பைதலேன் யானுக;

கசு அருஞ்செல லாரிடை யருளிவந் தளிபெறுஅன்
வருந்தினெ னெனப்பல வாய்விடுஉந் தானென்ப
நிலையுயர் கடவுட்குக் கடம்பூண்டு தன்மாட்டுப்
பலசூழு மனத்தோடு பைதலேன் யானுக;

கஅ கணபெய னடுநாள்யான் கண்மாறக் குறிபெறுஅன்
புணையிழா யென்பழி நினக்குரைக்குந் தானென்ப
தளிநசை வேட்கையான் மிசைபாடும் புள்ளிற்றன்
னளிநசை யார்வுற்ற வன்பினேன் யானுக;

எனவாங்கு;

உஙு கலந்தநோய் கைம்மிகக் கண்படா வென்வயிற்
புலந்தாயு நீயாயிற் பொய்யாமே வெல்குவை
யிலங்குதா ழருவியோ டணிகொண்ட நின்மலைச்
சிலம்புபோற் கூறுவ கூறு
மிலங்கே ரெல்வளை யிவளுடை நோயே.

இஃது அல்லதறிப்பட்டுத் தலைவன் மீள அதனை என்பிழையாகக் கருதுவனெனக் கவன்று ஆற்றளாகி, "தன்தறி தளர்விய தேருளாக் காலை, வந்தனன் பெயர்ந்த வறுங்கள நோக்கித், தன் பிழைப்பாகத் தழீஇத் தேறிய"(க)தலைவியது நிலைமை தோழி தலைவற்குக்கூறி;இவ்விடையீடு நின் *தோழியினுயிற்றென † எனதுபிழைப்பாக்கி அவளை ஆற்றுவிப்பாய், நீ உரைத்தேஉரையாம்அவட்கென அவளதுஆற்றமைகூறி வரைவுகடாயது.

இதன் பொருள்.

க. தோல். களவியல், சூ. உo.

(பிரதிபேதம்) * தோழியின், † என்பிழைப்பாக அஇ.

வியகம் புலம்ப வேட்டம் போகிய
(க)மாஅ லஞ்சிறை (உ)மணிநிறத் தும்பி
வாயிழி கடாத்த வான்மருப் (ங)பொருத்தலோ
டாய்ச பொறி யுழுவை தாக்கிய பொழுதின்
நி (ஙி)வேங்கையஞ் சினையென விறற்புலி முற்றியும்
பூம்(சூ)பொறி யாணைப் புகர்முகங் குறுகியும்
வலிமிகு வெகுளியான் (எ)வாளுற்ற (அ)மன்னரை

க. (அ) "அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்" என்பதனுரையில் செவியெனச் சகரத்தை முற்கூறியதனால், 'அஞ்சிறைத் தும்பியென இப்பொருளில் வருதலுங் கொள்கவென்று அமைத்து அகஞ்சிறை யென்பதற்கு ஏனையவற்றின் சிறைபோலப் புறத்தின் கண்ணவன்றி அகத்தின்கண்ணவாகிய சிறையென்று பொருளும் எழாம்வேற்றுமைத் தொகையென்று இலக்கணமும் எழுதினர் விருத்தியுரைகாரர்; நன். மெய். சூ. ககூ. (ஆ) "அஞ்சிறைத்தும்பி" குறுந். உ. ஐங். உ0.

உ. (அ) "மணி நிறத்தும்பி" ஐங். உகடி. (ஆ) இந்நூற்பக்கம் உசு0: ங-ஆங் குறிப்பு ஈண்டறிதற்பாலது.

ங. புலி யானையொடு பொருமென்பதை கலி. சஅ: சு - எ - ஆம் அடிக் குறிப்பாலுணர்க.

சு. (அ) பொறி - புள்ளி. (ஆ) புலிக்கு வரிகூறுதல் பெருவழக்காதல் பற்றி இவ்வாறு பொருள் கூறினர்போலும்; (இ) "புலிப்பொறிப் போர்வை"(சீவக. உசுசு)என்புழியம் இவர் இங்ஙனம் கூறியிருக்கிறார். (ஈ) மறங்கொள் வயப்புலி .....வரியும் புள்ளியு மயங்கு வான்புறத், துரிவை" சிலப். கo: உஎ - ங0 என்பதனால் புலிக்கு வரியே அன்றிப் புள்ளியும் கூறுதல் மரபென்று தெரிகிறது. (உ) "பூம்பொறியுழுவை"(ஊ)"புலிப்பொறியன்ன" நற். உ0சு: க, ஙகூ: உ; (எ)"புலிப்பொறி வேங்கை" ஐங்குறு. ஙஉ்சு (ஏ)"பொறிகிளர் புழுவை" அகம். கசஎ: சு. (ஐ) "பொறியெருத் தெறுழ்வலி.....புலிமா னேற்றை" பா-வி. சூ. ககூ. மேற். (ஒ) "புள்ளிகொண்ட புலியுரி"தே. (ஓ) "பொறிப்புலித் தோலும்" பெருங். (க) நிஅ: அஎ. (ஔ)"பொறிப் புண்டரீகம் போலு மொருவனுல்" (ஃ) "வெறிப்பொறிப் புலியின்" கம்ப. அங்கதன்றூது. ஙசு, விடைகொடுத்த. கo.

ஙி. கலி. சஅ: க - சு-ஆம் அடிக் குறிப்புப்பார்க்க.

சு. (அ) "பல்பொறிச் சிறுகண் யானை" ஐங். ஙடிஙி. (ஆ) "பொறிமுகத், களிறார்ந்து" பா - வி. சூ. அடி. மேற்கோள்.

எ. வாள், கொலைத்தொழிலுமாம்.

அ. "பகச்சொல்லிக் கேளிரைப் பிரிப்பர் ககச்சொல்லி, நட்பாட றேற்றா தவர்" குறள். கசஎ.

நயனுடி நட்பாக்கும் வினைவர்போன் *மறிதரு
மாமமிழி யருவிய (க)வணிமலை நன்னாட

எ-து: தான் நுகர்கின்ற பூக் தன்னையின்றித் தனித்து உறையை, தான் விரும்பிய பூவின்மேலே போன பெருமையினையும் அழகினையுமுடைத்தாகிய நிறத்தினையும் நீலமணிபோலும் நிறத்தினையுமுடைய தும்பி, (உ) வாயிட்டுத் தே பெருகிவீழ்கின்ற மதத்தையும்வெள்ளியமருப்பினையுமுடைய(ங) யானைத்தலைவ னேடே அழகினையுடைத்தாகிய வரியினையுடைய புலி வந்து போர்செய்த காலத்தே, வேங்கையினது அழகையுடைய பூங்கொம்பென்று கருதி விறலி யுடைய புலியைச் சூழ்ந்தும் வேங்கைச்சினையென்று பொலிவுபெற்ற புள்ளி களையுடைய யானையினது புகரினையுடைய முகத்தை அணுகியும், வலிமிகு கின்ற கோபத்தாலே (ச) வாட் போரைச் செய்யத் தொடங்கின மன்னரை நட்பாக்கும் உபாயத்தை ஆராய்ந்து நட்பாக்குஞ்சந்துசெய்வாரைப்போலப் பல காலும் திரியும், பள்ளத்தே குதிக்கின்ற அருவிகளையுடைய திரண்ட மலைகளை யுடைய †நன்னாடனே; எ-று.

க. அணியென்பது திரளென்னும் பொருளில் "அணியணி யாகிய தாரர்" (பரி. சு: ஙக) எனப் பெயர்ச்சொல்லாய் வருதலும் இங்கு அறிதற் பாலது.

உ. (அ) "வாய்ப்புகு கடாஅத்து... .. ..வயக்களிற் றெருத்தல்" (அகம். எஅ: ங - ச.) (ஆ) "வாய்புகு கடாஅத், தண்ணல் யானை (புறம். கூங: கஉ - ங) (இ) "வாய்புகு கடாஅத்த, வண்ணல் யானை" (தொல். கள. சூ. கக. நச் மேற்கோள்;) (ஈ) நாகம், வாய்வழி கடாத்த தாகி" சீவக. எநிங.

ங. ஒருத்தலென்பது யானைத்தலைவனென்னும் பொருளில் வருதலை, (அ) "இனம்பிரி யொருத்தல்" (மலைபடு. உகஎ;) (ஆ) "இனந்தலைத் தரூஉ மெறுழ்இளர்மூன்பின், வரிமிஞிரூர்க்கும் வாய்புகுகடாஅத்துப், பொறிநுதற் பொலிந்த வயக்களிற் றெருத்தல்" (அகம். எஅ: உ - ச.) என்பவற்றாலும் அவற்றினுரையாலும்,தலைமையுற்ற களிற்றை யானைத் தலைவனென்னும்வழக்கை (இ) இவ்வுரைகளாலும்(ஈ)"அலகி லானைக ளனேகமு மவற்றெடுமிடைந்த,திலக வாணுதற் பிடிகளுங் குருளையுஞ் செறிந்த, வுலவை நீள்வணத் தாதமே யொத்தவவ் வூதத், தலைவ னேயொத்துப் பொலிந்தது சந்திர சயிலம்" (கம்ப. வரைக்காட்சி. எ.) என்பதனாலும் அறிக. (உ) "யானையு ளரசன்" - 'களிற்றரசன்' (சீவக. உசஙசு) (ஊ) "நாகாதிபன்" (வில்லி. அருச்சுனன் தீர்த்தயாத்திரை. கo.) என வருதலும் காண்க.

ச. "இகன்மீக் கடவு மிருபெரு வேந்தர், வினையிடை நின்ற சான்றோர் போல, விருபே ரச்சமோ டியானு மாற்றலென்" தறிஞ்சி. உஎ - அ.

(பிரதிபேதம்) * மறுத்தருபயமிழி. † நன்னாடனே தும்பி வினைவர்

மறித்தரும் பயமிழி என்றும் பாடம்.

தும்பி வினைவர்போல முற்றியுங் குறுகியும் *மறிதருமென்க. பூப்புலம்ப வேட்டம் போகியதும்பி தலைவி தனித்திருக்க முன்வரைக்துகொண்ட மனைவி யிடத்தே வேட்கைசென்று போன தலைவனுகவும், அத்தும்பி வருத்தத்தை நிகழ்த்துவனவாய்த் தம்மிற் பகைத்த புலியையும் யானையையுந் தனக்குத் தேனைத் தரும் வேங்கைப்பூவாகக் கருதிச் சுழல்கின்றதன்மை †நம்மேல் அன் பின்றி இருக்கவும் தனக்கு இன்பமுளதாகக் கருதிப் பகற்குறியும் ‡ இரவுக் குறியும் பெறுதற்கு ||மறுகுகின்ற தன்மையாகவும் உள்ளுறையுவமங்கொள்க. இது வினையுவமப்போலி.

"பின்முறை=யாக்கிய" என்ற (க) சூத்திரத்து, 'தொன்முறை மனைவி' என்றதனால், தொன்முறை மனைவி யுண்மையும் உணர்க.

'நயனுடி நட்பாக்கும் வினைவர்போல்' என்ற வினையுவமம் உள்ளுறையுவ மத்தைத்தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்துத் தானும் உள்ளுறை யுவமம்போற் றினையுணர்தலைத் தள்ளாது நின்றது.

கo (உ)எறிரங் கிருளிடை யிரவினிற் பதம்பெறு அன்
மாறிலென னெனக்கூறி மனங்கொள்ளுந் தானென்ப
(ங)கூடுதல் வேட்கையாற் ×குறிபார்த்துக் (ஈ)குரலெஞ்சிப்
பா(ரு)டோர்க்குஞ்செவியோடு பைதலேன் யானுக

எ-து: யான் தன்னைக் கூடுதற்கணுளதாகிய வேட்கையினுலே யான் பகற்குறியைத் தள்ளின நிலைமையை என்பிழைப்பாக மனத்தான் நோக்கி

க. தொல். கற். சூ. ஙக.

உ. (அ) "எறிரங்.....யானுக" என்னும் பகுதி, வந்தவழி யெள்ளுத லென்பதற்கும்,(தொல். களவி. சூ.உo.இள;)(ஆ)இருவகைக்குறிபிழைப் பாகிய விடத்துத் தலைவிக்குரிய இளமை நிகழ்த்தற்கும் (தொல். களவி. சூ. கசு. நச்.), (இ) "எறிரங்கிருளிடை" என்னும் பகுதி, இரங்குத லென்பது இசைப்பொருளில் வருதற்கும்(தொல். உரிச். சே. சூஉ; நச் சூ. சுo; தெய். சூ. சஎ; இ - வி. சூ. உஅசு.)மேற்கோள்.

ங. தலைவி, தன் நாணும் மடனும் நீங்கிய நிறத்தைக் குறிப்பா னன்றிக் கூற்றலும் அறிவித்தற்கு, "கூடுதல் வேட்கையாற் குறிபார்த்து.....,.....யானுக" என்பது மேற்கோள்; தொல். களவி. சூ. கக. நச்.

ஈ. குரல் - பூங்கொத்து; பெரும்பாண். ககஉ. நறுநீ. கருஅ. கீரி. நக. சிலப். கச: அஎ.

உ. ஓர்த்தல் - கருதுதல்; முருகு. கக; முல்லை. அஅ. கேட்டலுமாம்; மலை. உசு; புறம். சுஅ: கஎ,கஅ: கஉ, உஅo:சு; பு-வெ. வெட்சி. கொளு. சு.

(பிரதிபேதம்) * மறுத்தருமென்க, † தம்மேல், ‡ இரவிற்குறியும், || மறுகின்ற. = ஆகிய, ×குறிப்பார்த்து.

இரவிற்குறி யேற்றுக்கோடற்கு யான் கொத்தினையுடைய(க)தொச்சிப்பூ வீழுகின்ற ஓசையை அவன் குறியோவென்று கருதுஞ்செவியோடே வருத்தத்தையுடையேனாகாநிற்க, தான் உருமேறு இடிக்கின்ற இருளையுடைய நடுவாகிய இராப்பொழுதினது செவ்வியைப் பெருளுய்ப் பகற்குறியையும் யான் மாறினேனென்று கூறி இனி மனத்தே கொள்ளாநிற்கும்; எ - று.

மனத்தின்வினையைச் செவிமேல் ஏற்றினார்; அதுகருவியாக உணர்தல் *நோக்கி.

கச அருஞ்செல வாரிடை யருளிவந் தளிபெறுஅன்
வருந்தினெ னெனப்பல வாய்விடூஉந் தானென்ப
நிலையுயர் (உ)கடவுட்குக் கடம்பூண்டு தன்மாட்டுப்
பலசூழு மனத்தோடு பைதலேன் யானுக

எ-து: யான் நிற்கின்ற நிலைமை உயர்தற்குக் காரணமான கடவுளுக்கு வரைவு முடிந்தாற்செய்யுங் கடன்களே மேற்கொண்டு தான் குறிபெறுமையிற் றன் மாட்டு நிகழும்வருத்தம் பலவற்றையுஞ் சூழும்மனத்தோடே வருத்தத்தையுடையேனாகாநிற்க, தான் அரிய செலவினையுடைய வழியிடத்தே நம்மை அருள் செய்து வந்து நம்முடைய அளியைப் பெருளுய்ப் பகற்குறியும் பெறுமல் வருந்தினனென இனிப் பலவார்த்தையுங் கூறுநிற்கும் ; எ - று.

நிலையுயர்தல், வரைந்துகொண்டாலுயர்தல்.

க. (அ)"கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே, ...மயிலடி யிலைய மாக்குர லெருச்சி, யணிமிகு மென்கொம் பூழ்த்த, மணிமருள் பூவின் பாகுநனி கேட்டே" தொநீ. கஉஅ. (ஆ) "வியலூ ரெயிற்புற நொச்சியி னூழ்மலர் வீழ்தொ றெண்ணி, மயலூர் மனத்தொடு வைகினன் யான்றஞ்சை வாணன் வெறபர்,புயலூரிருட்கங்குல் வந்தவ மேநின்று போயினரென், றயலூர் நகைக்குமென் னேயென்ன பாவங்கொ லாக்கினவே" தஞ்சை. உoக. (இ) "நொச்சிப் புதுமலர் வீங்கிருள் வீழ்வன நோக்குதுமே" தணிகை. களவு. நிஎநி. (ஈ) "நொச்சிப் பூவுதிர் நள்ளிரு ணடுநாள்" கலி. உ. (உ) "நொச்சிமென் போது வீழுமிருளின்" கூரீம. இராமன்வனம். சுஉ.

உ. "குன்றக் குறவன் காதன் மடமகண், மன்ற வேங்கை மலர்சில கொண்டு, மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித், தேம்பலிச் செய்த வீர்நறுங் கையள்" (ஐங். உநுக.) என்பதும் இந்நூற்பக்கம் உஉஉ. நு - ஆங் குறிப்பில்இதற்குப் பொருந்துவனவும் நோக்குக.

(பிரதிபேதம்) 'நோக்கி என்பனவென மூன்றுதாழிசையிலும் வந்தன இசைநிறையாய் நின்றன.
அருஞ்செலலாரிடை.

கஅ (க)கனைபெய னடுநாள்யான் (உ)கண்மாறக் குறிபெறுஅன்
புனையிழா யென்பழி நினக்குரைக்குந் தானென்ப
(ங)*துளி(ச)நசை வேட்கையான் மிசைபாடும் புள்ளிற்றன்
னளி†நசைஇ யார்கூற்ற வன்பினேன் யானுங்

எ-து: மழை தன்னைப் புரக்க நச்சுதன்மேலுள்ள வேடகையினாலே வானத்தைப்பாடும்வானம்பாடிபோல இருவகைக்குறியினும் தான் அளிக்கின்ற அளியை நச்சுதலாலே தன்மேல் நிறைவுற்ற அன்பினையுடையேனாநிற்க, தான் நெருங்கின மழையையுடைத்தாகிய பாதிநாளிலே யான் இடமாறப் பகற்குறியையும் பெறாளைப் பூணப்பட்ட இழையினையுடையாய்! என்னிடத் துண்டாகிய பழியை நினக்குச் சொல்லாநிற்கும்; எ-று.

‡தான் யான் ஆக அருளாக்குமென்பன (?) எதிர்காலத்து நிகழ்கின்ற நிகழ்வு. என்பவென மூன்றுதாழிசையினும் வந்தன இசைநிறையாய் நின்றன.

க. "கனைபெயல்... ...அன்பினேன் யானுங்"என்பது(அ)குறியினெய்ப்புமை மருடற்கும், (தொல்.களவு. உ. இள.)(ஆ)தலைவன், தலைவிசெய்குறியைப் பிழைத்தலாற் புலந்தவழித தோழிசொல்லெடுப்புதற்குத் தலைவி சிறுபான்மை கூறுதலு முண்டென்பதற்கும் (தொல். கற். சூ. கசு. நச்.) மேற்கோள். (இ) "கனைபெயல்" இந்நூற்பக்கம் உஎக. ங - ஆம் குறிப்புப் பார்க்க.

உ. கண்மாறல் - இடமாறுதல். தமிழ். கஉரு. புறம். கசஙக: சி.

ங. (அ) "துளிநசைப் புள்ளினின் னளிநசைக் கிரங்கி" புறம். ககஅ: உரு. (ஆ) "மேகப் புள்வயிற் பிறந்த புட்போ லொன்றலா தூரைத்த றேற்றூர்" -(இ) 'வானம்பாடி மேகத்துப் பிறந்த துளியையே நச்சிப் பாடுமாறுபோல அரசனுள்வயிற்பிறந்த அளியொன்றுமல்லாதனவற்றை உரைத்தலறியாத தேவியர்' சீவக. உஅகஎ. (ஈ) "பாகையுந் தேனையும் போன்மொழியார் . . . . . எழிலியை நோக்கியிரங்குபுள்... ... ...போனின்ற வாதனியேயிந்தசோலையிலே" தஞ்சை. நிஅ. என்பவைகளும் (உ) "தற்பாடிய தளியுணவிற், புட்டேம்பப் புயன்மாறி, வான்பொய்ப்பினும்" பட். ஙக - நி. என்பதும் (ஊ) "மலையுறை பகைத்து வாலுறைக்கண்ணுக்கும், புட்குலஞ் சூழ்ந்த பொருப்பு" (எ) "அளிகாள்! பாடுங குரனீர் வறந்த, மலைப் புட்போல நிலைக்குர லணந்தாங், குணவுளங் கருதி யொளியிசைபாட" கலி. நிங: கo - கக, கூடு: கக-கஙக. என்பவைகளும் கலி. கசசு: நிஉ-ங. ஆம் அடியின் குறிப்புக் களுட் பொருத்துவனவும் இங்கே அறிதற்பாலன.

சு. நசைவேட்கை. முதுமொழிக். சுக.

(பிரதிபேதம்) * துளிநசைஇ.† நசையா வுற்று,‡தான் யானருளாக்கு மென்பன நிகழ்வு, என வாங்கு ஙக- து. ஆங்கசை கலந்தகோய.

எனவாங்கு

எ-து: என்று *இவள்கூறும்படியாக ; எ - று.

உக. கலந்தநோய் கைம்மிகக் (க)கண்படா வென்வயிற்
(உ)புலந்தாயு நீயாயிற் பொய்யானே வில்குவை
யிலங்குதா ழருவியோ டணிகொண்ட நின்(கூ)மலைச்
சிலம்புபோற் கூறுவ கூறு
மிலங்கே ரெல்வளை யிவளுடை நோயே

எ-து: †இவளைக் கலந்த நோய் ‡இவள்ஒழுக்கத்தை மிகுக்கையிலுலே அது கண்டு கண்துயிலாத என்னிடத்தே நீவெறுத்தாயுமாய்க் கூறுவகூறும் எல்வளையையுடைய இவளுடைய நோயை இவள் ஆற்றும்படியாக ஒரு பொய் மொழி கூறியாயினும் வெல்வாய் நீ உரைத்தபே இவட்கு உரையாமென ஆற்றுமைகூறி வரைவுகடாயினள்.

(க) அருவியாலே அழகுகொண்ட நின்மலையின் பக்கமலை கூறுவனவே கூறுமாறுபோல நீகூறுவனவற்றையே கூறும் இலங்குகின்ற அழகினை யுடைய எல்வளையென்க. எல், ஒளி.

க. "காதலிமாட், டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை" நான்மணி. கூ.

உ. "புலந்தாயும் . . ..வெல்குவை" என்பது களவில் தலைவிகுறிப் பினுல் தோழி கூறியதற்கு மேற்கோள். தோல். கற். சூ. கசு. நச்.

கூ. (அ) "குரல்கேட்ட கோழி குன்றதிரக் கூவ, மதநனி வாரண மாறுமா றதிர்ப்ப, வெதிர்குதி ராகின் றதிர்ப்பு" (ஆ)"மணிமரு ணன்னீர்ச்சினை மடமயி லகவக், குருகிலை யுதிரக் குயிலினங் கூவப், பகர்குழல் பாண்டி லியம்ப வகவுநர், நாகவில் பாடன் முழவெதிர்ந் தன்ன, சிலம்பிற் சிலம்பிசை யோவா தொன்னர்க், கடந்தட்டான் கேழிருங் குன்று" பரி. அ: ககூ - உக; கடு: சo - சடு. (இ) "அரையிலங்கு மேகலை யார்ப்பி னழுல, வரையிலங்கு மேகலை மாதே நின்னூர்க்கும், புனையிலங்கு பொற்சிலம்பு தான்சிலம்பும் போழ்தி, னிரை யிலங்கு பொற்சிலம்பு நேரே சிலம்பும்" (ஈ) "கொங்குண் குழலார் குழலேர் மணிமழலை, தங்கி னவைகொண்டு தானு மெதிர்மிழற்று, மங்க ணவர்செய்வ செய்தசதி யாடின்றே, செங்க ணெடியான் கடி காவிற் செய்குன்றே" தூவா. சுயம். கூசு, கூள.

சு. "மலையை அருவி அழகுறுத்துமென்பதை,"மணிவரை முருங்கி னருவி போல,வணிவரம் பறுத்த்" (கலி.கo.கூ: கo-கக) என்னும் பகுதியாலும் அதன் குறிப்பாலுமுணர்க.

(பிரதிபேதம்) * அவள். † என்று இவள்கூறப்படியாக இவனை, ‡ அவளொழுக்கத்தை மிகுகையிலுலே,

அல்லகுறிப்பட்டு மீண்டதனை என்பிழைப்பாகக் கருதும் அவனைக் கவன்ற ஆற்றாளா மென்றதனாலும் "தன்குறி தள்ளிய..... .....தழீஇத் * தேறினும்" என்னும் (க) சூத்திரத்திற்குப் 'பகற்குறியென்றே' பொருளாத லானும் இவ்வாறே பொருள்கூறவேண்டு மென்றுணர்க.

தாழிசைகளில் தோழி சொல்லெடுப்புதற்குத் தலைவி சிறுபான்மை கூறு தலை, "புலத்தது மூடலுமாகிய விடத்தும், சொலத்தகு கிளவி தோழிக் குரிய" (உ)என்பதனாற் கொண்டவாறுணர்க.

இதனால், தலைவற்கு அசைவுபிறந்தது.

இஃது ஒன்பதடித் தரவும் நான்கடித் தாழிசையும் தனிச்சொல்லும் †ஐயடிச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கo)

(சுo.) ஒன்று, இரப்பான்போ லெளிவந்துஞ் சொல்லு முலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்
வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போ
னல்லார்கட் டோன்று மடக்கமு முடைய
நு னில்லோர் புன்க ணீகையிற் றணிக்க
வல்லான் போல்வதோர் வன்மையு முடைய
னன்ன னெருவன்றன் ஞண்டகை விட்டென்னைச்
சொல்லுஞ்சொற் கேட்டீ சுடரிழாய் பன்மாணும்;

கூ நின்னின்றி யமையலேன் யானென்னு மவனுயி
னன்னன்சொ னட்புண்டல் யார்க்குமிங் கரிதாயி
னென்னுற்ற பிறர்க்குமாங் குணகொல்லோ கறுதுதால்;

கஉ அறியாய்நீ வருந்துவல் யானென்னு மவனுயிற்
றமியரே துணிகிற்றல் பெண்டிர்க்கு மரிதாயி
னனியரோ வெம்போல வீங்கிவன் வலிப்பட்டார்;

கஙி வாழமலேன் யானென்னு நீநீப்பி னவனுயி
னேழைய ரெனப்பலர் கூறுஞ்சொற் பழியாயிற்

க. தொல். கள. சூ. உo.

உ. தொல். கற். சூ. கசு. இசசூத்திரவுரையில் (அ) 'கலந்தநோய் ..... நோயே" என்பதனை மேற்கோள் காட்டி 'இது களவு' என்பர் இளம் பூரணர்; (ஆ) "கலந்தநோய்.....வெல்குவை" என்பதனைக் குறி பிழைத்துழிப் புலந்ததற்கு மேற்கோள் காட்டுவர் நச்சினார்க்கினியர்.

(பிரதிபேதம்) * தேறியவென்னும், தேறலுமென்னும், † ஐந்தடிச்.

சூழுங்கா னினைப்பதொன் றறிகலேன் வருந்துவல்
சூழுங்கா னறுதுதா னம்முளே சூழ்குவம்;

ககூ அவனை;

நாணடப் பெயர்த்த னமக்குமாங் கொல்லாது
பேணின னெனப்படுதல் பெண்மையு மன்றவன்
வெளவினன் முயங்கு மாத்திரம் வாவெனக்
கூறுவென் போலக் காட்டி
மற்றவன் மேளவழி மேவாய் நெஞ்சே.

இது தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி அவன் றன்மையும் அவன் தனக்குக் கூறுவனவும் அக்கூற்றுத் தன்னுற் பொறுக்க வொண்ணுதவாறும் அவன் கருத்தும் தலைவிக்குக் கூறி அவன் குறைநயப்பத் தன்னுள்ளே சொல்லியது.

இதன்பொருள்.

ஒன்று, இரப்பான்போ *லெளிவந்துஞ் சொல்லு (க)முலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்
வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போ
னல்லார்கட் டோன்று (உ)மடக்கமு முடைய
நி (ங)னில்லோர் புன்க ணீகையிற் றணிக்க
வல்லான் போல்வதோர் †வன்மையு முடைய
(ச)னன்னு ணெருவன்றன் ஞாட்டகை விட்டென்னைச்
சொல்லுஞ்சொற் கேட்டீ சுடரிழாய் பன்மாணும்

க. (அ) "வையம் புரவூக்கு முள்ளத்தேன்" கலி. கசக: கஉ – ங. (ஆ) "விசும்புதைவரு வளியும் .. .. போல..... .....வலியுந் தெறலு மளியுமுடையோய்" புறம்: உ:ங – அ.(இ)"வினை வலியுந் தன் வலியு மாற்றான் வலியுந், துணைவலியுந் தூக்கிச்செயல்" குறள். சஎக.

உ. "இளையா னடக்க மடக்கங், கிளைபொரு ளில்லான் கொடையே கொடைப்பய – னெல்லா, மொறுக்கு மதுகை யுரனுடை யாளன், பொறுக்கும் பொறையே பொறை" நாலடி. சுடு. என அடக்க முத லியவை ஒருவாறு சேரக் கூறப்பட்டிருத்தல் காண்க.

ங. (அ) "வண்கையாற் கலிமாற்றி" சீவக. கடுஅ. (ஆ) "ஈர்த்தே கடந்தா னிரப்போர் கடல்" கம்ப. அரசியல். டு.

ச. "சிறுமைப்பொருள் பெருந்தொழில்செய்தலும் பெருமைப்பொருள் சிறுதொழில்செய்தலும் வியப்பாம் எனக்கொள்க"என்றுகூறி "அன்ன

(பிரதிபேதம்) * இளிவந்தும். † வண்மையும்.

எ-து: விளங்குகின்ற இழையினையுடையாய்! என்னிடத்து ஒருகாரி யத்தை (க)இரந்துநிற்பான்போலே தன்னைப்பிறரால் இகழப்பட்டு எளியராந் தன்மை *தோன்றியுஞ் சிலமொழி கூறும். அங்ஙனங் †குறையிரந்துநிற்பினும் உலகத்தையெல்லாம் பாதுகாப்பான்போலே இருப்பதொரு வலியுமுடையன், மெய்ப்பொருள் கூறும் நூல்களைக் கூற வல்லவர்களை வழிபட்டு நின்று அப்பொருளை(உ)அறிந்தான்போலே நன்மக்களைக் கண்டாற்றோன்றும் மன அடக்கமுமுடையன், வறியோர் வறுமையைக் கொடையினாலே போக்க வல்லான்போலே இருப்பதொரு வலியுமுடையன்;அத்தன்மையையுடையான் ஒரு தலைவன் தனக்குரிய ஆளுந் தகைமையைக் கைவிட்டு என்னைநோக்கிக் கூறும்(ங)பலகாரியங்களும் மாட்சிமைப்படுஞ் சொல்லைக் கேட்பாயாக; எ-று.

"மனைவி யுயர்வுங் கிழவோன் பணிவு, நினையுங்காலைப் புலவியு ளுரிய" (சு) என்பதனுள், நினையுங்காலை ‡ என்றதனாற் றோழியுயர்வுங் கிழவோன் பணிவும் || கொள்கவென்றலால், தோழி இங்ஙனங் கூறினாள். "உயர்மொழிக் கிளவியு முரியவா லவட்கே"(ரு)என்பதனால்'உலகம்,புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்' என்றாள்.

ஒருவன் ....சுடரிழாய்" என்பதை மேற்கோள்காட்டி, "இது பெரியோன் சிறு தொழில் கூறலின் வியப்பாயிற்று" என்பர். பே; தொல். மெய்ப். சூ. எ; இ-வி. நூலாரும் இதனையேபின்பற்றுவர். இ - வி. சூ. நிஎ.

க. இந்நூற்பக்கம் நிஙூ: க - ஆம் குறிப்பிலுள்ள, இரப்பாரைப் பிறரிகழ்வா ரென்னும் பொருளையுடைய செய்யுட்கள் இங்கே அறிதற்பாலன.

உ. "கற்றறிந்தார் கண்ட தடக்கம்".

ங. பன்மாணென்பது, பலகாலென்னும் பொருளில் பரி. உ: எஙூ, அ: அநி, கஙூ: சுஉ; கலி. கூஉ: நிசு, கசச: உ, கசசு: உச; அகம். சக: கூ, கநிஂ: ச; புறம். கசுஂ: கஅ, ஙசுநி: கூ. இவற்றில் வந்துள்ளது. இவ் வுரைகாரும் "மா[னு](ணு)ம்" என்னும் இடைச்சொல், 'படியும்' என்னும் பொருட்டாய் நிற்றற்கு "சுடரிழாய் பன்மா[னு](ணு)ம்" என்பதை, தொல்.'எச்ச. சூ. சுஎ - இல் மேற்கோள்காட்டியிருக்கிறார். இதனைத் தோழிசையோடு கோத்தால் இப்பொருள் பொருந்தும். பதிற். அஙூ: சு - இல் பன்மாவென்பது இப்பொருளில் வந்துள்ளது.

ச. தொல். பொருளி. சூ. ஙஙூ. இதனுரையிலும், "ஒன்றிரப்பான்போல் ....பன்மாணும்" என்பதனை, கற்பினுள் புலவிக்காலத்துத் தலைவன் இரந்துரைக்கத் தலைவி அதனையேற்றுக்கொண்டதற்கு மேற்கோள் காட்டியுள்ளார் இவ்வுரையாசிரியர்.

ஞ. தொல். பொருளி. சூ. சஅ. இதனுரையிலும், "உலகம்..... .. முடையன்" என்பது, தோழி தலைவனை உயர்த்திக் கூறியதற்கு இவ் வுரையாசிரியரால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

(பிரதிபேதம்) * கோன்றுவும்,† குறாது நிற்பினும், ‡ என்பதனால் || கொள்ளப்படுதலால்,

உம்மைகளெல்லாம் (க)ஐயவும்மை.

சொல்லுமென்றது (உ)பிறன்கட்டோன்றிய வருத்தம்பற்றி இளிவரல் பிறந்தது; அவன் இவ்வாறு * ஒழுகல் நமக்கு இளிவரலெனக்குறிப்பாற் கூறிக் குறை நயப்பித்தலின்.

கூ (ங)நின்னின்றி யமையமிலேன் யானென்னு மவனுயிர்
னன்னுன்சொ னம்புண்டல் யார்க்குமிங் கரிதாயி
னென்னுற்ற பிறர்க்குமாங் குளகொல்லோ நறு நுதால்

எ-து: நறிய நுதலினையுடையாய்! அவன் †நின்னையின்றி யான் உயிர் ‡வாழேனென்று கூறுகிற்குமாயின், இங்ஙனம் இறக்குபடுந் தன்மையையுடைய்வன் கூற்றை நம்புதலேச் செய்தல் இவ்விடத்து யாவர்க்கும் அரிதாயிருக்குமாயின், || இந்நிலைமைக்கண் என்னைச் சேர்ந்தவருத்தங்கள் பிறர்க்கும் உளவோ? இல்லையன்றே! எ-று.

கூ அறியாய்நீ வருந்துவல் யானென்னு மவனுயிர்
றமியரே துணிகிற்றல் பெண்டிர்க்கு மரிதாயி
னளியரோ வெம்போல வீங்கிவன் வலைப்பட்டார்

எ-து: அவன் யான் வருந்துவல் நீ அதனை அறியாயோவென்று கூறிகிற்குமாயின், தமக்கு(சு)உயிர்போலச்சிறந்ததோழியரோடு உசாவித்துணியாமற் றமியராயிருந்தே துணிதல் மகளிர்க்கும் அரிதாயிருக்குமாயின், இந்நிலைமைக்கண் ÷இவன் வலையிலே அகப்பட்டார் சிலர் எம்மைப்போல அளிக்கத்தக்காராயிருப்பாரோ? வலியராயிருப்பரன்றே! எ-று.

க. "ஒன், நிரப்பான்போல்..... .. ..வண்மையு முடையன்" என்புழி உம்மை இன்னுனென்று துணியாமைக்கண் வருதலின் ஐயவும்மையென்பர், சேனவரையரும்; தொல். இடை. சூ. எ. சே; நச். இ-வி. நூலாரும் இவ்வாறே கூறுவர். இ-வி. சூ. உகூ.

உ. "ஒன்றிரப்பான்போ லெளிவந்துஞ் சொல்லும்" என்பது, அவன் இவ்வாறொழுகுதல் நமக்கு இளிவரவாமென்னுங் குறிப்பினாற் கூறிக் குறைநயப்பித்தலையின், பிறன்கட்டோன்றிய வருத்தம்பற்றிவந்த இளிவரலாமென்பர், பேராசிரியரும்; தொல். மெய். சூ. கூ. இ-வி. நூலாரும் இதனையே பின்பற்றுவர். இ-வி. சூ. இஎஅ.

கூ. "இன்றி யமையேனென் றின்னவுஞ்சொல்லுவாய்" கலி. கசo: உக.

ச. (அ) "நின்னுவி யன்னவன் முன்னுக வன்றி நிலையலேயே" (ஆ) "நெஞ்சே,யினியேதுசென்றெய்துமாறென்று நீகின்றிரங்கலென்னே,

(பிரதிபேதம்) * ஒழுகுகமக்கு, † நின்னையன்றி, ‡ வாழ்வதிலனென்று, வாழலே னென்று, || அந்நிலைமைக்கண் ÷ அவன் வலையிலே,

கடி வாழலேன் யானென்னு நீநீப்பி னவனுயி
* னேழைய ரெனப்பலர் கூறுஞ்சொற் பழியாயிற்
சூழுங்கா னிணைப்பதான் † றறிகிலேன் வருந்துவல்
சூழுங்கா னறுநுதா னம்முளே சூழ்குவம்

எ - து: அவன் நீ அருளாதொழியின் யான் உயிர்வாழேனென்னுமாயின், குடிப்பிறந்தார்(க)பேதையராயிருப்பரொன்று நன்மக்கள் அவரைச் சிறப்பித்துச் சொல்லுஞ்சொல் நீ (உ) மூதுக்குறைமை பூண்டிருத்தலின் நினக்குப் பழியாயிருக்குமாயின், இந்நிலைமைக்குச் செய்யலாவதொரு காரியத்தை ஆராயுங்கால் நினைப்பதொரு காரியத்தை அறியேனுய் வருந்தாநின்றேன்; இந்நிலைமை ஆராய்ந்துபார்க்குங்கால் நறிய நுதலினையுடையாய்! நம்முள்ளே ஆராய்ந்து பார்ப்பேம்; ‡ எ - று.

கூ, அவனை

(ங)நாணடப் பெயர்த்த னமக்குமாங் கொல்லாது
(ச)பேணின ரெனப்படுதல் பெண்மையு மன்றவன்
வெளவினன் முயங்கு மாத்திரம் வாவெனச்
|| கூறுவென் போலக் காட்டி
, மற்றவன் ÷மேவலவழி மேவாய் நெஞ்சே

கனியே யிதழ்வஞ்சி கண்சொன்ன வாருயிர் கண்டுவந்தே" (இ) "கண்ணு குவளினைக் கங்குயி ராவள் கனங்கு ழையே" அம்பிகா. எ0, அக, கo க; (ஈ) "இங்கே யுயிரன்ன பாங்கியு நீயுமெழுந்தருளே" திரு வாரூர்க். சுகூ. (உ) "பொருப், பிணையே பிணைக்கொங்கை யாயின்ன நாமின்ப மெய்தவுயிர்த், துணையே துணைவர் சீவரு வாயிந்த சோலையிலே" மாறன்கோவை. எடு.

க. (அ) "நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறி வென்பது பெரும்பேதை மைத்தே" இறை. சூ. உகூ. நன். பெயர். சூ. அ. மயிலை. இ - வி. சூ. கசுஎ. மேற். (ஆ) "பெண்ணறி வென்பது பேதைமைத்தே" சிலப். உக: உச. (இ) "நுண்ணுணர் வுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறி வென்பது பெரும்பேதை மைத்தே" நன். பெயர். சூ. அ. வி. மேற். (ஈ) "நுண்ணறி வுடைய ராகி நூலொடு பழகி னலும், பெண்ணறி வென்ப தெல்லாம் பேதைமைத் தாதல்" திருவிளை. பன்றிக்குட்டிக்கு. கூச: (உ) "பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்" (ஊ) "எண்ணறை வோதி யெழுத்தறக் கற்கினும், பெண்ணறி வென்பது பெரும்பேதை மைத்தே"

உ. மூதுக்குறைமை யென்பதற்கு, மூதுமைக்கண் உறைகின்ற நிலைமை யென்றும் பேறிவுடைமையென்றும் பொருள் கூறுவர்.

கூ. "நாணடப் பெயர்த்தல்" கலி. கூ0: கூஉ.

ச. "பெண்ணன் றுரைத்த னமக்காயின்" கலி. கூ எ கூ.

(பிரதிபேதம்)* ஏழைமார், † அறிகலேன், அறிஞிலன், ‡ னன்ருள. || கூறுவனபோல, ÷ மேவழி மேவழி மேள நெஞ்சே, மேவாய் மேவாபு மேள நெஞ்சே.

எ - து: நம்மை நாண் வருத்துகையினாலே அவனைப் போக்குதல் நமக்கும் அவன் இறந்துபடுகின்ற நிலைமைக்கட் பொருந்தாது, அவன் இறந்துபடுகின்றவனைப் பேணினானென்று நன்மக்கள் புகழ்ந்துகூறப்படுதல் நின் கருத்தாற் பெண்மையுமன்றுயிராகின்றது; இங்ஙனமாகவும், அவன் நின்னை முயங்குமளவைத் தன் நெஞ்சாலே கைக்கொண்டுவிட்டான்; அதற்கு நீ*மேவுகின்றிலை, இதற்கு யான் இனிக் கூறுவதொன்றின்றெனத் தலைவிக்குக் கூறி, பின்னைத் தோழி தன்னெஞ்சோடு முன்னிலைப் புறமொழியாகக் † கூறுவாள் குறியிடத்தேவாவென்று ‡கூறுவான்போலே அவனுக்குஒரு பொய்க்குறியைக் காட்டி அவன் மேவின வழியிலே நெஞ்சே மேவுவாயாக என்றாள்; எ - று.

இதனால், தலைவிக்குச் சூழ்ச்சி பிறந்தது.

(க) இஃது ஒன்றெனச் சொற்சீரும் அவனெனத் தனிசைசொல்லும் || பெற்று, தாழிசையுள்ளே மூன்றடியாக ஒன்றுநான்கடியாய் வந்தமையிற் கொச்சகக்கலியாயிற்று. (கக)

(அ.) ஆமிழி யணிமலை யலர்வேங்கைத் தகைபோலத்
தேமூசு நறுங்கவுட் டிசைகாவல் கொளற்கொத்த
வாய்நில்லா வலிமுன்பின் வண்டீது புகர்முகப்
படுமழை படுக்கத்த மாவிசும் போங்கிய
கடிமரத் துருத்திய கமழ்கடாந் திகழ்தரும்
பெருங்களிற் றினத்தொடு வீங்கெருத் தெறுழ்முன்பி
னிருஞ்புலி மயக்குற்ற விகன்மலை நன்னாட;

அ வீழ்பெயற் கங்குனின் விளியோர்த்த வொடுக்கத்தால்
வாழுநாட் சிறந்தவள் வருநதுதோட் டவறுண்டோ
தாழ்செறி கடிங்காப்பிற் முய்முன்னர் நின்சார
லூழுறு கோடல்போ லெல்வளை யுகுபவால்;

க. வெண்கலியுறுப்பு நிலையொத்துப் பாவேறுபடுங் கொச்சகத்துக்கு இசை செய்யுளே மேற்கோள்காட்டி, இது தரவும் கொசசகமும் சுரிதகமும் முறையானே வந்து ஆசிரியச சுரிதகத்தான் இற்றது என்று கூறி இவற்றையும் எழுதுவர் பே, 'இது ஒன்றெனவும் அவனெனவுஞ் சொற்சீருந் தனிச்சொல்லும் வந்து இடைநிலைப்பாட்டினுள் ஒன்றே ரடிமிக்கு ஒருபொருணமேல் மூன்றுவருதலின் ஒத்தாழிசையாகாது கொச்சகமாய்க் கலிவெண்பாட்டின் வேறுயிற்று' என்பர். நச்; தொல். செய். சூ. கநஙி.

(பிரதிபேதம்)* மேவுன்றிலை, † கூறுவாளாய்க்குறியிடத் ‡ கூறுவன போலே, || பெற்று ஒன்று மூன்றடியாக ஒன்று நான்கடியாய்.

கஉ இனையிரு ளிதுவென வேங்கிநின் வரணசை இ
நினைதுய ருழப்பவள் பாடில்கட் பழியுண்டோ
வினையளென் றெடுத்தரற்று மயன்முன்னர் நின்சுணைக்
கனைபெய னீலம்போற் கண்பனி கலுழ்பவால்;

கக பன்னுரும் படரடப் பசலையா னுணப்பட்டாள்
பொன்னுரை மணியன்ன மாமைக்கட் பழியுண்டோ
மின்னுரைச் செதும்பரற்றுஞ் செவ்வியு ணின்சோலை
மின்னுகு தளிரன்ன மெலிவுவந் துரைப்பதால்;

எனவாங்கு;

உக பின்னீ தல் வேண்டுநீ பிரிந்தோணட் பெனநீவிப்
பூங்கண் படுதலு மஞ்சுவ ருங்கிய
வருந்துய ரவலந் தூக்கின்
மருங்கறி வாரா மலையினும் பெரிதே

இது வரையாது வந்து ஒழகந் தலைவற்குத் தோழி தலைவியாற்றமையும் இவ்வோழுக்கம் புறத்தார் அறியப்படுகின்றமையும் கூறி வரைவு கடாயது.

இதன் பொருள்.

(க) ஆமிழி (உ)பணிமலி (ரு)யலர்வேங்கைத் தகைபோலத
தேமூசு நுணைகவுட் டிசைகாவல் கொளற்கொத்த
வாய்நில்லா (ச)வலிமுன்பின் (ரு)வண்டோது புகர்முகப்
படுமழை யடுக்கத்த மாணிசும் போங்கிய
கடிமரத் தூருத்திய (ஈ)கமழ்கடாந் திகழ்தரும்

க. ஆம் - நீர். ஐங்குறு. உஉரு.

உ. நீர்வீழ்ச்சி, மலைக்கு அழகுசெய்யு மென்பதனை, கலி. கoரு: கo-கக. ஆம் அடிகளாலும் அவற்றின் குறிப்பாலும் உணர்க.

ரு. (அ)"தும்பி..... ..வேங்கையஞ் சினையென... .. ..பூம்பொறியானைப் புகர்முகங் குறுகியும்" கலி. சசு: உ - சு. (ஆ) "போதி யென்றுன் பூத்த மரம்போற் புண்ணுற் பொலிகின்றுன்" கம்ப. சம்பு. சரு.

ச. "வலிமுன்பின்" கலி. ச: க.

இ. வண்டியானை மதத்தில் மொய்க்குமென்பது "வரிவண், டோங்குய ரெழில்யானைக் கணைகடாஅ் கமழ்காற்ற, மாங்கலை விருத்தாற்றப் பகலல்லி" கலி. சுசு: உ - ச என்னும் பகுதியாலும் அதன் குறிப்பாலும் உணரலாகும்.

ஈ. இத்தூற்பக்கம் ககக: ரு- ஆங்குறிப்புப் பார்க்க.

(க)பெருங்களிற் றினத்தொடு வீங்கெருத் தெறுழ்மூன்பி
(உ)ன்றுரும்புலி மயக்குற்ற விகன்மலை நன்னாட

எ-து: எட்டித்திசையுங் காத்தற்றொழிலே மேற்கோடற்குப் பொருத்தின வாய்ப் பகைத்தலை எதிர்நில்லாத மிக்கவலியினையும் விளக்கத்தைத் தருகின்ற கமழ்கின்ற மதத்தான் நனைந்த கவுளினையும் நீர் வீழ்கின்ற அழகினையுடைய நிலையிடத்துத் தேனினம் மொய்க்கும் பூக்களையுடைய வேங்கையினது அழகுபோல வணங்கல் ஊதுகின்றபுகரினையுடைத்தாகிய மூகத்தினையுமுடைய சொரியும் மழையையுடைத்தாகிய (ங) பக்கமலையிடத்தனவும் பெருமையையுடைய விசும்பிலேவளர்ந்த மிகுதியையுடைத்தாகிய மரங்களையுடைய ஆற்றிடைக்குறையிடத்தனவுமாகிய,பெரிய(சு)யானைத்திரள்களோடே வீங்கின கீழுத்தினையும் மிக்க வலியினையுமுடைய பெரியபுலி மாறுபாட்டாலே போர்செய்தலுற்ற மலையினையுடைய நல்ல நாடனே; எ-று.

க. "வேழக் குரித்தே விதந்துகளி றென்றல், கேழற் கண்ணுங் கடிவரையின்றே"(தொல். மர-பு. சூ. நசு) என்பதனாலும் "களிறுமேல் கொள்ளவும்" (புறம். சக: கூ.) என்பதனாலும் அதனுரையாலும், "கோட்டுமாவூரவும்" (சிலப். கரி: கூஅ) என்பதனுரையில் மேற்கோளான இப்பகுதியில், களிறென்பது பன்றியென்று தடைவிடைகளால் நிறுவப்பெற்றிருப்பதாலும் களிறென்பது பன்றியையு முணர்த்தும். அதனினீக்குதற்கு யானையை, "பெருங்களிறு" என்றுகூறினார்.

உ. சிறுபுலி சிறுத்தையெனப்படுதலின் வேங்கையை இரும்புலியென்றார். இதனை "வேங்கை யிரும்புலி போன்ற" கள்வழி. கசு. என்பதனாலும் பெரும்புலி என்னும் வழக்காலு முணர்க.

ங. கிரிசரம், நதிசரம் வனசரமென யானை மூவகைப்படுமென்பர். அது (அ) "மூத்திறத்தன வெண்ணலப்பிறப்பின மூரிவெங் களியானை", (ஆ) "மூவகை யானையர்" (வில்லி. சூதுபோர். எசு, பதின்மூன்றும். சு) எனவருதலாலும் அறியப்படும். அவற்றுள் இங்குக் கூறப்பெற்றன கிரிசரமும் நதிசரமுமாம்.

சு. யானையும் புலியும் ஒன்றோடொன்று பொரல் இயல்பு: (அ) "குரூஉப்புலி பொருத புண்கூர் யானை" மலை. நிகஎ.(ஆ)"பூம்பொறி யுழுவைப் பேழ்வா யேற்றை, தேங்கமழ் சிலம்பிற் களிற்றொடு பொரினே", (இ) "வயக்களிறு பொருத வாள்வரி வேங்கை" நற்.கoச:க-உ; உரிஞி: சு. (ஈ) "புகர்முகக் களிறொடு புலிபொரு துழக்குநின், னகன்மலை" (உ) "வாயிழி கடாஅத்த வான்மருப் பொருத்தலோ, டாய்பொறி யுழுவை தாக்கிய பொழுதின்" கலி. சநி. கஉ-ங: சசு. ங-சு. (ஊ) "புலியொடு பொருது சினஞ்சிறந்து வலியோ, ரெவுக் களிரு துஞ்சிய மருங்கு"(எ)"குயவரி யிரும்போத்துப் பொருத புண்கூர்ந்,

திசைகாவல்கொளத்கொத்த என்றதனால் உலகைத் தாங்குதற்கு உரிய னென்றும் வலிமுன்பின் என்றதனால் மிக்க வலியினையுடையனென்றும் நனைகவுள் என்றதனாற் செல்வச்செருக்குடையனென்றும் வண்டுதுகர்முகம் என்றதனாற் பலர்க்கும் பயன்படுகின்றனனென்றும் இருவகைச் சுற்றத்திற்கும் ஏற்றுக. இருவகையசுற்றமாவன: தலைவியுடைய தந்தைசுற்றமும் தாய்சுற்றமு மாம். இருவகையவாகிய களிற்றிலே புலிமயக்குற்ற என்றதனால் இரு வகைச் சுற்றத்தாருடனே ஊரிலுள்ளார் தலைவியை அலர்கூறிப் பழிக்கின்ற ரென உள்ளுறையுவமங்கொள்க. இது வினையுவமப்போலி.

அ (க)வீழ்பெயற் *கங்குளின் விளி(உ)யோர்த்த வொடுக்கத்தால்
வாழ்நாட் சிறந்தவள் வருந்துதோட் டவறுண்டோ
தாழ்செறி கடுங்காப்பிற் றுய்மூன்னா நின்சா ரி
லூழுறு (ங)கோடல்போ லெல்வளை யுகுபவால்

எ-து: †தாழிட்டு அடைத்தாற் போலுங் கடிய காவலையுடைய தாய் முன்னே நின்னுடைய மலைச்சாரலிலே ‡முறைமையையுற்ற கோடல் உகுமாறு போலே ஒளியினையுடைய வளைகள் உகுவனவாய் இராநின்றன; இங்ஙன மாதற்கு இடைவிடாது வீழ்கின்ற மழையையுடைய இராக்காலத்து நின் னுடைய குறியால் அழைக்கின்ற அழைப்பினைச்(ஈ)செவிகருவியாகஓர்த்ததனா லுண்டான மனவொடுக்கத்தாலே உயிர்வாழ்கின்ற நாள் மிக்கவளுடைய வருந்துகின்ற தோளிடத்து அவை தினக்குச்செய்த தப்பு உண்டோ? இல்லையே; ||எ-று.

உகுப,அகரவீற்றுப்பலவறிசொல்;படுத்தலோசையாற்பெயராய்நின்றது(?)

துயங்குபிடி தழீஇய மதனழி யானை" அகம். உகக: சு-எ, நகூஅ உ-ங. (ஏ) "வரிவயம் பொருத வயக்களிறு போல. வின்னு மாறுதி னினே" புறம்: கo:எ-அ.(ஐ) "புலிகலாங் கொள்யானைப் பூங்குன்ற நாட" பழ. கடுஎ. (ஒ) "புலியொடு பொருஉம் புகர்முக வோதையும்" சீவக. உஞ: உக. (ஓ) "நீடு பிணைப்பகட் டடனே, வல்லி யம்பொரு மாறென" வில்லி. பதினொரும். நகூ.

க. தலைவன் தன்வரவு அறிவிக்குங்குறி மயங்குதலால், அல்லகுறிப்பட்ட தோழி தலைவற்குப்பிறிதொன்று அதனைக்கூறியதற்கு "வீழ்பெயற் .....உகுபவால்" என்பது மேற்கோள்; தொல். கள. சூ. சஉ. நச்.

உ. ஓர்த்தல் இத்தொழிற்பக்கம் உஅஉ: நி-ஆம் குறிப்புப்பார்க்க.

ங. வளையுதிர்தற்குக் கோடற்பூ உதிர்தல் உவமையாதலை, கலி. எ-ஆம் பாட்டின் கடி-சு. அடிகளின் குறிப்பாலுணர்க.

ச. "நொச்சிப் பாடோர்க்குஞ் செவி" என்பதன் விசேடவுரையில் 'நொச்சிப்பூ வீழுகின்ற ஓசையை.....கருதுஞ்செவி'என்று உரை

(பிரதிபேதம்) * கன்குளின், †தானிட்டு,‡முறைமையும்ற, ||என்னுள்.

கஉ இனையிரு ளிதுவென வேங்கிநின் வரனசைஇ
நினைதுய ருழப்பவள் *பாடில்கட் பழியுண்டோ
†வினையளென் றெடுத்தரற்று மயன்முன்னர் (க)நின்சூளைக்
கனைபெய னீலம்போற் கண்பனி கலுழ்பவால்

எ-து: இவ்வாறே ஒரு களவொழுக்கமுடையளென்று உயர்த்துக் கூப்பிடுகின்ற அயலார்முன்னே நின்னுடைய சூளையிடத்துச் செறிந்த மழையையேற்ற நீலம்போலே கண்கள் நீர் சொரிவனவாயிரா நின்றன; இங்ஙனமாதற்கு இது யாம் வருந்துதற்கு ஏதுவாகிய இருளென்றேங்கி நின் வருதற்றொழிலை நச்சி நினைத்தலாலுண்டான வருத்தத்திலே வருந்துகின்றவளுடைய துயிலில்லாத கண்ணிடத்து அவை நினக்குச்செய்த பழிகளுண்டோ? இல்லையே;‡எ-று.

கசு பன்னூனும் படாடப் (உ)பசலைபா யுணப்பட்டாள்
(ங)பொன்னுரை மணியன்ன மாமைக்கட் பழியுண்டோ
வின்னுரைச் (ஞ)செதும்பரற் றுஞ்செவ்வியு ணின்சோலை
மின்னுரு தளிரன்ன மெலிவுவந் தூரைப்பதால்

எ-து: நுரைகளையுடைய இனிய சின்னீர் வந்து ஆரவாரிக்கும் இளவேனிற்காலத்தே நின்னுடைய(ரு)சோலையில்ஒளிகெட்டதளிரையொத்த நிறக்கேடு வந்து பலர்க்குங் கூறுவதாயிரா நின்றது; இங்ஙனமாதற்குப் பன்னாளும் நினைவு வருத்துலகயிருலே பசலையாலே நுகரப்பட்டவளுடைய பொன்னை

யெழுதி, 'மனத்தின் வினையைச் செவிமேல் ஏற்றினர்; அது கருவியாக உணர்தல்நோக்கி'என இலக்கணமும் இவ்வுரையாசிரியரே எழுதியிருத்தல் ஈண்டறிதற்பாலது; கலி. சசு. கஉ - ங.

க. (அ) "கூடற் குடாஅது, பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய, வொடியா விழவி னெடியோன் குன்றத்து, வண்டுபட நீடிய குண்டு சுனை நீலத், தெதிர்மலர்ப் பிணைய லன்னவி, ளிருமதர் மழைக்கண்" (அகம். கசகூ. சச-கசு) என்பதும் (ஆ) இந்நூற்பக்கம் உஎசு: உ-ஆங் குறிப்பும் ஈண்டறிதற்பாலன.

உ. பசலையா லுணப்படல்: கலி. கஞ: கஙு.

ங. (அ) "மணிமிடை பொன்னின் மாமை" நற். ஙுசு: சு. (ஆ) "காசு நிழற் காட்டு மாசின் மாமை" பெருங். (க) சு: உஉ எ.

ஞ. (அ) "புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட' நாலடி. கஉஅ. (ஆ) "செதும்பற் றுமரைச் செவ்விதழ் போல" (இ) "செதும்புபரந் தெங்குஞ் சேற்றிழுக் குடைத்தாய்" (ஈ) "செருத்தற் றீம்பால் செதும்புபடப் பிலிற்றி" பெருங்:(க) சு: ஙுஙு; சகூ: உஅ, ககஉ.

ரு. "நீணிழற் றளிர்போல நிறனூழ்த்தல்" கலி. உ:ஞகஎ.

(பிரதிபேதம்) * பாடிலள்கட், † வினையருளென்,‡ என்னுள்.

யுரைத்தொரு மணியுண்டாயின் அதனையொத்த பசலை பாய்ந்த * மாமைநிறத் தின்கண் அது செய்து பழிகளுண்டோ ? இல்லையே; †எ-று.

எனவாங்கு; ‡அசை.

உக (க)பின்னீதல் வேண்டுநீ பிரிந்தோணட் பெணீவிப்
பூங்கண் படுதலு மஞ்சுவ லுங்கிய
(உ)வருந்துய ரவலந் தூக்கின்
(ங)மருங்கறி வாரா மலையினும் பெரிதே.

எ-து: அவள் அங்ஙனமான இடத்து அவள் பூப்போலுங் கண் பாடின் மையை நீவிப் படுதற்கும் யான் அஞ்சுவேன்; அதற்குக் காரணமென் னெனில், அத்துயிலிடை||நினைத்து வருந்தத்தக்க கனவாற் பின்னிட்டு நீங்கிய அரிய வருத்தத்தால் உற்ற கேட்டைத் தூக்கிப்பார்க்கில் அஃது எல்லையறிய வொண்ணுத மலையினும் பெரிதாயிராகின்றது; இனி இவ்வருத்தம் உரைதபடி நீ வரையாமற் பிரியப்பட்டாளோடு கொண்டவுறவு பின்னுதலே நீ கொடுத்தல் வேண்டும்; ÷எ-று.

"பின்னுதல் பின்னெனநின்றது. × பின்னியதொடர்[நிலை](நீவி)" (சு) என்றுரைப்பினுமாம். துயில்கொள்ளாமையைத் = துடைத்து என்க.

இதனால், தலைவற்கு அழிவு பிறந்தது.

இது தாயும் தோழியையும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்ற ஒத்தா ழிசைக்கலி. (கஉ)

(சஉ.) கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கிற் றுஞ்சும் யானை
நனவிற்றான் செய்தது மனத்த தாகலிற்
கனவிற் கண்டு கதுமென வெரீஇப்

க. "பின்னீதல் .....பெரிதே" என்பது துஞ்சிச்சோர்த லென்னும் மெய்ப்பாட்டிற்கு மேற்கோள்; தொல். மெய்ப். சூ. உங: பே.

உ. "அருந்துய ரவல்மொடு" தொல்.களவி.சூ. கக. நச். மேற். 'எண்ணியது'

ங. (அ) "வரையளந் தறியாப் பொன்படு கெடுங்கோட், டியையம்" புறம். ஙக: கசு - ஙி. (ஆ) "மலையே; அளக்க லாகாப் பெருமையு மருமையு, மருங்ககல முடைமையு மேறற் கருமையும், பொருத்தக்கூறுப" தொல். சிறப். நச். மேற். (இ) "அகலத் தெல்லையு மாழ்ச்சிய தத்தமு, முயர்பி னேக்கமு முணர்த்தற் காகா, விஞ்சையம் பெருமலை" பெருங்: (க)ஙக: சு - அ. (ஈ) "அளக்க லாகா வளவும் பொருளும் ..... மலைக்கே" நன்.

சு. கலி. ஙஇ: கஅ.

(பிரதிபேதம்) * மைம்மத்தின் †என்னுள் ‡ஆங்கு. அசை. || துயராகத்தனவாம் பின்னர்த்÷ என்னுள் × பின்னீதொடாநிலை = துடைத்து, இதனுற்றலையற்கு,

நி புதுவதாக மலர்ந்த வேங்கையை
யதுவென வுணர்ந்தத ணிநில முருக்கிப்
பேணு முன்பிற்றன் சினந்தணிந் தம்மரங்
காணும் பொழுதி லேக்கல் செல்லாது
நாணி யிறைஞ்சு நன்மலை நன்னுட;

கo போதெழின் மலருண்க ணிவண்மாட்டு நீயின்ன
காதலை யென்பதோ வினிதுமற் றின்னுதே
யின்னேருங் கண்ணுக விடிபென்னுப் பெயலென்னு
யின்னதோ ராரிடை யீங்குநீ வருவதை;

கச இன்புற வனித்தகை யிவண்மாட்டு நீயின்ன
வன்பினை யென்பதோ வினிதுமற் றின்னுதே
மணங்கமழ் மார்பினை மஞ்சிவ ரடுக்கட்போழ்ந்
தணங்குடை யாரிடை யீங்குநீ வருவதை;

கஅ இருளுற ழிருங்கூந்த லிவண்மாட்டு நீயின்ன
வருளினை யென்பதோ வினிதுமற் றின்னுதே
யொளிறுவேல் வலனேந்தி யொருவன்யா னென்னது
களிறியங் காரிடை யீங்குநீ வருவதை;

அதனால்;

உங இரவின் வார லேய விரவுவீ
யகலறை வரிக்குஞ் சாரற்
பகலும் பெறுவையிவ டடமென் றேளே.

இது *நீரிவ்வாறு வருகின்ற வாவு எமக்குத் துன்பத்திற்குக் காரண †மாகாநின்றதெனக் கூறி இரவுவருவானைத் தோழி பகல்‡வருகவென்றது.

• இதன்பொருள்.

(க)கொடிவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கிற் றுஞ்சும் (உ)யானை

க. யானை புலியைக்கொல்லுமென்பது இந்நூற்பக்கம், உடுக: க-ஆங் குறிப்பால் உணரலாகும்; கொன்று மலையிற் றுயிலுமென்பதை, கலி. சஉ: க - ஙு-ஆம் அடிகளால் உணர்க. 'கொடிவரி, பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; ஆகுபெயருமாம்' புறம். கஙடு.

உ. யானை வேங்கைமரத்தைச் சினங்கொண்டு சிதைக்கு மென்பதனை, (அ) "கதம்வாய் வேழ, மிருங்கேழ் வயப்புலி வெரீஇ யயலது, கருங்

(பிரதிபேதம்) * நீஇவ்வாறு. † ஆய்ன்றதென, ‡ வாவென்றது.

(க)நனவிற்றான் செய்தது மனத்த தாகலிற்
கனவிற் கண்டு கதுமென (உ)*வெரீஇப்
நி (ங)புதுவ தாக (ச)மலர்ந்த வேங்கையை
யதுவென†வுணர்ந்த னணிநல மூருக்கிப்

கால் வேங்கை யூறுபட மறலிப், பெருஞ்சினந் தணியுங் குன்ற நாட" நற். உகள: உ-நி. (ஆ) "மறப்புலிக் குழூஉக்குரல் செத்து வயக்களிறு, வரைசேர் பெழுந்த சுடர்வீ வேங்கைப், பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்ததன், மாயிருஞ் சென்னி யணிபெற மிலைச்சி" பதிற். சக: எ - கo. (இ)"உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக், கறுவு கொண் டதன்முதற் குத்திய மதயானை" கலி. நஅ: சு - எ. (ஈ) "புலிக்கேழ் வேங்கைப் பூஞ்சினை புலம்ப, முதல்பாய்ந் திட்ட முழுவலி யொருத்தல்" அகம். உஉ: அ - கூ. (உ)"உருமி ஞர்த்துடன் றெறிறெறு முழுவையோ டும்பல், பொருத முற்றெழில் கனவலிற் பொருக்கென வெழுந்தங், கருகு நின்றவொள் வீயிணர் வேங்கையை யலைக்கு, மருவு வெஞ்சின மூண்டெழி வருத்தறி யார்போல்" தணிகை. திருநாட்டு. சஉ. என்பவையும் வலியுறுத்தும்.

க. "நனவிலு னலம்வாட நலிதந்த நடுங்குதுயர், கனவிலு ழழிவுற்றுக் கங்குலு மாற்றுக்கால்" கலி. நிந: கஅ - கூ. என்பதும், "கவிர்தகை சிலம்பிற் றுஞ்சுங் கவரி, பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவு, மாரியர் துவன்றிய பேரிசை யிமையம்" (பதிற். கக: உக-ஙo) என்புழி 'அருவியொடு நரந்தங்கனவுமென்றது, அவ்வாரியரா னாயானேபிற விலங்கானும் மக்களானும் வருத்தமின்றிப் பகற்காலத்துத் தான் நுகர்ந்த அருவியையும் நரந்தத்தையுமே கனவினுங் காணுமென்ற வாறு' என எழுதியிருக்குமுரையும் இங்கே அறிதற்பாலன.

உ. யானை தன்னைத் தாக்கும் புலிக்கு வெருவுமென்பது: "பரியது கூர்ங் கோட்ட தாயினும் யானை, வெரூஉம் புலிதாக்கு மின்" குறள். நிகஙக.

ங. புதுமையென்னும்பண்படியாகப்பிறந்த புதிதென்னுஞ்சொல் வழக்கி லுள்ளது. அஃதன்றியும் 'புதுவது' என்று வருதலே. மலை. உஅ; கலி. உஉ: ச, உச: ச, சங: க, கஉஅ எ; அகம். உடு: நி, உஉக: நி, நடுஉ: கசு; புறம். சஉ : சு, எசு : உ; சீலப். ங.o : கசo; சீவக. கஙசங; பெருங். (உ) உ: கசுஎ, எ: கசுங, (ச) ச: கoநி; பாகவதம். (கo) அக்குரூரன். ங.o. இவற்றில் வந்திருத்தலாலறிக. முதுமையென்னுஞ் சொல்லடியாக முதுவது என்று ஒருசொல், அருகிவருகின்றது.

ச. மலர்ந்த வேங்கைமரம் புலிபோற்றோன்றுமென்பது இந்நூற்பக்கம் உoக: உ, (இ - ஃ) குறிப்பால் உணரலாகும்.

(பிரதிபேதம்) *வெறீஇ, †உணர்ந்ததன்.

பேணு முன்பிற்றன் (க)சினந்தணிந் தம்மரங்
காணும் பொழுதி னேக்கல் செல்லாது
(உ)காணி யிறைஞ்சு நன்மலை நன்னுட

எ - து: வளைந்தவரியினையுடைய புலி வந்து போர்செய்கையினாலே அதனை வென்ற வருத்தத்தோடே நெடிய மலையிடத்தே துயில்கொள்ளும் யானை மெய்யானகாலத்தே தான் பொருதுவென்றது மனத்திடத்தேயிடக்கை யாலே*அதனைப் பெரியான காலத்தே கண்டு கடகவெருவி எழுந்திருந்து புதிதாக மலர்ந்துநின்ற வேங்கைமரத்தைப் புலியென்றுணர்ந்து அம்மரத்தி னுடைய அழகிய நலத்தைக் கெடுத்துத் தன் வலியினாற் பேணுத சினம் மாறி அவ்வேங்கையைக் காணுங்காலத்து அதனைப்பார்த்தலைச் செய்யாமல் நாணிக் கவிழ்ந்துபோன நன்றாகிய மலைநாடனே ! எ - று.

புலியினைவென்று துயிலும் யானை அயலார்கூறிய அலரைச் சுற்றத் தார்க்குப் பொய்யெனத் தேற்றி மனைக்கட்டுயில்கின்றதலைவியாகவும், கனவிற் கண்டு வெருவினதன்மை அத்தலைவி நனவில் தான் அங்ஙனஞ் செய்த தெல்லாம்†தன்மனத்ததாகலின் அச்செயலைக்கனவினுங்கண்டுஅவன்வெருவின தன்மையாகவும், வேங்கையை நலங்கெடுத்தமை தோழி அவனது களவொழுக் கத்திற்குஉடம்பட்டுக்கொடுமைசெய்து ஒழுகுகின்றாளென்று தலைவிதோழியை வருத்தியதாகவும், அது சினந்தணிந்தன்மை தோழிகருத்தறியாமல் அவளைக் கொடுமைகூறினேமென்று தலைவி உட்கொண்டதன்மையாகவும், அஃது அதனைநோக்காது இறைஞ்சுகின்றதன்மை யாரும் இவள் வருந்த இங்ஙனங் கூறினேமென்று எதிர்முகமாக மகிழ்ந்து நோக்காது தலைவி நாணி இறைஞ்சியிருக்கின்றதன்மையாகவும் உள்ளுறையுவமங்கொள்க. இது வினையுவமப் போலி.

கo போதெழின் மலருண்க ணிவண்மாட்டு நீயின்ன
காதலை யென்பதா (ங)வினிதுமற் றின்னதே
மின்னேரு நுண்ணுக(ச)லிடியென்னுப் பெயலென்னு
யின்னமே ராரிடை யீங்குநீ வருவதை

க. "வரிவுயம் பொருத வயக்களிறு போல, வின்னு மாறுது னினனே" (புறம். கoo: எ - அ.) என்பதனுல், சினந்தணிதல் அருமையென்று இங்ஙனங் கூறினர்.

உ. காணி யிறைஞ்சுதல் குறள். கoகூ, கoகங. பரிமேலழக ருரை.

ங. "இனிதுமற் றின்னதே" கலி. அo: கடி.

ச. (அ) "நினைத்தொறுங் கலுழுமா லிவளே கங்குல்.....களிறும், வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத், திருமுஞ் சுரும்..... சூழுமலை விடாக முடையவா லெனவே" (குறிஞ்சி. உடுக - உசுக.) (ஆ) "தலைமகன் இரவுக்குறி ஒழுகாநின்ற நிலைமைக்கண், 'எம்பெரு மான் வரும்வழி..... வெண்கோட்டி யானையும்.....உருமும்.....

(பிரதிபேதம்)* இதனை, †தன்மத்ததாகிலெனச்செயினை.

எ – து: (க) அலரும் பருவத்ததாய் அழகினையுடைத்தாகிய மலர்போலும் மையுண்கண்ணினையுடைய இவளிடத்து நீ இன்றியமையாதகாதலையுடையை யென்று கூறுகின்ற வார்த்தையோ இனிது;*ஃஃதொழிய வழியை ஆராய்ந்து பார்க்குங் கண் மின்னுக இடியென்று கருதாயாய் மழையென்று கருதாயாய் இப்பெற்றித்தானதோர் அரிய வழியிலே இவ்விடத் தேற நீ வருகின்றநிலைமை எமக்கு இன்னாது; எ – று.

சஅ இன்புற வளித்தனை யிவண் மாட்டு நீயின்ன
வன்பினை யென்பதோ வினிதுமற் றின்னுமே
மணங்கமழ் மார்பினை (உ)மஞ்சிவ ரடுக்கம்போழ்ந்
(ங)தணங்குடை யாரிடை யீங்குநீ வருவதை

எ-து: இவள் இன்புறும்படி அளித்தாயாகையினாலே இவளிடத்து நீ இன்றியமையாத அன்பினையுடையையென்று கூறுகின்ற வார்த்தையோ இனிது, அஃதொழிய மணம் நாறுகின்ற மார்பினையுடையையாய் மஞ்சு பரக்கின்ற மலைமலையை ஊடறுத்து, (ச)சூரமகளிரையுடைய அரிய வழியிலே இவ்விடத்தேற நீ வருகின்ற நிலைமை எமக்கு இன்னாது; எ – று.

வரையரமகளிருமுடைத்து; மற்றும் தெய்வங்கள்வெளவும்வண்ணத்தன; எதம் நிகழ்வதுகொல்லோ' எனவேறுபடும்" (இறை. சூ. உசு. உரை) என்பவை இத்தாழிசைகளுடன் ஒப்புநோக்கற்பாலன.

க. "காலை யருமபிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்" குறள். கஉஉ. என்பதனுல் போதென்பதன் பொருளைத்தெளிக.

உ. இந்நூற்பக்கம் உசஞ: உ-ஆங் குறிப்புப்பார்க்க.

ங. (அ) "அணங்குடை நெடுவரை" அகம் உஉ: க. (ஆ) "அணங்குடை நெடுங்கோடு" புறம். ருஉ: க.

ச. (அ) "சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச,சூரர மகளிர் ரடுஞ்சோலை" முருகு. சo-சக. (ஆ) "அருவியான்ற பெருவரை மருங்கிற், சுர்ச்சுனை தழைஇ" (இ) "அணங்குடைச் சிலம்பிற், கவிரம் பேரிய வருகெழு கவாஅ, னேர்மலர் நிறைசுனை யுறையுஞ், சூர்மகண் மாதோ வென்னு மென்னெஞ்சே" (ஈ) "சூர்புக னனக்தலை, மாயிருங்கொல்லி" அகம். கூக; ங – ச, ககூஅ: கச-எ, நoஙூ: நி – சு. (உ) "வரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலீயோ" யா – வி. சூ. எசு. மேற்கோள். என்பவையும் (ஊ) "சூரர மகளிரி னின்ற மேம்பற், றியாரை யோவெம் மணங்கியோ யுண்கென" அகம். நஉ:எ-அ. என்பதும்அதன்குறிப்பில், 'சூரமகளிரைப்போல வென்றான் தன்னை வருத்துதலான்' என்று விளக்கியிருத்தலும் ஈண்டுநினைத்தற்பாலன.

(பிரதிபேதம்) * இதனினொழிய.

கஅ (க)இருளுற ழிருங்கூந்த லிவண்மாட்டு நீயின்ன
வருளினை யென்பதோ வினிதுமற் றின்னதே.
ஒளிறுவேல் வலனேந்தி யொருவன்யா னென்னுது
(உ)களிறியங் காரிடை பீங்குநீ வருவண்ண

எ – து: இருளோடே மாறுபடுகின்ற கரிய கூந்தலையுடைய இவளிடத்து நீ இன்றியமையாத *அருளினையுடையையென்று கூறுகின்ற வார்த்தையோ இனிது, அஃதொழிய விளங்குகின்ற (உ)வேலை வலக்கையிலே எடுத்து யான் ஒருவனென்று கருதாதே யானை உலாவுகின்ற அரிய வழியிலே இவ்விடத்தே நீ வருகின்ற நிலைமை எமக்கு இன்னாது; எ – று.

ஒருவனென்றது இவ்வுலகத்திற்குத் தலைவனென்றது.

அதனால், அசை.

உங (ச)இரவின் வார *லைய விரவுவீ
பகலறை †வரிக்குஞ் சாரற்
(ரு)பகலும் ‡பெறுவையிவ ளடமென் றேளே

எ – து: அவ்வின்னுமையால் எமக்குத் துன்பம் வருதலின், ||ஐயனே! இராக்காலத்து வாராதேகொள்; இவளுடைய பெருமையையுடைய மெல்லிய தோள்களை விரவிய பூக்கள் அகன்ற பாறைமிசை கோலஞ்செய்யும் மலைச்சாரலிடத்தே பகற்காலத்தும் பெறுவை; —எ – று.

இதனால், தலைவற்குச் ×சூழ்ச்சி பிறந்தது.

இது தரவிற் குறைந்த சுரிதகம்பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கங)

க. (அ) "இருளுற ழிருங்கூந்தன் மகளிர்" (ஆ) "இருளுறழ் கூந்தலாள்" கலி. கஉஉ: கஉ, கசo: ஙங.

உ. (அ) "வான்றோய் வெற்ப சான்றோ யல்லையெ, காமங் கனிவ தூபினும் யாமத், திரும்புலி தொலைத்த பெருங்கை யானை, வெஞ்சின வருமி னுரறு, மஞ்சுவரு சிறுநெறி வருதலானே" நற். ஙடுங: எ-கக. (ஆ) "கடுங்களிறு விட்டுழிச் செல்லார்" சிறுபஞ்ச. அo.

ங. "யானையோ துங்கைவே லஞ்சு" யா – வி. சூ. எகூ. மேற்.

ச. "இரவின் வார லைய..... மென்றோளே" என்பது தோழி பகற்குறி நேர்வாள்போல இரவுக்குறி விலக்கியதற்கும் (தொல். கள. சூ. உங. நச்.) கிழவோன் றன்னை வாரலென்றதற்கும் (தொல்.பொருளி. சூ. ககூ. நச்) மேற்கோள்.

ஞ. காலமென்னு மூறுப்பிற்கு, "பகலும் பெறுவையிவடடமென்றோளே" என்பதை மேற்கோள்காட்டி இஃதெதிர்காலமென்பர், பே; நச். இருவரும்; தொல். செய். சூ. உoஉ.

(பிரதிபேதம்) * ஐய, † விரிக்கும், ‡ பெறுகுவை. ||ஐயென , இரா்க், ஐயஇனி இராக், ÷ என்று இரவுவருவானைத்தோழி பகல் வாவென்றாள். × சூட்சி.

(நு0.) வாங்குகோ னெல்லொடு வாங்கி வருவைகன்
மூங்கின் மிசைந்த முழந்தா ளிரும்பிடி
தூங்கில் வாழை நளிபுக்கு ஞாங்கர்
வருடை மடமறி யூர்விடைத் துஞ்சு
மிருடூங்கு சோலை யிலங்குநீர் வெற்ப;

சு அரவின் பொறியு மணங்கும் புணர்ந்த
வுரவுவின் மேலசைத்த கையை யொராங்கு
நிரைவளை முன்கையென் ரோழியை நோக்கிப்
படிகிளி பாயும் பசுங்குர லேனல்

கo கடிதன் மறப்பித்தா யாயி னினிநீ
நெடிதுள்ள லோம்புதல் வேண்டு மிவளே
பல்கோட் பலவின் பயிர்ப்புறு தீங்கனி
யல்கறைக் கொண்டீ ணமலைச் சிறுகுடி
நல்கூர்ந்தார் செல்வ மகள்;

கஞ நீயே, வளியி னிகன்மிகுந் தேருங் களிறுங்
தளியிற் சிறந்தீன வந்த புலவர்க்
களியொடு கைதூ வலை;

அதனால்;

கசு கடுமா கடவுறாஉங் கோல்போ லெனைத்துங்
கொடுமையிலை யாவ தறிந்து மடுப்பல்
வழைவளர் சாரல் வருடை நன்மான்
குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி
யுழையிற் பிரியிற் பிரியு
மிழைபணி யல்குலென் ரோழியது கவினே

இது "புணர்நீதபின் அவன்வயின் வணங்கற்கண்" (க) தோழிகூறியது. அது தோழியிற்கூடடம் நிகழ்ந்தபின் முற்காலத்துப் பணிந்து பின்னின் றேனைத் தோழி தானே பணிந்தோழுதலாம்.

இதன் பொருள்.

வாங்குகோ னெல்லொடு வாங்கி வருவைகன்
(உ)மூங்கின் மிசைந்த(ங)முழந்தா ளிரும்பிடி

க. தோல். கள. சூ. உங.

உ. மிசைதல் தின்றலென்னும் ஒருவினைப் பொருளில் வந்ததற்கு இவ்வடி மேற்கோள். தோல். கினவி. சூ சசு. நச். பெரும்பா. உசுஉ.

ங. "முழந்தா ளிரும்பிடி" குறுநீ. நகச.

(க)தூங்கிலை வாழை *நளிபுக்கு ஞாங்கர்
(உ)வருடை மடமறி†யூர்விடைத் துஞ்சு
(ங)மிருங்கு சோலை யிலங்குநீர் வெற்ப

எ-து: தானே வளைகின்ற (சு)மூங்கிலின்கோலை நெல்லுடனே வளைத்துத் தின்கின்ற முழங்காலையுடைய கரிய பிடி ‡அம்மலைக்கட் செறிந்த இலையினையுடைய வாழைசெறிந்த இடத்தே||புகுந்து, அங்கண் வருடைமானினது மடப்பத்தையுடைய மறிபரந்துதிரிகின்ற இடத்தே,ஞாயிறுதோன்றுகின்ற விடியற்காலத்தே, துயில்கொள்ளும் இருள்செறியுஞ் சோலையினையும் விளங்குகின்ற நீரினையுமுடைய வெற்பனே; எ - று.

க. (அ) "தலையிலை வாழை" ஐங். சுசு0. (ஆ) "அல்லிலை வாழை" பெருங். (க) சு0: கஉ.

உ. வருடை, மலையில்வாழும் விலங்கு; இது: (அ) "மழையாடு மெய மால்வரைக் கவாஅன், வரையாடு வருடை" பட்டினப். கஙஅ - கூ. (ஆ) "கருங்கலை, கடும்பாட்டு வருடையொடு தாவண வுகளும், பெருவரை" (இ) "அவன்மலைப், போருடை வருடையும் பாயாச், சூருடை யடுக்கத்த" நற். ககசு: சு - அ, நூடுகூ: எ - கூ. (ஈ) "நெடுவரை மிசை யது குறுங்கால் வருடை" ஐங்குறு. உஅஎ. (உ)"வரைவாழ் வருடைக், கோடுமூற் றிளந்தகர்" அகம். நூஎஅ: சு - எ. (ஊ)"வரைபாய்வருடை" என்பவற்றாலும் அறியலாகும். இது முதுகிடத்தே காலியுடையதென நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். கவையடியை யுடையதென்பர் கூர்ம புராணமுடையார். இதன் குழவி மறியென்றும் கூறப்படுதல் "செவ்வரைச் சேக்கை வருடை மான்மறி" குறுந். கஅஎ. என்பதனாலு முணரலாகும். எண்கால் வருடையென்பதும் இதுவேபோலும்.

கூ. "வெயிலொளி யறியாத விரிமலர்த் தண்கா" (கலி. நூ0: எ) என்பதும் அதனடிக்குறிப்புக்களும் இங்கு ஒப்புநோக்கற்பாலன.

சு. யானை மூங்கின் மிஞ்சுதல்: (அ) "நெற்கொ ணெடுவெதிர்க் கணங்த யானை" குறிஞ்சி. நூநு. (ஆ) "இருவெதி ரீன்ற வேற்றலைக் கொழு மூளை, சுன்முதிர் மடப்பிடி நாண்மேய லாரு, மலை" நற். ககசு: சு-சு. (இ) "பசுங்கழை தின்ற கயவாய்ப், பேதை யானைசுவைத்த, கூழை மூங்கில்" குறுந். களகூ.(ஈ) "மழகளிறு மிகிஇத்தன், காண்முளை மூங்கிற் கவர்கிளை" பதிற். அசு: கக - உ. (உ) "பைங்கண் யானை, முற்ற மூங்கின் முளைதரு பூட்டும்" (ஊ) "முளைமெய் பெருங்களிறு" (எ) "முளைவளர் முதல மூங்கின் முருக்கிச், கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை" அகம். அநி: எ-அ, கசஅ: கஙு, நூஉ: க-உ; (ஏ) "கழைதின் யானை" (ஐ) "பசித்துப்பிணமுயலும் யானைபோல" புறம்: எசு: கூ. அ0: எ. என்பவற்றால் அறியலாகும். இதனால், தோழையென்றுஞ் சொல்லப்படும்.

(பிரதிபேதம்) * நனிபுக்கு. †ஊரிடை, ‡அம்மலைக்குச், ||புகும்வருடை,

மூங்கில் மிசைந்தபிடி தம்மிடத்துத்தாழ்ந்த அரியதலைவனை அன்புடனே பெற்று நுகர்ந்த தலைவியாகவும், பின்னர் அது வாழைச்செறிவிலே புகுந்து அப்பழத்தை நுகர்ந்ததன்மை அவன் வரைந்து கொண்டெழி அவன் மனைக்கண் கலிவற இருந்து அவனை நுகர்ந்தாகவும், புலிமுதலியனவின்றிமறியூரிடத்துத் துயிலுதல் அலர்கூறுவாரின்றி அவன் சுற்றத்திடை இல்லறம் நிகழ்த்தித் தங்குந் தன்மையாகவும் உள்ளுறையுவமங் கொள்க. இது *வினையுவமப்போலி.

சூ (க)அரவின் பொறியு (உ)மணங்கும் புணர்ந்த
வரவுவின் †மேலசைதந்த கையை யொராங்கு
நிரைவளை முன்கையென் ‡றோழியை நோக்கிப்
(ங)‖படிகிளி பாயும் (ச)÷பசுங்குர லேனல்

க. (அ) "புணர்ந்தபி னவன்வயின் வணங்கற் கண்ணும்" என்பதற்கு, 'மேற்சொல்லப்பட்ட மூவகையாலும் புணர்ச்சியுண்மை பொருந்திய பின் தலைவன்கட் டாழநிற்றற் கண்ணும்' என்று பொருள்கூறி "அது நீ கருதியதுமுடிக்கத்பாலை யெனவும் நீ இவளைப் பாதுகாத்தல் வேண்டுமெனவும் இவ்வகை கூறுதல்" என்று விளக்கி, "அரவின் பொறியும் .. . . . .ஓம்புதல் வேண்டுமெனவும், கடுமா கடவுமாஉங ... ..கவினே யெனவும் வரும்" என்பர் இளம். (ஆ) நச்சினார்க்கினியரும் இதனையே தழுவுவர். தொல். களவு. உஉ.

(இ) "அரவுற ழுஞ்சிலை" குறிஞ்சி. கடுஅ. (ஈ) "யரவின்றோற்றமே போலும் சிலைகளும்" சீவக. உகடுஅ. என வில்லுக்கு அரவு உவமமாய் வருதலும் காண்க.

உ. (அ) "அழகிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேல்" (ஆ) "உரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவேல்" சிறுபாண். கூச, கஉஉ; என்பவற்றி னுரையாலும், (இ) "வென்றிமங்கை வேடர்வில்லின் மீதுமேவு பாதம்" பெரிய. கண்ணப்ப. கூக என்பதனாலும், படைக்கலங்களில் கொற்றவை யுறைவதாகக் கூறுதல் மரபென்று அறியப்படுதலின் இங்கும் 'அணங்கு' என்பதற்குக் கொற்றவை என்று பொருள் கொள்ளலுமாம்.

ங. "படிகிளி . . . . .வேண்டும்" என்பது குற்றியலுகர ஒற்றுவேண்டு சாரையானதற்கு மேற். தொல். செய். சூ கூ. 'குற்றியல்' இளம்.

ச. எனல் பசுத்தினையாதலின்: "பசுங்குரலேனல்" என்றார். இதனை (அ) "அமைந்த. கிவட்காயிற் செந்தினைகா ரேனல்" (திணைமாலை. அ) என்பதும் (ஆ) எனலென்பதற்குப் பசுந்தினையென்று (ஐந் - ஐம். கஉ.) உரை யெழுதப்பெற்றிருப்பதும் வலியுறுத்தும்.

(பிரதிபேதம்) * உவமப்போலி அரவின். † மேலசைஇய. ‡ தோழி நெறிநோக்கி. ‖ படிகிளி. ÷ பைங்குரல்.

*கடிதன் மறப்பித்தா யாயி னினிநீ
நெடிதுள்ள லோம்புதல் வேண்டு மிவளே
(ந)பல்கோட் பலவின் †பயிர்ப்புற (உ)தீங்கனி
யல்கறைக் ‡கொண்டீ ணமலைச் (ஙு)சிறுகுடி
(சு)நல்கூர்ந்தார் செல்வ மகள்

எ-து:(நு)பாம்பின்பொறிபோலும் பொறிகளும் பகைவரை வருத்துதலும் கூடினவலியினையுடைய வில்லின்மேலேவைத்த கையினையுடையையாய்நின்று நிரைத்த வளையணிந்த முன்கையையுடைய என் றோழியைக் காமக்குறிப்பு அவட்கு நிகழும்படி நோக்கி, படிகின்ற(சூ)கிளிகள் பரக்கும் பசிய கதிரை

க. (அ) "முழவொ டாகுளி .. .. ..பதலையும் பிறவும், கார்கோட் பலவின் வாய்த்துணர் கடுப்ப, நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்" (ஆ) "தீழு மேலுங் கார்வாய்த் தெதிரிச், சுரஞ்செல் கோடியர் முழவிற் றூங்கி, முரஞ்சுகொண் டிறைஞ்சின வுலகுகுநினைப் பலவே" மலை. ஙு-கஙு, கசஉ - ச. (இ) "செவ்வேர், சினைதொறுந் தூங்கும் பயங்கெழு பலவின்" நற். எஎ: ச - நி. (ஈ) "வேரு முதலுங் கோடு மோராங்குத், தொடுத்த போலத் தூங்குபு தொடரிக், கீழ்தாழ் வன்ன வீழ்கோட் பலவின்" தூறு. உநிஎ.

உ. (அ) "பழமீக் கூறும் பலாஅப் போல" பெரும்பாண். சஅ. என்பத னுரையில் 'பழத்தின் இனிமையால் மேலாகச்சொல்லும பலாமரத்தை யொக்க' வென்று இவ்வெழுதி யிருத்தலும் (ஆ) "செங்காற் பலவின்றீம் பழம்" நற். உஙஉ. நி. (இ) "தீமபழப் பலவின்சுளை" அகம். கஅஉ: ஙு. (ஈ)"தீஞ்சுளைப் பலவின் பழம்"புறம். கஅங: நி. எனவருதலும் காண்க.

ங. "சிறுகுடியீரே" கலி. ஙுங: கக.

சு. (அ) "நல்கூர்ந்தார் செல்வமகள்" கலி. நிசு: கஉ. (ஆ) "தம்பொரு ளென்பதம் மக்கள்" குறள. சுஙு. (இ) "பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற், றென்னுடைய ரேனு மூடையரோ - வின்னடிசில், புக்களையுந் தாமதைக்கைப் பூநாறுஞ்செய்யவாய், மக்களையு மில்லா தவர்" நள. கலிதொடர். சுசு. (ஈ) "மக்களைப் பெறுத லில்லா வறுமையொன் றுற்றாலு மன்னன்" விநாயக. பிந்தியமயூரேசர். ஙு.

ஙி. "பைத்தபாமபின் றுத்தியேய்ப்பக், கைக்கசடிருந்த .....டாரி" பொருந. சுஙு-எ0. எனஅரவின்பொறி நடாரிக்குக் கூறுதலுங் காண்க.

சு. தினைகவர்க் கிளிவந்தலீழ்தலும் அவற்றைக கொடிச்சியர்கடிதலும்: (அ) "நற்கோட் சிறுதினைப் படுபு ளோப்பி, யெற்பட வருகிய ரெனநீ விடுத்தலிற் .. ..தழலுந் தட்டையுங் குளிரும் பிறவுங், கிளிகடி மரபின வூழுழ் வாங்கி .. ..கிள்ளை யோப்பியும்" தூறிஞ்சி.

(பிரதிபேதம்) * கடிதின், † பயிறபுறு, ‡ கொண்டுணமலை.

யுடைய புனத்திற் கிளியைக் கடிதலை ஒருபடிப்பட மறப்பித்து,நின்வயத்தா னாக்கியே விட்டாயாயின், இனி நீ*இடையிடாது நினைத்தலைப் பாதுகாத்தலை இவள் விரும்பும்; இவள் பல குலைகளையுடைய †பலாவினது பிசினையுடைத் தாகிய இடத்தையுடைய இனிய பழம் வீழ்ந்துகிடந்த பாறையிடத்தே எடுத்துக்கொண்டு உண்ணும் ஊணினையும் பெருஞ்சோற்றுத் திரளையுமுடைய சிறிய குடிவிலிருக்கும் பிள்ளையான் மிடிப்பட்டாருடைய செல்வத்தையுடைய மகள்; ஆதலான் நின்னைப் பிரிந்து வருந்துதலாற்றாள்; எ-று.

கூஅ - கoக, (ஆ) "தேம்பரி சாரற் சிறுதினைப் பெருங்குரல், செவ் வாய்ப் பைங்கிளி கவர நீமற, றெவ்வாய்ச் சென்றனை யவணெனக் கூறி, யன்னை யாஞள் கழற". (இ) "துய்த்தலைப் புனிற்றுக்குரல் பால்வார் பிறைஞ்சித், தோடலைக் கொண்டன வேன லென்னு, துறு கன் மீமிசைக் குறவன் குழீஇச், செவ்வாய்ப் பாசினங் கவருமின் றவ்வாய்த், தட்டையும் புடைத்தனை கவ்வையுந் தொடுக்கென, வெங் கைவந் தூரைத்தன ளுக", (ஈ) "வா ன் மென்றினைப் புலவுக்குரன் மாந்திச், சாரல் வரைய கிளையுடன் குழீஇ, வளியெறி வயிரிற் கிளி விளி பயிற்று, ளளியிருஞ் சிலம்பி னன்மலை நாடன்", (உ) "தந்தை வித்திய மென்றினை பைபய, சிறுகிளி கடிதல் பிறக்கியா வுண்டோ, குளிர்படு கையள் கொடிச்சி செல்கென". (ஊ) "பைந்தினை, பவளச் செவ்வாய்ப் பைங்கிளி கவ்வரும்", (எ) "பைந்தாட் செந்தினை, வரை யோன் வண்மை போலப் பலவுடன், கிளையோ டுண்ணும் வள்ளவாய்ப் பாசினம்", நூ. கசஎ: உ - ரி, உoசு: க - சூ, நுoச: க - ச, நுoசு: க - சூ, நுகஎ: நு - ச. நுஎசு: உ - ச. (ஏ) "பொன்போற் சிறுதினைக், கிளிகுறைத் துண்ட கூளை பருவி", (ஐ) "செந்தினை .. ..பைங் குரற்,படுகிளி கடிகஞ் சேறும்".(ஏ)"எனை,படுகிளி கடியுங் கொடிச்சி" (ஏ) "பெருங்குர லேன, லுணகிளி கடியுங கொடிச்சிகைக் குரிமே" தூஉநீ. கங்கூ, ககூஅ, உகூக, நுகூo. (ஔ) "சாயற் புறத்த பெருங்குரற் சிறுதினைப், பெரும மழைக்கட் கொடிச்சி கடியவுஞ், சோலைச் சிறுகிளி யுண்ணுநாட" (ஃ) "வன்கட் கானவன் மென் சொன் மடமகள், புனபுல மயகுந் துழுத வேனற், பைம்புறச் சிறு கிளி கடியு நாட" (அஅ) "தினையாய கிள்ளை" (ஆஆ) "மெல்லியற் கொடிச்சி காப்பப், பல்குர லேனற் பாத்தருங் கிளியே" (இஇ) "கொ டிச்சி யின்குரல் கிளிசெத் தகிக்கத்துப், பைங்குர லேனற் படர்த்தரு கிளியெனக், காவலுங் கடியுநர் போல்வர்" ஐங்குறு. உஅஉ, உஅங, உஅஎ, உஅஅ, உஅக. (ஈஈ) "சிறுதினைப் படுகிளி கடியர் பன்மாண, குளிர்கொ டட்டை மதனில புடையா" (உஉ) "தழலை வாங்கியுத் தட்டை யோப்பியு,..... .. .. ..குமகள் காக்கு மேனல்" (ஊஊ) "பெருங்குர லேனல, கிளிபட வினைந்தமை யறிந்துஞ் செல்கென்,

(பிரதிபேதம்) * இடையிடுதி, † பலாவின் பினை,

இவளென்றது, படர்க்கையை முன்னிலையாகக் கூறியது, "ஊண்சோற்றமலே பாண்கடும் பருத்தும்" (க)என்றார் பிறரும்.

கடி நீயே, (உ)†வளியினியன்மிருந் தேருங் களிறுங்
தளியிற் சிறந்தனை வந்த ‡புலவர்க்
களியொடு (ஈ)கைதூ வலே
அதனால்

ஈசு கடுமா கடவுறூஉங் கோல்போ லெனைத்துங்
கொடுமையிலே யாவ தறிந்து (ஓ)மடிப்பல்

நம்மவண் விடுநர் போலாள் தைம்மிகச், சில்சுணங்கணிந்த செறிந்து வீங் இளமுலை, மெல்லிய லொலிவருங் கதுப்பொடு, பல்கா லெனக்கு மறனில் யாயே" அகம். ஈஉ: நி – சு, கஅஅ: கக – ங, ஈஐஉ: கo-கஅ. (எஎ) "சூழ்கினி சுமக்கலாற்று, மாலேயந் தினைகள் காய்க்கும் வண் புனம்" சீவக. கஉஈஉ. (ஏஎ) "வேயோங்கு சாரல் வினைபுனங் காவல் கொண், டாயோ வெனமொழியு மம்மழலே யின்னிசையாற், போ யோங்குபுனஞ்சோலை வாழும் புனக்கிளிகண், மாயோன்மடந்தைமார் கூவி மகிழ்விப்பார்" சூளா. சுயம்வர. கoச (ஐஐ) "தட்டை குளிர் தழலைத் தாங்கித் தினைப்புனத்தைக், கிட்ட லுறுவண்ணங் கிளிமுதற் புள் ளோட்டினளே" கந்த. வள்ளி. ருஉ.

க. புறம். ஙஈ: கச.

உ. "கால் கிளர்ந்தன்ன வூர்தி" (பதிற். 'இருங்கண்ண') (ஆ) "காலுறழ் கடுந் திணைடோர்"(கலி.ஙஈ:ஙக.)(இ)"காலிய னெடுந்தேர்" (தமிழ்நெறி. மேற்கோள்.) எனவும். (ஈ) கால்கிளர்ந் தன்ன வேழம்" (முருகு. அஉ.) (உ) "காற்றி னிமிர்ந்த செலவிற்றுய்..... .களிறு" (முதுதோள்.) (ஊ) "காற்றென .. .. .தோன்றிய தடலருங் கடாக்களிறு" (எ)"காற்றெனக் ..... .குஞ்சரங் கொண்டுப்க்கானோ" (சீவக. கூளஙஈ.கஅஙஎ)(ஏ) "காற்றன்றேற் கடுமை யென்னும் . ..... .மத்த யானை" (கம்ப. அதிகாயன் உகசு.)(ஐ) "பாகன், காற்றென . ..... .தூண்டினன் குவலயா பீடம்" (பாகவதம். (கo) கஞ்சனைக்கொன்ற. கச)எனவும் தேருக்கும் யானைக்கும் வளி உவமையாய்வருதல் காண்க.

ஙஈ. (அ) "விருந்தொடு கைதூவா வெம்மை மு ன்னாய்" (ஆ) "ஊணெலி யாவமொடு கைதூவாளே" (இ) "கள்விலே யாட்டியுங் கைதூ வாளே" (ஈ) "கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும், பெருமைபிற் பீடுடையதில்" (உ) "கரும மறுத்த கைதூ வமையத்து."

ச. "முந்தி" என்பதற்குக் கொடுப்பவும் அடுப்பவுமின்றித் தானே முந் பட்டு என்று எழுதியிருக்கும் அரும்பதவுரைக் குறிப்பு ஈண்டறிதற் பாலது. சீலப். உச' ஙக.

(பிரதிபேதம்) *ஊண்சோற்றமலே.†வளியினிகன், ‡ புலையற்கு

(ங)வழைவளர் சாரல் *வருடை நன்மான்
குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி
யுழையிற் பிரியிற் பிரியு
மிழையணி யல்குலெண் ணேழியது கவினே.

எ-து. நீ காற்றினுங்காட்டிற் †போதற் ரொழிலிலே மிக்குச்செல்லுங் (உ) தேரையுங் களிற்றையும் நின்பால்வந்த புலவர்க்குக் கொடுத்தலாற்கை யொழிந்திருத்தலிலையாய்(ஙு)மழையினும்அருள்சிறந்தாய்;ஆகையிலுலேயானும் சுரபுன்னை வளர்ந்த மலைச்சாரலிற் றிரியும் வருடையாகிய கல்ல மானின் மறி யை வளர்ப்பாரைப்போலே ‡முன்னர் நீங்காமற் பாராட்டி, அவளிடத்து இன்றும் பிரிவையாயின் மேகலையணிந்த அல்குலையுடைய என்ரேழியது கவி னும் நீங்கும்; அதற்காகக், கடிதாகிய யாவைப் பின்னுங்கடிதாகச் செலுத்துந் ‖தாற்றுக்கோல்போலே சிறிதுங் கொடுமையையுடையையல்லையாந் தன்மை அறிந்திருந்தும் அவளை நின்னிடத்தே சேர்த்துவேன்; ×எ-று.

இதனால், தலைவற்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது ÷தரவும் வெண்பாட்டொன்றும் அதன் பின்னர் ஐஞ்சீர் அடுக்கிய குறளெண்பாட்டொன்றும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்ற கலிவெண் பாட்டு. (கூ)

க. "வழையமை நறுஞ்சாரல்" கலி. நிங: க. என்பதும் அதன்குறிப்பும் பார்க்க.

உ. பரிசிலர்க்குத் தேரும் யானையுங் கொடுத்தல் மரபென்பது (அ) "உயர்மருப்பியானை .... பரிசிலர்க் கீய.வரவு வேற்காளையு கைதா வானே" புறம். ஙகூ.(ஆ)"சிறுகண யானையொடு பெருந்தே ரெய்தி யாமவ ணின்றும் வருதும்" சிறுபாண். கசஉ - ஙு. (இ) "நாளீண்டிய நல்லகவர்க்குத், தேமே.றடு மாசிதறி" மது. உஉங - ச. (ஈ) "களிறுந் தேரும், வயிரியர் கண்ணுளர்க் கோம்பாது வீசி" (உ) "களிறு கலி மான் றேரொடு சுரந்து, நன்கல னீயு ளகைசீர லிருக்கை" பதிற். உ0: கடி- சு. 'வந்தனென்' (ஊ) "தேரோ டொளிறுமருப் பேந்திய செம்மற், களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே" (எ) "காணிய சென்ற விரவன்மாக்கள், களிறொடு நெடுந்தேர் வேண்டினுங் கடவ" புறம். உ0டு: கஉ - கச. ஙகங: ங - ச என்பவைகளை லறியலாகும்.

ங. (அ) "மாரி பொய்க்குவ தாயினுஞ், சேரலாதன் பொய்யல னசையே" பதிற். கஅ: கக - உ. (ஆ) "புகழெஞிர்ந்து, வான நாண வரையாது சென்ரோர்க், காலு நீயுங் கவிகை வண்மைக், கடுமான் கோதை"

(பிரதிபேதம்) * வரிவளை நன்மான். †போதற்றொழிலிலே. ‡முன்னீங்காமற் பாராட்டிய அவ ளிடத்து, ‖தாறுகோல், ×எனத்தேரழி பணிந்துகூறினை. ÷தரவுவெண் பாட்டு மைஞ்ரேடிக்கிய குறுவெண்பாட்டு.

(௫க.) (க)(உ)*சுடர்த்தொடீஇ கேளாய் தெருவினு மாடு
(ங)மணற்சிற்றில் காலிற் சிதையா†வடைச்சிய
(ச)கோதை பரிந்து (ஞ)வரிப்பந்து கொண்டோடி
(ஃ)நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்க்கா

புறம். ருசு:ஞ்-அ. (இ) "நின், சுரதத்தலும் வண்மையு மாரியுள" பரி. சு: உசு. (ஈ) "வள்ளியோரின் வழங்கினமேகமே" கம்ப. ஆற்று. சு. (உ) "வையம் புரக்குமான் மன்னவரின் கைக்காரும், பொய்யின்றி வானிற் பொழிகாருங் - கையா,மிருகார்க்கு மில்லைப் பருவ மிடிக்கு, மொருகார் பருவ முடைத்து" தண்டி. சூ. ஙஎ. மேற். (ஊ) "பொன்னங் குன்றின்மேலவன்கொடை போன்மெனப் பொழிந்த"நைடத. காட்டுப். உ.

க. இச்செய்யுளின் ஆட்சிலைய இந்நூற்பக்கம் ஙகஉ: ங-ஆம் குறிப்பிற் காண்க.

உ. (அ)"அஃறிணைப்பெயர் ஆகுபெயராய் உயர்திணைக்கண் வந்து விளியேற்குமிடத்து உயர்திணைப் பெயராம்" என்பதற்குச் சேனாவரையரும் (ஆ)"அஃறிணைப்பெயர் அன்மொழியாய் உயர்திணைக்கண வந்து விளியேற்குமிடத்து உயர்திணைப் பெயராம்" என்பதற்கு நச்சினார்க்கினியரும், (தொல். விளி. சூ. ங) (இ) "அன்மொழித்தொகை ஒரு சொன்னீர் மைத்தாய்ப் பெயர்த்தன்மையையுங், முடிக்குஞ் சொல்லோடு புணர்ந்துழி விளியாய் அல்வழிப் புணர்ச்சியாம" என்பதற்கு•இ - வி. நூலாரும் (இ - வி. சூ. நுசை.) "சுடர்த்தொடீ கேளாய்" என்பதை மேற்கோள் காட்டினர். அன்மொழித் தொகையும் ஆகுபெயருள் ஒருவகையென்பது முன்னோர் கொள்கை.

ங. (அ)"மூற்றிலைப்பந்தைக் கழங்கைக்கொண்டோடினை முன்னும்பின்னு, மற்றிலை தீமை யனவுபொறுத் தோதாதொல்லை யாலினிளங, கற்றிலை மற்றயில் வேங்கடவா வின்றுன் கான்மலர்போற, சிற்றிலைச் சீர்த்தகற்குப் பெருவீட்டினைச் செய்தருளே" திருவேங்கடத். கூஎ. (ஆ) "முற்றிலான் மணற்கொழித்து மொய்த்தசிறு மியரிழைத்த, சிற்றிலா னவையவர்கள் சினந்தலறச் சிதைத்திட்டார்" திருவானைக்கா. கோச் செங்கணார். கஅங.

ச. (அ) "கோதை வரிப்பந்து கொண்டெறிவார்" பரி. கூ: சஎ. (ஆ) "இவனிவ ளேம்பால் பற்றவு மிவளிவன், புன்றலை யோரி வாங்குளை •பரியவும்" குறுந். உஉக.

ஞ. (அ)"வரிப்பந்துகொண்டொளித்தாய் வாள்வேந்தன் பைந்தா" பு-வெ. பர்டாண். நிஐ. "வரிப்பந்தைஇ" பெரும்பாண். ஙஙங.

சு. (அ)"அகப்பட்டி யாவாரைக்காணின்" (குறள்.கஐஎ) என்பதன் உரையில் அகப்பட்டி யென்பதற்குத் தன்னிற் சுருங்கிய பட்டியெனப்

(பிரதிபேதம்) * சுடர்த்தொடீ, † அடர்ச்சியை.

நி ளன்னையும் யானு மிருந்தேமா *ஙில்லிரே
(க)யுண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
யடர்பொற் சிரகத்தால் (உ)வாக்கிச் சுடரிழா
யுண்ணுநீ ரூட்டிவர் வென்ரு ளெனயானுங்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்கூ!

கo (ங)வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட
டன்னு யிவனெருவன் செய்ததுகா †ணென்றனை
வன்னை யலறிப் படர்தரத் தன்னையா
னுண்ணுநீர் விக்கினு ‡னென்றனை வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்

பொருளும், அகமாகிய பட்டியென இலக்கணவியையும், பட்டி போன்று வேண்டியவாறேயொழுகலின் பட்டியென்ருரென விளக் கமுமெழுதி "நோதக்க செய்யுஞ் சிறுபட்டி" என்பதனை மேற்கோள் காட்டினர் பரிமேலழகர். (ஆ) "சிறுபட்டி" (கலி. அச: உo) (இ) "திருந்திய காவலர் தீரப் பட்டியாய்,முருந்திள முறுவல்வே ,சையரின் முன்னிநீ, யருந்தன மனைத்தைய மழிவு செய்தனை" விநாயக. சோமகாந்தன்றிவினைப். அ.

க. (அ)உண்ணல் பொதுவினை யென்பதற்கு "உண்ணுநீர் வேட்டேனென வந்தாற்கு" என்னும் பகுதி மேற்கோள். (தொல். கிளவி. சூ. சரு. 'எண்ணுங்' தெய்.)(ஆ)"உணுணுநீர் வேட்டசைச்தே னெனவுரைப்ப" நீலக. கரு கூஉ.

உ. வாக்குதல் - வார்த்தல்: (அ) "வாக்கவுக்க தேக்கட்டேறல்" புறம். கசஙி: கூ. (ஆ) "வடியுறு நீர்தேறல் வாக்கு" பு - வெ. வெட்சி. ககூ, (இ) "மணிவள்ள நிறையவாக்கி, யின்மதுப்பலியும் . . . . . எந்தி" நீலக. சஎக. (ஈ) "திருணத் தசும்ப ரொன்றில், வாக்கிய வுலைப்பெய் மீத்தற்றி மாபில்வா லரியுள் ளிட்டான்" கந்த. வில்லவன்வாதாவி வதை. ககூ.

ங. (அ)"இடைதெடுத் தெருவிற் கதுமெனக் கண்டென்,பொற்றொடி முன் கை பற்றின ளுக. வன்ரு யென்றனை னவன்கைவிட் டனனே, தொன்னகை சாலாமை நன்னன் பறம்பிற், சிறுகா ரோட்டு மியினெடு சேர்த்திய, கற்போ ளுவினே ளுகி மற்றது, செப்பலென் மன்னுல் யாய்க்கே" அகம். நருசு. நி-கக. (ஆ) தலைவி நாணும் மடனும் நீங்கிய சொல்லைத் தோழிக்குக் கூற்றாற் கூறியதற்கு "வளைமுன்கை பற்றி நலி யத் தெருமந்திட்டு" என்பது மேற்கோள். தொல். களவி. ககூ. நச்.

(பிரதிபேதம்) * இல்லிலே † என்றேனுக்கண்ணை ‡ என்றேனலன்னையும்.

கலி *கடைக்கண்ணற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
(க)செய்தானைத் †கள்வன் மகன்.

இது "புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டிழிப், பகாஅ விருந்தின் பதுதிக்கண்" (உ)தலைவி தோழிக்குக் கூறியது.

இதன் பொருள்.

ஒளியொருங்கின வளையினையுடையாய்! ஈதொன்றைக் கேளாய், தெருவிடத்துநாம்(ங)உண்டிகளைஆடும்மணலாற் செய்த சிற்றிலைக் காலால்அழித்துக் கூந்தலிலே அடைவித்த கோதையை அறுத்து வாரியினையுடைய பந்தை எடுத்துக்கொண்டு ஓடி நாம் நோவத்தக்க தொழில்களைச செய்யுஞ் சிறியனுகிய காவலில்லாதவன் முன்னெரு நாளிலே, அன்னையும யானுஞ் சேர இருந்த அளவிலே. இல்லில் உறைகின்றவர்களே! உண்ணப்படுந் தண்ணீரை வேட்டேனெனச் சொல்லி வந்தவனுக்கு, அன்னை விளங்குகின்ற பூணினையுடையாய்! உண்ணுநீரைத் தகட்டுப்பொன்னுறசெய்த கரகத்தாலே வார்த்து உண்ணப்பண்ணுவித்து வாவென்று சொன்னாள்; என்று சொல்கையிலேயானும் சிறுபட்டியாயிருக்கின்ற தன்னை அறியாமித சென்றேன்; சென்ற பின்னை அவன் என்னுடைய வளையணிந்த முன்கையைப் பிடித்து என்னை நிலைகையிலேற்†அலமந்து,தாயே! இவனெருவன் செய்தமேதார் செயலைப் பாராயென்றேனுக; அதுதானும் கூப்பிட்டு நீடிவருதலேசெய்ய, அதனை மறைத்து ||அங்ஙனஞ் செய்தறியேன் யான் உண்ணுநீர் விக்கி வருத்தினனகாணென்று ஓர் பொய்யைக் கூறினேனுக,அதுதானும் தன்னைமுதுகைப பலகால்அழித்தழித்துத் தடவப் பின்னை என்னைத் தன கடைகண்ணாலே ஏகால்வான்போலே பார்த்துத் தன் மனமகிழ்ச்சியைத தருங் கூட்டத்தை அக்கள்வனெனியமகன் செய்தான்; இதுகாண நிகழ்ந்தது; —எ - று.

இதனைக் கேட்டுழிதி தலைவி இருவகைக குறியும் பிழைத்தலின், "காணுவகையிற் பொழுதுனி ×யிகப் பினுந், தானகம்புகாஅன் பெயர்தலினமையிற்,

க. வெண்கலியுள் இறுதிகண முச்சீர்டி வருமென்பதறகு, "மசயதானைக் கள்வன் மகன்" என்பது மேறமேகாள் (தொல். செய. சூ. ஏ. போ.)

உ. தொல். கா. சூ. கசு. இப்பகுதியுரையிலும் இவ்வுரையாசிரியால இசசெயயுள் இவ்விலக்கியத்திறகு மேறகோளாகக காட்டப்பெற்றிருக்கிறது.

ங. (அ) "திருந்தாத விளங்குலே யாயமொடு புறம்போந்து சிறுர்கருசிற்றில், விருந்தாக மணறசிறுசோறட்டும்" திருவிளை. தடாதகை.ங உ. (ஆ) "பார்வார் மணற்சோ றிருளித்தினிது படைப்பே மிடகட் கதுகுறவர், பாவை படைத்த மாவாமோ" திருவிடைகழிழருகர். சிற்பற. கஏ. (இ) "அடுமணற்சோ றையவுண்கவென" அம்பல. சிறறிற. உ.

பிரதிபேதம். * கடைகணணும், † கள்வமகன. ‡அலம் வந்து. || அங்ஙன், ÷ எனஅவனும் காட்சியான்வந்தமை கூறினாள், × யிகந்துகாட்சி

காட்சி யாசையிற் களம்புக்குக்கலங்கி" (க) கையற்றுப்போலத்தலைவனும் இரு வகைக்குறியும் பிழைத்தலிற் றலைவியைக் காணுஞ்சக் காட்சியாசையிற் கலங்கி வேட்கையின் மயங்கினளுதலின் நம் மனைக்கணணே உண்டிக்காலத் தைக் கருதி வந்து தன் ஆற்றுமை மிகுதியான் இவளே முன்கைபற்றி நலிந் தான், இவளும் அதனை மறைத்துவிட்டாள், இனி இவட்கும் அவனைக்கூடுதல் கருத்தாயிருந்தது. இனி*அவனைக்† கூடுவளெனத் தோழி கருதுவளாதலின் வேறமொருபொருள் நுதலிவந்ததாயிற்று.‡

கோதக்கசெய்யுஞ் சிறுபட்டியென்றதனுன் ஒருநிலமாயிற்று. (உ) கடைக் கணுற் கொல்வான்போ லேக்கி யென்றதன்கட் கணணிற்குக் கொலைத் தொழில் கூறிற்று. இது வினையுவமத்தின்வகை.

இதனுல், தோழிக்குங்கூனத்தல் பிறந்தது.

"ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலால்" (ங)என்பதனுள் இயலென்ற தனுற் பன்னீரடியின் இகந்து ஒருபொருணுதலிவருங் கலிவெண்பாட்டும் உளவென்று கோடலின், இது பன்னீரடியின் இகந்து ஒருபொருணுதலிவந்த ||கலிவெண்பாட்டி. (கடு)

(நிஉ.)மறநங்செவி மறைப்பாய்பு மாரண்செய்த புலிசெற்று
மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்

க. தொல். களவி. சூ. ககசு

உ. வினையுவமத்தின் ஒருவகைக்கு. "கடைக்கணுற் கொல்வான்போ லேக்கி" என்பதை மேற்கோள் காட்டினர் பேராசிரியரும்; தொல். உவம. சூ. க.

ங. தொல். செய். சூ. கநிங. நச. (அ) இசருத்திரவுரையில் இவ்விஷயத் திற்கும், (ஆ) தொல். செய். சூ. ககூ. பேர். உரையில் ஒருபொரு ணுதலிப் பதினுறடியான் வந்த கலிவெண்பாட்டிற்கும், (இ) தொல். செய. சூ. ககூ. நக். உரையில் ஒருபொரு ணுதலிப் பதினுறடியான் வந்த சீர்வகைக் கலிவெண்பாட்டிற்கும், (ஈ) யா - வி. சூ. கநி, அநி. உரையில் கலிவெண்பாவின் நேரீற்றியற்சீர்வந்ததற்கும், (உ) வெள் ளோசைகொண்டு ஒருபொருண்மேல் வெள்ளடியால் வந்த கலிவெண் பாவுக்கும், (ஊ) யா-கா. செய். ஙக. உரையில் வெண்டளை தட்டு வெள் ளோசை தழுவி ஒரு பொருண்மேல் வந்த கலிவெண்பாவுக்கும், (எ) வீர. யாப்பு. அ. உரையில் நேரிசை வெண்பாவே போன்று அதனி னீண்டுவந்த கலிவெண்பாவுக்கும், (ஏ) இ - வி. சூ. எஙஅ. உரையில் வெண்டளை தட்டுவந்த கலிவெண்பாவிற்கும் இச்செய்யுள் மேற்கோள்.

(பிரதிபேதம்) * அவனை, † கூட்டுவளெனை, கூடுதலென ‡ இதனுல் || கலிவெண்பாட் டாயிற்று. கோதக்கசெய்யுஞ்.....இது வினையுவமத்தின்வகை.

குறங்கறுத் திடுவான்போற் கூர்நுதி மடுத்தத்
னிறஞ்சாடி முரண்டீர்ந்த நீண்மருப் பெழில்யானை
மல்லரை மறஞ்சாய்த்த மால்போற்றன் னிளைஞாப்பட்
கல்லுயர் நனஞ்சாரற் கலந்தியலு நாடகேள்;

எ தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெ.றூஉ
மணங்கென வஞ்சுவர் சிறுகுடி யோரே ;

கக ஈர்ந்த ணைடையை யெல்லி மாலையை
சேர்ந்துவீழ் கதுப்பினர் செய்குறி நீவரி
ணெளிதிகழ் ஞெகிழியர் கவணையர் வில்லர்
களிறென வார்ப்பவ ரேனல்கா வலரே;

கஙி ஆர மார்பினை யண்ணலை யளியை
யைதக லல்குலாள் செய்குறி நீவரிற்
கறிவளர் சிலம்பில் வழங்க லானுப்
புலியென் றேர்க்குமிக் கலிகே ழூரே ;

எனவாங்கு;

உ0 விலங்கோரார் மெய்யோர்ப்பி னிவள்வாழா ளிவளன்றிப்
புலம்புக ழொருவ யானும் வாழேன்
அதனற், பொதியவிழ் வைகறை வந்துநீ குறைகூறி
வதுவை யயர்தல் வேண்டுவ லாங்குப்
புதுவை போலுநின் வரவுமிவள்
வதுவைநா ணெடுக்கமுங் காண்குவல் யானே.

இஃது இரவுக்குறிவந்த தலைவனை எதிர்ப்பட்டுத் தோழி இரவுக்குறியது ஏதமும் ஏதத்தால்வருந் துன்பமும் தன் னுள்ளத்து விழைவும் கூறி வரைவு கடாயது.

இதன் பொருள்.

மூறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலிசெற்று
மறத்தலைக் கொண்ட (க)நூற்றுவர் தலைவனைக்

க. (அ) "நாறு மைந்தரி ஞதிப ஞதிய நான லந்திகழ் மார்பினை யாருயி,
நீறு கண்டிட லாமவ னூருவ யேறு புண்பட வேயெதிர் மோதிலே"
(ஆ) "ஞான பண்டித தன் வாயுரு மாரணை நார ணன்புணி யாவிரோ

குறங்கறுத் திடுவான்போற் கூர்நுதி மடுத்தத
(க)னிறஞ்சாடி மூரண்டிர்ந்த நீண்மருப் பெழில்யானை
(உ)மல்லரை மறஞ்சாய்த்த மால்போற்றன் (கூ)கிளைநாப்பட்
கல்லுயர் (சு)நனஞ்சாரற் கலந்தியலு நாடகேள்

யோன்மொழி, மோன வண்குமி தாணுண ராவெதிர் மோதின்ன்கதை" (இ) "ஊறு மிஞ்சிய பேருட லோடெதி ரோடி வன்றொடை கீறிட மாறடும், வீறு கொண்டக தாயுதம் வீசினன் வீர னம்புவி மீதுற வீழவே" (ஈ) "அரிப்ப தாகனு ரகப்ப தாகனை யதிர்த்து மேலுற வடர்த்துநீ, திருப்பி னோடதி சயிக்க வூருவை யொடிக்கவே"(உ)"உடல், கம்பி யாவிழ வூருவின் மோதுதல் கண்ட போதென ² தாருயிர் போனதே" (வில்லி. பதினெட்டாம். கஅஉ: கஅச, கஅடு: கஅசு, ககக.) என்பவற்றுல் வீமசேனன் கதைகொண்டு துரியோதனன் றொடையை மோதி யொடித்தா னென்பதே அறியப்படுகின்றது. அப்பொருளே நோக்க, குறங்கிறுத்தலென்று இருக்கலாமெனினும் எகினங்களில், குறங்கறுத்த லென்றே காணப்படுதலாலும் (ஊ) "மறங் கெழுவேந்தன் குறங் கறுத் திட்டபின்" (பாரதம்.) (எ) "குருகுல வேந்தனைக் குறங்கறுத்தஞான்று" (தொல். புறத். சூ. கஉ. நச். உரை.) என இச்செய்தி கூறுமிடத்தும் (ஏ) "காடுதோ் மடப்பிணை யலறக் கலேயி, னேடுகுறங் கறுத்த செந்நா யேற்றை" (அகம். உஅடு. டு – சு) என்னுமிடத்தும் பிறவிடத்தும் குறங்கறுத்த லென்றே ஒரு தொடர் காணப்படுதலாலும் இறுத்தலென்ற பொருளில் அறுத்தலென்றே ஒரு சொல் பண்டு வழங்கி யிருக்குமென்று கருதி, குறங்கறுத்த லென்றே பதிப்பிக்கலாயிற்று.

க. (அ) "நிறம் - மருமத்தான மெனப்படும் உயிர்நிலே: "வெள்ளமா னிற னேக்கிக் கணைதொடுக்குங் கொடியான்" கலி. கஉ0: கக. (ஆ) "கோ றெரிந்து, வரிநுதல் யானை யருநிறத் தழுத்தி" அகம். கஎஉ; எ-அ. (இ) "செந்தொடைப் பகழி வாங்கிச் சினஞ்சிறநீது, கருங்கைக் கானவன்¹களிற்றுநிறத் தழுத்தலின்" தொல்: செய. சூ. கடு. பே. மேற்கோள்.

உ. (அ) பெருமித வுவமத்திற்கு, "மல்லரை.....நாடகேள்" என்பது மேற்கோள்; தொல். உவம. சூ. ககு. பேர். (ஆ)"மல்லரை மறஞ்சாய்த்த மலர்த்தண்டா ரகலத்தோன்" கலி. கநச: க. (இ) "மல்லர்க் கடந்தா னிறம்போன் றிருண்டு" ஐந்திணை யைம்பது. க.

ஈ. (அ) "கிளைபா ராட்டுங் கடுவடை வயக்களிறு" அகம். உகஅ: க. (ஆ) "கொல்களிறு.....கிளைபுகலத் தலைக்கூடியாங்கு" புறம். கஎ: கஎ-ஈ.

சு "நனஞ்சாரல்" கலி. சச. க; சடு. சு.

எ-து: (க)முறம்போலுஞ் செவியாகிய(உ)மறைப்பிடமாகவுந்து பாய்ந்து மாறுபாடுசெய்த புலியைக் கோபித்து, மறத்தைத் தும்பிடத்தே கொண்ட நூற்றுவர்க்குத் தலைவனுகிய துரியோதனனைக் குறங்கில் உயிரைப் போக்குகின்ற பீமசேனனைப்போலே தன்னுடைய நீண்ட கோட்டினுடைய கூரிய முனையாலே குத்திப் புலியினது மருமத்தைத் திறந்து மாறுபாடு தீர்த்த அழகினையுடைய யானை,(ங)மல்லரை மறத்தைக்கெடுத்த(ச)திருமால்போலே கல்லுயர்ந்த அகற்சியையுடைய சாரலில் தன் சுற்றத்திற்கு நடுவே கூடித் (ஞ)திரியும் நாடனே! யான் கூறுகின்றதனைக் கேட்பாயாக; எ - று.

(கூ)முறஞ்செவி செத்றென்பது உறுப்பறைபற்றிய வெருளி.(எ)மால்போலென்பது பெருமிதம்பற்றிய உவமம். செவிமறைப்பப் பாய்ந்த புலியைச் செற்றதன்மை தமது களவொழுக்கமிடமாக அலர்கூறிய அயலாரைக் கோபித்ததாகவும், அதனைக் குத்தி மாறுபாடு தீர்ந்த யானை தலைவன் வரைந்து *கொண்டால் அயலாரைத்தாம்வென்றதன்மையாகவும் யானை இளைகாப்பட் †கலந்தியலுதல் இனித்தலைவன்சுற்றத்தாரிடைப் பொருந்தியிருந்து இல்லறம் நிகழ்த்துந் தன்மையாகவும் உள்ளுறையுவமங் ‡கொள்க. இது வினையுவமப் போலி. குறங்கறுத்திவான்போல் மால்போலென்பனவினையுவமம். அவையும் உள்ளுறையுவமத்திற்குச் சிறப்புக்கொடுத்து உள்ளுறையுவமம்போலத திணையுணர்தலைத் தள்ளாவாய் நின்றன.

க. யானையின் செவிக்கு முறம் உவமை கூறப்படுதலை, "முறஞ்செவி வாரணம்"(கலி. சஉ. உ.) என்பதனாலும் அதன் குறிப்பாலும் அறிக.

உ. புலி யானையைக்கொல்ல மறைந்துபாய்தல்: "களிற்றினை தெரீஇய பார்வ லொதுக்கி, ஒளித்தியலகு மரபின் வயப்புலி போல" (அகம். உஉ: கச - கஞ.) என்பதனாலும் அறியப்படும்.

ங. தொல். வேற் - மயங்கு. சூ. ஞ. சே; நச. உரைபார்க்க.

ச. "காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப், பாம்பணைப்பள்ளி யமர்ந்தோன்" (பெரும்பாண். கஎஉ - ங.) எனத் திருமாலுக்கு யானை உவமையாகக் கூறப்பட்டிருத்தலும் காண்க.

ஞ. (அ) "மங்கல மழகளி றனைய செல்கையன்" (ஆ) "நாகமு நாண நடந்தான்" (இ) "நன்னெடுங் களிமால் யானை நாணுற நடந்து வந்தான்" எனவும் (ஈ) "எறுபோற் பீடுடை" எனவும் இதற்கெதிராக ஆடவர் *நடைக்கு யானை நடை உவமையாய் வருதலும் காண்க.

ஃ. பேராசிரியரும் (தொல். மெய்ப். சூ. கo;) இ - வி. நூலாரும் (இ - வி. சூ. ஙஎஅ.) உறுப்பறையான் வந்தவெருளிக்கு இதனையே மேற்கோள் காட்டினர்.

எ. இதன் பக்கம் நகச: உ. (அ) குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) *கொண்டலால், † கலந்தியனுந் தலைவன, ‡கொளக குறுகறுதது.

எ (க)தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை
*நேரிதழ்க் கோதையாள் செய்குறி வீவரின்
மாரங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉ
(உ)மணங்கென வஞ்சுவர் †சிறுகுடி யோரே

க. (அ) பிற்சென்று தலைமகனைப் பாங்கிவரவு விலக்கற்கு, "தாமரைக் கண்ணியை . . . . .காவலரே" என்பது மேற்கோள்; நாற். சூ. கஞிஅ. (ஆ)பார்ப்பான்உரிப்பொருட்டலைவனுகவருதற்கு"தாமரைக்கண்ணியை .....மாலையை" என்பது மேற்கோள். தொல். அகத். சூ. உசு. நச். (இ)"மாயோன்மேயமன்பெருஞ் சிறப்பிற்,சுருவாவிழுப்புகழ்ப்பூவைநிலையும் என்றது: மாயோன் விழுப்புகழ் – மாயனுடைய காத்தற்புகழையும், மேயபெருஞ்சிறப்பிற் சுருவாவிழுப்புகழ் – எஞ்ஞான்றும் உரியவாய் மேவிய பெரிய தலைமையிற் கெடாத படைத்தல், அழித்தல் என்னும் புகழ்களையும், மன் பூவைநிலையும் – மன்னர் தொழிலுக்கு உவமையாகக்கூறும் பூவைநிலையும், என்றது ஒன்றனை, ஒன்றுபோற் கூறுந் துறை. மன்எனப் பொதுப்படக் கூறியதனுன் நெடுநிலமன்னர்க்கும் குறுநிலமன்னர் முதலியோர்க்கும் கொள்க. பெருஞ்சிறப்பு என்ற தனுற் படைத்தலுங் காத்தலும் அழித்தலுமன்றி அவ்வர் தாமாகக் கூறலும் முருகன் இந்நின் முதலியோராகக் கூறலுங்கொள்க" என்றுகூறி உரிப்பொருட்டலைவனை முருகனுக்கூறியதற்கும் (தொல். புறத். சூ.கி.நச.)(ஈ)தோழி தலைவனை உயர்த்துக் கூறியதற்கும்(தொல். பொருளி. சூ. சகு. இளம்; நச.) (உ) "நாடி நீயும் . . . . . .தோன்றிய கிளவியொடு" என்னும் பகுதியின் உரையில் 'நாடுமுதலாயின சுட்டித் தலைவன் மாட்டித்தோன்றுங் கிளவி. . . . . .அவற்றின் மிகுதிபடக் கூறுதல்' என்றுகூறி, பிறப்புப்பற்றி வந்ததற்கும் (தொல். களவி. சூ. உருஉ. இளம்) (ஊ) தலைமகன்குலங் கூறியதற்கும் (நாற்கவி. சூ. ககசு.) (எ) மருதத்திணைக்குரிய தாமரைப்பூக் குறிஞ்சித் திணைக் கண்வந்து மயங்கியதற்கும் (இ - வி. சூ. நகூச) "தாமரைக்கண்ணியை .....சிறுகுடியோரே" என்பது மேற்கோள்.

உ. இதன் முன்குறிப்பில் (இ) என்பதன் இறுதியிலுள்ள வாக்கியத்தால் இங்கு அணங்கென்றது முருகனை யென்று அறியப்படும், இப்பகுதியோடு (அ) "குறியிறைக் குரம்பைநம் மனைவயிற் புகுதரு, மெய்ம்மலியுவகைய னாகநிலைகண்டு, முருகென வுணர்ந்து முகமன்கூறி, யுருவச் செந்தினை நீரொடுதூஉய்,நெடுவேட்பரவு மன்னை"(அகம். உசஉ: கக-கி) (ஆ)"கடம்புசூடி யுடம்பிடி யேந்தி,மடந்தைபொருட்டால்வருவதிவ்வூர், பழமுக மில்லை யணங்கயி லில்லை, குறமக ளில்லை செறிதோ ளில்லை, கடம்பூண் டெய்வ மாக நோனார், மடவர் மன்றவிச் சிறுகுடியோரே" (சிலப். உசு.) என்பவை ஒப்புநோக்கற்பாலன.

(பிரதிபேதம்) * நேரிதட் கோதை, † சிறுகுடி வாழரே.

எ - து. தாமரைப்பூவாற் செய்த கண்ணியை*யுடையையாய்த் தண்ணிய நறிய சந்தனத்தை†யுடையையாய் ஒத்த இதழாற் கட்டின கோதையையுடையாள் செய்த குறியிடத்தே நீ வருவையாயின் மணம் நாறுகின்ற நாற்றத்தை ‡யுடையதாய மலைக்கண்ணே நின்று பலியைக் கொள்ளும் அணங்குகளிலே ஓர் அணங்கென்று கருதிச் சிறுகுடியிலுள்ளோர் அஞ்சுவர் ; எ - று.

(க) தாமரைப்பூக் குறிஞ்சிக்கண் வந்தது.

க்க ஈர்ந்த ணுடையை யெல்லி மாலையை
சேர்ந்துவீழ் கதுப்பினுள் செய்குறி நீவரி
ணெளிதிகழ் ணெகிழியர் கவணையர் வில்லர்
களிறென வார்ப்பவ ரேனல்கா வலரே

எ - து: பகற்காலத்துத் தீர்த்தமாடுகின்ற நின் ஒழுக்கத்திற்கேற்ற ஈரத்தினுற்றண்ணிதாகிய ஆடையையுடையையாய் இராக்காலத்துப்புணர்ச்சிக் குரியனவற்றை அணிகின்ற இயல்பினை || யுடையையாய் நீ வரைந்து கோடலைக்குலைந்து அயந்தார்விரும்புகின்றமையினையுடையாள்செய்தகுறியிலே வருவையாயின் நீ கோடுமுதலியவற்றைக் குறித்துச செய்யுங் குறிகளாலே ஒளிவிளங்குகின்ற குறைந்கொள்ளியையுடையராய்க் கல்லெறியுங் கவணையுடையராய் வில்லினையுடைய ராய்க் களிறு வந்தென்று கருதித் தினைப் புனத்தைக் காக்கின்றவர்கள் ஆரவாரிப்பார்கள்; எ - று.

மாலைமுதலியன பாரத்தாற் குலைந்து வீழ்கின்ற கதுப்புமாம.

கரு ஆர மார்பினை யண்ணலை யளியை
யைதக லல்குலாள் செய்குறி நீவரிற்
(உ) கறிவளர் சிலம்பில் ×வழங்க லானுப்
புலியென் றேரார்குமிக் கலிகே ழூரே

எ - து: ஆரமணிந்த மார்பினையுடையையாய்த் தலைமையையுடையை யாய் அருளுடையையாய்மெல்லிதாயகன்றவல்குலையுடையாள்செய்தகுறி லே

க. (அ) தாமரை மருதத்துக்குரியபூவாகலின் இவ்வாறுகூறினார். இதனைத் "தாமரைக கண்ணையை . . . . . நீவரின்" என்றபகுதியை (தொல். அகத் சூ. ககூ. உரையில்) மேற்கோள்காட்டி இவரேவிளக்கியிருத்தலானறிக. (ஆ) "செந்தாமரை மலருஞ் செய்வயனல்லூர" (இ) "தாமரை தண்ணையம்பூ" திணைமொழி. நசு: சுo. (ஈ) "போதவிழ் தாமரைப் பூந துறையூரனை" கைந்நிலை. ககூ. என்பவற்றுலும்தாமரைமருதத்துக்கு உரிய பூவென்பது விளங்கும்.

உ. (அ) "கறிவளரடுக்கத்து" குறுந்தொ. புறம். கசுஅ: உ. (ஆ) "கறிவளர் சிலம்பில்" ஐங். உசநூ. சிலப். உஅ: ககச. (இ) "கறியிவர் சிலம்பினை" அகம். கஉஉ: கச. (ஈ) "கறிவளர் பூஞ்சாரல்" திணைமாலை. எ.

(பிரதிபேதம்) | உடையாய, † உடையமகி || உடையாய் × செறிதலாலு.

நீ வருவையாயின் நின்னைக் கண்டு விலங்குமுதலியன வெருவியோடின்ற ஓசையுடலே *மினைகுவளர்ந்த மலையிலே உலாவுதலே அமையாத புலியென்று இந்தச் செருக்குப் பொருந்தின ஊர் ஓராநிற்கும்; எ - று.

எனவாங்கு, அசை.

உ0 விலங்கோரார் மெய்யோர்ப்பி னிவள்வாழா ளிவளன்றிப்
புலம்புக †மொருவ யானும் வாழேன்
அதனற், (க)‡பொதியிழ் (உ)வைகறை வந்துநீ குறைகூறி
(ங)வதுவை யயர்தல் வேண்டுவ லாங்குப்
புதுவை போலுநின் வரவுமிவள்
வதுவைநா ணெறிக்கமுங் காண்குவல் யானே

எ - து: யாவரும் அறிவைப் புகழப்படும் ஒப்பில்லாதவனே அங்ஙனம் அவர் வேறுகவராய் மெய்யாகவோர்ப்பாயின் இக்களவொழுக்கம் அறிந்தா ரென்று இவள் உயிர்கொண்டிராள்; இவ்வியொழிந்து யான் உயிர்வாழேன்; ஆகையினாலே நீ நின் காரியத்தினைப் பலர்க்குக் கூறி அவர உடன்பட்ட பின்பு(ச) பூக்கள் அலர்கின்ற விடியற்காலத்திலே வந்து வரைந்துகொள்ளுதலே விரும்பாநின்றேன்; அதற்குக் காரணம் என்னெனில், அப்பொழுது நீ புதியாய்போல வரும் நின் வரவையும் இவள் ||கலியாணத்திற்றோன்றிய நாணால் ஒடுங்கியிருக்கும் ஒடுக்கத்தையும் யான் காண்பேனுதலாலென்றாள்; எ - று.

ஏகாரம் பிரிநிலை.

க. "கமலப், பொதியினை நகுவன புணர்மூலை" கம்ப. நாட்டு. சட.

உ. "விடியல்வைகறை" தொல்.அகத்.சூ. அ. மேற்.கந்த. இந்திரனரு. உக.

உ. (அ) வேறுபட வந்த வுவமத் தோற்றத்துக்கு "முதிர்கோங்கின்..... இளமுலை" என்பதனை மேற்கோள் காட்டி, முதிர்கோங்கும் முற்றிய குரும்பையும் பெரியவாகலின் அவைபோலப் பெருத்த நின் இளமுலையென்றல் ஒத்தது. பெயறுளி முகுளஞ் சிறிதாக இவற்றோடு அதனை உடன்கூறி அப்பெயறுளி முகுளத்திற் கில்லாத பெருமைக்குணம் பொருட்குப் பின்னர் விதந்து கூறுதலின் அதுவும் வேறுபட வந்த வுவமை யாயிற்று என்பர் நச்; தொல். உவம. சூ. கூஉ, (ஆ) கலியடி பதினேழெழுத்தான் வந்ததற்கு "முதிர்கோங்கின் .... குரும்பையென" என்பது மேற்கோள்; தொல். செய். சூ. நிடு. 'அளவடி' இளம். (இ) "முதிர்கோங்கின் முகை" என்பது குற்றுகரவீறு இன்பெற்று வருதற்கு மேற்கோள். (தொல். குற். சூ. எஅ.) (ஈ) "யாணர்க் கோங்கி னவிர்முகை யெள்ளிப், பூணகத் தொடுங்கிய வெம்முலை" சீறுபாண். உடு - சூ. (உ) "முலையோர் மென்முகை யவிழ்ந்த கோங்கின்" தூறுத். உடுச: (ஊ) "கோங்குமுகைத்தன்ன குவிமுலை" அகம். உசஅ: கக. (எ)கோங்கின் முழுவனப் பெய்திய முற்றிளமுலை" புறம். நூகூ: கூ-கஅ.(ஏ) "கோங்கரும் பன்ன முலையாய்" நாலடி. சஅஅ.(ஐ) "கோங்கேர்முலைப் பூந்திருவே" சீறுபஞ்ச. சடு.(ஒ) "அரும்பெறற்காதலோ டணிநமக் காகிய, மருங்குலுமாகமும்வருந்தப் போந்த, கருங்கண் வெம்முலை யரும்பினழித்து, வண்பொற் றட்ட மலர்ந்தவாதலி, னண்பிற் கொத்தில நம்மோ டிவையெனக், கோங்கங் குறுகல் செல்லாரியல" பெருங்: (உ) கஉ: கஅஅ - நி. (ஓ) "மின்னிகர் மருங்குற் பிறைநுதற் கனிவாய் வெண்ணகைக் கருங்குழலவடான், பன்னிரு பருவ மடைந்துபைங் கோங்கின் பனிமுகை யெனமுலை முகிழ்த்தான்" பிரமோத்தர. உமாமகேசுவரபூசை. நூ.(ஔ)"யாணர்க் கோங்கின் மென்முகிழ்முலை" பாக. (கஅ) கோவியர். கஙு. (ஃ) "யாணர்க் கோங்கின் குவிமுகையெள்ளிப், பூணகத் தொடுங்கியமுலை" ஞானமிர்தம். ..... (அஅ)"கோங்கிற் குவிந்து பணைத்தமுலை" உத்தரகோச. தீர்த்தச்சிறப்பு. உகூ. (ஆஆ) "அலர்முலை யதரமே ரான கோங்கமு, மிலவமு மெல்லடி யினைவுருவகைத், தலைவனெடுவ்வுழிச் சார்ந்ரின்புற, நிலைபெறு பஞ்சியி னெறிக நீர்க்குமே" திருவானைக்கா. திருநாட்டு. கஅஅ.

கூ. "முலைமுகஞ் செய்தன" அகம். எ: க.

(க)மயிர்வார்ந்த வரிமுன்கை மடநல்லாய் நிற்கண்டா
ருயிர்வாங்கு மென்பதை யுணர்நீயோ வுணராயோ

எ - து: மயிர்நேரிதானவரிகளையுடைய முன்கையினையும்மடப்பத்தினையு முடைய நல்லானே! முற்றின கோங்கமரத்தின்து இளையமுகையென்ன, *அடிவரைந்துகட்புலனுண(உ)குரும்பையென்ன, பெய்தற்றொழிலையுடையமேகத் தின் மழையாலுண்டான(ங)மொக்குளென்ன, பெருத்த நின்னுடைய இளைய முலைகள் நின்னைக் கண்டவர்களுடைய உயிரை வாங்கிக்கொள்ளுமென்னும் நிலைமையை நீதான் அறிவையோ ? †அறியாயோ ? எ - து.

எனவாங்கு

எ - து: என்று யான் கூறுகிற்க ; எ - று.

ஆங்கு, அசை.

உஅ (ச)பேதுறற்றுப் போலப் பெரெவ்வ நீயறியா
‡யாதொன்றும் (ஞ)வாய்வாளா திறந்தீவாய் கேளினி
(ஈ)நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட தாமருந் தவறிலர்

க. "மயிர்வார் முன்கை" ஐங்குறு. உகஅ.

உ. (அ) "குரும்பை மென்முலை" அகம். உ0கூ. உஉ. (ஆ) "குரும்பையங் கொங்கைநாகர் கோதையர்" கம்ப. களியாட்டப். உ. (இ)"குரும்பை மென்முலையார்" நைடதம். காட்சி. கக. (ஈ) "குரும்பைமுலை வள்ளி" திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் ....(உ) "குரும்பை போற்கிளர் குவிமுலைக் கொளியோடு" உத்தரகோச. பார்ப்பதிசுவம். இகூ.

கூ. "கோங்கரும்பு பந்து கொலைச்சூது தாழமொக்குள்" இராத்தினசி. கள.

ச. (அ) "பேதுறலஞ்சி" அகம். ச: சக; (ஆ) "பாவை பேதுற" சீவக. கருசு; (இ) "பேதுறவு மொழிந்தனள்" (ஈ) "பெரும்பே துற்றதும்" சீலப். கஉ: நிக, கூ: சுசு; (உ) "பெரும்பேதுற்று விளியும்" பெருங். (உ) உ0: உஅ.

ஞ. (அ) "வாய்வாளா நின்றான், செறிநகை" பரி. உ0: சசு - எ; (ஆ) "வாய்வா ளோனிற்ப" கலி. சுஞ: கஞ.

ஈ. (அ)"நீயுந்தவறிலை..... ..தவறுடையான்" என்பது சொல்லுவான் குறிப்பினுற் பொருளறிய வந்தமைக்கும் (நன். பெயரியல். சூ. கஉ. மயிலை) (ஆ) "நீயுந்தவறிலை ....தவறிலர்" என்பது இரண்டும் பாலும்விளங்கலில்லாதசொற்களுள் நீயென்பது குறிப்பாற்பெண்பா லுணரநிற்றற்கும் (தொல். பெயரி. சூ. நக. நச்; சூ. நஎ. 'இன்ன பெயரே' தெய்.) மேற்கோள். (இ) "நீயுந் தவறிலை நின்னை யிதுதந்த,

(பிரதிபேதம்) * வடிவு வரைந்து. † அறியாயோ அல்கலை பேதுற்றாய். ‡ யாதொன்று மலர்திறந்தீவாய்,

(க)நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
(உ)பறையறைந் தல்லது செல்லற்க வென்னை
விறையே தவற்றுடை யான்

எ-து: *நீ மயக்கமுற்றுய்போலே பிறருடைய வருத்தத்தை அறியாயாய்க் கேட்டார்க்கு யாதொன்றுஞ் சொல்லாயாய்க் கழிந்துபோகின்றவளே! இப் பொழுது யான் கூறுகின்றதனைக் கேள்; நீயும் குற்றமுடைய்யல்லை; நின்னை இற்புறத்தே புறப்படவிட்ட நும்முடைய சுற்றத்தாரும் குற்றமுடையரல்லர்; குற்றமுடையான் யாவனென்னில்,(க)நிறையழிந்தகொல்கின்ற(ச)யானையை நீர்க்குவிட்டாற் பறைசாற்றிச் செல்லுமாறுபோல, பறைசாற்றிச் செல்வ

பூவெழிலுண்க ணைவளுந் தவறிலள், வேனிற் புனலன்ன நுந்தையை நோவார் யார், மேனின்று மெள்ளி யிதுவிவன் கைத்தந்தா, டான் யாரோ வென்று வினவிய நோய்ப்பாலேன், யானே தவறுடையேன்" கலி. அச: ஈசு - சக. (ஈ) "வந்தோன் கொடியனு மல்லன் றந்த, நீதவ றுடையையு மல்லே நின்வயி, னுனு வரும்படர் செய்த, யானே தோழி தவறுடை யேனே" அகம். எஉ: கக்-உட.

க. "நிறையழி யானை நெடுங்கூ விளியும்" மணி. எ: சுஎ.

உ. (அ) "வெரூஉப் பறை நுவலும் பரூஉப் பெருந் தடக்கை, வெருவரு செலவின் வெகுளி வேழம்" பொருந. கஎக - உ. (ஆ) "தெண்கிணை முன்னர்க் களிற்றி னியலி" புறம்: எசு: ஈ. (இ) "பாகும் பறையும் பருந்தின் பந்தரு,மாதுல மாக்களுமலவுற்றுவிளிப்ப" மணி. ச:சக-உ. (ஈ)"பறை நிறை கொல்யானை" (உ)"அறைபறை யானை" முத்தொள். (ஊ) "பறைவன் களிற்றுப்.....பாஞ்சாலர்க்கு" வில்லி. சூது. உஉசி.

ஊ. யானைக்கு நிறையுடைமையாவது: "இருநிலனுளப்பவிழிதருகடாத்துக் கைம்மிகக் களிற்ற கவுள தாயினுஞ், செயிர்கொண் மன்னர் செரு விடத் தல்ல, துயிர்நடுக் குறுமை" பெருங் (க) ஈஅ: ககஅ - கஉக. யானை நிறையழிதல்: "காழோர் கையற மேலோரின்றிப், பாகின் பிளை யிற் பணைமுகந் துடைத்துக், கோவியன் வீதியுங் கொடித்தேர் வீதியும், பீடிகைத் தெருவும் பெருங்கலக்குறுத்து..... .:.....பாகும் பறையும் பருந்தின் பந்தரு, மாதுல மாக்களு மலவுற்று விளிப்ப, நீல மால்வரை நிலனெடு படர்ந்தெனக், காலவேகங் களிமயக்குற்றென" "நீல யானை மேலோ ரின்றிக், காமர்செங்கை நீட்டிவண்டுபடு, பூநாறு கடாஅஞ் செருக்கிக் கால்கிளர்ந்து, நிறையழி தோற்றமொடு தொடர" என (மணி.ச: ஈடு-சச, கக: உ0-உஈ.) வருவனவற்றுல்அறியலாகும்.

எ. "கையது கையோ டொருதுணி கோட்டது, மொய்யிலைவேன் மன்னர்முடித்தலை-பைய, வுயர் பொய்கை நீராட்டிச் செல்லுமே யெங் கோன், வயவெம்போர்மாறன் களிறு" தொல். புறத். சூ.கள. நச்.மேற்.

(பிரதிபேதம்) * என்றியான் கூறுகின்ற நீ மயக்க,

தல்லது பறைசாற்றுமற் செல்லாதொழிகவென்று சொல்லாத இறைவனே யென்க; எ - று.

இதனால், தலைவற்கு அசைவென்னும் அழுகை பிறந்தது.

இது புணர்த்த னிமித்தமாதலிற் *குறிஞ்சியுட்கோத்தார். இது தான் உயிர்கொடுத்தாளுகத் தனது கன்மைகூறி அவள் † தீங்குங் கூறினன்.

இதன்முன் ஒரு நெடுவெண்பாட்டும் ஓர் அம்போதரங்கமும் தனிச்சொல்லும் ‡ காழிசையும் பின்னும் ஒரு தனிசசொல்லும் வெள்ளைச்சுரிதகமும் பெற்றுவந்த கொச்சகக்கலிப்பா. (உ0)

(ருஎ.)வேயெனத் திரண்டதோள் வெறிகமழ் வணரைம்பான்
மாவென்ற மடநோக்கின் மயிலியற் றளர்பொல்கி
யாய்நிலம் பரியார்ப்ப வளிரொளி யிழையிமைப்பக்
கொடியென மின்னென வணங்கென யாதொன்றுந்
தெரிகல்லா விடையின்கட் கண்கவர் பொருங்கோட
வளைமைசா லுயர்சிறப்பி னுந்தைதொல் வியனக
ரிளமையா னெறிபந்தோ டிகத்தந்தாய் கேளினி ;

அ பூந்தண்டார்ப் புலர்சாந்திற் றென்னவ னுயர்கூடற்
றேம்பாய வளிழ்நீலத் தலர்வென்ற கீமருண்க
ணேந்துகோட் டெழில்யாணை யொன்ஞதார்க்கவன்வேலிற்
சேந்துநீ யிணையையா லொத்தாதோ சின்மொழி;

கஉ பொழிபெயல் வண்மையா னசோகந்தண் காவினுட்
கழிகலி னிளமாவின் றளிரன்ன யதன்றலைப்
பணையமை பாய்மான்றே ரவன்செற்றூர் நிறம்பாய்ந்த
கணையினு நோய்செய்தல் கடப்பன்றே கனங்குழாய்;

கக வகையமை தண்டாரான் கோடியர் பொருப்பின்மேற்
றகையிண ரிளவேங்கை மலரன்ன சுணங்கினுய்
பதவெரி மிகுகடாஅத் தவன்யாணை மருப்பினுங்
கதவவாற் றக்கதோ காழ்கொண்ட விளமுலை ;

எனவாங்கு;

உக இணையன கூற விறைஞ்சுபு நிலநோக்கி
நிணையுபு நெஞ்தொன்று நினைப்பாள்போன் மற்றுங்கே
துணையமை தோழியர்க் காய்த்த கண்ணண்
ணணையாங்குப் பெயர்ந்தா னென்ன னறிவகப் படுத்தே.

(பிரதிபேதம்)* குறிஞ்சி யுடனே, † தீங்கு கூறினன். ‡ காழிசையும் வெள்ளைச்

இதுவும் அது.

இதன் பொருள்.

(க)வேயெணத் திரண்டதோள் வெறிகமழ் வணரைம்பான்
(உ)*மாவென்ற மடநோக்கின் †மயிலியற் றளர்பொல்கி
(ங)யாய்சிலம் பரியார்ப்ப வவிரொளி பிழையிமைப்பக்
கொடியென மின்னென ‡வணங்கென யாதொன்றுந்
தெரிகல்லா (அ)விடையின்கட் (இ)கண்ணகவர் பொருங்கோட
÷வளைமகா லுயர்சிறப்பி னுந்தைதொல் லியனக
ரிளையமா னெறிபந்தோ டிகத்தந்தாய் கேளினி

எ-து:(கூ)மூங்கிலென்னும்படி திரண்டதோளினையும்மணம்நாறுகின்றகடை குழன்ற ஐம்பாலினையும் மாலைநோக்கினைவென்ற மடப்பத்தையுடையமோக்கினை யும் மயில்போன்ற சாயலினையுமுடையையாய், அழகிய சிலம்பு உள்ளிமெணி ஆரவாரிப்ப,விளங்குகின்றஒளியினையுடையகலங்கள்விளங்க,(எ)நுடக்கத்தாற்

க. இச்செய்யுள் உள்ளப்புணர்ச்சியுற்ற தலைமகன் வரைதல்வேண்டிப் பாங்கற்குரைத்தற்கு மேற்கோள்; தொல். கள. சூ. எ. இளம்.

உ. (அ)'மாவென்ற மடநோக்கின்' என்பது வினைபயன் மெய்யுருவென்ற வற்றுக்கு உரியனவென்று பாகுபடுத்துணர்த்தப்பட்ட சொற்களன்றி மாபிஞ்ஞன்வரு முவமச்சொல்லுக்கு மேற்கோள். தொல். உவமை. சூ. கள. இளம். (ஆ) "மாலைநோக்கின்" (இ) "மாதர்கொண் மாலைநோக்கின் மடந்தை" (ஈ) "மாலைநோக்கி" கலி. கூ0: க0, சுக: சு. அ: சக. (உ) "மானேர் நோக்கின் வலைக்கை யாய்ச்சியர்" தண்டி. சூ. சக. மேற்கோள். (ஊ) "மானேர் நோக்கம்" சிலப். எ: சசு. (எ) "மானி னோக்கி" சீவக. கூடுக.

ங. "ஆய்சிலம் பெழுந்தார்ப்ப வஞ்சில வியலுநின்" கலி. நெய்: எ.

சு. "இடைவனப்பும்" ஏலாதி. எடு.

டி. (அ)"கண்கவர் காரிகை" இறை. சூ. எ. மேற்கோள். 'பையுண்மாலைப்' (ஆ)"கண்கவர் வனப்பின்" (இ)"கண்ணுங் கவர்ந்திட வனப்புவாய்ந்த, வொண்டொடி" நைடத. அன்னத்தைத்தூது. கஉ, போர்புரி. டு.

சு. (அ) "வேயிற் றிரண்டதோள் வேற்கண்ணுய்" பழ.கூசு.(ஆ) "வேயே திரண்மென்றோள்" (இ) "வேயழத் திரண்டமென்றோள்" சீவக சுடுஉ. உகஉசு.(ஈ) "வேயெணத் திரண்டதோள் விளங்கு மேனியாள்" தணிகை. கல்யாண. உஉ0.

எ. "கொடியென நுடங்கி வேயெணக் கடந்து .. ..மின்னெனப் பிறங்குநுண் ணுசுப்பை" காஞ்சிப். மாசாத்தன். கடு.

(பிரதிபேதம்) *மான்வென்ற † மயிலியலாற்றவர். ‡அணங்கென வியாதொன்றும், ||கவர் பெருங்கோட. கவர்பெழுந் தோட÷ வளைமயாலுயர்.

கொடியென்ன (க) விளக்கத்தான் மின்னென்னக் கட்புலனுகாமையின் வருத்தமென்ன யாதொன்றுந்தெரியாத இடையிடத்தே கண்கள்விரும்பிச் சேர ஓட, நின்னுடைய இளமைப்பருவத்தாலே செல்வம் அமைந்த உயர்ந்த தலைமையினையுடைய (உ) நுந்தையுடைய பழனீமயுடைத்தாகிய அகற்சியை யுடைய மனையினின்றும் அடிக்கின்ற பந்தோடே தளர்ந்து ஒதுங்கிப்புறப் படுதலைச் செய்தவளே! இப்பொழுது யான் கூறுகின்றதனைக் கேள்; எ - று

அ (h)*பூந்தண்டார்ப் புலர்சாந்திற் றென்னவ னுயர்(ச)கூடற்
றேம்பாய வணிழ்நீலத் தலர்வென்ற வமருண்க
ணேந்துகோட் டெழில்பானை பொன்னுதார்க் கவன்(ரு)வேலிற்
சேந்துநீ யினையைபா லொத்தீதா (ஈ)சின்மொழி

எ - து: சிலவான மொழியினையுடையாய்! பூவினையுடைய குளிர்ந்த மாலையினையும் புலர்ந்த சந்தனத்தினையுமுடைய பாண்டியனதுயர்ந்தமதுரை யிடத்துத் தேன்பரக்கும்படி அவிழ்ந்த நீலத்தினது அலரைவென்ற போரை யுடைய கண்கள் நீலேயத்தினை கோட்டையும் அழகினையுமுடைய யானை யினையுடைய பகைவர்க்கு அப்பாண்டியன் வேல் மனம் வருத்துமாறுபோலச்

க. "மின்னென நடுங்கு மருங்குலும்" (தொல். கள. சூ. கக. மேற்கோள் 'கண்ணெனை') என மின், நுடக்கத்தாலும உவமைகூறப்படுமாயினும் கொடிக்கு நுடக்கங் கூறப்பட்டமையின் விளக்கமட்டுமே கூறினார்.

உ. நுந்தையென்பது முறைப்பெயர் இடமும் நகரம் பற்றுக்கோடும் ஆக வரும் மொழிமுதற் குறியலுகரச்சொல்லென்பதும இதன் முதலே இதழ்குவியாது குறையக் கூறல்வேண்டுமென்பதும் இதழ் குவித்துக் குறுகாதபடி முற்றக் கூறியவழியும் பொருள் வேறுபடாதென்பதும் தொல். மொழி. சூ. நச - நி. இள. நச; உரைகளால் அறியலாகும்.

ங. "பூந்தண்டார்..... சின்மொழி" என்பது முன்னோர் கூறிய காமக்குறிப்பினும் செந்துறைப் பாட்டின்கண்வரும் வண்ணப்பகுதி வரைதலில்லையென்பதற்கு, மேற்கோள். தொல். புறத். சூ. உஉ. 'வழங் கியன்' இளம்.

ச. இந்நூற்பக்கம் உகஙி: க - ஆம் குறிப்புப்பார்க்க.

ஞ. (அ) "அடுமுரண் முன்பிற் றன்னைய போந்திய, வடிவே லெஃகிற் சிவந்த வுண்கண்" புறம். ஙஙம: அ - கூ. (ஆ) "அடையார்த் துரந்த வீருந்திற லபிலவன், பணைத்தலை பெயர்த்த கறையெஃகம் போலக், கடைசிவந் தனவே கருங்கயன் மழைக்கண்" நாற். சூ. கசஅ. மேற் கோள்; 'வாள்போழ்' (இ) "புண்டலை வேலினுங் கண்சிவப் பார" (ஈ) "வென்றி வேல்போற் சிவந்து" தஞ்சை. சுஙூ, சுஅ.

கூ. "சின்மொழி" இந்நூற்பக்கம், கருக: கூஆம் குறிப்புப்பாக்க.

பிரதிபேதம்: * பூந்தண்டா புலா.

சிவந்து வருத்தஞ்செய்து நீ இத்தன்மையையா யிரா நின்றாய், இது நின் இளமைக்குத் தக்கதோ ; எ று.

கண்சேந்தினையையென்றது, இனைவினை முதலொடுமுடிந்தது.

கஉ *பொழி(ந)பெயல் வண்மையா னசோகந்தண் காவினுட்
கழிகவி னிளமாவின் றளிரன்ன பதன்றலைப்
பணியாபை பாய்மான்றே ரவன்செற்றார் நிறம்பாய்ந்த
கணையினு நோய்செய்தல் கடப்பன்மே லனங்குழாய்

எ - து: பொன்னுற்செய்த குழையினையுடையாய்! பொழிகின்ற பெயல் நீரானும் கொடையினையுடைய பாண்டியனது அசோகமரத்தினையுடைய குளிர்ந்த பொழிலிடத்தினின்ற மிக்க அழகினையடைய இளைய (உ)மாவினது தளிரை யொத்த நிறத்தினையுடையையாய் அங்ஙனம் வருத்துதற்கு மேலே பரந்தியிலை நிற்றலமைந்த பாய்ந்துசெல்லுங் குதிரை பூண்ட தேரையுடைய பாண்டியனுற் செறப்பட்டவர்கள் மருமத்தே தைத்த அம்பினுங்காட்டில் நோவைசெய்தல் உலகிற் கொடுமைகளின் மிக்ககொடுமையன்றே ? எ - று.

கசு வகையமை தண்ணடாரன் கோதியர்(ந)†பொருநற்பின்னோற்
றகையினை நீ(ச)யெங்கை யலரன்ன சுணங்கினாய்

க. (அ) "பெயன்மழைத் தடக்கைப், ...நல்லியக் கோடனே" சிறுபாண். கஉச - சு. (ஆ) "மழைசு ந் தன்ன வீகை நல்கி" மலைபடு. நிஅ. (இ) "உவன், வண்கைபோல் வானம் பொழிந்தீர்" பரி. உ: எ - அ (ஈ) "வானத்தன்ன வண்மையும்" (உ) "மாரியன்ன வண்மைத், தேர்வேளாயை'(ஊ)' வரையா பின் மாரிபோல . பேகன், கொடைமடம் படுநல்லது" (எ)"மாரி யீகை மறப்பரோ மலையனும்" (ஏ) "மாரியன்ன வண்மையிற் சொரிந்து" புறம். நிநி: கநி, கஙஉ. சுஎ. கசஉ: ங - நி, கநிஅ எ, ஙகூஎ ககூ. (ஐ) "மாரியி னேற்பார்க் கவைநல்கி" (ஒ) மார்மழை வள்ளல்" சீவக. ஙசுநி, நிஐ. (ஓ) "கார்கர் வண்கை" நன். சிறப்பு. என்பவைகள் ஈண்டறிதற்பாலன.

உ. (அ) "மாவி, னவிராதளிர் புரையு மேனியர்" முருகு. கசஙூ - சூ, (ஆ) 'தேமா மேனி" சிறுபாண். களசு. (இ)"மாந்தளிரே மாமேனி" சீவக. சுநிஉ. (ஈ) மாவி னிளந்தளி ரன்ன ஈயதற்கு மேனியும்" (உ) "மாந்தளிர் மேனியும்"(ஊ)"மாந்தளிர் மேனி"நைடத.அன்னத்தைத். உசூ.

ங. பெரருப்பென்பது பொதியின் மலையின் பெயராதலை இந்நூற்பக்கம் ககநி: க - ஆம் குறிப்பால் உணர்க.

ச. வேங்கைமலர் சுணங்குக்கு உவமையாதல், "வேங்கையீ முற்றெழில் கொண்ட சுணங்கணி பூணகம்" (கலி. சுச: உசூ - எ.) என்பதனாலும் அதன்குறிப்பாலும் அறியலாகும்.

(ரீ ரதிதேசம்) ‡ மொழிபெயர † பரப்பின்.

மதவலி *மிகுகடா அத் தவன்(க)யானை மருப்பினுங்
(உ)கதவவாற் றக்கதே தா காழ்கொண்ட விளமுலை

எ-து: (கூ.)வகுப்பமைந்தகுளிர்ந்ததாரினையுடையபாண்டியனது(ச)ஜிகரங்களுயர்ந்த (ரு)பொதியின்மலை யிடத்தழகினையுடையகொத்துக்களையுடைய இளைய வேங்கைப்பூவையொத்த சுணங்கினையுடையாய்! மூத்தவடத்தைத் தன்னிடத்தேகொண்ட நின்னுடைய இளையமுலைகள் இப்பருவத்திலும் அப் பாண்டியனுடைய மிகுதியையுடைய வலியினையும் மிகுகின்ற கடாத்தினையுமுடையயானையினுடையகொம்புகளிலுங்கோபத்தினையுடைய வாயிராகின்றன, இக்கொடுமை இப்பருவத்திற்குத் தக்கதோ ? எ - று.

எனவாங்கு

எ-து: என்று; எ-று. ஆங்கு. அசை.

உக இனைய கூற விறைஞ்சுபு †நிலமோக்கி
‡நினையுபு நெடிதொன்று நினைப்பாள்போன் மற்றங்கே
துணையமை தோழியர்க் காரத்த கன்னல்
மனையாங்குப் பெயர்க்க(ஈ)லென் னறிவகப் படித்தே

க. (அ) "கொடுங்கே ழிரும்புற நடுங்கக் குத்திப், புலிவீழ் யாடிய புலவு நாறு வேழத்தின், றலைமருப் பேய்ப்பக் கடைமணி சிவக்குந்தின், கண்ணே கதவ வல்ல" நற். கூக: சு-எ. (ஆ) "கொடியனவாகொலை யானையின் கோடு" தஞ்சை. சுஅ.

உ. (அ) கதத்தினையுடைய வெண்ணும் பொருளில் 'கதவ' என அஃறிணைப் பன்மைவினைக்குறிப்பு வகர வீற்றுண்வந்தகத்து, "கதவவாற் றக்கதே காழ்கொண்டவிளமுலை" என்பது மேற்கோள்; தொல்: வினை. சூ. உசு. கல். நசு. (ஆ) "தொடலை தையிய மடவான் மகளே, கண்ணினுங் கதவின்முலையே" ஐங். கூசுக.(இ)"கண்ணே கதவவல்ல"நற்.கூக:எ.

கூ. (அ) "வகைத்தார் மீர்பன்" பெருங். (ச) சு: அ. (ஆ) "முறிமிடை படலைமாலை" - 'வகைமாலை' சீவக. கஅசுக. (இ) "பூவார் முறிமிடை படலைமாலை" சூளா. துறவு. உஙு என்பவைகள் இங்கே ஒப்புநோக்கற் பாலன.

சு. (அ) "எற்றரு நெடுஞ்சிமைப், புகலரும் பொதியில்" அகம். கூஉ: கீகூ - சு. (ஆ) "ஓங்குயர் மலையத்து" மணி. க கூ. (இ) கோடிய ரடுக்கத்து" தமிழ்நெறி மேற்கோள்.

ஞ. (அ) "பொதியில், வேங்கையுங் காந்தளு நாறி" குறுந். அசு (ஆ) "அடுக்கத்த, விடர்வளை யெரிவெங்கை யிணர்" கலி. சடு: ககசு-எ.

சு. "என்பால, வெண்ணெவிட்டிகத்தர விறந்தீவாய்" கலி. நிகு அ - கூ.

(பிரதிபேதம்) * கமழ்கடா அத்தவன். † நிலமோக்கி ‡ நினைகுபு. நினையன.

எ-து *இத்தன்மையனவற்றை யான் நெடிதோன் நினையாநின்று கூற அதற்கு ஒன்று கூறுதே கவிழ்ந்து நிலத்தைப்பார்த்துப் பின்னே அவ்விடத்தே தோழியரை நினைப்பாள்போலே தூணையாயமைந்த தோழியர்க்குப்பொருந்தின கண்ணையுடையளாய் என் அறிவைத் தன்னிடத்தே அகப்படுத்திக்கொண்டு †தன்மனைபிடகதே மீண்டுபோனாள்; எ - று. .

இஃது எமஞ்சாலாவிடும்பையெய்திக் கூறினது.

நெடிதோன்று நினையாநின்றென்றது தான் சிறிதுகாட் சென்றால் வரைந்துகோடலே நினையாநின்றென்றதாகக்கொள்க. நினைப்பான்போலென்றதனால் அவன் கூற்றினையும் இதுவுமொன்றெனச சிறிதுகொண்டமையுந் தோன்றிற்று.

இதனால், தலைவற்கு அசைவென்னும் உவகை பிறந்தது.

‡இஃது எழுதித்தரவும் நான்கடிதாழிசையுங்கனிசசொல்லும்நான்கடிச சுரிதகமும்பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (உக)

(நுஅ) யாருறு வணரைப்பால வணங்கிறை நெடுமெனறோட்
பேரெழின் மலருண்கட் பிணையெழின் மாநோக்கிற்
காரெதிர் தளிர்போனிக் கவின்பெறு சுடர்நுதற்
கூரெயிற்று முகைவெண்பற் கொடிபுரையு நுசுபினெய்
தேரிலம் பரியாரப்ப நிரைதொடிக்கை விகினை
யாருயிர் வெளவிக்கொண் டறிந்தீயா திறப்பாய்கேள்;

எ உளனுவென் னுயிரையுண் டியவதோய் கைம்மிக
வினைபபா னுணராதாய் நின்றவ றில்லானுங்
களைகரி னேஞ்செய்யுங் கனிணறிந் தணிந்துதம்
வளைமையாற் போத்தந்த நுமர்தவ றில்லெனபாய்;

கக நடைமெலிந் தயர்வுநீ இ நாளுபொன் னலியுதோய்
மடமையா னுணராதாய் நின்றவ றில்லானு
மிடைநில்லா தெய்க்குநின் னுருவறிந் தணிந்துதம்
முடைமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்;

கஉ அலலல்கூர்ந் தழிவுற வணங்காகி யடருதோய்
சொல்லினு மறியாதாய் நின்றவ றில்லானு
மொல்லையே யுயிர்வெளவு முருவறிந் தணிந்துதஞ்
செல்வதாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்;

எனவாங்கு;

(பிரதிபேதம்) எனறீதனனையன † தன்னிடதே மீண்டுபோனு சொனனேமஞ்சாலா விடும்பை யெயகிக்கூறினன். நெடி ‡இது ஏழடி.

ஒறுப்பெ்யா னெறுப்பது துமரையான் மற்றிங்நோய்
பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயிற் பொலங்குழாய்
மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி
நிறுக்குவென் போல்வல்யா னீபடு பழியே.

இதுவும் அது:

இதன் பொருள்.

(க) வாருறு (உ)வணரைம்பால் வணங்கிறை நெடுமென்றோட்
பேரெழின் மலருண்கட் (ங)பிணையெழின் மானேக்கிற்
(ச)*காரெதிர் தளிர்மேனிக் கவின்பெறு †சுடர்நுதற்
கூரெயிற்று முகைவெண்பற் கொடிபுரையு நுசுப்பினுப்
நேர்சிலம் பரியார்ப்ப ‡நிரைதொடிக்கை வீசினை
யாருயிர் வெளவிக்கொண் டறிந்தீயா திறப்பாய்கேள்

எ-து: கோதுதலுற்றகடைகுழன்ற(ரு)ஐம்பாலினையும்வளைந்தஇறையினை யுடைய நெடிய மெல்லிய தோளினையும் பெரிய அழகினையுடைய ||மலர் போலுங் கண்ணினையும் மான்பிணையினது அழகினையுடைய வெருவின நோக்குப்போலும் நோக்கினையும் மழையைப்பெற்ற தளிர்போலும் நிறத்தினை யும் அழகுபெறுகின்ற பிறைபோன்ற நுதலினையும் (சு) வீழுந்தெழுந்த கூரிய

க. "வாருறு வணர்கதுப் புளரி" குறுந். அஉ.

உ. (அ) "வணரைம்பால்" கலி. நெய்: க. (ஆ) "வணர்சுரி யைம்பாலோய்" சிலப். எ: ஙக.

ங. (அ) "பிணையெழின் மானேக்கின்" (கலி. உ.எ: ங) என்பதும் அதன் குறிப்பும்(ஆ)"மான்பிணையன்ன மிகுழ்மடநோக்கே"(புறம்.ஙஙிசு:கூ.) என்பதும் ஈண்டறிதற்பாலன.

ச. "தளிபொழி தளிரன்ன வெழின்மேனி" கலி. கங: ககு.

ஞ. (அ). "நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன, வைவகை பாராட்டி ஞ்மற்றெங் கூந்தற், செய்வினை பாராட் டினையோ வையு" (ஆ) "இளையவு ரைம்பால் போல்" கலி. உஉ: கஉ-சு, உசு: சு.

ரு. (அ)^போழுறு பகுவாயிற் பொலிதரு மெயிறேரும், வீழுறுநகையாலும் வீரிகுரு நியினுலும், தாழுறு மதிதன்னைத் தாரகை நிரைசூழ, ஆழுற வமர்செவ்வா னெத்ததவ் வுழியன்றே" கந்த. முதனூட்பானு. கசஅ.

(பிரதிபேதம்) * காரெதி ரொளிர்மேனி, † பிறைநுதற், ‡ நிரைதொடி வீசினை, || மலர் போலும் அழகிய மான்போலும் கண்ணையும் மேகமறைத்தலாற் சுடரெதிர் தோன்று மிங்ஙனதப்போலும் அழகிய நுதலினையும் வெள்ளிய பல்லினையு முடைய.

எயிற்றினையும் விழுந்தெழாத முகைபோலும் வெள்ளிய பல்லினையுமுடைய கொடியையொக்கும் இடையினையுடையாய்! காலுக்குப்பொருந்தினசிலம்பின் உள்ளிமணி ஆரவாரிப்ப நிரைத்த தொடியையுடைய கையை வீசினையாய்ப் பெறுதற்கரிய என்னுயிரைக்கொண்டு இளமையாற்கைக்கொண்டதனை அறியாதே போகின்றவளே! யான் கூறுகின்றதனைக் கேள்; எ - று.

எ (க)உளனுவென் னுயிரையுண் (உ)டெவுநோய் *கைம்மிகு
விளமையா னுணராதாய் நின்றவ நில்லானுங்
கிளரரி னேய்செய்யுங் கவினறிந் தணிந்துதம்
வளமையாற் போத்தந்த நுமர்தவ நில்லென்பாய்

எ-து: வருத்தத்தினையுடைய(ங)காமநோய்கைம்மிகும்படியாகயான்றிறது உயிருடனே இருக்கும்படி என்னுயிரை வாங்கிக்கொண்டு நின் இளமைப் பருவத்தாலே அறியாமற் போகின்றவளே! நின்னிடத்துத் தப்பில்லையாயினும் (ச)நின்னையொழியப் போக்குவார் பிறர் இல்லாத நோயைச்செய்யும் அழகையறிந்துவைத்தும் அதன்மேலே (ஞ) ஒப்பித்துத் தஞ் செல்வச்செருக்காலே புறப்படவிட்ட நும்முடைய சுற்றத்தாரைத் தவறுடையரல்லரென்று கூறலாமாகிற் கூறு; †அஃது அரிது; எ - று.

கக நடைமெலிந் தயர்வுறீஇ நாளுமென் னலியுநோய்
படமையா னுணராதாய் நின்றவ நில்லானு

(அ) "மூளையெயிறு நிரம்பா விளமைப் பருவத்து" தமிழ்நெறி. மேற்கோள். (இ)"முன்ப லரும்பிய பாலுறு செவ்வாய்ப், புன்றலை மகாஅர்" ஆசிரியமாலை.

க. (அ) "உண்ணின்ற நோய்மிக வுயிரெஞ்சு துயர்செய்தல், பெண்ணன்று" கலி. சுஎ: சு - எ. (ஆ) "இலனென்று தீயவை செய்யற்க" (குறள்.உஎநி) என்புழி இலன்என்பதில் அன் விகுதி தனித்தன்மையில் வந்ததென்பதற்கு, "உளனுவென் னுயிரையுண்டு" என்பதைமேற்கோள் காட்டினர்; பரிமேலழகர்.

உ. (அ) "உயவுநோய்க் குயிர்ப்பாகி" (ஆ) "உயவுநோய்க் குய்யுமாறுரைத்துச்செல்"கலி. நடுநி: உஉ, ககங: ங. (இ) "உயாவே யுயங்கல்" தொல். உரி. சூ. எக.

ங. "காமங் கைம்மிகிற் றூங்குத லெளிதோ"

ச. (அ) "நின்முகத் தான்பெறி னல்லது கொன்னே, மருந்து பிறிது யாது மில்லேல்" கலி. சுஎ: உஎ - உக. (ஆ) "பிணிக்கு மருந்து பிறமணணியிழை, தன்னோய்க்குத் தானே மருந்து" குறள். கசஎஉ.

ஞ. ஒப்பித்தல் - அலங்காரித்தல்.

(பிரதிபேதம்) * கைமிக, † அது அரிது (தாழிசை மூன்றினுரையிலும்).

(h)மிடைதில்லா தெய்க்குதின் னுருவறிந் தணிந்துதம்
முடைமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்.

எ - து: (உ)அறிவு நிறை தூர்ப்புக் கடைப்பிடி என்னும் ஒழுக்கந் தேய்ந்து மறத்தலே எனக்கு உறுத்தி நாடோறும் என்னை* நலிதற்குக் காரணமான் நீ செய்த நோயை நினது மடப்பத்தாலே அறியாமற் போகின்றவளே! நின்னிடத்துத் தப்பில்லையாயினும் நிற்கமாட்டாதே இலைக்கும் இடையையுடைய *நின் வடிவை அறிந்துவைத்தும் அதன்மேலே ஒப்பித்துத் தஞ்செல்வச்செருக் காலே புறப்படவிட்ட நும்முடையசுற்றத்தாரைத் தவறுடையரல்லரென்று கூறலாமாகிற் கூறு; அஃது அரிது; எ - று.

கஙி அல்லல்கூர்ந் தழிவுற வணங்காகி யடருநோய்
சொல்லினு மறியாதாய் நின்றவ றில்லானு
மொல்லையே யுயிர்வௌவு முருவறிந் தணிந்துதஞ்
செல்வத்தாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்

எ - து: நெஞ்சழிந்து வருத்தமிக்குக் கெடும்படி வருத்தமாகி மேன் மேலும் அடர்ந்துவருகின்றகாமநோயைக் குறிப்பான்† அறிதலன்றிச்சொல்லிக் காட்டினும் அறியாதனளே! நின்னிடத்துத் தப்பில்லையாயினும் ஒழுக உயிரைவாங்காது விரைய உயிரைவாங்கும் நின் வடிவை அறிந்துவைத்தும் அதற்குமேலே ஒப்பித்துவைத்துத் தஞ் செல்வச்செருக்காலே புறப்படவிட்ட நும்முடைய சுற்றத்தாரைத் தவறுடையரல்லரென்று கூறலாமாயிற் கூறு; அஃது அரிது ; எ - று.

ஆயினும், ஆனுமெனக் குறைந்து‡நின்றது. அழிதகவென்றும் பாடம்.
மௌவாங்கு, அசை.

உ0 ஒறுப்பிலாய் செறுப்பது நாணையா மற்றிந்நோய்
(h)பொறுக்கலாய் வரைத்தன்றிப் பெரிதாயிற்(ச) பொலங்குழாய்

க. "பிணையேர்மடநோக்குநாணுமுடையாட், கணையெனவேஎ வேதிலதந்து" (குறள். கo அக.) என்பதற்கு, பரிமேல் எழுதிய உரையும், 'இவட்குப் பாரமாதலும் எனக்கு அணங்காதலுங் கருதாமையின், அணிந்தார் அறிவிலரென்பதாம்' என்னும்விசேடவுரையும் இங்கே அறிதற்பாலன.

உ. அறிவு முதலியவற்றின் பொருள், இந்நூலிறுதியிலுள்ள அகராதியில் விளக்கப்பெறும்.

ங. (அ) "பொறைநில்லா நோயோடு" (ஆ) "உரிதென் வரைத்தன்றி யொள்ளிழை தந்த, பரிசழி பைதலேஎய்" கலி. ங: ச; கஙஎ: உo - உக.

ச. "பொன்னென் இளவி" (தொல். புள்ளி. சூ. ஙக) என்னும் சூத்திரமும் அதற்கு இளம். நச். எழுதியுள்ள உரையும் நோக்குக.

(பிரதிபேதம்) * நின்னையறிந்து, † அறிதலின்றி ‡ நின்றது எனவாங்கு ஆங்கசை ஒறுப்பின்.

மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி
நிறுக்குவென் போல்வல்யா னீபடு பழியே

எ - து: யான் ஒறுத்துக்கூறில் ஒறுப்பது புறத்துப்போதவிட்ட நும் முடைய சுற்றத்தாரை; நின்னையன்று; பின்னை இக்காமநோய் பொறுக்கலாம் அளவையுடைத்தன்றி மிகுமாயிற் பொன்னுச்செய்த குழையினையுடையாய்! யான் இங்ஙனம் வருந்துகின்றநிலைமையைப் போக்கி இவ்வூரின் மன்றத்தின் கண்ணே மடலேயேறி நீ எய்துகதொரு பழியை யான் உனக்கு நிறுத்துவேன் போலே இராநின்றேன், நீ அதனை *அறி; எ - று.

இது சொல்லெதிர்பெரு அன் சொல்லியின்புற்றது. (க)

அவளுந் தமருந் தீங்குசெய்தாராக அவளொடு தீங்கைப் புணர்த்தும் தான் ஏதஞ்செய்யாது உயிர்கொடுத்தானுகத் தன்னெடு நன்மையைப் புணர்த்தும் கூறியவாறு காண்க.

அவன் இங்ஙனம் மிகுதி கூறுவான், மடலேறுவேன் போல்வலெனை ஐயுற்றுக்கூறினான்.

இதனால், தலைவற்கு அசைவென்னும் உவமை பிறந்தது.

†இஃது ஆறடித்தரவும், நான்கடித்தாழிசையும் பொருள்பெறுத தனிச சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (உஉ)

(நிகூ.) தேளெரிந்து பிணிவிடுத்த பாசடைத் தாமரை
முளைநிமிர்ந் தவைபோலு முருத்துக்கோ லவிர்தொடி
யடிக்கநர் நலிகமந்த ணுண்ணீர்த்தண் ணீரருவிற்
றுடுப்பெனப் புரையுநின் றிரண்டநே ரரிமுன்கைச்
நி சுடர்மிரி விளைவாய்ந்த தூதையும் பாவையும்
விளையாட வரிப்பெய்த வழகமை புனைவினை
யாய்சிலம் பெழுந்தார்ப்ப வஞ்சில வியலுகின்
பின்னுவிட் டிருளிய வைம்பால்கண் டென்பால
வென்னைவிட் டிகத்தர விறந்தீவாய் கேளினி;

க. தொல். அகத். சூ. கூ0. இச்சூத்திர வுரையில் இப்பாடலை மேற்கோள் காட்டி, தான் உயிர்கொடுத்தானுகத் தனது நன்மை கூறி, அவளது தீங்கெல்லாங் கூறுவான் மடலேறுவேன் போலுமென்று ஐயுற்றுக் கூறியவாறு காண்க. அவரைச்சொல்லுதலே தனக்கு இன்பம்தலிற் "சொல்லியின்புறல்"என்றார். என்பர். நச்.இ-வி. உரைகாரரும் இ-வி. இகக-ஆம் சூத்திரவுரையில் இதனை மேற்கோள்காட்டி இறுதி வாக்கியத்தை எழுதினர்.

(பிரதிபேதம்) * அறியெனச் சொல்லெதிர் பெருன சொல்லியின்புற்றன அவளும். † இது ஒத்தாழிசைக்கலி.

கo மாருளியான் மருளுற விவனுற்ற தெவனென்னு
மருளிலை யிவட்கென வயலார்நிற் பழிக்குங்கால்
வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையினீ ராடிய தவந்தலைப் படுவாயோ;

கச உருளிழா யொளிவாட் விவனுண்ணே யாதென்னு
மருளிலை யிவ்ட்கென வயலார்நிற் பழிக்குங்காற்
பொய்தல மகளாயப்ப் பிறர்மனைப் பாடிநீ
யெய்திய பலர்க்கீத்த பயம்பயக் கிற்பதோ;

கஅ ஆய்தொடி யைதுயிர்த் திவனுண்ணே யாதென்னு
நோயிலை யிவட்கென நெறுமலர் பழிக்குங்காற்
சிறுமுத்த னைப்பெணிச் சிறுசோறு மிதனுநீ
நறுநுத லவரொடு நக்கதுநன் னியைவதோ;

எனவாங்கு;

உந அனையவை யுளையவும் யானினக் குரைத்தனை
யினையநீ செய்ததுத வாயாயிற் சேயிழாய்
செய்ததன் பயம்பறு விடாகு
நயம்பற்று விடனில்லை நசைஇயோர் திறத்தே

இஃது இரந்துகுறையுற்றுப் பின்னின்ற தலைவன் ஆற்றுளித் தலை வியைநோக்கி இங்ஙனம் வருத்துவையாயின் நீ செய் தவம் இன்றுமெனக் கூறியது.

இதன் பொருள்.

கூளெகிழ் பிணிநிவந்த பாசடைத் (க)தாமரை
முளை*நிமிர்ந் தவைபோலு முத்துக்கோ லவிர்தொடி
(உ)யடுக்கநா றலர்காந்த †ணுண்ணேர்தண் ணேருநுவிற்
(ங)றுப்பெனப் புரையுநின் றிரண்டநீ ரரிறன்கைச்

க. "தர்மை, முளைநிவந் தவைபோலு முத்துக்கோ லவிர்தொடி" என்பதை, குறிப்பு மொழியுள், விகாரத்திற்கு மேற்கோள் காட்டி, கோலமென்பது கோலெனக் கடைக்குறைந்து வந்ததென்பர். மயிலை நாதர்; நன். பெயர். சூ. கஉ

உ. (அ) "சிலம்புடன் கமழு மலர்குலைக காந்தள்" குறுந். உஙசு. (ஆ) "நறுந்தண் சிலம்பி ஞறுலைக் காந்தள்" ஐங். உஉசு.

ங. (அ) "துடிப்பெனப் .. .. .. விளையாட" என்பது, ஒரு வேற்றுமை யுருபு தொடர்ந்தடுத்துவந்த சொற்கள் ஒரு முடிக்குஞ் சொல்லால்

(பிரதிபேதம் * நிவந்தவை. †தண்ணே ரேருவிற.

நே சுடர்விரி * விரைவாய்ந்த (க) தூதையும் பாவையும்
விளையாட வரிப்பெய்த வழகமை புனைவினை
(உ)யாய்†லெம் பெழுந்தார்ப்ப வஞ்சில வியலுநின்
பின்னுவிட் டிருளியீ வைம்பால்கண் டென்பால
வென்னைவிட் டிகத்தர விறந்தீவாய் கேளினி

எ - து: ‡முறுக்கு அவிழ்ந்ததும் அரும்புகள் நீருக்குமேலேதங்கின பசிய இலையினையுடையதுமான தாமரையினது வளையம் வளர்த்தவைபிற்றை யொக்கும் (கூ) முத்தை அழுத்திச்செய்த திரட்சியையுடைய விளங்குகின்ற தொடியினையுடைய, அடுக்கமெல்லாம் நாறுகின்ற கூரிய அழகினையுடைத் தாகிய அலர்களையுடைய காந்தளினது குளிர்ந்த (ஈ)எழுச்சியையுடைத்தாகிய வடிவினையுடைய தூதுப்பெண்ணு கூறும்படியாக ஒக்கும் திரண்ட் தம்மில் இணையொத்த மெல்லிய முன்கையிலுலே(நே)இங்குலிகம் எழுதின ஒளிவிரிந்த

முடிந்ததற்கு மேற்; தொல். வேற் - மய. சூ. ககூ. நச். (ஆ)"காந்தளந் துடுப்பிற் கவிகுலே யன்ன, செறிதொடி முன்கை" பட். கநிஙூ - சா. (இ)"காந்த ணறுங்குலே யன்ன, நலம்பெறு கையினெண் கண்புதைத் தோயே" ஐங். உகஙூ. (ஈ) "கைபோற் பூத்த கமழ்குலைக் காந்தள்" பரி. ககூ: எசு.(உ)"பஂறுடுப் பெடுத்த வலகுகுலைக் காந்த, ளணிமலர் நறுந்தா தூதுந் தும்பி, லீகையாடு வட்டிற் ரேன்ற, மையாடு சென்னிய மலைகிழ வோனே" அகம். கஂஅ: கநி - கஅ. (ஊ)"காம்பமை லிலம்பிற் கடிநாட் காந்தட், பூந்துடுப் பன்ன முன்கையின்" (எ) "காந்தட், பூந்துடுப் பன்ன புனைவுளை முன்கை" பொருந். (உ) கநி: எஙூ - சு; (ஈ) ஙக: எஅ - கூ. (ஏ) "கைவிரிந்தன காந்தளும்" தூளா. நாமி. ஙக.

க. "மண்டிணை யாக்கிய சோறுந் திடமகிழ்ந்தார்" மறைசையந்தா. உரு.

உ "இன்மணிச லிலம்பிற் சின்பொழி யம்பாற், பின்னெடு கெழீஇய தடவர" கலி. கஉநி: ஙகூ-எ

ஙூ. (அ) "கைக்குவான்முத்தின் சரிவுளை பெய்தது" திருவாரூர்த்திருவிசைப பா. க. (ஆ)"துணிகதிர் முத்திற் செயத வங்கதந் தோளிற்பூட்டி"(இ) "நிலவுமிழ் மணியிற் செய்த வங்கத நெடுந்தோள் சாத்தி" காஞ்சி. திருமண. நகூ. சுஅ.

ச. "எராலது எழுசிஞி; அது எழுகின்ற ஃலைமையென நிகழ்காலமே குறித்துநிற்கும்" என்பது (தொல். பொருளி. சூ. நிஙூ. நச்.) ஈண்டும் நோக்கற் பாலது.

ஞ. இங்குலிகம் - சாதிலிங்கம்.

(பிரதிபேதம்) * வரியாபதத, வரியாய. † லெம்பரி யாரப்ப வஞ்சிலவியலும், லெம்பரி பெழுந்தாரப்ப. ‡ஈனெஞ்சிழ் தாமரை முறுக்கவிழ்ந்த தாமரை பினிலிவாத பாசடைதாமரை - அரும்புகள நீருக்குமேலே யோங்கின பசிய விலையினை யுடைய தாமரை; தாமரைவண்ணம் வளர்த்த.

தொழில்களையுடையவாகிய வாய்களையுடைய மரத்தாற்செய்த நெறபானை யாலும் பாலையாலும் விளையாடுதற்கு, உள்ளிடுமணியிட்டு அழகமைந்தபுனைத்த தொழில்களையுடைய அழகிய *சிலம்புகள் மிக ஆரவாரிப்ப அழகினையுடைய சில அடியிடாநடக்கும் நின்னுடைய இளமை நீங்குதலாற் பின்னுதல் விட்டு இருண்ட ஐம்பாலைக்கண்டு என்னிடத்துண்டாகிய(க) அறிவுமுதலியனவென்னை விட்டுப் போம்படியாகப் போகின்றவளே! யான் கூறுகின்றதனை இப்பொழுது †கேள்; எ – று.

தளைநெகிழ்தாமரை, பிணிநிவந்தபாசடைத்தாமரையென்க.

கo மருளி(உ)யான் மருளுற விவணுற்ற தெவனென்னு
மருளிலை யிவட்கென வயலார்நிற் பழிக்குங்கால்
வைபெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
(h)தையினீ ராடிய தவந்தலைப் படுவாயோ

எ – து: யான் மயக்கமுறுகையினாலே அதுகண்டு தானும் மருண்டு இவணுற்ற நோய் யாதுதானென்று கேட்கும் அருள் இவட்கு இல்லை யென்று யான் ‡கூற, அதுகேட்டு அயலார் நின்னைப் பழிக்குமளவிற் கூரிய

க.• "மனையாங்குப் பெயர்ந்தாளென் னறிவகப் படுத்தே" கலி. நெய்: உசு.

உ. "ஆருயிர் யாதொன் றிடருறு மாங்கதற், கோருயிர் போல வருளி யுயக் கொள்ள, நேரி னதுமுடி யாதெனி னெஞ்சகத், தீர முடைமையருளி னியல்பே" சூளா. துறவு. கஎo.

ங. நீராடலும் தவமென்பது (அ) "நீஇ நாடல்.....எற்ற தவத்தி னியல்பென மொழிப" (தொல். புறத்திணையியல். சூ.உo. மேற்.) (ஆ) "தவந்தி போகு மருமறைத்தாபதர்" கல்: சு: கக. (இ) "சங்கையி னதிகண் முற்று மாடிய தவத்தின் பேறும்" திருவிளை. தலவிசேடப். கக. என்பவற்றால் அறியலாகும். (ஈ) "தையினீராடுதல் மகளிர்க்கு உரிய தென்பது, "இன்று இவ்வூரார்யெல்லாந் தைந்நீராடுப" என்பது உயர்திணைக்கண் தொழிலிற் பிரிந்த ஆண்ணெழி மிகுசொல்லுக்கும் (தொல். கிளவி. சூ. நிo. இள;) உயர்திணை ஆண்ணெழி வினைக்கும் (நன். பொது. சூ. க. மயிலை) (உ) "இவ்வூர்மக்களெல்லாம் தைந்நீராடினர்" என்பது பெண்பாலென வினையினற்பொருள்விளங்கிற்றென்பதற்கும் (தொல். கிளவி. சூ. நிக. 'அவற்றுள் வினைவேறு' தெய்.) (ஊ) "இன்று இச் சேரியார் தைந்நீராடுவர்" என்பது உயர்திணையிடத்துத் தொழிலிற் றோன்றும் ஆண்ணெழி மிகுசொல்லுக்கும் (நேமி. சொல். கக. உரை) (எ) "மருவூரார் தைந்நீராடினர்" என்பது வினைச்சொல் உயர்திணை ஆணையொழித்து வந்ததற்கும் (நன். பெயரி. சூ. கஉ. மயிலை.) மேற் கோள்களாகக் காட்டப்பெற்றிருத்தலால் விளங்கும். அவருள்ளும்

(பிரதிபேதம்) * சிலம்புமிக் காரவாரிப்ப, சிலம்புகள் மிக்காரவாரிப்ப † கேள். மருளியான், ‡ கூறுவது கேட்டவயலார்.

எயிற்றினையுடைய இளையமகளிர்க்கு நடுவே வருப்புடைய கோலத்தாலே பொலிவுபெற்று நீ நைதத்திங்களில் நீ ராடிய(த) தோன்பின் பயனைப் பெறுவை யோ? பெருய்காண்; எ - று.

கஞ் உருளிழா பொளிபாட்ட விவணுண்ணே யாதென்னு
மருளிலை யிவட்கென வயலார்நிற் பழிக்குங்கால்
பொய்தல மகளைபாய்ப் பிறர்மனைப் பாடிநீ
யெய்திய *பலர்க்கீத்த பயம்பயக் கிற்பதோ

எ - து: தலையிற் கிடந்து அசையும் (உ) தலைப்பாளையையுடையவளே! ஒளிகெடும்படி இவண்மனத்தில் உண்டாகிய நோய் யாதென்று கேட்கும் அருள் இவட்கு இல்லையென்று யான்†கூற அது கேட்டு அயலார் நின்னைப் பழிக்குமளவில் நோன்பாகிய விளையாட்டினையுடைய மகளாந்தன்மையை யுடையையாய்ப் பிறர் மனையின்கண்ணே ஐயமேற்றுப பாடி நீ ஆண்டுப் பெற்ற வையிற்றைப் பிறர்க்குக் கொடுத்ததனுலுள்ள பயன் நினக்குப் பயன் தருவதொன்றோ ? காராதுகாண் ; எ - று.

பொய்தல, அகரஞ் செய்யுள் விகாரம்.

கஅ ஆய்தொடி யைதுயிர்த் திவணுண்ணே யாதென்னு
நோயிலை யிவட்கென நொதுமலர் பழிக்குங்காற்
(h)சிறுமுத்த நகைப்பேணிச் சிறுசோறு மடுத்துநீ
†நறுநுதல வவரொடு நக்கதுநன் கியைவதோ

எ-து: ஆராய்ந்திட்ட தொடியினையுடையாய்! நீதான் ஐதாக உயிர்த்து இவன்மனத்திலுண்டாகிய நோய் யாதென்று கேட்கும் நோய் இவட்கு இல்லை யென்று யான் ||கூற அது கேட்டு அயலார் நின்னைப்பழிக்குமளவிற் சிறிய

கன்னியர்க்கே உரியதென்பதை, (ஏ) "நறவி யைம்பான் மகளிராடுந், தைஇத் தண்கயம் போலப், பலர்படிந்து" (ஐங். அசை.) (ஐ) "தாயருகா நின்று தவத்தைநீ ராடுதல்" (பரி.கக.கூக.) என்பவை வலியுறுத்தும்.

க. நோன்பின் பயன், சிறந்தவனைக் கணவனுகப் பெறுதலென்ப.

உ. "நடுச்சிகை முத்துத்தாமம்" (சீவக. உளகூ) என்பதற்கு, 'சிகைநடு விற் றலைப்பாளை' என்று இவ்வுரையாசிரியரும் 'தொய்யகம்" (சிலப். கூ: கo எ.) என்பதற்கு, 'தலைப்பாளை' என்று அரும்பத வுரையாசிரிய ரும் 'பூரப்பாளை' என்று அடியார்க்கு நல்லாரும் எழுதியிருப்பவை இங்கே அறிதற்பாலன.

ரு. "குறுநிலக் கோமா னந்த, முத்தினை யன்றிப் பின்னை யாரையே மூதன்மை செய்தான்" வில்லி. சூதுபோர். கச.

(பிரதிபேதம்) * பலர்கூய்த்த, † கூறுவது கேட்டு அயலார், ‡ நறுநுதலவரொடு நக்கதுன்கு ||கூறுவதுகேட்டு அயலார்.

குழமகனைப் பேணி வளர்த்து அவனுக்கு வேறொருத்தியுடைய (க) *பெண் மகனைக் கோடற்குச் சிறுசோற்றைச் சமைத்து ஆயத்திற்கு இட்டு நீ நறிய தூதலையுடைய மகரிரோடே மகிழ்ந்த தோன்பின் பய்ன் நினக்கு வந்து பொருந்துமோ ? பொருந்தாது †காண்; எ - றும்

எனவாங்கு

எ-து: என்று; எ-று. ஆங்கு, அசை.

உகூ அனையவை (உ)யுளையவும் யானினக் குரைத்ததை
‡யினையநீ செய்ததுத வாயாயிற் சேயிழாய்
செய்ததன் பயம்பற்று விடாது
||நயம்பற்று விடினில்லை நசைஇயோர் திறத்தே

எ - து: ÷நீ நெஞ்சுளையவும் யான் நினக்குக்கூறியது சேயிழாய்! நின்னை நச்சினேர் திறத்தே வருந்தும்படி நீ செய்த கொடுமைக்கு நீ ஓர் உதவிசெய்யாயாயின் நீ செய்த (ங)அத்தீங்கினுளுள்ள பயன் நின்னைப் பற்றுதல் விடாது,

---

க. இச்சொல், ''பெண்மையடித்த மகனெண் கிளவி'' (தொல். பெயரி. சூ. கூ, கo) என்றும் ''மகடூஉ மருங்கிற் பாறிரி கிளவி'' (தொல். பெயரி. சூ. சo) என்றும் ஆசிரியரால் வழங்கப்பெறுதலும் ''பெண்மையடித்த மகனென் கிளவி'' (தொல். பெயரி. சூ. கo) என்பதற்கு, 'புறத்துப் போய் வீளையாடும் பேதைப்பருவத்துப் பெண்மகளை மாறேகத்தார் இக்காலத்தும் பெண்மகனென்று வழங்குப' என்று சேனாவரையராலும் 'கட்புலனுயதோர் அமைதித்தன்மை யடைத்து நாணுவரை யிறந்து புறத்து வீளையாடும் பருவத்தாற் பால்திரிந்த பெண்மகனென்னும் பெயர்சொல்' என்றும் 'பெண்மகனெண்பது அத்தன்மையாரை அக்காலம் 'அவ்வாறே வழங்கினராயிற்று' என்றும் இவ்வுரையாசிரியராலும் விளக்கம் எழுதப்பெற்றிருத்தலும் இங்கே அறிதற்பாலன.

உ. ''உளைய வுரைத்து'விடினு முறுதி, இளைகள்வாய்க் கேட்பது நன்றே'' பழமொழி. உகக

ங. (அ) ''உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா'' நாலடி. கoச. (ஆ) ''வேண்டினும் வேண்டா விடினு, முறற்பால, நீண்டா விடுத லரிது'' நாலடி. கoக. பழ. சுஉ. (இ) ''வினைப்பகை, வீயாது பின்சென் றடும்'' (ஈ) ''உறற்பால, ஓட்டா கழியு மெனின்'' (உ) ''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான்முந் துறும்'' குறள். உoஎ, ஙஎஅ, ஙஅo. (ஊ) ''ஒளிப்பினு மூழ்வினை யூட்டாது கழியாது'' இறை. சூ. உ. உரை. மேற்கோள். (எ)''ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்'' சிலப். பதி. நிஎ.

(பிரதிபேதம்)* பெண் மகளை. † காண் ஆங்கசை. ‡ இனையநீ || நயம்பற்றி ÷ என்றீ

அதுவேயுமன்றி (க) நீ அருளைப் பற்றவிடுவையாயின் நினக்கு அனையவை பயன் றருதலில்லை; . *எ - று.

நச்சினார்க்கினியர் தன்னைப் பிறர்போற் கூறினான். நயம் - அருள். அனையவையென்றது, (உ) தைந்நீராடன் முதலியவற்றை.

இதனால், தலைவற்கு இழிவுபிறந்தது; தலைவிக்குச் †சூழ்ச்சிபிறந்தது.

‡ இஃது ஒன்பதடித்தரவும் நான்கடித்தாழிசையும் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (உஙூ)

(கூ0.) சுணங்கணி வனமுலைச் சுடர்கொண்ட நறுநுதன்
மணங்கமழ் நறுங்கோதை மாரிவீ ழிருங்கூந்த
லுணங்கெழி லொண்டித்தி நுழைதொசி படமருங்குல்
வணங்கிறை வரிமுன்கை வரியார்ந்த வல்குலாய்;

கூ கண்ணுரிந்த நலத்தாரைக் கதுமெனக் கண்டவர்க்
குண்ணின்ற நோய்மிக வுயிரெஞ்சு துயர்செய்தல்
பெண்ணன்று புணையிழா யெனக்கூறித் தொழுஉந் தொழுதே
கண்ணுநீ ராக நடுங்கின னின்னகர்
யென்செய்தான் கொல்லோ விஃதொதந் றன்கட்

கo பொருகளி றன்ன தகைசாம்பி யுள்ளூ
ருருவான் போலு முடைந்து;

கஉ தெருவின்கண், காரண மின்றிக் கலங்குவார்க் கண்டீ
வாரண வாசிப் பதம்பெயர்த்த லேதில
நீநின்மேற் கொள்வ தெவன்;

கரு அலர்முலை யாயிழை நல்லாய் கதுமெனப்
பேரம ருண்கணின் வீழுமி யுநீ இய
வாரஞ் செவ்வ முயிர்வாங்கு
மற்றிந்நோய் தீரு மருந்தருளா யொண்டொடீ;

கசு நின்முகங் காணு மருந்தினே னென்னுமா
னின்முகந் தான்பெறி னல்லது கொன்னே

க. (அ) "நல்லாற்றூ ஞடி யருளாள்க பல்லாற்றூற், றோரினு மஃதே துணை" (ஆ) "அருளற்றூ, ரற்றூர்" குறள். உசஉ, உசஅ; (இ) "அறனு, மருளுடையான் கண்ணதேயாகும்" (ஈ) "நெஞ்சுந்த, வருளினு ஞகு மறம்" சீறுபஞ்ச. கூ, நடு.

உ. "தைஇத் திங்கட் டண்கயம் படியும், பெருந்தோட் குறுமகள்", (நற். அo: எ-அ.) ஞனவருதலும் காண்க.

(பிரதிபேதம்) *ஆகலினென்றான் †சூட்சி, ‡ இது ஒத்தாழிசைக்கலி.

மருந்து பிறிதியாது மில்லேற் றிருந்திழா
யென்செய்வாங் கொல்லினி நாம்;
பொன்செய்வாம்;

உசா ஆறு விலங்கித் தெருவின்க ணின்றுருவன்
கூறுஞ்சொல் வாயெனக் கொண்டதன் பண்புணராந்
தேற லெளிதென்பா நாம்;
ஒருவன் சாமா றெளிதென்பா மற்று;

உஅ சிறிதாங்கே, மாரூஉ ரம்ப லலரி னலர்கென
நாணு நிறையு நயப்பில் பிறப்பிலி
பூணுக நோக்கி யிமையா னயந்தூங்
கேண்மை விருப்புற் றவணை யெதிர்நின்று
நாணடப் பெயர்த்த நயவர வின்றே.

இது தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகளோடு உறழ்ந்து அவனது குறைநயப்பக் கூறியது.

இதன் பொருள்.

(க)சுணங்கணி வனமுலைச் சுடர்கொண்ட நறுநுதன்
மணங்கமழ் நறுங்கோதை (உ)மாரிவீ ழிருங்கூந்த
லுணங்கெழி *லொண்டித்தி நுழை(ங)நொசி மடமருங்குல்
வணங்கிறை வரிமுன்கை வரியார்ந்த வல்குலாய்

க (அ) "சுணங்கணி யாகத், தீர்க்கிடைப் போகா வேரிள வனமுலை" பொருந. ஙஙி – ஙசு (ஆ) "பொன்பெறு பூஞ்சுணங்கின் மென்முலை யாய்" சீறுபஞ்ச. சஅ.

உ. "மாரிவீழிருங்கூந்தல்" கலி. கச: ச; கஙக: உக. "தத்த மரபிற் றோன்றுமன் பொருளே" என்னுஞ் சூத்திரவுரையில், 'மரபு என்பது பயிற்சியை; இதனுளே நூல்செய்கின்றகாலத்து வினைமுதலாகிய பொருள்கள் ஓதிய வாய்பாட்டான்வருதல் பெருவழக்கென்று கொள்ளப்படும்' என்று கூறி வினை முதலியவற்றுக்குப் பாகுபடத் துணர்த்தப்பட்ட சொற்களன்றி மரபாற் பிறசொல் வந்ததற்கு, 'மாரிவீ ழிருங்கூந்தல்' என்பதை மேற்கோள்காட்டினர் இளம்பூரணர்; தொல். உவம. சூ. கஎ.

ங. நொசிவு நுண்மையுணர்த்துதற்கு (அ) "நொசி மருங்குல்" என்பது மேற். தொல். உரி. சூ. எஅ. சே.(ஆ)"நொசிந்த மருங்குலள்" பெருங். (இ) நிச: சுப. (ஈ) "நுழைநொசி மருங்குல்" தைலத. சுயம்வர. கசஉ.

(பிரதிபேதம்) * ஒண்டித்தி.

எ - து: *சுணங்கு அணிந்த அழகையுடைய முலையினையும்(க)பிறையின் தண்மையைக்கொண்ட நறிய நுதலினையும் நறிய மாலையினையுடைய மணம் நாறுகின்ற மழை வீரும்புங் கரிய கூந்தலினையும் † கூர்மையையுடைய அழகினையும்(உ)நோக்கினார் கண் சென்று நுழைந்துபார்க்கும் நுண்மையாலே அவர்க்கு அறியாமையைக் கொடுக்கும் மருங்குலையும் ‖வணங்குகின்ற இறை யினையுடைய வளையணிந்த முன்கையினையுமுடைய ஒள்ளிய‡ தித்தியாகிய வரி நிறைந்த வல்குலையுடையவளே ; எ - று.

நி (ங)கண்ணுர்ந்த நலத்தாரைக் கதுமெனக் கண்டவர்க்
சுண்ணின்ற நோய்மிக வுயிரேஞ்சு துயர்செய்தல்
பெண்ணன்று புனையிழா யெனக்கூறித் தொழுஉந் தொழுதை
‖கண்ணுநீ ராக நடுங்கின னின்னகா
(ஏ)யென்செய்தான் கொல்லோ (ஙி)விஃதொத்தன் றன்கட்
கo பொருகளி றன்ன தகைசாம்பி யுள்ளு
ருருகுவான் போலு முடைந்து

எ - து: இனிய நகையினையுடையாய்! நின்னைநோக்கித் தொழுஉம்; ÷தொழுதபின், புனையிழாய்! என்னைநோக்கி, ×உலகத்திற்கண்ணுக்குநிறைந்த நலத்தினையுடைய மகளிரைக் கண்டவர்களுக்கு உண்ணின்ற காமநோய் மிகும் படி கடிய உயிர்போந் துயரைச் ±செய்தல் அவர்க்குப்பெண்டன்மையன்றெனக் கூறிக் (சு) கண்ணும் உருகநின்று நடுங்கினன்; நடுங்கி இவ்வொருத்தன் தன்

க. "சுடர்நுதல்" (கலி. நிஅ: ந.) என்பதற்கு எழுதிய வுரையும் நோக்குக.

உ. "நோக்கு நுழைகல்லா நுண்மைய" பொருந. அ:.

ங. "கண்ணுர் கண்ணி" பொருந. கசஅ; சிறுபாண். சுடி.

ச. "என்செய்தான் கொல்லோ..... ....:.உடைந்து" எனத் தோழி கூறிய வழி, 'தெருவின்கட் காணுமின்றிக் கலங்குவார்க்கண்டு' எனவும் 'அலர்முலை.....(நாம்' எனத் தோழிகூறியவழி) 'பொன்செய்வாய்' எனவும் தலைவி உழந்துகூறினளென றுகூறி 'இது தலைவன்வருத்தங் கூற அதனை யேற்றுக்கொள்ளாது உறழ்தலின் வழுவாய் நாண்மிகுதி யாற் கடிதின் உடம்படாமையின் அமைக்கத்து' என்பர் நச். (தொல். பொருளி. சூ. சச.)

ஞ. "இஃதொத்தன்" கலி. சுச: அ; என்பதும் அதன் குறிப்பும்பார்க்க.

சு. (அ)"மெய்யுருகிக் கண்ணுருகி நெஞ்சுருகிக் காம வெயில் வெண் ணெய்ப் பாலைபோன் மெலிகின்றதே" சீவக. சுஅஉ. (ஆ) "கண்புன லூருமென் காதல்" தஞ்சை. நகூஞ.

(பிரதிபேதம்) ' சுணங்கணிந்தழகிய முலை. † கூரிய. ‡ தித்தியாகிய. ' கண்ணினீராக. ÷தொழுதபின்னர் என்னைநோக்கி, × உலகத்திற்குக்கண்ணுக்கு. = செய்த லர்க்குப்பெண்.

னிடத்துப் பொருகின்ற களிற்றையொத்த தன்மைகெட்டு மனமுடைந்து உள்ளேயுள்ளே உருகுவான்போலே இராகின்றான்; இவன் ஈண்டு வந்து என்ன காரியஞ்செய்தான்கொல் என்றாள்; எ - து.

ஒருத்தனென்பது இடைக்குறைத்துநின்றது.

கஉ (க)தெருவின்கண், காவண மின்றிக் கலங்குவார்க் கண்டுநீ
வாரண வாசிப் பதம்*பெயர்த்த லேதில
நீ நின்மேற் கொள்வ தெவன்

எ - து: அதுகேட்ட தலைவி நீ நம்மாற் றமக்கு நிகழ்ந்ததோர் காரண மின்றியிலே தெருவின்கட் கலங்குவார் சிலரைக் கண்டு நினக்கு ஏதிலவா யிருப்பனவற்றை நீ நின்மேல் ஏறட்டுக்கொள்கின்றதன்மை வாரணவாசியி லுள்ளார் பெறும் அருளுடைமையாகிய பதத்தை நீ நின்னிடத்தே ஏறட்டுக் கோடல்காண்; இது நமக்கு என்னுய் விளையும் ? †எ - து.

(உ) பிறர்வருத்தம் தம்வருத்தமாகக் கொண்டு ஒழுகுவதனை வாரணவாசி யென்னும் ஊரிலுள்ளார் ‡பதமென்றாள்.

இது "கூறிய வாயில் கொள்ளாக் காலை" (ங) தலைவிகூறியது.

கந அலர்முலை யாயிழை நல்லாய் கதுமெனப்
(சு)பேரம ருண்க||ணின் றோழி யுறீஇய
(ரு)வாரஞ ரெவ்வ முயிர்வாங்கு
(கூ)மற்றிந்நோய் தீரு மருந்தருளா ×யொண்டொடி

க. '' தெருவின்கண் ....கொள்வதெவன் " என்பது (அ) தோழி, தலைவற்குக் குறைநேர்ந்து வாயிலாகிக் குறைநயப்பக் கூறியவழி, தலைவி அவன்கூற்றினை யேற்றுக்கொள்ளாது மறுத்ததற்கும் (தொல். களவி. சூ. உ0. நச.) (ஆ) பாங்கியைத்தலைவிமறைத்தற்கும் (நாற்கவி. சூ. கசஎ) மேற்கோள்.

உ. "மலயத்து நின்றும்' (கோவையார். கஙக) என்புழி 'மலயத்து வாழ் வார் பிறர்க்கு வருத்தஞ் செய்யாராகலின்' என்று குறிப்பு வழுதி யிருத்தலும் ஈண்டு அறிதற்பாலது.

ங. தொல். கள. சூ. உ0

சு. "பேரம ருணகண்" கூலி. கசசு: எ.

ரு. 'நேரிறை வளைத்தோ ணின்றோழி செய்த, வாரஞர் வருத்தங் களை யா யோவென" தொல். கள. சூ. உங. நச. 'நெருநலு' மேற்.

கூ. (அ) "மற்றிந்நோய்தீரு மருந்தருளாயொண்டொடி" "நின்முகங்காணு மருந்தினே னென்னுமால்" என்புழி நோய் தீர்தற்குக் காரணமாகிய

(பிரதிபேதம் *பெயாதலேத்தில.† என்ருள அலர் | பிறாபதமென்றார் இது || என்றோழி × ஒண்டொடீ நின்முகங்காணு.....எ-து அதுசேட்ட.

(க)நின்முகங் காணு மருந்தினே னென்னுமா
னின்முகந் தான்பெறி னல்லது கொன்னே
(உ)மருந்து பிறியாது மில்லேற் றிருந்திழா
யென்செய்வாங் கொல்லினி நாம்

எ - து: அதுகேட்ட தோழி அடிபரந்த மூலியினையும் ஆராய்ந்த பூணினையுமுடைய நல்லாய்! பெரிய அமர்த்த உண்கண்ணினையுடைய நின் தோழி மருந்தெனவருங் காரணத்தைக் கருவிக்கண்ணும், நின்முகத்தைக் காண்டல் காரணமாக அதன் காரியமாகப் பிறந்த அருளே மருந்தாதற் றன்மையாக உடையனென வருங் காரியத்தை ஒன்றென மூடித்தற் கண்ணும் அமைத்துக் கொள்க. என்பர். நச். தொல். வினை. சூ. கூஎ. (ஆ) "மற்றிந்நோய் தீரு மருந்தருளா யொண்டொடீ யென்புழி, நோய்தீர்தற் கேதுவாகிய மருந்தென்னும் எதுப்பொருண்மை கருவிக்கண் அடங்கும்" என்பர் இ - வி உரைகாரர்; இ - வி. சூ. உசஙூ. (இ) 'நோய்தீருமருந்து.....என்னும்எதுப்பொருண்மை கருவிக்கண் அடங்கும்' என்பர், சேனாவரையர்; தொல். வினை. சூ. கூஎ. (ஈ) "அகலிருவிசும்பு" பெரும்பாண். க. என்பதற்கு, 'தன்னை யொழிந்த நான்கு பூதமும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயம்' என்றுபொருள்கூறி அதற்கும்(உ)"அரசிருந்து பணிக்கும்பாசறை" முல்லை. எகூ. என்பதற்கு,'பகையரசிருந்து நடுங்குதற்குக் காரணமான பாசறை' என்று பொருள்கூறி அதற்கும், (ஊ) "புண்டாங்குவேல்" சீவக. உஉ. என்பதற்கு 'பகைவர் புண்ணைத் தாங்குவதற்குக் காரணமான வேல்' என்று பொருளும் 'வினைத்தொகை; எதுப்பொருள்கருவிக்கண் அடங்கும்' என்று இலக்கணமும்எழுதி அதற்கும் "மற்றிந்நோய் தீருமருந்து" என்பதை இவ்வுரையாசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார். அன்றியும்(எ)உயர்ந்தபால்என்பதற்கு, 'ஒருகாலைக்கு ஒருகால் அன்பு முதலியன சிறத்தற்கு எதுவாகிய பால் வரை தெய்வம்' என்று பொருள்கூறி, 'உயர்ந்த பாலை நோய்தீர்ந்த மருந்து போற் கொள்க' என்றும் எழுதியிருக்கிறார். (தொல். களவி. சூ. உ.) (ஏ)"திருத்தடி மேல்வீழ்ந்திரக்குநோய் தீர்க்கு, மருந்து நீயாகுதலான்" நலி. சூகூ: கூ - கo. என்பது ஒப்புமைநோக்கற்பாலது.

க. (அ) "நின்முகங் காணு மருந்தினே னென்னுமாலென்புழிக்காட்சியை மருந்தென்றுரைத்தலின், காணுமருந்தென்பது வினைப்பெயர் கொண்டதாம்" என்பர். சேனா. தொல். வினை. சூ. கூஎ. (ஆ) இ - வி. உரைகாரரும் இதனையே பின்பற்றுவர்; இ - வி. சூ. உசஙூ.

உ. (அ) "மருந்துபிறி தில்லையா னுற்ற நோய்க்கே" நற். அo. கூ.(ஆ) "மருந்துபிறி தில்லாப் பெருந்தகை நெய்தி" ....(இ) "மந்திர மில்லை வேறோர் மருந்தில்லை மையலேஞ்சுச், சுந்தரக்குமுதச்செவ்வா யமுதலா லமுதச் சொல்லீர்" கம்ப. மாயாசனக. கசு.

உயிர்த்தின பொறுத்தற்கரிய மனக்கவற்சியைச் செய்யும் வருத்தம் கதுமென உயிரைவாங்கும்; அஃது உயிரைவாங்காதபடி ஒண்டொடி, பின்னே *இந்நோய் தீர்தற்குக் காரணமான மருந்தை அருளாய்; அம்மருந்துதான் மிகவும் †அரிதன்று; நின்முகங்காண்டல்காரணமாக அதன்காரியமாகப் ‡ பிறந்த அருளே ||மருந்தாதற்றன்மையாக உடைத்தென்று கூறுகின்றனன்; ஆதலால் அவன் றன் நின்முகத்தை •இக்காலத்தே பெறின் அது மருந்தாவதல்லது வேறு சிறிதும் மருந்தில்லையாயிருக்குமாயின்; =திருந்திழாய்! இனி நாம் என்செய்யக் கடவேமென்றாள்; எ - று.

நின்முகம் ÷ காணு மருந்தினேனென்றது தலைவியைக்கருதி. மற்று, வினைமாற்று. கொன், காலமுணர்த்திற்று. கொல், ஐயம்.

பொன்செய்வாம்

எ - து: அதுகேட்ட தலைவி பொன்செய்வாம் என நகைக்குறிப்புக் கூறினாள்.

அஃது "இசைதிரிந்திசைப்பினும்"என்னும்(க)பொருளியற்சூத்திரத்துக் ×கூறினும்.

உசா ஆறு நிலங்கித் தெருவின்க ணின்றுருவன்
கூறுஞ்சொல் வாயெனக் கொண்டதன் ∴பண்புணராந்
தேற லெளிதென்பா நாம்

எ - து அவள் நகைக்குறிப்புக் கூறிப் பின்னரும் உலகவொழுக்கத்தைத் தப்பி ஒருவன் தெருவின்கண்ணேநின்று கூறுங்கூற்றை உண்மையென்று கொண்டு அதன் உண்மையை உணராமாய் நாம் அதனைத் தெளிதல் எளிதென்று சொல்லக்கடவேமென்றாள்; எ - று.

நாமென்றது உயர்த்துக்கூறியது. உளப்பாடுமாம்.

ஓ நுவன் (உ)சாரா றெளிதென்பா மற்று

எ - து: அதுகேட்ட தோழி பின்னே நின்கருத்து இதுவாயின் ஒருவன் சாந்தன்மை எளிதென்று கூறக்கடவேமென்றாள்; எ - று.

என்பாம், உளப்பாடு.

க. தொல். பொருளி. சூ. க. இச்சூத்திரத்திற் கூறியது, 'இயலா' என்றதனால், 'என் செய்வாமென்ற வழிப் பொன் செய்வா மென்றற்போல வினவிற் பயவாது இறைபயந்தாற் போலநிற்பனவுங்கொள்க'என்பது.

உ. (அ) "ஈத லிரந்தார்க்கொன் றூற்று வாழ்தலிற், சாதலுங் கூமோ மற்று" கலி. சுக: கக-உ. (ஆ)"பகையகத்துச் சாவா ரெளியர்" குறள். எஉசு. (இ)"சாவ தெளிதரிது சான்றாண்மை" ஏலாதி. சஅ.

(பிரதிபேதம்) * இன்னோயைத் தீர்த்தற்கு † அரிதென்று நின்முகங்கொண்டல்காரண ‡ பிறதவனே || மருந்தாகும், =திருந்திழாய் நாம் ÷ காணின்மருந்தினனென்றது, × அடக்கினும் ∴பண்புணராத்தேறல்.

உஅ சிறிதாங்கே, மாணுவு ரம்ப லலரி *னலர்கென
நாணு நிறையு நயப்பில் பிறப்பிலி
பூணுக நோக்கி யிமையா னயந்துநங்
கேண்மை விருப்புற் றவனே யெதிர்நின்று
(கூ)நாணடப் பெயர்த்த நயவர வின்றே.

எ-து: அதுகேட்ட தலைவி மாட்சிமைப்படாத இவ்வூரில் † அம்பல் இனி (உ)அலரினுலே அலர்வதாக வென்று கருதி நாணையும் நிறையையும் விரும்புத லில்லாத, குடிப்பிறப்பிற்குரிய ஒழுக்கம் ‡ நெஞ்சிலில்லாதவனுக்கு அவன் இறந்துபடுமென்று கூறுகின்ற அதன்மையே மிக இன்று காணென்றாள். அது கேட்ட தோழி நின் பூணுகத்திற் புணர்ச்சியை மனத்தாற் கருதி இரவுந் துயில்கொள்ளானும் நங் கேண்மையை||நயந்து நம்மை விருப்புற்றவனே நாண் அடுகையினுலே எதிர்நின்று மீட்ட நயப்பாடு∴வருதலின்று, அதற்குத்தக்கது அறிவாயென்றாள்; எ - று.

"இனனே பேதைமை நிம்பிரி÷நல்கு, வினைநால் வகையுஞ் சிறப்பொடு வருமே" (கூ)என்பதனுன் 'நாணு நிறையு நயப்பில் பிறப்பிலி'எனச்சினம்பற்றி ×வரினும்அஃது அவன்காதலிச்சிறப்பித்துவருதலின் அமைத்தது. பிறப்பிலி, பெயர்மாத்திரையாய் இல்லாதவென்னும் பெயரெச்சமறைக்கு முடிவாய் நின்றது. பிறப்பிலிக்கு ஆங்கே சிறிதென மாறிப் பொருளுரைக்க.

ஆங்கேயென்ற ஏகாரம், தேற்றம்.

"உயர்மொழிக் குரிய வுறழுங கிளவி" (ச)என்றதனுல், தலைவி உறழ்ந்து கூறினுள்.

இதனுல், தலைவிக்கு விருப்பமுற்று நினைத்தல் பிறந்தது.

இது தாவும் தலைவியி ஓஞ்சீரடி[யும்] வந்த நெடிலெண்சாட்டும் ஓஞ்சீ ரடுக்கிய குறளெண்சாட்டும் இடையே முச்சீரடிவந்த கொச்சகமும் வெண் பாவும் தனிச்சொல்லும் குறளெண்சாட்டும் ஓரடியானென்றும் ஓஞ்சீரடி

க. "நாணடப் பெயர்த்தல்" கலி. சஎ உ0.

உ. (அ) "அலரெழ வாருயிர் நிற்கும்" (ஆ) "கல்லெயாற் கல்லிது காம மதுவின்றேற், றவ்வென்னுக் தன்மை யிழந்து" (இ) "காமம், வெளிப் படுத் தோறு மினிது" குறள். ககசக, ககசச, ககசஇ.

ங. தொல். பொருளி. சூ. இக. இசருத்திர வுரையிலும் இப்பகுதி மேற் கோளாக இக்குறிப்பு எழுதப்பெறறுள்ளது.

ச. தொல். பொருளி. சூ. சச. இதன் பக்கம் நகுச: ச - ஆம் குறிப்புப் பார்க்க.

(பிரதிபேதம்) * அலாக்கென † அமபலினது லரினுலே ‡ நெஞ்சில்லாத வனுக்கு ¶ நயந்து விருப்புறறவனே, ∴ வருதலினதற்கு, ÷ கல்குரலெனனால் × வரினுமவனன் க ~ தலைமைப்பித்தலினிதுவமைநதது

வாத (க) போக்கிலக்கணமில்லா* நிலைமண்டில வாசிரியச்சுரிதகமும் பெற்று வந்தஉறழ்கலி. † "மண்டிலங் குட்ட மென்றிணை யிரண்டுஞ், செந்தூக் கியல வெண்மனு புலவர்" (உ)என்பதனுள் ‡ மண்டிலங்கொள்க. (உசு)

(சுஅ.) எல்லா விஃதொத்த னென்பெருன் கேட்டைக்காண்
செல்வங் கடைகொள்ளச் சாஅய்ச் சான்றவ
ரல்லல் கரீதக்க கேளி ருழைச்சென்று
சொல்லுத லுற்றுரைக் கல்லா தவர்போலப்
பல்லூர் பெயர்ந்தென்னை நோக்குமற் றியானெக்கின்
மெல்ல விறைஞ்சுந் தலை;

எ எல்லாநீ, முன்னத்தானென்று குறித்தாய்போற் காட்டினை
நின்னின் விடாஅ நிழற்போற் றிரிதருவா
யென்னீ பெறுததீ தென்;

கo சொல்லின், மருதீவாள் மன்னை விவள்;
சிகுறுஅது, சுத பிரந்தார்க்கொன் றுற்றுது வாழ்தலிற்
சாதலுங் கூடுமா மற்று;

கசு இவடங்தை, காதலின் யார்க்குங் கோடுக்கும் விழுப்பொருன்
யாதுநீ வேண்டியது;

கரு பேதாய், பொருள்வேண்டும் புன்கண்மை யிண்டில்லை யாழ
மருளி மடநோக்கி னின்றுழி யென்னை
யருளீயல் வேண்டுவல் யான்;

கஅ அன்னையோ, மண்டமை ரட்ட களிறன்னுன் றன்னைபொரு
பெண்டி ருருளக் கிடந்த தெவன்கொலோ;

உo ஒண்டொடி, நாணிலன் மன்ற விவன்;

ஆயின் எ எ;

உஉ பல்லார்நக் கெள்ளப் படுமடன் மாவேறி
மல்லலூ ராங்கட் படுமே நறுநுத
னல்காள்கண் மாறி விடினெனச் செல்வானு

க. இசசெய்யுள் போக்கிலக்கணமில்லாதஆசிரியசுரிதகம்பெற்ற உறழ்கலிக்கு மேற்கோள்; தொல். செய். சூ.கஞசு. பேர். நச.

உ. தொல். செய். சூ. ககஎ.

(பிரதிபேதம் *நிலைமண்டல †மண்டலங்குட்ட ‡மண்டலங்கொள்க,

மெள்ளி நகினும் வருஉ மிடையிடைக்
கள்வர்போ னோக்கினு நோக்குங் குறித்தது
கொள்ளாது போகாக் குணனுடைய னெங்கைதன்
னுள்ளங் குறைபடா வாறு.

இது தலைமகற்குத் துறைநேர்ந்த தோழி அவனெடு உறழ்ந்து சொல்லி அவனது நீக்கத்துக்கஞ்ஞி அவன்தறை * மறுமைக்கு ஏற்பன் சொல்லித் தலை மகனைக் துறைதயப்பித்தது.

இதன் பொருள்.

(க) எல்லா (உ) விஃதொத்த னென்பெருன் கேட்டைக்காண்
(ங)செல்வங் கடைகொளச் சாஅய்ச் (ச)சான்றவ
ரல்லல் களைதக்க கேளி ருழைச்சென்று
(ஞ)சொல்லுத லுற்றுரைக் கல்லா தவர்போலப்
(ஜ)†பல்லூழ் பெயர்ந்தென்னை நோக்குமற் றியாரேனுங்கின்
மெல்ல விறைஞ்சுந் தலை

க. (அ) "எல்லாவிஃதொத்தனென்பெருன் கேட்டைக்காண்" என்பது எல்லா வென்பது பெண்பான் மேல்வந்ததற்கும் (தொல். பொருளி. சூ. உச. 'முறைப்பெயர்' இனம்;) (ஆ) "எல்லா விஃதொத்தன்" என்பது இடைக்குறையாகிய ஒத்தன் என்பது ஒருத்தன் எனக் குறிப்பானறியவந்ததற்கும்(நன். பெயரி. சூ. கஉ. மயிலை) மேற்கோள்.

உ. "'இஃதொத்தன்" (கலி. சுச: அ) என்பதன் குறிப்புப்பார்க்க.

ங. "நல் கூர்ந்துஞ் செல்வ ரிரவாதார்" நாலடி. உஎ0.

ச. "புனத்தே வருவர்நல் லோர்ருறை போலப் புகலொன்று, மனத்தே யெழுஞ் சொல்ல மாட்டார் வருந்துவர் வண்டழைகொணை, டினத்தே பிரிந்த கலேவின வாகிற்ப ஈங்கிவர்தா, நினைத்தே யுழல்கின்ற தென்னறி யேனென்று நோழையே" அம்பிகா. அஅ.

ஞ. "கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார்" (குறள்.கo நிங) என்புழி, கடனறிதலென்பதற்கு மானமறிதலென்று பொருளிசைத்து, 'அதனியல்பினை யறிதல்' என இச்சொற்றொடரை முதற்சார்த்தி விளக்கமெழுதியிருத்தல் இங்கே அறிதற்பாலது.

ஜ. (அ) "கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கம்"(ஆ)"நோக்கினு நோக்கி யிறைஞ்சினு ளஃதவள், யாப்பினு ளட்டிய நீர்" (இ) "யாநோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற், றானோக்கி மெல்ல நகும்" குறள். கo கூஉ.. கo கூங. கo கூச. (ஈ) "தன்னையான் முகத்தை நோக்கிற் றான் முலை முகத்தை நோக்கும்" சீவக. கசுஉசு.

(பிரதிபேதம்) மருமற்கேறன † பல்லூழ்ப்பெயர்ந்து.

எ - து: ஏடீ! இவளெருத்தன் என்குறைபெறுதவன்? *இவன் கேட்டைப் பாராய்; (க) அறிவுடையோர் தம்முடைய செல்வம் முழுவதை அடைகையிஞலே மிடித்துத் தம்முடையவருத்தத்தைக் களைதல்தக்க (உ.) உற்வானை நிடத்தே சென்று தங்குறைமையை அவர்க்கு வாய்விட்டுச் சொல்லத்தொடங்கிப் பின்னை அதனை முடியச் சொல்லமாட்டாதிருப்பாரைப்போலத் தான் (ங) கூறக் கருதியதனைக் கைவிட்டு என்னைப் பலமுறையாகப் பார்க்கும்; †பின்னையான் தன்னைப்பார்க்கின் தான் மெத்தெனத் தலையிறைஞ்சி ‡நிற்கும்; எ - று.

இது தலைவன் தம்மிடத்து வருகின்றமைகண்டு தலைவிக்குக்கூறிப், பின்னர் அவனெதிர்சென்று அவனை || நோக்கிக் கூறுகின்றாள்.

எ (சு) ×எல்லாநீ, முன்னத்தா லொன்று குறித்தாய்போற்காட்டினை
(ரு) நின்னின் விடாஅ (ரூ) நிழற்போற் றிரிதருவா
யென்னீ **பெருததீ தென்

எ - து: எடா! நீ குறிப்பாலே எம்மோடு ஓர் நட்புச்செய்யக் குறித்தாய் போல எமக்கு அறிவித்தாயாய் நின்னைவிட்டு நீங்காத நிழற்போல என்னை விட்டுநீங்காமற்றிரி தருகின்றவனே! நீ பெருத குறை ††யாது? அதனை இது வென்று ‡‡கூறு; எ - று.

இது குறையுறவுணர்தல்.

க. "இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந், திண்மையுண் டாகப் பெறின்" குறள். கூஅ.

உ. (அ) "செழுங்கேளிர் நிழல்சேர"..... (ஆ) "பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல், சுற்றத்தார் கண்ணே யுள" குறள். ருஉக.

ங. "கூறுவங் கொல்லோ கூறலங் கொல்லெனக், கரந்த காமம்" அகம் ககூஅ.

சு. (அ) "எல்லாநீ..... பெருததீ தென்" என்பது தோழிதலைவனை விளித்துக்கூறலின் வழுவாய் அமைந்தது" என்பர், நச். (தொல். பொருளி. சூ. உசு.) (ஆ) விளியேற்குமென எடுத்தோதாதனவற்றுள் இருபாற்கும் பொதுவாகிய ஆகாய வீறுகிய எல்லாவென்பது எடா வென்னும் பொருளில் வருதற்கு "எல்லாநீ முன்னத்தா லொன்று குறித்தாய்போற்காட்டினை" என்பது மேற். தொல். விளி. சூ. கஉ. நச்.

ஞ. "நின்னின் விடாஅ.....பெருததீதென்" என்பது குறையுறவுணர்தற்கு மேற்கோள்; தொல். களவு. சூ. ஙசு. நச்.

சு. "நிழறன்னை, வீயா தடியுறைந் தற்று" குறள். உஐஅ.

(பிரிபேதம்) * இவனுடையகேட்டை. † பின்பான், ‡ நிற்குமெனத் தோழி தலைவியை நோக்கிக்கூறியுள் இது, || நோக்கி மேற்கூறுகின்றுழியென்று கொள்க, ×எடாநீ **பெருததிதென் ††யாதுதான் அதனை, ‡‡ கூறென்றுன்.

கo சொல்லீன், மறுதீவாண் மன்னே விவள்

எ - து: *யான் என் குறையைச்சொல்லின் இவள் மிகவும் மறுதிருப் பானோ ; † எ - று.

இது தலைவன் தன் நெஞ்சோசொவினது. "ஐயக் கிளவி யாடூவிற் குரித்தே" (க)என்பதனுன் ஐயக்கிளவி தலைவற்குரித்தாய் வந்தது.

மறுதீவாள், வினைத்திரிசொல். ஓகாரம், வினா.

கக (உ)செறுஅது, (நூ)சத பிரிந்தார்க்கொன் றுற்றது வாழ்தலிற் சாதலுங் கூடுமா மற்று

எ - து: அங்ஙனம் உசாவித் தம்பால் இரந்தவர்களுக்கு ‡யாதானு மொன்றைமுகமாறு ஈதலேகடத்தாதுயிர் || வாழலிற்பின்னைசசாதலுங்கூடு மென்றன் ; எ - று

கங (ச)இவடந்தை, காதலின் யார்க்குங் கொடுக்கும் விழுப்பொருள் யாதுநீ வேண்டி யது

க. தொல். பொருளி. சூ. சக. இச்சூத்திரவுரையில் இச்செய்திக்கே "சொல்லின்... .....விவள்" என்பது மேற்கோள்.

உ. (அ) "உயர்க்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினுங், தவிர்க்துவிடு பரிசில் கொள்ளலெ னுவந்துநீ, யின்புற வீடுதி யாயிற் சிறிது, குன்றியுங் கொன்வல்" (ஆ) அகனக வாரா முகனழி பரிசி, ருளி லாளர் வேளா ரல்லர்" (இ) "உண்ணெகிழ்ந் தீயிற் சிறிதெனினுங் குன்றுபோற் கூடும் பயன்" (ஈ) "இல்லார் மொழிந்தவை, மென் மொழியா லுண்ணெகிழ்ந் தீவானேல் விண்ணோரா, லின்மொழியா லேத்தப்படும்" (உ) "நகை முகமே நாண்மலரா, வின்மொழியின் வாய்மையே தீங்கரயா-வண்மை, பலமா நலங்களினித் பண்புடையார்"

ஊ. (அ) "இன்மை யுரைத்தார்க் கதுநினைக்க லாற்றுங்காற், றன்மெய் துறப்பான் மலே" கலி. சுரு: உசு - உக. (ஆ) "கருங்கட லுடுத்த மல்லன் ஞாலத்துச, செம்மையின் வழாஅது கொடைக் கடன் பூண்டு, வாழ்வது பொருந்தா தாகிற், சாவது மினிதவர் வீவது முறு மே" பா-வி. சூ. நிரு. (இ)"மள்ளலில் பெருங்கொடை மருவி மண் ணுனோ, ருள்ளிய பொருளெலா முதவி யற்றபோ, தெள்ளலி லிரவ லர்க் கீவ தின்மையால்,வெள்ளிய மாந்தரின்" கம்ப. கார்காலப் ‰ரு.

ஈ. (அ) "காமஞ்சாலா விளமை யோன்வயின்" என்னும் சூத்திரவுரையில் "புல்லித்தோன்றுங் கைக்கிளையெனவே காமஞ்சான்ற இளமையோள் கண் நிகழுங்கைக்கிளை இத்துணைச சிறப்பின்றுயிற்று; அஃது 'எல்

(பிரதிபேதம்) *அதுகேட்ட தலைவன்யான் † எனத் தன்னெஞ்சோசொவினுன், இது "ஐயக் கிளவியாடூவர்க்கு, ‡யாதானுமொன்று முகமாறு, ||வாழ்தலின்.

இரண்டாவது குறிஞ்சி உரை. ஈளைங

எ-து: அது கேட்ட தோழி இவள் தந்தை இரப்பார்மேலுள்ள *காதலினால் இரவலர்யார்க்குஞ் சிரிய †பொருள்களைக் கொடுக்கும், நீவேண்டியபொருள் ‡ யாதுதானென்றாள்; எ - று.

இஃது "உயர்மொழிக் குரிய வுறழுங் கிளவி; யையக் கிளவியாடூவிற் குரித்தே" (க)என்பதனால், தோழி உறழ்ந்துகூறினாள்.

கரி பேதாம், பொருள்வேண்டும் புன்கண்மை யீண்டில்லை யாழ
மருளி மடநோக்கி(உ)னின்றோழி யென்னை
யருளீயல் வேண்டுவல் யான்

எ - து: அதுகேட்ட தலைவன் கூற்றின் குறிப்பறியாதவளே! என்னிடத்துப் பொருளை இரக்கும் மிடியில்லை. மருண்டு மடப்பத்தையுடைத

லாவிஃதொத்தன்' என்னுங் கலியுள் 'இவடங்தை, காதலின்யார்க்குங் ....வேண்டுவல்யான்" எனவரும். இது கைகோ ளிரண்டினுங் கூறத்தகாத வாய்பாட்டாற் கூறலிற் கைக்கிளை யென்றார். குறிப் பென்றதனாற் சொல்லியின்புறினும் தலைவன்றன் குறிப்புநிகழ்ந்தது புறத்தார்க்குப் புலனாகாதென்பதாயும் அகத்து நிகழ்ச்சியறியும் மனை வியர்க்காயிற் புலனுமென்பதாயுங் கொள்க" என்பர் நச்; தொல். அகத். சூ. நிo. (ஆ) "வைகல் வைக லைய மிவ்வழிக், கையுறையேந்தி னீர் வருதிர் மற்றஃ, தறிகலம் யாமெமக் குரைப்பிற், பெறுகுவி ரெந்தை பெருவண்மையனே" தமிழ்நெறி. மேற்கோள்.(இ)"வேண்டுவ கொடுக்கும், போதல் வேண்டா பொருட்குறை வுண்டெனி, னேத மில்லை யிவணீ ராமின்" பெருங். (ங) சூ: கஅக - ங.

க. தொல். பொருளி. சூ. சஎ. 'உயர்மொழிக்குரிய வுறழுங் கிளவி' என் புழி உறழ்ந்து கூறலை நால்வகைப்படித்தி, "ஈத லிரந்தாக்கொன் றூற்று துவாழ்த்தலிற், காதலுங் கூடுமாமற்று" எனத் தலைவன் கூறிய வழி, "இவடங்தை. காதலின் யார்க்குங் கொடுக்கும் விழுப்பொருள், யாதுநீ வேண்டியது" எனவும், ("பேதாய் பொருள்வேண்டும் .. .... வேண்டுவல் யான்" எனத் தலைவன் கூறியவழி) "மண்டமரட்ட களி றன்னுன் றன்னையொரு, பெண்டி ரருளக் கிடந்த தெவன்கொலோ" எனவும் தோழி உறழ்ந்து கூறினளென்று கூறி, 'இஃது அவன் வருத்தத்தில் எதிர் கூறத்தகாத கூறலின் வழுவாய்த் தலைவி கருத்தறிந்து உடம்படவேண்டுமென்று கருதுதலின் அமைந்தது' என்பர். நச.

உ. "இருளுறழ் கூந்தலா ரென்னை, யருளுறச செயினுமக் கதனுமா ரதுவே" கலி. கசo: ஙங - ஙஎ.

(பிரதிபேதம் *காதலினால் யாசகும்! பொருள்களைகொடுக்கும் †யாதுதானென்றாள் பேதாய்.

தாகிய நோக்கினையுடைய நின் தலைவி என்னை அருளுதலை யான் * இரப்பே னெண்ணுன் ; எ - று.

கஅ அன்னையோ,

எ-து: † அத்தன்மையையோ ? எ - று.

இஃது அதுகேட்ட தோழி இவனிடத்துக் களவொழுக்கம் அறியாள் போன்றுகூறியது.

(க)மண்டமர் ரட்ட களிறன்னுன் றன்னையொரு
(உ)பெண்டிர ருளக்கிடந்த தெவன்கொலோ

எ-து: ‡மிக்குச் செல்கின்ற போரிலே பகைவரைக்கொன்ற களிறுபோல் வான்றன்னை ஒரு மகளாயிருக்கின்றவள் அருளும்படியாகக் கிடந்த குறை எத்தன்மையதோதான் ; ||எ - று.

இது தோழி தலைவன் நீங்கியபின்னர்த் தலைவியோடுசொல்லியது.

உ0 ஒண்டொடீ, நாணிலன் மன்ற விவன்

ஆயின் ÷எஎ;

உஉ (க)பல்லார்க் தொள்ளப் படுமடன் மாவேறி
மல்லலூ ராங்கட் படுமே நறுநுதல்

க. "மண்டமர் முருக்குங் களிறனை யார்க்குப், பெண்டிர் கூறும் பேறி வண்டோ" மணி. கஅ: கசo-சக.

உ. பெண்டிரென்பத னீற்றிலுள்ள 'இர்' என்னு மிடைச்சொல் முன்னிலையிலன்றி 'ர்' 'அர்' என்பவைபோலப் படர்க்கைப் பன்மையிலும் வரும் விகுதிபோலும்; மகளிர், கேளிர், வேளிர், புத்தேளிர் முதலிய வற்றில் இவ்விகுதி வருதலும் இச்சொல் "பெண்டிரும் வாழாரோ" (நாலடி. ககூச) "பெண்டிராயிற் பிறர் நெஞ்சு புகாஅர்" (மணி. உஉ: சசு) "பெண்டிர் மதியார்" (வளையாபதி) எனப் பன்மைவினைபெற்று முடிதலும் இக்கருத்தை வலியுறுத்தும்; இங்கே இதனை, "பத்தினிப் பெண்டிர்" (மணி. கஎ: க) என்புழிப்போல ஒருமையில் மயங்கிவந்த தென்று கொள்க.

ரு. (அ) "மாவென மடலுமூர்ப பூவெனக், குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப, மறிகுளர்க்கவும்படுப.பிறிதுமாகுப காமங்காழ்ஒளினே" குறுந். கஎ. (ஆ) "மாவென் றுணர்த்து மடலேறுப மன்று தோறும், பூவென் றெருக்கி னிணர்சூடுப புண்மை கொண்டே, பேயென்

(பிரதிபேதம்) * இரப்பேனென்னுன். இது உயர்மொழிக்குரிய வுறழ்ங்கிவை..... யுரித்தே என்பதனுற் ரேழியுறழ்ந்து கூறினள் அன்னையோ † அதுகேட்ட தோழி அத்தன்மையோவென்றிவளிடத்துக்களவொழுக்கமறியாளபோன்று கூறினுள் மண்டமரட்ட. ‡ அதுகேட்டுத் தலைவன் நீங்கிய பின்னர் மிக்குச் செல், ||எனத்தலைவியோடுசாவினுள். ஒண்டொடீ ÷எஎ

னல்காள்(க)கண் மாறி விடினெனச் செல்வாரை
மெல்லி நகினும் வடிஉ மிடைபிடைக்
(உ)கள்வர்போ னேக்கினு நோக்குங் குறித்ததூஉ.
கொள்ளாது போகாக் குணனுடைய னெந்தைதன்
னுள்ளங் குறைபடா வாறு

எ - து* *ஒண்டொடீ! இவன் எந்தைதன் உள்ளங் குறைபடாதபடி வேண்டுவன †கொடுத்துத் தான் குறித்ததொன்று கைப்பற்றுமற் போகாக் குணத்தையுடையன், அதனால் நீ அருளினுந் தாழ்வில்லை; அவன்முன் குறையுற்றுநிற்கின்ற காலத்து யான் தன்னை இகழ்ந்து சிரித்தாலும் பலகாலும் வரும்; அக்குறையுறவுக்கு நடுவேநடுவே கள்வர் தாங்குறித்த‡பொருளை நோக்காது நோக்குமாறுபோல நின்னை மனநோக்காதுநோக்கும்; அதனால் இவனுயின் அறுதியாக எனை ! || நாணமிலன். நாணமின்மையால் இவன் போகின்ற போக்குப்பலருஞ் சிரித்து இகழப்படி மடன்மா யான் ஏறும்படி கறிய நுதலினையுடையாள் அருளாளாய் அருளாமாறியேவிடின் அவளோடு என்னிடை நிகழ்ந்தது ஊரிடத்தே அலராமேயெனக் கருதிச்செல்வான் ÷ போலேயிருந்தது; எ - று.

இஃது உசாவியபின், தோழி அவளை நோக்கி, மேல் இதற்குத்தக்கது நீ அறிந்து செய்யெனக் குறைநயப்பித்தது

(ங)எள்ளிநகினும்வருமென்றது தன் கண்ணிகிழ்ந்த வெள்ளல்பொருளாகவை பிறந்தது. எறி,எற.(ச)எந்தைஎன்றது,தலைவிதந்தையை. நோக்கினுமென்றது

தெழுந்து பிறரார்ப்பவு நீப்ப காம, நோய்நன் கெழுந்து நனிகாழ் கொள்வ, தாமினைக்கால்" வளையாபதி.

க. (அ) "பிறனைக், கொலையொக்குங் கொண்டுகண் மாறல்" நாலடி. அ. (ஆ) "கொண்டுகண் மாறல் கொடுமையிற் றுவ்வாது" முது. ங எ. (இ) "கணமாறி நீங்கினன்" மணி. ங: ச0 - சக.

உ. வினைபயன் மெய்யுரு வுவமை கட்குரிய வென்று பாகுபடுக்கப்பட்ட உவமச்சொற்களன்றி மற்பான் வருவனவு முண்டென்பதற்கு, 'கள்வர் போனேக்கினு நோக்கும்' என்பது மேற்கோள்; தொல். உவமை. சூ. கஎ. இளம்.

ங. தொல். மெய்ப். சூ. ச. பேர். உரையிலும் இப்பகுதி இதற்கே மேற்.

ச. "அன்னை யென்னை யென்றலு முளவே" என்புழி உம்மையாற் பிறவு முளவென்றுகூறி, தோழி தலைவிதந்தையை எந்தை யென்றுகூறியதற்கு 'எந்தைதன், னுள்ளங் குறைபடா வாறு' என்பதை மேற்கோள் காட்டுவர் நச்; தொல். பொருளி. சூ. நிஉ.

(பிரதிபேதம்) * உசாவியபின்னுப் அவனோநோக்கி ஒண்டொடீ † கொடித்துயத்தான் குறித்த ‡பொருளை நோக்குமாறு|| நாணமிலன் இந்நாணமின்மையால்இவன் ÷ போல விருந்ததுமேல்இதற்குத்தக்கது நீயறிந்துசெயெனக்குறைநயப்பித்தாள்எளி.

நோக்கஞேக்கம். எஎ! இகழ்ச்சிக்குறிப்பு, "முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுசொ, னிலைக்குரி மாபி னிருவீற்று மூரித்தே." (க)என் பதனுன், எல்லாவிஃதொத்தன் எல்லாவென இருபாற்குமாய்நின்றது.

இதனுல், தலைவிக்கு நினைத்தல் பிறந்தது.

இது கைகோள் இரண்டினுங் கூறத் தகாதனவாகப், பொருள் யாது நீ வேண்டியதென்றும், அருளியல் வேண்டுவல் யானென்றுங், கூறலிற் "காமஞ் சான்றவிளமையோ" (உ)எனத் திகழ்ந்த கைக்கிளையாம்.

இது தலைவிரவின நெடுவெண்பாட்டும்ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டும் ஓரடியாலெனறும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டு மூன்றும் கொச்சகமும் ஓரடியாலெனறும் கனிசொல்லும் வெள்ளைச்சுரிதகமும் பெற்ற கொச் சகக்கலி. (உஙி)

(கூஉ.) எஎ யிஃதொத்த ஞணிலன் றன்னெடி
மேலெமென் பாரையும் மேவினன் கைப்பற்று
மேவினு மேவாக் கடையு மஃதெல்லா
நீயறி தியானஃ தறிகல்லேன் பூவமன்ற
நு மெலலினர் செல்லாக் கொடியன்னுப் நின்னேயான்
புல்லினி தாகலிற் புல்லினெ னெல்லா
டமக்கினி தென்ன வபிதிற் பிறர்க்கின்னு
செய்வது கன்றுமோ பாற்று;

கூ சுடர்த்தொடி, போற்றுய்கலாநின்முதுக்குறைமைபோற்றிக்கேள்
வேட்டார்க் கினிதாயி னல்லது நீர்க்கினிதெ னு
றுண்பவோ நீருண் பவர்;

கஉ செய்வ தறிகல்லேன் யாதுசெய் வேண்கொலோ
வைவ யரவி னிடைப்பட்டு கைவாரா
மையின் மதியின் விளங்கு முகத்தாரை
வெளவிக் கொளலு மறனெனக் கண்டன்று;

கசூ அறனு மதுகண்டற் ருயிற் றிறனின்றிக்
கூறுஞ்சொற் கேளா னலிதரும் பண்டுநாம்
வேறல்ல மென்பதொன் றுண்டா லவனெடு
மாறுண்டோ நெஞ்சே நமக்கு

க. தொல். பொருளி. சூ. உசூ. இவருரையில் இதற்கு இப்பகுதிகள் மேற் கோள். இந்நூற்பக்கம் நூஎ0: க. (அ) நூஎக: சு. குறிப்புப்பார்க்க.

உ. தொல். அகத். சூ. ஙி0. இந்நூற்பக்கம் நூஎஉ: சு.(அ) குறிப்புப்பார்க்க.

இரண்டாவது குறிஞ்சி உரு. கூளை

இஃது "ஏறிய மடற்றிறம்" என்னும்(க)சூத்திரத்து மிக்க காமத்து மிட லென்றதனால், தலைவனுந் தலைவியும் உறழ்ந்து கூறித் தலைவி கூடக் கருதிய பெருந்திணை.

இதன் பொருள்.

(உ)எள யிஃதொத்த ணிலென் றன்னெடு
மேவேமென்ன பாரையு மேவினன் கைப்பற்று
மோவினை மேவாக் கடையு மஃதெல்லா
நீபறிதி யானஃ தறிகல்லேன் (கூ)பூவான்ற
நு மெல்லிணர் செல்லாக் கொடியன்னாய் நின்னையான்
பூல்லினி காகலிற் பல்லினெ (சு)†னெல்லா
நாக்கினி தென்று வலிநிற் (ரு)பிறர்க்கின்னு
மெய்வது நன்றுமோ மற்று

க. தொல். அகத். சூ. நக. இரசூத்திரத்தின் நச்சினர்க்கினியருரையில் "எள இஃதொத்தன்..... .....ன்றுமோ மற்று" என்பது மிக்க காமத்து மிடலுக்கு மேற்கோள்.

உ. (அ) எள இஃதொத்த ணிலென்றன்னெடு" என்பது எள வென்பது இசைநிறையாய் வந்ததற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. உச. நச். இ-வி. சூ. உஎஅ. (ஆ)செறற் செலென்பது செறலினுற்கூறுஞ்சொல் என்ற கூறி, 'எள யிஃதொத்தன்' என்றவழி இஃதென்பது செறல் பற்றி வந்ததென்றும் (தொல். கிளவி. சூ. நருு. 'குடிமை') (இ) ஈரள பிசைக்கு மிறுதியிலுயிர் அளபெடை பெற்று வருங் காலத்திற் பொருள்வேறுபடுமென்றகூறுழி எ, அளபெடுத்துவருதற்கு "எள இஃ தொத்தன்" என்பதைமேற்கோள்காட்டி எள இகழ்ச்சியை யுணர்த்திற் றென்றும் (தொல். இடை. சூ. நஉ. 'ஈரளபு') கூறுவர்; தெய். (ஈ) எள இசைநிறையாய் வந்ததற்கு, சேனாவரையர் உரையிற் காணப்படும் "எள இஃதொத்தனென்பெருன் கேட்டைச்காண்" என்பதில் பின் இரு சீரும் கலி. சுக-ம் பாடலில் உள்ளவை; எழுதுவோரால் மயங்கிச் சேர்த்தெழுதப்பட்டனபோலும்; தொல். இடை. சூ. உச.

கூ. "பூவமன் றன்று சுனையு மன்று" கலி. நருு: கஉ.

சு. "எல்லா வென்பது ஆண்பான்மேல் வருதற்கு "எல்லா... .....மற்று" என்பது மேற்கோள்; தொல். பொருளி. சூ உச. 'முறைப்பெயர்' இளம்.

ரு. (அ) "பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு, பிற்பகற் ருமே வரும்" குறள். நகக, (ஆ) "பிறர்க்கின்னு செய்தலிற் பேதைமை யில்லை" அறநெறி. கூரு.

(பிர திபேதம்) * என்பாரைமேவினன் † எல்லார்தமக்கினி.

எ - து: *இவனெருத்தன் தன்னெடுபுணர்ச்சிக்குறிப்பின்றிநிற்பாரையுமதான் புணர்ச்சிக்குறிப்புடையனுய்க் கையாலே வலிதிற் பிடித்துக்கொள்ளும், ஆதலால் எவ நாணீலனுயிருந்தானெனத் தலைவி கூறினுள்; அதுகேட்ட தலைவன் அப்புணர்ச்சிக்குறிப்பினது பகுதியாகிய மெய்ப்பாடெல்லாம் நின்னிடத்துப்பொருந்துதலைச் செய்யினும் பொருந்தாத இடத்திலுமுள்ள நன்றுதீது நீ அறியக்கடவை; யான் புணர்ச்சிக்குறிப்பை அறிதலைச்†செய்யேன்; பூநெருங்கின மெல்லிய கொத்துநீங்காத கொடியையொப்பாய்! நின் மேனி புல்லுதற்கு இனிதாயிருக்கையினுலே நின்னை யான் புல்லினேனென்றான். அது கேட்ட தலைவி எடா! தமக்கு இனிதாயிருக்குமென்று கருதிப் பிறர்க்கு இன்னுதனவற்றை வலிதிற் ‡செய்வது இன்பத்தைத் தருமோவென்றுள்; எ - று.

எ, இகழ்ச்சிக்குறிப்பு.

இது "வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தன், || மரீஇய மருங்கினுரித்தென மொழிப" (க) என்பதனுன் அடியோன் தலைவனையழித் தலைவி வேட்கைமறுத்து உரைத்தது.

கூ ÷சுடர்த்தொடி ;(உ)போற்றுய்கலாநின்முதுக்குறைமைபோற்றிக்
வேட்டார்க் கினிதாயி ×னல்லது நீர்க்கினிதென் [நின்
றறற்பமோ நீருண் பவர்;

கஉ தேய்வ தறிதல்லெலவ் யாதுசெய் வேன்கொலோ
(ங)வைவா யரவி ∴னிடைப்பட்டு நைவாரா

க. தொல். பொருளி. சூ. கஎ. இச்சூத்திரத்தின் நச்சினர்க்கினியருரையில் "தமக்கினி தென்று.....மற்று" என்பது இச்செய்திக்கீக மேற்.

உ. "போற்றுய் .....நீருண்பவர்" என்பது சிக்காமம் இழிந்தோர்க் குரிமையின் அடியோர் தலைவாய்வந்த கைக்கிளைனென்பது, தொல். அகத். சூ. உங இளம்பூரணர்க்காண்பதுகின்றது. இந்நூற்பக்கம்கூஅ: உ (அ) குறிப்புப்பார்த்தால் இஃது இளம்பூரணர் கருத்தை மறுத்த தென்பது விளங்கும். இதற்கு மாறுக 'இச்செய்யுளின் உரை முதலிறுதிசளில் இதுபெருந்தீனையென்றுள்ளது. இவைஆராய்தற்பாலன.

கூ. ஐவாய வவு: (அ) "ஐவா யவலற்ற தன்னவின் னுவிட ராற்றியென் போ, லெல்லா நிருந்திரீ நெல்லோயீர்" தஞ்சை. உருஅ. (ஆ) "ஐவாய் வயகாகம்" பவழி. உசு. (இ)"வருவரையு, ஐவாய காகம்" தீணமாலை. கசு. (க) (ஈ) "ஐவாயவி னவிராரழல் போனீறு சீறி" சீவக. உகசுடு. (உ)"ஐந்தலை நாக மழல வெருட்டி" பெருங். (உ) அ: உக. (ஊ) "ஐந்தலையவு தன்வா யைந்துடன் கவர்ந்தஞ்சிற், றுன்ப மோர் கடிகையல்லாற் றுஞ்சினுற் றொடர்ந்தி டாவாம்" மேரு. கருஅ.

பிரதிபேதம்) *எ இழ்ச்சிக்குறிப்புஇவனெருந்செய்யேன்; மூகைநெருங்கின ‡ செய்தது இன்பத்தைத் தருமோவென்றுள் இது || மரீமருங்கின். ÷ சுடர்த்தொடீஇ. × அல்லதை. ∴ இடைப்பாடு.

(க)மையின் மதியின் விளங்கு முகத்தாரை
*வெளவிக் கொளலு மறனெனக் †கண்டன்று

எ - து: அதுகேட்ட தலைவன் சுடர்த்தொடீ! நின் முதுமைக்கண் உறைகின்ற நிலைமை ஈண்டுப் போற்றாது கைவிடு; யான் கூறுகின்றதனைப் பேணிக் கேள்; நீருண்பார்சிலர் தண்ணீரை விரும்பினர்க்கு அஃது இனிதாயின் உண்ணுமதல்லது ‡அந்நீர்க்கு இனிதாயிருக்குமென்று கருதி உண்பரோ உண்ணார் காணென்றான்; என்று பின்னும் ஐந்துவாயினையுடைய பாம்பினது பார்வையிலே அகப்பட்டு வருத்தம்வந்து மேற்செய்யுங் காரியம் அறிகல்லேன்; இனி யாதுசெய்வேன்கொல்லென நெஞ்சொடுகிளக்கது, மறுவில்லாத மதி போல விளங்கும் முகத்தினையுடைய மகளிரை வலிதிற்புணர்தலும் (உ) ஒரு மணமென (ங) நூல்கண்டதெனத் துணிந்துகூறினான்; எ - று.

ஐவாயரவென்றது தலைவியை.

கசு அறனு மதுகண்டற் றுயிற் றிறனின்றிக்
கூறுஞ்சொற் கேளா னலிதருந் (ச)பண்டெரிப்

(எ) "ஐந்தலை நாக மகன்முழை கண்டஞ்சுமன்று" திருவாவடு துறைக் கோவை. ககூ.

க. "அவிர் மதிக்குப் போல, மறுவண்டோ மாதர் முகத்து" குறுந். ககஎ.

உ. (அ) ஒருமண மென்றது இராக்கத மணத்தை; அஃது: ஒருதலைவன் ஒரு தலைவியை அவளாலும் அவளுடைய தமரானுமன்றி வலிதிற் பெறுதல். (ஆ) "மலிபொற்பைம் பூணாள் மாலுற்ற மைக்கர், வலிதிற் கொண் டாள்வதே யென்ப - வலிதிற், பராக்கதஞ் செய்துழலும் பாழி நிமிர்தோ, ளிராக்கதத்தார் மன்ற லிபல்பு" தொல். களவி. சூ. க. மேற் கோள். (இ) "மாதர் தங்களை வன்மையிற் பற்றுத லரக்கர், நீதி" பேரிர். முகுந்தன். ஙக.

ஙூ. நூலென்றது வேதத்தை; "மறையோர் தேவத்து மன்ற லெட்டனுள்" (தொல். களவி. சூ. க.) "அத்தண முறுமுறை மன்ற லெட்டனுள்" (இறை. சூ. க.) என்பவையும் அவற்றினுரையும் பார்க்க.

ச. (அ) "பண்டெரிம் ....நமக்கு" இது மறுத்தெதிர்கோடற்குமேற் கோள். நாற்கவி. சூ. கஉஎ. (ஆ) "ஒன்றி யுயர்ந்த பால தானையி னீஞ்சு கிழவனுங் கிழத்திபுங் காண்ப" (தொல். களவியல். சூ உ. நச்) என்பதும் அதன் உரையும் (இ) "வினியுமெ னின்னுயிர் வேறல்ல மென்பா, ரனியின்மை யாற்ற நினைந்து" (குறள். கஉஙூ.) என்பதும் அதன் பரிமேல். உரையும் (ஈ) "நிட்டி விடமுண நின்னுயிர் போகாட், கட்டழ லீயத் தென்னுயிர் சுட்டே, னுவவண மருங்கினின் பாலுள்ளக்,

(பிரதிபேதம்) *வைஇக்கொளலும். †காண்டன்று கொண்டன்று ‡அந்நீர் இனிதாயிருக்கும்.

வேறல்ல மென்பதொன் றுண்டோ லவ்வெஞ்சி
மாறுண்டோ நெஞ்சே நமக்கு

எ-து: அதுகேட்ட தலைவி நூல் உயர்ந்த மணத்தைக்கூறப்பட்டு(க)உலக ஒழுக்கமும் அத்தன்மைத்தாயிருக்குமாயின், அவனும் யான் மறுத்துக்கூறுஞ் சொல்லைக் கொள்ளாது திறனன்றி நலியுமாயின், அவையேயன்றி அவன் மனத்து முற்பிறப்பில் யானும் அவளும் வேறல்லமென்பதொன்று அவனிடத் துண்டாயிருக்குமாயின், நெஞ்சே அவனோடு நமக்கு இனி மாறுபாடுண்டோ வெனப் புணர்ச்சிக்கு உடம்பட்டுக்கூறினாள்; எ - று.

அறனுமதுகண்டற்றென்பது ஆங்குநெஞ்சுநிறுத்தல். தான்மறுத்துரைப்பவும் தன்மேல் அவன் விருப்பஞ்செய்தமை கண்டு பண்டு நாம் வேறல்லமென்ப தொன்று அவனிடத்துண்டாலென்றாள். (உ)இது நீதாமாதலான் அடியோர் தலைவராகவந்த பெருந்திணை.

தவிர்வீலை ஞெகிழிற் றலைமக டோன்றி" (உ) "நினக்கிவன் மகனுத் தோன்றிய தூஉ, மனக்கினி யாற்குநீ மகளாய தூஉம், பண்டும் பண்டும் பல்பிறப் புளவாற், கண்ட பிறவியே யல்ல காணிசை" மணி. உக: கக-கச. உகூ-உ. என்பவைகளும் ஈண்டு ஒப்புநோக்கற்பாலன.

க. (அ)"விட்டுவிளக்கு மணிமுடியாய் வேதஞ்சொன்ன பிமாதி, யெட்டு மணத்தி லொருமணமா மக்கர்குலத்தி னியல்பறிவை, கட்டுமரிய தூவலுப் கலக்கிப் புக்குக் கன்னியரை, முட்டி யவரைக் கொடு போந்து வேட்கை முறையே யென மொழிந்தாள்" இராமா. திக்கு விசயப். கஉ.அ. (ஆ) "கையின் மாலை யிவற்கெனக் கன்னியர், வெய்ய கெஞ்சொடு மின்னென வந்தவர், வைய மன்னன் வயதிலோக்கியே, யையமுற்றன ரன்புறு காதலார்; - எனை வேந்த ரெதிரிவரைப்பெருந், தானை சூழ்மணிச் சந்தனத் தேர்றியே, சோனை மாமதஞ் சோருங் சடதட, யானை யென்ன வினவலொ டேகினன்; - முறையிலைலன்றி மொய்ம்பிற் கவர்வதுக், குறையிலை லெனக் கோக்குலங் கூடிவந், திறைவ மீதெடு தேற்றலில் வீரரைப், பிறைமுகக்கணை யாற்பிளந் தோட்டிமுன்; ..... அம்பினைக்குமம் பாலிகைக்கும்பதி, யெம்பி யேயெழி லாலென் றிசைவுறத், தம்பி தன்னைத் தனஞ்சயன் றன னெனிர், வம்பினென்றிரு மாமணஞ் சேர்த்தினன்" வில்லி. குருகுல. கஉஉ- கஉஅ.(இ)"சூழ்படை கிழியத்தெய்வச் சுடர்மணிப் பொலந்தேர் தூண்டி. யாழ்கட லவனியாளு மரசருங்காண வாங்குப், போழ்படு திங்களண்ண புதுநிலாக் கற்றைதூற்றும், காழிள முலையினூலைக் கவர்ந் தனன் கமலக் கண்ணன்.....ஆழிதரு மின்னமுத மன்னவளை வேட்டான்" பாக. (கo) உருக்குறிணி மணத்திற முரைத்த. நூஉ-எஉ.

உ. (அ) "லவன் மரபின்" என்னும் சூத்திரவுரையில் இச்செய்யுளை மேற் கோள் காட்டி. இதனுள் வெளவிக் கொளலு மறனெனக் கண்டன்று

இதனால் இருவர்க்கும் புணர்ச்சிபுவகை பிறந்தது.

இது தலைவிரவின நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டும் கொச்சகமும் வெள்ளச்*சுரிதகமும் பெற்று வந்த கொச்சகக்கலி: (உசு)

(சுஎ.) நோக்குங்கா னெஞ்சுகித் தொழுஉம் பிறர்காண்பர்
தூக்கிலி தூற்றும் பழியெனைக் கைகவித்துப்
போக்குங்காற் போக்கு நினைத்திருக்கு மற்றுநாங்
காக்கு மிடமன் றினி;

எல்லா வெவன்செய்வாம்;

சுஅ பூக்குழாய் செல்ல லவனுழைக் கூஉய்க்கூஉய்
விரும்பியான் விட்டே னும்போல்வலென் றேறண்மேற்
கரும்பெழுது தெய்யிற்குச் செல்வலிங் காக
விருந்தாயோ வென்றுங் கிற;

சுஐ அவனின், திருந்தடி மேல்வீழ்ந் திரக்ருகாய் நீர்க்கு
மருந்துநீ யாகுத லான்;

சுஉ இன்னுயிர், கடம்பூண் டொருகாலி வற்கை யுடம்பட்டா
லென்னைமெ யென்பெய்து கொடு;

சுசு இவ்வி தாவடங்கக் கேள்;

நின்னெஞ்சு சூழுங்கா னீயு நிலங்கிளையா
வென்னெஞ்சு நிற்ற லெளிதன்றே மற்றவன்
றன்னெஞ்சு நின்று விடி.

இது தலைமகற்குத் தூறைநேர்ந்த தோழி அவனிலைமை தலைமகட்குக் கூறி அவளுணர்த்த மாற்றத்தால் அவள் குறிப்பறிந்து இவ்வகையான ஒலி வற்குக் கூறென அவளுடன் நகையாடிக் கூட்டமுண்மை தான் அறிந்தமை தோற்றுவித்தது.

இதன் பொருள்.

எனவும் 'நீர்க்கினிதென் றுண்பவோ நீருண்பவர்' எனவும் தலைமகன் கூறுதலானும் தலைமகள் முனிந்துரைத்தலானும் ஊடியுணர்வாள் போல அரிதாகத் தலைமகளுடன் பட்டமையானும் இஃது உயர்ந்தோர் மாட்டுவந்த கைக்கிளை என்பர், இளம்; தொல். அகத். சூ. உசு. (ஆ) அகப்புறக் கைக்கிளை தலைமைப்பாடில்லாதவர்க் குரித்தாய்வந்ததற்கு நாற்கவி. உரைகாரரும் (நாற்கவி. சூ. உசஉ.) (இ) மிக்க காமத்து மிடலுக்கு இ-வி. உரைகாரரும் (இ-வி. சூ.டுகக) மேற்கோள்காட்டுவர்

(பிரதிபேதம்) *சுரிதகமும் வந்த.

(க)*நோக்குங்கா ணெஞ்சுநெகிழ்த் தொழுஉம் பிறர்†காண்பார்
தூக்கிலி தூற்றும் பழியெனைக் (உ)கைகளித்துப்
போக்குங்காற் போக்கு நினைந்திருக்கு மற்றுதாங்
காக்கு மிடமன் றினி;
எல்லா வெவன் ‡செய்வாம்

எ-து: தான் தொழுகின்ற தன்மையைப் பிறர் காண்பாராக மனத்தாற் றாக்குதல்இல்லாதவன் (கூ)காம்பார்க்குங்கால் நம்மைநோக்கித்தொழாநிற்கும்; இங்ஙனந் தொழுது நமக்குப் பழியைத்தூற்றுமென்று கருதித் தொழுதலே விலக்கிப் போகவிடுங் காலத்து அப்போக்குத் தனக்குச் செய்யும் வருத்தத்தை நினைத்துப் போகாதிருக்கும்; ஆதலால் இனி நாம் அவனை நம்பால் வாராமற் காக்குங் (ச)காலமன்று, ||பின்னை ஏடீ! இங்ஙனங்காத்தற்கு அரிதானநிலைமை கண்டு மேல் என்செய்யக்கடவேங் கூறாய் ; ÷எ – று.

அதுகேட்ட தலைவி அதற்கு மறுமொழிகொடாது உடம்பட்டமை குறிப் பான் உணர்த்தலையிற் பின்னுந் தோழி கூறுகின்றாள்.

சு பூக்குழாய் செல்ல லவனுமைத் கூடியப்கூடிப்
விருப்பியான் விட்டேனும் போல்வலென் (ரு)றோண்மேற்

க. "நோக்குங்கா ணெஞ்சுத் .....எவன் செய்வாம்" என்பது நாண ழிக்கவழித்தோழியொடு உசாவியதற்கு மேற்கோள்; தொல். களவு. உ0. இளம்.

உ. (அ) "கைகவி தீதறல்"போருந. கருஎ-அ.(ஆ)"தோழியைக் கைகவியா" கலி. சு?.: உகூ) (இ) "கைகவி றறுகெப்" சீவக. சo0.

ங. "குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு குமரனே" மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், காப்பு. சு.

சு. இடமென்பது காலமென்னும் பொருளில் வருதலே இடையென்பது, அப்பொருளில் பயின்று வருதலான் உய்த்துணர்க; புறம். நிசு: உ; மணி. சு: கூஅ; சீவக. ககஎடு. இல்வழி யென்பதற்கு இல்லாத காலத்தே யென்று பொருள் கூறி 'இடபொருள் காலத்தோடு மயங் கிற்று' (சிலப். சு: கக.) என அடியார்க்கு நல்லாரெழுதி யிருத்தலும் இங்கே அறிதற்பாலது.

ரு. (அ) நற்றோ ளிழைத்த கரும்புக்கு" (ஆ) "தெரிவேய்த்தோட் கரும் பெழுதி" (இ) "நடாஅக் கரும்பமன்ற தோளாரை" (ஈ) "அன்றுதா னீர்த்த கரும்பணி வாடவென், மென்றோண் ணெகிழ்த்தான் றுறை" (உ) "நெடுமென்றோட், பெய்கரும் பீர்க்கவும் வல்லன்" கலி. சுசு:ககூ,

(பிரதிபேதம்)*நோக்கினுஞ், † காண்பான், ‡ செய்வாகாம். || பின்னை இங்ஙன ம் ÷ என்றுள் பூக்குழாய்.

கரும்பெழுது தொய்யிற்குச் செல்வலீங் காக
*வீருந்தாயோ வென்றுங் கிற;

கo அவனின், திருந்(க)தடி மேல்விழ்ந் திரக்கு(உ)நோய் தீர்க்கு
மருந்துநீ யாகுத லான்

†எ-து: பூங்குழையினையுடையாய்! வருத்தத்தையுடைய அ வனிடத்துநீ கூடுங்கூட்டத்தை யான் விரும்பி நின்னைப் பலகாலும் அழைத்தழைத்துக் கொண்டுபோய் விட்டேன்போலேயுமிருப்பேன், அவற்கு அது தோன்றுதபடி யான் அவனிடத்தே(ங)நீஎன் தோண்மேற்கரும்பாகஎழுதுங்குழம்பிற்கென்று செல்வன், நீ ஆண்டு வந்து இவ்விடமே நினக்கு இருப்பிடமாகக் கருதி இருந் தாயோவென்று என்னைத் தேடிவந்தாயாகக் கூறி அவ்விடத்தினின்று குறி யிடமே போ, அப்பொழுது அவன் நோய்தீர்க்கும் மருந்து நீயாகையினாலே ‡நின்னுடைய நன்றுகிய அடிமேலேவீழ்ந்து நின்னை இரந்துகொள்ளும்; ||எ-று.

கஉ இன்னும்; (ச)கடம்பூண் டொருகானீ வந்தை யுடம்பட்டா
னென்னுமை யென்(ஞ)மெய் ÷தொடி;

எ-து: அதுகேட்ட தலைவி நீ வாராய், இன்னமும் ஒருகால் அவ னிடத்தே சென்று உன்குறைமுடித்தலைத் தனக்கு கடனுக அவள் எறட்டுக் கொண்டு கூட்டத்திற்கு உடம்பட்டாளென்று அவற்குக் கூறுமைக்கு என் (ச) மெய்யைத்தொட்டுச் சூளுறவாயாகவென்றாள்; எ-று.

×வாவென்றது வந்தையெனத் திரிந்தது.

எசு: கடி, ககஉ: சு. கஙக: உக - ஙo. கசஙo: ஙக - உ. (ஊ) "கரும் பும் வல்லியும் பெருந்தோ ளெழுதி" சிலப். உ: உக.

க "திண்டிலே ஞயி ஞய்யேன், தீறடி பாவுவந்தே னருளெனத்தொழுது சேர்ந்து, நாறிருங் குழலி ஞளே.....புல்லி" சீவக. உoகஉ.

உ. "மற்றிந்நோய் தீரு மருந்தருளா யொண்டொடி" கலி. சுo: கஅ.

ங. (அ) "தாமணிக்கொழுந்து மென்றோட்டியல்வர வெழுதினளே" சீவக. உசஉ. (ஆ) "கழைத்தோட் கேற்பக் கழையெழுதி..... வினையுஞ் செறித்தனரால்" வாயு. பார்ப்பதி திருமண. கள.

ச. "புலத்தை" (குறள். கஙoக.) என்பதற்கு, பரிமேலழகர் புலப்பாயாக வென்று பொருள் கூறி "புலத்தையென்புழி ஐகாரம் 'கடம்பூண் டொருகானீ வந்தை' என்புழிப்போல முன்னிலைவினைவிகுதி" என்று எழுதியிருத்தலும் இங்கே அறிதற்பாலது.

ஞ. "மெய்தொடுகு" கலி. கஙஞ. உச, "அடிதொட்டேன்" (கலி. கூச: ஙசு) என்பதன் குறிப்பும் பார்க்க.

(பிழதிபேதம்)* இருந்தாயே,†எ-து: அதுகேட்டதலைவி அதற்குமறுமொழிகொடாது உடம் பாடுடைமைகுறிப்பான் உணர்ந்தமையிற் பின்னும்தோழி பூங்குழை. ‡ நின்னு டையவடிமேலே||என்றுள் இன்னும். ÷தொடி இ.·.தோவடங்கக்கேள் எ-து, × வந்தை வாவென்றது திரிந்தது நின்னெடு. வந்தை வாரையென்றது திரிந்து நின்றது நின்னெடு.

கச இஃதோ வடங்கக்கேள்;
நின்னெடு சூழுங்கா னீயு நிலங்கிலோயா
வென்னெடு நிற்ற லெளிதன்றே மற்றவன்
றன்னெடு நின்று விடு

எ-து: அதுகேட்ட தோழி யான் கூறிய குற்றம் *இதுவோ? இனி இது செய்யும்படியைச் சருங்கக்கேள், நின்னெடு யான் இதனை ஆராயுங்காலத்து நீயும் (க)நாணத்தால் நிலத்தைக்கீறி என்னிடனே வேறுபட்டுநின்றநீலை செய்தற்கு எளிதன்றே? இங்ஙனையப் பின்னை அவன் தன்னிடனே நின்று பார்த்து நின்னுச்செய்தலரிதன்றே? என்றாள்; எ-று.

இஃதோவென்றாள், "உடம்பட்டா ளென்னுமை யென்மெய் தொடு" என்றதனை. ஓகாரம், இது குற்றமன்றென மறையுணர்த்திற்று.

இதனால், தலைவிக்குப் புணர்ச்சியுவகை தோன்றிற்று.

†இஃது, எல்லா வெவன்செய்வாமெனவும்இஃதோ வடங்கக்கேளெனவும் வழியசைபுணர்த்த சொற்சீரடிகள் வந்து ஐஞ்சீரடுக்கிய வெண்பாக்களும்வந்த வெண்கலிப்பாட்டு. (உ)

(கூசு.) அணிமுக மாதியேய்ப்ப வம்மதியை நனியேய்க்கு
மணிமுக மாமையுநின் பின்னுடைப்பப் பின்னின்கண்
ணிரிநுண்ணூல் சுற்றிய வீரித முலரி
யரவுக்கண் ணணியுற மூரன்மீன் றுகையொப்ப
வருப்பாடர் கண்டாரைச் செய்தாங் கியலும்
சிரிந்தெரி கூந்தலாய் கண்டை யொருக்குப்
பெருப்பொன் பதிகுவை பண்டு;

அ எள! எல்லா, மொழிவது கண்டை யிஃதொத்தல் தெரியி
லெழுதி யிறுத்த பெருப்பொன் பதிக
மூழுவ துடையமோ யாம்;

உழுதாய்;

க. (அ) "களவுடம் படநேரிற் கவிழ்ந்துநிலங் கிலோயா, நாணினின்றாள்" அகம்.கசு: கரி-சு. (ஆ) "கரணப் பெருவிரலா லொல்கிநின்று நிலங் கிறி, மைத்த குழலாண் மற்றவன்முன் மலர்மேன் மடந்தை யென நின்றாள்" ஐங்குறு. வரைவெதிர்த. கூ. (இ) "கெண்டை யுண்கணும் புறவடி நோக்கமண் கிளைத்துமின் னெனநின்றாள்" திருவிளை. திரு மணப். சாரு.

(பிரதிபேதம்) * இதனே இனி † இது எல்லாயெவன் செய்வாமென வழியசைபுணர்த்த சொற்சீரடியுடன்வந்து,

கஉ சுரும்பிமிர் பூங்கோதை யங்கல்லா யாணின்
றிருந்திழை மென்றோ ளிழைத்தமற் றிம்மே தா
கரும்பெல்லா நின்னுழ வன்றோ வொருங்கே
குகளறு வாண்முக மொப்ப மலர்ந்த
குவளையு நின்னுழ வன்றோ விகலி
முண்கைமா றுகொள்ளு மெயிற்றோ யிவையல்ல
வென்னுழுவாய் நீமற் றினி;

கக எல்லா, நற்றோ ளிழைத்த கரும்புக்கு நீடூறு
முற்றொழி னீல மலரென வுற்ற
விருப்பீர் வடியன்ன வுண்கட்கு மெல்லாம்
பெரும்பொன்னுண் டென்பா யினி;

உங எல்லா யிருளீங்கள்;
கங்கே தலைப்பதிவ னுண்டான் றலைப்பெயின்
மேவந்துகொண் டன்ன பல;

உச ஆங்கன வத்திற மல்லற்கால் வேங்கைவீ
முற்றொழில் மொண்டா ணுணங்கணி தூணைக்
பொய்த்தகை நாகு மெல்லை முயங்கினை சென்றீ மா
முத்தீத் முறுவலாய் நீபோற்றி பொன்னெல்லா
முதகி யெறிந்து விடற்கு.

இவ்வாறு அருமையெய்தியார்த்த தலைவன் வந்துழித் தலைவி எள்ளின இடத்துத் தலைவன் அவளோடு உறழ்ந்துகூறி நகையாடிக்கூட்டத்திற்கு உடம்படுவித்தது. இதற்கு விதி 'உயர்மொழிக்குரிய வுறழுங் கிளவி' (கு.என் பதனுள; தலைவன் உயர்மொழிக்குத் தலைவி உறழ்ந்து கூறுமென்றவாறு.

இதன் பொருள்.

அணி(உ)முக மதிமயக்கப்ப வம்மதியை நணிமயக்கு
மனிமுக மாமழைநின் பின்னெப்பப் பின்னின்கண்

க. தொல். பொருளி. கு. சசு. இச்சூத்திர வுரையில் இவர் கூறியது, "அணிமுக.....விடற்கு; இது தலைவன் உயர்மொழிக்குத் தலைவி உறழ்ந்து கூறியது. இது நகையாடிக் கூட்டத்தை விரும்பிக் கூறிய மொழிக்கு உறழ்ந்துகூறலின் வழுவாய் அவளும் நகையாடிக் கூறலி னமைந்தது" என்பது.

உ. "திங்கண் முகிலோடுஞ் சேணிலங்குகாணெனினு; .....முகத்திற்கும் குழலுக்கும் இங்களும்புயலும் உவமை" சிலப். கசு: ங.

விரிதுண்ணூல் சுற்றிய வீரித ழுலரி
யரவுக்கண் ணணியுற ழாரன்மீன் றகையொப்ப
வருந்படர் கண்டாரைச் செய்தாங் கியலும்
விரிந்தொளி *கூந்தலாய் கண்டை யொக்குப்
பெரும்பொன் படுகுவை பண்டு

எ-து: நினது அழகினையுடைய முகம் மதியையொப்ப, மணிகள்விளங்கும் நின்பின்னின் மயிர் அம்முகத்துக்கொப்பாகியமதியை மிகவும்பொருந்துங் கருமையையுடைய மழையையொப்ப, அப்பின்னின் மயிர்க்கண்ணே கிடந்து அலர்ந்த நுண்ணிய நூலாற் கட்டின தேனுல் ஈரமான இதழையுடைய பூக்கள் (க)பின்னுக்கொப்பாகிய கரும்பாம்பிடத்தே கிடந்து அதன் கரியநிறத்தோடே மாறுபடுகின்ற கார்த்திகையென்னும் மீனினது அழகையொப்ப, மனத்தான் ஒப்புக்கண்டவர்களை அவ்விடத்தே அரிய வருத்தத்தைச்செய்து போகின்ற பரந்து தழைத்த கூந்தலையுடையாய்! நீ என்னை எள்ளும் நிலைமையைக் கை விட்டு யான் கூறுகின்றதனை மனத்தான் ஆராய்ந்து†பார்; நீ பண்டு எம் பொருட்டுப் பெரிய ‡பொன்னுண்டாவை; எ-று.

இது முன் நீ இடைவிடாமற்(உ)கூடிய கூட்டத்தால், தோற்றப்பொலிவு எய்தினையெனக் கூறி, ஈண்டு நிகழ்ந்த அருமைசெய்தயர்த்தகளுற் பிறந்த வருத்தத்தை நீக்கிற்றும்; ஆதலால் எமக்கு நீபெரிய பொன்கடவையென்பதோர் நகைப்பொருளுந் தோன்ற நின்றது.

அலரி பூவென்னுமாத்திரையாய் நின்றது. ஒப்பவென்னுஞ் செயவெ னெச்ச உவமவுருபுகள் கண்டாரென்னுந்தொழிற் பெயரிற் றொழிலொடு ||முடிந்தன.

அ எம! எல்லா, மொழிவது கண்டை (ங)யிஃதொத்தன் றெப்பி
லெழுதி யிறுத்த பெரும்பொன் படுக
முழுவ துடையமோ ×யாம்

க. (அ) "கோளுண்ட திங்கண் முகத்தாள்" கம்ப. பூக்கொய். சூ. (ஆ) "பின்னும் வேண்வார் குழலெனுங் கரியபே ராவம்" பிரபுலிங்க. மாயைபூசை. எ.

உ. "தேசு மொளியுந் திகழ நோக்கி" (பரி. கஉ: உக.) என்புழி 'தேசு - செயற்கை யழகு, ஒளி - கலவியால்வந்த நிறம்' என்று எழுதியிருக்கும் உரையும் இந்நூற்பக்கம் உகஉ: க-ஆங்குறிப்பில் இவ்விடத்திற்குப் பொருந்துவனவும் ஒப்புநோக்குக.

ங. (அ) இஃதொத்தன் கலி. சுஎ: கூ, சுக; க, சுஉ: க, அசு: கஅ. அஅ: கஎ, கஎங: ஙக, சஙஅ: கஎ. (ஆ) இஃதொத்தன் என்பதை இடைச்சொல்

(பிரதிபேதம்) *கூந்தல்கண்டை †பாதுகீ ‡ பொன்னுண்டாவை என்றுள் என்றது முன்நிற் இடைவிடாமல் ||முடிந்தன என இகழ்ச்சிக்குறிப்பு எல்லா, × யாம்உழுதாய் எ - து: இவன்,

எ-து: இவளொருத்தன் தன்னைத் தேற்றப்பொலிவு எய்தினேமெனக் கூறுகின்ற கூற்றைப் பாராயென தெஞ்சொடு * கூறி, நீ என் றேண்மேற் றெப்பிலெழுதிக் கனவுபோல ஒரொருகாற் றங்கினை நிலையாலுண்டான† தோற்றப்பொலிவு உண்டாவேம்; அதுவன்றிமெம்(க) முலையால்நின்மார்பிடத்து இடைவிடாது உழுத கல் ‡வினையை உடையேமோ? அஃதின்றே; எ-று.

எஎ, இகழ்ச்சிக்குறிப்பு.

|| இது தெய்யிலெழுதி முடித்ததனாலுண்டான பொன்கடவேம்; அதுவன்றி நின்கீழ் உழுத நிலைமையுடையேமோவென ஒரு நகைக் குறிப்புத் ÷தோன்றநின்றது.

கக உழுதாய்;

சுரும்பிமிர் பூங்கோதை பங்கல்லா யானின்
(உ)றிருந்திழை மென்றே ளிழைத்தமற் றிஃதோ
கரும்பெல்லா நின்னுழ வன்றே வொருங்கே
தகளறு வாண்முக மொப்ப மலர்ந்த
குவளையு நின்னுழ வன்றே விகலி
முரைமாறு கொள்ளு மெயிற்று யிவையல்ல
வென்னுழுவாய் நீமற் றினி

எ-து: சுரும்புகள் ஒலிக்கின்ற பூவாற்செய்த கோதையினையுடைய அழகினையுடைய கல்லாய்! நீ × உழுதாய்; பின்னை இக்களவொழுக்கத்திலும் இந்தத்

மறுதிர்ந்த மென்மு கல்லாடரும் (தொல். இடைச. சூ. ங.) (இ) இஃதொத்தன் என்பது இவளொருத்தனென 'இஃதென்ற அஃறிணைப்பொருளே உணர்த்திய சுட்டு உயர்திணைப்பொருளே யுணர்த்தி நின்றதென்று நச்சினார்க்கினியரும் (தொல்.கிளவி.சூ.ஙஎ) இவ்வாறே வேறுரை காரரும். (தொல். கிளவி. சூ. ஙஅ.) கூறவர். (ஈ) இந்நூற் பக்கம் ஙஎக: உ. (ஆ) குறிப்பும் பார்க்க.

க. (ஆ) "பஞ்சி மேன்மிதிக் கிற்பனிக் குந்தகை, யஞ்சி லோதிய ரம்முலை நாஞ்சிலா, மஞ்சு தோய்வரை மார்ப மடித்துழத், துஞ்ச லோவுந் தொழிலின ஞாஞன்" சூளா. சீயவதை. ஙக. (ஆ) "முலையாலுழப் பட்டும்" சீவக. கஙஅ.

உ. "திருந்திழை மென்றோள்" கலி. கஙக: உ.

(பிரதிபேதம்) * கூறினா. அங்ஙனம் கூறினன். † தோற்றம்பொலிவு. ‡ வினையையாம் உடையேமோ அது எமக்குஇன்றே என்றுள்இது || இதனால் ÷தோன்றி நின்றது சுரும்பிமிர்பூங் × உழுதாயஎன்றதனான்ஙருத்திடைவிடாது.....
...காணென்றான் என்றதனாற்பயன்.....உழுதாயென்றும்நகைக்குறிப்பும்தோன்றிநின்றது மற்று. வினைமாற்று பின்னை.

திருந்தின இழையையுடைய மென்*றோளிலே யான் எழுதின கருஞ்சின் றேற்றப் பொலிவெல்லாம் நின் முலைகள் இடைவிடாமற் புணர்ந்ததனலுண் டான பயனலலவோ? அதனேடுகூடப் பழுதறுகின்ற ஒளியினையுடைய முகமானது குவளையோடு இகலிப் புணர்ச்சிதோறும் பொலிவு பெறும்படி பூத்த கண்களின் றேற்றப்பொலிவு நீ இடைவிடாமற் புணர்ந்ததனலுள்ள பயனல்லவோ?(க)முல்லைமுகையோடு பாறுபாடுகொள்ளுமெயிற்றினை † யுடை யாய்! இத் தோற்றப்பொலிவுக ளன்றி வேறே தோற்றப்பொலிவுண்டாக நீ புணர்வா ‡யென்றனன்; எ-று.

என்றதனல், நின்கருத்து இடைவிடாது முயங்குதலேயாயின் இனி நீ இடைவிடாமல் முயங்கினேகாணென்றனன். அதன் பயன் இனி வரைவே னென்றதாம். || இது நீ என்கீழ் உழுதாயென கைகக்குறிப்புத்தோன்ற நின்றது. பற்று, வினைமாற்று. குவளையென்றது, கண்ணே.

இதனல் அருமைசெய்தயர்த்ததுமில்லையென்றனன். இதனல் நீ கருஞ்புக் குவளையன்றி வேறு என்னுழுவாயென ஒரு கைகக்குறிப்புத்÷தோன்றிற்று.

கக எல்லா, நற்றேற் ளிழைத்த கருஞ்சிற்கு நீகூறு
முற்றெழி னீலை மலரென வற்ற
(உ)னிருட்பரீஇ வடியன்ன வுண்கட்கு மெல்லாம்
பொருட்பொன்றுண் டென்பா யினி

எ-ஆ: அதுகேட்ட தலைவி எடா! என் அவயவங்களில் தோற்றப்பொலிவு உண்டாகக் கூறுமல் என்தோள்களில் நீ எழுதப்பட்ட கருஞ்சிற்குத் தோற்றப் பொலிவுண்டென்று நீ கூறா; அதற்கு இலையாதேன் ; இனி அலர்த்து செவ்வி குலைந்து முற்றின அழகையுடைய நீலமலரென்று பிறர் கூறும்படியாக

க. (அ) "கருமுல்லை சேர்முகை யொப்ப நிரைத்த, செறிமுறை" (ஆ) "முல்லை முகையு முருத்து நிரைத்தன்ன பல்லும்"

உ (அ)"இரும்பீர் வடியொத்து மையினல்குங் கண்ணினை" பரி. எ: நிஅ. (ஆ) "எஃ: குற், நிருவே ருகிய தெரிதகு வனப்பின், மாவி னறுவடி போலக்கரண்டொறு, மேவ ரண்டாமகிழ்சோக்குண்கண்" அகம். உக. நி-அ (இ)-"மாவடு வகிர்ன்ன கண்ணாள்" திருவாசக. அடைக்கலப். அ. (ஈ) "வடுப்பிளவன்ன கண்ணாள்" சீவக. கருங்கூ. (உ) "சூதவடுப், பதத்தே பதித்த தென வென்னை வாழ்வித்த பாதகக்கண்" அம்பிகா. கஉ உ. (ஊ)-"வடுவகிரனைய வுண்கண்" (எ) "வடுவகிர் நெடுங்கண்" (ஏ) "வடுவகிர் நெடுங்கணார்" நைடத. நளன் நாடு. கசுஉ, சுயம்வரப். கசுஅ, புனல்-ச. என்பவையும் (ஐ)"இளமாங்காய் போழ்ந்தன்ன கண்" கலி. கoஅ: உ. என்பதும் அதன் குறிப்பும் ஒப்புநோக்கற்பாலன.

பிரதிபேதம்.* தோளிலெழுதின † உடையாய் நீ இனிச்தோற்றப் ‡ என்றனுயினை || இதனல்நீ ÷தோன்றின்றது.

*வருத்த முற்ற (க)இரும்பு சர்வடியன்ன உண்கட்கும் மற்றுமுள்ள எல்லா உறுப்புக்கட்கும் பெரிய பசப்புண்டென்று சொல்லுவாயாக; †எ-று.

இதனால் அவன் அருமைசெய்தயர்த்திலேனென்றதற்கு அக்காலமெல்லாம் யான் வருத்தமுற்றேனென்றாளாயிற்று. கரும்பு அவயவமன்றி எழுதப்பட்டதாகலின், தோற்றப்பொலிவு உண்டென்றாள். கூட்டத்தாற் பொலிவு பெறுதல் இளமைப்பருவத்தும் இரும்புஊர்ந்த(உ)வடுவகிரை யொத்திருத்தலுள. தாகலின் இரும்பூர்வடியன்ன வுண்கட்கு மென்றாள். இது கண்ணெனினும் பெயர்மாத்திரையாய் நின்றது. இதனால் அவன் அருமைசெய்தயர்த்திலே னென்றதன்றாக ‡கூறிய(ங)பொன்னிறத்தைப்பசப்பாக்கி அக்காலமெல்லாந் தான் வருத்தும்படி தன் நலத்தை அவன்கொண்டமை கூறினளாயிற்று.

உங. கல்லாயிருவிகுவீர்;
ஈங்கே தெரிப்பதிவு ணுண்டான் றலைப்பெயின்
வேங்குமெரி ணுன்ன பல

எ-து: அதுகேட்டதலைவன் நல்லாய்! ||இருவிகுவீரே! யான்கூறுகின்றதனைக் கேள்; அசனைச் சேர்ந்து அவன் செல்வத்தை நுகர்ந்தாலெருவன் அவன் வயத்தனாயின்று காரியத்தாற் றலைமைப்பாடு எய்துவனுமாயின், அவ்வேங்கன் அவனுலுள்ள பயனைக்கொண்டாற் போன்ற பலபயனையும் யான் இவ்விடத்தே எய்துவேனென்றான்; எ-று.

க. (அ) "இரும்புமேல் விடாது நிற்பார்" (ஆ) "இரும்பு மேய்க்கிதாழிந்த மிசில்வுரை மார்பன்" (இ) "இரும்புண்டி மிருத்த மார்பின்" (ஈ) "இரும்பெச்சிற் பதித்த மார்பின்" சீவக. எஅஉ, களகூ, உஉ அச, ஒ நிஙூ.

உ. (அ)"வடிக்கண்ணை"(தொல்லையாயிரஉ)என்பதற்கு வடிவுகிர்போலுங் கண்களும் இலையே என்ற பொருள்கூறி 'வடியென்பதுவடிவிருக்குஞ் பெயர்' என்று எழுதியிருக்கும் பொருள்விளக்கம் இங்கே அறிதற்பாலது. இச்சொல் வடிவுகிருக்கேயன்றி வடிவுக்கும்பெயராய்வழங்கும்; அதனை "நறுவடி மாவின் பைத்தாண ருழக்கி" (கலி. சக: கச.) என்பதனுளும் அதன்குறிப்பாலும். (ஆ) "கொக்கினறுவடிவிதிர்த்த" பெருங்.மகா. கூஙக) (இ) "நறுவடிமாவின்"(மலை. நிகஉ.) என்பவற்றுளும் உணர்க வடிவுகிரென்னும் பொருளில் வடிவென்பதும் வரும்.

ங. (அ) "பூப்போ லுண்கண் பொன்போர்த் தனவே" (ஆ) "மேனி பொன்போற் செய்யு மூர்கிழவோனே" ஐங். கசு, சக. என்பவைகளும் (இ) "வயங்கு பொன்னீன்ற" (சீவக. கருஙூ) என்பனவும், 'பொன் - பசப்பு' என்று எழுதியிருக்கும் விளக்கமும் இங்கே அறிதற்பாலன.

பிரதிபேதம்) * வருத்தமுற்ற உண்கட்கு † என்றான்இதனால் ‡ கூறியது பொன்னிறத்தை யொப்பப் போக்கியகாலமெல்லாம் || இனியோனே,

என்றது கூட்டத்தாற் செயற்கைநலம்பெற்ற நின்னை வரைந்துகொண்டு நின்னுற் பெறும் பயனெல்லாங் கொள்வேனென்றதாம். இனி அரசனுடைய பொருளை நுகர்ந்தவன் எதிர்ப்படில் அவ்வரசன் அவனிடத்து வருத்தமுறுத்திக் கொண்டாற்போன்றே பலபயன்களையும் யானும் இங்கே கொள்வேனென ஒரு நகைக்குறிப்புத்தோன்றி *நின்றது.

உசு ஆங்காக

எ-து: அதுகேட்ட தலைவி நீ அருமைசெய்தயர்த்தினைப் †பாய்யாக்கி அன்பின்றி நின்றதன்மை நீங்கி எம்மிடத்து அன்புடையையான காலத்து நீ கூறியவாறே ஆவதாகவென உடம்பட்டுக்கூறினாள்; எ-று.

அத்திற மல்லாக்கால் (க)வேங்கையீ
முற்றெழில் கொண்ட சுணங்கணி பூணகம்
பொய்த்தொருகா லெட்மை முயங்கினே சென்றீமோ
(உ)முத்தேர் முறுவலாய் நீபடும் பொன்னெல்லா
முத்தி யெறிந்து †விடற்கு.

க. (அ) "ஓகி, களிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக், களிச்சுரும்பாற்றாஞ் சுணங்கிற் சுணங்கு பிதிர்ந்து,.....பூணகத் தொடுங்கிய வெம் முலை" சிறுபாண். உஉ - உசு; (ஆ) "வேங்கை வென்ற சுணங்கின்" ஐங். நஉச; (இ) "வேங்கை, யூழுறு நறவீ கடுப்பக் கேழ்கொள, வாகத் தரும்பிய மாசறு சுணங்கின்" (ஈ)-"பொன்வீ வேங்கைப் புது மலர்புரைய, நன்னிறத்தெழுந்த சுணங்கணி வனமுலை" அகம். கசச; கo - கஉ, நக: அ-கூ; (உ) "நாகிள வேங்கையிற், கதிர்த்தொளி திகழு நுண்பல்சுணங்கின், மாக்கண்மலர்ந்த முலையள்" புறம். நநஉ.கஉ-கச; (ஊ) "குறமனைவேங்கைக் சுணங்கொ டணங்கலர் கூட்டுபவோ" தோலையாரி. கூக.(எ) "வாரிரு புடையும் வீக்கி வடஞ்சுமந்தெழுந்து வேங்கை, யேரிருஞ் சுணங்கு சிந்தி யெழுகின்ற விளமென் கொங்கை" (ஏ) "நறவேங்கை யவிர்சுணங்கின் மடவார்" சூளா. சீய. கஅஅ, கல்யாண. உoஅ; (ஐ) "முலைத்தலைச் செஞ்சுணங்கு வேங்கை மலரோ, டலைத்தன வம்பொத்திதிர்" யா - வி. சூ. அச. மேற்கோள். (ஒ) "அணங்கவல்கு லரிவையரார்த் தனமருப்புச், சுணங்கலர் வேங்கைத் துணர்மலை நாட" அம்பிகா. கூநடி.

உ. (அ) "முத்தேர் முறுவலாய்" என்பது அன்னவை பிறவுமென்பதனாற் கொள்ளப்படும்உவமையுணர்த்துஞ்சொற்களுள் ஏர்வந்தென்பதற்கும் (தொல். உவமை.சூ. கக. இளம்) (ஆ) உருவுபற்றிய பண்புவமத்தின் கண் ஏர் வந்தென்பதற்கும் (இ - வி. சூ. சுசஉ.) மேற்கோள்.

(பிரதிபேதம்) * நின்றது அதுகேட்டதலைவி நீ அருமை.....உடம்பட்டுக்கூறினாள் ஆங்காக. †விடற்கு எ-து. அதுகேட்டதலைவன்.

எ-து: அதுகேட்ட தலைவன் நீ இங்ஙனம் வெறுத்துக்கூறிய கூறுபாடு நீங்கியகாலத்து, முத்தையொக்கும் முறுவலையுடையாய்! நீ முன்பு உற்றபசப் பெல்லாம் இனி ஒருகாலமும்உறுதபடி கழித்துவிடுதற்கு வேங்கைப்பூவினது முற்றின அழகைக்கொண்ட சுணங்குகணிந்த பூணினையுடைய ஆகத்தாலே பொய்த்தாகிலும் ஒருகால் முய்ங்கினையாய்ச் செல்வாயென்றான்; எ-று.

பொன்னெல்லாம்உரைத்தியெறிந்துவிடவென்றதனால்வரைவேனென்றான்; இதனால் நீ கடவ பொன்னெல்லாம் பெற்றேனென்று கழித்துவிடுவேனென ஒரு நகைக்குறிப்புந் தோன்றிநின்றது.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை தோன்றிற்று.

இது தாவும் ஐஞ்சீரடுக்கித் தளைவிரவின குறுவெண்பாட்டும் தனிச சொல்லும் நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய நெடுவெண்பாட்டும் * வழியசை புணர்த்த சொற்சீரடியும் குறுவெண்பாட்டும் வெள்ளைச் சுரிதகமும் பெற்று வந்த கலிவெண்பாட்டு. இதனுள் நிரையீற்றியற்சீர்ப்பின்னர் நிரைமுதல் வெண்சீரும் நேர்முதல்வெண்சீரும் வருகலின் அணிமுக மதியேய்ப்ப வும் மதியைநனியேய்க்கு(?)மென்பதுகட்டளையன்றியிற்ற. "நிரைமுதல் வெண்சீர் வந்து நிரை†தட்பினும், வரைநிலை யின்றே யவ்வடிக் கென்ப"(க) என்பதனால் உணர்க. (உஅ)

(கூடு.) திருந்திழாய் கேளாய்நம் (உ)மூர்க்கெல்லாஞ் சாலும்
பெருநகை யல்கனிகழ்ந்த தொருநிலையே
(ங)மன்பதை யெல்லா மடிந்தகவிருந்தகங்கு
லந்துகிற் போர்வை யணிபெறத் தைஇநம்

(இ) 'முத்தேர் முறுவலாய்" கலி. கூஉ: கஉ, கூஎ: சு. (ஈ) "முத்தேர் முறுவலார்" இனியது. உ.

க. 'தொல். செய். சூ. கூ○. இதனுரையிலும் "நிரையீற்றியற்சீர்ப் பின்னர் நிரைமுதல் வெண்சீரும் நேர்முதல்வெண்சீரும் முதல்வந்து பின்னர் வெண்சீரடுக்கிய வெண்டளை வரினும் சிறிது வேள்ளைலோசை பிறத்தலின் அதனைச் சீர்வகையடியென்றுணர்க" என்றகூறி அதற்கு 'அணிமுக ....பின்னின்சண்' என்பதை மேற்கோள் காட்டி யிருக்கிறார் இவ்வுரையாசிரியர்.

உ. "உலகத், துள்ளோர்க் கெல்லாம் பெருநகை யாகக், காமஞ். கைம்மிக வுறுதா" அகம். உருஅ: கஉ-ச.

ங. "துஞ்சூர் யாமத்தும்" ஐங்குறு. கஙூ. (ஆ) "துஞ்சூர் யாமத்து" அகம். ஙூ○: கஉ.(இ)"மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா, வென்னல்ல தில்லைதுணை" குறள். கஙஙஅ. (ஈ) "ஊர்மடி கங்குல்" சிலப். கசு:

(பிரதிபேதம்) *வழியசைப் புணர்த்த †தட்டல்லரை,

(க)மின்சாயன் மார்பன் குறிநின்றோன் யானைத்
தீரத் தறைந்த தலையுந்தன் கட்படுங்
காரக் குறைந்து கறைப்பட்டு வந்துருஞ்
சேரியிற் போகா மூடமுதிர் பார்ப்பானைத்
தோழிநீ போற்றுதி யென்றி யவணுங்கே
பாரக் குறழாப் பணியாப் பொழுதன்றி
யாரிவ *ணின்றீ ரெனக்கூறிப் பையென
வைகாண் முதுபகட்டிற் பக்கத்திற் போகாது
தையா றம்பலந் தின்றியோ வென்றுதன்
(உ)†பக்கழித்துக் கொண்டு யெனத்தரலும் யாதொன்றும்
(ங)வாய்வாளா னிற்பக் கடிதகன்று கைமாறிக்
கைப்படுக்கப் பட்டாய் சிறுமீ மற்றியா
னேனைப் பிசாசரு ளென்னை நலிதரி
னிவ்வூர்ப் பலிதீ பெருஅமற் கொள்வே
னெனைப் பலவுந் தாங்காது வாய்ப்பாடி நிற்ப
முதுபார்ப்பா, வஞ்சின முதற் றறிந்தியா னெஞ்சா
தொருதுணை மணற்கொண்டு மேற்றாவக் கண்டே
கடிதரற்றிப் பூச லெடுங்கின ரங்கே

உ0ஏ. (உ) "பழவிறல் மூதூர் பாயல்கொ ணெடுவாள்" (ஊ) "ஊர்துஞ் சியாமத் தொருதனி யெழுந்து" மணி. எ: கூஙூ, உ0: கூச. (எ) "பல்லுயிர் மடிந்த நள்ளென் யாமத்து" (ஏ)"ஊமழி கங்குல்" பெருங். (உ) கூ: சஉ, (ங) உங: நிகூ.

க. (அ) "சாயலின் மார்பன்" (ஆ) "சாயலின் மார்பு" கலி. சஉ: ஙo கூச: ங அ. (இ) சாயலென்பதற்கு ஐம்பொறியால்நுகரும் மென்மையென்று பொருள் கூறி அம்மென்மை ஊற்றிற்கு வந்தமைக்கு 'சார்யன் மார்பு' என்பதை மேற்கோள்காட்டி யிருத்தல் ஈண்டறிதற் பாலது. தொல். உரி. சூ. உஎ. நச். சீவக. அ. உரை.

உ. "அவரை யருந்த மந்தி பகர்வர், பக்கிற் றேறன்று நாடன்" (ஐங்குறு. உஎக.) என்பதற்கு, 'அவரையைநிறையத்தின்றமந்தி பண்டவாணர் பைபோலத்தோன்று நாடன்' என்றெழுதியிருக்கு முரையால் 'பக்கு' என்பது பையென்று திணையலாகும்.

ங. "வாய்வாளாது" கலி. நிகூ: உகூ. "வாய்வாளாநின்றான்" பரி. உo:சகூ.

பிரதிபேதம்: *நின்றுயெனக், † பைக்கழித்து.

யொடுங்கா வயத்திற் கொடுங்கேழ்க் கடுங்க
(க)ணிரும்புலி கொண்மார் நிறுத்த வலியளோ
உருத்தில் முறுகரி பட்டற்றுற் காதலன்
காட்சி யழுங்க நம்மூர்க் கெலாஅ
மாகுலமாகி விளைந்ததை யென்றுந்தன்
வாழ்க்கை *யீதுவாகக் கொண்ட முதுபார்ப்பான்
†வீழ்க்கைப் பெருங்கருங் கூத்து.

இஃது இரவுக்குறி அலராமென்றஞ்சித் தலைவனை ‡ நீக்கி நிறுத்தக் கருதிய தோழி "அல்லதறிப் படுதலு மவளவயி னுரித்தே, யவன்குறி மயங்கிய வமைவொடு வரினே" என்னும் (உ) சூத்திரத்தான் அல்லதறிப்படுதல் தனக்கும் உரித்தாகலின், அவன்செய்த || குறியறிதற்குப் புறத்துச் சென்ற வழி, ஆண்டுப் பிறந்ததோர் செய்தியாக ஒரு போய்யை(கூ)நாடகவழக்கும் உலகியல்வழக்குமாகப்புனைந்துரைவகையாற்படைத்துக்கொண்டுபிற்றை ஞான்று தலைவன் சிறைப்புறமாகத் தலைவிக்குக் கூறியது. இதனை, "இரந்து குறை யுற்ற கிழவனைத் தோழி, நிரம்ப நீக்கி, நிறுத்த லன்றியும், வாயிலை கூறலும் பொய்தலைப் பெய்தலு, நல்வகை யுடைய ÷நலத்திற் கூறியும், ×பல்வகை யானும் படைக்கவும் பெறுமே"(ங) =எனப்பொருளியற்றுத்தி நந்துப் பொய்தலைப் பெய்தலையும் படைக்கவும்பெறுமென வழுவமைத்த வாற்றற் கொளுக.

க. (அ) "கூனுடை வெஞ்சிலைக் குன்ற வாணர்தா, மானிடன் புலிபட வோச்சி வார்வலே" சேது. கந்தமாதன. சூ. என்பதும் (ஆ) "மலர்க், கருங்கண்ணி கங்கையின் மென்றுவி யன்னங் கருதிவைத்த, பெருங்கண்ணி யிற்புனற் 'காக்கைபட் டாங்குப். பிரிந்தமதின், மருங் கண்ணி வந்தன ரென்பது கேட்டின்னு மாய்ந்திலமே" வெங்கைக் கோவை. உஉக. என்பதும் இங்கே அறிதற்பாலன.

உ. தொல். கள. சூ. சஉ.

ங. நாடக வழக்கென்பது உள்ளோனுவது இல்லோனுவது தலைவனுகச் சிலசெய்திகளைப் புனைந்துரைத்தல். இச்செய்திகளில். யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறுது, உலகத்தோர்க்கு நன்மை பயத்தற்கு நல்லோர்க்குள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறமெனக் கருதி சிறிது இல்லனவும் கூறப்படுமென்ப.

ச. தொல். பொருளி. சூ. சாங. இதனுரையில் இச்செய்யுளை வரைந்து கோடற்குப் பெரும்பாலும் இவரும், கலிவெண்பாட்டு

(பிரதிபேதம்) *யாட்கை, †வீட்கை. ‡நீங்கிநிறுத்த. || குறிப்பறிதற்குப் ÷நயத்தில். × பல் வகையாகவும், =என வழுவமைத்த

இதன் பொருள்.

திருத்தின இழையினையுடையாய்! தன்னுடைய மயிர் நீங்குதலாற் றட்டையான தலையினையும் படாத்தினையு முடையனாய்க் கருங்குட்டத் தாலே காலுங் கையுங் குறைந்து கடமைத்துறைப்பட்டு வந்து நந் தெருவி னின்றும் போகாமல் ஒளித்துத்திரியும் முடமாகிய முதிர்ந்த பார்ப்பானைத் தோழி நீ பேணுவாயாகவென்று பலகாலுங் கூறுவை; அதனைப் பேணுதே (க)உயிர்ப்பன்மைகளெல்லாஞ் சேரத்துயில்கொண்டகங்குலிலே அழகிய துகி லாற் போர்த்த போர்வையை வாங்கி அழகுபெற உடுத்து நம்முடைய மென் மையினிய மார்பையுடையவன் செய்யுங் * குறியை உற்றுநின்றேனாக அப் பார்ப்பானுலே இராக்காலத்தே பெரிய நகைகிளர்ந்தது; அந்நகை ஊர்க் கெல்லாங் கொண்டாடுதற்கு அமைந்திருக்கும்; அது நிகழ்ந்த படியைக் கேளாய்; அவன் அவ்விடத்தே குனிந்துபார்த்து மகளிர் நிற்குங் காலம் அன்றாக இவ்விடத்து நின்ற † நீர் யாரென்று மூற்படக்கூறி, சிறியவளே! நீ என்னுலே அகப்படுத்திக்கொள்ளப்பட்டாயென்று கூறிப் பையெனப் பணிந்து வைக்கோலைக் கண்ட முதிய எருதுபோலே என்பக்கத்தினின்றும் போகாதே நின்று தையால்! தம்பலந் தின்பாயென்று தன் பாக்கிடும்பையைக் குலைத்து நீ எடுத்துக்கொள்ளென்று தந்த அளவிலே யான் அங்கு ஒருவார்த்தையும் வாய்திறந்து சொல்லேனுய் நிற்கையினுலே, தான் அஞ்சி முன்புகொண்டுநின்ற ஒழுக்கத்தைக் கைவிட்டுக் கழிதாக நீங்கிப் பின்னே யான் பெண்பாற்பசா சாகிய நின்னையொழிந்த ஆண்பாற் பசாசு; எனக்கு அருள்; அங்ஙனம் அரு ளாது என்னை வருத்துதலைச் செய்வையாயின் இவ்வூரில் நீ பெறும்(உ)பலியை நீ பெறுமல் யான் எடுத்துக்கொள்வே னென்று பல வார்த்தைகளையும் பேணுமல் வாயாற் சொல்லிநிற்க, முதியபார்ப்பான் என்னைப் பெண்பசா சென்று கருதி அஞ்சினுனுதலை யான் அறிந்து ஒருகையாலே மணலை அள்ளிக்கொண்டு ஒழியாது அவன்மேலே தூவக்கண்டு அவ்விடத்தேநின்று கடிதாகக் கதறி ஊர்க்கெல்லாங் கேட்பக் கூப்பிடத் தொடங்கினுன்; எந் நாளுந் தன் தொழில் அவ்வாறு தனிநிற்கும் மகளிரைக்கண்டால், தன் காம வேட்கையாலே மேல்விழுதலாகக்கொண்ட முதியபார்ப்பானுடைய விரும்பு

இருபத்தொன்பதடியான்வந்ததற்குப் பேராசிரியரும் இவரும் (தொல். செய். சூ. ககo.) மேற்கோள்காட்டியுள்ளார்.

க. மன்பதை - உயிர்ப்பன்மை; புறம். எக: கஎ, உகo: க. இது மக்கட் பன்மை குறித்தும்வரும். இச்சொல் மன்பது என்றும் அருகிவழங்கும்.

உ. (அ) "பலிகொண்டு பெயரும் பாசம் போல" பதிற். எக: உங. (ஆ) "ஈற்றிளம் பெண்டி ராற்றுப் பாலகர், கடுஞ்சூன் மகளிர் நெடும்பு ணுற் றோர், தந்துயர் கெடுக்கு மந்திர மாக்கண், மன்றப் பேய்மகள் வந்து கைக் கொள்கென, நின்றெறி பலியி னெடுங்கு லோதையும்" மணி. எ: அக-அடி.

(பிரதிபேதம்) * குறியை ஜயுற்று, †நீயோன்று.

தலையுடைய பெரிய தண்ணிய நாடகம் நங் காதலர் நம்மைக் குறியிடத்து வந்து காணுங் காட்சி கெடும்படியாக நமக்கு வருத்தமாய் விளைந்தது; இது *விளைந்தபடி ஒன்றற்குங் கெடாத வலியினையும் வளைந்த வரியினையுந் தறு கண்மையினையுமுடைய புலியாலுள்ள பயனைக் கொள்ளுதற்கு நிறுத்தின வலையிலே அதன் றொழிற்கு.வேறுகியதோர் குறாநரி அகப்பட்ட †தன்மைத் தாயிற்று; ஆதலால் இனி இரவிற் குறிநிகழ்ச்சியின்றுபோலுமென்றான்; எ-று.

வீழ்க்கை வாழ்க்கைபோல் நின்றது. காரக்குறைந்தது அக்குச்சார்னியை. ‡குறழாப் பாராவென்க.

வைகாண் முதுபகடெனவே காம இன்பம் நுகர்தலாற்றுமை காட்டி நின்றது. எனைப்பிசாசெனவே அவள் பெண்பாற்பசாசும் தான் ஆண்பாற் பசாசுமென்பது உணர்த்திற்று. அருளெனப் பிரிக்க. ஆங்கே || கடிதரற்றி நம் மூர்க்கெலாம் பூசலெடுங்கினனென மாறுக.(க)தம்பலம், தாம்பூலமெனும்வட மொழித்திரிவு. தின்றியோ, ஓகாரம் அசை.

இதனால், தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒருபொருணுதலாது அடியகந்து தலைவிரவி வந்த கலிவெண் பாட்டு. (உக)

÷குறிஞ்சிக்கலி முற்றும்.

க. தாம்பூல மென்பது (அ) "ஒருவர் வாயுமிழப்பட்ட தம்பல மொருவர் வாய்க்கொண்டு" சீவக. உஅஉ.க. என இவ்வாறே திரிந்து வருதலு மன்றி, (ஆ)''வெள்ளிலைத் தம்பல்கண்டார்"(இ)"வெள்ளடைத் தம்பற் குப்பை" (கம்ப. வரைக்காட்சி. சகூ, கார்கால. உஅ) என ஈறுகுறைந்தும் வரும்.

(பிரதிபேதம்) *விளைந்தபடி புலிகொண்மா நிறுத்தவலையிற்குறாநரி பட்டதன்மைத்தாயிறறு; ஆதலால் இனிஇரவிற்குறிநிகழ்ச்சி இன்று போலுமென்றான் ஒன்றற்கும், †தன் மைத்தாமென்க. வீழ்க்கை, ‡குழறுப்பாரா, || கடிந்தாற்றி நம். ÷ குறிஞ்சிக்கு நச்சினார்க்கினியான்செய்த வுரைமுடிந்தது நன்றாக.